# யோசேப்பு

...நம்முடைய முன்மாதிரி



# யோசேப்பு

...நம்முடைய முன்மாதிரி

“அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி
அழைக்கப்பட்டவர்களாய்த்
தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச்
சகலமும் நன்மைக்கு ஏதுவாக
நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்.”

- ரோமர் 8:28

# முன்னுரை

இந்தப் புத்தகம் பழைய ஏற்பாட்டில் காணப்படுகின்ற ஓர் அற்புதமான கதாப்பாத்திரத்தின் வாழ்க்கைப் பற்றின தொகுப்பாகும். அக்கதாப்பாத்திரம் தலை மற்றும் சரீரமாகிய கிறிஸ்துவின் நிழலான யோசேப்பு ஆகும்! யோசேப்புடைய வாழ்க்கையின் சம்பவங்களையும், அதிலிருந்து நமக்குக் கிடைக்கும் படிப்பினைகளையும் புரிந்து பயனடையும் வகையில், சகோதரர் ரசல் அவர்களுடைய படைப்புகளிலிருந்து 'யோசேப்பு குறித்த கட்டுரைகள்' இங்குத் தொகுத்து வழங்கப்பட்டுள்ளது. இதன் வழியாக தேவனுடைய தெய்வீகத் திட்டத்தைக் குறித்தும், தெய்வீகக் குணலட்சணங்களைக் குறித்துமான அரிய படிப்பினைகளை நாம் பெற்றுக்கொள்வோம் என்று நம்புகின்றோம்.

*. . . "தேவனுக்குப் பிரியமாய் இருக்க வேண்டும் மற்றும் அவரது அங்கீகரிப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற கண்ணோட்டத்திலேயே, யோசேப்பு அனைத்துக் காரியங்களையும் செய்தார்" (R5216) . . .*

*. . . "யோசேப்பினுடைய குணலட்சணத்தின் பலத்திற்கும், கடமை மற்றும் கொள்கையின் விஷயத்திலான அவரது நேர்மைக்குமான அஸ்திபாரமாக, அவர் கர்த்தரிடத்தில் கொண்டிருந்த விசுவாசம் காணப்பட்டது" (R2887) . . .*

*. . . "கேட்காமலேயே வழங்கப்பட்ட மன்னிப்பையும், இரக்கத்தின் வெளிப்படுத்தல்களையும், யோசேப்பு தனது சகோதரர்கள் மீது குவித்தார். (யோசேப்பினுடைய) பழிவாங்குதல் எத்துணை அருமையானதாய்க் காணப்படுகின்றது!" (R5234) . . .*

*. . . " 'நீ தீமையினாலே வெல்லப்படாமல், தீமையை நன்மையினாலே வெல்லு' என்ற வசனத்தை நினைவில் கொள்வோமாக (ரோமர் 12:21). இந்த ஆலோசனைக்கு யோசேப்பு மாதிரியாக விளங்குகின்றார் "(R2893) . . .*

*. . . "தனக்கு நேரிட்ட கசப்பான நிகழ்வுகளுக்கு எதிராக யோசேப்பு ஒருபோதும் முறுமுறுக்கவில்லை, ஒரு வார்த்தைக்கூடக் கூறிப் புலம்பவில்லை. ஒவ்வொரு வார்த்தையிலும், அனைத்து விஷயங்களிலும், யோசேப்பு தேவனுடைய ஞானத்தை, அன்பை, வல்லமையை மற்றும் தயவைக் குறித்துச் சாட்சிப் பகர்ந்தவராகவே இருந்தார்" (R5234) . . .*

*. . . "ஒருவேளை யோசேப்பு இந்த யுகத்தின் பரிசுத்தவானாய்க் காணப்பட்டிருந்திருப்பாரானால், பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டிருந்திருப்பாரானால், வேதாகமத்தில் நாம் பெற்றிருக்கிறதான தெய்வீக நோக்கம் மற்றும் தேவன் பற்றின பல்வேறு வெளிப்படுத்தல்களினால் வெளிச்சமூட்டப்பட்டிருப்பாரானால், அவரது நடத்தையானது கிறிஸ்தவ வளர்ச்சியினுடைய மிக உயர்ந்த வகையாகக் கருதப்படுவதற்குப் பாத்திரமானதாகும்" (R3980) . . .*

இப்படிப்பட்ட அரிய கருத்துகளானது, இந்தச் சுவிசேஷ யுகத்தின் முடிவில் வாழ்ந்துகொண்டிருக்கும் தலை மற்றும் சரீரமாகிய கிறிஸ்துவின் பாத அங்கங்களாகிய நமக்கு இந்த நெருக்கமான பாதையில், தேவனுடைய மேலான வழிநடத்துதலைப் பற்றிய புரிந்துகொள்ளுதலையும், அதன் மீதான நம்பிக்கையையும், அதனையே சார்ந்திருப்பதன் அவசியத்தையும் மற்றும் ஆசீர்வாதத்தையும் கொடுக்கும் என்று நம்புகின்றோம். தேவன் தாமே இந்தப் புத்தகத்தின் வழியாக, அவருடைய பிள்ளைகளாகிய நம் அனைவரையும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் அடிச்சுவடுகளில் வழிநடத்தி நம்மை ஆசீர்வதிப்பாராக.

# பொருளடக்கம்

## துன்பம் எனும் பள்ளிக்கூடத்தில்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. சகோதரர்களால் பகைக்கப்பட்டவர் | R3971 | 4 |
| 2. துன்பத்தின் மத்தியில் பொறுமையாய்ச் சகித்தல் | R3972 | 9 |
| 3. முகாந்தரமில்லாமல் பகைக்கப்பட்டார் | R2880 | 16 |
| 4. துன்பம் எனும் பள்ளிக்கூடத்தில் | R2885 | 21 |
| 5. பொறாமை மற்றும் விரோதம் | R1635 | 27 |
| 6. யோசேப்பு எகிப்தில் விற்கப்பட்டார் | R1639 | 29 |
| 7. இவையெல்லாம் தேவனாலே உண்டாயிருக்கிறது | R1268 | 32 |
| 8. துன்பப்பட்டவர், எனினும் தேற்றுபவர் | R5216 | 33 |
| 9. முகாந்தரமில்லாமல் பகைக்கப்பட்டார் | R5214 | 40 |


## யோசேப்பு எகிப்தின் சிங்காசனத்தில்


| | | |
|---|---|---|
| 10. யோசேப்பு அதிகாரியாக எகிப்தில் | R1640 | 47 |
| 11. ஏனெனில், தேவன் அவனோடேகூட இருந்தார் | R2887 | 49 |
| 12. என்னைக் கனம் பண்ணுகிறவர்களை...கனம் பண்ணுவேன் | R3978 | 55 |


## யோசேப்பு தனது சகோதரர்களை மன்னித்தல்


| | | |
|---|---|---|
| 13. இரக்கமுள்ள யோசேப்பு | R2893 | 65 |
| 14. இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள் | R3980 | 72 |
| 15. யோசேப்பு தனது சகோதரர்களை மன்னித்தல் | R1645 | 80 |
| 16. பலியைப் பார்க்கிலும் இரக்கம் உத்தமமாயிருக்கிறது | R5234 | 85 |
| 17. பென்யமீனுக்கு ஐந்து மடங்கான பங்கு | R5231 | 91 |
| 18. யோசேப்பின் சகோதரர்களால் கற்றுக்கொள்ளப்பட்ட பாடங்கள் | R5232 | 97 |
| 19. விதைத்தலும், அறுத்தலும் | R5225 | 103 |


## யோசேப்பின் இறுதிக்காலங்கள்



| | | |
|---|---|---|
| 20. சிறந்த ஒரு மனுஷனுடைய வாழ்க்கையின் முடிவு | R2895 | 110 |
| 21. யோசேப்பின் இறுதி நாட்கள் | R1646 | 116 |


## பிற்சேர்க்கை


| | | |
|---|---|---|
| 22. யோசேப்பு மற்றும் கிறிஸ்து | R57b | 120 |
| 23. யோசேப்பும், அவரது சகோதரர்களும் | | 123 |
| 24. யோசேப்பின் வெள்ளிப்பாத்திரம் | | 141 |

# பாகம் 1

# துன்பம் எனும் பள்ளிக்கூடத்தில்



[R3971]

# "சகோதரர்களால் பகைக்கப்பட்டவர்"
## ஆதியாகமம் 37:5-28

"வைராக்கியமும், விரோதமும் எங்கே உண்டோ, அங்கே கலகமும், சகல துர்ச்செய்கைகளுமுண்டு."– யாக்கோபு 3:16

யோசேப்பு பற்றின வேதாகமக் கதையானது எந்த ஒரு காலப்பகுதியிலும், எந்த ஒரு மொழியிலும், இலக்கியத்தினால் அறியப்பட்டிருக்கும் மிகவும் சுவாரசியமானவைகளில் ஒன்றாகக் காணப்படுகின்றது. இப்பாடத்தில் நாம் பார்க்கயிருக்கின்ற பகுதியானது, (tragedy) துன்பியல்/சோக நிகழ்ச்சி என்று எளிதில் பெயரிடப்படக்கூடியதாகும். இது நல்ல மற்றும் கெட்ட மனித சுபாவத்தை விளக்குகின்றது மற்றும் அதன் பல்வேறு நிழல்களிலும், சம்பவங்களிலும் விலையேறப் பெற்ற பாடங்கள் காணப்படுகின்றது; மற்றும் அப்படிப்பினைகளில் முதன்மையானது பற்றி அடிக்கடி குறிப்பிடப்படுகின்றது மற்றும் ஆதார வசனத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது; அதாவது பொறாமை என்பது சீரழிந்த மனுஷீகத்தின், அதாவது சுயநலத்தின் பிரதானமான வேர்களில் ஒன்று என்பதும் மற்றும் இந்த வேரிலிருந்தே மனிதன் அறிந்திருக்கும் மிகப்பாதகமான சில தாக்கங்களும், அனுபவங்களும் அதாவது, "சகல துர்ச்செய்கைகளும்" தோன்றியுள்ளது என்பதுமாகும். இந்தக் கருத்தை நாம் தற்போது இப்பாடத்தைக் கற்கும்போது, நம் மனதில் கொண்டிருந்து, நாம் ஒவ்வொருவரும், நம்மில் நன்நெறியைச் செயல்படுத்துவோமாக. நம்முடைய விழுந்துபோன நிலைமையில் பொறாமையானது, இப்படிக் கொடூரமான பலனை உண்டுபண்ணக் கூடுமானால், கர்த்தருடைய உண்மையுள்ள பின்னடியார்கள் ஒவ்வொருவரும், இதற்கு எதிராக எவ்வளவாய் ஜாக்கிரதையுடன் காணப்பட வேண்டும். இந்த வேரிலிருந்து சிறு முளைகளைக்கூட அனுதின ஜீவியத்தில் வளருவதற்கு அனுமதிப்பது என்பது, புதுச் சிருஷ்டியாகிய தன்னை மிகவும் விபரீதமான, பின்விளைவுகளுக்கு நேராக வழிநடத்திவிடும் என்பதை ஒவ்வொருவரும் எவ்வளவாய் உணர்ந்துகொள்ள வேண்டும்.

இதை உணர்ந்தவர்களாக, ஒவ்வொருவரும் இந்தக் களையைத் தங்களது சொந்த இருதயமாகிய தோட்டத்திலிருந்து வேரோடே அழிப்பதற்கு விழிப்பாய் இருந்திட வேண்டும். ஓர் எழுத்தாளர் பின்வருமாறு கூறியுள்ளார். . . . **"பொறாமை தன்னிடம் இல்லை என்று நம்புகிற ஒரு மனிதன் உண்டு; அவன் தன்னுடைய சொந்த இருதயத்தை ஒருபோதும் ஆராய்ந்து பார்க்காதவன் ஆவான்."** சுயநலத்தின் இந்தத் தீமையான வேர், ஆதாமின் பூரணமற்ற ஒவ்வொரு மகனிடத்திலும் மற்றும் மகளிடத்திலும் ஒருவேளை சாதகமான சூழ்நிலைகளில் தழைத்தோங்குகிறதாகவோ அல்லது சாதகமான சூழ்நிலை இல்லாமையினால் செயலில் அடங்கியிருக்கும் நிலையிலோ அல்லது கிருபையினுடைய வல்லமையினால் அடக்கப்பட்டதாகவோ காணப்படலாம், ஆனால் எப்படியாக இருப்பினும் சந்தேகத்திற்கிடமின்றி அது காணப்படும். தேவனுக்காக பிரதான அன்பினாலும், தன்னை அன்புகூருவது போன்று தன்னுடைய அயலானிடத்திலான அன்பினாலும் சுடர்விட்டெரியும் இருதயம் மாத்திரமே, பொறாமை தொடர்புடைய விஷயத்தில் மிகவும் வளமற்ற நிலையில் காணப்படுகின்றது மற்றும் இம்மாதிரியான இருதயத்தில் பொறாமையானது, வளருவதற்கு வாய்ப்பில்லை. தேவன் மற்றும் மனிதனிடத்திலான நம்முடைய அன்பு தணியும்போது, பொறாமையின் இந்த வேரும், மற்றும் இதனோடு இணைந்துவரும் கோபம், பகைமை, சண்டை மற்றும் சகல பொல்லாப்புகள், ஆம் கொலைப்பாதகம், அதாவது அப்போஸ்தலனால் மாம்சம் மற்றும் பிசாசின் கிரியைகள் என்றும், ஆண்டவருடைய அங்கீகரிப்பை இப்போதும், எப்போதும் பெற்றுக்கொள்ள விருப்பமுடையவர்கள் அனைவராலும் விட்டொழிக்கப்பட வேண்டுமென்றும் நமக்குக் கூறப்படுகின்றவைகள் அனைத்தும் வளர்வதற்குரிய சாதகமான சூழ்நிலையை அதிகரிக்கின்றதாய் இருக்கின்றது. நம்முடைய மாம்சத்தின் இயல்புகள் என்னவாக இருப்பினும், கர்த்தருடைய பரிசுத்த ஆவியினாலும், அன்பின் ஆவியினாலும் ஜெனிப்பிக்கப்பட்டுள்ளதான புதிய சுபாவமானது, ஆதிக்கம் செலுத்துவதையும், தேவனுடைய பிள்ளைகளென அவர் அடையாளங்கண்டுகொள்பவர்கள் மீது பொறாமை கொள்வதற்குரிய விஷயத்தில் நாம் பொறாமையை வளர்த்துவதற்கு செயலற்றவர்களாய்/வளமற்றவர்களாய்க் காணப்படுவதையும் பிதா எதிர்பார்க்கின்றார். "சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்" (மத்தேயு 5:9).

## “நேச குமாரனாகிய யோசேப்பு”

நம்முடைய பாடத்தினுடைய சம்பவத்தின்போது, யோசேப்பு சுமார் 17-வயதை உடையவராகவும், யாக்கோபினுடைய குமாரர்களில் இளையவராகவும், தன்னுடைய தகப்பனாருக்குப் பிரியமானவராகவும் காணப்பட்டார். யோசேப்பு நற்குணமுள்ள/சாந்தமுள்ள மற்றும் யாக்கோபினால் விசேஷமாய் அன்புகூரப்பட்ட மனைவியுமான ராகேலின் குமாரனாவார். யோசேப்பின் சரித்திரமானது காண்பிப்பது போன்று, அவர் தனது தாயாருடைய நற்குணங்களையும், தனது தகப்பனாருடைய தைரியத்தையும் மற்றும் விசுவாசத்தையும் பெருமளவில் கொண்டவராகக் காணப்பட்டார். யோசேப்பினுடைய மூத்த சகோதரர்கள் கரடுமுரடானவர்கள் ஆவர்; ஆகையால் சூழ்நிலைகள் மற்றும் சந்தர்ப்பங்கள் அனைத்துமே, யோசேப்பிற்கு முன்னுரிமை கொடுக்கும் விஷயத்திலும், யோசேப்பைத் தனது பிரியமான குமாரன் என்று விசேஷமாய்க் கருதிக்கொள்ளும் விஷயத்திலும் யாக்கோபை நியாயப்படுத்தினதாகவே காணப்பட்டது. யோசேப்பிற்கு அவரது தகப்பனார் பலவருணமான அங்கியை முயன்று பெற்றுக் கொடுத்தார்; இது சில மொழிப்பெயர்ப்புகளில் பலவருணமான அங்கியென்றும், சில மொழிப்பெயர்ப்புகளில் நீளமான அங்கி (Revised Version) என்றும் வழங்கப்பெற்றுள்ளது. நீளமான அங்கிகள் என்று சொல்லும்போது, இது பல வருணங்கள் கொண்டதாக இராமல், மாறாக நீளமான கைப் பகுதியை உடைய, நீளமான அங்கியாகவும், வேலைபுரியும் ஜனங்கள் உடுத்திக்கொள்ளும் சாதாரணமான அங்கியிலிருந்து வேறுபட்டதாகவும், பிரபுக்கள் உடுத்திக்கொள்ளும் அங்கி போன்றதாகவும் கருதப்படுகின்றது. எனினும் இந்த அங்கிகள் பல வருணங்களைக் கூடப் பெற்றிருக்கலாம் என்றும் கருத்துத் தெரிவிக்கப்படுகின்றது; ஏனெனில் எகிப்திலுள்ள சில முற்காலத்துக் கல்லறைகளில் இத்தகைய நீளமான அங்கிகளானது, பளபளக்கும் நிறங்களுள்ள பாகங்கள் ஒன்றாய் இணைக்கப்பட்டு உண்டாக்கப்பட்டத் தோற்றத்தைக் கொடுக்கின்றதாய் இருக்கின்றது; இவ்வாறாக இரண்டு மொழிப்பெயர்ப்புகளுமே சரியாக இருப்பதற்கு வாய்ப்பு உள்ளது.

எப்படியாக இருப்பினும் அந்த அங்கியானது தனிச்சிறப்புடையதேயாகும் மற்றும் யோசேப்பிற்கான யாக்கோபினுடைய அங்கீகாரமுடைய முன்னுரிமை தொடர்புடைய விஷயத்தில், இந்த அங்கியானது, அவரது சகோதரர்களின் பொறாமையையும் மற்றும் கசப்பையும் திடப்படுத்திட உதவினது; அவரது சகோதரர்களோ அந்த அங்கியின் மூலமாக, யோசேப்பு இறுதியில் தன்னுடைய சகோதரர்கள் மீது அதிகாரியாகவும், தனது தகப்பனாருக்குப்பின் வீட்டாரின், சந்ததியின் தலைவராகவும் காணப்படுவார் என்ற தங்களது தகப்பனாருடைய தீர்மானம் தெரிவிக்கப்படுவதை உணர்ந்தார்கள். இவ்வளவாக தெளிவாய் ஒருதலைப் பட்சத்தை வெளிப்படுத்தின இந்தத் தகப்பன் சார்பிலான ஞானமற்றக் காரியத்தை விமர்சிப்பதற்கென்று நாம் இங்குக் கருத்துக்கள் தெரிவிக்க வேண்டாம். இப்படியாக யோசேப்பின் பட்சம் செயல்பட்டதையும், அவர் விசேஷமாய் அன்புகூரப்பட்டதையும் நியாயப்படுத்துவதற்கு ஏதுவாக, அவரிடம் அப்பேர்பட்டதான சிறந்த பண்புகள் காணப்பட்டதை நம்மால் உணர்ந்துகொள்ள முடிகின்றது. இந்த விஷயத்திலும், இன்னும் மற்ற விஷயங்களிலும், யோசேப்பு இயேசுவுக்கான நிழலாய் இருக்கின்றார் என்று வேதவாக்கியங்கள் தெளிவாய்ச் சுட்டிக்காட்டுகின்றன. இயேசு பரம பிதாவின் நேச குமாரனாகக் காணப்பட்டார் மற்றும் இயேசுவும் கூடத் தம்முடைய சகோதரர்களால் புறக்கணிக்கப்பட்டார் மற்றும் இயேசுவுங்கூட வெள்ளிக்காசுகளுக்காக விற்கப்பட்டார் மற்றும் இயேசுவுங்கூட விடுவிக்கப்பட்டார் என்று நாம் பார்க்கின்றோம்; அவர்மேல் பொறாமை கொள்ளப்பட்டது என்று நமக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது (மத்தேயு 27:18; மாற்கு 15:10). இன்னுமாக யோசேப்பு, கிறிஸ்துவின் ஒட்டுமொத்த சரீரத்திற்கும் நிழலாய்க் காணப்படுகின்றார்; கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஒவ்வொரு அங்கத்தினனும், யோசேப்பின் அனுபவங்களில் அடையாளப்படுத்தப்படுகின்றனர்; மற்றும் ஒவ்வொரு அங்கத்தினனுக்கும், “பிதா தாமே உங்களைச் சிநேகிக்கிறார்” என்ற நமது கர்த்தருடைய வார்த்தைகளானது பொருந்துகின்றதாய் இருக்கின்றது (யோவான் 16:27).

## “சொப்பனங்களின் முக்கியத்துவம்”

கர்த்தரினால் அருளப்பட்டதாகவும், தீர்க்கத்தரிசனமானவைகளாகவும் காணப்பட்ட யோசேப்பு கண்ட சொப்பனங்களானது, அவருடைய சகோதரர்களை இன்னும் கசப்பிற்குள்ளாக்கிற்று மற்றும்

அவர்களுடைய இருதயங்களில் காணப்பட்ட பொறாமை மற்றும் கசப்பின் வேர்களுக்கு உரமாகப் பயன்பட்டது. இந்தச் சொப்பனங்களில் ஒன்றில், ஒரு கோதுமை வயலில், 12 அரிக்கட்டுகள் காணப்பட்டது; அதிலொன்று நிமிர்ந்து நிற்க, அதனை சுற்றி மற்றக் கட்டுகள் மரியாதை செலுத்துவது போன்று, வணங்கி நின்றன. யோசேப்பு எவ்விதமான தீமையான எண்ணம் இல்லாமல், வெளிப்படையாகத் தன்னுடைய சகோதரர்களிடத்தில் சொப்பனத்தைக் கூறினார் மற்றும் அவர்களோ கர்த்தரிடத்தில் விசுவாசமற்றவர்களாகவும், தெய்வீகச் சித்தத்திற்கான கீழ்ப்படிதல் இல்லாதவர்களாகவும், தங்களது இளைய சகோதரன் தங்களுக்கு அதிகாரியாவது பற்றின கருத்துத் தெரிவிக்கப்பட்டதினிமித்தம் கோபமடைந்தார்கள்; "அவனை அவன் சொப்பனங்களினிமித்தமும் இன்னும் அதிகமாய்ப் பகைத்தார்கள்." இவ்வசனத்தில் குறிப்பிடப்படும் "அவன் வார்த்தைகளினிமித்தம்" என்பது, யோசேப்பினுடைய சகோதரர்களில் சிலருடைய தவறான செய்கைகள் குறித்த, யோசேப்பினுடைய புகாரைக் குறிக்கின்றதாயிருக்கின்றது. நீதி, நியாயம் என்பவைகள் யோசேப்பினுடைய இயல்பான குணநலன்களில் முழுப்பங்கு வகிக்கின்றதாய்த் தோன்றுகின்றது மற்றும் அவர் தன்னுடைய சகோதரர்கள் குறித்துக் கொடுத்தப் புகாரானது, பழித்தூற்றுதலல்ல, மாறாக தன்னுடைய தகப்பனார் அவரது தொழில் இன்னவிதத்தில் நடைப்பெறுகின்றது என்பதைத் தெரிந்துகொள்வது ஏற்றக் காரியம் என்று கருதி மாத்திரம் யோசேப்பு புகார்க் கொடுத்தார் (ஆதியாகமம் 37:2).

யோசேப்பினுடைய மற்றொரு சொப்பனமானது, அவரது சகோதரர்களின் கோபத்தைத் தூண்டினது மற்றும் ஏதோ யோசேப்பினுடைய சொப்பனங்களின் பின்னாக, அவரது பேராசைக் காணப்படுவது போன்று, அவரது தகப்பனாரிடமிருந்தும் கூடக் கடிந்து கொள்ளுதலைக் கொண்டுவந்தது. எனினும் யாக்கோபு இந்தக் காரியங்களையெல்லாம் தன்னுடைய இருதயத்தில் சிந்தித்துக்கொண்டு, எதிர்க்காலத்தில் தன்னுடைய நேச குமாரன் எவ்வளவு மாபெரியவனாய் இருக்கப் போகின்றான் என்று வியந்திருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை. இந்த இரண்டாம் சொப்பனத்திலோ சூரியனும், சந்திரனும், நட்சத்திரங்களும், ஒரு நட்சத்திரத்திற்கு வணங்கினது மற்றும் ஒருநாளில் முழுக்குடும்பமுமே யோசேப்பைத் தங்களுடைய அதிகாரியாக ஒப்புக்கொள்வார்கள் என்பதாக இந்தச் சொப்பனம் புரிந்துகொள்ளப்பட்டது. இக்காரியமானது அனைவருக்கும் மற்றும் யோசேப்பிற்கும் எவ்வளவு ஒவ்வாத (இயற்கைக்கு மாறான) காரியமாகத் தோன்றியிருந்திருக்கும். பாவம் அந்த வாலிபன்! யோசேப்பினுடைய வாழ்க்கையில் பின்னர் அவருக்குக் கிடைத்திட்டப் படிப்பினைகளானது, இரகசியங்களை மறைத்துக்கொள்பவராக இருப்பதற்கும், அனைத்துச் சொப்பனங்களையும், நம்பிக்கைகளையும் சொல்லாமல் இருப்பதற்கும், தன்னுடைய முத்துக்களைக் குறித்துப் புரிந்துகொள்ள முடியாதவர்களும், அதினால் கோபமடைபவர்களுமானவர்கள் முன் தன் முத்துக்களைப் போடாமல் இருப்பதற்கும் அவருக்குக் கற்பித்துக் கொடுத்தது. இரகசியங்களை மறைவாய் வைத்துக்கொள்ளுதல் தொடர்புடைய விஷயத்திலுள்ள ஞானம் பற்றின படிப்பினையானது, நம் அனைவருக்கும் எத்துணை அவசியமானதாகக் காணப்படுகின்றது. இதற்கான உதாரணமாக, "இன்னும் அநேகங்காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லவேண்டியதாயிருக்கிறது, அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர்கள்" என்று கூறின நமது கர்த்தர் காணப்படுகின்றார் (யோவான் 16:12). பேசுவதற்கு ஒரு காலமுண்டு மற்றும் பேசாமல் அடக்கிக்கொள்வதற்கு ஒரு காலமுண்டு; ஆகையால் நாம் அனைவரும் விழித்திருந்து, "கர்த்தாவே, என் வாய்க்குக் காவல் வையும்; என் உதடுகளின் வாசலைக் காத்துக்கொள்ளும்" என்று ஜெபம் பண்ணுவது அவசியமாகும் (சங்கீதம் 141:3).

## "சொப்பனங்களிலும் மேன்மையான தேவனுடைய வார்த்தைகள்"

தெய்வீக ஏவுதலினாலான சொப்பனங்கள் பற்றின வேத வாக்கியங்களின் பதிவுகளானது நம் முன் இருக்க, சொப்பனங்களைத் தாக்கிப் பேசுவதும், அவைகள் கவனம் செலுத்தப்படுவதற்குப் பாத்திரமற்றவைகள் என்று தெரிவிப்பதும் அறிவீனமான காரியமாக இருக்கும். யோசேப்பினால் அர்த்தங்கள் விவரிக்கப்பட்ட மற்ற அற்புதகரமான சொப்பனங்களையும், யாக்கோபு, பேதுரு, பவுல் முதலானவர்களின் சொப்பனங்களையும் நாம் நினைவுகூருகின்றோம். ஆனாலும் சொப்பனங்களுக்கு அளவு மீறிய முக்கியத்துவம் கொடுத்துவிடாதபடிக்கும் நாம் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும்.

முற்காலங்களில் சொப்பனங்களுக்கான தேவை இருந்தது என்றும், அவ்விதமான தேவை தற்காலத்தில் இல்லையென்றும் நாம் நினைவில் கொள்ளவேண்டும்; அவ்விதமான தேவை தற்காலத்தில் இல்லாததற்கான காரணம் சுவிசேஷ யுக சபையானது, தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கும்படிக்கு எதிர்பார்க்கப்படுகின்றனர்; அதாவது நீதியின் பாதை சுட்டிக்காட்டப்படுவதற்கென ஓர் அற்புதத்தையோ (அ) சொப்பனத்தையோ அவர்கள் எதிர்ப்பார்க்காமல், தங்களுக்குப் பின்னாலே "வழி இதுவே" என்று சொல்லும் சத்தத்திற்குக் கவனமாய்க் கேட்பதே அவர்களிடம் எதிர்ப்பார்க்கப்படுகிறது. நமக்கான பாதையானது, தெய்வீக வார்த்தைகளில் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ளது மற்றும் நாம் சரியான வழிகாட்டுதலைப் பெற்றிருக்கத்தக்கதாக நம்முடைய இருதயங்களுடைய கவனிக்கும் தன்மையை நாம் வளர்த்திட வேண்டும். இதற்கு இசைவாகவே வேதவாக்கியங்களானது, "சொப்பனங்கண்ட தீர்க்கத்தரிசி சொப்பனத்தை விவரிப்பானாக; என் வார்த்தையுள்ளவனோ, என் வார்த்தையை உண்மையாய்ச் சொல்வானாக" என்று கூறுகின்றது (எரேமியா 23:28). சொல்வதற்கென்று மேலானதாய் நமக்கு வேறு எதுவும் இல்லையெனில், அதாவது நேரடியானதாகவும், அதிகாரப் பூர்வமானதாகவும் சொல்வதற்கு எதுவும் இல்லையெனில், சொப்பனமானது தெரிவிக்கப்படலாம்; ஆனாலும் நம்முடையதும், மற்றவர்களுடையதுமான சொப்பனங்கள் அனைத்திற்கும் மேலாக கர்த்தருடைய வார்த்தைகள், அவருடைய வெளிப்படுத்தல்கள், அவருடைய ஏவுதலின் பேரிலான சாட்சியங்களும் வைக்கப்பட வேண்டுமென்று மேற்கூறப்பட்ட வசனத்தில் கர்த்தர் தெரிவிக்கின்றார். ஒருவேளை ஒரு சொப்பனமானது தேவனுடைய வார்த்தைகளின் தெளிவான காரியங்கள் எதையேனும் வலியுறுத்துகின்றதானால், அது ஒரு நிழல் பார்க்கப்படுவது போன்று, பார்க்கப்படலாம் மற்றும் பயன்படுத்தப்படலாம், அதாவது உபதேசத்தையோ அல்லது கடமையையோ போதிப்பதற்காக அல்லாமல், மாறாக வேதவாக்கியங்கள் மீது கவனத்தைத் திருப்புவதற்கும் மற்றும் தெளிவாக்குவதற்கும் பயன்படுத்தப்படலாம்.

## "இவனைக் கொல்லுவோம் வாருங்கள்"

உண்மைகள் பற்றின விவரம்/புகார் தெரிவித்ததிலுள்ள யோசேப்பினுடைய உண்மைத் தன்மையானது, அவரை யாக்கோபு மேற்பார்வையாளராக ஏற்படுத்துவதற்கு ஏதுவாக வழிநடத்தினது மற்றும் இதன் காரணமாகவே யோசேப்பு, மூன்று நாள் பயணமாக, தன்னுடைய சகோதரர்களுக்கு சில வீட்டு உணவுகளை எடுத்துச் செல்வதற்கும், அவர்களது நிலவரங்களைப் பற்றியும், மந்தைகளினுடைய வளமை பற்றியும், மேய்ச்சல் நிலவரங்கள் முதலியவைகள் பற்றியுமான மறு செய்தியினை யாக்கோபினிடத்திற்குக் கொண்டுவருவதற்குமெனச் சீகேமுக்கு யாக்கோபினால் அனுப்பி வைக்கப்பட்டார். சீகேமிலே தன்னுடைய சகோதரர்களைக் காணமுடியாததினாலே, யோசேப்பு தோத்தானுக்குப் போனார்; மற்றும் இவைகள் அனைத்திலும் யோசேப்பு தைரியத்தையும், தன்னம்பிக்கையையும் உடையவராகவும், அக்கால வழக்கத்தின்படி இரவு வேளைகளில் திறந்த வெளியில் உறங்கினவராகவும், வழியிலுள்ள அபாயங்களை மனத்துணிவுடன் சந்தித்தவராகவும் காணப்பட்டது வெளிப்படுகின்றது. இதுவுங்கூட, யாக்கோபு தன்னுடைய நேசகுமாரனிடத்தில் கொண்டிருந்த அன்பானது, அவர் யோசேப்பை முற்றிலுமாகச் சீரழித்துப்போடுவதற்கு வழிநடத்தவில்லை என்பதையும், யோசேப்பு தன்னைத்தான் பராமரித்துக்கொள்ள முடிகின்றவராக யாக்கோபினால் நம்பப்பட்டார் என்பதையும் நமக்குத் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது. இன்றைய காலங்களில் அநேகமாக பெற்றோர்கள் ஞானமற்றவர்களாக நடந்துகொண்டு, தங்களின் அதிகப் பிரியத்திற்குரிய பிள்ளைகளிடத்தில் தைரியத்தையும், உறுதியையும் வளர்த்திவிடுவதற்குத் தவறிப்போய்விடுகின்றனர் மற்றும் பிற்காலங்களில் பிள்ளைகளுக்கு மிகவும் பாதகமாய்க் காணப்படத்தக்கதாக, சில சமயங்களில் பிள்ளைகளைச் சில சிரமங்களிலிருந்து மூடி மறைத்துக் காத்துவிடுகின்றனர்.

மேய்ப்பர்களாய் இருந்த சகோதரர்கள், மந்தைகளைத் தாக்குவதற்குரிய துஷ்டமிருகங்கள் வருகின்றதா என மிகவும் கவனமாய்ச் சுற்றி நோக்கும் பழக்கமுடையவர்களாய் இருந்தார்கள் மற்றும் தங்களது சகோதரனைத் தொலைவில் வரும்போதே அடையாளங்கண்டு கொண்டார்கள். உடனடியாக அங்கிருந்த சந்தர்ப்பங்களும், சூழ்நிலைகளும் அவர்களது பொறாமை மற்றும் கசப்பினுடைய வேரினை

வேகமாய் முளைப்பதற்குப் பண்ணிற்று மற்றும் சில நொடிகளுக்குள்ளாக அது முளைவிட்டு அவர்களது இருதயங்களில் கொலைப் பாதகத்தின் ஆவியைக் கொண்டுவந்தது. பத்தில் ஒன்பது பேர், தங்கள் சகோதரனைக் கொல்வதற்கு உடனடியாக ஒப்புக்கொண்டார்கள். மறுப்புத் தெரிவித்தவரும் அதுவும் மறைமுகமாகத் தெரிவித்தவருமான ஒரே நபர் ரூபன் ஆவார் மற்றும் இவர் தன்னுடைய சகோதரர்களின் கசப்பினை நன்கு அறிந்தவராக இருந்தபடியால், அவர்களை எதிர்ப்பதற்குத் துணிந்தார் மற்றும் அவர்கள் யோசேப்பைக் கொல்லாமல், அப்பகுதிகளில் காணப்பட்ட வறண்ட குழிகளுள் ஒன்றில் போடும்படிக்கான மாற்று யோசனையையும் இவர் வலியுறுத்தினார்; இவர் பிற்பாடு வந்து இரகசியமாய் யோசேப்பை விடுவிக்கலாம் என்று தன் இருதயத்தில் திட்டம் பண்ணினவராகக் காணப்பட்டார்.

இந்தச் சகோதரர்களில், சுபாவ மனிதனுடைய இருதயம் விவரிக்கப்படுவதைக் காணமுடிகின்றது, அதாவது ஒரு சமயம் நீதிக்காகப் போராடுவதையும் மற்றும் கொஞ்சம் காலத்திற்குப் பிற்பாடு நீதியின் அனைத்துக் கொள்கைகளையும் மீறுவதையும் காணமுடிகின்றது. சகோதர சிநேகம் அனைத்தையும் இத்தருணத்தில் மீறி, தங்களது சகோதரனைக் கொன்று போடுவதற்குத் திட்டம் பண்ணின இதே மனிதர்கள்தானே, கொஞ்ச காலத்திற்கு முன்னதாக ஒரு முழு ஊரின் ஜனங்களைக் கொன்றுபோட்டதன் மூலம் தங்கள் சகோதரி அவமானப்படுத்தப்பட்டக் காரியத்துக்குப் பழித் தீர்த்தார்கள்? இப்படி அந்த ஊர் ஜனங்களைக் கொன்றுபோடுவதானது பாவத்திற்கு எதிரான நீதியான கோபம் என்று இதே மனிதர்கள்தானே கொஞ்சங்காலத்திற்கு முன்னதாக எண்ணினார்கள்? விழுந்துபோன மாம்சத்தினுடைய இம்மாதிரியான மூர்க்கத்தனமான நடவடிக்கைகளைச் சரிசெய்துகொள்வதற்குப் பரிசுத்த ஆவியினுடைய மறுரூபப்படுத்தும் ஏவுதல்/தாக்கம் அவசியமாய் உள்ளது; ஆகவேதான் பரிசுத்த ஆவியினால் மீண்டுமாக ஜெநிக்கப்பட்டவர்கள் மாத்திரமே "தெளிந்த புத்தியுள்ள ஆவியை" உடையவர்களாய் இருப்பார்கள் என்று வேதவாக்கியங்கள் நமக்குத் தெரிவிக்கின்றன (2 தீமோத்தேயு 1:7). உண்மையில் சுபாவபடியான மனுஷனிடத்தில் பெருமையானது முக்கியமானக் காரணியாகத் திகழ்கின்றது; நீதியைப் பாதுகாத்தல் எனும் வேடத்தில், ஆனால் உண்மையில் சுயநலத்தினுடைய ஓர் அம்சத்தைத் திருப்திப்படுத்துவதற்காகக் கொலைகள் புரிந்திடுவதற்குப் பெரும்பாலும் வழிநடத்துகின்றதாய் இருக்கின்றது. ஆகையால் சுயநலத்தினுடைய வேர்களில் ஒன்றாகிய பெருமையானது, சகோதரர்களை முந்தின தருணத்தின் விஷயத்தில் கொலைச் செய்திட வழிநடத்தினது. சுயநலத்தினுடைய மற்றும் ஒரு வேராகிய பொறாமையானது யோசேப்பை அவரது சகோதரர்கள் கொன்று போடுவதற்கு முயற்சிக்க இப்பொழுது வழிநடத்தினதாய் இருந்தது.

## "பலத்த சத்தத்தோடும், கண்ணீரோடும்"

ரூபனுடைய பரிந்துபேசுதல் வெற்றிக் கண்டது. யோசேப்பு குழிக்குள் போடப்பட்டார் மற்றும் பரிதாபமான நிலையிலுள்ள யோசேப்பினுடைய கதறல்களும், கெஞ்சுதல்களும், மன்றாடுதல்களும் அச்சகோதரர்களுடைய செவிகளில் விழுந்துகொண்டிருக்கவே, அவர்கள் அப்பம் புசிப்பதற்கும், யோசேப்பு அவர்களுக்காக வீட்டிலிருந்து கொண்டுவந்த உணவுகளைப் புசிப்பதற்குமென்று கீழே உட்கார்ந்தார்கள். அவர்கள் கல் இருதயம் கொண்டவர்களாகவும், இரக்கமற்றவர்களாகவும், அநீதியுள்ளவர்களாகவும் காணப்பட்டார்கள்; உண்மையில் சுபாவத்தின்படியான (விழுந்துபோன) இருதயமானது, பொதுவாக இரக்கமற்றதாகவே காணப்படுகின்றது. உலக ஜனங்கள் மத்தியில் வெட்கத்தின் காரணமாகவோ (அ) பயத்தின் காரணமாகவோ (அ) ஏதோ ஒரு திட்டத்தின் காரணமாகவோ, பொதுவாக இரக்கம் காணப்பிக்கப்படுகின்றது; ஆனால் அன்பின் அம்சமாக விளங்கும் இரக்கமானது, ஆதியில் மனித சுபாவத்திற்குச் சொந்தமானதாகக் காணப்பட்டிருந்தபோதிலும், மிகவும் பரவலாய்த் தொலைந்து போனதாகவும் மற்றும் தங்கள் கர்த்தரின் இருதயத்திற்கு ஒத்த சாயலில் மீண்டுமாக ஜெநிக்கப்பட்டவர்கள் மத்தியில் பிரதானமான ஆதாரமாகவும் காணப்படுகின்றது.

(குழிக்குள்) சிறைவைக்கப்பட்ட யோசேப்பினுடைய கதறல்கள், கெஞ்சுதல்கள் மற்றும் மன்றாட்டுகள் குறித்து நம்முடைய பாடம் குறிப்பிடுகிறதில்லை; ஆனால் மற்றொரு வேதவாக்கியமானது இதைத் தெரிவிக்கின்றது, அதாவது பிற்காலங்களில் "இந்தச் சகோதரர்கள்" பஞ்சத்தின் காரணமாகத் தானியங்கள் வாங்கும்படிக்குக் கானானிலிருந்து எகிப்துக்குப் போகும் நிலைக்கு ஆளானார்கள்.

எகிப்தில் அவர்களது சகோதரனாகிய யோசேப்பு அதிகாரியாக இருந்தார் மற்றும் அவர் அவர்களை வேவுக்காரர்கள் என்று கருதுவது போன்று நடித்து, அவர்களை மூன்று நாட்கள் சிறையிலடைத்தார். அவர்கள் அங்குக் காணப்பட்டபோது, தாங்கள் முன்பு செய்த தவறுகளினால் நினைப்பூட்டப்பட்டவர்களாகி, "நம்முடைய சகோதரனுக்கு நாம் செய்த துரோகம் நம்மேல் சுமந்தது; அவன் நம்மைக் கெஞ்சி வேண்டிக்கொண்டபோது, அவனுடைய மன வியாகுலத்தை நாம் கண்டும், அவனுக்குச் செவிகொடாமற்போனோமே; ஆகையால், இந்த ஆபத்து நமக்கு நேரிட்டது என்று ஒருவரை ஒருவர் பார்த்துச் சொல்லிக்கொண்டார்கள். அப்பொழுது ரூபன் அவர்களைப் பார்த்து: இளைஞனுக்கு விரோதமாகப் பாவஞ்செய்யாதிருங்கள் என்று நான் உங்களுக்குச் சொல்லவில்லையா? நீங்கள் கேளாமற்போனீர்கள்; இப்பொழுது, இதோ, அவன் இரத்தப்பழி நம்மிடத்தில் வாங்கப்படுகிறது என்றான்" (ஆதியாகமம் 42:21, 22). யோசேப்பு குழிக்குள் சிறைவைக்கப்பட்ட பிற்பாடு, அவரைப் பின்னர் வந்து விடுவிக்கலாம் என்ற நோக்கத்தில், ரூபன் அவ்விடத்தை விட்டுக் கடந்துபோயுள்ளதாக தெரிகின்றது; ஆனால் ரூபன் திரும்பிவந்தபோதோ, தன்னுடைய சகோதரர்கள் யோசேப்பை வணிகக் கூட்டத்தாரிடம் விற்றுப்போட்டுள்ளதையும், அந்த வணிகர்கள் யோசேப்பை அடிமையாக எகிப்துக்குக் கொண்டுபோயுள்ளதையும் அறிந்துகொண்டார்.

———————————————————————

**[R3972]**

# "துன்பத்தின் மத்தியில் பொறுமையாய்ச் சகித்தல்"

## ஆதியாகமம் 39:20-23; 40:1-15

"ஆகிலும் நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்."– வெளிப்படுத்தல் 2:10

யோசேப்பினுடைய சோதனைகள் மற்றும் சிரமங்கள் பற்றின கதையானது, பரிதாபத்தை மிகவும் தூண்டக்கூடிய ஒன்றாக இருக்கின்றது; எனினும் அனைத்துக் காரியங்களிலும் கர்த்தருடைய ஆசீர்வாதமானது, யோசேப்போடு கூடவே இருந்தது என்பதையும், யோசேப்பு உண்மையாய் அவ்வனுபவங்களுக்கு இணங்கினார் என்பதையும், யோசேப்பினுடைய அனுபவங்களானது, அவருக்குப் பாதகத்தை ஏற்படுத்துவதற்குப் பதிலாக, மாறாக மிகுந்த அளவில் அவருக்கு அனுகூலமாகவே காணப்பட்டது என்பதையும் நாம் காண்கின்றோம். நாம் அனுபவிக்கும் பெந்தெகொஸ்தே ஆசீர்வாதங்களுக்கெல்லாம் நெடுங்காலத்திற்கு முன்னதாகவும் மற்றும் பரம சுபாவத்திலும், இராஜ்யத்தின் மகிமையிலும் பங்குகொள்ளத்தக்கதாக தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்கான அழைப்புக்குரிய மகா மேன்மையும், அருமையுமான வாக்குத்தத்தங்கள் வெளிச்சத்திற்குக் கொண்டுவரப்படுவதற்கு முன்னதாகவும் யோசேப்பு வாழ்ந்தவராக இருந்தபோதிலும், ஆபிரகாமுக்குப் பண்ணப்பட்ட மாபெரும் வாக்குத்தத்த உடன்படிக்கையிலுள்ள தேவனுடைய இரக்கம் பற்றின மங்கலான வெளிப்படுத்துதலை உடையவராக மாத்திரம் யோசேப்பு காணப்பட்டப்போதிலும், அவருடைய உண்மை தன்மையும், அவருடைய பொறுமையுடன் கூடிய சகிப்புத் தன்மையையும் இந்தச் சுவிசேஷ யுகத்தினுடைய, ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்களாகிய தேவனுடைய புத்திரர் வீட்டாருக்கு அருமையான படிப்பினையாக திகழ்கின்றது. யோசேப்பினால் இவ்வளவு பொறுமையுடனும், உண்மையுடனும் சகித்துக்கொள்ள முடிந்தது என்றால், மிகவும் அதிகமாய்க் கிருபைப் பெற்றவர்களாகிய நம்மால் சகித்துக்கொள்ள முடியாது என்று சொல்லலாகுமா? யோசேப்பினுடைய வெற்றிக்கான இரகசியமானது, நம்முடைய வெற்றிக்கான இரகசியமாகவும் இருக்கின்றது, அதாவது "நமக்கு நிலையும், உறுதியும் திரைக்குள்ளாகப் போகிறதுமான ஆத்தும நங்கூரமாயிருக்கிறது" என்று அப்போஸ்தலனால் குறிப்பிடப்படும் ஆபிரகாமின் உடன்படிக்கையை, விசுவாசத்தின் மூலமாக தளரா உறுதியுடன் பிடித்துக்கொள்வதே வெற்றிக்கான அந்த இரகசியமாகும் (எபிரெயர் 6:19). இப்பாடத்தைப் பார்ப்பது என்பது, கர்த்தருடைய அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்களுக்கென்று, அவர் அனுமதிக்கும் சூழ்நிலைகள் மற்றும் சந்தர்ப்பங்களின் கீழ், அவர்கள் ஒவ்வொருவரும் இன்னும் அதிகமாய்ப் பொறுமையாகச் சகித்துக்

கொள்ளத்தக்கதாகவும், உண்மையுள்ளவர்களாய்க் காணப்படத்தக்கதாகவும், உற்சாக மூட்டுகிறதாகவும், தூண்டுகிறதாகவும் காணப்படும்.

## “யோசேப்பு எகிப்தில் ஓர் அடிமையாக”

இருபது வெள்ளிக்காசுகளுக்கு யோசேப்பின் சகோதரர்கள் அவரை விற்றுப்போட்டதான, இஸ்மயேலர்களான வியாபாரிகளோ, அவரை எகிப்துக்குக் கொண்டுபோனார்கள்; அங்கு அவர் அக்காலத்தினுடைய வழக்கத்தின்படி, திறந்த வெளிச் சந்தையில் விற்பனைக்காக நிறுத்தப்படப்போகின்றார். பரிதாபத்திற்குரிய அந்த வாலிபனின் வேதனையை நம்மால் கற்பனை செய்துபார்க்க முடிகின்றது. தான் மரித்துப்போகும்படிக்குத் தனது சகோதரர்கள் தன்னைப் போட்ட குழியினின்று யோசேப்பு விடுவிக்கப்பட்ட கொஞ்ச நேரத்திற்குள்ளாகவே, அவர்கள் உண்மையில் இருதயத்தில் மனம் வருத்தம் கொள்ளாமல், மாறாக தங்களது கொலைப் பாதகமான பொறாமையின் வடிவத்தை மாத்திரமே மாற்றியுள்ளனர் என்று உணர்ந்து கொண்டார். யோசேப்பு தன்னுடைய தகப்பனுடைய குடியிருப்புகளிலிருந்து, வெகுத்தொலை தூரங்களுக்குச் செல்லும் பழக்கமற்றவராகக் காணப்பட்டபடியால், (இம்மாதிரியான தருணங்களில்) 17-வயது வாலிபனுக்கு ஏற்பட்டிருக்கும் அதைரியத்தை/சோர்வை நாம் விவரித்துக் காட்டுவதைக் காட்டிலும், நன்கு கற்பனை செய்து நாம் புரிந்துகொள்ளலாம்; மேலும் யோசேப்பு அக்காலக்கட்டங்களில் நாகரிகத்திற்கு மையமான, எகிப்து நகரத்திற்கு வந்து, மேய்ப்பனின் குமாரனாகிய தனக்கு முற்றிலும் புதியதாகக் காணப்பட்ட வியத்தகு காரியங்களைக் கண்டபோது, தன்னை யார் விலைக்கு வாங்கப் போகிறார் மற்றும் தன்னுடைய எதிர்கால ஜீவியம் என்னவாக இருக்கும் என்பவைகள் பற்றின கவலைகள் மற்றும் சந்தேகங்களினால் அவருடைய இருதயம் நிரம்பிக் காணப்பட்டது. யோசேப்பு தேவனிடத்திலான விசுவாசத்தை இழந்துபோகத்தக்கதாகவும், அதாவது ஏன் தனது இரக்கமற்ற சகோதரர்களிடம், தான் இரக்கத்திற்காக கெஞ்சும்படிக்கு விடப்பட வேண்டுமென்று யோசிக்கத்தக்கதாகவும், ஏன் தான் அடிமையாக்கப்பட்டு, தன்னுடைய தகப்பன் வீட்டினின்று பிரிக்கப்பட வேண்டுமென்று யோசிக்கத்தக்கதாகவும், யோசேப்பு அப்போது கடந்துவந்த அனுபவங்களில் அநேகம் வாய்ப்புகள் இருந்தது. எனினும் தேவன் மீதான விசுவாசத்தை யோசேப்பு கைவிட்டதாக நமக்கு ஏதும் தெரிவிக்கப்படவில்லை.

கர்த்தருடைய வழிநடத்துதலின்படி, அவர் எகிப்திலுள்ள ஐசுவரியமான பிரதானியாகிய போத்திபார் என்பவரால் விலைக்கு வாங்கப்பட்டார். இந்த மனிதனுடைய வீட்டில், ஊழியக்காரனாகக் காணப்பட்ட யோசேப்பு, சிறியதும், பெரியதுமான தன்னுடைய பொறுப்புகளில் உண்மையுள்ளவராகக் காணப்பட்டார் மற்றும் தன்னுடைய எஜமானின் நம்பிக்கைக்குப் பாத்திரமான நிலையிலும், உயர் கணிப்பிலும் அதிகமாய் வளர்ந்தார் மற்றும் அவரது 22-ஆம் வயதில், அவரது எஜமானுடைய வீட்டின் காரியங்கள் எல்லாவற்றிற்கும் விசாரணைக்காரனாக்கப்பட்டார். யோசேப்பு எகிப்துக்கு வந்து பத்து வருடங்களானபோது, அதாவது 27 வயதானவராய் இருக்கையில், அதாவது வாலிப வயதில் காணப்பட்டபோது, அவர் தனது எஜமானுடைய மனைவியின் அன்பை, வேண்டுமென்றே இல்லாமல், தன்பால் ஈர்த்துக்கொண்டவரானார்; ஆனால் எஜமானின் மனைவி தனது அன்பை வெளிப்படுத்தினபோது, யோசேப்பு தேவனுக்கான உண்மையின் காரணமாகவும், தனது எஜமானுக்கான உண்மையின் காரணமாகவும், விடாப்பிடியாய் எதிர்த்தவராய்க் காணப்பட்டார்.

## “யோசேப்பினுடைய ஒழுக்கத்திற்கான சோதனை”

யோசேப்பினுடைய ஒழுக்கத்திற்கான சோதனை குறித்து **முனைவர் பிலேக்கி** அவர்கள் குறிப்பாய்க் கூறியுள்ளது பின்வருமாறு: **“ஒவ்வொரு நாளும் தொடர்ந்து காதல் கலைகளில் வல்லவளாகிய வீட்டு எஜமானி, அவளது திறமையினாலும், காம உணர்வுகளினாலும் செய்ய முடிந்த சகல கவர்ச்சிகளுடன், வலைவீச வந்து கொண்டிருந்தபோது, அது சாதாரணமான சோதனையாக இருந்திருக்காது என்று நாம் நம்புகின்றோம். அடிமையாகிய தான், இத்தகைய உயர் ஸ்தானத்தில் காணப்படும் ஸ்திரீயின் அன்பைத் தன்பால் ஈர்த்துள்ளதைக் குறித்த எண்ணத்தினால், யோசேப்புகூட எப்படித் தாக்கத்திற்குள்ளாயிருக்க வேண்டும் என்றும், மற்றும்**

**அவளது செல்வாக்கின் மூலமாகச் சுதந்திரத்தைத் தன்னால் பெற்றுக்கொள்ள முடியும் மற்றும் கிடைக்கப்பெறும் பிரகாசமான எதிர்காலத்தில், தன்னுடைய சொப்பனங்கள் நிறைவேறும் என்பதான காட்சிகள் எவ்வாறு அவர் முன் நிழலிட்டிருக்கும் என்றும் நம்மால் கற்பனை செய்து பார்க்க முடிகின்றது."**

போத்திபாருடைய மனைவியின் நடக்கையானது, அன்பு எவ்வாறு கசப்பான பகையாக மாறும் என்பதற்கான உதாரணமாக விளங்குகின்றது. அவள் தனது உறுதியினிமித்தமாக, யோசேப்பை அவரது வஸ்திரத்தைப் பிடிப்பதன் மூலம் பிடித்தாள், ஆனால் அவரோ வஸ்திரத்தை விட்டுவிட்டு நழுவிப் போய்விட்டார் மற்றும் அப்போது அவளது சீற்றமும், சினமும் கசப்பானது. அவளோ அந்த வஸ்திரத்தைத் தன்னிடத்தில் வைத்துக்கொண்டு, தன்னுடைய கணவனிடம், அவரது அபிமான வேலைக்காரன் தன்னைத் தவறு செய்வதற்கு இணங்க வைத்திட முயற்சித்தான் என்றும், தான் சத்தமிட்டுக் கூப்பிட்டபோது, அவன் தன்னுடைய வஸ்திரத்தை விட்டுவிட்டு ஓடிவிட்டான் என்றும் கூறினாள். யோசேப்பின் விஷயத்தில் இக்காரியமானது எத்தகைய ஒரு திருப்பத்தைக் கொண்டு வந்தது! யோசேப்பு தன்னுடைய எஜமானுடைய கண்களுக்கு முன்பாக மாத்திரமல்லாமல், தான் 10-வருடங்களாக தங்கியிருந்த வீட்டில் பழகினவர்கள் அனைவருக்கும் முன்பாகவும், இப்படியாக அவமதிப்பிற்கு உள்ளாகத்தக்கதாக ஏன் கர்த்தர் அனுமதித்தார்? யோசேப்பினுடைய நல்லொழுக்கமானது, இவ்வளவுக்குப் பொல்லாப்பாய்ப் பேசப்படுவதற்கு ஏதுவாகக் கர்த்தர் அனுமதித்தது ஏன்?

இது அநேகமாக யோசேப்பிற்கு மர்மமான தெய்வீகச் செயல்பாடாகவே தோன்றியிருக்கும், எனினும் தெய்வீக வழிநடத்துதலானது எப்படி அவரைக் கைவிடவில்லை என்றும், மாறாக இந்த அனுபவத்தின் மூலம் நீதி, பொறுமை, அனுபவங்கள், உண்மைத் தொடர்பாக யோசேப்பிற்கு இன்னமும் போதனைகள் கொடுப்பதற்கும், யோசேப்பு அரியணையில் பெற்றுக்கொள்ளப்போகின்ற இன்னும் அதிகமான ஆசீர்வாதங்களுக்கு அவரை ஆயத்தப்படுத்துவதற்கும் என்று கர்த்தருடைய வழிநடத்துதல்கள் ஆயத்தமாய் இருந்தது என்றுமுள்ளவைகளை நாம் பின் நடைபெறும் சம்பவங்களின் வெளிச்சத்தில் காணமுடிகின்றது. இந்த ஆவிக்குரிய யுகத்தினுடையவர்களாகிய நமக்கான பாடம் தெளிவானதாகவும், மிகவும் கவனத்தை ஈர்க்கின்றதாகவும் காணப்படுகின்றது; யோசேப்பினுடைய உண்மையற்ற தன்மையின் காரணமாக, கர்த்தர் இந்தச் சோதனையை அவர்மேல் வரப்பண்ணவில்லை. இதுபோன்று நம்மீது ஒருவேளை சோதனைகளும், சிரமங்களும் வருவதற்கு அனுமதிக்கப்படும்போது, இதற்கான காரணம் நம் சார்பிலான உண்மையற்ற தன்மையும், கர்த்தரிடமிருந்து வருவதான தண்டனையும் ஆகும் என்பதாகாது. அவருடைய வழிநடத்துதலின்போது, அவரை நம்மால் காணமுடியாத போதும், வழியினுடைய முடிவை நம்மால் காணமுடியாதபோதும், நாம் கர்த்தரை விசுவாசிப்பதற்கென்று ஒவ்வொரு நாளும் அதிகமதிகமாய்க் கற்றுக்கொண்டிருக்கின்றோமல்லவா? நம்மால் வழியினுடைய முடிவைக் காணமுடியுமானால், அங்கு விசுவாசத்திற்கு இடமிருக்குமா? எதிர்காலத்தினைப் பற்றின அறிவு நமக்கு இல்லாத காரியமே, தற்காலத்தில் விசுவாசத்திற்கான பலமாய் இருக்கின்றதல்லவா?

## "சோதனையில் எங்களைக் கைவிடாதிரும்"

**மகா ஸ்பர்ஜன்** அவர்கள் ஒருமுறை பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார், **"சில குறிப்பிட்டப் பாவங்களோடு போராடும் விஷயத்தில், விலகியோடுவதைக் காட்டிலும் வெற்றிக்கொள்வதற்கு வேறு எந்த வழியும் இருப்பதில்லை. முற்காலத்தில் இயற்கையை வழிபடுபவர்கள், பேஸிலிஸ்க் எனும் பாம்பைக் குறித்து அதிகம் எழுதியுள்ளனர்; இந்தப் பாம்பானது, தனது கண்களின் பார்வையினால் நபர்களை/விலங்குகளை அசைய முடியாதபடிக்கு நிறுத்தி, சுலபமாகக் கொன்று போடுகின்றது; இதுபோலவே பொல்லாப்பினுடைய ஒரு பார்வையே நம்மைக் கவலைக்கிடமான அபாயத்திற்குள்ளாக்குகின்றது**;**"** இந்தக் கருத்திற்கு இசைவாகவே அப்போஸ்தலன், "பாலியத்துக்குரிய இச்சைகளுக்கு நீ விலகியோடு" என்று தீமோத்தேயுவுக்கு எழுதியுள்ளார். இயேசுவின் மாதிரியானது, பூமிக்குரிய வகை சார்ந்த பிரகாசமான நம்பிக்கைகளையும், வாய்ப்புகளையும் விட்டுவிடுமளவுக்கு நீதியின் கொள்கைகளுக்கு உண்மையாய் இருத்தல் தொடர்புடையக் காரியத்தில், நம் அனைவருக்கும் அருமையானப் பாடமாகக் காணப்படுகின்றது. சோதனையிலிருந்து விலகியோடுதல் குறித்த இந்தப் பாடத்தை நாம் கற்றுக்கொள்கையில், நாம் மற்றுமொரு பாடத்தையும் கற்றுக்கொள்ள

வேண்டியுள்ளது, ஏனெனில் யோசேப்பினுடைய எஜமானாகிய போத்திபார் யோசேப்பின் மீது மிகவும் கோபமடைந்தபோது, நடந்தக் காரியங்களை விவரிப்பதன் மூலம் போத்திபாரின் மனைவியை அவமானப்படுத்துவதற்கு முயற்சிக்காமல், குற்றச்சாட்டை மாத்திரமே மறுதலித்தவராக யோசேப்பு காணப்பட்டது பதிவுகளிலிருந்து தெரிகிறது. பேசும் காரியம் உண்மையாக இருப்பினும், தீமை பேசுதலைத் தவிர்ப்பதற்காக, நமக்கு எத்தகைய சிறந்த மாதிரி/உதாரணம் இங்குக் கொடுக்கப்பட்டுள்ளது!

அந்த ஸ்திரீயினுடைய பொல்லாப்பை வெளிப்படுத்துவது என்பது நீதியான காரியமாகவே இருந்தாலும், அப்படிச் செய்வது என்பது அவளைப் பாதிப்பிற்குள்ளாக்குவது மாத்திரமல்லாமல், அவள் மீதான போத்திபாருடைய பாசத்தின் விஷயத்தில், அது சரி பண்ணமுடியாத பலமான அடியாகக் காணப்பட்டு, இப்படியாக அவள் மீதான எஜமானின் நம்பிக்கைக் குலைந்துபோய், அவரது குடும்பத்தைப் பிரித்துவிடும் என்று யோசேப்பினுடைய பெருந்தன்மையான இருதயம் அநேகமாக யோசித்திருக்க வேண்டும். இம்மாதிரியான சூழ்நிலைகளின் கீழ்ப் பொறுமையாய்ச் சகிப்பதற்கான விருப்பம் என்பது, உயர்தரமான மற்றும் தலைச் சிறந்த குணலட்சணத்திற்குரிய வியக்கத்தக்க ஓர் உதாரணமாகும்/ விளக்கமாகும். இப்படிப்பட்ட ஒரு மனுஷன் நிச்சயமாய் அரியணைக்குத் தகுதியானவனே; ஆனால் இன்னும் இல்லை. காரணம் யோசேப்புக்கு நியமிக்கப்பட்ட உயர்த்தப்படுதலுக்கு ஆயத்தமாகுவதற்கு முன்னதாக, அவருக்குத் தேவன் இன்னும் வேறே அனுபவங்களை வைத்திருந்தார். இப்படியாகவே நம் விஷயத்திலுங்கூடக் காணப்படும்; அதாவது நமது கர்த்தரும், மீட்பருமானவருடன் அவரது மாபெரும் வேலையில் பங்கடையத்தக்கதாக, ஆயிர வருட இராஜ்யத்தினுடைய சிங்காசனத்திற்கு, நம்மைத் தேவன் அழைத்திருக்கின்றார்; ஆனால் முதலாவதாக நாம் ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தில் பங்கடைவதற்குத் தகுதியுள்ளவர்களாக்கப்பட வேண்டும் மற்றும் கர்த்தர் நாடும் அப்பேர்பட்ட பாத்திரங்களின் வளர்ச்சிக்குப் பொறுமையுடன் கூடிய சகிப்புத்தன்மைக்கான பரீட்சைகளும், அடிகளும், சோதனைகளும் அவசியப்படுகின்றது.

## "குணலட்சணங்கள் பலப்படுத்தப்படுதல்"

ஒரு பாறை கட்டி (Rock candy) என்பது முழுக்க நிலக்கரியாக இருக்கின்றது மற்றும் ஒரு வைரம் என்பது முழுக்க நிலக்கரியாக இருக்கின்றது, எனினும் இவைகளுக்கிடையே வித்தியாசமுள்ளது, அதுவும் வைரமானது அதிகளவில் கெட்டியாகவும், திடமாகவும், திண்ணமாகவும், படிகமாகியுமுள்ள காரியத்திலேயே முக்கியமாய் வித்தியாசமுள்ளது. இதுபோலவே கிறிஸ்துவுக்குள்ளான புதுச் சிருஷ்டிகளுடைய நிலைகளுக்கிடையே வித்தியாசம் உள்ளது. ஒரு காலத்தில் நாம் "கிறிஸ்துவுக்குள் குழந்தைகளாக" மாத்திரமே இருந்தோம், ஆனால் நாம் பொறுமையுடன்கூடிய சகிப்புத்தன்மையின் வாயிலாகவும், கர்த்தருடைய அறிவுரைகள் மற்றும் தேவனிடமிருந்துவரும் ஒழுங்குபடுத்துதல்கள் வாயிலாகவும் நாம் உண்மையாய்க் காணப்படுவோமானால் நாம் கர்த்தரிலும், அவரது சத்துவத்தின் வல்லமையிலும் பெலப்பட்டிருக்க வேண்டும்; "கிறிஸ்துவுக்குள் குழந்தைகள்" என்பது பாறை கட்டி (Rock candy) வடிவில் காணப்படும் நிலக்கரிக்கு ஒத்த நிலையாகும், ஆனால் உபத்திரவம் எனும் சூளையில் வளர்ந்துள்ள முதிர்ந்த கிறிஸ்தவனோ, வைரத்திற்கு ஒத்த நிலையில் காணப்படுகின்றான். இங்குக் கர்த்தர் நம்முடைய பரீட்சை காலத்தின் நிறைவாகிய சுவிசேஷ யுகத்தினுடைய முடிவில், தம்முடைய இரண்டாம் வருகையின்போது, தம்முடைய "சம்பத்தை" சேர்ப்பதுபற்றிக் குறிப்பிட்டுள்ள அவருடைய வாக்குறுதியை நாம் நினைவுகூருகின்றோம்.

இப்படியான ஒரு குற்றச்சாட்டின் கீழ்க் காணப்படும் தன்னுடைய அடிமையை, போத்திபாரின் ஸ்தானத்தில் காணப்படும் எந்த ஓர் அதிகாரியும் அக்காலகட்டத்தில், மரணத்தண்டனைக்கு ஒப்புக்கொடுத்திருந்திருப்பார் என்பதில் சந்தேகமில்லை; ஆனால் இப்படியாகச் செய்யப்படுவதற்குப் பதிலாக, யோசேப்பு சிறையில் கைதியாக வைக்கப்பட்டக் காரியத்திலிருந்து, தனக்கு உண்மையாய்ப் பத்து வருடங்கள் வேலை புரிந்திட்ட மனிதன், தனக்கு நம்பிக்கைத் துரோகம் புரிந்துள்ளதான குற்றச்சாட்டை போத்திபார் முழுவதும் நம்பாதது தெரிகின்றது. முற்காலங்களில் காணப்பட்ட சிறைச்சாலை என்பது, நாகரிகமான தேசங்களில் காணப்படும் நவீன/நாகரிகமான சிறைகளிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாய்க் காணப்பட்டது. இந்தச் சிறையைக் குறிப்பிடுகையில், யோசேப்பு இதைக் "கிடங்கு" என்று குறிப்பிடுகின்றார் (ஆதியாகமம் 40:15). இது எபிரெயத்தில் "குழி" என்று அழைக்கப்படுகின்றது

மற்றும் கிழக்கத்திய தேசங்களிலுள்ள சிறைகளைப்பற்றி **ஒருவர் பின்வருமாறு கூறுகின்றார்:-**

**"நாங்கள் லீவண்டில் அநேகம் சிறைச்சாலைகளைப் போய்ப் பார்த்தோம்; நாங்கள் அங்குச் சகித்துக்கொள்ள முடியாத அளவுக்கு அசுத்தங்களையும், காற்றோட்டமற்ற நிலைமையையும், அதிகளவிலான எலிகளையும், பூச்சிகளையும், புழுக்களையும், கைதிகளுடைய பாதங்கள் கட்டப்படுகின்ற இரக்கமற்ற தொழுவங்களையும் பார்த்தோம். நல்லொழுக்கமுள்ள யோசேப்பிற்காக நாம் அனுதாபம் கொள்கின்றோம்; யோசேப்பு காய்ரோ என்று தற்போது காணப்படும் பட்டணத்திலுள்ள காவல் கிடங்கில் போடப்பட்டதாகப் பாரம்பரியமானது தெரிவிக்கின்றது; இந்தக் கிடங்கின் இருளும், அருவருப்புகளும், தொற்று நோய்களும் நிறைந்த நடைப்பாதைகளின் சுவர்களில் கைதிகள் விலங்கிடப்பட்டிருப்பார்கள்."**

சிறையிலுள்ள யோசேப்பின் அனுபவங்களானது, சங்கீதக்காரனால் குறிப்பிடப்படுகின்றது; "அவன் கால்களை விலங்குபோட்டு ஒடுக்கினார்கள்; அவன் பிராணன் இரும்பில் அடைபட்டிருந்தது" (சங்கீதம் 105:18).

இந்தப் புதிய அனுபவமானது, யோசேப்பினிடத்தில் எத்தகைய ஒரு தாக்கத்தினை ஏற்படுத்தினது? யோசேப்பு சோர்வடைந்துவிட்டாரா, தளர்ந்துபோய்விட்டாரா, மனங்கசந்து போனாரா? இதுதான் நல்லொழுக்கத்திற்கான பலன் என்றால், நான் தீயொழுக்கமுள்ளவனாக மாறிவிடுகின்றேன் என்று யோசேப்பு தனக்குள்ளோ (அ) மற்றவர்களிடத்திலோ கூறிக் கொண்டாரா? இந்த அனுபவத்தை அனுமதிப்பதற்காக, அவர் கர்த்தருடைய செயல்பாடுகளுக்கு எதிராக அதிருப்திக்கொண்டாரா? அல்லது அவர் பொறுமையுடன் ஒப்புக்கொடுத்தவராகவும், கர்த்தரை நம்பினவராகவும் காணப்பட்டாரா? இந்த அனுபவங்கள் அனைத்திலும் யோசேப்பு, உண்மை கிறிஸ்தவனுக்கும், பரிசுத்தவானுக்குமான சரியான நடக்கைக்கான தலைச்சிறந்த மாதிரியாகக் காணப்படுகின்றார். இந்தத் தீமையைக் கர்த்தர் அனுமதித்ததற்கான காரணம் தொடர்புடைய விஷயத்திலுள்ள குறைவான வெளிச்சத்திலேயே யோசேப்பு உண்மையுள்ளவராகக் காணப்பட்டாரானால், மிகவும் பெரிதான வெளிச்சத்தினாலும், அறிவுரைகளினாலும், வேதவாக்கியங்களிலுள்ள யோசேப்பு மற்றும் மற்றவர்களுடைய சிறந்த மாதிரிகளினாலும், நம்முடைய சொந்த அனுபவங்களின் பாடங்களினாலும் ஆசீர்வதிக்கப்பட்டுள்ள நம்மிடம், நியாயமாய்க் கர்த்தர் எவ்வளவாக எதிர்ப்பார்ப்பார்; நாம் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும், தேவபக்தியும் உள்ளவர்களாய் இருக்க வேண்டும்?

மகா மேன்மையும், அருமையுமான வாக்குத்தத்தங்களைப் பெற்றுள்ளவர்களும், நமக்கான பரீட்சைகளும், சிரமங்களும் அனுமதிக்கப்பட்டுள்ளது ஏன் என்பதற்கான விளக்கத்தையும் மற்றும் இவைகள் எப்படி நம்மை இராஜ்யத்திற்காகவும் மற்றும் அதன் மகிமையான வேலைகளுக்காகவும் ஆயத்தமாக்குகின்றன என்பது பற்றின விளக்கத்தையும் பெற்றுள்ளவர்களுமாகிய நாம் வெட்கத்தின் நிமித்தமாவது, யோசேப்பினுடைய அளவுக்காகிலும் காணப்படுவதற்கு முயற்சிக்க வேண்டும். யோசேப்பின் பரீட்சைகளும், சிரமங்களும் அவருக்குள் எப்படிக் குணலட்சணத்தை வளர்த்தினது என்பதையும், அவர் ஒன்றன்பின் ஒன்றாக ஒவ்வொரு தருணங்களிலும் மேற்கொண்டுவந்தபோது, அவர் எப்படிப் பலமடைந்துகொண்டு வந்தார், அதாவது அவரது குணங்கள் உறுதியடைந்தது என்பதையும் நம்மால் உடனடியாகக் கண்டுகொள்ள முடிகிறதல்லவா? ஆ! இவர் "முற்பிதாக்களில்" ஒருவராகக் காணப்பட்டு, சபை மகிமையடைந்தப் பிற்பாடு, தலையும், சரீரமும் அடங்கின கிறிஸ்துவின் வழிநடத்துதல் மற்றும் வழிகாட்டுதலின் கீழ் ஒட்டுமொத்த மனித குடும்பத்தை ஆளுவதற்கும், ஆசீர்வதிப்பதற்கும் மற்றும் தூக்கிவிடுவதற்குமென, பூமியெங்கும் பிரபுக்களாக வைக்கப்படுபவர்களில் ஒருவராகக் காணப்படுவார். தம்முடைய ஊழியங்களுக்காக அருமையானப் பாத்திரங்களைத் தெரிந்தெடுப்பது எப்படி என்பதை மாத்திரமல்லாமல், இன்னுமாக இந்தப் பாத்திரங்களை வளர்த்துவதும், நிரூபிப்பதும் மற்றும் பரீட்சிப்பதும் மற்றும் தம்முடைய ஊழியத்திற்காகவும், அவர்களது ஆசீர்வாதங்களுக்காகவும் அவர்களைப் பலப்படுத்துவதும் எப்படி என்பதையும் கர்த்தர் நன்கு அறிவார்.

## “கர்த்தர் அவனோடே இருக்கிறார்”

தொழுவங்களில் கால்கள் கட்டப்பட்டிருந்ததான யோசேப்பின் அனுபவங்களானது, கொஞ்சங்காலமே நீடித்தது. யோசேப்பிற்கு எதிராக என்ன குற்றச்சாட்டுக் காணப்பட்டாலும், இவர் சாதாரணமான பண்புகளும், திறமைகளும் உடையவரல்ல என்று சிறைக்காப்பாளன் உணர்ந்து கொண்டான். யோசேப்பு தேவனுக்குக் கொண்டிருந்த பயபக்தியும் மற்றும் கடமையின் விஷயத்தில் அவர் கொண்டிருந்த உண்மையும், அவரை மதிப்புமிக்க மனிதனாக்கிற்று மற்றும் யோசேப்பின் கரங்களில் ஒன்றன்பின் ஒன்றாக சில பொறுப்புகளை ஒப்புவிப்பதில் சிறைக்காப்பாளன் திருப்தியடைந்தான். பதிவுகளின்படி யோசேப்பின் சொந்த அனுபவங்களானது, அவர் மற்றக் கைதிகளினிடத்தில் இரக்கம் கொண்டவராக இருக்கச் செய்திற்று; தன்னுடைய சொந்த அனுபவங்களின் காரணமாக, அவரால் மற்றக் கைதிகளினுடைய துக்கங்களையும், அவமானங்களையும் உணர்வுப்பூர்வமாகப் புரிந்துகொள்ள முடிந்தது. எகிப்தின் அதிகாரியென யோசேப்பு அதிகமாய்ப் பயனுள்ளவராகக் காணப்படத்தக்கதாக, அவரைத் தகுதிப்படுத்துவதற்குரிய சிறந்த படிப்பினைகளை யோசேப்பு கற்றுக்கொண்டுவந்தார். இந்தக் காரியங்கள் அனைத்திற்குமான இரகசியமானது, "கர்த்தர் அவனோடே இருக்கிறார் மற்றும் அவன் செய்கிற யாவையும் கர்த்தர் வாய்க்கப்பண்ணுகிறார்" என்ற சுருக்கமான சில வார்த்தைகளில் கூறப்பட்டுள்ளது (ஆதியாகமம் 39:3).

கர்த்தருக்காக எவ்வளவேனும் பயபக்திக்கொண்டிருப்பவர்கள், அதற்கேற்ப ஆசீர்வதிக்கப்பட்டிருப்பார்கள்; அதிகப்படியான விசுவாசம், அதிகப்படியான பயபக்தி, அதிகப்படியான கீழ்ப்படிதல் என்பவைகள், இருதயத்திலும், ஜீவியத்திலும் அதிகப்படியான ஆசீர்வாதத்தைக் கொண்டுவருகின்றதாகவும், குணலட்சணங்கள் இயல்பாக எப்படியிருப்பினும், அதற்கு அதிகப்படியான வலிமையூட்டுதலையும், உறுதியடைதலையும் கொண்டு வருகின்றதாகவும், இயல்பாகவே அந்த நபர் எவ்வளவு ஒழுங்கில்லாதவராகக் காணப்பட்டாலும், அவருக்கு அதிகப்படியான தெளிந்த புத்தியுள்ள ஆவியைக் கொண்டுவருகின்றதாகவும் காணப்படும். இந்த அனைத்து விஷயங்களிலும் கர்த்தருடைய வார்த்தைகளின் அறிவுரைகளை (அ) அவரது வாக்குத்தத்தங்களின் உற்சாக மூட்டுதலையும், தெளிந்த புத்தியுள்ள ஆவியின் வழிநடத்துதலையும் கொண்டிருப்பவர்களாகிய நாம் பெரிதும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்போம். நாம் எந்தளவிற்கு இவைகளைப் பயன்படுத்தி, சரியான குணலட்சணங்களை வளர்த்திக் கொள்கின்றோமோ, அவ்வளவாய் நாம் இறுதியில் பலனை அடைந்து, "போதும், மேலே வா; நல்லது உத்தமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாய் இருந்தாய், அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன், உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி" என்று சொல்லும் ஆண்டவருடைய குரலை நாம் கேட்போம்.

"கிறிஸ்து இயேசுவுக்குள்ளான புதுச் சிருஷ்டிகளாகிய" நாம் கர்த்தருக்கு உண்மையாய் (அதாவது சகோதர சகோதரிகளுக்கும், சத்தியத்திற்கும், நீதிக்கும் எல்லாவிதத்திலும் உண்மையாய் இருத்தலை உள்ளடக்கின விதத்தில் கர்த்தருக்கு உண்மையாய்) இருக்க வேண்டும் என்பதாக ஆதார வசனத்தில் இடம்பெறும் புத்திமதியை நாம் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது. இந்த உண்மையாயிருத்தல் என்பது பரீட்சிக்கப்பட வேண்டும், சோதிக்கப்பட வேண்டும், நிரூபிக்கப்பட வேண்டும், அதுவும் ஜீவியத்தின் முடிவுவரையிலும், நாம் மரணம் என்னும் சிறைச்சாலைக்குள் கடந்துபோவது வரையிலுமாகும். "மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்போது ஜீவக்கிரீடத்தை உனக்குத் தருவேன்." நாம் சேவிக்கின்ற கர்த்தரானவர் சிறையின் கதவுகளைத் திறக்கவும், அவரது இராஜ்யத்தின் மகிமையிலும், கனத்திலும் மற்றும் அழியாமையிலும் பங்கடையத்தக்கதாக, நம்மை முதலாம் உயிர்த்தெழுதலில் கொண்டுவருவதற்கும் வல்லமைக் கொண்டவராகவும் மற்றும் சித்தமும் உள்ளவராகவும் இருக்கின்றார். அல்லேலூயா, எத்துணை ஓர் இரட்சகர்! எத்தகைய ஓர் இரட்சிப்பு! எத்தகைய ஒரு ஜனங்களுக்கு இவைகள் திட்டமிடப்பட்டுள்ளன! இத்தகைய கருத்துக்களானது, நம்முடைய அழைப்பையும், தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்துவதற்கு நாம் நாடும்படிக்கு நம்மை ஏவுகின்றது; இதுவே தெய்வீக நோக்கமாகவும் காணப்படுகின்றது.

## "சிறைச்சாலையில் தழைத்தோங்குதல்"

சிறைச்சாலையின் தலைவனோ சிறைச்சாலையின் பராமரிப்பை யோசேப்பினுடைய கரங்களில் விடுவதில் மனநிறைவுடன் காணப்பட்டார். யோசேப்பின் தலைமையின் கீழ்க் கிடங்குச் சுத்திகரிக்கப்பட்டிருக்கும் மற்றும் அந்தக் கிடங்கில் முன்பு நிலவிவந்த பைத்தியக்காரரின் விடுதிக்கொத்த நிலைமைக்கு நேர்மாறாக, அந்த இருள் மூடியிருந்த சுவர்களின் மத்தியில், கொஞ்சம் சமாதானம் நிலவியிருக்கும் என்பதையும் நம்மால் நன்கு கற்பனை செய்து பார்க்க முடிகிறது. ஞானம், இரக்கம், பொறுமை, கனிவு ஆகிய அனைத்தும் தேவைப்பட்டிருக்கும் மற்றும் செயல்படுத்தப்பட்டிருக்கும் என்பதில் நமக்கு நிச்சயமே. மேலும் இப்படியாக மாற்றங்கள் கொண்டுவரப்பட்டதான சிறைச்சாலையானது, சிறையிலுள்ள கைதிகளுக்கு ஆசீர்வாதத்தைக் கொண்டுவந்ததோடுகூட, யோசேப்பினுடைய சொந்த இருதயத்திலும் ஆசீர்வாதத்தை, அதாவது வளர்ச்சியைக் கொண்டுவந்தது; நாம் மற்றவர்களுடைய வருத்தங்களை ஆற்றுவதற்கு முயற்சிக்கும்போது, நமக்குச் சந்தோஷமும், சமாதானமும் எப்போதும் கடந்துவருகின்றது.

யோசேப்பு எப்படிச் சிறையிலுள்ள கைதிகளுடன் நடந்துகொண்டார் என்பதுபற்றின ஒரு காட்சி, இப்பாடத்தில் கொடுக்கப்படுகிறது; கைதிகளைக் கொடூரமாகவும், முரட்டுத்தனமாகவும் நடத்துவதற்குப் பதிலாக, அவர் ஒருநாள் காலை அன்று, கைதிகளில் இருவர் வழக்கத்திற்கு மாறாக துக்கமுகத்தோடே இருப்பதைக் கவனிக்குமளவுக்கு, அவர் கைதிகளுடைய நலனுக்கடுத்தவைகளைக் கவனித்தவராய் இருந்தார்; அவர் அவர்களை நோக்கி கனிவோடே, "உங்கள் முகங்கள் இன்று துக்கமாயிருக்கிறது என்ன?" என்று கேட்டார். அவர்கள் சொப்பனங்கண்டிருந்தார்கள் மற்றும் தங்களது சொப்பனங்களானது, இனி வரவிருக்கின்ற துன்பத்தை முன்னறிவிக்கின்றது என்ற பயத்தினால் கலங்கிப்போயிருந்தனர். யோசேப்போ: "சொப்பனத்துக்கு அர்த்தம் சொல்லுதல் தேவனுக்குரியதல்லவா? அவைகளை என்னிடத்தில் சொல்லுங்கள் என்றான்" (ஆதியாகமம் 40:8). யோசேப்பினுடைய உண்மைக்கும், குணலட்சணத்தினுடைய உறுதிக்குமான இரகசியமானது, அவர் தேவனிடத்தில் விசுவாசங்கொண்டிருந்தார், அதாவது தேவன் யோசேப்பினுடைய கொள்ளுத்தாத்தாவாகிய ஆபிரகாமிடத்தில் பண்ணினதும், அவரது தாத்தாவாகிய ஈசாக்கிடத்தில் உறுதிபண்ணினதும், மீண்டுமாக அவரது தகப்பனாகிய யாக்கோபிடத்தில் உறுதிபடுத்தப்பட்டதும், தான் சுதந்தரவாளியாகக் காணப்படுகின்றதுமான மகா வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கையில் விசுவாசங்கொண்டிருந்தார் என்ற உண்மையில் அடங்கி உள்ளது. ஜீவியத்தில் ஒவ்வொரு புயலின்போதும், மந்தாரமான மேகம் ஆளும்போதும், ஜீவியத்தைச் சீராக வைத்துக்கொள்ளுவதற்கு, விசுவாசத்திற்கு எத்தகைய ஆற்றல் காணப்படுகின்றது!

சொப்பனங்களில் ஒன்றுக்கு மிகவும் நன்மையான அர்த்தம் காணப்பட்டது மற்றும் சீக்கிரத்தில் விடுதலைப் பெற்று இராஜாவின் தயவிற்கு மீண்டுமாகக் கடந்துவரப்போகிறவரை நோக்கி யோசேப்பு, தன்னையும், அவர் சிறையில் காணப்படும்போது தான் அவரைப் பரிவாய் நடத்தினதையும் அவர் நினைவுகூரவும், தன் சார்பாக, தான் கிடங்கிலிருந்து விடுவிக்கப்படத்தக்கதாக இராஜாவிடம் நல் வார்த்தைகளைப் பேசும்படிக்கு வேண்டிக்கொண்டார். இந்தக் காரியத்தை நாம் விவரிக்கையில், யோசேப்பு தன்னுடைய சகோதரர்களையோ அல்லது போத்திபாரின் மனைவியையோ குறைக்கூறாமல், தான் சிறையில் இருப்பதற்கான காரணத்தை, "நான் எபிரெயருடைய தேசத்திலிருந்து களவாய்க் கொண்டுவரப்பட்டேன்; என்னை இந்தக் காவல் கிடங்கில் வைக்கும்படிக்கும் நான் இவ்விடத்தில் ஒன்றும் செய்யவில்லை" என்று மாத்திரம் கூறினதை நாம் கவனிக்கத் தவறிவிடக்கூடாது. யோசேப்பினுடைய நோக்கங்களுக்கு ஆதரவு கிடைக்கத்தக்கதாக, அவர் எவரையும் பற்றிப் பழிதூற்றுவதற்கு அவசியமில்லை, மற்றும் அதை அவர் தவிர்த்துவிட்டார். நம்முடைய சந்ததி மூவாயிரம் வருடங்களுக்கு முன்னதாக குரங்குகளாகவோ (அ) காட்டுமிராண்டிகளாகவோ இல்லையென்பதற்கு இங்கு நாம் எத்தகைய ஓர் ஆதாரத்தைப் பெற்றிருக்கின்றோம். குரங்காகவோ (அ) காட்டுமிராண்டியாகவோ இருப்பதற்குப் பதிலாக, (பெந்தெகொஸ்தே நாளுக்கு முன்னதாக . . . சுவிசேஷ யுகத்திற்கு முன்னதாக எவர்மேலும் வராத) பரிசுத்த ஆவியினுடைய ஜெநிப்பிக்கப்படுதலை அடைந்திராத இந்தச் சுபாவ மனுஷன் (யோசேப்பு) எழுத்தின் வடிவிலோ (அ) வாய்மொழியாகவோ எந்த அறிவுரைகளையும் பெற்றிராமல் இருந்தபோதிலும், தீமைப்பேசத்தக்கதாகக் கடுமையாய்ச் சோதனைக்குள்ளாக்காத

விதத்தில் காணப்படும் அளவிற்கு, வியக்கத்தக்க விதத்தில் பெருந்தன்மையையும், அன்பையும் வளர்த்தியுள்ளவராகக் காணப்படுகின்றார்.

கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்துக்கொண்டிருப்பவர்களும், பாவத்தினின்றும், தீமையான கிரியைகள் அனைத்தினின்றும் திரும்பியுள்ளதாக அறிக்கைப் பண்ணியுள்ளவர்களும், தீமைப் பேசுதல் என்பது மாம்சம் மற்றும் பிசாசின் கிரியைகளுக்குச் சம்பந்தப்பட்டது என்று நன்கு அறிந்துள்ளவர்களுமான அநேகரை, யோசேப்புப்பற்றின இந்தச் கதையானது வெட்கத்திற்குள்ளாக்குகின்றது. அன்பே பிரதானமானது என்றும், அன்பு தீங்கு நினையாது என்றும், நீடிய சாந்தமும், தயவும் உள்ளது என்றும், எளிதில் சினமடையாது என்றும், கர்த்தர் நம்மை அன்புகூர்ந்தது போன்று, ஒருவரையொருவர் நாம் அன்புகூர வேண்டிய கர்த்தருடைய ஜனங்களின் மத்தியில் மாத்திரம் இந்த அன்பு காண்பிக்கப்படாமல், இன்னும் நம்முடைய அயலார்களிடத்திலுங்கூடக் காண்பிக்கப்பட வேண்டும், அதாவது நாம் நம்மை அன்புகூருவது போன்று, நம்முடைய அயலார்களை அன்புகூர வேண்டும் என்றும், இதையும் தாண்டி நம்முடைய சத்துருக்களிடமும் அன்புகூர்ந்து, அவர்களுக்கு நம் உதவித் தேவைப்படும் பட்சத்தில், அவர்களை உடுத்துவிக்கவும், போஷிக்கவும் வேண்டும் என்றும் உள்ள அறிவுரைகளை நம்முடைய கர்த்தரிடமிருந்தும், அப்போஸ்தலர்களிடமிருந்தும் யோசேப்பு பெற்றிருக்கவில்லை. உபத்திரவத்தில் பொறுமையுடன் சகித்திருத்தல், இன்னுமாக விசுவாசமும், இரக்கமும், கனிவும், பொறுமையும், பரிவும் நிறைந்த நிலையில் காணப்படுதல் என்ற படிப்பினையை யோசேப்பிடமிருந்து பெற்றுக்கொண்டதற்காக, தேவனுக்கு நன்றி. இந்தக் குணலட்சணங்கள் அனைத்தையும் வளர்த்தும் விஷயத்தில், மனதிற்கு எத்தகைய பங்குள்ளது. ஆபிரகாமின் வாக்குத்தத்தங்களினால் முன்வைக்கப்பட்ட நம்பிக்கைகள் ஒருவேளை யோசேப்பிற்கு இல்லாதிருந்தால் அவரும் பெரும்பான்மையான மனுக்குலத்தாரைப்போன்று நற்குணங்கள் அற்றவராகவும், சோர்வடைந்தவராகவுமே காணப்பட்டிருந்திருப்பார். "நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயும் இருக்கிறீர்கள்" என்று அப்போஸ்தலன் குறிப்பிட்டுள்ளது போன்று, நாமும் அதே வாக்குத்தத்தத்தின் சுதந்தரவாளிகளாக இருக்கின்றோம் என்பதை நினைவில் கொள்வோமாக (கலாத்தியர் 3:16, 29).

---

**[R2880]**

# "முகாந்தரமில்லாமல் பகைக்கப்பட்டார்"

## ஆதியாகமம் 37:12-36

''அந்தக் கோத்திரப்பிதாக்கள் பொறாமைகொண்டு யோசேப்பை எகிப்துக்குக் கொண்டுபோகும்படியாக விற்றுப்போட்டார்கள். தேவனோ அவனுடனேகூட இருந்தார்.''
- அப்போஸ்தலர் 7:9, 10

யாக்கோபினுடைய மிகுந்த பிரியத்திற்குரிய மனைவியாகிய ராகேல் மரித்துப்போய்விட்டாள், அவளுடைய முதல் பிறப்பாகிய யோசேப்பே, மற்றப் பத்து ஒன்றுவிட்ட உடன் பிறந்த சகோதரர்களைக்காட்டிலும் யாக்கோபினுடைய பிரியத்திற்குரியவராகக் காணப்பட்டார். பதிவை வைத்துப் பார்க்கும்போது, இந்த அன்பானது, யோசேப்பினுடைய தாயினிமித்தமாக மாத்திரமல்லாமல், யோசேப்புக்கொண்டிருந்த பரிவும், உயரிய குணலட்சணங்களும் விசேஷமாய் அவரது தகப்பனாருடைய கவனத்தை ஈர்த்தது மற்றும் தகப்பனுடைய பாசத்தையும் வென்றது என்றும் நாம் எடுத்துக்கொள்வது நியாயமானதே. யோசேப்பு யாக்கோபினுடைய முதிர்வயதின் குமாரனாக இருந்தபடியினால், யாக்கோபு யோசேப்பிற்கு அநேக விதங்களில் தயவு பாராட்டிட விருப்பமுள்ளவராகக் காணப்பட்டார் மற்றும் குமாரர்கள் அனைவரின் மத்தியிலும் யோசேப்பிற்கு விலையுயர்ந்த வஸ்திரத்தை/அங்கியைப் பெரிதும் முயன்று வாங்கிக்கொடுத்தார்; இந்த வஸ்திரமானது அக்காலக்கட்டத்தில் சிறந்த ஒன்றாயிருந்தது மற்றும் இதைப்போன்ற வஸ்திரமானது **பென்னி-காசனின் எகிப்திலுள்ள கல்லறையில்**, சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்டது; அது **"பல்வேறு நிறங்களிலுள்ள சிறுசிறு துண்டுபகுதிகள் ஒன்றாய் இணைத்துத் தைக்கப்பட்டுள்ள, பல வருணங்களும், சித்திரங்களும் உடைய நீண்டதும்,**

**அதிகமான சித்திர தையல்கள் உள்ளதுமான வஸ்திரங்களாய் இருந்தன**." எகிப்தினுடைய இராஜாவினால் அன்பளிப்பாக அனுப்பப்பட்ட இத்தகைய அங்கி ஒன்றைக் குறித்து **ஹெரோட்டஸ்** அவர்கள் பின்வருமாறு விவரிக்கின்றார், "**பல்வேறு விலங்குகளின் உருவங்கள் துணியில் பொன்னினால் சித்திரத்தையலிடப்பட்டிருந்தது**."

தன்னுடைய இந்தப் பாரபட்சமானது, எந்த அளவுக்குத் தன்னுடைய மற்றக் குமாரர்களிடத்தில், யோசேப்பிற்கு எதிராகப் பொறாமை மற்றும் பகைமையின் எண்ணத்தை உண்டுபண்ணிக்கொண்டிருந்தது என்பதை அநேகமாக யாக்கோபு உணர்ந்துகொள்ளவில்லை; இன்னுமாகக் குணலட்சணங்கள் வளருதல் தொடர்புடைய விஷயத்தில், இம்மாதிரியான (பாரபட்சம் காணப்பட்ட) சூழ்நிலைகளின் கீழ், யோசேப்பு வீட்டிலேயே தங்கியிருந்த காரியமானது, யோசேப்பிற்கு நன்மையாக இருந்திருக்குமோ என்று நமக்குக் கேள்வி எழும்பலாம்; ஏனெனில் மிகுதியான பாரபட்சத்தினாலும், செல்லமான வளர்ப்பினாலும் பேரப்பிள்ளைகள், பாட்டி, தாத்தாவினால் கெடுக்கப்படுவதற்கும், பாரபட்சம் காட்டப்படும் பிள்ளையினிடத்தில், பெருமையின் சிந்தை வளர்த்திடுவதற்கும் மற்றும் இந்தச் சிந்தை பிள்ளையை ஜீவியம் முழுவதும் பாதிப்பிற்குள்ளாக்குவதற்கும் வாய்ப்புள்ளது என்பதினால், யோசேப்பும் இப்படியாகச் சீரழிக்கப்பட்டிருப்பாரோ என்று நமக்குக் கேள்வி எழும்பலாம்.

யோசேப்பினுடைய தகப்பன் காட்டின பாரபட்சத்தின் நிமித்தமான, யோசேப்பினுடைய சகோதரர்களின் பொறாமையானது, யோசேப்பின் இரண்டு சொப்பனங்களினால் இன்னமும் அதிகமானது; இந்த இரண்டு சொப்பனங்களையும் யோசேப்பு கபடற்ற நிலைமையிலும், எளிமையுடனுந்தான் தன்னுடைய சகோதரர்களிடம் தெரிவித்திருக்க வேண்டும். ஒரு சொப்பனத்தில் யோசேப்பு வயலில் யாக்கோபின் குமாரர்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன்றாக மொத்தம் பன்னிரண்டு அரிக்கட்டுகள் காணப்பட்டதாகவும் மற்றும் பதினொன்று அரிக்கட்டுகள், தன்னுடைய அரிக்கட்டிற்கு முன்னதாக வணங்கி நின்றதாகவும் கண்டார். மற்றொரு சொப்பனத்திலோ, யோசேப்பு சூரியன், சந்திரன் மற்றும் பதினொரு நட்சத்திரங்களும் தன்னை வணங்கி நின்றதாகக் கண்டார். யோசேப்பைக்காட்டிலும் மூத்தவர்களாகிய அவரது சகோதரர்கள், தங்களைக் காட்டிலும் யோசேப்பு உயர்வடைவது பற்றின எண்ணங்களினால் ஆத்திர மூட்டப்பட்டவர்களாக இருந்தனர்; இன்னுமாக யோசேப்பு அவருடைய பெற்றோர்களைக் காட்டிலும் பெரியவராகவும், அவருடைய சகோதரர்களைக் காட்டிலும் பெரியவராகவும் இருக்கப்போகின்றார் என்ற அர்த்தத்தைக் கொடுக்கும் வண்ணமாக அந்தச் சொப்பனம் காணப்பட்டப்படியால், யோசேப்பினுடைய தகப்பன்கூட அந்தச் சொப்பனத்திற்கு அர்த்தம் இருக்கும் என்ற எண்ணத்தை ஏற்க மறுத்தார். அநேகமான சொப்பனங்கள் கற்பனைகளாகவும், பேராசைகளாகவும் காணப்பட்டாலுங்கூட, யோசேப்பினுடைய இந்தச் சொப்பனங்களானது, அவருடைய கற்பனைகளும், பேராசைகளுந்தான் என்று நாம் எண்ணக்கூடாது; மாறாக இந்தச் சொப்பனங்களானது, தீர்க்கத்தரிசனமானவைகள் என்றே நாம் புரிந்துகொள்ள வேண்டும்; அதாவது யோசேப்பினுடைய வாழ்க்கைத் தொடர்புடைய விநோதமான சூழ்நிலைகள் அனைத்திலும் கர்த்தருடைய கரம் காணப்பட்டிருந்தது என இறுதியில் யாக்கோபும், யோசேப்பும், அவருடைய சகோதரர்களும் உணர்ந்துகொள்ள வேண்டும் என்ற நோக்கத்திற்காக தேவன் எதிர்க்காலத்தைக் குறித்து முன்னறிவித்தவராக இருந்தார் எனும் விதத்திலும், இன்னுமாக தேவன் அனைத்தையும் முன்னறிந்தவராக, அனைத்தையும் இறுதியில் நிகழ்ந்ததுபோல நடைபெறச் செய்திட்டார் எனும் விதத்திலும் இந்தச் சொப்பனங்களானது, தீர்க்கத்தரிசனமானவைகள் என்றே நாம் புரிந்து கொள்ள வேண்டும். நமது கர்த்தர் மற்றும் அவரது அனுபவங்கள் பற்றியதான தீர்க்கத்தரிசனமான அறிவிப்புகள் போன்றே, யோசேப்புப் பற்றின இந்த முன்னறிவிப்பானது, பாடங்கள் புரிந்துகொள்ளும் காலங்களில், அப்பாடங்களை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகவும், மிகவும் நம்பத்தகுந்ததாகவும் ஆக்குகின்றன. யாக்கோபும், அவருடைய குடும்பமும், எகிப்தின் பிரபுவாகிய யோசேப்பிற்கு முன்பாகச் சென்று, இராஜாவுக்கு மரியாதைச் செலுத்துவதுபோன்று, யோசேப்பிற்கு மரியாதைச் செலுத்தினபோது, அந்தச் சொப்பனங்கள் நிறைவேறினது.

பொறாமையை, அப்போஸ்தலன் மாம்சம் மற்றும் பிசாசின் கிரியைகளில் ஒன்று என வகைப்படுத்தினது சரியே (கலாத்தியர் 5:19-21). இந்த விதையானது, இது வேர்க்கொள்ளும் எந்த இருதயத்திலும் வேகமாக தழைத்தோங்குகின்றது மற்றும் இது எத்தகைய கசப்பான பலனைக்

கொடுக்கும் என்று யாரால் சொல்லக்கூடும்? அந்தச் சகோதரர்களுடைய இருதயத்தில் பொறாமை அத்து மீறி வளர்ந்திருந்தபடியால் யோசேப்பு தன்னுடைய தகப்பனிடமிருந்துள்ள செய்தி ஒன்றுடன், தோத்தானிலுள்ள வயல்வெளியில், அவர்களிடத்திற்கு வந்தபோது, அவர்களது பொறாமை எல்லை கடந்துசென்று, அவர்கள் யோசேப்பைக் கொலைச் செய்வதற்குத் திட்டமிட்டனர். பின்னர் அவர்களில் ஒருவரான ரூபனுடைய ஆலோசனையின் பேரில், யோசேப்பினுடைய ஜீவன் தப்புவிக்கப்பட்டது; யோசேப்பு பட்டினியில் கிடந்து மரித்துப்போகத்தக்கதாக, வறண்ட கிணற்றிற்குள்ளாகப் போடப்பட்டார். ரூபன் யோசேப்பை விடுவிக்க வேண்டுமென முன்கூட்டியே திட்டமிட்டிருந்தார். பின்னர் யோசேப்பின் சகோதரனாகிய யூதாவினுடைய ஆலோசனையின் பேரில், யோசேப்பினுடைய ஜீவனானது குழியினின்று தப்புவிக்கப்பட்டது மற்றும் எகிப்திய சந்தையில் அடிமையாகக் கொண்டுபோகப்படத்தக்கதாக, சில வியாபாரிகளாகிய பயணிகளிடத்தில் யோசேப்பு விற்கப்பட்டார்; பிற்பாடு இந்த எகிப்தில்தான் யோசேப்பு, போத்திபாரின் வீட்டில் ஊழியக்காரனாகப் பணி அமர்த்தப்பட்டார். இந்தச் சகோதரர்களுடைய இருதயங்கள் எவ்வளவு கடினமாய்க் காணப்பட்டிருக்க வேண்டும் மற்றும் தன்னுடைய தகப்பனுடைய செல்லப் பிள்ளையாகக் காணப்பட்ட யோசேப்பினுடைய இருதயமானது எவ்வளவு கடும்வலி அடைந்திருக்க வேண்டும் மற்றும் எவ்வளவு திகைத்துப்போயிருந்திருக்க வேண்டும்! யோசேப்பினுடைய கண்ணீர்களைக் குறித்தோ, அவர் கெஞ்சினது குறித்தோ, இவைகளுக்கு எல்லாம் அவரது சகோதரர்கள் மறுத்தது குறித்தோ நமக்குப் பதிவுகள் எதுவும் தெரிவிப்பதில்லை, ஆனால் இவைகள் குறித்து ஆதியாகமம் 42:21-ஆம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது, ஏனெனில் (யோசேப்பின் விஷயத்தில்) குற்றம் புரிந்திருந்த சகோதரர்கள், பிரச்சனையில் காணப்பட்டப்போது, "நம்முடைய சகோதரனுக்கு நாம் செய்த துரோகம் நம்மேல் சுமந்தது; அவன் நம்மைக் கெஞ்சி வேண்டிக்கொண்டபோது, அவனுடைய மன வியாகுலத்தை நாம் கண்டும், அவனுக்குச் செவிகொடாமற்போனோமே; ஆகையால், இந்த ஆபத்து நமக்கு நேரிட்டது என்று ஒருவரை ஒருவர் பார்த்துச் சொல்லிக்கொண்டார்கள்" (ஆதியாகமம் 42:21).

யாரொருவர் தன்னுடைய இருதயத்தில் பொறாமை, பகைமை (அ) வன்மமானது ஓரளவில் இருப்பதைக் காண்கின்றாரோ அவர் சத்துருவுக்கு, தான் புகலிடம் கொடுத்திருக்கின்றார் என்றும், இந்த ஆவியானது, சில சந்தர்ப்பங்களில் உடனடியாகக் கொலைப்பாதகத்தின் ஆவியாக மாறும் என்றும் அறிந்துகொள்ள வேண்டும். ஆகையால் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகப் புதிய சிருஷ்டியாகியுள்ள அனைவரும் தீமையின், பகைமையின், பொறாமையின், வாதின் (சண்டையின்) ஆவியை அழித்திடுவதற்கும், கொன்றுபோடுவதற்கும், புதைத்துப்போடுவதற்கும், களைந்துவிடுவதற்கும் மற்றும் கர்த்தருடைய ஆவியின் மறுரூபப்படுத்தும் தாக்கத்தின் மூலமாக, அதிகமதிகமாய், நாளுக்கு நாள், அன்பின் ஆவியை, கிறிஸ்துவின் ஆவியைத் தரித்துக்கொள்வதற்கும் அப்போஸ்தலன் பரிந்துரைக்கின்றார். யோசேப்பினுடைய சகோதரர்களின் அனுபவங்களில் நம்மால் ஒரு பாடத்தைப் பார்க்க முடிகின்றது: அதென்னவெனில் (இச்சம்பவத்தில் நடந்த அளவுக்கு) பொறாமையானது நம்மை இவ்வளவாய் நடத்திச் செல்லவில்லை என்றாலும், இச்சம்பவமானது பொறாமையினுடைய போக்கிற்கான உதாரணமாக/விளக்கமாகக் காணப்படுகின்றது மற்றும் பொறாமையை நாம் வெறுக்க வேண்டும் மற்றும் வெறுப்பதற்கேற்ப, அதை நம்முடைய இருதயங்களிலிருந்தும் ஒழித்துக்கட்டவும் வேண்டும் என்பதாகும்.

இப்பாடத்தினுடைய பிரதான பாடம், தெய்வீகச் செயல்பாடு பற்றியது ஆகும். இது இந்தச் சுவிசேஷ யுகத்திலுள்ள தேவனுடைய பிள்ளைகளுக்கு, "தேவனை அன்புகூருபவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடந்தேறும்" எனும் கர்த்தருடைய வார்த்தைகளை நினைப்பூட்டுகின்றது. இது சூழ்நிலைகள் அனைத்தும் நமக்கு எதிராகக் காணப்பட்டாலுங்கூட, நாம் தெய்வீக வல்லமை, ஞானம் மற்றும் அன்பின் மீது எவ்வளவு முழுமையாகச் சார்ந்திருக்கலாம் என்பதை நமக்குக் கற்றுத்தருகின்றது மற்றும் தேவன் நம் பட்சத்தில் இருந்தால், எப்படி நம்முடைய சத்துருக்களின் வல்லமைகள் அனைத்தும், நமக்கு உண்மையாகப் பாதிப்பை/தீங்கை ஏற்படுத்தும் விஷயத்தில் ஒன்றுஞ்செய்ய இயலாதவைகள் என்றும் நமக்குக் கற்றுத் தருகின்றது (ரோமர் 8:31). கொலைப்பாதகத்தின் ஆவியானது, ஒன்பது சகோதரர்களிடத்தில் இருந்தது என்பது தெளிவாகத் தெரிகின்றது மற்றும் கர்த்தர் காரியங்களை வழிநடத்தவில்லை என்றால், அவர்களில் சிலர் உடனடியாகவே யோசேப்பைக்கொன்று போட்டிருப்பார்கள் என்பதும் தெளிவாகத் தெரிகின்றது. ஆனால் இந்த ஒரு வழி மாத்திரமே யோசேப்பை

எகிப்திற்குக் கொண்டுவருவதற்கும், எகிப்தியர்களுக்கு அவர்களின் பஞ்சத்தின்போது (ஆகாரம் வழங்கும்) ஜீவன் கொடுப்பவராகவும், இஸ்ரயேலர்களுக்குங்கூட ஜீவன் கொடுப்பவராகவும் யோசேப்புக் காணப்படத்தக்கதாக, யோசேப்பை அரியணைக்குக் கொண்டுபோவதற்கும், மற்றும் இப்படியாக எகிப்தில் முழு இஸ்ரயேல் ஜனங்களும் அடிமைத்தனத்திற்குள் போய்க் கற்பிக்கப்படுவதற்கும், எகிப்தியர்கள் அறிந்திருக்கும் கலைகளைக் கற்றுக்கொள்வதற்கும் வேண்டி, கொண்டுவரப்படுவதற்கும் மற்றும் இறுதியில் தேவன் அவர்களை விடுவித்ததுபோன்று விடுதலைப்பண்ணுவதற்கும், தேவனிடம் இருந்ததென நாம் எண்ணிக்கொள்ளக்கூடாது (ஆதியாகமம் 41:40). சர்வவல்லமையுள்ள தேவன், சர்வ ஞானமுள்ளவராகவும், சர்வ ஆற்றலுள்ளவராகவும் இருக்கின்றார் என்றும், தமது நோக்கத்தை நிறைவேற்றிடுவதற்கு அவரால் பல வழிகளைத் தெரிந்துகொண்டிருக்க முடியும் என்றும் நாம் நினைவில்கொள்ள வேண்டும். இப்பாடமானது, தேவன் தம்முடைய ஞானத்தின் மூலமாகப் பொல்லாத மனிதர்களுடைய சதிகளை ஜெயிக்க முடிபவராக மாத்திரமல்லாமல், அவர்களின் தீமையான கிரியைகளை, தம்முடைய நோக்கங்களை நிறைவேற்றுவதிலும், தம்முடைய திட்டங்களை நடந்தேற்றுவதிலும், தாம் வழிநடத்துபவர்களை ஆசீர்வதிப்பதிலும் பயன்படுத்துவதற்கும் முடிபவராகக் காணப்படுகின்றார் என்பதற்கான உதாரணமாய்க் காணப்படுகின்றது. இப்பாடத்திலிருந்து தேவனுடைய அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்கள், அதாவது உத்தம ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் அனைவரும், விசுவாசத்திற்கான மாபெரும் உந்துதலை அடைவார்களாக மற்றும் முன்பில்லாத அளவுக்குக் கர்த்தரிலும், அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் அதிக பலமாயும், முழுமையாயும் சார்ந்திருப்பார்களாக. பூமிக்கடுத்த மற்றும் ஆவிக்குரிய காரியங்களுக்கடுத்த நம்முடைய நலன்களில், கர்த்தர் பொறுப்பேற்றுள்ளார் என்பதை நாம் விசுவாசத்தின் மூலமாக உணர்ந்துகொள்ள முடிகையில், இதினிமித்தம் எத்துணை சமாதானமும், எத்துணை சந்தோஷமும், எத்துணை ஆறுதலும் கடந்துவருகின்றது!

கொலைப் பண்ணுவதற்குத் திட்டம் போடுபவர்களும், பொறாமையினாலும், வன்மத்தினாலும், பகைமையினாலும் முழுக்க நிரம்பியிருப்பவர்களும், தங்கள் தீய வழிகளை, வஞ்சகத்தினாலும், மோசடியினாலும், பொய்யினாலும்/ஏமாற்றுத்தனத்தினாலும் ஆதரிப்பதற்குத் தயக்கம் காண்பிக்கமாட்டார்கள். இப்படியாகவே யோசேப்பினுடைய பத்துச் சகோதரர்களின் விஷயத்திலும் காணப்பட்டது. அவர்கள் யோசேப்பினுடைய பலவருண அங்கியை எடுத்துக்கொண்டு, அதை இரத்தத்தில் தோய்த்து, தங்கள் தகப்பனாகிய யாக்கோபினிடத்திற்கு, வேறு ஆள் மூலம் அனுப்பி வைத்தார்கள். யாக்கோபும் அவர்கள்மேல் சந்தேகங்கொள்ளாமல், தன்னுடைய பிரியமுள்ள குமாரன் காட்டு மிருகத்தினால் கொடூரமாகப் பட்சிக்கப்பட்டுள்ளார் என்ற கருத்தை உடனடியாக ஒப்புக்கொண்டு, வருடக்கணக்காக யோசேப்பினுடைய இழப்பினிமித்தமாக துக்கம் கொண்டாடினார்; யாக்கோபினுடைய மற்றக் குமாரர்கள், அவரை ஆறுதல்படுத்த முற்பட்டும், முடியாமற்போயிற்று மற்றும் அவர்களும் தங்களுடைய கிரியையினிமித்தம் கடுந்துயரம் ஓரளவுக்கு அடைந்திருப்பார்கள் என்பதிலும் சந்தேகமில்லை. தீமையின் இந்த அனுபவமானது அநேகமாக இறுதியில் யாக்கோபிற்கும், அவருடைய குமாரர்களுக்கும் நன்மைக்கேதுவானதாகவே இருந்திருக்கும், இதைப் பின் இடம்பெறும் சம்பவப் பதிவானது சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. இங்கும் நமக்கு ஒரு படிப்பினை உள்ளது, அதாவது தீமையான தாக்கங்களுக்கு தங்களை ஒப்புக்கொடுப்பவர்கள், பிற்பாடு அதனின்று விலையேறப்பெற்ற படிப்பினைகளைப் பெற்றுக்கொள்வார்கள் மற்றும் அவர்கள் நீதியினிடத்திற்குத் திரும்புவார்கள் என்று நாம் நம்பிக்கைக்கொள்ளலாம் எனும் படிப்பினைகள் இங்குள்ளது. இதுவே வரவிருக்கின்ற ஆயிர வருட யுகத்தில், உலகத்தார் தொடர்புடைய விஷயத்தில் நம்முடைய நம்பிக்கையாய் இருக்கின்றது; அதாவது உலகத்தார் செய்த தவறுகளுக்குத் தண்டனைகள் சிலவற்றைப் பெற்றுக்கொண்ட பிற்பாடும் மற்றும் அக்காலத்தினுடைய நியாயத்தீர்ப்புகளின் கீழ் மிகவும் சிறந்த வழியைக் கற்றுக்கொண்ட பிற்பாடும், போகப்போக, பாவம், பகைமை, பொறாமை மற்றும் வாது சம்பந்தப்பட்ட தற்கால அனுபவங்கள், உலகத்தாருக்கு விலையேறப் பெற்றதாகத் தோன்றும் என்பது நம்முடைய நம்பிக்கையாய் இருக்கின்றது.

யோசேப்பு தன்னுடைய சகோதரர்களால் பகைக்கப்பட்டப்போது, அதுவும் முகாந்தரமில்லாமல் பகைக்கப்பட்டப்போது மற்றும் அவருடைய தகப்பனால், சகோதரர்களிடம் அனுப்பி வைக்கப்பட்டபோதே உருவகமாகக் கொல்லப்பட்டது போலவே, தம்முடைய சகோதரர்களாகிய யூதர்களிடத்தில், அவர்களுடைய

நலனுக்காக, பிதாவின் பிரதிநிதியென வந்த இயேசுவும் முகாந்தரமில்லாமல் பகைக்கப்பட்டார் மற்றும் உண்மையில் கொல்லப்பட்டார். எனினும் தெய்வீகச் செயல்பாட்டினால், இந்தப் பகைமையே, அவரைப் பூமியின் சிங்காசனத்திடத்திற்கும், வல்லமையின்/அதிகாரத்தின் ஸ்தானத்தினிடத்திற்கும் இறுதியில் கொண்டுவந்து, அனைத்து உணவின், அதாவது, "ஜீவ அப்பத்தின்" மீதும் அவருக்கு அதிகாரம் கொடுத்து மற்றும் இவ்வாறாக எகிப்தியர்களால் அடையாளப்படுத்தப்படுகின்ற மனுக்குலத்தின் உலகத்தாருக்கு மாத்திரமல்லாமல், அவருடைய சகோதரர்களாகிய யூதர்களுக்கும், அக்காலத்தில் முன்வைக்கப்படும் பொதுவான நிபந்தனைகளின் பேரில் ஜீவ அப்பத்தை ஏற்றுக்கொள்பவர்கள் அனைவருக்கும் மறைமுகமாக அவரை ஜீவனளிப்பவராக ஆக்கிற்று.

"அவர் இருந்த பிரகாரமாகவே," அவருடைய சரீரத்தின் அங்கங்களாகவும், இப்பொழுது அவரது மாம்சீகப் பிரதிநிதிகளாகவும் காணப்படும், "நாமும் இவ்வுலகத்தில் இருக்கின்றோம்" மற்றும் நாம் உண்மையுள்ளவர்களாகக் காணப்பட்டோமானால், நாம் இறுதியில் சிங்காசனத்தில் அவருடன் உடன் சுதந்தரர்களாகவும், மரித்துக்கொண்டிருக்கும் உலகத்தாருக்கு அவரோடுகூட ஜீவனை வழங்குபவர்களாகவும் இருப்போம் (1 யோவான் 4:17).

ஆகையால் நாம் உலகத்தால் பகைக்கப்படுவதைக் காணும்போது, நாம் ஆச்சரியப்பட வேண்டியதில்லை, ஏனெனில் ஆண்டவர் கூறியுள்ளது போன்று, "அவர் நிமித்தம் பலவித தீமையான மொழிகள் நம்பேரில் பொய்யாய்ச் சொல்லப்படும்." "உலகம் உங்களைப் பகைத்தால், அது உங்களைப் பகைக்கிறதற்குமுன்னே என்னைப் பகைத்ததென்று அறியுங்கள். நீங்கள் உலகத்தாராயிருந்தால், உலகம் தன்னுடையதைச் சிநேகித்திருக்கும்; நீங்கள் உலகத்தாராயிராதபடியினாலும், நான் உங்களை உலகத்திலிருந்து தெரிந்து கொண்டபடியினாலும், உலகம் உங்களைப் பகைக்கிறது" என்ற அவருடைய வார்த்தைகளையும் நாம் நினைவில் கொள்வோமாக (யோவான் 15:18, 19).

நம்முடைய ஆண்டவர் முகாந்தரமில்லாமல் பகைக்கப்பட்டது போன்று, நம் விஷயத்திலும் காணப்படுவதாக; அதாவது நமக்கு எதிராக பொழியப்படும் பொறாமையும், கொலைப்பாதகமும், பகைமையும், வன்மமும், கூடுமானவரை முழுக்க நம்மால் (நம்முடைய செயல்பாடுகளினால்) உண்டானதாகக் காணப்படக்கூடாது; அதாவது கூடுமானவரை நம்முடைய ஜீவியங்கள் தூய்மையானதாகக் காணப்பட வேண்டும்; அதாவது கூடுமானவரை நம்முடைய எண்ணங்களும், வார்த்தைகளும், கிரியைகளும், நம்முடைய கர்த்தருடைய புண்ணியங்களை அறிவிக்கின்றதாகவும் மற்றும் சகல மனுஷரிடத்திலும், அதிலும் விசேஷமாக விசுவாச வீட்டாரிடத்திலான நம்முடைய அன்பைத் தெரிவிக்கின்றதாகவும் காணப்பட வேண்டும். போகப்போக, சபை மகிமைப்பட்டிருக்கும்போது, புதிய யுகம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும்போது, இப்பொழுது எதிராளியானவனால் குருடாக்கப்பட்டுள்ள காரணத்தினாலும், அவனால் தவறாய் வழிநடத்தப்பட்டுள்ள காரணத்தினாலும் நம்மைப் பகைக்கின்றவர்கள், கர்த்தருடைய அபிஷேகிக்கப்பட்டவர்களாகிய நம்முன் வணங்குவார்கள் மற்றும் அவர்களைத் தூக்கிவிடுவதற்கும், அவர்களை ஆசீர்வதிப்பதற்கும், அவர்களை உற்சாகமூட்டுவதற்கும், அவர்களை மன்னிப்பதற்கும் மற்றும் அவர்கள் தேவனுடைய சாயலுக்கும், ரூபத்திற்கும் திரும்பக்கொண்டுவரப்படத்தக்கதாக நாம் அவர்களுக்கு உதவுவதற்குமுரிய மாபெரும் விருப்பமுள்ளவர்களாகக் காணப்படுவோம்.

நம்முடைய ஆதார வசனத்தில் இடம்பெறும், "தேவனோ அவனுடனேகூட இருந்தார்" எனும் முக்கியமான வார்த்தைகளைக் கவனிப்போமாக. ஜீவியத்தின் வெற்றியானது, பல்வேறு கோணங்களிலிருந்து பார்க்கப்படுகின்றது. மாவீரன் அலெக்சாண்டர், சீசர், பிரபலமிக்க இராஜாக்கள், சக்கரவர்த்திகள் மற்றும் தளபதிகள் அல்லது இராஜ்யங்களுக்குப் பணங்களைக் குவித்தவர்களாகிய குரோசியஸ், கார்நெசியி முதலானவர்களே வெற்றிகரமான ஜீவியங்கள் வாழ்ந்துள்ளதாக, சிலர் கருதுகின்றனர். ஆனால் இவர்கள் எவர்களுடைய தகுதிகளையும், அறக்கொடைகளையும் நாம் அலட்சியப்படுத்தாமல், மகத்துவம் குறித்து வித்தியாசமான புரிந்துகொள்ளுதலை உடையவர்களைக் குறித்தே, அதாவது வேதத்தில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள மகத்துவத்தின் தெய்வீகக் கொள்கைகளை ஏற்றுக் கொண்டவர்களாகிய ஆபிரகாம், யோசேப்பு, மோசே, யோபு, தாவீது, பரிசுத்த தீர்க்கதரிசிகள், அப்போஸ்தலர்கள் மற்றும் இவர்கள் அனைவருக்கும் மேலாக நமது கர்த்தர் இயேசுவையும் குறித்தே

நாம் எழுதுகின்றோம். இவர்கள் ஒவ்வொருவருடைய வெற்றிக்கான இரகசியம், "தேவனோ அவனோடேகூட இருந்தார்" என்பதேயாகும்.

இதே கொள்கையானது, தெய்வீக ஊழியம் தொடர்புடைய அனைத்துக் காரியங்களிலும், இன்றும் உண்மையாகவே காணப்படுகின்றது; "என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது" எனும் கொள்கை இன்றும் உண்மையாகவே காணப்படுகின்றது. யூத யுகத்தின்போது, தேவனுடைய தயவோ, பூமிக்குரிய செழிப்பில் வெளிப்படுத்தப்பட்டது; ஆனால் இந்த யுகத்தில் அப்படியாகக் காணப்படுவதில்லை; அதாவது ஆவிக்குரிய செழிப்பினால் மாத்திரமே தேவனுடைய தயவானது சுட்டிக்காட்டப்படுகின்றதும், ஐசுவரியவான்களும், பிரபுக்களும் அழைக்கப்படாமல், பிரதானமாக இவ்வுலகத்தில் தரித்திரர்களாகவும், விசுவாசத்தில் ஐசுவரியவான்களாகவும், இராஜ்யத்தின் சுதந்தரர்களாகவும் காணப்படுகின்றவர்கள் அழைக்கப்படுகின்றதுமான இந்த யுகத்தில் அப்படியாகக் காணப்படுவதில்லை. தேவன் நம் பட்சத்தில் இருந்தால் மற்றும் நம்முடன் இருந்தால், நமக்கு எதிராய் நிற்பவர்கள் யார்? அவர்களுடைய எதிர்ப்பானது என்னவாக இருந்துவிடும்? அவர்கள் (எதிர்ப்பவர்கள்) நமக்குத் துயரத்தையோ (அ) அசௌகரியங்களையோ ஏற்படுத்தலாம், ஆனால் நமக்குப் பாதிப்போ அல்லது நம்முடைய மேலான நன்மைகளுக்குப் பாதகமோ ஏற்படுத்திட முடியாது; ஏனெனில் சர்வ வல்லமையுள்ளவரோ, "தம்முடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கும்" என்று நமக்கு வாக்களித்துள்ளார் (ரோமர் 8:28).

தேவன் யாருடைய பட்சத்தில் காணப்படுகின்றாரோ மற்றும் தேவன் யாருடன் கூடக் காணப்படுகின்றாரோ மற்றும் யாரை ஆசீர்வதிக்கத்தக்கதாக தேவன் இப்படி ஜீவியத்தின் காரியங்கள் அனைத்திலும் தலையிடுகின்றாரோ, அப்படிப்பட்டதான அந்த வகுப்பாருடைய பண்புகள் என்னவாக இருக்க வேண்டும்?

ஆ! அவர்கள் அவருடைய சொந்த ஜனங்கள் ஆவார்கள்; அவர்கள் நற்கிரியைகளைச் செய்யப் பக்திவைராக்கியமுள்ளவர்களும், நீதிக்காக பக்திவைராக்கியமுள்ளவர்களும், தேவனுக்காகவும், அவரது தயவுகளுக்காகவும், பக்திவைராக்கியமுள்ளவர்களும், அவரது ஊழியத்திற்கும் மற்றும் அவரது அங்கீகரிப்பைப் பெற்றுக்கொள்வதில் பக்திவைராக்கியமுள்ளவர்களும், உண்மையுள்ளவர்களும், நம்பத்தகுந்தவர்களும், சாந்தமுள்ளவர்களும் ஆவார்கள். "பிரியமானவர்களே, இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம்" (1 யோவான் 3:2); நாம் நமது அருமை மீட்பருடைய அடிச்சுவடுகளை உண்மையாய்ப் பின் தொடருவோமானால், மாம்சத்திற்கேற்ப நடவாமல், ஆவிக்கேற்றப்படி நடப்போமானால், தேவனுடைய தயவும் நமக்குத் தொடர்ந்து காணப்படும் என்ற வாக்குத்தத்தங்களை நாம் பெற்றிருக்கின்றோம். ஆகையால் நாம் கனத்துக்குரிய பாத்திரங்களாயிருந்து, எஜமானுக்கு உபயோகமாகத்தக்கதாக நாம் நம்மைப் பொறாமையினின்று, வன்மத்தினின்று, சுயநலம் மற்றும் தற்பெருமையினின்று சுத்திகரித்துக்கொள்ள வேண்டும் என்பதை நினைவில் கொள்வோமாக.

---

**[R2885]**

# "துன்பம் எனும் பள்ளிக்கூடத்தில்..."
**ஆதியாகமம் 39:20-40:15**

"தேவனோ யோசேப்போடுகூட இருந்து, அவருக்கு இரக்கம் பாராட்டினார்**.**"

யாக்கோபினுடைய பிரியமான மனைவியாகிய ராகேலுக்குப் பிறந்த பிள்ளையாகிய அன்புக்குரிய யோசேப்பே, ஆபிரகாமின் வாக்குத்தத்தங்களுக்கான விசேஷித்த சுதந்தரவாளியாக யாக்கோபினால் பார்க்கப்பட்டார் என்பதில் ஐயமில்லை. தன்னையும் மற்றும் தனக்கு எவ்வாறு தெய்வீகத் தயவானது கடந்துவந்து, தன்னை அந்த வாக்குத்தத்தத்திற்கான சுதந்தரவாளியாக்கிற்று என்பதையும் யாக்கோபு நினைவில் கொண்டிருந்தார். யாக்கோபு இந்த நம்பிக்கைகளையும், வாக்குத்தத்தங்களையும் தனது

குமாரர்கள் அனைவரிடமும், விசேஷமாக தனது அன்புக்குரிய யோசேப்பிடமும் ஏறக்குறைய பகிர்ந்திருப்பார் என்பதிலும் ஐயமில்லை. யோசேப்பின் சகோதரர்களை மிகவும் கோபப்படுத்தின யோசேப்பினுடைய சொப்பனங்களானது, யோசேப்பிற்கும், அவரது தகப்பனுக்கும், யோசேப்பு ஒப்புயர்வற்ற நிலையில் காணப்படப்போவதைத் தேவன் சுட்டிக்காட்டுவதாக இருந்தது. ஆகையால் யோசேப்பு படுகுழிக்குள் காணப்படும்போதும் மற்றும் அவரது பலத்த கூக்குரல்களும், கண்ணீர்களும் அவரது சகோதரர்களாலும், கர்த்தரினாலும் கேட்கப்படாமல் இருந்தபோதும், அது அவருக்கு மாபெரும் ஏமாற்றமாகவும், மிகுந்த மன வருத்தமாகவும் காணப்பட்டிருக்க வேண்டும். தான் அடிமையாகும்படிக்கு, இஸ்மயேலர்களிடத்தில் விற்கப்பட்டதை யோசேப்பு கண்டபோது, அது அவருக்கு மிகுந்த கசப்பான ஏமாற்றமாகவும், மனவருத்தமாகவும் இருந்திருக்க வேண்டும். ஆனால் இந்தச் சூழ்நிலைகள் எவ்வளவுதான் ஏமாற்றம் கொடுக்கின்றதாகக் காணப்பட்டாலுங்கூட, அவைகள் நன்மைக்கு ஏதுவான அனுபவங்களாகக் காணப்பட்டதை நாம் பார்க்கின்றோம்; அதாவது அவைகள் சரியாய் ஏற்றுக்கொள்ளப்படும் பட்சத்தில், அவைகள் யோசேப்பிற்குள் சரியான/தகுதியான குணலட்சணங்களை, அதாவது பொறுமையை, கீழ்ப்படிதலை, விசுவாசத்தை வளர்த்துவதற்கு ஏதுவானதாகக் காணப்பட்டது.

அதே ஆபிரகாமின் உடன்படிக்கையினுடைய ஆவிக்குரிய அம்சங்களுக்கான சுதந்தரவாளிகளாகும்படிக்கு, நமது கர்த்தராகிய கிறிஸ்துவுடன் உடன் சுதந்தரவாளிகளாகும்படிக்கு நம்பிக்கைக்கொண்டிருக்கும் அனைவருக்கும், யோசேப்பின் அனுபவங்களிலிருந்து, நல்லப் படிப்பினைகள் உள்ளது (கலாத்தியர் 3:29). வாக்குத்தத்தம் உறுதியே மற்றும் அதைச் சுதந்தரித்துக்கொள்ளும் சிலாக்கியம் நமக்குரியதாகும்; ஆனால் அந்த வேலைக்காகவும், அதன் பொறுப்புகளுக்காகவும் நாம் ஆயத்தமாகுவதற்கு, நாம் தாழ்மை, பொறுமை, விசுவாசம், சகிப்புத்தன்மை ஆகியவை பற்றின படிப்பினைகளைக் கற்றுக்கொள்வது அவசியமாகும். "ஆபிரகாமின் இந்தச் சந்ததியினுடைய" தலையாகிய நமது கர்த்தர், பாவிகளால் செய்யப்பட்ட விபரீதங்களையும், சோதனைகளையும் மற்றும் பரீட்சைகளையும் சகித்து, "பூரணமானவராகவும், பரிசுத்தராகவும், மாசில்லாதவராகவும், பாவிகளுக்கு விலகினவராகவும்" இருந்தபோதிலும், மரணம் வரையிலும் பிதாவின் சித்தத்திற்கான கீழ்ப்படிதலைக் கற்றுக் கொண்டவரானார். "அவரது சரீரத்தின் அங்கத்தினர்களாகும்படிக்கு" அழைக்கப்பட்டவர்களாகிய நாம், பின்வரும் மகிமைக்குத் தகுதியடைவதற்கும், ஆயத்தப்படுவதற்கும் என்று கடுமையான பரீட்சைகள் மற்றும் சோதனைகளுக்குள் கடந்து செல்வது மிகவும் அவசியமாய் உள்ளது.

எகிப்திற்கு வந்தபோதும், கர்த்தருடைய ஆசீர்வாதமானது யோசேப்பின் மீது குறிப்பிடத்தக்க விதத்தில் இருந்தது, அதாவது யோசேப்பு ஐசுவரியமுள்ள எஜமானிடத்திற்கு அடிமையாக விற்கப்பட்ட விதத்தில் கர்த்தருடைய ஆசீர்வாதமானது யோசேப்பின் மீது காணப்பட்டது. யோசேப்பினுடைய கடந்த கால வாழ்க்கை பற்றிக் குறைவான விவரங்களே இருக்கின்றது; ஆனால் பதினேழு வயதையுடையவராக யோசேப்பு போத்திபாரின் வீட்டில் பிரவேசித்தபோது, அவர் சிறந்த/கவனத்தை ஈர்க்கின்ற வாலிபனாகக் காணப்பட்டதாகத் தெரிகின்றது. யோசேப்பினுடைய மனஉறுதியும், நிதானமும், கடமையின் விஷயத்திலான உண்மையும், அறிவுக்கூர்மையும், யோசேப்பினுடைய பிறப்பை ஆவலாய் விரும்பினவரும், யோசேப்பின் பிறப்பை வேண்டுதலுக்கான பதிலாகப் பெற்றுக்கொண்டவருமான யாக்கோபிடமிருந்து யோசேப்பு சுதந்தரித்துக்கொண்ட நல்ல பண்புகளாகும். யோசேப்பு, தன்னுடைய தகப்பனுடைய விசுவாசத்தையும், பரந்த மனப்பான்மையையும், காரியங்களைச் செயல்படுத்துவதற்குரிய திறமையையும் கொஞ்சம் சுதந்தரித்தவராக இருந்தார் மற்றும் இதன் காரணமாக யோசேப்பு போத்திபாரின் வீட்டில் மாபெரும் பொறுப்புடைய ஸ்தானத்திற்கு, அதாவது தனது எஜமானுடைய காரியங்கள் அனைத்தின்மீதும் பொறுப்பைப் பெறும் ஸ்தானத்திற்கு உயர்த்தப்பட்டார். வாலிபனாகிய யோசேப்பின் மனமானது அடிக்கடி தனது தகப்பனிடத்திற்கும், சகோதரர்களிடத்திற்கும், தன்னுடைய சொப்பனங்களினிடத்திற்கும் மற்றும் ஆபிரகாமின் உடன்படிக்கையினிடத்திற்கும் திரும்பிக்கொண்டிருந்திருக்க வேண்டும் என்பதில் நமக்கு ஐயமில்லை. யோசேப்பு அந்த வாக்குத்தத்தங்களில் நம்பிக்கைக்கொண்டிருந்தார் என்பதில் ஐயமில்லை மற்றும் அந்த வாக்குத்தத்தங்கள் எவ்வாறு நிறைவேற்றப்படும் என்றும், தன்னுடைய காரியங்களில் தெய்வீக வழிநடத்துதல்கள் எப்படியாகக் காணப்படும் என்றும் யோசேப்பு யோசனைப் பண்ணிக்கொண்டிருந்திருப்பார் என்பதிலும் ஐயமில்லை. அவருடைய வாழ்க்கை திடீரெனக் கானானுடைய வயல்வெளிகளிலிருந்து, அக்காலத்தில் மாபெரும் பட்டணங்களில் ஒன்றாகவும்,

அந்நாட்களின் புகழ் பெற்ற தேசத்தின் தலைநகரமாகவும் விளங்கின பட்டணங்களுடைய பாவங்கள், களியாட்டுகள், சுகபோகங்கள் மற்றும் விறுவிறுப்பான சூழ்நிலைகளுக்குள் மாற்றப்பட்டபோது, தேவன் மீதான அவரது விசுவாசமும், வாக்குத்தத்தங்கள் மீதான அவரது நம்பிக்கையும், அவரைச் சூழ்ந்த தீமையான தாக்கங்களிலிருந்து, அவர் தன்னை விலக்கிக்கொள்ள உதவினது.

இப்படியாகவே அனைவருடைய வாழ்க்கையின் விஷயத்திலும் காணப்படுகின்றது; தற்கால தீமையின் உலகத்தினுடைய பலவிதமான காற்றுகளின் மத்தியில் ஜீவியத்தைக் காத்துக்கொள்வதற்கும், ஜீவியம் சீராய் இருப்பதற்கும் ஒரு கொள்கை, ஒரு நம்பிக்கை, ஒரு நல் குறிக்கோள் அவசியமாய் இருக்கின்றது. தேவபக்தியுள்ள பெற்றோர்களினால் பயிற்றுவிக்கப்பட்டுள்ள, அதிலும் விசேஷமாக நம்முன் வைக்கப்பட்டுள்ள சுவிசேஷத்தின் நம்பிக்கைகள் தொடர்புடைய விஷயத்தில் பயிற்றுவிக்கப்பட்டுள்ள வாலிபனோ (அ) வாலிப பெண்ணோ, மற்ற வாலிபர்களைக் காட்டிலும் அனைத்து விதங்களிலும் அனுகூலம் உடையவர்களாய் இருப்பார்கள்; இந்த மற்ற வாலிபர்களோ எவ்வித விசேஷித்த நோக்கமும், இலக்கும் ஜீவியத்தில் பெற்றிராதவர்களாகவும், வாழ்க்கையைச் சமநிலையில் கொண்டிருப்பதற்கான பாரமாகிய தெய்வீக வாக்குத்தத்தங்களைப் பெற்றிராதவர்களாகவும், பொதுவாக அறிவீனமான காரியங்களுக்கு நேராகவும், அடிக்கடி பாவத்திற்கு நேராகவும், அனைவரும் இச்சிக்கும் திருப்திகளை நாடுவதற்கு நேராகவும், மாறிமாறி வீசும் காலம் எனும் காற்றினால் இங்கும் அங்குமாக அலைக்கழிக்கப்படுகின்றார்கள். தங்கள் பிள்ளைகளிடத்திலான கடமையில் கவனமற்றுக் காணப்படுகின்ற பெற்றோர்கள், தங்கள் பிள்ளைகளின் தவறுகளை உடனடியாகச் சரி செய்ய முடியாது மற்றும் உண்மையான சமாதானத்தையும், சந்தோஷத்தையும், திருப்தியையும், ஜீவியத்தின் புயல்களின் மத்தியில் தேவையான சமநிலையையும் கொண்டுவருகின்ற காரியங்கள் மீது பிள்ளைகளின் மனதை பதிய வைத்திடுவதற்கு உதவிட உடனடியாகவும் முடியாது.

அனுபவ பாடங்கள் அனைத்தையும், தான் கற்றுவிட்டதாகவும் மற்றும் இனிமேல் தன்னுடைய பாதை செழிப்பின் பாதையாக இருக்கும் என்பதாகவும் ஒருவேளை யோசேப்பு எண்ணியிருந்திருப்பாரானால், அது தவறாய் இருந்திருக்கும். பிரதானியாகிய போத்திபாரின் வீட்டுக் காரியங்கள் மீதும், தொழில் காரியங்கள் மீதும் பிரதான மேற்பார்வையாளராக இருக்கும் ஸ்தானத்தைக் காட்டிலும் உயர்வான ஒரு ஸ்தானத்தைத் தெய்வீக விவேகமானது, யோசேப்பிற்குத் திட்டமிட்டிருந்தது; யோசேப்பிற்கான ஸ்தானம் உயர்வானதாக இருக்கப்போகிறதென்றால், அவர் இன்னும் கடுமையான ஒரு பள்ளிக்கூடத்தில், ஏற்றகாலத்தில் இனிமேல் அவர் மிகுதியாய் உயர்த்தப்படும் நிலைமைக்கென்று ஆயத்தப்படத்தக்கதாக, இன்னும் படிப்பினைகளைக் கற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. யோசேப்பு தன்னுடைய எஜமானுடைய நம்பிக்கையையும், தனது எஜமாட்டியினுடைய தயவையும் அனுபவித்துக் கொண்டிருக்கையில், திடீரென அவர்மேல் பெருந்துன்பம் வந்தது; அதுவும் அவர் எந்தத் தவறும் செய்யாமலும், அவர் தன்னுடைய எஜமானுக்கு உண்மையாய் இருந்ததின் காரணத்தினாலும் அவர்மேல் வந்தது. யோசேப்பு போத்திபாருடைய குரோதம் கொண்ட மனைவியினால் தவறாய்க் குற்றம் சாட்டப்பட்டார். அவர் காவலில் வைக்கப்பட்டார்; ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் காணப்படும் சிறைச்சாலைகளிலிருந்து, எகிப்தின் காவல்கள் முற்றிலும் வேறுபட்டதாய் அப்பொழுதும், இப்பொழுதும் இருக்கின்றது. எகிப்தின் காவல்கள்/சிறைகள் இருட்டாகவும், வெறுக்கத்தக்கதாகவும், பயங்கரமான இடங்களாகவும் இருந்தன; அங்குக் கைதிகள் பெரும்பாலும் கொடூரமாய் நடத்தப்பட்டனர் மற்றும் இரும்புச் சங்கிலிகளினால் கட்டப்பட்டனர். யோசேப்பும் ஆரம்பத்தில் இப்படியாகத்தான் நடத்தப்பட்டார் என்பது சங்கீதம் 105:18-ஆம் வசனத்தின் வார்த்தைகள் மூலம் உறுதியாகுகின்றது; "அவன் கால்களை விலங்குபோட்டு ஒடுக்கினார்கள்; அவன் பிராணன் இரும்பில் அடைபட்டிருந்தது." இது யோசேப்பிற்குக் கடுமையான சோதனையாக இருந்திருக்க வேண்டும்; மேலும் அவர் தெய்வீகத் தயவு மற்றும் எதிர்காலத்தில் உயர்த்தப்படுதல் குறித்த நம்பிக்கைகளைக்கொண்டிருந்ததின் காரணமாக, இந்த அனுபவங்கள் யோசேப்பிற்கு இரட்டிப்பான கசப்புடைய அனுபவங்களாக இருந்திருக்க வேண்டும்.

இப்படியாகவே ஆபிரகாமின் வாக்குத்தத்தங்களுக்குரிய ஆவிக்குரிய சுதந்தரவாளிகளின் விஷயத்திலும் காணப்படும்; நம்மால் முடிந்த மட்டும் கடமைகளை நாம் நிறைவேற்றிக்கொண்டிருக்கும்போது, அதுவும் கர்த்தருடைய ஆசீர்வாதமும், தயவும் நம்மீதும், நம் காரியங்கள் மீதும் மிகவும் குறிப்பிடத்தக்க விதத்தில் பெற்றிருக்கும் சில தருணங்களில், திடீரெனப்

பிரச்சனை எழும்புகின்றது, துன்பம் வருகின்றது மற்றும் இருளின் வல்லமைகள் மேற்கொள்கின்றது மற்றும் கொஞ்சம் நேரம் நம்முடைய சக மனிதர்களுடைய கணிப்பில் குற்றவாளிகள் போலும், தெய்வீகப் பராமரிப்பில்லாமல்/தேவனால் கைவிடப்பட்டது போலும் காணப்படுவோம். இம்மாதிரியான சூழ்நிலைகளில் நமக்கு இருக்கும் ஒரே ஆறுதல், நாம் "எத்தரென்னப்பட்டாலும் நிஜஸ்தராக" இருப்பதேயாகும்; அதாவது தவறுதலாய்ப் பாடு அனுபவிக்கிறோம் என்பதாகும். இம்மாதிரியான அனுபவங்களானது, சந்தேகத்திற்கிடமின்றி நமக்கு அவசியமானவைகளாகும்; "தனிமையில் நான் வெளிச்சத்தில் நடப்பதைப் பார்க்கிலும், நான் இருளில் தேவனோடு நடந்திடுவேனே" என்று நாம் பாடினாலுங்கூட, நாம் கர்த்தருடைய கரத்தைப் பிடித்துக்கொள்ளும் அப்படியானதொரு விசுவாசத்தையும், அப்படியானதொரு நம்பிக்கையையும், இருளான வேளைகளில் தெய்வீக வழிநடத்துதல்கள் மீதான நம்பிக்கையையும் வளர்த்தக்கூடிய சோதனையான அனுபவங்களுக்குள் நாம் அனுமதிக்கப்படாதது வரையிலும், இப்படியான பாடல்கள் பயனில்லாத பெருமையடித்துக் கொள்ளுதல்களாகவே இருக்கும். நாம் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடப்பதற்கும், கர்த்தரைக் காண முடியாத வேளைகளில் அவரை நம்புவதற்கும் நாம் கற்றுக்கொள்ள வேண்டும்.

யோசேப்பினுடைய விசுவாசமானது, பரீட்சையில் நிலைநின்றது மற்றும் அவரது உயர்வான குணலட்சணங்களானது, அந்தத் துன்பமான சூழ்நிலைகளின் மத்தியிலும் பிரகாசித்தது; மேலும் இது கர்த்தர் யோசேப்போடே இருக்கின்றார் என்பதற்கும், அவர் தலைச்சிறந்த மாதிரியானவராகவும், ஞானமிக்க வாலிப புருஷனாகவும் இருக்கின்றார் என்பதற்குமான அடையாளமாக, சிறைச் சாலையின் தலைவனுக்குத் தோன்றியது; அப்போது யோசேப்பிற்கு இருபத்தேழு வயதாயிருந்தது. சிறைச்சாலையின் தலைவனோ, தன்னுடைய வேலையில், தனக்கு உதவியாய் இருப்பதற்கு (யோசேப்பைப்போன்ற) ஓர் உண்மையுள்ள ஊழியக்காரனைப் பெற்றிடுவதற்கு ஆவலாய் இருந்தார். திறமிக்க ஆண்களுக்கும், பெண்களுக்கும் உலகத்தில் எப்போதும் வாய்ப்புகள் உண்டு; மிகவும் திறமிக்கவர்களாய் இருப்பவர்கள், கர்த்தருடைய ஆவியை உடையவர்களாகவும், "சுத்தமுள்ளதாயும், பின்பு சமாதானமும், சாந்தமும், இணக்கமுமுள்ளதாயும், இரக்கத்தாலும் நற்கனிகளாலும் நிறைந்ததாயும், பட்சபாதமில்லாததாயும், மாயமற்றதாயுமிருக்கிறதான" பரத்திலிருந்து வருகிற ஞானத்தினை உடையவர்களாகவும் இருக்கின்றனர் (யாக்கோபு 3:17). சுயநலமான நோக்கங்களினாலேயே சிறையின் தலைவன் யோசேப்பிடம் தயவாய் இருந்தார் என்பதிலும், கைதிகளைப் பார்த்துக்கொள்ளும் பொறுப்பினை யோசேப்பிடம் ஒப்புவித்தார் என்பதிலும் ஐயமில்லை. மேலும் யோசேப்பினுடைய திறமைகள் மாத்திரமே, அவரை உயர்வான ஸ்தானத்திற்கு உயர்த்திடவில்லை; தெய்வீக வழிநடத்தல்களே காரியங்களை இப்படியாக நிகழ்த்தியது. தேவன் விசேஷித்த தயவு பாராட்டுகிறவர்களிடத்திலும், அவர் விசேஷமாய்ப் பயன்படுத்துபவர்களிடத்திலும், குணலட்சணங்கள் காணப்பட வேண்டும் என்பதை நாம் கவனித்திட வேண்டும். மெருகிடப்படாத வைரத்தைக் காட்டிலும், சாதாரணமான கூழாங்கல்லானது நன்றாய்க் காணப்படும்; எனினும், சாதாரணமான கூழாங்கல்லிடம் இல்லாத உறுதியும், தூய்மையும் மெருகிடாத வைரத்திடம் காணப்படுவதினாலேயே, அது வெட்டப்பட்டு, மெருகிடப்பட்டு, மிக விலையுயர்ந்த கல்லாகப் பதிக்கப்படுகின்றது. நம்முடைய ஆசீர்வாதங்கள் அனைத்தும் தேவனிடமிருந்து, கிறிஸ்து மூலம் வந்ததாக இருப்பினும், நம்முடைய "அழைப்பையும், தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்திக் கொள்ளும்" விஷயத்தில் நாம் செய்ய வேண்டிய விஷயங்கள் சில உண்டு என்பதையும், நாம் தேவனுக்காகவும், நீதிக்காகவும் அன்பும், பக்தியும், வைராக்கியமும் கொண்டிருக்க வேண்டும் என்பதையும், இந்தக் குணங்கள் மாத்திரமல்லாமல், கீழ்ப்படிந்து ஒப்புக்கொடுக்கிற தன்மையையும் கொண்டிருக்க வேண்டும் என்பதையும், நாம் நினைவில் கொள்ள வேண்டும். அதாவது வைரம் வெட்டப்படுகின்ற மெருகிடப்படும் அனுபவத்தை நாம் அனுபவிக்கத்தக்கதாக, தெய்வீக விவேகமானது நமக்கு அனுமதித்திடும் விசுவாசம் மற்றும் பொறுமையின் பல்வேறு சோதனைகளை ஏற்றுக்கொள்வதற்கும், அச்சோதனைகளிலிருந்து நன்மை அடைவதற்குமுரிய விதத்தில் கீழ்ப்படிந்து ஒப்புக்கொடுக்கிற தன்மையையும் கொண்டிருக்க வேண்டும் என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

ஓர் அடிமையாகவும், ஒரு கைதியாகவும் யோசேப்பு பெற்றிருந்த அனுபவங்களானது, துன்பத்தில் இருப்பவர்கள் மீது அனுதாபங்கொள்ளும் தன்மையை மாத்திரம் ஏற்படுத்தவில்லை; இராஜாவாகிய பார்வோன் முன் நிற்பதற்கும், பார்வோனுடைய முக்கிய ஊழியக்காரனாகுவதற்கும் யோசேப்பை

ஆயத்தப்படுத்துகின்ற, விஷயத்தில் அறிவுரையாயிருக்கின்ற ஞானம் மற்றும் அனுபவப் பாடங்களையுங்கூட யோசேப்பு கற்றுக்கொண்டிருந்தார். சிறைச் சாலையில் யோசேப்பு சம்பாதித்திட்ட அனுபவங்களில் சில இப்பாடத்தில் விவரிக்கப்பட்டுள்ளது. அக்காலத்தில் கைதிகள் அனைவரும் குற்றவாளிகளாக இருப்பதில்லை; சில சமயம் இராஜாவுக்கு ஏற்பட்ட கோபத்தின் காரணமாகவும், சிலர் கைதியாகக் காணப்படுவதுண்டு. பார்வோனின் வீட்டாரில் உயர் ஸ்தானம் வகித்த இரண்டு பேர், ஏதோ காரணங்களினால் இராஜாவுக்குக் கோபமூட்டினதின் காரணமாக, யோசேப்போடுகூட அதே சிறையில் தள்ளப்பட்டனர்; (இராஜாவுக்கான பானபாத்திரக்காரன் என்பவன் நம்பிக்கையிலும், கனத்திலும் உயர் ஊழியர்களாய் இருப்பவர்களில் ஒருவன் ஆவான்; சுயம்பாகி என்பவன் இராஜாவினுடைய சமையல் அறையின் நிர்வாகியும், வீட்டின் பொதுவான விசாரணைக்காரனுமாவான்); மேலும் இத்தருணத்தில் யோசேப்பு கைதிகளின் பிரதான பொறுப்பாளியாக இருந்தபடியால், யோசேப்பு, இராஜ்யத்தினுடைய காரியங்களை நன்கு அறிந்திருக்கும் இந்த மனிதர்களை அடிக்கடி சந்தித்தும், நெருக்கமாய்ப் பழகியும் இருந்திருப்பார். மேலும் யோசேப்பிடமும் அவர்கள் பேச்சுத் தொடர்பு வைத்திருக்க வேண்டும். ஏனெனில், யோசேப்பு அவர்கள் பேசுகின்ற காரியங்களுக்குக் கவனம் செலுத்துபவராக இருந்திருக்க வேண்டும். தங்கள் முகத்தில் வெளிப்பட்ட கவலை எனும் சிறு காரியத்தைக் கூடக் கவனித்து, அதைக் குறித்துத் யோசேப்பு விசாரித்தபடியால், அப்போதிருந்த கைதிகளிலேயே யோசேப்பு வித்தியாசமான கைதி என்று அவர்கள் எண்ணியிருந்திருக்க வேண்டும். இப்படியாகவே எதிர்கால மகிமைக்கென்று தாங்கள் ஆயத்தப்படுவதற்கும், மெருகிடுவதற்கும் அவசியமான சோதனைகள் மற்றும் பிரச்சனைகளுக்குள், ஆபிரகாமின் வாக்குத்தத்தத்திற்கான ஆவிக்குரிய சுதந்தரவாளிகள் அனைவரும் கடந்து செல்லுகையில், இரக்கமாயிருப்பதற்கும் கற்றுக்கொள்ள வேண்டும். "இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் இரக்கம் பெறுவார்கள்" (மத்தேயு 5:7). இவர்களது சொந்த அனுபவங்களானது, பிரச்சனையில் காணப்படும் அனைவரிடத்திலும், உருக்கமான இருதயத்தைக் கொண்டிருக்கத்தக்கதாக, இவர்களை மென்மைப்படுத்துகின்றது. கர்த்தருடைய ஜனங்கள் அனைவரும் "இரக்கத்தாலும், நற்கனிகளாலும் நிறைந்தவர்களாய்க்" காணப்பட வேண்டும்.

யோசேப்பினுடைய அனுதாபங்காட்டும் தன்மையானது, இரு கைதிகள் துக்கமாய் இருப்பதற்கான காரணத்தை வெளிக்கொண்டு வந்தது. இரு கைதிகளில் ஒவ்வொருவரும் முந்தின இரவில் சொப்பனங்கண்டு, அவரவர் தங்களது சொப்பனமானது, வரப்போகும் தீமையைக் குறித்து எச்சரிக்கின்றதாய் இருக்கின்றது என்று எண்ணி, கலங்கிபோய்க் காணப்பட்டார்கள். சொப்பனங்களைப் புரிந்துகொள்ளும் சில ஆற்றல்களினால், யோசேப்பு கர்த்தரினால் ஆசீர்வதிக்கப்பட்டிருந்தபடியால், உடனடியாகச் சொப்பனத்திற்கான விளக்கத்தைக் கொடுத்தார்; அதாவது கைதிகள் இருவரில் ஒருவர் சீக்கிரத்தில் விடுதலை செய்யப்படுவார் என்றும் மற்றவர் தண்டிக்கப்படுவார் என்றும் விளக்கம் கொடுத்தார். தண்டிக்கப்படப் போகின்றவர் மீது அனுதாபம் காண்பித்து, விடுவிக்கப்படப் போகின்றவரை வாழ்த்தி, விடுவிக்கப்படப் போகின்றவனிடத்தில், அவனுக்கான சந்தோஷத்தின் நாட்களில் தன்னையும், தன்னுடைய இரக்கத்தையும் நினைத்துக்கொள்ளவும், கூடுமானால் இராஜாவிடம் இரக்கம் பெற்றுக்கொண்டு, தனக்கு விடுதலைப் பெற்றுத் தரவும் யோசேப்பு வேண்டிக்கொண்டார்.

யோசேப்பினுடைய இரண்டு சொப்பனங்களும், பானபாத்திரக்காரன் மற்றும் சுயம்பாகியினுடைய இரண்டு சொப்பனங்களும், பின்னாட்களில் பார்வோனுக்கு வந்த இரண்டு சொப்பனங்களுமாகிய, அனைத்தும் தெய்வீக ஏவுதலினாலே உண்டானது என்பதிலும், சில விளைவுகளைக் கொண்டுவரத்தக்கதாக, சில தாக்கங்களை உண்டுபண்ணுவதற்கான நோக்கத்திற்காகவே இச்சொப்பனங்கள் கொடுக்கப்பட்டன என்பதிலும் உறுதியே. இவர்கள் அனைவருக்கும் வந்த சொப்பனங்களானது, கர்த்தரிடமிருந்து வந்தது என்று நாம் ஏற்றுக்கொள்கிறதினால், அனைத்துச் சொப்பனங்களும் கர்த்தரிடமிருந்து வருகின்றது அல்லது அனைத்துச் சொப்பனங்களுக்கு விசேஷித்த தீர்க்கதரிசன நிறைவேறுதல்கள் உண்டு என்று நாம் ஏற்றுக்கொள்வதாகப் புரிந்துகொள்ளப்படக்கூடாது. மாறாக பெரும்பாலான சொப்பனங்களானது மனக் கற்பனைகளாக இருக்கின்றது, அதாவது வயிற்றுக் குழப்பத்தின் காரணமாகவும், மூளை பாதி உறங்கியும், பாதி விழித்தும் இருக்கும் காரணமாகவும், மனதில் ஏற்படுகின்ற பொருளற்ற, அர்த்தமற்ற உருவத் தோற்றங்களாக

இருக்கின்றது; இச்சொப்பனங்களானது விசேஷித்த பொருளையுடையதாய் இராமல் மாறாக நாம் உணவு உட்கொள்ளும் விஷயத்தில் காட்ட வேண்டிய அக்கறைக் குறித்த எச்சரிக்கையாகவே இருக்கின்றது. மூன்றாம் வகையான ஒரு சொப்பனங்கூட உண்டு; இவ்வகையானது கர்த்தரினாலோ, அஜீரணத்தினாலோ ஏற்படாமல், மாறாக சொப்பனங்காணும் நபர்களைத் தவறாய் வழிநடத்துவதற்கான நோக்கத்திற்காக, பொல்லாத ஆவியினால் கொடுக்கப்படுகின்றதாய் இருக்கின்றது. நம்முடைய சொப்பனங்களானது, தீய ஆவிகளின் ஏவுதலால் ஏற்படவில்லை என்பதை உறுதிப்படுத்துவதற்கு, நாம் பொல்லாங்கனின் பிள்ளைகளாய் இல்லை என்பதை உறுதிபடுத்திக்கொள்ள வேண்டும்; மேலும் பாவத்தைத் துறந்து சுவிசேஷத்தில் நமக்கு முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கைக்குள் தஞ்சம் புகுந்துள்ள நாம், நமது கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவின் மூலமான மீட்பின் காரணமாக தேவனுடைய குடும்பத்திற்குள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, தேவனுடனான உறவிற்குள் வந்து, பொல்லாங்கனுடைய வல்லமையிடமிருந்தும், நம்முடைய காரியங்கள் தொடர்புடைய விஷயத்திலான அவனது மாய்மாலங்களிலிருந்தும் பாதுகாப்புப் பெற்றுக்கொண்டவர்களாகவும், நாம் தேவனை அன்புகூருகின்றபடியாலும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டுள்ளபடியாலும், "அனைத்தும் நன்மைக்கு ஏதுவாய் நடக்கும்" என்ற கிருபையான வாக்குத்தத்தத்தின் கீழ் வந்தவர்களாகவும் இருக்கின்றோமா என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். இங்குச் சொப்பனம் கண்டுள்ள சுயம்பாகியும், பானபாத்திரக்காரனும் மற்றும் பார்வோனும் தேவனுடைய மனிதர்கள் அல்ல என்று நாம் கவனிக்க வேண்டும், ஆனாலும் இந்தச் சொப்பனங்கள் தேவனாலேயே உண்டானது மற்றும் இந்தச் சொப்பனங்களானது, சொப்பனம் கண்டவர்களின் நன்மைக்காக அல்லாமல், மாறாக யோசேப்பின் நன்மைக்காகவே விசேஷமாக அருளப்பட்டது.

முன்புள்ள காலங்களைக் காட்டிலும் இன்றுள்ள கர்த்தருடைய ஜனங்களுக்குச் சொப்பனங்களுக்கான அவசியம் தேவையே இல்லை. நமக்கு அவசியமான ஒவ்வொரு காரியங்களையும் பற்றின தேவனுடைய சாட்சியாகிய தேவனுடைய வார்த்தையை நாம் பெற்றிருக்கின்றோம். இந்தத் தேவனுடைய வார்த்தைகளானது/செய்திகளானது பூரணமாய்க் காணப்படுவதினாலே, இதைக் குறித்து "வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது" என்று அப்போஸ்தலன் குறிப்பிடுகின்றார் (2 தீமோத்தேயு 3:16, 17). இதற்கென்று சொப்பனங்கள் வரும் பட்சத்தில், அதுவும் அந்தச் சொப்பனம் தேவ வார்த்தைகளுடைய பரீட்சைகளில் நிலைநிற்குமாயின், அச்சொப்பனம் கர்த்தரிடமிருந்து வந்தது என்று அடையாளம் கண்டு கொள்வதற்கு நாம் தடைப்பண்ணப்படுவதில்லை; அதாவது அச்சொப்பனமானது வேதவாக்கியங்களில் தேவன் வெளிப்படுத்தியுள்ளவைகளுக்கு முரண்பாடாக இல்லாத பட்சத்தில், அது கர்த்தரிடமிருந்து வந்ததென அடையாளம் கண்டுகொள்வதற்குத் தடையில்லை. ஒருவேளை சொப்பனமானது, வேதவாக்கியங்களுக்கு முரண்பாடாய்க் காணப்படும் பட்சத்தில், நாம் சொப்பனத்தை நிராகரித்துவிட வேண்டும். ஒருவேளை சொப்பனமானது, வேதவாக்கியங்களுக்கு இசைவாகக் காணப்படும் பட்சத்தில், அந்த இசைவினிமித்தம் நாம் அதை ஏற்றுக்கொண்டு, அச்சொப்பனம் இசைவாயிருக்கும் வேதவாக்கியங்களிடத்தில் குறிப்பாய் நமது கவனம் ஈர்க்கப்பட மாத்திரமே அச்சொப்பனத்தை நாம் அனுமதித்திட வேண்டும். சொப்பனத்தின் மூலமாகவோ அல்லது தரிசித்தலோ, சொப்பனமோ இல்லாமல் முழுக்க விசுவாசத்தினால் நடப்பதின் மூலமாகவோ, எப்படியாக இருப்பினும் தேவனுடைய உண்மையான பிள்ளையாகிய, ஆபிரகாமுக்குரிய ஆவிக்குரிய வாக்குத்தத்தங்களின் சுதந்தரவாளியானவன், யோசேப்பைக் குறித்து நம்முடைய ஆதார வசனமானது, "தேவனோ அவனோடுகூட இருந்து, அவனுக்கு இரக்கம் பாராட்டினார்" என்று தெரிவிப்பதைக் காட்டிலும் அதிகமாய் எதிர்பார்த்திட வேண்டும், கண்டடைய வேண்டும், உணர்ந்திட வேண்டும். தேவனும் நம்மோடுகூட இருந்து நம்மிடம் இரக்கத்தைக் காட்டுவாரானால், அதுவும் இதை அவர் எப்படிச் செய்தாலும் சரி, நாம் நன்றியுள்ள இருதயங்களுடன் அவரது தயவை ஏற்றுக்கொள்ள வேண்டும் மற்றும் இருளிலிருந்து தமது ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு அழைத்துக்கொண்டு வந்தவரும், இறுதியில் நம்மை மரணம் எனும் சிறைச்சாலையினின்று, நித்தியமான இராஜ்யத்தின் மகிமைகளிடத்திற்கும்,

அவரது குமாரனுடன் உடன் சுதந்தரத்துவத்திற்கும் கொண்டு வருபவருமானவரின் புண்ணியங்களை நாம் அறிவிக்க வேண்டும்.

---

[R1635]

# “பொறாமை மற்றும் விரோதம்”

## ஆதியாகமம் 37:1-11

“நீங்கள் போகும் வழியிலே சண்டைபண்ணிக்கொள்ளாதிருங்கள்.” - ஆதியாகமம் 45:24

திரளான சந்ததி குறித்து ஆபிரகாமுக்கும், ஈசாக்குக்கும், யாக்கோபுக்கும் பண்ணப்பட்ட வாக்குத்தத்தமானது, மெதுவான விகிதத்தில் நிறைவேறி வருவது இங்குக் குறிப்பிடத்தக்க விதத்தில் கவனிக்கப்படலாம். ஆபிரகாம் அழைக்கப்பட்டது முதல் இத்தருணம் வரை இரண்டு நூற்றாண்டுகள் ஆகியுள்ளது; எனினும் அவரது சந்ததியினர் குறைவானவர்களாகவே காணப்பட்டனர். யாக்கோபிற்கு இப்பொழுது 109-வயதாக இருந்தது; அவருக்கு 12-குமாரர்களும், ஒரு குமாரத்தியும் காணப்பட்டார்கள். இவர்கள் அனைவரும் நற்குடிப்பிறப்பை உடையவர்களாகவும், ஆசையாய் எதிர்பார்க்கப்பட்டவர்களாகவும், மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களாகவும், தேவனிடமிருந்து வந்த அன்பளிப்புகளாகக் கருதப்பட்டவர்களாகவும் காணப்பட்டனர் (ஆதியாகமம் 29:32-35; 30:6-13, 17-24); மேலும் இவர்கள் தேவனையும், அவரது வாக்குத்தத்தங்களையும் பயபக்தியுடன் கருதுவதற்குக் கற்பிக்கப்பட்டிருந்தனர். இப்படிப்பட்ட நல்ல தாக்கங்களுக்கும் மேலாக, சில அநுகூலமற்ற தாக்கங்களும் கூடக் காணப்பட்டது; அவை பின்வருமாறு........(1) குடும்பத்தில் சமாதானத்திற்கும், ஒருமைபாட்டிற்கும் மற்றும் அன்பிற்கும் வழிவகுக்காத பல மனைவிகள் கொண்ட குடும்பம் மற்றும் நான்கு மனைவிகளின் பிள்ளைகள், இப்படியான ஒரு குடும்ப ஏற்பாடானது, தேவனுடைய ஏற்பாட்டின்படியாக இருக்கவில்லை, ஆனாலும் அப்போஸ்தலர் குறிப்பிட்டுள்ளதுபோன்று, "அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர்போலிருந்தார்” (அப்போஸ்தலர் 17:30). (தேவனுடைய பிரமாணம் பற்றின நவம்பர் 1, ‘92-இன் நமது பாடத்தைப் பார்க்கவும்). (2) இவர்கள் ஒழுக்கமற்ற அஞ்ஞானி ஜனங்களுடன், ஆரானிலும், சீகேமிலும் பழக்கம் கொண்டிருந்தார்கள். (3) இவர்களது மேய்ப்பன் வாழ்க்கையும் மற்றும் பெரிதான மந்தைகளைப் பராமரிப்பதுமான விஷயங்களும் இவர்களை வீட்டிலிருந்து தூர விலகியிருக்க வேண்டியதின் அவசியத்தை ஏற்படுத்திற்று மற்றும் இதன் காரணமாக நன்மைக்கு (அ) தீமைக்கு ஏதுவாய்ச் செலவிடுவதற்கு அதிகளவில் ஓய்வு வேளை கிடைத்தது.

இங்கு நமக்கு அறிமுகப்படுத்தப்படும் யோசேப்பின் அனுபவமானது, அப்போதுள்ள உயர்ந்த பட்ச நாகரிகம் மற்றும் உலகம் கற்றுக்கொண்டுள்ள விஷயங்கள் தொடர்பாக, இஸ்ரயேல் ஜனங்களுக்கு அவசியமான அனுபவங்களை, எகிப்தில் கொடுத்த தெய்வச் செயலின் காரணமான ஏற்பாட்டிற்கான துவக்கமாகக் காணப்பட்டது. எகிப்தில் அவர்கள் 400 ஆண்டுகளாக, பயிற்சியளிக்கும் விசேஷித்த சூழ்நிலையின் கீழ்க் காணப்பட்டனர்; மற்றும் அங்கிருந்து அவர்கள் தாழ்மை பற்றியும், தேவனுடைய அன்பு மற்றும் வல்லமையின் மீதான விசுவாசம் பற்றியுமான முக்கியமான பாடங்களைக் கொஞ்சம் கற்றுக்கொண்டவர்களாகக் காணப்பட்டனர்.

பதினேழு வயதானவரும், அறிவுக்கூர்மையுள்ளவரும், யாக்கோபினுடைய முதிர்வயதின் குமாரனாக இருந்தபடியாலும், மிகவும் மாதிரியான குமாரனாகக் காணப்பட்டபடியாலும், யாக்கோபின் விசேஷித்த அபிமானத்தைப் பெற்றுக்கொண்டவருமான யோசேப்பு, அவரது சகோதரர்களுடைய பொறாமையின் காரணமாகவும், தனது வஞ்சனையற்ற தன்மையின் காரணமாகவும், தனது சகோதரர்களுடைய கோபத்திற்கு/வெறுப்பிற்கு ஆளானார். யோசேப்பின் மூத்த சகோதரர்களோ, தங்கள் இளைய சகோதரனும், சிறந்த எதிர்காலமுள்ள சகோதரனுமாகிய யோசேப்பின் மீது தங்கள் தகப்பன் கொண்டிருக்கும் அன்பில் பங்குகொள்வதற்குப் பதிலாக, யோசேப்பின் மீது பொறாமைகொண்டு, யோசேப்போடு சமாதானமாய்ப் பேசக்கூடாதவர்களாய்ப் போனார்கள்.

அவர்களது பொறாமையானது, துரிதமாய் உண்டுபண்ணிக்கொண்டிருந்த துர்க்குணத்தைக் குறித்து அறியாதவராகவும், கபடமற்றவராகவும் யோசேப்பு காணப்பட்டார் மற்றும் அவர்கள் செய்தவைகளைக் கண்டு ஆச்சரியமடைந்தவராகவும், அவர்களது தவறான நடக்கைகளை அறிந்தவராகவும், அவர் காரியங்களை வீடு திரும்பும்போது, தனது தகப்பனிடத்தில் தெரிவிப்பவராகவும் காணப்பட்டார்.

யோசேப்பு கபடற்றவராகவே தனது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த சொப்பனங்களைக் குறித்து அவர்களிடத்தில் கூறினார்; அநேகமாக அதன் அர்த்தத்தை யோசேப்பு புரிந்துகொள்ளாதவராகவே காணப்பட்டிருந்திருக்க வேண்டும், ஆனால் யோசேப்பு எதிர்காலத்தில் உயர்ந்த ஸ்தானத்தில் காணப்படப்போவதையே அச்சொப்பனங்கள் குறிக்கின்றன என்று அவர்கள் புரிந்துகொண்டார்கள்; இந்தச் சொப்பனத்தின் காரியமும் மற்றும் யோசேப்பின் மீதான தகப்பனின் விசேஷித்த கடாட்சம் பற்றி அவர்கள் அறிந்திருந்த காரியமும், யோசேப்பு எதிர்காலத்தில் உயர் ஸ்தானத்தில் காணப்பட்டுவிடுவார் என்று அவர்களை அச்சங்கொள்ளச் செய்தது மற்றும் அப்படியொரு காரியத்தை/கருத்தை அவர்களால் ஜீரணிக்கவும் முடியவில்லை. ஆகவே யோசேப்பை அப்புறப்படுத்துவதற்கான திட்டம் போடப்பட்டது. பொறாமையும், பகைமையுமானது, கொலைப்பாதகத்தின் சிந்தை மற்றும் நோக்கம் சார்ந்த அவர்களது கசப்பான கனியை வேகவேகமாய் முழுவளர்ச்சியடையச் செய்தது. யாக்கோபின் புத்திரர் அனைவரும் இப்படியாக தங்கள் இயல்புகளை வெளிப்படுத்துவதற்குத் தேவன் அனுமதித்தப்போதும், தம்முடைய நோக்கங்களுக்கு உதவியாக அவர்களது நடக்கையை நன்மைக்கு ஏதுவாய் மாற்றிப்போடுவதற்கும் ஆயத்தத்துடன் தேவன் காணப்பட்டார். இப்படியாகவே நன்மைக்கு ஏதுவாய் மாற்றிப்போடுகின்ற தேவனுடைய செயல்பாடானது, எப்போதும் மனிதனுடைய சுயாதீனத்துடன் இசைந்தே செல்லுகின்றதாய் இருக்கின்றது.

யாக்கோபினுடைய முதல் மனைவியின், முதல் குமாரனாகிய ரூபன் ஏற்கெனவே பிரதான ஆசீர்வாதத்தை இழந்துபோயிருப்பதினால், யாக்கோபு யோசேப்பிற்குக் கொடுத்த பலவருண அங்கியானது, அவரது இரண்டாம் மனைவியின் மூத்த குமாரனாகிய யோசேப்பிற்கு, அவர் பிரதான ஆசீர்வாதத்தை அருளச் சித்தமாய் இருப்பதைச் சுட்டிக்காட்டுவதாக இருக்கின்றது என்றும் அந்தச் சகோதரர்களானவர்கள் உணர்ந்துகொண்டார்கள் (ஆதியாகமம் 49:4).

பஞ்சத்தினுடைய உச்ச நிலையின்போது, யோசேப்பின் தந்தையும், சகோதரர்கள் அனைவரும், அவருக்குக் கனம் செலுத்திடுவதற்கும், அவரது தயாளத்தை அனுபவிப்பதற்குமென எகிப்துக்கு வரும்போது, அவர் காணப்படப் போகின்றதான உயர் ஸ்தானம் பற்றின தீர்க்கதரிசனமானவைகளாகவே யோசேப்பினுடைய சொப்பனங்கள் காணப்பட்டன. இந்தச் சொப்பனங்களானது, யோசேப்பினுடைய மனதில் ஏற்படுத்தின தாக்கமானது, அவர் வல்லமை மற்றும் செல்வாக்கின் அரியணைக்குக் கொண்டு செல்லப்படுவதற்கு முன்னதாக, அவர் எகிப்தில் கடுமையான சோதனைகள் மற்றும் பரீட்சைகளின் மத்தியில் காணப்பட்டபோது, அவருக்கு ஆறுதலையும், மகிழ்ச்சியையும் கொடுத்ததாகக் காணப்பட்டது.

யோசேப்பினுடைய சகோதரர்கள் கொண்டிருந்த பொறாமையானது, ஆபிரகாமுக்குத் தேவனால் பண்ணப்பட்ட வாக்குத்தத்தத்திற்கு இசைவாக இறுதியில் நன்மைக்கு ஏதுவாய் மாற்றப்பட்டாலும், அது அவர்கள் மீது கடுமையான அனுபவங்களையும் மற்றும் கசப்புகளையும் கொண்டுவந்ததாயிருந்தது. பொறாமை என்பது விழுந்துபோன சுபாவத்திற்கே உரிய கனிகளில் ஒன்றாகும்; பொறாமை மோசமானதும், சகல துர்ச்செய்கைகளுக்கும் நேராய் நிச்சயமாய் வழி நடத்துகின்றதுமாய் இருக்கின்றது; இது சரிசெய்யப்படவில்லையெனில் இறுதியில் மரணத்திற்கும் வழிநடத்திவிடும்.

[R1639]

# "யோசேப்பு எகிப்தில் விற்கப்பட்டார்"

## ஆதியாகமம் 37:23-36

"நீங்களோ எனக்குத் தீமைசெய்ய நினைத்தீர்கள், தேவனோ அதை நன்மையாக முடியப்பண்ணினார்."- ஆதியாகமம் 50:20

முற்காலத்திலுள்ள தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்களில் சிலருடைய ஜீவியங்களில் நடைபெற்ற, நன்மைக்கு ஏதுவாய்க் காரியங்களை மாற்றியமைக்கும் தேவனுடைய வழிநடத்துதல்களைக் காணும்போது, அவர்களில் நம்முடைய விசுவாசத்திற்கான மாபெரும் தூண்டுதலைக் கண்டடைய முடிகின்றது; முற்பிதாக்களின் மாதிரியான ஜீவியங்களில், தேவனுக்கான நமது பக்திவைராக்கியத்திற்கும் மற்றும் அவரது ஊழியங்களுக்கான நமது உண்மைக்கும் தூண்டுதலைக் கண்டடைகின்றோம். ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, யோசேப்பு . . . இவர்கள் எத்துணை அருமையாய்த் தேவனோடு சஞ்சரித்திருக்கின்றனர்! இருளான வேளைகளிலும் மற்றும் பிரகாசமான வேளைகளிலும் எவ்வளவுக்கு எளிமையாகவும் மற்றும் குழந்தைகள் வைத்திருப்பதுபோன்றதாகவும் இவர்களது விசுவாசம் காணப்பட்டிருந்தது! இவர்களது பக்தி எத்துணை உள்ளார்வத்துடனும், உண்மையுடனும் காணப்பட்டிருந்தது!

முந்தின பாடத்தில், யாக்கோபினுடைய முதிர்வயதில், அவரது பிரியமான குமாரனாகக் காணப்பட்ட (கடமை உணர்வுமிக்க, 17-வயது வாலிபனான) யோசேப்பைப்பற்றியும், அவரது தீர்க்கதரிசனமான சொப்பனங்கள் பற்றியும், அவரது சகோதரர்கள் அவரிடத்தில் கொண்ட பொறாமைப் பற்றியும் நாம் பார்த்தோம். இந்தப் பாடத்தில், எவ்வாறு அந்தப் பொறாமையும், பகைமையும், அதனதின் கனிகளைக் கொண்டு வந்தது என்று நாம் பார்க்கப்போகின்றோம். ரூபன் மற்றும் யூதா தவிர, மற்றபடி அனைவரும் யோசேப்பினுடைய ஜீவனைக் கொன்று போடுவதற்கு விருப்பமாய் இருந்தார்கள்; ஆனாலும் இந்த இருவர் நேரடியாக மீதியானவர்களை எதிர்ப்பதற்குத் துணியவில்லை, ஆகவே வெவ்வேறு ஆலோசனைகளைப் பரிந்துரைத்தவர்களாகக் காணப்பட்டார்கள். யோசேப்பை ரூபன் குழிக்குள் போடப்பண்ணினார் மற்றும் இந்தக் குழியினின்று யோசேப்பை இரகசியமாய்க் காப்பாற்றிவிடுவதற்கு ரூபன் நோக்கம் கொண்டிருந்தார், ஆனால் மற்றவர்களோ இந்தக் குழியில் யோசேப்பு பட்டினிக் கிடந்து சாக வேண்டும் என்ற முடிவில் காணப்பட்டார்கள். ஆனால் காப்பாற்ற வேண்டுமென்ற தனது நோக்கத்தை ரூபன் நிறைவேற்றுவதற்கு முன்னதாக, எகிப்துக்குப் போய்க் கொண்டிருக்கிற வாணிகர் கூட்டத்தினரிடம் யோசேப்பை விற்றுவிடலாம் என்ற யோசனையை யூதா முன் வைத்துவிட்டார் மற்றும் இந்த ஆலோசனைக்கு அவர்களும் ஒப்புக்கொள்ள, அவர்கள் தங்கள் இளைய சகோதரனை விற்றுத் தள்ளிவிட்டு, கிடைத்த பணத்தைத் தங்களுக்குள்ளாகப் பங்குபோட்டுக் கொண்டார்கள். இப்படியாக விற்றுப்போட்டது குறித்து ரூபனுக்குத் தெரிவிக்கப்படவில்லை மற்றும் இவரும், யோசேப்பு மரித்துப்போய்விட்டார் என்றெண்ணி, தன்னுடைய தகப்பனாருடைய துக்கத்தில் பங்கடைந்தார்.

யூதாவினுடைய நோக்கம், இரண்டு நோக்கமாகக் காணப்படுகின்றது; முதலாவதாக யூதா தன்னுடைய மனசாட்சியைச் சாந்தப்படுத்தத்தக்கதாக, இரண்டு தீமைகளிலேயே குறைவான தீமையைத் தேர்ந்தெடுத்து, தன்னுடைய சகோதரனுடைய இரத்தப்பழிக்கு ஆளாகுவதைத் தவிர்த்துக்கொண்டார், எனினும் யோசேப்பைத் துரத்தித் தள்ளிவிடும் நோக்கத்தினை, அதுவும் தங்களுக்குக் கொஞ்சம் (பணம்) இலாபம் கிடைக்கும் விதத்தில் துரத்தித் தள்ளிவிடும் நோக்கத்தினை நிறைவேற்றிவிடுவதற்கு ஆவலுள்ளவராய்க் காணப்பட்டார். பின்னர் மீதி எட்டுப் பேரோடுங்கூடத் தன்னுடைய தகப்பனாரிடத்தில் பொய்ச் சொல்வதற்கும் மற்றும் யோசேப்பு மரித்து விட்டார் என்று நம்பப்பண்ணுவதற்கும் விருப்பமுள்ளவராய் இருந்தார். இரண்டு தீமைகளிலுமே, குறைவான தீமையைத் தேர்ந்தெடுத்த யூதா இப்படித் தேர்ந்தெடுப்பது நன்மையானது/நல்லது என்று கருதியிருக்கலாம், ஏனெனில், "நம்முடைய சகோதரனைக் கொன்றுபோடுவோம்" என்பதும், "நம்முடைய சகோதரனை விற்றுப் போடலாம்" என்பதுமான கருத்துக்கள்/ஆலோசனைகள் மிகவும் வேறுபட்ட வித்தியாசம் கொண்டவையாக இருக்கின்றது. இப்படியாகவே பெரிய தீமைகளை, சிறிய தீமைகளுடன் ஒப்பிட்டுப்

பார்ப்பதன் மூலம் அல்லது தங்களை மற்றவர்களுடன், அதாவது வேதவாக்கியங்களில் முன்வைக்கப்பட்டுள்ள உண்மையான பரிசுத்தத்துடனும், நற்பண்புகளின் பூரண அளவுகளுடனும் ஒப்பிடுவதற்குப் பதிலாக, இழிவான பண்புகளுடைய மற்றவர்களுடன் ஒப்பிட்டுப்பார்ப்பதன் மூலம் மனிதர்கள் பெரும்பாலும் வஞ்சிக்கப்படுகின்றனர்.

தனது பிரியமான குமாரன் மரித்துப்போய்விட்டான் என்பதாக எண்ணப்பட்ட இந்த இழப்பு என்பது, யாக்கோபுக்கு மற்றும் ஒரு கடினமான சோதனையாக இருந்தது. யோசேப்பின் சந்ததி வழியில்தான் தெய்வீக உடன்படிக்கையின் நிறைவேறுதலானது எதிர்பார்க்கப்பட்டது. யோசேப்பு யாக்கோபினுடைய பிரியமான மனைவியாகிய ராகேலின் மூத்த குமாரனாகவும், யாக்கோபினுடைய இருதயத்திற்கு ஏற்றவராகவும், தேவனுக்கான பயபக்தியையும் மற்றும் நீதியின் மீதான அன்பையும் கொண்டவராகவும் காணப்பட்டார். பலவருண அங்கியானது, யாக்கோபினுடைய யோசேப்பின் விஷயத்திலான அந்த நம்பிக்கையின் வெளிப்படுத்துதலாய் இருந்தது மற்றும் இந்தத் தனது நம்பிக்கையைத் தனது குடும்பத்தாரும் பெற்றுக்கொள்வார்கள் என்ற நம்பிக்கையிலும் மற்றும் குடும்பத்தாரும் கொண்டிருக்க வேண்டும் என்ற விருப்பத்தின் காரணமாகவும், யாக்கோபு இந்தத் தனது நம்பிக்கையை, தனது குடும்பத்தாரிடமிருந்து மறைப்பதற்கு நாடவில்லை. ரூபன் யாக்கோபினுடைய முதல் மனைவியாகிய லேயாளின் மூத்த குமாரனாக இருந்தபடியால், சகோதரர்கள் அனைவரின் மத்தியிலும், ரூபனே யோசேப்புக்கு எதிராகப் பொறாமைக்கொள்வதற்கு அநேகம் காரணங்களை உடையவராக இருக்கின்றார். "யோசேப்பு உயிரோடிருக்கிறான்" எனும் நற்செய்தியை யாக்கோபு பெற்றுக்கொள்வதற்கு முன்பு வரையிலும், யாக்கோபு 23-வருடங்களாகிய நீண்ட காலம், தனது பிரியமான குமாரனுடைய இழப்பை அனுபவித்தவராகக் காணப்பட்டார். எனினும் யாக்கோபு தேவனுடைய வாக்குத்தத்தங்களை உண்மையுடன்/விசுவாசத்துடன் பற்றிக்கொண்டவராகவும், இஸ்ரயேலின் ஆறுதலுக்காகக் காத்துக்கொண்டிருந்தவராகவும் மற்றும் தேவனுடைய பார்வையில் விலையேறப் பெற்றதாகக் காணப்படுகின்ற சாந்தம் மற்றும் பொறுமை எனும் பண்புகளைத் தாழ்மையுடன் வளர்த்துக்கொண்டவராகவும் காணப்பட்டார்.

யோசேப்பின் விஷயத்திலுங்கூடச் சோதனையானது மிகவும் கடுமையானதாகவே காணப்பட்டது. பிரியமுள்ள குமாரனாகவும், அபிமான குமாரனாகவும், தன்னுடைய தகப்பனாருடைய வீட்டில் அன்பாய் வளர்க்கப்பட்ட குமாரனாகவும் இருந்த அவர், திடீரென அந்நிய மற்றும் புறஜாதியான தேசம் ஒன்றில், அடிமை ஸ்தானத்திற்கு மாற்றப்பட்டார். இதனோடுகூட அவரது சகோதரர்களிடத்திலிருந்து அவர் அடைந்திட்ட இரக்கமற்ற கொடூரம் மற்றும் கொலைப்பாதகத்திற்கு ஏதுவான பகைமை அடங்கின கசப்பான அனுபவங்களும் அவருக்கு இருந்தது; இன்னுமாக அவரது தகப்பன் அடையப்போகின்ற வேதனைகள் பற்றின எண்ணங்களும், தனிமையும் இருந்தது; இன்னுமாக அக்காலத்தில் அந்நிய தேசங்களுக்கிடையே சாலைகளோ, தந்தியோ, அஞ்சல் ஏற்பாடுகளாகிய தொடர்புக்கான ஏற்பாடுகளோ இல்லாதிருந்ததினால் மற்றும் அடிமையாகிய தனக்கு நேரமோ (அ) பணமோ இல்லாமல் இருப்பதினால், தன்னால் மீண்டுமாக தன்னுடைய தகப்பனுடைய முகத்தைக் காணவோ (அ) தகப்பனிடமிருந்து ஏதாகிலும் செய்தி கேட்கவோ முடியும் என்ற எவ்விதமான நம்பிக்கையும் இல்லாதவராகக் காணப்பட்டார்.

இது நிச்சயமாகவே 17-வயதுள்ள ஓர் இளம் வாலிபனுக்குக் கடினமான அனுபவமாக இருந்திருக்கும்; யோசேப்பு தனது குழந்தைப் பருவத்தின் இடத்தையும், பூமியில் தனக்குப் பிரியமானவர்கள் என்றிருந்தவர்கள் அனைவரையும் அவர் விட்டுப்பிரிந்தபோது, இம்மாதிரியான வேதனையுள்ள சந்தர்ப்பத்தில் இருக்கையில், தனது தகப்பனார் அனைத்தையும் விட்டு ஏசாவிடமிருந்து ஓடினபோது, தெய்வீக வாக்குத்தத்தங்கள், சத்தியம் மற்றும் நீதியின் கொள்கைகள் எனும் கோலைத் தன்னுடன் எடுத்துக்கொண்டது போன்று, இத்தகைய தகப்பனுடைய செல்வாக்கின் கீழ் வளர்ந்த யோசேப்பும் செய்தார் மற்றும் தான் தேவனுக்கு உண்மையாயும், நேர்மையாயும் காணப்பட வேண்டுமென்றும், தான் என்னென்ன சூழ்நிலைகளிலெல்லாம் வைக்கப்பட்டாலும் தன்னுடைய நேர்மையைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டுமென்றும் யோசேப்பு முடிவெடுத்தார். அந்தோ பரிதாபம்! இந்த நாட்களிலும் சரி, அந்த நாட்களிலும் சரி எத்தனை வாலிபர்கள்தான் இப்படிப்பட்டதான நல்ல தீர்மானங்களை, மிகவும் சாதகமான சூழ்நிலைகளின் கீழ் இருந்தபோதாகிலும் கூட எடுத்துக்கொள்கின்றவர்களாய்க் காணப்படுகின்றனர்? இந்த வயதில்தான் இளமைப் பருவத்திற்கே

உரிய ஏளனச் செயல்களில், மனம்போன போக்கில் ஈடுபட வேண்டும் என்று பொதுவாக எண்ணிக்கொள்கின்றனர், ஆனால் இப்பொழுது விதைத்துள்ளவைகளுக்கு, தாங்கள் கசப்பான ஓர் அறுவடையைப் பின்னர் அறுக்க வேண்டியிருக்கும் என்பதையும் பொதுவாக மறந்துவிடுகின்றனர்.

தேவனால் இந்தத் துன்பமான சூழ்நிலைகளின் எப்பாகத்தையாகிலும் தடைப்பண்ணி இருக்கவும் மற்றும் குறுக்கிட்டிருக்கவும் முடிந்திருக்கும் என்றபோதிலும், அவர் அப்படிச் செய்யாமல், மாறாக ஒவ்வொருவரும் தீமைக்கு அல்லது நன்மைக்கு ஏதுவான தங்கள் தங்கள் பண்புகளை வெளிப்படுத்துவதற்கு அனுமதித்தார் என்று நாம் பார்க்கின்றோம்; எனினும் இவைகள் அனைத்திற்கும் மேலாக, தேவனுடைய பரந்த மனப்பான்மையுடன் கூடிய திட்டங்களுக்கு உதவியாகவும் மற்றும் அவரது உண்மையுள்ள ஊழியக்காரர்களுக்கான விசேஷித்த ஆசீர்வாதங்களுக்காகவும், இந்தச் சூழ்நிலைகள் அனைத்தையும் மிகவும் ஆச்சரியமான விதத்தில், மாற்றிப்போட்டக் காரியத்தில், நன்மைக்கு ஏதுவாய் மாற்றிப்போடும் அவரது வழி நடத்துதலை நம்மால் காணமுடிகின்றது. உதாரணத்திற்கு யோசேப்பு தன்னுடைய பிரச்சனைகளுக்குத் தீர்வு காணத்தக்கதாக தனியே விடப்பட்டபோதும், புதியதும், அக்காலகட்டத்தில் மிகுந்த முன்னேற்றமும், நாகரிகமும் அடைந்ததாகக் காணப்பட்டதுமான தேசத்துடன் தொடர்புக்குள் வந்தபோதும், அவர் புதியதும், விலையேறப்பெற்றதும், வேறு எவ்விதத்திலும் பெற்றுக்கொள்ள முடியாததுமான படிப்பினைகளைப் பெற்றுக்கொண்டார் மற்றும் புருஷனுக்குரிய பலத்தையும், தைரியத்தையும், சாமர்த்தியத்தையும், உறுதியான குணலட்சணத்தையும், வளர்த்தியப் பயிற்சியைப் பெற்றுக்கொண்டார்; இன்னுமாக குடும்ப அங்கத்தினர்கள் அனைவரிடமிருந்து அவர் தனிமைப்படுத்தப்பட்ட காரியமானது, தேவனுடன் நெருங்கிய தொடர்பு வைத்துக்கொள்வதற்கும், தேவனுடைய வல்லமையின் மீது சார்ந்திருப்பதற்கும் அவரை வழிநடத்தினது.

தேவனுடைய வழிநடத்துதலின்படி, யோசேப்பு எகிப்து தேசத்தில், இஸ்ரயேலர்கள் அனைவருக்குமான முன்னோடியானார்; இந்த எகிப்து தேசத்தில்தான், தேவன் இஸ்ரயேல் தேசம் முழுவதற்கும் அவசியமானதும், முக்கியத்துவம் வாய்ந்ததுமான அனுபவங்களை, நானூறு ஆண்டுகளுக்கு, அந்தக் காலக்கட்டத்தின் உயர்ந்தபட்ச நாகரிக நிலையுடன் தொடர்புக்குள் கொண்டுவந்து கொடுப்பதற்கு, அதுவும் அடிமை நிலையின் தாழ்மையான சூழ்நிலைகளின் கீழ்க் கொடுப்பதற்குத் திட்டம் பண்ணியிருந்தார்; இப்படியான தாழ்மையான சூழ்நிலைகளின் கீழ் அனுபவங்களைக் கொடுப்பது என்பது அவர்களைத் தாழ்மையாக்கிவிடும் மற்றும் தேவன்மீது சார்ந்திடுவதற்கு அவர்களுக்குக் கற்றுக்கொடுத்திடும். இந்த எகிப்து தேசத்தில் இஸ்ரயேல் ஜனங்களின் சந்ததியினர் தூய்மையாகவும், மற்றவர்களிடம் இருந்து வேறுபட்டவர்களாகவும் காக்கப்பட்டனர், ஏனெனில் அவர்கள் அடிமைகளாக இருந்தபடியினால், அவர்களால் எகிப்தியர்களுடன் கலப்புத் திருமணம் செய்துகொள்ள முடியாது. எகிப்து தேசத்தில் காணப்பட்ட இஸ்ரயேலர்கள் மூலமாக, எகிப்தியர்கள் மாத்திரமல்லாமல், இவர்கள் மூலமாக மற்றத் தேசத்தார்களும், உண்மை தேவனுடைய குணாதிசயம் மற்றும் வல்லமைக் குறித்துக் கொஞ்சம் கற்றுக்கொள்ள வேண்டியிருந்தது.

இந்த முற்பிதாக்களின் விஷயத்திலான தெய்வீக வழிநடத்துதல்களை நாம் கவனிக்கையில், குணலட்சணத்தை வளர்த்துவது மற்றும் எதிர்க்கால நன்மைக்கென்று சந்தர்ப்ப சூழ்நிலைகள் வனையப்படும் விஷயத்திலுமான முற்பிதாக்களினுடைய அனுபவங்களின் முக்கியத்துவமானது, அவர்களது இறுதி/முடிவு பலன்களை நாம் பார்க்கும் பொழுதுதான், நமக்கு நன்கு வெளிப்படுகின்றது என்ற உண்மைகளிலிருந்து, நமக்கு முக்கியத்துவம் வாய்ந்த மிகவும் விசேஷமான பாடம் கிடைக்கப்பெறுகின்றது; ஆனால் அவர்களோ இந்த அனுபவங்கள் வாயிலாக கடந்துபோகுகையில், அவர்களால் தேவனது அன்பான நோக்கங்களைப் புரிந்துகொள்ள முடியாமல் இருந்த போதும், அவர்கள் தேவனுடைய வழிநடத்தும் கரங்களை நம்பி, விசுவாசத்துடன் நடக்க வேண்டியவர்களாய் இருந்தார்கள்.

ஈசாக்குக்குப் பதிலாக தேவன் ஆட்டுக்குட்டியை ஏற்பாடு பண்ணுவார் என்று ஆபிரகாமினால் அறிந்துகொள்ள முடியாது; ஆகையால் அவர் தனது குமாரனைக் கொன்று போடத்தக்கதாகக் கத்தியைத் தூக்குமளவுக்குத் தெய்வீகக் கட்டளைக்குக் கீழ்ப்படிய வேண்டியது ஆபிரகாமின் பங்காக

இருந்தது. ஏசா தன்னைச் சமாதானத்துடன் சந்திப்பார் என்றும், தேசத்தின் நன்மையை அனுபவிக்க தன்னையும் அனுமதிப்பார் என்றும் யாக்கோபினால் அறிந்துகொள்ள முடியாது; கர்த்தர் கட்டளையிட்டபோது, அவர் எழுந்து, தன்னுடைய வீட்டாரையும் கூட்டிக்கொண்டு, தன்னுடைய உடைமைகளையும் எடுத்துக்கொண்டு, ஏசாவைச் சந்திக்கப்போக வேண்டியது யாக்கோபினுடைய பாகமாக இருந்தது. தன்னுடைய சகோதரர்களைத் தேடும்படிக்குத் தனது தகப்பன் வீட்டைவிட்டு வந்தபோது, தன் மீது கடந்துவந்திட்ட வேதனையான சூழ்நிலைகள் அனைத்தும், எவ்வாறு தனக்கும், தன்னுடைய தகப்பன் வீட்டார் அனைவருக்கும் மற்றும் எகிப்துக்கும் மாபெரும் நன்மைக்கு ஏதுவாக மாறும் என்று யோசேப்பினால் அறிந்துகொள்ள முடியாது; ஆனால் தெய்வீகச் சத்தியம் மற்றும் நீதியின் கொள்கைகளைத் தன்னுடன்கூட எகிப்துக்குக் கொண்டு செல்வதும், தேவனுக்கேற்ற குணங்களுக்கான சிறந்த மாதிரியாகக் காணப்படுவதும், போத்திபாரின் வேலைக்காரனாக, தன்னால் முடிந்தமட்டும் தன்னுடைய வேலைகளை உண்மையாய்ச் செய்ய வேண்டியதும் யோசேப்பினுடைய பங்காக இருந்தது. தனது தந்தையாகிய யாக்கோபு போன்று, யோசேப்பும் விசுவாசம் மற்றும் கடமையின் பாதையில் நடந்தபோது, தேவன் தம்முடைய ஆசீர்வாதங்களை அருள முடிந்தது; மேலும் அவர்களுடைய உண்மையின், விசுவாசத்தின் மற்றும் தாழ்மையின் ஆசீர்வாதமான பலனை நம்மால் இறுதியில் காணமுடிகின்றது.

அவர்களைப்போலவே நாமும் ஒருவேளை அனைத்துச் சூழ்நிலைகளிலும், அதாவது இருளான நேரங்களிலும், வெளிச்சமான நேரங்களிலும், அமைதியான நேரங்களிலும், புயலான நேரங்களிலும் நமது உண்மையை நிரூபிப்போமானால், நம்முடைய ஜீவியத்தின் கடந்தகால அனுபவங்களுங்கூட மேற்கூறியபடி, நித்திய காலங்களினுடைய வெளிச்சத்தில் பார்க்கப்படும்/ காட்சியளிக்கும். தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் அனைவரும் அனுபவங்களினால் பயிற்றுவிக்கப்பட வேண்டும்; ஆகையால் முற்பிதாக்களினுடைய சிறந்த மாதிரிகளினாலும் மற்றும் அனைத்தையும் நன்மைக்கேதுவாய் நடந்தேற்றினதில் வெளிப்பட்ட தேவனது அன்பு, பராமரிப்பு மற்றும் ஞானத்தினாலும் மற்றும் இப்படியாகவே நமக்கும் நடைபெறும் என்று அவர் வாக்களித்துள்ளதாலும் நாம் தைரியம் கொண்டு, நாம் நம்மைப் பொறுமையுடனும், சாந்தத்துடனும் தேவனிடம் ஒப்புக்கொடுப்போமாக!

---

[R1268]

# “இவையெல்லாம் தேவனாலே உண்டாயிருக்கிறது”

**(இரண்டு பத்திகள் மட்டும்)**

## “யோசேப்பினுடைய அனுபவங்கள்”

யோசேப்பின் சகோதரர்கள் அவரை அடிமைத்தனத்திற்குள்ளாக விற்றுப்போட்டார்கள் மற்றும் பிற்பாடு அவரை எகிப்தனைத்திற்கும் அதிகாரியாக அவர்கள் கண்டபோது, தங்கள் குற்றத்திற்குரிய தண்டனைக் குறித்து மிகவும் பயமடைந்தார்கள். ஆனால் அவர்களது பயங்களை அமைதிப்படுத்தும் வண்ணமாக யோசேப்பு, “என்னை இவ்விடத்தில் வரும்படி விற்றுப்போட்டதினால், நீங்கள் சஞ்சலப்படவேண்டாம்; அது உங்களுக்கு விசனமாயிருக்கவும் வேண்டாம்; ஜீவரட்சணை செய்யும்படிக்குத் தேவன் என்னை உங்களுக்கு முன்னே அனுப்பினார்” என்று கூறினார் (ஆதியாகமம் 45:5). ஆனால் யோசேப்பின் சகோதரர்கள் புரிந்த குற்றத்திற்கான பொறுப்பைச் சர்வவல்லமையுள்ளவர்மேல் சாற்றும் விதத்தில், இவ்வசனத்தில் எவ்வித ஆதாரமும் இல்லை என்று நாம் கூறுகின்றோம். பரிசுத்த ஆவியினால் நிறைந்து ஸ்தேவான், அவர்கள் செய்த காரியம் தேவனால் ஏவப்படாமல், மாறாக அவர்களது பொறாமையினாலேயே ஏவப்பட்டது என்று குறிப்பிடுகின்றார் (அப்போஸ்தலர் 7:9) மற்றும் இப்படி ஸ்தேவான் குறிப்பிட்டக் காரியமானது, யாக்கோபு 1:13, 16-ஆம் வசனங்களுக்கு முழு இசைவுடனே காணப்படுகின்றது. அப்படியானால் யோசேப்பு பேசினதில் தவறுள்ளது என்ற முடிவிற்கு நாம் வரலாமா? இல்லை; யோசேப்பும், ஸ்தேவானும், இரண்டுபேரும் கூறியவைகள் சரியே. யோசேப்பின் சகோதரர்கள் பொறாமையினால் நிறைந்திருந்தார்கள் மற்றும் யோசேப்பைக் கொன்றுபோடுவதற்கு முன்பே திட்டமிட்டிருந்தனர், ஆனால் அவர்களில் ஒருவருடைய

மனதில் பயம் கிரியைப் புரிய தேவன் பண்ணினார், மற்றும் அந்த ஒருவர் கொடுத்திட்ட ஆலோசனையின் பேரில், பொறாமைகொண்டிருந்த அந்தச் சகோதரர்கள் வேறு வழிமுறையைத் தெரிவு செய்து, யோசேப்பை அடிமையாக விற்றுப்போட்டனர். இப்படியாகப் பார்க்கையில் தேவனுடைய பங்கானது எந்த விதத்திலும் யோசேப்பினுடைய சகோதரர்களின் நல்லது, கெட்டதுமான நடத்தைச் சார்ந்த பொறுப்பினை மாற்றிடவில்லை; அதேசமயம் தீமையான எண்ணத்தையும் உருவாக்கிக் கொடுக்கவுமில்லை; அது தீமையான எண்ணத்தை, வேறொரு திசையில் திருப்பி மாத்திரமே விட்டது (அதாவது யோசேப்பைக் கொன்றுபோடுவதற்குப் பதிலாக, அவரை விற்றுப்போடச் செய்தது); இப்படி நிகழ்வது என்பது அவருடைய ஊழியக்காரனாகிய யோசேப்பு தொடர்புடையதான தேவனுடைய திட்டத்திற்கு எதிராகவும் காணப்படப்போவதில்லை. மனிதனுடைய நல்ல மற்றும் கெட்ட குணலட்சணங்களைக் குறுக்கிடாமல், தேவனுடைய வல்லமையானது, காரியங்களை நன்மைக்கு ஏதுவாய் மாற்றிப்போடுகின்றது என்பதற்கான உதாரணமாகவே இச்சம்பவம் அமைகின்றது. இப்படியாகவே யோசேப்பினுடைய காரியங்கள் அனைத்திலும் நடைப்பெற்றது. யோசேப்பு சிறையிலிருந்து, பார்வோனுடைய சிங்காசனத்திற்குக் கொண்டுபோகப்பட்ட விஷயத்தில், யோசேப்பு சிறைக்கு அனுப்பப்பட்டதற்குக் காரணமாக இருந்த, போத்திபாருடைய மனைவியினுடைய குற்றமானது, தேவனுடைய ஏவுதலினாலேயே நடந்தது என்று வாக்குவாதம் பண்ணப்படக் கூடாது. மாறாக போத்திபாருடைய மனைவியும், யோசேப்பினுடைய பொறாமை கொண்ட சகோதரர்களும் இல்லாமலேயே, யோசேப்பை எகிப்தினுடைய சிங்காசனத்தினிடத்திற்குத் தேவனால் பல நூறு வழிகளில் கொண்டு வர முடியும். இயல்பாய் நடந்துகொண்டிருந்த சம்பவங்களைத் தேவன் நன்மைக்கு ஏதுவாய் மாற்றிப்போட்டுப் பயன்படுத்தினார்; இப்படியாக யாருடைய சித்தங்களையும் குறுக்கிடாமல், நன்மைக்கு ஏதுவான அவரது சித்தம் நடந்தேற்றப்பட்டது.

ஆகவே "மனிதனுடைய கோபம் (பாவம் செய்த, விழுந்துபோன சந்ததியின் பண்புகளே ஒழிய, மாறாக அவர் ஏவி, மனிதர்மேல் திணிக்கும் பண்புகளல்ல) தேவனுடைய மகிமையை விளங்கப்பண்ணும்; மிஞ்சுங்கோபத்தை அவர் அடக்குவார்" என்று பார்க்கின்றோம். தேவனுக்கும் அவரது பிள்ளைகளுக்கும் எதிரான தீமையான மனிதர்களுடைய முயற்சிகள் அனைத்தும் தேவனால் நன்மைக்கு ஏதுவாய் மாற்றிப்போடப்பட்டுள்ளது என்றும், அவரை அன்பு கூர்ந்து, அவருக்கு ஊழியம் புரிகின்றவர்களைச் சில விதங்களில் பரீட்சிப்பதற்கு (அ) வேறு ஆசீர்வாதங்களை வழங்கிடுவதற்குத் தேவனால் பயன்படுத்தப்பட்டுள்ளது என்றும் எதிர்க்காலத்தில் அனைவருக்கும் தெளிவாய் வெளிப்படுத்தப்படும் மற்றும் அவரது ஞானம் மற்றும் நற்பண்புகளை வெளிப்படுத்துவதின் மூலம், தற்காலத்தின் மனிதனுடைய கோபமானது, அப்போது தேவனுடைய மகிமையை விளங்கப்பண்ணும்.

---

**[R5216]**

# துன்பப்பட்டவர், எனினும் தேற்றுபவர்"

## ஆதியாகமம் 40 மற்றும் 41-ஆம் அதிகாரங்கள்

"தாழ்மையுள்ளவர்களுக்கோ தேவன் கிருபை அளிக்கிறார்."– 1 பேதுரு 5:5

யோசேப்பு பழைய ஏற்பாட்டின் காலங்களிலுள்ள முன்மாதிரியான வாலிபன் என்று சொல்லப்படலாம். சில விஷயங்களில் அவர் அனைத்துக் காலங்களுக்குரிய முன்மாதிரியாகக் காணப்படுகின்றார், எனினும் வித்தியாசம் உள்ளது. யோசேப்பு ஆவியினால் ஜெநிபிக்கப்படுவதற்குரிய காலங்களுக்கு முன்னதாக வாழ்ந்தவர், ஆகையால் அவர் கிறிஸ்தவனாய் இராமல், சுபாவத்தின் படியான மனுஷனாக மாத்திரமே காணப்படுகின்றார். அவர் வேதாகமங்கள் வருவதற்கு முன்னதான காலங்களிலும், பிரசங்கங்கள் பண்ணப்படுவதற்கும், ஓய்வுநாள் பள்ளிகள் நடத்தப்படுவதற்கும் முன்னதான காலங்களிலும் வாழ்ந்தவர் ஆவார். அனைத்து ஜனங்களும் யாக்கோபின் சந்ததியார் வழியாக ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்று வாக்களித்துள்ள ஆபிரகாமின் தேவனிடத்தில் ஒரு பலமான விசுவாசத்தை யோசேப்பு தனது தந்தையினிடத்திலிருந்து சுதந்தரித்துக்கொண்டவராக இருந்தார். யாக்கோபின் குடும்பத்திலுள்ள ஓர் அங்கத்தினனாகிய யோசேப்பு, தேவனிடத்தில் பயபக்திக்

கொண்டிருந்து, தாழ்மையுடனும், உயர் பண்புகளுடனும் வாழ்வதற்கு நாடினார். தேவனிடத்தில் அவர் கொண்டிருந்த உண்மையும், தேவனுடைய வாக்குத்தத்தத்தின் மீது அவர் கொண்டிருந்த விசுவாசமும், அவரது ஜீவியத்தில், அனைத்துக் காரியங்களிலும் அவரை வழிநடத்திடுவதற்கும், வழிகாட்டிடுவதற்கும் உரிய சுக்கானாகக் காணப்பட்டது. தேவனுக்குப் பிரியமாய் இருக்க வேண்டும் மற்றும் அவரது அங்கீகரிப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற கண்ணோட்டத்திலேயே, யோசேப்பு அனைத்துக் காரியங்களையும் செய்தார்.

இன்றுபோல் அன்றும், இப்படிப்பட்டதான உண்மைத்தன்மை என்பது அநேகமாக அபூர்வமானதாகவே இருந்தது மற்றும் யோசேப்பினுடைய உண்மையின் பலனாக, யோசேப்பு தனது எஜமானுடைய வீட்டில், உயர் ஸ்தானத்திற்கு, அதாவது விசாரணைக்காரனாகப் பணி உயர்த்தப்பட்டார். அவரது கடமை உணர்ச்சியானது, அவரை ஜாக்கிரதையாய் இருப்பதற்கும், ஞானமாய் இருப்பதற்கும், விவேகத்துடன் இருப்பதற்கும்/சிக்கனத்துடன் இருப்பதற்கும் வழிநடத்தினது மற்றும் அவரது எஜமான் அனைத்தையும் யோசேப்பின் பொறுப்பில் விட முடிந்தது மற்றும் விட்டார். யோசேப்பைப் போன்றுள்ள வாலிபர்கள் இன்று எங்கும் மிகவும் மதிக்கப்படுகின்றனர்; ஆம் அப்படிப்பட்டவர்கள் உலகத்தினுடைய வரலாற்றின் அனைத்துக் காலக்கட்டங்களிலும், நம்பிக்கைக்குப் பாத்திரமான மனிதர்களாக, உண்மையுள்ள மனிதர்களாக, விவேகமுள்ள மனிதர்களாக மதிக்கப்பட்டுள்ளனர். யோசேப்பின் விஷயத்தில் இந்தப் பண்புகளுக்குத் தேவனிடத்திலான விசுவாசம் மற்றும் தேவபக்தி மற்றும் தேவனுக்குக் கடமைபட்டிருப்பதைப்பற்றின உணர்ந்துகொள்ளுதல் ஆகியவை காரணமாகுகின்றது.

ஆனால் யோசேப்பு இப்படியாகச் செழித்தோங்கிக் காணப்படுகையில், பெருந்துன்பம் அவர்மேல் கடந்துவந்தது. யோசேப்பு கொள்கைகளுக்கு உறுதியாய் இருந்ததான விஷயமானது, அவரது எஜமாட்டியைக் கோபப்படுத்தியது. அவள் அவரைத் தவறாய்க் குற்றஞ்சாட்டினாள்; மற்றும் அவர் சிறையில் அடைக்கப்பட்டார் மற்றும் அவர் அவரது எஜமானும், உபகாரியுமானவருக்குத் துரோகம் எனும் வெறுக்கத்தக்க குற்றம் புரிந்தவராகக் காண்பிக்கப்பட்டார். எனினும் அவர் குற்றமற்றவராக இருந்தார்; ஆனால், தான் குற்றமற்றவர் என்பதை யோசேப்பும், தேவனும் மாத்திரமே அறிந்திருந்தனர். யோசேப்பு தவறு செய்தாரா (அ) இல்லையா என்று கேள்வி எழுப்பப்படாத அளவுக்கு, எதிராளி குற்றம் பற்றின விபரங்கள் அடங்கின சாட்சியத்தை மிகவும் பலமானதாகக் காண்பித்துக்கொண்டாள். மனித பெலவீனத்தினுடைய இந்தத் தன்மையைக் **கவிஞனான ஷேக்ஸ்பியர்** (Shakespeare) அவர்கள், பின்வரும் வார்த்தைகளில் குறிப்பிட்டுள்ளார்: **"நரகத்தைவிட பெண்ணிற்கு ஏற்படும் வெறுப்பின் நிமித்தமான சீற்றமே பெரிது."**

நீதியின் பாதையில் நடப்பதற்கு நாடுகின்ற ஒருவருடைய ஜீவியம் இவ்வளவு கொடிதான தீமைக்குள்ளாவதற்குத் தேவன் அனுமதித்தது என்பது எத்துணை விநோதமாய்த் தோன்றுகின்றது! ஏன் இந்தத் தீமை தன் மீது வந்தது என்று யோசேப்பு கேள்வி எழுப்புவதையும், "தீமை செய்கிறவர்கள் திடப்படுகின்றார்களே, அவர்கள் தேவனைப் பரீட்சைப் பார்த்தாலும் விடுவிக்கப்படுகிறார்களே, நீதியாய் நடக்க நாடுபவர்கள் துன்பப்படுகின்றார்களே" என்று தீர்க்கத்தரிசியுடன் கூடச் சொல்லுவதையும் நம்மால் கற்பனை செய்து பார்க்க முடிகின்றது (மல்கியா 3:15).

தன்னை எகிப்தின் சிறைக்குக் கொண்டுபோன தெய்வீக வழிநடத்துதலிலுள்ள ஞானத்தைக் குறித்துக் கேள்வி கேட்பதற்கும், தன்னை எகிப்தில் அடிமையாக விற்கப்படுவதற்கு அனுமதித்திட்ட அதே தெய்வீக வழிநடத்துதலிலுள்ள ஞானத்தைக் குறித்துக் கேள்வி கேட்பதற்கும், யோசேப்பு தன்னை அனுமதித்திடவில்லை என்பது உறுதியே. தேவன் மீதான அவரது விசுவாசம் பரீட்சையில் நிலைநின்றது. பூமிக்குரிய நம்பிக்கைகள் மற்றும் விருப்பங்கள் அனைத்தினின்றும் தான் தள்ளப்பட்டுள்ளதை, அதாவது உலகத்திற்கு மரிக்க வைக்கப்பட்டுள்ளதைக் கண்டபோது, அவர் பலம் கொண்டவரானார். சர்வ வல்லமையுள்ளவர் மீதான விசுவாசத்தை அதிகமாய் வளர்த்திக் கொண்டார் மற்றும் என்ன நடந்தாலும் தான் நீதியாயும், கலக்கமுறாமலும், பயபக்தியாயும் வாழ வேண்டுமென மிகவும் தீர்மானமாய்க் காணப்பட்டார். சிறைச்சாலையிலுங்கூட அவரது உண்மைத்தன்மையும், அறிவும் மற்றும் பொதுவான நற்குணங்களும் அடையாளங்கண்டுகொள்ளப்பட்டது. யோசேப்பு சிறைச்சாலையின் தலைவனுடைய

நம்பிக்கைக்குப் பாத்திரமான மனிதனாகவும், உதவியாளனாகவுமானார். இப்படிப்பட்டதான (நல்ல) குணங்கள், எவ்வளவுதான் தவறாய்த் தூற்றப்பட்டாலும், திரித்துக்கூறப்பட்டாலும், பொய்யாய்க் குற்றஞ்சாட்டப்பட்டாலும், இக்குணங்களை உடையவர்களிடத்தில் நெருங்கி பழகுபவர்களால், இவர்களது பண்புகள் உணர்ந்துகொள்ளப்பட்டுப் பாராட்டப்படும். இக்காரியம் அன்றுபோல், இன்றும் உண்மையாகவே இருக்கின்றது.

## "சுயம்பாகி மற்றும் பானபாத்திரக்காரனுடைய சொப்பனங்கள்"

முற்காலங்களிலுள்ள சிறைச்சாலை விதிகளானது இக்காலங்களில் இருப்பதைப்போல், முறையாக இருப்பதில்லை. யோசேப்பு வருடக்கணக்காகச் சிறையில் காணப்பட்டார் மற்றும் அவர் அநேகமாக மறந்துபோகப்பட்டுள்ளார் மற்றும் ஒருவேளை அவரது வழக்கானது, அதிகாரிகளுடைய கவனத்திற்குக்கொண்டு வருவதற்கென ஏதேனும் நிகழவில்லையெனில், அவர் வருடக்கணக்காக சிறையிலேயே இருந்திருக்க வேண்டியிருந்திருக்கும். யோசேப்பிற்கு இருபத்தெட்டு வயது இருக்கும் போது, இரண்டு உயர் பணியாளர்கள் சிறையில் தள்ளப்பட்டார்கள், ஏனெனில் அவர்களது நடத்தையின் விஷயத்தில் பார்வோன் ஏதோ அதிருப்தியடைந்து இருந்தார். இவர்களில் ஒருவர் இராஜாவினுடைய காரியத்தரிசியும், பானபாத்திரக்காரனும் ஆவார்; மற்றவர் இராஜாவினுடைய சமையல் சார்ந்த விஷயங்களுக்குரிய சுயம்பாகிகளின் தலைவன் ஆவார்.

சிறையின் பொதுவான மேற்பார்வையாளரான யோசேப்பு, இந்த மனிதர்களைக் கண்டு, அவர்கள் முகங்களில் துக்கம்/கலக்கம் தெரிவதைக் கவனித்து, அவர்களை இரக்கத்துடன் விசாரித்தார். எத்துணை சிறந்த மாதிரி! மனச்சோர்வுடன் காணப்படுவதற்கும் மற்றும் தன் நிலைமையைக் குறித்துப் புலம்பித் திரிவதற்கும் பதிலாக, யோசேப்பு மகிழ்ச்சியுடன் காணப்பட்டார் மற்றும் தனக்கு முன்பாக தேவன் இறுதியாக வழியைத் திறந்து வைப்பதற்குரிய சில சந்தர்ப்பங்களுக்காகக் காத்திருந்தார். இப்படிப்பட்ட உயர்ப் பண்புகளை உடையவர், பிரச்சனையில் இருக்கும் மற்றவர்களுக்கு ஆறுதலின் வார்த்தைகளைப் பேசிடுவதற்கு நேரத்தை உடையவராக எப்போதும் காணப்படுவார். இது இன்றுள்ள உலகப்பிரகாரமான மனிதனுக்கு எத்துணையான மாதிரியாகக் காணப்படுகின்றது! யோசேப்பைக்காட்டிலும் அநேக விதத்தில் அதிக அநுகூலங்களைப் பெற்றவனாகக் காணப்படுகின்ற இன்றைய கிறிஸ்தவனுக்கும், யோசேப்பு எத்துணை மாதிரியாக விளங்குகின்றார்.

நம்முடைய இனமானது, பரிணாம வளர்ச்சியின் மூலமாக, விலங்குகளிலிருந்து தோன்றி வருகின்றது என்று நம்மிடம் சொல்லுகிறவர்களும் மற்றும் இதன் காரணமாகக் கிட்டத்தட்ட 4000 வருடங்களுக்கு முன்னதாக வாழ்ந்தவரும், ஆதாம் சிருஷ்டிக்கப்பட்டதிலிருந்து 2000 வருடத்திற்குப் பின்பாக வாழ்ந்தவருமான யோசேப்பு, கிட்டத்தட்ட ஒரு விலங்காகவே, அதாவது குரங்கிலிருந்து சில விஷயங்கள் மாத்திரமே நீக்கப்பட்ட நிலையிலுள்ள விலங்காகவே இருந்திருக்க வேண்டுமென்று மறைமுகமாகச் சொல்லுகிறவர்களும் உண்டு. ஆனால் அவருடைய அனுபவங்கள் சார்ந்த நன்னெறியை குறிப்பிடுவதற்கு முயற்சிக்காமல், அவைகளை உண்மை தகவல்களாக மாத்திரம் பதிவு செய்கிற முற்றிலும் வேறுபட்ட ஒரு கோணத்தையே, யோசேப்பைப் பற்றின இந்தச் சிறிய பதிவில் நாம் காண்கின்றோம்.

அந்த இரண்டு இராஜ கைதிகளும், சொப்பனங்களினால் கலங்கியிருக்கின்றார்கள் என்பதை யோசேப்பு அறிந்தபோது, அச்சொப்பனங்களுக்கு விளக்கங்களைக் கொடுத்தார். ஒரு சொப்பனத்தின் அர்த்தமானது நம்பிக்கையூட்டுகின்றதாகவும், மற்றொரு சொப்பனத்தின் அர்த்தமானது, நம்பிக்கையிழக்கச் செய்கின்றதாகவும் காணப்பட்டது. இன்னும் மூன்று நாட்களுக்குள்ளாக, பானப்பாத்திரக்காரன், இராஜாவினுடைய தயவை மறுபடியும் பெற்றுக் கொள்வான் என்றும், இன்னும் மூன்று நாட்களுக்குள்ளாக சுயம்பாகி தூக்கிலிடப்படுவான் என்றும் யோசேப்பு அறிவித்தார். தான் சுதந்திரம் அடையப்போகிற விஷயத்தில் தனக்கும் கடமை இருப்பதை உணர்ந்தவராக யோசேப்பு, தன்னால் மிகவும் உற்சாகமூட்டப்பட்டவரும், தன்னால் நண்பன்போன்று நடத்தப்பட்டவருமான பானப்பாத்திரக்காரனிடம் வேண்டிக்கொண்டார்; அதாவது பானப்பாத்திரக்காரன் விடுதலையாகும்

போது, ஆறுதலளித்த தன்னை நினைவுகூர வேண்டும் என்றும், தன்னுடைய வழக்கு விசாரிக்கப்படத்தக்கதாகவும், கூடுமானால் தான் விடுதலைப்பண்ணப்படத்தக்கதாகவும், தன்னுடைய வழக்கை அதிகாரிகள் முன் கொண்டு செல்லத்தக்கதாக, தனக்கு ஏதாகிலும் செய்ய வேண்டும் என்றும் பானபாத்திரக்கானிடம் யோசேப்பு வேண்டிக்கொண்டார்.

ஆனால் அந்தோ பரிதாபம்! கடின இருதயமே காணப்பட்டது! பானபாத்திரக்காரன் தனது சிறை நண்பனான யோசேப்பைப் பற்றி முழுவதுமாக இரண்டு வருடங்கள் மறந்துபோய்விட்டான்! பார்வோனின் சொப்பனமானது, பானபாத்திரக்காரனுக்கு, யோசேப்பை நினைவில் கொண்டு வந்தது; ஏனெனில் எகிப்தினுடைய சாஸ்திரிகள் எவராலும் பார்வோனுடைய சொப்பனத்திற்கு அர்த்தம் சொல்லக்கூடாமல் போயிற்று. தான் மறந்துபோனதைப் பானபாத்திரக்காரன் ஒப்புக்கொண்டு, தனக்கும், சுயம்பாகிக்கும் சிறையில் உண்டான சொப்பனம் பற்றியும், அங்கிருந்த அருமையான வாலிபனான யோசேப்பு பற்றியும், யோசேப்பு எப்படித் தேவனால் அருளப்பட்டதான வல்லமையினால் சொப்பனத்திற்கு அர்த்தம் கூறினது பற்றியும், யோசேப்பு சொன்ன அர்த்தத்தின்படியே நடந்தது என்பது பற்றியும், இராஜாவிடம் விளக்கினான்.

அந்த இரண்டு வருடங்களில் யோசேப்பு மிகுந்த எதிர்ப்பார்ப்புகளுடன் காணப்பட்டிருக்க வேண்டும் மற்றும் தன் வழக்கில் சில மாற்றங்கள் ஏற்படுமென ஏக்கத்துடன் காத்திருந்திருக்க வேண்டும் என்பதிலும் சந்தேகமில்லை. தேவன் மீதான விசுவாசத்தில் பெலவீனமடைந்து போவதற்குப் பதிலாக, அவர் கர்த்தரை மிகவும் உண்மையாய்ப் பற்றிக்கொண்டிருந்திருப்பார் என்பதிலும், தனது அனுபவங்கள் நன்மைக்காகவே இருக்கும் என்று உணர்ந்துகொண்டிருப்பார் என்பதிலும் நமக்கு ஐயமில்லை. இந்த அனுபவங்கள் நன்மைக்காகவே காணப்பட்டது; ஏனெனில் யோசேப்பு முப்பது வயதாய் இருக்கும்போது, அதாவது முற்காலத்தினுடைய பிரமாணத்தின்படியாக, அவர் புருஷனுக்குரிய வயதை அடைந்திருக்கையில், பார்வோன் தனது சொப்பனங்களுக்கான அர்த்தத்தைத் தெரிந்துகொள்வதற்கென, யோசேப்பை வரவழைத்தார், மற்றுமாக யோசேப்பிற்கு மிக உயர்வான வெகுமதியை அளித்தார்.

## "பார்வோனுடைய சொப்பனத்திற்கு அர்த்தம் சொல்லப்பட்டது"

பார்வோன் தனது இரண்டு சொப்பனங்களையும் விவரித்தார். முதலாம் சொப்பனத்தில் பார்வோன் ஏழு ஆரோக்கியமான மற்றும் பலமுள்ள பசுக்களைக் கண்டார் மற்றும் பிற்பாடு ஏழு அவலட்சணமும், கேவலமுமான பசுக்களையும் கண்டார்; வாழ்நாட்களிலேயே, அவர் கண்ட இந்தப் பசுக்கள் தான் (மிகவும்) அவலட்சணமாய் இருந்தது. இந்தச் சொப்பனத்தில் கேவலமான பசுக்கள், அந்தப் புஷ்டியான பசுக்களைப் பட்சித்துப்போட்டது; புஷ்டியானதைப் பட்சித்தப் பிற்பாடும், அந்தக் கேவலமான பசுக்கள் புஷ்டியாய்க் காணப்படவில்லை. இரண்டாம் சொப்பனத்தில் இராஜா நல்ல செழுமையான ஏழு கதிர்கள் ஒரே தாளிலிருந்து, பூமியில் ஓங்கி வளர்ந்ததைக் கண்டார்; பிற்பாடு சாவியானதும், ஒன்றிற்கும் பயனற்றதுமான ஏழு கதிர்கள் ஒரே தாளிலிருந்து வளர்ந்ததையும் கண்டார். சாவியான கதிர்கள் செழுமையான கதிர்களை விழுங்கிப்போட்டது; செழுமையானதை விழுங்கிப்போட்ட பிற்பாடும் சாவியான கதிர்கள் செழுமையாய்க் காணப்படவில்லை.

வாலிபனான யோசேப்பு உடனடியாகச் சொப்பனங்களுக்கான அர்த்தத்தைத் தெரிவித்தார்; ஆனால் அர்த்தத்தைத் தெரிவிப்பதற்கு முன்னதாக, அர்த்தமானது தன்னிடமிருந்து வராமல், தேவனிடமிருந்து வருகின்றதென மிகத் தெளிவாக யோசேப்பு இராஜாவிடம் தெரிவித்தார். இப்படியாக யோசேப்பு, "உன் வழிகளிளெல்லாம் அவரை நினைத்துக்கொள்" மற்றும் "அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள் செய்வார்" என்ற வேதவாக்கியங்களினுடைய போதனைகளுக்கு எடுத்துக்காட்டானார் (நீதிமொழிகள் 3:6; சங்கீதம் 37:4).

இரண்டு சொப்பனங்களுமே ஒரே காரியத்தைத்தான் குறிக்கின்றதென யோசேப்பு விவரித்தார்; அதாவது இரண்டு சொப்பனங்களுமே எகிப்து தேசத்தில் ஏழு வருடங்கள் பரிபூரணமான விளைவு

உண்டாயிருக்கும் என்பதையும், இந்த வருடங்களைத் தொடர்ந்து ஏழு வருடங்கள் கொண்டதும், செழிப்பான வருடங்களினுடைய விளைவுகள் அனைத்தையும் முழுமையாகத் தீர்த்துப்போடுகின்றதுமான பஞ்சம் வரும் என்பதையும் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது என்று விவரித்தார். இந்தத் தகவலைப் பார்வோன் பயன்படுத்திக்கொள்வதற்குத் தேவன் சித்தம் கொண்டுள்ளார் என்ற யோசனையை யோசேப்பு பார்வோனுக்குத் தெரிவித்தார் மற்றும் பரிபூரணமான ஏழு வருடங்களின், செழுமையான தானிய விளைவுகள் அனைத்தையும் வாங்குவதற்கும், ஏழு வருட பஞ்சகாலத்தின் பயன்பாட்டிற்கென அதைச் சேமித்து வைப்பதற்குமென, இராஜாவுக்கு விசேஷமான ஒரு பிரதிநிதி நியமிக்கப்பட வேண்டும் என்றும் யோசேப்பு பரிந்துரைத்தார்.

பார்வோன் மிகவும் விவேகத்துடன் சம்மதித்தார் மற்றும் தனது ஜனங்களுடைய நலனுக்கடுத்த விஷயங்களுக்காகப் பணிபுரிவதற்குரிய தனது விருப்பத்தையும், தனது பரந்த மனப்பான்மையையும் பார்வோன் வெளிப்படுத்தினவராக, பூரண விளைவின் வருஷங்களுடைய திரளான தானியங்களை வாங்கிடுவதற்கும், காரியங்களின் முழுப்பொறுப்பை எடுத்துக்கொள்வதற்கும் மற்றும் பின்னர் வரும் பஞ்சத்தின் காலங்களில், சேமித்து வைக்கப்பட்டிருந்த தானியங்களைச் செலவு செய்வதைக் கவனித்துக்கொள்வதற்கும் என்று யோசேப்பையே உடனடியாக நியமித்துவிட்டார்.

இப்படியாக யோசேப்பு சிறையிலிருந்து பதினான்கு வருடங்களுக்குரிய ஒப்பந்தத்திற்குள் நுழைந்தார். பொய்யான குற்றச்சாட்டினால் அடைந்திட்ட பாடுகளிலிருந்து, யோசேப்பு திடீரென அந்நாட்களிலுள்ள மாபெரும் சாம்ராஜ்யத்தில், பார்வோனுக்கு அடுத்த ஸ்தானத்திலுள்ள உயர் அதிகாரத்திற்கு அடியெடுத்து வைத்தார். யோசேப்பின் வெற்றியிலும், உயர்த்தப்படுதலிலும், தேவனுடைய கரம் இருக்கவில்லை என்று யாராகிலும் சொல்லக்கூடுமோ? நிச்சயமாய் இல்லை! யோசேப்பினுடைய துன்பமான அனுபவங்களில், தெய்வீகத் தயவு காணப்படவில்லை என்றும் நாம் அனுமானித்துவிடக்கூடாது. மாறாக யோசேப்பிற்கு வந்த துன்பத்தினாலான பாடங்களானது, அவர் பார்வோனின் வாய்க்கருவியாக, இராஜ்யம் எங்கும் அடையப்போகின்ற அடுத்துவரும் அனுபவங்களுக்குரிய ஆயத்தங்களாக மாத்திரமே காணப்பட்டது என்பதில் நமக்கு நிச்சயமே.

யோசேப்பின் அனுபவங்களானது, இயேசுவுக்கும், அவரது பின்னடியார்களாகிய சபைக்கும் நிழலாய்க் காணப்படுகின்றதை நாம் மீண்டுமாக நினைப்பூட்டப்படுகின்றோம். தாழ்மை மற்றும் பொறுமை எனும் பண்புகளானது, அன்பு மற்றும் உண்மை/நேர்மைக்கு நெருங்கின தொடர்புடையவையாக இருக்கின்றது என்று வேதாகமம் நமக்கு உறுதிப்படுத்துகின்றது. இதைப் பரிசுத்தவானாகிய பவுல் பின்வரும் வார்த்தைகளைக் கூறுவதன் மூலம், நமக்கு நினைப்பூட்டுகின்றார், "கர்த்தர் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக்கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார் என்று பிள்ளைகளுக்குச் சொல்லுகிறதுபோல உங்களுக்குச் சொல்லியிருக்கிற புத்திமதியை மறந்தீர்கள். நீங்கள் சிட்சையைச் சகிக்கிறவர்களாயிருந்தால் தேவன் உங்களைப் புத்திரராக எண்ணி நடத்துகிறார்; தகப்பன் சிட்சியாத புத்திரனுண்டோ? எல்லாருக்கும் கிடைக்கும் சிட்சை உங்களுக்குக் கிடையாதிருந்தால் நீங்கள் புத்திரராயிராமல் வேசிப்பிள்ளைகளாயிருப்பீர்களே" (எபிரெயர் 12:6-8).

இப்படியாகவே இயேசுவின் விஷயத்திலும், உண்மையுள்ள அப்போஸ்தலர்கள் அனைவரின் விஷயத்திலும், இந்தச் சுவிசேஷ யுகத்திலுள்ள இயேசுவின் பின்னடியார்கள் அனைவரின் விஷயத்திலும் காணப்படுகின்றது. இப்படியாகவே அர்ப்பணிக்கப்பட்ட சபை அங்கத்தினர்கள் அனைவரின் விஷயத்திலும் காணப்படும். இந்தப் பாத்திரங்களைக் கர்த்தர் இயேசு அன்புகூருகின்றபடியால், இவர்களைப் பரீட்சிப்பதற்கும், சோதிப்பதற்கும், சிட்சிப்பதற்கும் பாத்திரவான்களாகக் கருதுகின்றார். இந்தப் பரீட்சைகளும், சோதனைகளும், சிட்சைகளும், பிதாவானவர் இயேசுவையும், அவரது சகோதரராகிய சபையையும் அழைப்பித்துள்ள கனம், மகிமை, அழியாமைக்குரிய ஸ்தானத்திற்கும், மாபெரும் பொறுப்பிற்கும் தகுதிப்படுத்திடுவதற்கு இவர்களுக்கு அவசியமானதாய்க் காணப்படுகின்றது.

## “துன்பத்தின் முக்கியத்துவம்”

யாக்கோபு தனது குமாரனாகிய யோசேப்பிற்காகக்கொண்டிருந்த விசேஷித்த அன்பானது, பாரபட்சத்தில் அதாவது பலவருண இராஜ அங்கியின் மூலம் வெளிப்பட்டது. தெய்வீக வழிநடத்துதலானது, ஒருவேளை குறுக்கிட்டு, யோசேப்பை அவரது தகப்பனுடைய கட்டுப்பாட்டிலிருந்து முற்றிலுமாக எடுக்கவில்லையெனில், யாக்கோபு அவரது இந்தக் குமாரனைச் சீரழித்துப் போட்டிருந்திருப்பார். அநேக தகப்பன்மார்கள், அதிலும் விசேஷமாக ஐசுவரியமான தகப்பன்மார்கள் இதுபோன்ற தவறுகளைச் செய்திருக்கின்றனர். ஆகவேதான் ஐசுவரியவான்களின் குமாரர்கள் தங்கள் தகப்பன்மார்களுக்கு மதிப்புச் சேர்ப்பவர்களாய் எப்போதும் காணப்படுவதில்லை.

ஆனால் மாபெரும் பரம பிதாவானவர், இப்படிப்பட்டதான தவறுகளைச் செய்வதில்லை. பரீட்சைகள், சிரமங்கள் என்பது, தேவனுடைய ஜனங்களுக்கு, அவர்கள் தேவனோடு கொண்டிருக்கும் உறவிற்கும், அவர்கள் மீதான அவரது அன்புடன் கூடிய பராமரிப்பிற்குமான அடையாளங்களாக இருக்கின்றது என்று தேவனுடைய ஜனங்களுக்கு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்தத் தெய்வச் செயலான பராமரிப்பானது வரையறைக்கு உட்பட்டது என்பது உண்மையே; "கர்த்தர் தம்முடையவர்களை அறிவார்" (2 தீமோத்தேயு 2:19). அவரது விசேஷித்த கையாளுதலானது, அவரது அர்ப்பணிக்கப்பட்டுள்ள ஜனங்களுடன், அதாவது அவருடன் ஓர் உடன்படிக்கைக்குள் பிரவேசித்தவர்களுடன், அதாவது அவரது ஊழியக்காரர்களாகவும், அவரது பிள்ளைகளாகவும் ஆகியுள்ளவர்களுடன் காணப்படுகின்றது. இவர்களுக்கு மாத்திரமே, "அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்” என்ற வாக்குத்தத்தம் உரியதாகக் காணப்படுகின்றது (ரோமர் 8:28).

இந்த விசேஷித்த அழைப்பானது, இந்தச் சுவிசேஷ யுகத்திலுள்ள சபைக்குக் குறிப்பாகப் பொருந்துகின்றதாய் இருப்பினும், இன்னொரு விதத்தில் அழைப்பு என்பது ஆபிரகாம் காலம் முதலான எபிரெயர்களுக்கும் கூடப் பொருந்துகின்றதாய் இருக்கின்றது. தேவனுடன் உடன்படிக்கை உறவில் காணப்படுகின்ற அந்த எபிரெயர்களிலேயே, யோசேப்பு காணப்படுகின்றார். இதுவே ஆபிரகாம் குடும்பத்தார் அல்லாத மற்றக் குடும்பத்து வாலிபர்களோடு தேவன் தொடர்பு கொள்ளாமல், மாறாக யோசேப்புடன் தொடர்பு கொண்டதற்கான காரணமாகும். இஸ்ரயேலர்கள் தேவனுடைய ஜனங்களாக இருந்தபடியால், அவர்கள் அநேக கடுமையான அனுபவங்களுக்குள் சென்றவர்களானார்கள் என்பது கவனிக்கத்தக்கதாகும். அவர்கள் ஒருவேளை தேவனுடனான உடன்படிக்கையின் உறவிற்குள் வரவில்லையெனில், இந்த அனுபவங்கள் அநேகவற்றிலிருந்து அவர்கள் தப்பியிருந்திருப்பார்கள். ஆனால் ஒருவேளை அவர்கள் சோதனைகளுக்கும், சிரமங்களுக்கும் தப்பியிருந்திருப்பார்களானால், அவர்கள் சில சிலாக்கியங்களையும், ஆசீர்வாதங்களையும் அடையாமல் போயிருந்திருப்பார்கள். அவர்களை ஆயத்தப்படுவதற்கென வந்திட்ட துன்பங்களைக்காட்டிலும், தேவன் அருளும் ஆசீர்வாதங்கள் எப்போதும் அதிகமானதாகக் காணப்படுகின்றது.

## “யூத மற்றும் கிறிஸ்தவ தெரிந்துகொள்ளுதல்கள்”

இது யூத ஜனங்களும், பிற்பாடு கிறிஸ்தவர்களும் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களாக, தேவன் தெரிந்துகொண்ட ஜனங்களாக, ஆபிரகாமின் சந்ததியாக, மாம்சீக மற்றும் ஆவிக்குரிய சந்ததியாகக் காணப்படுகின்றனர் என்று வேதாகமம் தெரிவிப்பதை நமக்கு நினைப்பூட்டுகின்றது. இரண்டு பேருக்குமே, மற்ற ஜனங்களுக்கு அருளப்படாத தேவ ஆசீர்வாதங்கள் காணப்படுகின்றன; மற்றும் இருவரின் விஷயத்திலும் சோதனையான அனுபவங்களானது, தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் அழைக்கப்பட்டதான எதிர்க்கால மகிமைகளுக்கு அவர்களைத் தகுதியாக்குகின்றதாய் இருக்கின்றது.

தெரிந்தெடுக்கப்படாதவர்களுக்கும் கூடத் தேவன் மாபெரும் ஆசீர்வாதங்களை வைத்திருக்கின்றார். மேசியாவினுடைய ஆளுகையின் ஆயிர வருடங்களின் போது,பரிசுத்தவான்களாகிய

தெரிந்துகொள்ளப்பட்ட சபையானது, தேவனுடைய மாபெரும் இராஜ்யத்தில் மேசியாவின் உடன் சுதந்தரர்களாக இருந்து, பூமியின் மீதான ஆளுகையை எடுத்துக்கொள்வார்கள். எபிரெயர்கள் மத்தியிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்டவர்களுங்கூட அப்போது, கிறிஸ்தவ சபையுடன் இணைந்து, இன்னொரு வேலை பாகத்தில் பயன்படுத்தப்படுவார்கள்; இவர்கள் இருவரில் சபையானது, பரலோகத் தளத்தில் காணப்படுவார்கள், மற்றவர்களோ பூமிக்குரிய தளத்தில் காணப்படுவார்கள். இந்த இரண்டு இஸ்ரயேலர்கள் வாயிலாக தேவ ஆசீர்வாதங்களானது சகல ஜாதியார்கள், பாஷைக்காரர்கள், கோத்திரத்தார்கள் மீது பொழியப்படும்.

இந்த இரண்டு வகுப்பாருடைய காரியங்களைத் தவிர, வேறு எவருடைய காரியங்களையும் தேவன் விசேஷமாய் மேற்பார்வையிடவில்லை என்றாலும், ஒட்டுமொத்த மனித குடும்பத்தின் மீதும், துன்பத்தினாலான பெரும் படிப்பினைகள், பொதுவான விதத்தில் வருவதற்குத் தேவன் அனுமதித்திருக்கின்றார் என்று நாம் காண்கின்றோம். தெரிந்தெடுக்கப்பட்ட வகுப்பார்களுக்கான விசேஷித்த சோதனைகளும், சிரமங்களும், அவர்களுக்கு விசேஷித்த ஆசீர்வாதங்களை அருளுவதற்கும், தேவனுடைய பிரதிநிதிகளென அவர்களைத் தகுதிப்படுத்திடுவதற்கும் நோக்கம் கொண்டிருந்ததுபோன்று, உலகத்தின் மீது வருகின்றதான பொதுவான உபத்திரவங்களுங்கூட, பாவம் மற்றும் மரணம் தொடர்பான அனுபவங்கள் அனைத்தையும் கொடுப்பதன் மூலமும், பாவத்தினுடைய மோசமான பாவத் தன்மையை அனைவருக்கும் கற்றுக்கொடுப்பதன் மூலமும், அனைத்து ஜனங்களுக்கும் உதவிகரமான பொதுவான படிப்பினைகளை அருளுகின்றதாய் இருக்கின்றது.

மேசியாவின் இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும்போது, சாத்தான் கட்டப்படும்போது, நீதியின் ஆளுகை ஆரம்பமாகும்போது, சாபம் அகற்றப்படும்போது, ஆசீர்வாதங்கள் பொழியப்படும்போது, அப்போது துக்கம், கண்ணீர், அழுகை, மரணம் தொடர்பான படிப்பினைகள் அனைத்தும் விலையேறப்பெற்றதாய்க் காணப்படும். எதிர்காலத்தில் தேவன் அருளும் மாபெரும் ஆசீர்வாதங்களை அவர்கள் தற்காலத்தினுடைய தீமைகளுடனும், துக்கங்களுடனும் ஒப்பிட்டுப்பார்த்து, தேவன் அருளின மாபெரும் ஆசீர்வாதங்களின் மதிப்பை உணர்ந்துகொள்வார்கள். மேலும் இந்தத் துக்கங்கள், கண்ணீர்கள் அனைத்தும், தேவனுடைய பிரமாணங்களை மீறினதன் காரணமாகவும், அவரது கட்டளைகளைப் புறக்கணித்ததன் காரணமாகவும் ஏற்பட்டதென மனுக்குலம் போகப்போக முற்றும், முழுமையாகக் கற்றுக்கொள்கையில், இந்தப் பாடம் ஒருபோதும் மறக்கப்படுவதில்லை என்பதில் நிச்சயமே.

உபத்திரவத்தின் ஏர் எங்கெல்லாம் உழுதிருக்கின்றதோ, அங்கெல்லாம் அது பயிரிடப்படாத நிலத்தை உழுது, தெய்வீகச் சத்தியம் மற்றும் கிருபை எனும் விதை தூவப்படுவதற்கென ஆயத்தப்படுத்தியுள்ளது. மேசியாவின் அனுகூலமான ஆளுகையாகிய அடுத்த யுகமானது, தேவன் பற்றின அறிவு மற்றும் அவரது மகிமையான குணலட்சணம், திட்டம் ஆகியவற்றை உணர்ந்துகொள்ளுதல் எனும் விதைகளை விதைப்பதற்கான காலமாகும். வேதவாக்கியங்கள் தெரிவிப்பதுபோன்று, விளைவுப்பலன்கள் மகிமையானதாய்க் காணப்படும். சத்தியஅறிவு அனைவருக்கும் வழங்கப்படும் நாட்களில், மற்றும் நீதியாய் நடப்பதற்கு உதவி வெளிப்படையாய்க் கொடுக்கப்படும் நாட்களில், ஆசீர்வாதங்கள் வேண்டாம் என்று துணிந்து மறுப்பவர்களும், நீதிக்குப் பதிலாகப் பாவத்தைத் தெரிந்துகொள்பவர்களும் தவிர, மற்றப்படி அனைவருமே இந்த ஆசீர்வாதங்களில் நித்திய காலமும் பங்குகொள்பவர்களாய்க் காணப்படுவார்கள்.

---

[R5214]

# “முகாந்தரமில்லாமல் பகைக்கப்பட்டார்”

## ஆதியாகமம் 37-ஆம் அதிகாரம்

“அன்புக்குப் பொறாமையில்லை.”- 1 கொரிந்தியர் 13:4

எளிமையான பதிவுகளில், அருமையாய்க் காணப்படுகின்றதான யோசேப்பு மற்றும் அவரது சகோதரர்கள் பற்றின கதையானது, மிகவும் சுவாரஸ்யமாகவும், பல்வேறு கோணங்களில் பாடம் கற்பிக்கின்றதாகவும் காணப்படுகின்றது. மற்றப் பிள்ளைகளைக் காட்டிலும் ஒரு பிள்ளைக்கு மிகவும் அதிகமான முன்னுரிமைக்கொடுத்து, இப்படியாகப் பிள்ளைகள் மத்தியில் பொறாமையின் ஆவியை வளர்த்திவிடும் விஷயத்திலுள்ள பெற்றோருடைய ஞானமின்மையைப் பற்றியதாக ஒரு பாடம் காணப்படுகின்றது. யோசேப்பு தனது சொப்பனங்களை, தனது சகோதரர்களிடத்தில் தெரிவித்ததுபோல, நம்முடைய சொப்பனங்களை நாம் இரக்கமற்ற செவிகளை உடையவர்களிடத்தில் சொல்லுவதிலுள்ள ஞானமின்மை தொடர்புடையதான இன்னொரு பாடம் காணப்படுகின்றது. ஒரு சொப்பனத்தில் பதினொரு அரிக்கட்டுகள், தன்னுடைய கட்டிற்கு முன்பு வணங்கி நின்றதாக யோசேப்பு கண்டார். மற்றொரு சொப்பனத்தில் சூரியனும், சந்திரனும், பதினொரு நட்சத்திரங்களும் தன்னை வணங்குவதாக யோசேப்பு கண்டார்.

இந்தச் சொப்பனங்களைக் கண்டதற்காக யோசேப்பு குற்றஞ்சாட்டப்பட முடியாது. அஜீரணத்தின் காரணமாக ஏற்படும் பெரும்பான்மையான சொப்பனங்களைப் போலல்லாமல், யோசேப்பிற்கு இச்சொப்பனங்கள் கர்த்தரிடமிருந்து வந்ததாக இருந்தது. வஞ்சனை இல்லாமல், சொப்பனத்தைத் தனது சகோதரர்களிடம் கூறினதற்காகவும், யோசேப்பு குற்றஞ்சாட்டப்பட முடியாது; ஏனெனில் யோசேப்பு இப்படியாகச் செய்ய வேண்டும் என்பதே கர்த்தருடைய நோக்கமாயிருந்தது. யோசேப்பின் சகோதரருடைய பொறாமையையும் மற்றும் அவர்கள் மனதில் எவ்வாறு பொறாமை வளர்ந்திருக்கும் என்பதையும் கர்த்தர் முன்னமே அறிந்திருந்தார் மற்றும் அதற்கான வாய்ப்பையும் கொடுத்தார்; ஏனெனில் அவர் யோசேப்பிற்கு அடுத்துவரும் அனுபவங்களை ஏற்கெனவே திட்டமிட்டிருந்தார் மற்றும் இது நிறைவேற்றப்படுவதற்கென யோசேப்பின் சகோதரர்களுடைய பொறாமையானது உதவியாக மாத்திரம் அமைந்தது.

மற்றவர்கள் அறிந்துகொள்ள அவசியமாய் இராததும், அறிந்தால் எதிர்ப்பை மாத்திரமே உருவாக்குவதற்கு ஏதுவானதுமான உண்மைகளை அறிவியாமல் இருப்பதிலுள்ள ஞானம் பற்றின பாடத்தை நாம் இங்குக் கற்றுக்கொள்ளலாம். இதே கருத்தையே இயேசுவும், “உங்கள் முத்துக்களைப் பன்றிகள் முன் போடாதேயுங்கள்” என்று கூறி ஆதரித்தார். தெய்வீகத் திட்டம் மற்றும் கிறிஸ்தவ நம்பிக்கைத் தொடர்புடையதான மிகவும் ஆழமான சத்தியங்களை, கர்த்தர் அறிவிப்பதற்குச் சித்தங்கொண்டுள்ளவர்களாகிய சாந்தமுள்ளவர்களைத் தவிர, மற்றவர்களிடம் சொல்லாமல் இருப்பது நலமாக இருக்கும்.

## “மேசியாவிற்கு நிழலான யோசேப்பு”

நாம் மேற்கூறியவைகளோடுகூட, யோசேப்புக் கிறிஸ்துவாகிய மேசியாவிற்கு நிழலாய் (அ) தீர்க்கத்தரிசனமான நிழலாய் இருக்கின்றார் என்று அடையாளங்கண்டுகொள்வது இன்றைய நமது வேத ஆராய்ச்சியினுடைய மிக முக்கியமான அம்சமாக இருக்கின்றது. யோசேப்பு தனது சகோதரர்களிடத்தில் அன்பாய் இருந்தார் மற்றுமாக அவர்களது பொறாமையானது தன்னை மரிக்கப்பண்ணுவதற்குத் திட்டமிட்டு, பின்னர்த் தன்னை எகிப்தில் அடிமைத்தனத்திற்குள் விற்றுப்போட்டபோது, அவர் நலன் பயக்க நெடும் பயணம் மேற்கொண்டவரானார். அவரது சகோதரர்கள் அவரைக் காரணமின்றி பகைத்தார்கள்; அவர் நல்லவராக இருந்தார் என்ற காரணத்திற்காக மாத்திரம் பகைத்தார்கள்; மற்றும் யோசேப்பின் தந்தை அவரை அன்புகூர்ந்ததற்காகவும், யோசேப்பு எதிர்க்காலத்தில் உயர்த்தப்படப்போவதை முன்கூட்டியே தேவன் சொப்பனத்தின் வாயிலாக யோசேப்பிற்குத் தெரிவித்ததற்காகவும் அவரைப் பகைத்தார்கள்.

யோசேப்பின் சகோதரர்கள் பின்வருமாறு சொல்லியிருந்திருக்க வேண்டும் அதாவது, “நமக்கு இவ்வளவு நல்ல ஒரு சகோதரன் காணப்படுவதினால் நாம் களிக்கூருவோமாக. இவர் மிகவும் உயர்வாய்

உயர்த்தப்படுவது தேவனுடைய சித்தமாக இருக்குமானால், நாம் சந்தோஷம் கொள்வோமாக. நம்முடைய தாத்தாக்களாகிய ஆபிரகாமுக்கும், ஈசாக்குக்கும் மற்றும் நம்முடைய தந்தையாகிய யாக்கோபுக்கும் பண்ணப்பட்டதான தேவனுடைய வாக்குத்தத்தமானது, இப்படியாக நிறைவேறுவதாக. தேவன் நலமானதெனக் காண்கிற எவ்வழியிலும், அவரது ஆசீர்வாதங்கள் கடந்து வருவதாக. நமது சகோதரன் தேவனுக்கும், நம்முடைய தந்தையாகிய யாக்கோபிற்கும் பிரியமாய்க் காணப்படுவதினால் நாம் சந்தோஷங்கொள்வோம். யோசேப்பின் குணலட்சணத்தை நாமும் அடைந்திடுவதற்கு அதிகமதிகமாய் நாடிடுவோமாக." ஆனால் அவர்களோ அவரை முதலாவதாகக் கொன்றுபோடுவதற்கும், பிற்பாடு வந்த வெறும் மாற்று யோசனையின் பிரகாரமாக அவரை அடிமையாக விற்றுப்போடுவதற்கும் கொடூரமாய்ச் செயல்படுமளவுக்குப் பொறாமையுடன் காணப்பட்டார்கள்.

## "முகாந்தரமில்லாமல் அவரைப் பகைத்தார்கள்"

ஆனால் தேவனுடைய வழிநடத்துதலானது யோசேப்போடுகூடக் காணப்பட்டு, அவர் அடிமையாக இருந்தபோதும் அவரை ஆசீர்வதித்தது மற்றும் அதிகமான உபத்திரவங்கள் வாயிலாக அவரை இறுதியில் எகிப்தின் சிங்காசனத்தில், பார்வோனுக்கடுத்த வல்லமையிலும், செல்வாக்கிலும் கொண்டுவந்தது. தேசத்தில் காணப்பட்ட பஞ்சமானது, கோதுமை வாங்கும்படிக்கு யோசேப்பின் சகோதரர்களை எகிப்துக்குக்கொண்டு வந்தது. இப்படியாக யோசேப்பின் சகோதரர்கள் அவர் முன் வணங்குவார்கள் என்பதைச் சுட்டிக்காட்டும் வண்ணமான பதினொரு அரிக்கட்டுகள், யோசேப்பின் அரிக்கட்டை வணங்கினதான சொப்பனம் நிறைவேறினது.

பிற்பாடு யோசேப்பின் தந்தையும், முழுக்குடும்பமும், கோசேனில் குடியேறுவதற்கென எகிப்துக்கு வந்தபோது, இவர்கள் அனைவரும், யோசேப்பிற்கு, எகிப்து அரசாங்கத்தினுடைய பிரதிநிதியென மரியாதைச் செலுத்தினார்கள்; இப்படியாக இரண்டாம் சொப்பனமும் நிறைவேறினது. ஆனால் இந்த அனுபவங்கள் அனைத்துமே ஒரு காலக்கட்டத்தில் புரியாத புதிராகவே இருந்தது. யோசேப்பு சிங்காசனத்திற்கு உயர்த்தப்படுகின்ற நேரம் வருவது வரையிலும், இவர்கள் அனைவரும், யோசேப்பின் குடும்பத்திலுள்ள மற்ற அனைவரையும் காட்டிலும், யோசேப்பைக் கர்த்தர் குறைவாகவே நேசித்தார் என்பதாகவே பார்த்தார்கள். பிற்பாடு அனைத்துமே மாறிப்போனது.

## "இவைகள் ஞான அர்த்தமுள்ளவைகள் / உருவகம்"

யோசேப்பு தொடர்பான இந்தச் சம்பவம் அனைத்திற்குமான ஞான அர்த்தம், அவரும் முகாந்தரமில்லாமல் பகைக்கப்பட்டார் என்பதாகும். "நிமித்தமில்லாமல் என்னைப் பகைக்கிறவர்கள் என் தலைமயிரிலும் அதிகமாயிருக்கிறார்கள்" என்று சங்கீதம் 69:4-ஆம் வசனத்தில் வாசிக்கின்றோம். இதே வார்த்தைகளை இயேசுவும் மேற்கோளிட்டு, அதைத் தமக்கே பொருத்தி, "முகாந்தரமில்லாமல் என்னைப் பகைத்தார்கள்" என்று கூறினார் (யோவான் 15:25). இயேசுவின் சகோதரர்களாகிய யூதர்களே, அவரைச் சிலுவையில் அறைந்தனர். இயேசு கொல்லப்படுவதற்கான எந்தக் (குற்றமும்) காரணமும் அவரிடத்தில் காணப்படவில்லை.

பொறாமையின் காரணமாகவே அவர் கையளிக்கப்பட்டு, சிலுவையில் அறையப்பட்டார் என்று நாம் உணர்ந்துகொள்கின்றோம், ஏனெனில் அவரது கிரியைகள் நல்லவையாகவும், அவர்களது கிரியைகள் பொல்லாதவையாகவும் காணப்பட்டது; ஏனெனில் அவர்களைக் காட்டிலும் இயேசு தேவனுடைய பாதையை மிகவும் பூரணமாய்ப் போதித்தவராய்க் காணப்பட்டார்; ஏனெனில் வல்லமையிலும், மகா மகிமையிலும் மேகங்கள்மேல் வருகின்றதான மேசியாவெனத் தம்மை அவர்களும், மற்ற அனைவரும் அடையாளங்கண்டுகொண்டு, தமக்கு முன்பாக முட்டுகள் முடக்குவதற்கான காலம் வரும் என்று இயேசு கூறினார்.

யோசேப்பின் விஷயத்தில் எப்படி அவமானமும், விபரீதங்களும்/துன்பங்களும் மற்றும் நம்பிக்கைத் துரோகங்களும் எகிப்தினுடைய சிங்காசனத்திற்கு நேரான மகிமைக்கும் மற்றும் கனத்திற்குமான வழியினை ஆயத்தம் பண்ணினதோ, அப்படியாகவே இயேசுவின் விஷயத்தில் காணப்பட்டது.

இயேசுவுக்கு நேரிட்டதான சோதனையான அனுபவங்களானது, அவரைத் தேவனுக்கு உண்மையுள்ளவரென நிரூபித்துக் காண்பித்தது மற்றும் அவர் தேவனுடைய வலது பாரிசத்தினிடத்திற்கு உயர்த்தப்படுவதற்கு வழிநடத்தினதாய் இருந்தது. இயேசுவைக் குறித்துக் கூறுகையில், மேற்கூறியவற்றை உறுதிப்படுத்தும் வண்ணமாக, "அவர் தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின்பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார்"; மீண்டுமாக, "நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையை அறிந்திருக்கிறீர்களே; அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு, உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே" என்று பரிசுத்தவானாகிய பவுல் குறிப்பிட்டுள்ளார் (எபிரெயர் 12:2; 2 கொரிந்தியர் 8:9). அதாவது யோசேப்பு கடந்துசென்ற தாழ்வுபடுத்துவதான அனுபவங்களானது, அவர் பார்வோனால் உதவப்படுவதற்கும், கனப்படுத்தப்படுவதற்குமான வழியினை ஆயத்தப்படுத்தினதுபோலவே, இயேசுவின் விஷயத்திலும் காணப்பட்டது. மீண்டுமாக இயேசுவைக் குறித்து நாம் வாசிப்பது என்னவெனில், "தாம் பூரணரானபின்பு, தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணரானார்" (எபிரெயர் 5:9).

## "அவருடனேகூடப் பாடுபட்டால்"

தேவனுடைய மாபெரும் திட்டத்தில், இயேசு மாத்திரமே உலகத்தின் மேசியாவெனச் சிங்காசனத்தினிடத்திற்கு உயர்த்தப்படாமல், அவரோடுகூட, ஒரு சகோதரர் கூட்டத்தாரும் அதே மகிமையில், கனத்தில் மற்றும் அழியாமையில் பங்கடைபவர்களாகவும் இருக்கப்போகிறார்கள் என்று வேதவாக்கியங்கள் நமக்கு நிச்சயமளிக்கின்றன. மேலும் தேவனுடைய மாபெரும் திட்டத்தில் இந்தச் சகோதரர்களும், அவர்களது மூத்த சகோதரனாகிய இயேசு கடந்துசென்ற அதே அனுபவங்கள் வாயிலாகக் கடந்துசெல்ல வேண்டியவர்களாய் இருக்கின்றனர். ஆகவே இவர்களது அனுபவங்களும் கூட, யோசேப்பின் அனுபவங்களில் சித்தரிக்கப்பட்டுள்ளது. இவர்கள் தங்கள் மூத்த சகோதரனுக்குச் சமமானவர்களல்ல. இயேசு இவர்களது தலை என்றும், இவர்களது இரட்சிப்பின் அதிபதி என்றும் குறிப்பிடப்படுகின்றார். ஆகவேதான், தேவன் "அநேகம் பிள்ளைகளை மகிமையில் கொண்டு வந்து சேர்ப்பதற்கென, அவர்களுடைய இரட்சிப்பின் அதிபதியை உபத்திரவங்களினாலே பூரணப்படுத்துகிறது அவருக்கேற்றதாயிருந்தது" என்று நாம் மீண்டுமாக வாசிக்கின்றோம் (எபிரெயர் 2:10).

இந்த மாபெரும் தளபதியின் கீழ் ஏற்றுக்கொள்ளப்பட்ட இந்தப் பிள்ளைகள் கூட்டத்தார் அனைவரும், அவரைப்போன்று உபத்திரவங்களினாலே பூரணப்படுத்தப்பட வேண்டும்.

சபைக்கான இந்தச் சோதனையான அனுபவங்களானது, கடந்த 19 நூற்றாண்டுகளிலும் காணப்பட்டதல்லவா? "அவர் இருக்கிற பிரகாரமாக நாமும் இவ்வுலகத்தில் இருக்கிறோம்" என்றும், மீண்டுமாக "உலகம் அவரை அறியாதபடியினாலே நம்மையும் அறியவில்லை" என்றும் அப்போஸ்தலனாகிய யோவான் கூறியுள்ளார் (1 யோவான் 3:1; 4:17). தங்கள் சகோதரனாகிய யோசேப்பு பஞ்சகாலத்தில் தங்களுக்கு இரட்சகராகவும், எகிப்தியர்களுக்கு இரட்சகராகவும் இருக்கப்போகின்றார் என்ற உண்மைக்கு யோசேப்பின் சகோதரர்கள் குருடர்களாய்க் காணப்பட்டதுபோன்று, மேசியாவின் மூலமாகவே ஒருவரால் நித்திய ஜீவனை அடைய முடியும் எனும் உண்மையை உணர்ந்துகொள்ளுவதற்கு உலகம் தவறிவிடுகின்றது.

தாம் முகாந்தரமில்லாமல் பகைக்கப்பட்டார் என்று இயேசு குறிப்பிட்டபோது, தம்முடைய தெரிந்துகொள்ளப்பட்ட பின்னடியார்கள் அனைவரும் கூடத் தாங்கள் இப்படி அநியாயமாய்ப் பகைக்கப்படுவார்கள் என்பதை எதிர்பார்க்கலாம் என்று முன்னெச்சரிக்கைச் செய்கின்றார். "உலகம் உங்களைப் பகைத்தால், அது உங்களைப் பகைக்கிறதற்குமுன்னே என்னைப் பகைத்ததென்று அறியுங்கள். நீங்கள் உலகத்தாராயிருந்தால், உலகம் தன்னுடையதைச் சிநேகித்திருக்கும்; நீங்கள் உலகத்தாராயிராதபடியினாலும், நான் உங்களை உலகத்திலிருந்து தெரிந்து கொண்டபடியினாலும், உலகம் உங்களைப் பகைக்கிறது. ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்லவென்று நான் உங்களுக்குச் சொன்ன வார்த்தையை நினைத்துக்கொள்ளுங்கள். அவர்கள் என்னைத்

துன்பப்படுத்தினதுண்டானால், உங்களையும் துன்பப்படுத்துவார்கள்; அவர்கள் என் வசனத்தைக் கைக்கொண்டதுண்டானால், உங்கள் வசனத்தையும் கைக்கொள்ளுவார்கள். அவர்கள் என்னை அனுப்பினவரை அறியாதபடியினால் என் நாமத்தினிமித்தமே இவைகளையெல்லாம் உங்களுக்குச் செய்வார்கள். முகாந்தரமில்லாமல் என்னைப் பகைத்தார்கள் என்று அவர்களுடைய வேதத்தில் எழுதியிருக்கிற வாக்கியம் நிறைவேறும்படிக்கு இப்படியாயிற்று" (யோவான் 15:18-25).

நமது கர்த்தர் மேற்கோளிட்ட சங்கீதங்களிலுள்ள வசனங்களை நாம் இங்கு முன்வைக்கின்றோம், "நிமித்தமில்லாமல் என்னைப் பகைக்கிறவர்கள் என் தலைமயிரிலும் அதிகமாயிருக்கிறார்கள்; சேனைகளின் கர்த்தராகிய ஆண்டவரே, உமக்காகக் காத்திருக்கிறவர்கள் என்னிமித்தம் வெட்கப்பட்டுப்போகாதிருப்பார்களாக; இஸ்ரயேலின் தேவனே, உம்மைத் தேடுகிறவர்கள் என்னிமித்தம் நாணமடையாதிருப்பார்களாக. உமது நிமித்தம் நிந்தையைச் சகித்தேன்; இலச்சை என் முகத்தை மூடிற்று. என் சகோதரருக்கு வேற்று மனுஷனும், என் தாயின் பிள்ளைகளுக்கு அந்நியனுமானேன். உம்முடைய வீட்டைக்குறித்து உண்டான பக்திவைராக்கியம் என்னைப் பட்சித்தது; உம்மை நிந்திக்கிறவர்களுடைய நிந்தனைகள் என்மேல் விழுந்தது. நிந்தை என் இருதயத்தைப் பிளந்தது; நான் மிகவும் வேதனைப்படுகிறேன்; எனக்காக பரிதபிக்கிறவனுண்டோ என்று காத்திருந்தேன், ஒருவனும் இல்லை; தேற்றுகிறவர்களுக்குக் காத்திருந்தேன், ஒருவனையும் காணேன். என் ஆகாரத்தில் கசப்புக் கலந்து கொடுத்தார்கள், என் தாகத்துக்குக் காடியைக் குடிக்கக்கொடுத்தார்கள்" (சங்கீதம் 69:4-9, 20, 21).

## "இவ்வுண்மைகளில் அடங்கியுள்ள ஞானம்"

நாம் இந்த உண்மைகளைப் பார்த்துள்ளோம் அதாவது இயேசுவும், அவரது பின்னடியார்கள் அனைவரும் தெய்வீக நோக்கத்தின்படி அவமானமும், அவமதிப்பும் அனுபவித்திட்டார்கள். இயேசு மற்றும் ஆதி திருச்சபையினருடைய விஷயத்தில், துன்புறுத்தல்களானது அவர்களது மாம்சத்தின் பிரகாரமான சகோதரர்களாகிய யூதர்களிடமிருந்து வந்தது என்று நாம் அறிந்துகொள்கின்றோம். அதுமுதல் துவங்கி, சுவிசேஷ யுகம் முழுவதிலும், சபைக்கான துன்புறுத்தல்களானது, இவர்களது சகோதரரும், இயேசுவின் சகோதரருமான விசுவாச வீட்டாரிடமிருந்து வந்துள்ளது. இந்தச் சகோதரர்கள் யூதர்களாய் இராமல், கிறிஸ்தவர்களாய் இருக்கின்றனர். இயேசுவின் நாட்களில் காணப்பட்ட யூத மதவாதிகள், மிகவும் நீதியாய்க் காணப்பட்ட தங்கள் சகோதரர்களைத் துன்புறுத்தியதுபோல, இப்பொழுது பெயரளவிலான கிறிஸ்தவர்களே, கர்த்தருடைய உண்மையுள்ள பின்னடியார்களைத் துன்புறுத்தும் பிரதான நபர்களாய் இருக்கின்றனர்.

இந்தத் துன்புறுத்துதலானது, கிட்டத்தட்ட அனைத்துச் சபை பிரிவுகளிலுமுள்ள உண்மையுள்ள ஆத்துமாக்கள் மீது கடந்துவந்துள்ளது. இந்தத் துன்புறுத்தல்களானது, கிட்டத்தட்ட அனைத்து சபை பிரிவுகளிலுமுள்ள உண்மையற்ற ஆத்துமாக்களிடமிருந்து வந்துள்ளது என்று கவலையுடன் கூறுகின்றோம். ரோமன் கத்தோலிக்கர்கள், மெத்தடிஸ்டியர்கள், பேப்டிசியர்கள், பிரெஸ்பைட்டீரியர்கள், எப்பிஸ்கோப்பியர்கள், கவனன்டியர்கள் (Roman catholics, Methodists, Baptists, Presbyterians, Episcopalians, Covenanters) அனைவரும் குருடாக்கப்பட்ட சகோதரர்களிடமிருந்து துன்புறுத்தல்களை அனுபவித்துள்ளனர் மற்றும் இவர்கள் மத்தியிலான குருடானவர்களே இவர்களைத் துன்புறுத்தினர். கிட்டத்தட்ட அனைத்துத் தருணங்களிலும், தேவனுடைய மகிமைக்காகவே துன்புறுத்தல்கள் செய்யப்பட்டதாக அறிக்கைப் பண்ணப்பட்டது. இதைக் கர்த்தர் தீர்க்கத்தரிசி மூலம் பின்வருமாறு வெளிப்படுத்தியுள்ளார் அதாவது, "கர்த்தருடைய வசனத்துக்கு நடுங்குகிறவர்களே, அவருடைய வார்த்தையைக் கேளுங்கள்; என் நாமத்தினிமித்தம் உங்களைப் பகைத்து, உங்களை அப்புறப்படுத்துகிற உங்கள் சகோதரர், கர்த்தர் மகிமைப்படுவாராக என்கிறார்களே; அவர் உங்களுக்குச் சந்தோஷம் உண்டாகும்படி காணப்படுவார்; அவர்களோ வெட்கப்படுவார்கள்" (ஏசாயா 66:5).

பொதுவான உலகம் மற்றும் யூதர்கள் உட்பட, இயேசுவை மரணத்துக்கு ஏதுவாய்த் துன்புறுத்திய விஷயத்தில் மாபெரும் தவறு செய்யப்பட்டுள்ளதாக ஏற்கெனவே உணர்ந்துள்ளனர். இதைப்போலவே, இயேசுவின் உண்மையுள்ள பின்னடியார்களுக்கு எதிராகவும் செய்யப்பட்ட இதுபோன்றதான தவறுகள்

குறித்தும் கொஞ்சம் ஏற்கெனவே உணர்ந்துகொள்ளப்பட்டுள்ளது. எனினும் அதே பொறாமையின் காரணமாக வந்த அதே குருட்டுத்தனமானது, நம்முடைய நாட்களிலுங்கூடத் துன்புறுத்தல்களுக்கு நேராக வழிநடத்தவே செய்துகொண்டிருக்கின்றது.

தேவனைக் குறித்தோ (அ) வேதாகமம் குறித்தோ தங்களுக்குத் தெளிவாய் அதிகம் தெரியாது என்று பெரும்பான்மையானவர்கள் ஒத்துக்கொள்கின்றனர். இவர்கள் வெளிச்சத்திற்காக ஜெபம் ஏறெடுத்து, "சூழ்ந்திருக்கும் அரையிருட்டான நிலை மத்தியில், தயவாய் ஒளியை அனுமதித்திடும்" என்று பாடிக்கொண்டிருக்கின்றனர். ஆனால் ஏதேனும் ஒளி தோன்றினால், புதிய நாளின் விடியலுக்கு நேராக வழிநடத்தத்தக்கதாகவும், தேவனுடைய கிருபையின் ஐசுவரியங்களையும் அவரது இரக்கத்தின் நீளங்களையும், அகலங்களையும் தெளிவாய்ச் சுட்டிக்காட்டத்தக்கதாகவும் ஏதேனும் அன்பின் சத்தம் கேட்கின்றதானால், இவர்கள் வெளிச்சம் வேண்டும் என்பதான இவர்களது பாடலை உடனடியாக நிறுத்திவிடுகின்றனர் மற்றும் ஏளனம், அவதூறாகிய இவர்களது கற்களை வேகமாக இவர்கள் சுழற்றி எறிகின்றனர். ஏன்? தற்செயலாக எந்த மாற்றமும் நடந்துவிடக்கூடாது என்பதற்காக ; இன்னும் மேலான வெளிச்சத்தை எவரும் அடைந்துவிடக்கூடாது என்பதற்காக; தெய்வீக வாக்குத்தத்தம் நிறைவேறி, புதிய விடியல் வந்துவிடக்கூடாது என்பதற்காக ஆகும்.

ஆனால் வரலாற்றின் இவ்வுண்மைகளில் அடங்கியுள்ள ஞானம் என்ன? கிறிஸ்து பாடுபட வேண்டும் என்றும், அவருடைய அடிச்சுவட்டில் நடப்பவர்கள் அனைவரும், அவரோடுகூடப் பாடுபட வேண்டும் என்றும், அவருடைய அனுபவங்களாகிய அவமானம், நிந்தனை மற்றும் பழிகளில் பங்குகொள்ள வேண்டும் என்றும் தேவன் ஏன் அனுமதித்திருக்கின்றார், ஆம் நியமித்திருக்கின்றார்? இயேசுவின் விஷயத்தில் பிதா இந்தச் சோதனையான அனுபவங்களை, தமது குமாரனுடைய அன்பு மற்றும் நேர்மையைப் பரீட்சிப்பதற்கும் மற்றும் தூதர்களுக்கும், மனிதர்களுக்கும் குமாரனுடைய கீழ்ப்படிதலை நிரூபிப்பதற்கும் என்று பயன்படுத்தினார். குமாரனுக்கு மிகவும் பெரிதான மகிமை மற்றும் கனத்தைக் கொடுப்பதற்குப் பிதா நோக்கம் கொண்டிருந்தபடியால், குமாரன் லோகாசாக இருந்தபோதும், பிற்பாடு இயேசுவாக இருந்தபோதும், பாத்திரமானவராகக் காணப்படுகின்றார் என்று தாம் கண்டதை அனைவரும் காண வேண்டும் என்ற சித்தங்கொண்டவராய் இருந்தார்.

அடையாள காட்சியில் பரம சேனையானது, "அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் வல்லமையையும், ஐசுவரியத்தையும், ஞானத்தையும், பெலத்தையும், கனத்தையும், மகிமையையும், ஸ்தோத்திரத்தையும் பெற்றுக்கொள்ளப் பாத்திரராயிருக்கிறார்" என்று கூறுவதன் மூலம், இயேசு மரணம்வரை உண்மையாய்க் காணப்பட்டதின் காரணமாக, அவர் உயர்வாய் உயர்த்தப்படுவதற்குப் பாத்திரமானவராய் இருக்கின்றார் என்பதை அங்கீகரிப்பதாகக் காண்பிக்கப்பட்டுள்ளது. இயேசுவினுடைய, லோகாசினுடைய பாத்திரத் தன்மையானது நிரூபிக்கப்படுவது அவசியமானால், விழுந்துபோன சந்ததியினின்று சேர்க்கப்படுகின்ற, தெரிந்துகொள்ளப்பட்ட சபையானது, தேவனுக்கு உண்மையாய், கடைசி பரியந்தமும், அதாவது மரணபரியந்தமும் காணப்படுவதை நிரூபிப்பது எவ்வளவுக்கதிகமாய் அவசியமானதாக இருக்கும். எனினும் இருவருக்கும் இடையே வித்தியாசமும் உள்ளது.

ஆண்டவருடைய விஷயத்தில், அவர் பரலோக மகிமையைத் துறந்து வருவதற்கு முன்னதாகப் பூரணமானவராகக் காணப்பட்டார் என்பதையும், மனிதனாகிய கிறிஸ்துவான போதும் பூரணமானவராக, அதாவது "பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவரும்" ஆவார் என்பதையும் நிரூபிப்பதாகக் காணப்பட்டது. "அவரிடத்தில் பாவம் இல்லாததிருந்தது." அவரது பின்னடியார்களின் விஷயத்தில், மாம்சத்தினுடைய பூரணமின்மை இன்னமும் காணப்படுகின்றது; ஆனால் அவர்கள் அவர்களது மாம்சத்தினுடைய பெலவீனத்தின் அடிப்படையில், அதாவது சுதந்தரித்துக்கொண்டிருப்பவைகளின் அடிப்படையில் நியாயந்தீர்க்கப்படாமல், மாறாக அவர்களது இருதயத்தின் அன்பு மற்றும் பக்திவைராக்கியத்தின் அடிப்படையில் நியாயந்தீர்க்கப்படுகின்றார்கள். இந்த அன்புடன்கூடிய பக்திவைராக்கியமானது, அவர்கள் அவர்களது தலைவரும், இரட்சகருமானவருடைய அடிச்சுவட்டில் உண்மையாய் நடப்பதற்குப் பிரயாசம் எடுப்பதிலும், அவர்களால்

முடிந்தமட்டும் அவர்களது மாம்சத்தினுடைய பெலவீனங்களை ஜெயங்கொள்வதிலும் மற்றும் "அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிப்பதிலும்" வெளிப்படுகின்றது.

ஆமென்!

---

குறித்தும் கொஞ்சம் ஏற்கெனவே உணர்ந்துகொள்ளப்பட்டுள்ளது. எனினும் அதே பொறாமையின் காரணமாக வந்த அதே குருட்டுத்தனமானது, நம்முடைய நாட்களிலுங்கூடத் துன்புறுத்தல்களுக்கு நேராக வழிநடத்தவே செய்துகொண்டிருக்கின்றது.

தேவனைக் குறித்தோ (அ) வேதாகமம் குறித்தோ தங்களுக்குத் தெளிவாய் அதிகம் தெரியாது என்று பெரும்பான்மையானவர்கள் ஒத்துக்கொள்கின்றனர். இவர்கள் வெளிச்சத்திற்காக ஜெபம் ஏறெடுத்து, "சூழ்ந்திருக்கும் அரையிருட்டான நிலை மத்தியில், தயவாய் ஒளியை அனுமதித்திடும்" என்று பாடிக்கொண்டிருக்கின்றனர். ஆனால் ஏதேனும் ஒளி தோன்றினால், புதிய நாளின் விடியலுக்கு நேராக வழிநடத்தத்தக்கதாகவும், தேவனுடைய கிருபையின் ஐசுவரியங்களையும் அவரது இரக்கத்தின் நீளங்களையும், அகலங்களையும் தெளிவாய்ச் சுட்டிக்காட்டத்தக்கதாகவும் ஏதேனும் அன்பின் சத்தம் கேட்கின்றதானால், இவர்கள் வெளிச்சம் வேண்டும் என்பதான இவர்களது பாடலை உடனடியாக நிறுத்திவிடுகின்றனர் மற்றும் ஏளனம், அவதூறாகிய இவர்களது கற்களை வேகமாக இவர்கள் சுழற்றி எறிகின்றனர். ஏன்? தற்செயலாக எந்த மாற்றமும் நடந்துவிடக்கூடாது என்பதற்காக ; இன்னும் மேலான வெளிச்சத்தை எவரும் அடைந்துவிடக்கூடாது என்பதற்காக; தெய்வீக வாக்குத்தத்தம் நிறைவேறி, புதிய விடியல் வந்துவிடக்கூடாது என்பதற்காக ஆகும்.

ஆனால் வரலாற்றின் இவ்வுண்மைகளில் அடங்கியுள்ள ஞானம் என்ன? கிறிஸ்து பாடுபட வேண்டும் என்றும், அவருடைய அடிச்சுவட்டில் நடப்பவர்கள் அனைவரும், அவரோடுகூடப் பாடுபட வேண்டும் என்றும், அவருடைய அனுபவங்களாகிய அவமானம், நிந்தனை மற்றும் பழிகளில் பங்குகொள்ள வேண்டும் என்றும் தேவன் ஏன் அனுமதித்திருக்கின்றார், ஆம் நியமித்திருக்கின்றார்? இயேசுவின் விஷயத்தில் பிதா இந்தச் சோதனையான அனுபவங்களை, தமது குமாரனுடைய அன்பு மற்றும் நேர்மையைப் பரீட்சிப்பதற்கும் மற்றும் தூதர்களுக்கும், மனிதர்களுக்கும் குமாரனுடைய கீழ்ப்படிதலை நிரூபிப்பதற்கும் என்று பயன்படுத்தினார். குமாரனுக்கு மிகவும் பெரிதான மகிமை மற்றும் கனத்தைக் கொடுப்பதற்குப் பிதா நோக்கம் கொண்டிருந்தபடியால், குமாரன் லோகாசாக இருந்தபோதும், பிற்பாடு இயேசுவாக இருந்தபோதும், பாத்திரமானவராகக் காணப்படுகின்றார் என்று தாம் கண்டதை அனைவரும் காண வேண்டும் என்ற சித்தங்கொண்டவராய் இருந்தார்.

அடையாள காட்சியில் பரம சேனையானது, "அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் வல்லமையையும், ஐசுவரியத்தையும், ஞானத்தையும், பெலத்தையும், கனத்தையும், மகிமையையும், ஸ்தோத்திரத்தையும் பெற்றுக்கொள்ளப் பாத்திரராயிருக்கிறார்" என்று கூறுவதன் மூலம், இயேசு மரணம்வரை உண்மையாய்க் காணப்பட்டதின் காரணமாக, அவர் உயர்வாய் உயர்த்தப்படுவதற்குப் பாத்திரமானவராய் இருக்கின்றார் என்பதை அங்கீகரிப்பதாகக் காண்பிக்கப்பட்டுள்ளது. இயேசுவினுடைய, லோகாசினுடைய பாத்திரத் தன்மையானது நிரூபிக்கப்படுவது அவசியமானால், விழுந்துபோன சந்ததியினின்று சேர்க்கப்படுகின்ற, தெரிந்துகொள்ளப்பட்ட சபையானது, தேவனுக்கு உண்மையாய், கடைசி பரியந்தமும், அதாவது மரணபரியந்தமும் காணப்படுவதை நிரூபிப்பது எவ்வளவுக்கதிகமாய் அவசியமானதாக இருக்கும். எனினும் இருவருக்கும் இடையே வித்தியாசமும் உள்ளது.

ஆண்டவருடைய விஷயத்தில், அவர் பரலோக மகிமையைத் துறந்து வருவதற்கு முன்னதாகப் பூரணமானவராகக் காணப்பட்டார் என்பதையும், மனிதனாகிய கிறிஸ்துவான போதும் பூரணமானவராக, அதாவது "பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவரும்" ஆவார் என்பதையும் நிரூபிப்பதாகக் காணப்பட்டது. "அவரிடத்தில் பாவம் இல்லாததிருந்தது." அவரது பின்னடியார்களின் விஷயத்தில், மாம்சத்தினுடைய பூரணமின்மை இன்னமும் காணப்படுகின்றது; ஆனால் அவர்கள் அவர்களது மாம்சத்தினுடைய பெலவீனத்தின் அடிப்படையில், அதாவது சுதந்தரித்துக்கொண்டிருப்பவைகளின் அடிப்படையில் நியாயந்தீர்க்கப்படாமல், மாறாக அவர்களது இருதயத்தின் அன்பு மற்றும் பக்திவைராக்கியத்தின் அடிப்படையில் நியாயந்தீர்க்கப்படுகின்றார்கள். இந்த அன்புடன்கூடிய பக்திவைராக்கியமானது, அவர்கள் அவர்களது தலைவரும், இரட்சகருமானவருடைய அடிச்சுவட்டில் உண்மையாய் நடப்பதற்குப் பிரயாசம் எடுப்பதிலும், அவர்களால்


முடிந்தமட்டும் அவர்களது மாம்சத்தினுடைய பெலவீனங்களை ஜெயங்கொள்வதிலும் மற்றும் "அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிப்பதிலும்" வெளிப்படுகின்றது.

ஆமென்!

---

# பாகம் 2

# யோசேப்பு எகிப்தின் சிங்காசனத்தில்



[R1640]

# "யோசேப்பு அதிகாரியாக எகிப்தில்"

## ஆதியாகமம் 41:38-48

"என்னைக் கனம் பண்ணுகிறவர்களை நான் கனம்பண்ணுவேன்." ‐ 1 சாமுயேல் 2:30

எகிப்தில் யோசேப்பு தனது புதியதும், சோதனை நிரம்பியதுமான சூழ்நிலைகளில் நல் முயற்சிகள் எடுத்துக்கொண்டிருப்பதாகக் காண்கிறோம். அனைத்திலும் நீதியானவைகள் எவை என்று பார்ப்பதற்கும், நீதியின்படி கிரியைப் புரிவதற்கும் முடிவெடுத்திருந்த யோசேப்பு, தேவனில் விசுவாசம் கொண்டு, தனது அனைத்துப் பொறுப்புகளிலும், அவைகள் பிடித்தமான/இன்பமான (அ) பிடித்தமில்லாத/இன்பமில்லாத பொறுப்புகளாக இருப்பினும், அவைகளில் மகிழ்ச்சிக் கொண்டவராகவும், உண்மையுள்ளவராகவும் காணப்பட்டார். இப்படியாக அவர் நடந்திட்டபோது, அவர் அறிவு நுட்பத்தின்படி இப்படிச் செய்யாமல், மாறாகக் கொள்கையின் அடிப்படையிலேயே செய்தார், ஏனெனில் அவர் நீதியை விரும்பினவராகவும், நீதியுள்ள தேவனுடைய அங்கீகரிப்பை விரும்பினவராகவும் காணப்பட்டார்.

அவரது உண்மைத்தன்மையானது, வெகு சீக்கிரத்தில் அவரது எஜமானுடைய நம்பிக்கையை வென்று தந்தது; "கர்த்தர் அவனோடே இருக்கிறார் என்றும், அவன் செய்கிற யாவையும் கர்த்தர் வாய்க்கப்பண்ணுகிறார் என்றும், அவன் எஜமான் கண்டு; யோசேப்பினிடத்தில் தயவுவைத்து, அவனைத் தனக்கு ஊழியக்காரனும், தன் வீட்டுக்கு விசாரணைக்காரனுமாக்கி, தனக்கு உண்டான யாவற்றையும் அவன் கையில் ஒப்புவித்தான்" (ஆதியாகமம் 39:3, 4). இப்படியாக யோசேப்பு பத்து வருடங்களாக உண்மையுடன் ஊழியஞ்செய்து வந்த பிற்பாடு, அவர் தவறாய்க் குற்றஞ்சாட்டப்பட்டு, சிறையில் போடப்பட்டார்; "அவன் கால்களை விலங்குபோட்டு ஒடுக்கினார்கள்; அவன் பிராணன் இரும்பில் அடைபட்டிருந்தது." (சங்கீதம் 105: 17, 18); தெளிந்த மனசாட்சியுடனும் மற்றும் தெய்வீக அங்கீகரிப்புப் பற்றின உணர்வுடனும், யோசேப்பு இந்தச் சூழ்நிலையின் மத்தியிலும் தன்னாலான நல் முயற்சிகளை ஏறெடுப்பதற்குத் தீர்மானம் பண்ணினார்; சிறையிலுங்கூட, "கர்த்தரோ யோசேப்போடே இருந்து, அவன்மேல் கிருபைவைத்து, சிறைச்சாலைத் தலைவனுடைய தயவு அவனுக்குக் கிடைக்கும்படி செய்தார் " (ஆதியாகமம் 39:21); அந்தக் கிடங்கிலுங்கூட விடுதலைப் பெறுவதற்குரிய எவ்விதமான நம்பிக்கையும் இல்லாதிருந்தபோதும், அவர் தேவனுக்கும், மூன்று வருடங்கள் அங்குள்ள பொறுப்புகளுக்கும் உண்மையுள்ளவராகக் காணப்பட்டார்; ஆனால் இந்தப் பயிற்சியின் மற்றும் பரீட்சையின் மூலம் நிரூபிக்கப்படுதலின் நோக்கங்கள் நிறைவேறினவுடன், தேவன் யோசேப்பிற்கு முன்னதாக திறந்த கதவுகளை முன் வைத்தார். தேவன் யோசேப்பைச் சிறையிலிருந்து வெளியே எடுக்கவில்லை, மாறாக மற்றவர்களுக்கு யோசேப்பு இரக்கத்துடன் உதவிபுரியும் வழியின் வாயிலாகவே, தேவன் அவரை வெளியே நடத்தினார்.

யோசேப்பு எங்கே இருந்திட்டாலும், எவ்விதமான சூழ்நிலைகளில் காணப்பட்டாலும், அவர் நீதியானவைகளையே/சரியானவைகளையே செய்தார் மற்றும் சூழ்நிலையைச் சிறந்த விதத்தில் பயன்படுத்திக்கொண்டார் மற்றும் சிறு விஷயங்கள் அனைத்திலும் அவர் கொண்டிருந்த உண்மையானது, அவர் பெரிய விதங்களில் பயன்படுத்தப்படுவதற்கு ஏதுவாக அவரை ஆயத்தப்படுத்தினது. அவர் ஜீவியத்தின் அனுபவங்களினால் சரியான விதங்களில் பயிற்றுவிக்கப்பட்டார். நன்றியுடையவர்களிடத்திலும், நன்றியற்றவர்களிடத்திலும் இரக்கமாயிருந்தார் மற்றும் அற்பமானவர்களிடத்திலும், மதிப்புமிக்கவர்களிடத்திலும் பெருந்தன்மையுடன் யோசேப்பு காணப்பட்டார்; தான் மற்றவர்களிடத்தில் அனுபவித்த அநியாயமும், கொடூரமான நடத்துதலும், தன்னுடைய இருதயத்தினைக் கடினப்படுத்துவதற்கு யோசேப்பு அனுமதித்திடவில்லை. மேலும் இந்த அனைத்து நடத்தைகளிலும், அவர் தேவனிடத்தில் அவிவிசுவாசம் கொண்டதாகவோ (அ) முறையிட்டதாகவோ எவ்விதமான அறிகுறிகளையும் நம்மால் காண இயலவில்லை. அவருடைய சோதனையின்போது, அவர் தேவனுடன் நெருங்கிக் காணப்பட்டவராகவும், தேவனை அவரால் தடயம் காணமுடியாதபோது அவரில் விசுவாசம் வைத்து, தேவனுடைய கிருபைகளின் வெளிப்படுத்துதல்களில்

ஆறுதல் அடைந்தவராகவும் மாத்திரம் காணப்பட்டார்.

சிறையில் காணப்பட்ட பானபாத்திரக்காரன் மற்றும் சுயம்பாகியின் சொப்பனங்களுக்கான அர்த்தத்தைத் தேவன் யோசேப்பிற்குக் காண்பித்தபோது, இந்தக் கிருபை தேவனிடத்திலிருந்து வந்தது என்று யோசேப்பு அடையாளங்கண்டுகொண்டார் மற்றும் இந்தச் சந்தர்ப்பத்தில் மீண்டுமாகச் சுதந்தரத்திற்கான திறந்த கதவினைத் தன்னால் காண முடிவதாக யோசேப்பு எண்ணினார். ஆனால் நன்றிமறந்த பானபாத்திரக்காரனோ தனக்கு நன்மை செய்த இந்த உபகாரியை மறந்துபோனான் மற்றும் யோசேப்பு இரண்டு வருடங்களாகக் கைதியாகவே காணப்பட்டார். பின்னர்க் கதவு திறந்தது, இம்முறை சுதந்திரத்திற்காக மாத்திரமல்லாமல், கனத்திற்கும், முன்னேறுவதற்குமாய்க் கதவு திறந்தது மற்றும் யோசேப்பும் பிரவேசிப்பதற்கு ஆயத்தமாயிருந்தார். வருவதாக உரைக்கப்பட்டதான பஞ்சம் தொடர்புடைய விஷயத்தில் பார்வோனுக்கு, யோசேப்பு கொடுத்த ஞானமான வழிமுறை பற்றின ஆலோசனையானது, தேவனிடத்திலான அவரது விசுவாசத்திற்கான சாட்சியமாக மாத்திரம் இல்லாமல், இன்னுமாகக் கூர்மையான, சுறுசுறுப்பான வியாபார சிந்தைக்குமான சாட்சியமாகவும் காணப்படுகின்றது. இப்படியாக மனிதர்கள் தங்கள் விசுவாசத்தின்படி உடனடியாகவும், தயக்கமில்லாமலும் செயல்பட வேண்டுமென்று யோசேப்பு கற்றுக்கொடுக்கின்றவராய் இருக்கின்றார்; மேலும் எகிப்தின் எதிர்க்காலத்தை அச்சுறுத்தும் அபாயங்கள் ஊடாக, அத்தேசத்திற்கு வழிகாட்டும்படிக்கு யோசேப்பு தேர்ந்தெடுக்கப்பட்டபோது, அவர் தனது மகா செயலாற்றல் திறமையை வெளிப்படுத்தினார் மற்றும் இங்கும் தனது உண்மையைக் காண்பித்தார். இந்த விஷயத்தில் அவர் இவைகளில் (இத்திறமைகளில்) கொஞ்சத்தைத் தன்னுடைய தகப்பனாரிடமிருந்து சுதந்தரித்துக்கொண்டவராய் இருந்தார்; ஆனால் பெரும்பான்மையானது இவரது சொந்த ஆற்றலாகவும், குணலட்சணத்தின் வலிமையாகவும் காணப்பட்டது. கனத்திற்கும், பயனாகுவதற்கும் வழிநடத்தக்கூடிய திறந்த கதவுகள் அனைத்துமே, ஒருவேளை அக்கதவுகளுக்குள் பிரவேசிப்பதற்கும் மற்றும் அக்கதவுகளானது வழிநடத்தும் வேலைகளை வெற்றிகரமாய் நடத்துவதற்குமான ஆற்றலையும், குணலட்சணத்தினுடைய வலிமையையும் நாம் பெற்றிராவிட்டால், பிரயோஜனமற்றதாகவே இருக்கும். தேவனுடைய கண்ணோட்டத்திலான வெற்றிகரமான ஜீவியம் ஒன்றை ஜீவிப்பதற்கு, உண்மைத்தன்மையும், குணலட்சணத்தில் தூய்மையும், பெருந்தன்மையுடன் கூடிய நோக்கம், ஆற்றல், துணிவு, திறமைகள், பயபக்தி மற்றும் சுயக்கட்டுப்பாடு அனைத்தும் அவசியமாய் இருக்கின்றது.

யோசேப்பு இராஜாவுக்கு அடுத்ததாக, எகிப்தினுடைய சிங்காசனத்தில் இரண்டாம் ஸ்தானத்திற்கு உயர்த்தப்பட்டக் காரியமானது, அவரது உண்மைக்கான முழுப்பலனாகச் சிலரால் கருதப்படலாம். ஆனால் யோசேப்பு அப்படியாக நிச்சயமாய்க் கருதிக்கொள்ளவில்லை. அவர் இன்னமும் தேவனுடைய வாக்குத்தத்தங்களை மதிப்பவராய் இருந்தார்; அவர் அடிமையின் நிலையினின்றும், சிறைச்சாலையிலிருந்தும், இராஜ அரியணைக்கு உயர்த்தப்பட்டதின் நிமித்தமாக அவரது தலை பெருமையினால் உப்பிக்கொள்ளவில்லை/பெருமிதங்கொள்ளவில்லை, மாறாக உண்மையான மனிதனுக்குரிய அம்சமாகிய அதே சீரான பெருந்தன்மையுடனும், அடிமையாகவும், தகப்பன் வீட்டில் சகோதரனாகவும் காணப்பட்டபோது கொண்டிருந்த அதே ஆற்றலுடனும், உண்மையுடனும் மற்றும் திறமையுடனும், தனது புதிய வேலையை அமைதியாய் யோசேப்பு நடத்திக்கொண்டிருந்தார். துன்பம் என்னும் பயிற்சியின் கீழ் நீண்ட காலமாக தேவனுடன் யோசேப்பு பழகிவந்த காரியமானது, அவரைத் தாழ்மையுள்ளவராய் ஆக்கிற்று மற்றும் அவரது ஆயத்தமாய் இருந்த இருதயத்தில், குணலட்சணங்கள் அருமையாய் வளர்ந்தன. ஆனால் எகிப்தினுடைய சிங்காசனத்தை அடைவது என்பது ஒருபோதும் யோசேப்பினுடைய குறிக்கோளின் இலக்காக இருக்கவில்லை; ஏனெனில் ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபு போன்று யோசேப்பும் பரம தேசத்தை, தேவனுடைய இராஜ்யத்தை எதிர்நோக்கியிருந்தார். அங்கேதான் அவருடைய பொக்கிஷம் இருந்தது மற்றும் அங்கேதானே அவருடைய இருதயம் இருந்தது மற்றும் அங்கிருந்தே அவர் தனது சிறந்த ஜீவியத்திற்கான தூண்டுதலைப் பெற்றுக் கொண்டார் மற்றும் எகிப்தினுடைய சிங்காசனமானது, மற்றவர்களுக்கு உதவியாய் இருப்பதற்குரிய சிலாக்கியங்களுக்காக மாத்திரமே யோசேப்பினால் மதிக்கப்பட்டது.

[R2887]

# “ஏனெனில், தேவன் அவனோடேகூட இருந்தார்”
## ஆதியாகமம் 41:38-49

“என்னைக் கனம் பண்ணுகிறவர்களை நான் கனம் பண்ணுவேன்.”- 1 சாமுயேல் 2:30

உலகத்தில் உண்மையான மேன்மையை அடைந்தவர்களுடைய வெற்றிக்கான இரகசியமாக தெய்வீகத் தயவானது காணப்பட்டதுபோன்று, யோசேப்பின் வெற்றிக்கான இரகசியமாகவும் தெய்வீகத் தயவே காணப்பட்டது. முந்தின யுகங்களில், உண்மையான வெற்றி என்பது பூமிக்குரிய வளமை, ஐசுவரியங்கள் மற்றும் வல்லமையுடன் தொடர்புடையதாக ஏறக்குறைய அடையாளம் கண்டுகொள்ளப்பட்டதாய் இருந்தது; ஆனால் இந்தச் சுவிசேஷ யுகத்திலோ, அதாவது ஆவிக்குரிய யுகத்திலோ, உண்மையான வெற்றியும், தெய்வீகத் தயவும், ஆவிக்குரிய வளமையுடனும், ஆவிக்குரிய வளர்ச்சிகளுடனும், பயனுள்ளவர்களாய் இருக்கும் நிலையுடனும் தொடர்புடையதாய்க் காணப்படுகின்றது மற்றும் இதற்கான உதாரணத்தை நமது கர்த்தர் இயேசுவிலும், அப்போஸ்தலர்களிலும் மற்றும் இவர்கள் நாட்கள் துவங்கி இன்று வரையிலுமுள்ள பிரபலமற்ற சிலுவையின் ஊழியக்காரர்களிலும் நாம் காணலாம். செயல் முறைகளின் பாணி வித்தியாசமாக இருப்பினும், கொள்கை ஒன்றே. குணலட்சணத்தைக் கட்டி எழுப்புவதற்குரிய பிரதான படிப்பினைகளைக் கற்றுக்கொள்வதற்கான பள்ளிக்கூடமென இன்னமும் துன்பம் காணப்படுகின்றது; இந்தத் துன்பமெனும் பள்ளிக்கூடத்தில்தான், ஜீவியத்திற்கான சரியான கொள்கைகள் உருவாகுகின்றன மற்றும் இறுதியில் உறுதியான குணலட்சணம் உருவாகுகின்றது. இப்பாடத்தில் நாம் பார்க்கவிருக்கும் யோசேப்பு அடையும் மாபெரும் ஆசீர்வாதமும், முன்னேற்றமும் பற்றின சம்பவமானது, ஒரு தேசத்தின்/ஜாதியின் காரியங்களை நெறிப்படுத்துவது மாத்திரமல்லாமல், "தம்முடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களும்" மற்றும் அந்த அழைப்பிற்கான நிபந்தனைகளுக்கு மற்றும் கோரிக்கைகளுக்கு ஏற்ப வாழ்ந்திடுவதற்கு நாடுபவர்களுமாகிய அனைவரின் தனிப்பட்ட காரியங்களையும்கூடத் தேவன் நெறிப்படுத்துகின்றார் என்ற உண்மையை விளக்குகின்றதாய் இருக்கின்றது.

யோசேப்பிடம் சில குணலட்சணங்கள் காணப்பட்டதின் காரணமாகவே, இவருடைய குடும்பம் எகிப்திற்கு வருவதற்கும், இன்னும் பல காரியங்களுக்குமான வழியை ஆயத்தப்படுத்துவதற்காக, அநேகமாக கர்த்தர் இவரைத் தெரிந்தெடுத்திருக்க வேண்டும். ஒருவேளை யோசேப்பு தான் கடந்து சென்ற படிப்பினைகள் மற்றும் அனுபவங்களைப் புறக்கணித்தவராக இருந்திருப்பாரானால், கர்த்தரும் தம்முடைய கையாளுதல்களை மாற்றியிருந்திருப்பார் என்பதில் நமக்கு நிச்சயமே. கர்த்தருடைய அனுக்கிரகங்களும், ஆசீர்வாதங்களும் தகுதியான பாத்திரங்கள் மீதே அருளப்படுகின்றதாயிருக்கப் பதிவுகளை வைத்துப்பார்க்கும்போது, யோசேப்பும் ஒவ்வொரு சோதனையிலும் கீழ்ப்படிதலுள்ளவராகவும், நம்பிக்கைக்குப் பாத்திரமாகவும் காணப்பட்டதை நம்மால் காணமுடிகின்றது. யோசேப்பினுடைய குணலட்சணத்தின் பலத்திற்கும், கடமை மற்றும் கொள்கையின் விஷயத்திலான அவரது நேர்மைக்குமான அஸ்திபாரமாக, அவர் கர்த்தரிடத்தில் கொண்டிருந்த விசுவாசம் காணப்பட்டது என்பதில் எவ்விதமான ஐயமில்லை. தனக்குச் சொப்பனங்கள் வாயிலாக முன்னறிவிக்கப்பட்ட, தன் விஷயத்திலான கர்த்தருடைய வழிநடத்துதல்களைக் குறித்து யோசேப்பு சந்தேகப்பட்டிருப்பாரானால், தன்னிடம் சொப்பனங்களின் அர்த்தங்களைப் பற்றி விசாரித்திட்ட இராஜ வட்டாரத்துக் கைதிகள் இருவரிடமும், அவர்கள் சொப்பனங்களில் நம்பிக்கை வைக்கக்கூடாது என்றும், தான் (ஒரு காலத்தில்) அதிகாரமும், செல்வாக்கும் அடையப்போவதாகச் சொப்பனம் கண்டிருக்க, (இப்பொழுதோ) அவைகளுக்குப் பதிலாக தான் கீழ் நிலையையும், அடிமைத்தனத்தையும் மற்றும் சிறையில் கைதியாக்கப்பட்ட நிலையையும் அடைந்துள்ளதை எடுத்துக்கூறி, தான் அடைந்துள்ள கசப்பான ஏமாற்றத்தைக்கூறி, சொப்பனங்கள் நம்பத் தகுந்தவைகளல்ல என்றும் கூறியிருந்திருப்பார். ஆனால் யோசேப்பு இன்னமும் தன்னுடைய சொப்பனங்களில் நம்பிக்கைக் கொண்டிருந்தார் மற்றும் ஏதோ ஒரு

விதத்தில் விடுதலையை எதிர்பார்த்தவராகவும் மற்றும் கர்த்தர் தன்னுடைய காரியங்களை நன்மைக்கு ஏதுவாய் மாற்றுவார் என்று நம்பினவராகவும் இருந்தார்.

நமது பரம பிதாவாகிய சர்வ வல்லமையுள்ள இராஜா மீதான இத்தகைய நம்பிக்கையும், விசுவாசமும், ஆபிரகாமுக்கான வாக்குத்தத்தத்தினுடைய ஆவிக்குரிய சுதந்தரவாளிகளாகிய நம்மில் காணப்படுவது, இன்னும் அதிகம் பொருத்தமானதாய் இருக்கும், ஏனெனில் மாம்சீக ஆசீர்வாதங்களுக்கு மாத்திரமே சுதந்தரவாளிகளாகக் காணப்பட்ட யோசேப்பு மற்றும் நம்முடைய முற்பிதாக்களைக் காட்டிலும், நாம் அனைத்து விதங்களிலும் அதிகம் அனுகூலம் உடையவர்களாய் இருக்கின்றோம். கிறிஸ்துவுக்கு முன்பு வாழ்ந்தவர்கள், எவ்வளவுதான் உயர்வான நிலைகளில் காணப்பட்டவர்களாய் இருப்பினும், அவர்கள் அதிகபட்சமாக, "பணிவிடை வீட்டாரின் அங்கத்தினர்களாகவே" காணப்பட்டனர்; ஆனால் இந்தச் சுவிசேஷ யுகத்திலுள்ள நாமோ, குமாரர்களென, அதாவது நமது கர்த்தர் இயேசுவைத் தலையாகப் பெற்றிருக்கும் "புத்திரர் வீட்டாரின்" அங்கத்தினர்களெனத் தேவனால் இலவசமாய் அடையாளம் கண்டு கொள்ளப்பட்டிருக்கின்றோம். புத்திரர்களானவர்கள் பரிசுத்த ஆவியின் வாயிலாக, தெய்வீகத் திட்டம் பற்றின ஆழமான மற்றும் தெளிவான அறிவை மாத்திரம் அருளப்பெற்றிராமல், அனைத்து விதங்களிலும் பணிவிடை வீட்டார் மற்றும் பொதுவான உலக ஜனங்களைக் காட்டிலும் அதிகம் அனுகூலமும் உடையவர்களாக இருக்கின்றனர். எனினும் யோசேப்பு மற்றும் எகிப்தினுடைய நிழலான சிங்காசனம் தொடர்புடைய விஷயத்தில் காணப்பட்டது போலவே, நம் விஷயத்திலும் நாம் தேவனால் தயவு பெற்றுக்கொள்வதும், இராஜ்யத்தில் உடன் சுதந்தரர்களாகுவதற்கு அழைக்கப்படுவதும் மாத்திரம் போதுமானதாய் இராமல், "ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தில் பங்கடையத்தக்கதாக" அவருடைய அறிவுரைகள் மற்றும் பயிற்சிகளின் கீழ் நாம் எளிதில் இணங்குபவர்களாகவும், கீழ்ப்படிந்து ஒப்புக்கொடுப்பவர்களாகவும் இருப்பதும் அவசியமானதாகும். விசேஷமாய் நம்முடைய விசுவாசமானது பலமுடையதாய்க் காணப்படுவதும், இருளிலிருந்து, அவரது ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாகக் காணப்படத்தக்கதாக, நம்முடைய விசுவாசமானது பலமடைவது வரையிலும் பரீட்சிக்கப்படுவதும் அவசியமாய் உள்ளது.

தான் இறுதியில் விடுவிக்கப்படுவார் என்பதிலும், தேவனுடைய வாக்குத்தத்தம் நிறைவேறும் என்பதிலும், யோசேப்பு கொண்டிருந்த நம்பிக்கையானது, தன்னுடைய சொந்த விடுதலையை வாய்க்கப்பண்ணுவதற்குரிய அனைத்துக் காரியங்களையும் அவர் சரியான விதத்தில் செய்யும் விஷயத்தில் அவரைத் தடைப்பண்ணிடவில்லை. சிறைப்படுத்தப்பட்டிருந்த பானபாத்திரக்காரனை அன்போடு நடத்தி, அவரது சொப்பனத்தை அவருக்கு விளக்கி, அவர் அடையப்போவதாகச் சொப்பனத்தின் வாயிலாக தெரிவிக்கப்பட்ட நற்பேற்றினிமித்தம், அவரோடுகூடக் களிக்கூர்ந்த பிற்பாடு, அவர் மீண்டுமாக இராஜாவின் தயவைப் பெற்றுக்கொள்ளும்போது, அவருக்கு ஆறுதலாய் இருந்த யோசேப்பாகிய தான், இன்னமும் சிறையிலேயே காணப்படுகின்றதை தயவாய் நினைவுகூர்ந்து, கூடுமானால் தனக்காக இராஜாவிடம் மன்னிப்புப் பெற்றுத்தரும்படிக்கு யோசேப்பு எவ்வாறு பரிந்து மன்றாடிக் கேட்டுக் கொண்டார் என்பதை நாம் கவனிக்கின்றோம். யோசேப்பு இப்படியாக தன்னுடைய விடுதலைக்காக, நியாயமான நடவடிக்கைகள்/முயற்சிகள் எடுத்தது சரியானதே மற்றும் இன்னும் அவர் தொடர்ந்து சிறையிலேயே இரண்டு வருடங்களாகக் காணப்பட்ட காரியமானது, அவரது விசுவாசத்திற்கும், கர்த்தர் மீதான அவரது நம்பிக்கைக்கும் பரீட்சைகளாகக் காணப்பட்டது என்பதில் ஐயமில்லை; ஏனெனில் பானபாத்திரக்காரன் தனக்கு நல்ல காலம் திரும்பி வந்தபோது, யோசேப்பை முற்றிலும் மறந்துபோனதாகத் தெரிகின்றது. எனினும் இவைகள் அனைத்திலும், நம்மால் இப்பொழுது பார்க்க முடிகின்றதுபோல, கர்த்தர் யோசேப்பைப் பராமரித்துக்கொண்டே இருந்தார். நீதியினிமித்தம் துன்பப்படுவதற்கும், கர்த்தரிடத்திலான விசுவாசத்திற்கும், பொறுமையுடன் சகித்தலுக்குமான படிப்பினைகளை யோசேப்பு கற்றுக்கொண்டிருந்தார். ஒருவேளை யோசேப்பு, இராஜ கட்டளையினால் விடுவிக்கப்பெற்று, விடுதலைப் பண்ணப்பட்டாரானால், அவர் பாலஸ்தீனியாவில் தன்னுடைய தகப்பனையும் தன்னுடைய சகோதரர்களையும் தேடும்படிக்குத் திரும்பிப்போயிருந்திருப்பார்; அல்லது எகிப்தில் ஏதோ ஒரு தொழிலில் மூழ்கிப்போயிருந்திருப்பார்; ஆனால் அவசியமானப் பாடங்களைக் கற்கத்தக்கதாக, யோசேப்பு முப்பது வயது வரையிலும் தெய்வீக வழிநடத்துதலினால், சிறையில் பாதுகாப்பாய்க் காக்கப்பட்டார்; மேலும் (யோசேப்புக்கு முப்பது வயது வரும்போது) இத்தருணத்தில்தான்

இராஜாவாகிய பார்வோன் அவரது மனதில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தின இரண்டு குறிப்பிடத்தக்கதான சொப்பனங்களைக் கண்டார்; மேலும் இந்தச் சொப்பனங்களைக் குறித்துப் பார்வோன், எகிப்தின் ஞானிகளுடன் கலந்து ஆலோசித்தபோது, அவர்களிடமிருந்து அவரால் திருப்திகரமான பதிலைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. அப்போதுதான் பானபாத்திரக்காரன், சிறையில் தான் காணப்படுகையில் கண்ட சொப்பனத்தையும், அதற்கு எப்படி ஓர் அருமையான வாலிபன் மிகவும் துல்லியமாக விளக்கம் கொடுத்தான் என்பதையும், அந்த வாலிபன் பாராட்டின இரக்கத்தை, தான் எத்தனை சீக்கிரமாய் மறந்து போயுள்ளார் என்பதையும் நினைவுகூர்ந்தார். இப்பொழுது இராஜாவுக்கும், சிறையில் கைதியாக இருக்கும், தன்னுடைய நண்பனுக்கும் உதவி புரிவதற்குரிய வாய்ப்புப் பானபாத்திரக்காரனுக்கு வந்தது; ஆகவே யோசேப்பை மிகவும் பாராட்டி, பானபாத்திரக்காரன் பார்வோனிடத்தில் தெரிவித்தார். மற்றவர்களுக்கு நாம் பாராட்டும் இரக்கமானது, உடனடியாக மறக்கப்பட்டுப்போனதுபோல் காணப்பட்டாலுங்கூட, அதற்குரிய ஆசீர்வாதமானது, பிற்காலங்களில் நம் தலைகள் மீதே கடந்து வருகின்றதாய் இருக்கும் மற்றும் கர்த்தரினால் அது ஆசீர்வாதத்திற்கான கால்வாயாகப் பயன்படுத்தப்படும் என்ற உண்மையானது இச்சம்பவத்தில் விளக்கப்படுவதை நாம் பார்க்கின்றோம்.

பார்வோன் கைதியை அழைத்து அனுப்பினார் மற்றும் தனது சொப்பனங்களுக்குக் கொடுக்கப்பட்ட விளக்கத்தினிமித்தம் முழுவதும் திருப்தியடைந்தபடியாலும் பானபாத்திரக்காரனுடைய சாட்சியும் கூடக் காணப்பட்டதினாலும், விளக்கங்கள் உண்மையாக இருக்குமோ என்று பார்வோனினால் சந்தேகப்பட முடியவில்லை மற்றும் சொப்பனங்களுக்கு அர்த்தம் சொல்லும் திறன் யோசேப்பிடம் இருந்ததற்கான காரணம், தேவன் யோசேப்போடு காணப்படுவதாலேயாகும் என்றும், தேவன் யோசேப்பைப் பயன்படுத்திக்கொண்டிருக்கின்றார் என்றும், இப்படியான சொப்பனங்களைக் கொடுத்தவரும், சொப்பனங்களுக்கான அர்த்தத்தை இந்த வாலிபனுக்குக் கொடுத்தவருமான தேவன், வரும் என்று அறிவித்துள்ள பஞ்சத்தின் கடினத்தை விலக்கிடுவதற்கென எடுக்க வேண்டிய முன் எச்சரிப்புகள் தொடர்புடைய விஷயத்தில் தேவன் தம்முடைய ஊழியக்காரனைப் பயன்படுத்துவதற்கும், ஆசீர்வதிப்பதற்கும் சித்தமாய் இருப்பார் என்றும் பார்வோன் முடிவுக்கு வந்தார். பார்வோன் தன் விருப்பப்படி ஆளுகைச் செய்யும் வல்லமையுடையவராகக் காணப்பட்டார் மற்றும் தன்னுடைய இராஜ்யத்தில் எவரை வேண்டுமானாலும் அதிகாரத்திற்கு உயர்த்துவதற்குரிய சுயாதீனம் உடையவராய் இருந்தார்; மேலும் சர்வ வல்லமையுள்ள தேவனால் நம்பப்பட்டவரும் மற்றும் அவரால் நண்பனாக்கப்பட்டவருமான யோசேப்பைக் காட்டிலும், அதாவது தேவனால் இரகசியங்கள் தெரிவிக்கப்பட்டவரும் மற்றும் தெரிவிப்பதற்குக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டவருமான யோசேப்பைக் காட்டிலும், வேறெவர் மேலும் நம்பிக்கை வைத்திட முடியாது என்று பார்வோன் ஞானமாய் முடிவெடுத்தார். இங்கும் கர்த்தருடைய ஜனங்களுக்கும் மற்றும் அனைவருக்கும் ஒரு படிப்பினை உள்ளது, அதென்னவெனில் கர்த்தருடைய ஜனங்கள் பரிபூரணமானவர்கள் இல்லை என்றாலும், நெருக்கடியான (emergency) வேளைகளில், மற்றவர்கள் மீது நம்பிக்கையை வைப்பதைக் காட்டிலும், யார்யார் மீது கர்த்தர் நம்பிக்கை வைத்திருக்கின்றாரோ, அப்படிப்பட்டவர்கள் மீது நம்பிக்கை வைப்பது பாதுகாப்பானதாய் இருக்கும் என்பதேயாகும்.

யோசேப்பு உடனடியாக எகிப்தின் பிரதம மந்திரி ஆக்கப்பட்டார். யோசேப்பு பார்வோனின் பிரதிநிதியாகக் காணப்பட்டார் மற்றும் இவர் ரஷ்யாவின் சர்வாதிகாரி மற்றும் துருக்கி நாட்டின் சுல்தான் (அ) பிரதிநிதி தவிர, மற்றபடியுள்ள ஐரோப்பிய நாட்டின் பிரதம மந்திரி அல்லது சக்கரவர்த்தியைக் காட்டிலும் மாபெரும் அதிகாரம் உடையவராய்க் காணப்பட்டார். சிறையிலிருந்து, சிங்காசனத்திற்கு அடுத்த நிலைக்கு உயர்த்தப்படுவதற்குரிய சாத்தியக்கூறு குறித்துச் சிலர் சந்தேகிக்கிறவர்களாகக் காணப்படுகின்றனர்; இதற்குக் காரணம் இவர்கள் கிழக்குத் திசை நாடுகளின் பழக்க வழக்கத்தை அறியாமல் காணப்படுவதே ஆகும். துருக்கி நாட்டின் சுல்தானைக் குறித்து ஒரு கதைச் சொல்லப்படுவதுண்டு. இந்தச் சுல்தானுக்கு ஒருநாள் கடுமையான பல்வலி ஏற்பட, அதுவும் இவருடைய வழக்கமான பல் மருத்துவர் ஊரில் இல்லாதபோது, ஏதேனும் ஒரு பல் மருத்துவரைக் கண்டுபிடித்து, வரவழைத்து வரும்படிக்கு, இவருடைய வேலைக்காரர்கள் அனுப்பி வைக்கப்பட்டனர். வேலைக்காரர்கள் மிகவும் தரித்திர நிலையில் காணப்பட்ட ஒரு பல் மருத்துவரைக் கண்டுபிடித்து, அவர் சுல்தானின் முன் கொண்டுவரப்படத்தக்கதாக, அவருக்குத் தகுதியான வஸ்திரங்களை அணிவித்து அழைத்து

வந்தார்கள்; பல் மருத்துவர் தனது வேலையை முடித்த பிற்பாடு, அவருக்கு சுல்தான் பட்டப் பெயரையும், பாஷாவுக்குரிய (துருக்கியில் உயர்ந்த பதவியிலுள்ள அதிகாரிக்குரிய) ஊதியத்தையும், ஒரு பட்டணத்தையும், நாட்டில் குடியிருப்பதற்கான இடத்தையும், செல்வங்கள் முதலியவைகளையும் கொடுத்தார். இதைக் காட்டிலும் மிதமிஞ்சிய நிலையிலொன்றும் யோசேப்பினுடைய அனுபவம் காணப்படவில்லை. பதிவுகள் தெரிவிக்கவில்லை என்றாலுங்கூட யோசேப்புக்குத் தெய்வீகக் கிருபை இருக்கின்றது என்பதற்கான சாட்சியங்களைத் தவிர, அவர் போத்திபாரின் வேலைக்காரனாக முன்பு இருந்தபோது கொண்டிருந்த நற்பண்புகள் குறித்தும், சிறையில் யோசேப்பு நம்பிக்கைக்குரிய விசாரணைக்காரனாக இருந்தது குறித்தும் பார்வோனுக்கு விவரங்கள் சில தெரிவிக்கப்பட்டதினிமித்தமும், யோசேப்பு நம்பிக்கைக்கும், விசுவாசத்திற்கும் பாத்திரமான ஒரு மரியாதைக்குரிய மனுஷன் என்று பார்வோனுடைய மனமானது, திருப்தியடைந்தது என்பதில் ஐயமில்லை. இப்படியாகவே நம்முடைய காரியங்கள் அனைத்திலும்கூட, நிலைமை மாறுவதற்குரிய காலம் ஒன்று உண்டு; நாம் தவறாய்ப் புரிந்து கொள்ளப்பட்டிருந்தால் மற்றும் தவறாய்த் திரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தால், "உன் நீதியை வெளிச்சத்தைப்போலவும், உன் நியாயத்தைப் பட்டப்பகலைப்போலவும் விளங்கப் பண்ணுவார்" என்று கர்த்தர் சொல்லியிருந்த பிரகாரமாகவே, இறுதியில் உண்மை வெளிக்கொண்டு வரப்படும் (சங்கீதம் 37:6). நாம் கர்த்தருக்காக பொறுமையுடன் காத்திருக்க வேண்டும் மற்றும் நாம் அவருக்கு உண்மையாய்க் காணப்படும் பட்சத்தில், சகலமும் நம்முடைய நன்மைக்கு ஏதுவாக நடக்கும் என்று வாக்களித்துள்ளவரின் வல்லமையையும், அன்பையும், ஞானத்தையும் குறித்துக் கேள்வி எழுப்பாமல், இப்படியான (தவறாய் நாம் புரிந்துகொள்ளப்படும்) அனுபவங்களை அவர், நமக்கு நியமித்ததான ஏற்பாடுகளெனப் பொறுமையுடன் ஏற்றுக் கொண்டிட வேண்டும்.

பார்வோனுடைய மோதிரம் என்பது முத்திரை மோதிரமாகும். முற்காலங்களில் இராஜ கட்டளைகளானது, நம் காலத்தில் செய்யப்படுவது போன்று கையெழுத்திட்டு, முத்திரையிடப்படாமல், மாறாக முத்திரை மாத்திரமே இடப்படுகின்றது; இராஜா தனிப்பட்ட அடையாள சின்னமுடைய முத்திரையை வைத்திருப்பார் மற்றும் இந்த முத்திரையிடப்பட்ட கட்டளையானது எங்கெல்லாம் அனுப்பப்படுகின்றதோ, அங்கெல்லாம் அது இராஜாவிடமிருந்து வந்தது என அடையாளம் கண்டுகொள்ளப்படுகின்றது; இதனை போலியாய்ச் செய்வது என்பது பெருங்குற்றமாகவும், மரணத்தண்டனைக்கு ஏதுவானதாகவும் இருந்தது. இப்படியான முத்திரையே யோசேப்புக்குக் கொடுக்கப்பட்டது மற்றும் இந்த முத்திரையினுடைய அதிகாரத்தின் மூலமாக, ஏழு வருட பரிபூரண விளைவின் காலத்தில் விளையும் அதிகப்படியான விளைச்சல்களைச் சேகரிப்பதும், அதைச் சேர்த்து வைப்பதற்கெனக் களஞ்சியங்களைக் கட்டுவதும் தொடர்புடைய விஷயத்தில் யோசேப்பினால் கட்டளைகள் பிறப்பிக்க முடியும்.

பார்வோனுக்கு அடுத்த ஸ்தானத்தில் உயர்த்தப்பட்ட யோசேப்பிற்கான கனமும், தனிச் சிறப்புகளும் நமது கர்த்தர் இயேசுவினுடைய மகிமையான உயர்த்தப்படுதலைச் சித்தரிக்கின்றதாய் இருக்கின்றது (இந்த மகிமையான உயர்த்தப்படுதலில், அவரது சரீரமாகிய சபை சீக்கிரத்தில் பங்கடையப்போகிறார்கள்). நமது கர்த்தர் சோதனைக்குட்படுத்தப்பட்டார்; அவர் உண்மையுள்ளவராக இருந்தும், அவர் மரணம் எனும் மாபெரும் சிறைச்சாலைக்குள் கடந்து போனார்; மூன்றாம் நாளிலே அவர் விடுவிக்கப்பட்டு, அண்டசராசரத்தினுடைய சிங்காசனத்தில், தேவனுக்கு அடுத்த ஸ்தானத்தில் வல்லமைக்கும், மகா மகிமைக்கும் உயர்த்தப்பட்டார். தெய்வீக முத்திரை மோதிரமானது அவருக்குக் கொடுக்கப்பட்டு, "பிதாவை கனம் பண்ணுகிறதுபோல எல்லாரும் குமாரனையும் கனம் பண்ண வேண்டும்" என்றும், "வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரமும் அவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றது" என்றும், அவருடைய கட்டளையின் பேரிலேயே அனைத்தும் செய்யப்பட வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டது (யோவான் 5:23; மத்தேயு 28:18). கிறிஸ்துவின் தெரிந்துகொள்ளப்பட்ட சரீரத்தினுடைய உண்மையுள்ள அங்கத்தினர்களாகிய சபை, அதாவது ஜெயங்கொள்பவர்களுங்கூடப் பல்வேறு விதங்களில் பரீட்சிக்கப்பட வேண்டும் மற்றும் நீதியினிமித்தமாக தற்காலத்தில் பாடுபட வேண்டும், தவறாய்ப் புரிந்துகொள்ளப்பட வேண்டும் மற்றும் தவறாய்த் திரித்துக் காண்பிக்கப்பட வேண்டும். இவர்களும் மரணம் எனும் சிறைச்சாலைக்குள் கடந்து செல்ல வேண்டும் மற்றும் மூன்று மகா நாட்களின் (ஆயிர - வருட நாட்களின்)

பல பாகங்களில் அங்குக் காணப்பட வேண்டும்; ஐந்தாவது ஆயிர வருடத்தின் பகுதிக் கால அளவிலும், ஆறாவது ஆயிர வருடம் முழுவதிலும் மற்றும் ஏழாவது ஆயிர வருடக் காலத்தின் ஆரம்பப் பகுதி வரையிலும் (அல்லது இவர்கள் தங்கள் கர்த்தரும், தலையுமான கிறிஸ்துவோடுகூட இராஜ்யத்தின் மகிமையான காரியங்களில் உடன் சுதந்திரர்களாகும்படிக்கு இவர்களது உயிர்த்தெழுதலுக்குரிய ஏற்றக் காலமாகிய மூன்றாம் ஆயிர-வருட நாள் வருவது வரையிலும்) இவர்கள் மரணம் எனும் சிறைச்சாலையில் காணப்பட வேண்டும். இவைகள் அனைத்தும் யோசேப்பு சிறைச்சாலையில் செலவழித்ததும், பின்னர் உயர்த்தப்பட்டதுமான காரியங்கள் நிகழ்ந்த மூன்று வருடங்களின் பாகங்களில் அருமையாய்ச் சித்தரிக்கப்பட்டுள்ளது.

யோசேப்பிற்கு வழங்கப்பட்ட புதிய எகிப்திய பெயரின் அர்த்தத்தை, **கேனான் கூக்கீ** அவர்கள், **"ஜீவ அப்பம்"** என்று வழங்குகின்றார். பரிபூரண விளைச்சலுள்ள ஏழு வருடங்களின் கோதுமையானது, ஏழு வருட பஞ்ச காலத்தின்போது ஜனங்கள் அனைவரின் தேவைகளுக்கு ஏற்ப வழங்கப்படுவதற்குப் போதுமானதாய்க் காணப்படத்தக்கதாக, கோதுமையை மாபெரும் அளவில் சேகரிப்பதாகிய யோசேப்பினால் நிறைவேற்றப்பட்டதான மாபெரும் வேலையைக் கண்ணோக்கிப் பார்க்கையில், இப்புதுப்பெயர் அவருக்குப் பொருத்தமானதாகவே இருக்கின்றது. இப்படியாக நாம் பார்க்கையில், நாம் மீண்டுமாக, "ஜீவ அப்பம்" என்று தம்மைக் குறித்துக் கூறிட்ட கிறிஸ்துவைப்பற்றி நினைப்பூட்டப்படுகின்றோம். கிறிஸ்துவில் நிறைவேற்றப்பட்ட வேலையின் காரணமாகவே எகிப்தியர்களால் அடையாளப்படுத்தப்படும் மனுக்குலத்திற்கு ஜீவ அப்பம் அருளப்பட்டது மற்றும் யோசேப்பினுடைய சகோதரர்கள் மற்றும் யாக்கோபு அடையாளப்படுத்தும் கிறிஸ்துவின் சகோதரர்களுக்கும், கிறிஸ்து மூலம் ஜீவ அப்பம் வருகின்றதாய் இருக்கின்றது என்பதையும் நாம் நினைப்பூட்டப்படுகின்றோம். யோசேப்பு மற்றும் அவரது வேலையின் மூலமாக அல்லாமல், மற்றபடி சகல ஜனங்களும் ஜீவன் அடைய முடியாதது போலவும் மற்றும் யோசேப்பு பார்வோனின் பிரதிநிதியாக இருந்து, தன்னுடைய வேலையைச் செய்தது போலவும், நிஜத்திலுங்கூட நமது கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலும் மற்றும் அவர் மூலமாயும் அல்லாமல் மற்றபடி உலகத்தில் எவராலும் ஜீவன் அடைய முடியாது மற்றும் இந்த வேலையானது அண்டசராசரத்தின் மேலான இராஜாவாகிய நமது பரம பிதாவின் நாமத்தில், பிதாவின் பிரதிநிதியான கிறிஸ்துவினால் நிறைவேற்றப்படும்.

நியாயமான விளக்கங்களைக் கொடுப்பதற்குப் பதிலாக எதிர்ப்புத் தெரிவிப்பதற்கும், குற்றம் கண்டுபிடிப்பதற்கும் சிலர் எப்போதும் ஆயத்தமாய்க் காணப்படுகின்றனர்; மேலும் இப்படிப்பட்டவர்கள் பரிபூரணமான விளைச்சல் காணப்படும் வருஷங்களுடைய அறுவடையில், யோசேப்பு ஐந்தில் ஒரு பாகம் வாங்கிக்கொண்டதைக் குறித்தும், அதைப் பின்னாட்களில் பார்வோனுடைய அதிகாரத்தையும், பார்வோன் தன் எல்லைக்குட்பட்ட ஜனங்கள் அனைவரின் மீதான தனது கட்டுப்பாட்டையும் பெலப்படுத்துவதற்குப் பயன்படுத்தினது குறித்தும் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். விளைச்சலில் ஐந்தில் ஒரு பாகம் கேட்கப்படுவது என்பது நியாயமற்ற வரி என்று கருதப்பட முடியாது என்றும், இன்றும்கூட எகிப்தில் இதுவே வாடகையாக வசூலிக்கப்படுவது வழக்கமாக இருக்கின்றது என்றும், இதைக் காட்டிலும் அதிகமாகக்கூட நம்முடைய நாடுகளிலும், நாகரிகமான மற்ற நாடுகளிலும் அடிக்கடி வசூலிக்கப்படுகின்றது என்றும் நாம் பதில் கூறுகின்றோம். ஆனால் ஜனங்களிடமிருந்து வரியாக ஐந்தில் ஒரு பாகம் வசூலிக்கப்படுகின்றதா என்பதை நாம் அறியோம். அதிகமான விளைச்சல் காணப்படும் காலத்தில் கோதுமையின் விலை மிகக்குறைவாகக் காணப்படுகையில், கோதுமை சேகரிப்பதற்குரிய செலவுகளுக்குப் பார்வோனின் பணப்பையிலிருந்தும், வங்கியிலிருந்தும் பணம் செலவழிக்கப்பட்டதா என்பதையும் நாம் அறியோம். இதற்கான பதிவுகள் இல்லையென்றாலும், பின் குறிப்பிட்டுள்ளபடி பார்வோனின் பணப்பையிலிருந்து செலவழிக்கப்படுவதற்கான வாய்ப்புண்டு என்று நாம் எண்ணுகின்றோம்; மேலும் வசூலிக்கப்பட்ட ஐந்தில் ஒரு பாகமானது, அரியணையின் அதிகாரத்தைப் பலப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்பட்டது என்றும், இப்படிச் செய்வது என்பது சகல ஜனநாயகக் கருத்துக்களுக்கும் முரணானது என்றுமுள்ள விஷயத்தைப் பொறுத்தமட்டில், குடியரசு/ஜனநாயக அரசாங்கமே விழுந்துபோன மனுக்குலத்திற்கு அனைத்து விதங்களிலும் சிறந்தது என்று நிரூபிக்கப்பட்டதாக உள்ளது என்பதைத் தவிர, வேறெதையும் நாம் சொல்வதற்கில்லை. சமுதாய ரீதியிலும், அரசியல் ரீதியிலும், ஒழுக்க ரீதியிலுமான தற்போதைய ஒழுக்கக்கேடுகளுக்கான தீர்வாக, தேவன் ஜனநாயக வடிவில் ஆயிர வருட அரசாட்சியை அறிமுகப்படுத்துவதற்குச் சித்தமாய்க்

காணப்படவில்லை; மாறாக முடியரசு வடிவிலேயே ஆயிர வருட அரசாட்சியை அறிமுகப்படுத்திட சித்தமாய் இருக்கின்றார்; அது முற்றும் முழுமையாக முடி மன்னருக்குரிய ஆட்சியாக இருக்கும், அதில் உலகத்தை மீட்டுக்கொண்டவரான அவரது குமாரன் உலகத்தை ஆசீர்வதிப்பதற்கென எதேச்சதிகாரம் (தன் விருப்பம்போல் ஒருவர் ஆளுகைப் புரியும் அதிகாரத்தை) செலுத்தி அரசாள்பவராகக் காணப்படுவார்; குமாரன் தீமையை வெல்வதற்கும், மனுக்குலம் முழுவதையும் நீதியின் கொள்கைகளைப் பற்றின முழுமையான புரிந்துகொள்ளுதலுக்குள் கொண்டுவருவதற்கும் மற்றும் நிழலில் எகிப்தின் ஜனங்கள் பார்வோனின் நிரந்தரமான ஊழியர்களானதுபோல, மனுக்குலமும் மாபெரும் மேலான இராஜாவின் பிரஜைகளென என்றென்றும் காணப்படத்தக்கதாக, அவர்கள் விரும்புவதற்கேற்ப, அவர்களைத் தேவனுக்கு முழு இசைவாய்க் கொண்டுவருவதற்கும் எதேச்சதிகாரம் செலுத்தி அரசாள்பவராகக் காணப்படுவார்.

(பட்சமாய் இருத்தல் என்ற அர்த்தமுடைய) ஆஸ்நாத்தை யோசேப்பிற்கு மனைவியாகப் பார்வோன் கொடுத்து, எகிப்தை ஆசீர்வதிக்கும் வேலையில், யோசேப்போடு துணைவியாகவும், உடன் வேலையாளாகவும் இருந்து, கனத்திலும், மேன்மையிலும் யோசேப்போடு ஆஸ்நாத் பங்காளியானது போல, பிதாவாகிய தேவனும் உயர்த்தப்பட்ட தம்முடைய குமாரனுக்கு, நமது கர்த்தருக்கு ஒரு மணவாட்டியை அருள நோக்கம் கொண்டிருக்கின்றார் மற்றும் இந்த மணவாட்டியும் விரும்பப்பட்டவளாக இருப்பாள். இவள் நிச்சயம் பண்ணப்படுவதற்கும், திருமணத்திற்காக ஆயத்தம் பண்ணப்படுவதற்கும் இந்தச் சுவிசேஷ யுகம் முழுவதும் தேவையாய் இருந்தது மற்றும் இப்பொழுதோ இவள் அவர் அங்கீகரிக்கும் குணலட்சணங்களினால் சித்திரத் தையலிட்ட இவளது கர்த்தரின் மகிமையான வஸ்திரத்தைத் தரித்து, அழகுப்படுத்தப்பட்டவளென, மணவாட்டியாக, ஆட்டுக்குட்டியானவரின் மனைவியாக இராஜாவின் அருகே கொண்டுவரப்படுவதற்குரிய காலம் சமீபமாய் உள்ளது (சங்கீதம் 45:13, 14).

யோசேப்பிற்கு வந்த வளமையினிமித்தம், அவர் தலைக்கனம் அடையவில்லை; இந்த வளமையைப் பெற்றுக்கொள்வதற்கு அவர் பாத்திரமானவராய்க் காணப்பட்டதை நிரூபித்தவராய் இருந்தார்; வளமையை ஞானமாய் எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்பதை அறியத்தக்கதாக, யோசேப்பு தன்னுடைய முந்தைய அனுபவங்களினால் பயனடைந்தவராய் இருந்தார். யோசேப்பு தன்னுடைய வேலையில் சோம்பலாய்க் காணப்படாமல், மாறாக வேலையிலே அனலாயிருந்தார்; தனக்கு முன்பு கர்த்தர் வழியைத் திறந்து வைத்துள்ளதைக் கண்ட யோசேப்பு, தன்னுடைய வேலையை நிறைவேற்றிடுவதற்கு உடனடியாக முயற்சிகளை எடுத்ததாக நாம் பார்க்கின்றோம். எவ்விடம் களஞ்சியங்களைக் கட்டுவதற்கானச் சரியான இடமாக இருக்கும் எனத் தீர்மானிப்பதற்கு, எகிப்து எங்கும் போய்ப் பார்ப்பதே அவரது முதல் கட்ட நடவடிக்கையாக இருந்தது; கர்த்தருடைய ஆசீர்வாதமும் அவரோடு தொடர்ந்து காணப்பட்டு, அவருக்குக் கொடுக்கப்பட்ட வேலையில், அவரைத் தழைத்தோங்கச் செய்தது. இப்படியாகவே நம் விஷயத்திலும்கூடக் காணப்பட வேண்டும்; கர்த்தருக்கான ஊழியம் விஷயத்தில் எவ்விதமான பகுதிகளிலும், கர்த்தர் வாய்ப்பாகிய கதவை நமக்காக திறந்திடும்போது, நாம் அவருக்கான வைராக்கியத்துடனும், நம்மை அழைத்ததற்கான காரணம் குறித்த வைராக்கியத்துடனும், நாம் உடனடியாகப் பிரவேசித்திட வேண்டும். இப்படியாக நாம் காணப்படுவது என்பது, கர்த்தர் நம்மை ஏற்றுக்கொள்வதற்குரிய ஒரு நிபந்தனையாகும். ஒருவேளை நாம் சோம்பலாகவோ, வாய்ப்புகளைக் கவனிப்பதில் கவனமற்றவர்களாகவோ காணப்படுவோமானால், வாய்ப்புகளானது நம்மிடமிருந்து மாற்றப்பட்டு, மற்றவர்களுக்குக் கொடுக்கப்படும் என்பதில் ஐயமில்லை, ஏனெனில் கர்த்தர் தம்முடைய நோக்கத்திற்காக ஊழியம்புரியும்படிக்கு, இன்னொருவரை எழுப்புவதற்கு வல்லமையுள்ளவராக இருக்கின்றார் (அதாவது நம்மைக் கொண்டு ஊழியம் செய்யும்படிக்கு, நம்முடைய சுயமாய்ச் சிந்தித்துச் செயல்படும் நிலையை குறுக்கிடாமல், அவர் இன்னொருவரை எழுப்புவதற்கு வல்லமையுள்ளவராக இருக்கின்றார்). தேவனோடுகூட உடன் வேலையாட்களாக இருக்கும் விஷயத்திலும், அதிலும் விசேஷமாக நமது கர்த்தரும், ஆண்டவருமான இயேசு செய்துவருகிறதும் அவரது மணவாட்டிகளென, உடன் சுதந்தரர்களென அழைக்கப்பட்டுள்ள நாம் பங்குகொள்ளும்படிக்கு அழைக்கப்பட்டிருக்கிறதுமான இந்த மாபெரும் வேலை தொடர்புடைய விஷயத்திலும் நாம் எப்படிப்பட்ட ஒரு சிலாக்கியத்தினை அனுபவிக்கின்றோம் என்பதை அதிகமதிகமாய் உணர்ந்து கொள்வோமாக.

தேவனைக் கனப்படுத்துபவர்களை, தேவனும் தமக்குரிய விதத்தில் கனப்படுத்துவார் மற்றும் அவரது விதம்/வழி, சிறந்த வழியென இறுதியில் எப்போதும் கண்டுகொள்ளப்படும். நாம் வாயினால் மாத்திரம் கர்த்தருக்குக் கனத்தைச் செலுத்தாமல், விசேஷமாக ஜீவியத்தின் காரியங்களில், அதாவது குடும்ப/வீட்டுக் கடமைகளில், தொழில் ரீதியான கடமைகளில், சத்தியத்திற்கான ஊழியங்கள் தொடர்புடைய ஜீவியத்தின் காரியங்களில், அவரது புண்ணியங்களை அறிவிக்கின்றவர்களாய் இருக்க வேண்டும்; அனைத்துக் காரியங்களிலும், அவருக்குச் சொந்தமான நம்முடைய சரீரங்களிலும், ஆவியிலும் நாம் தேவனை மகிமைப்படுத்துகின்றவர்களாய் இருக்க வேண்டும். மேலும் இப்படியாகச் செய்பவர்கள் கர்த்தரினால் ஆசீர்வதிக்கப்பட்டு, அவரால் பயன்படுத்தப்படுவார்கள். இங்கு அனுமதிக்கப்படும் சிறிய ஊழியங்கள் உண்மையில் கனம் வாய்ந்தவைகளே; தற்காலத்தின் இந்தச் சிறிய ஊழியங்களுக்கு உண்மையாய் இருப்பவர்கள் இறுதியில் இராஜ்யத்தின் மாபெரும், பிரமாண்டமான ஊழியங்களை ஆசீர்வாதங்களாகவும், பலன்களாகவும் பெற்றுக்கொள்வார்கள்.

---

**[R3978]**

# “என்னைக் கனம் பண்ணுகிறவர்களை, நான் கனம் பண்ணுவேன்”

## ஆதியாகமம் 41:38-49

“உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், தேவனிடத்தில் கேட்கக்கடவன்.”- யாக்கோபு 1:5

ஒரு கைதியாகவும், சிறைச்சாலையின் கண்காணியாகவும் யோசேப்பு மூன்று வருடங்கள் பெற்றுக்கொண்ட அனுபவங்களானது, பொறுமை மற்றும் அனுதாபம் தொடர்பாக, அதிகமான அனுபவங்களைக் கொண்டுவந்து, அவருடைய பிள்ளைப்பருவத்தில் அவரிடத்தில் வெளிப்பட்டதான குணலட்சணத்தினுடைய அந்த அருமையான அம்சங்களை உறுதிப்படுத்திற்று மற்றும் ஆழமாக்கிற்று என்பதில் ஐயமில்லை. கர்த்தர் அவரை ஒரு மாபெரும் வேலைக்கெனப் பயிற்றுவித்துக் கொண்டிருக்கின்றார்; அவரது குணலட்சணம் வளரவேண்டியது மாத்திரமல்லாமல், அவரது விசுவாசம் பரீட்சிக்கப்படுவதும், மிகவும் பலப்படுத்தப்படுவதும்கூட ஏற்றதாயிருந்தது. யோசேப்பு கர்த்தரை முழுமையாக விசுவாசித்திருந்தபோதிலும், இந்த விசுவாசமானது அவர் பானபாத்திரக்காரனிடம் வேண்டிக்கொள்வதைத் தடைப்பண்ணவில்லை, அதாவது யோசேப்பு பானபாத்திரக்காரனின் சொப்பனத்தினுடைய அர்த்தத்தை விவரித்து, பானபாத்திரக்காரன் இராஜாவினுடைய தயவிற்குள் மீண்டும் திரும்பும்போது, கைதியாக அவர் இருந்தபோது, தான் பாராட்டின பரிவை நினைவுகூர்ந்து, தன்னை விடுதலைப்பண்ணத்தக்கதாகப் பேசும்படிக்கு வேண்டிக்கொண்டதைத் தடைப்பண்ணவில்லை என்பதை நாம் பார்த்திருக்கின்றோம். தன்னுடைய இரக்கத்திற்குக் கைமாறு செய்வதற்குரிய வாய்ப்புகள் அநேகவற்றைப் பெற்றிருந்த இந்தப் பானபாத்திரக்காரனிடத்தில், யோசேப்பு அதிகமாய் எதிர்ப்பார்த்துள்ளதாகத் தோன்றுகின்றது, எனினும் விடுதலை இல்லாமல் இரண்டு வருடங்கள் கடந்துபோய்விட்டது; இந்த இரண்டு வருடங்களில், யோசேப்பு கர்த்தரிடத்திலான தன்னுடைய விசுவாசத்தைத் தக்கவைத்துக்கொண்டு, கர்த்தருடைய திட்டங்களின் நிறைவேறுதல்களுக்காகப் பொறுமையுடன் காத்திருந்தார்.

இதைக் காட்டிலும் புதுச் சிருஷ்டிகளாக இருக்கும் அனைவருக்குமானச் சரியான நடத்தைக்குச் சிறந்த உதாரணம் இருக்காது. நம்முடைய காரியங்கள் அனைத்தும் கர்த்தருடையது, ஏனெனில் நாம் நம்மை முற்றும் முழுமையாக அவரிடத்தில் கையளித்துள்ளோம் மற்றும் நாமும் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் அங்கத்தினர்களென ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றோம். இப்படிப்பட்டவர்களே ஆண்டவருடைய பின்வரும் வார்த்தைகளை நினைவில்கொள்ள வேண்டும்: "அவர்களைப்போல நீங்கள்

செய்யாதிருங்கள்; உங்கள் பிதாவை நோக்கி நீங்கள் வேண்டிக் கொள்ளுகிறதற்கு முன்னமே உங்களுக்கு இன்னது தேவை என்று அவர் அறிந்திருக்கிறார்"; "பிதா தாமே உங்களைச் சிநேகிக்கிறார்"; "அவைகளை என் பிதாவின் கையிலிருந்து பறித்துக்கொள்ள ஒருவனாலும் கூடாது"; "அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்" (மத்தேயு 6:8; யோவான் 16:27; யோவான் 10:29; ரோமர் 8:28). நம்முடைய மேலான நன்மைக்கு ஏதுவானவைகள் என்று நாம் கருதுபவைகளை அடையத்தக்கதாக, எந்த மற்றும் அனைத்து நியாயமான வழிவகைகளை நாம் பயன்படுத்துவது சரியான காரியமாக இருந்திட்டாலும், நாம் அவைகள் மீது சார்ந்திராமல், மாறாக கர்த்தர் மீது சார்ந்திருந்து, ஒவ்வொரு கேடான சூழ்நிலைமையிலிருந்தும் நம்மை மீட்பதற்கான அவருடைய வழிக்காகவும், அவரது நேரத்திற்காகவும் பொறுமையுடன் காத்திருக்க வேண்டும்.

## "அவருக்காகப் பொறுமையுடன் காத்திருங்கள்"

சிறையிலிருந்து யோசேப்பை விடுவிப்பதற்கான கர்த்தருடைய நேரமும், வழிமுறையும், யோசேப்பினுடைய அனைத்து எதிர்ப்பார்ப்புகளுக்கும் அப்பாற்பட்டதாய் இருந்தது; யோசேப்பு சிறைச்சாலையிலிருந்து, அக்காலக்கட்டத்தில் மாபெரியதாய் விளங்கின தேசத்தினுடைய அரமனைக்கு உயர்த்தப்பட்டார். இறுதியில் இவைகள் பானபாத்திரக்காரன் நடுவராக (மத்தியஸ்தராக) இருந்து செயல்பட்டதின் மூலம் நடைப்பெற்றது; பானபாத்திரக்காரன் யோசேப்பின் காரியத்தை மறந்து போனதற்காக வெட்கமடைந்தார். பார்வோன் இரண்டு சொப்பனங்களைக் கண்டார் மற்றும் அவைகளை அவருடைய மனதில் ஆழமாய்ப் பதியப்பெற்றிருந்தார் மற்றும் அவைகளுக்கான அர்த்தத்தை அவர் வாஞ்சையுடன் நாடித்தேடினார். அவர் ஏழு புஷ்டியுள்ள பசுக்கள் நைல் நதியிலிருந்து ஏறிவந்து, நதியின் கரையோரமாய்க் காணப்படும் செழிப்பான புற்களை மேய்ந்துகொண்டிருந்ததாகவும் மற்றும், அடுத்ததாக நதியிலிருந்து அவலட்சணமும், கேவலமுமான வேறே ஏழு பசுக்கள் ஏறிவந்து, புஷ்டியான ஏழு பசுக்களைப் பட்சித்துப்போட்டதாகவும், பட்சித்துப்போட்ட பின்னரும் அவைகள் புஷ்டியாகாமல் இருந்ததாகவும் சொப்பனம் கண்டார். இந்தச் சொப்பனத்திற்குப் பின்னர் இராஜா, கூட்டுக் கோதுமை என்று அழைக்கப்படும் எகிப்திய கோதுமையின் ஒரு காம்பை/தாளைக் கண்டார்; அதன் தலைப்பாகமானது மிகவும் பெரியதாகவும், ஏழு தானியக் கதிர்களாகப் பிரிந்ததாகவும் இருந்து, மிகவும் ஏராளமான பலனைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருந்தது; இதனை தொடர்ந்து பஞ்சக் காலங்களில் தெற்குக் கீழ்க்காற்றினாலும், ஈரப்பதம் இல்லாததினாலும், பாதிப்படைந்தும், பயன்படாமல் போவதுமான பயிர் போன்றதொரு, வேறொரு காம்பு/தாள் வந்தது; இதில் சாவியானதும், நலிந்ததுமான ஏழு கதிர்கள் காணப்பட்டது. பிந்தி வந்த இந்தச் சாவியான ஏழு கதிர்களும், செழுமையான அந்த ஏழு கதிர்களையும் விழுங்கிப்போட்டது.

முற்காலங்களில் கர்த்தர் தம்முடைய சொந்த ஜனமாக இருப்பவர்களில் சிலருக்கு மாத்திரம், உதாரணத்திற்கு யோசேப்பு, தானியேல் முதலானவர்களுக்கு மாத்திரம் முக்கியமான சொப்பனங்களை அருளாமல், சில சமயங்களில் புறஜாதியார்களுக்கும்கூட அருளியுள்ளார் என்பதை நாம் நினைவுகூர வேண்டும்; உதாரணத்திற்கு நேபுகாத்நேச்சார் பொற்சிலைக் குறித்தும், இன்னுமாக விருட்சம் குறித்தும் சொப்பனங்கள் கண்டார் மற்றும் இங்கு வரும் பார்வோனும் சொப்பனங்கள் கண்டார். எகிப்தின் இராஜா தன்னுடைய சொப்பனத்திற்கான விளக்கத்தை அறிந்துகொள்வதில் உதவியை விரும்பினதிலும், இதற்காக தனது அரச சபை ஞானிகளை அழைத்ததிலும், அவர்களால் திருப்திகரமான விளக்கத்தைக் கொடுக்க முடியாததிலும் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. யோசேப்பு விளக்கம் கொடுக்க, காரியம் எளிமையானதாக தோன்றுகின்றது மற்றும் இவ்வளவு எளிமையான விளக்கத்தைப் பார்வோனின் ஞானிகளாலும், ஆசாரியர்களாலும் கொடுக்க முடியவில்லையே என்றுதான் நாம் ஆச்சரியமடைகின்றோம்; இப்படியாகவே நம்முடைய ஞானத்தின் விஷயத்திலும் காணப்படுகின்றது; நாம் புரிந்துகொண்ட பிற்பாடு, உணர்ந்துகொண்ட பிற்பாடு எளிமையானதாகத் தோன்றும். இப்படியாகவே நம் நாட்களுடைய கண்டுபிடிப்புகளின் விஷயத்திலுங்கூடக் காணப்படுகின்றது. இந்தக் கண்டுபிடிப்புகள்

பற்றி ஏன் பல நூற்றாண்டுகளுக்கு முன்னமே எண்ணம் வரவில்லை என்று நாம் ஆச்சரியப்படுகின்றோம்.

இரகசியங்களை வெளிப்படுத்தும் மகாபெரியவரின் ஞானத்திற்கு, உலகமானது சரியான புகழைச் சாற்றுவதில்லை என்பதில் நமக்கு நிச்சயமே; இன்னுமாகப் பெரும்பாலான கிறிஸ்தவ ஜனங்களுங்கூட, இம்மாதிரியான காரியங்கள் தொடர்புடைய விஷயத்தில், தேவனுக்குக் கனத்தைச் சாற்றுவதில் அதிகம் விருப்பம் காண்பிப்பதில்லை. தற்காலத்தின் கண்டுபிடிப்புகள் சார்ந்த விஷயங்கள் அனைத்தும், ஆயிரவருட இராஜ்யத்திற்கான, "தேவனுடைய ஆயத்தம் பண்ணும் நாளின்," தெய்வீக முன்னேற்பாடுகளாய் இருக்கின்றதென, நாம் வேதவாக்கியங்களில் காணும் காரியங்களை, ஒருவேளை உலகத்தாரால் உணர்ந்துகொள்ள முடியுமானால், இது எவ்வளவாய் நம்முடைய அறிவு பெருத்த நாட்களில், உலகத்தினுடைய பெருமை எனும் நீர்க்குமிழியைக் (bubble) உடைப்பதாக இருக்கும்; அனைத்து ஞானமும் பரத்திலிருந்துதான் வருகின்றது என்றும், இன்னுமாக இராஜ்யத்திற்கான ஆயத்தத்திற்காக மாத்திரமல்லாமல், இராஜ்யத்தை அறிமுகப்படுத்தும் மகா உபத்திரவத்தின் நாளுக்குரிய ஆயத்தத்திற்குமென, இயற்கையின் சக்திகளை உருவாக்கும் விஷயத்தில் நமக்கு உதவுவதற்கும் மற்றும் (அறியாமை) மூடல் அகற்றப்படுவதற்குமான கர்த்தருடைய ஏற்றவேளை வரவில்லையெனில், நாமும் நம்முடைய மூதாதையர்கள் போன்று, குருடர்களெனத் தடவித்தேடுபவர்களாக இருந்திருப்போம் என்றும் நாம் அறிந்துகொள்கின்றோம்.

## "உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்"

எகிப்தின் ஞானிகள் பார்வோனுடைய சொப்பனத்திற்கான அர்த்தத்தைக் கொடுக்க முடியாமலிருந்தபோது, பார்வோனின் பானபாத்திரக்காரனோ, தன்னுடைய சொப்பனத்தையும், இரக்கமும், பரிவுமுள்ள யோசேப்பு எவ்வளவு துல்லியமாய்த் தனது சொப்பனத்திற்கு அர்த்தம் தெரிவித்தார் என்பதையும், அர்த்தத்தைத் தெரிவித்த யோசேப்பிற்கு, ஏதாகிலும் செய்வதாக தான் வாக்களித்ததையும், இதுவரையிலும் அதை, தான் செய்யவில்லை என்பதையும் நினைவுகூர்ந்தான். பானப்பாத்திரக்காரன்மேல் முழுக்கக் குற்றம் சுமத்திட முடியாது; யோசேப்பிற்கு அநுக்கிரகம் காட்டுவதற்குரிய தேவனுடைய ஏற்றவேளை வரும்போதுதான், பானப்பாத்திரக்காரன் யோசேப்பிற்கு உபயோகமாக இருக்க முடியும். பார்வோன் தன்னுடைய பானபாத்திரக்காரன் மற்றும் சுயம்பாகியினுடைய சொப்பனங்களுக்குக் கொடுக்கப்பட்ட அருமையான விளக்கம் பற்றின சம்பவத்தைக் கேட்டபோது, தன்னுடைய சொப்பனங்களுக்கான அர்த்தத்தை அறியும்படிக்கு, விரைவாகச் சிறைச்சாலைக்கு ஆள் அனுப்பினார். இங்கும் யோசேப்பினுடைய குணலட்சணத்திற்கான மற்றுமொரு பரீட்சையைப் பார்க்கின்றோம். இராஜாவின் முந்நிலையில் யோசேப்பு எவ்வாறு தன்னைத் தாழ்த்திக்கொண்டார் என்று நாம் கவனமாய்க் கவனிக்கலாம். யோசேப்பு கர்வம் கொண்டவராக, தற்பெருமையடித்துக் கொண்டவராக, தன்னை நிலைநாட்டுபவராகக் காணப்பட்டாரா? தன்னை விசித்திரமானவராகவும், தன்னுடைய மனதின் மறைவிடங்களிலிருந்து சில ஆழமான ஞானத்தை வெளிக்கொணர்பவராகவும் தன்னைக் காண்பித்துக் கொண்டாரா? இப்படியாக எதுவும் யோசேப்பு செய்யவில்லை. யோசேப்பு தன்னடக்கத்திற்கான உருவமாக இருந்தார்; மேலும் யோசேப்பினால் தன்னுடைய சொப்பனத்திற்கான அர்த்தத்தைக் கொடுக்கமுடியும் என்று இராஜா தனது நம்பிக்கையைத் தெரியப்படுத்தினபோது, யோசேப்பு பிரதியுத்தரமாக: "நான் அல்ல, தேவனே பார்வோனுக்கு மங்களமான உத்தரவு அருளிச்செய்வார்" என்றார்.

இங்கு யோசேப்பினுடைய மகத்துவத்திற்கான இரகசியங்களில் ஒன்றை நாம் காண்கின்றோம்; யோசேப்பு தேவனைக் கனப்படுத்தினார் மற்றும் இதன் காரணமாக இறுதியில் இவரும், தேவனால் கனப்படுத்துவதற்கும், உயர்த்துவதற்கும் பிரியப்படும் ஒரு நபரானார். வேதவாக்கியங்கள் இக்கருத்தினை எவ்வளவாய் முன்வைக்கின்றது! "தன்னைத்தான் உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத்தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்" என்று இடம்பெறும் ஆண்டவருடைய வார்த்தைகளைக் கவனியுங்கள் (லூக்கா 14:11). "ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்" என்ற அப்போஸ்தலனின் வார்த்தைகளைக் கவனியுங்கள் (1 பேதுரு 5:6). "உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்;

அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார்" என்ற அறிவுரைக்கேற்ப யோசேப்பின் விஷயத்தில் இப்படிப்பினையானது உண்மையானதாக இருந்ததுபோல, நம் விஷயத்திலும் உண்மையாக இருக்கத்தக்கதாக ஓ! இந்த ஒரு படிப்பினையை நாம் அனைவரும் நம்முடைய இருதயங்களிலும், மனங்களிலும் ஆழமாய்ப் பதியப் பெற்றுக்கொள்வோமாக (நீதிமொழிகள் 3:6).

ஜீவியத்தின் காரியங்கள் அனைத்திலும் கர்த்தரை நினைத்துக்கொள்ளுவது சரியான காரியமாக இருந்திட்டாலுங்கூட, தெய்வீக வார்த்தைகளினுடைய ஆராய்ச்சியைச் செய்வதும், தெய்வீக வார்த்தைகளுக்கு விளக்கம் கொடுப்பதுமாகிய விஷயங்களில் கர்த்தரை நினைத்துக்கொள்வதும் இன்னும் ஏற்றக்காரியமாகக் காணப்படுகின்றது. நம்மில் எவரும் நம்மைக் குறித்தோ அல்லது ஞானம் நம்முடையது என்றோ சொல்லாமல் இருப்போமாக; மாறாக பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்களுக்காகக் கர்த்தருக்கு நன்றியுள்ள உணர்வினால் நிரப்பப்பட்ட இருதயங்களுடன், அவருடைய சத்தியம் தொடர்புடைய விஷயத்தில் அவரையும், அவரது வார்த்தைகளையும், அவரது ஏற்பாடுகளையும் நினைத்துக்கொள்வோமாக. இக்காரியமானது, சபையில் பொறுப்பு வகிக்கும் ஸ்தானங்களில் காணப்படுபவர்களுக்கு, அதாவது பரிசுத்த ஆவியினாலே, கிறிஸ்துவினுடைய மந்தையை மேய்ப்பதற்கெனக் கண்காணிகளாக ஏற்படுத்தப்பட்டவர்களுக்கு விசேஷமாய்ப் பொருந்துகின்றதாய் இருக்கின்றது. எந்தளவுக்குச் சுயநல நாட்டம் காணப்படுகின்றதோ, எந்தளவுக்கு மனுஷர் மத்தியில் கனம் பெறுவதற்கு விருப்பம் இருக்கின்றதோ மற்றும் ஞானத்திற்கான ஊற்றாகிய கர்த்தரும், தமது சத்தியத்தை வழங்குவதற்கென அவர் பயன்படுத்தும் கருவிகளும் யார் ஒருவரால் புறக்கணிக்கப்படுகின்றார்களோ (அ) மதிப்புக்குறைத்து நடத்தப்படுகின்றார்களோ, அந்த ஒரு நபர் ஆபத்தான சூழ்நிலையில் காணப்படுகின்றார் என்பதும், சரியான பாதையை நோக்கி உண்மையாய் முன்னேறவில்லை என்பதும் நமக்கு உறுதியே.

## "அனுகூலமான வாய்ப்புகளைப் பற்றிப் பிடித்துக்கொள்ளுதல்"

பார்வோன் தனது சொப்பனத்தை எடுத்துக் கூறினார் மற்றும் அதைக் கேட்ட உடனே யோசேப்பு அதற்கான அர்த்தத்தைக்கூறி, அந்த இரண்டு சொப்பனங்களுமே ஒன்றுதான் என்று விவரித்தார், அதாவது இரண்டுமே ஒரே பாடத்தைத்தான் புகட்டுகின்றது என்று விவரித்தார்; மிகவும் செழிப்பான அறுவடைகள் உள்ள ஏழு வருடங்கள் காணப்படும் என்றும், அதைத் தொடர்ந்து பஞ்சமும், வறட்சியுமுள்ள ஏழு வருடங்கள் காணப்படும் என்றும், இந்த ஏழு வருட பஞ்ச காலத்தில், ஜனங்களுடைய ஜீவனைக் காப்பாற்றுவதற்கு, முதல் வரும் செழிப்பான ஏழு வருடங்களில் விளையும் தேவைக்கும் அதிகமான விளைச்சல்கள் அவசியப்படும் என்றும் கர்த்தர் பார்வோனுக்குச் சுட்டிக்காண்பித்துள்ளதாக யோசேப்பு விவரித்தார். யோசேப்பைக் காட்டிலும் செருக்குக்கொண்ட மனிதன் ஒருவன் யோசேப்பின் இடத்தில் காணப்பட்டிருப்பானானால், சொப்பனங்களின் அர்த்தத்தைத் தெரிவித்ததின் காரணமாக, தான் எகிப்தின் ஞானிகளைக் காட்டிலும் மிகச்சிறந்தவன் ஆகியுள்ளான் என்றும், தான் ஆச்சரியமான ஒரு காரியத்தைச் செய்துள்ளான் என்றும் எண்ணிக்கொள்ளும் மாத்திரத்தில், தன்னுடைய முக்கியத்துவம் பற்றின உணர்வினால் மிகவும் மூழ்கிப்போனவனாகி, அங்கு நின்றுகொண்டிருந்து, இராஜாவினுடைய நன்றிகளையும் பெற்றுக்கொண்டு, ஜனங்கள் அவனை ஞானி என்று கண்டுகொள்ளத்தக்கதாக, ஒரு சுதந்தர மனிதனாக வெளியேறி இருப்பான் என்பதில் சந்தேகமில்லை.

யோசேப்பினுடைய தாழ்மை ஒரு நடிப்பல்ல; ஞானம் கர்த்தருடையது என்று அவர் சாற்றும் காரியமே அவரது இருதயத்தின் உண்மையான உணர்வாக இருந்தபடியால், அவர் கர்த்தருடைய செய்தியை ஒப்படைத்தபோது பெருமை கொள்ளவில்லை, மாறாக சொப்பனம் ஆசீர்வாதமாக அமையத்தக்கதாக எடுக்கப்பட வேண்டிய சரியான நடவடிக்கைகள் என்னவாக இருக்கும் என்று யோசேப்பு அமைதியுடனும், தன்னடக்கத்துடனும் இராஜாவுக்கு யோசனை அளிக்கத் தொடங்கினார். "ஆகையால், விவேகமும் ஞானமுமுள்ள ஒரு மனுஷனைத் தேடி, அவனை எகிப்து தேசத்துக்கு அதிகாரியாகப் பார்வோன் ஏற்படுத்துவாராக. இப்படிப் பார்வோன் செய்து, தேசத்தின்மேல் விசாரணைக்காரரை வைத்து, பரிபூரணமுள்ள ஏழு வருஷங்களில் எகிப்து தேசத்திலே விளையும்

விளைச்சலில் ஐந்தில் ஒரு பங்கை வாங்கும்படி செய்வாராக. அவர்கள் வரப்போகிற நல்ல வருஷங்களில் விளையும் தானியங்களையெல்லாம் சேர்த்து, பட்டணங்களில் ஆகாரம் உண்டாயிருக்கும்படிக்கு, பார்வோனுடைய அதிகாரத்துக்குள்ளாகத் தானியங்களைப் பத்திரப்படுத்தி வைத்துவைப்பார்களாக. தேசம் பஞ்சத்தினால் அழிந்துபோகாதபடிக்கு, அந்தத் தானியம் இனி எகிப்துதேசத்தில் உண்டாகும் பஞ்சமுள்ள ஏழு வருஷங்களுக்காக தேசத்திற்கு வைப்பாயிருப்பதாக என்றான்" (ஆதியாகமம் 41:33-36). இந்த வேலைக்கு தான்தான் நியமிக்கப்படப்போகின்றார் என்று யோசேப்பு கொஞ்சமும் எண்ணியிருந்திருக்க மாட்டார். (எகிப்தியன் அல்லாத) அந்நிய பிறப்புடைய ஒருவனை, பார்வோன் சிறைச்சாலையிலிருந்து எடுத்து, தன்னுடைய சாம்ராஜ்யத்தின் மற்ற அதிகாரிகளுக்கும் மேலான ஸ்தானத்திற்கு உயர்த்துவது என்பது எதிர்ப்பார்ப்பதற்கு இயலாத ஒன்றாகும். எனினும் இப்படியாகத்தான் பார்வோன் செய்தார் மற்றும் இங்கிருந்துதான் நம்முடைய பாடம் ஆரம்பிக்கின்றது.

## "தேவனைக்காட்டிலும் நம்மால் மிகவும் ஞானமாய்த் தெரிவு செய்யக்கூடுமா?"

பார்வோன் தனது அரசபையின் ஊழியக்காரரை நோக்கி, "தேவன் நமக்கு முன்னெச்சரிப்பு வழங்கியுள்ள பஞ்சக் காலத்திற்கான ஆயத்தங்களைப் பண்ணும் இந்த மாபெரும் வேலைக்குத் தலைவனாக இருக்கும்படிக்கு, தேவ ஆவியைப் பெற்ற இந்த யோசேப்பைப்போல வேறொருவன் உண்டோ?" என்று கூறினார். பார்வோன் தனது அரசபையின் ஊழியக்காரர்களுடைய சம்மதத்திற்குக் காத்திருக்காமலும், அக்காலத்தினுடைய ஏகாதிபதி ஆட்சி (தன் விருப்பம்போல் ஆளுகிற) முறைமையின் விதத்தில், கேள்விக்கானப் பதிலை முடிவு பண்ணி, யோசேப்பை நோக்கி, "தேவன் இவையெல்லாவற்றையும் உனக்கு வெளிப்படுத்தியிருக்கிறபடியால், உன்னைப்போல விவேகமும் ஞானமுமுள்ளவன் வேறொருவனும் இல்லை. நீ என் அரமனைக்கு (இராஜ்யத்திற்கு) அதிகாரியாயிருப்பாய்; உன் வாக்கின்படியே என் ஜனங்கள் எல்லாரும் அடங்கி நடக்கக்கடவர்கள்; சிங்காசனத்தில் மாத்திரம் உன்னிலும் நான் பெரியவனாய் இருப்பேன் என்றான். பின்னும் பார்வோன் யோசேப்பை நோக்கி: பார், எகிப்து தேசம் முழுமைக்கும் உன்னை அதிகாரியாக்கினேன்" என்றார் (ஆதியாகமம் 41:39-41).

மிகவும் கவர்ச்சிகரமாக இருக்கும் புனைக்கதைகளில்/நாவல்களில் காணப்படும் கதைகளையும் மிஞ்சும் அளவுக்கு, யோசேப்பு அடிமைத்தனத்தினின்றும், காவல் கிடங்கிலிருந்தும், இராஜாவுக்கடுத்த நிலையிலுள்ள வல்லமைக்கும், கனத்திற்கும், மதிப்பிற்கும், உலகத்திலுள்ள மிகப்பெரிய தேசத்தினுடைய அதிபதியின் பதவிக்கும் மாற்றப்பட்ட காரியமானது, மிகவும் சிலிர்க்க வைக்கின்றதாய் இருக்கின்றது. இது உண்மையென்று நம்புவதற்குச் சிரமமாய் இருக்குமளவுக்கு, இது மிகவும் ஆச்சரியமானக் காரியமாக இருக்கின்றது. நம்முடைய நாட்களிலும் மற்றும் நாடுகளிலும் நிலவும் ஜனநாயகத்தின் கீழ், இப்படியாக ஒருநிலையிலிருந்து, இன்னொரு நிலைக்கு மாற்றப்படுவது என்பது சாத்தியமற்றதாக இருப்பினும், முற்காலங்களில் இது சாத்தியமற்றக்காரியமல்ல என்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும். உதாரணத்திற்குத் தானியேல் எபிரெய அடிமையாக சிறைப்பிடித்துக் கொண்டுபோகப்பட்டார் என்பதையும் நாம் அறிவோம், எனினும் தானியேல் நேபுகாத்நேச்சரால், பாபிலோன் சாம்ராஜ்யத்தின் ஆளுநர்களில் ஒருவராக இருக்கும்படிக்குத் தெரிவு செய்யப்பட்டார். மேலும் யோசேப்பைப்போலவே, தானியேலும் சொப்பனங்களுக்கான அர்த்தம் கொடுப்பவர் என்ற விதத்திலேயே, இராஜாவின் முன்பு கொண்டு வரப்பட்டார் என்பதையும் நாம் நினைவுகூருகின்றோம். **பேராசிரியர் சாய்சி** அவர்கள் பின்வருமாறு கூறுகின்றார், **"சீரியன் ஒருவன் இப்படியாக எகிப்தினுடைய மாநிலங்களின் உயர் ஸ்தானங்களுக்கு உயர்த்தப்படுவது என்பது ஒருபோதும் நடந்திராத காரியமல்ல மற்றும் இக்காரியம் சிங்காசனத்தில், எகிப்து இராஜ வசம்சத்தில் பிறந்த ஒருவர் காணப்படும் நாட்களில் சம்பவிப்பதைக் காட்டிலும், ஹிக்சாஸ்** (Hyksos; ஆட்டு இடையர்களின்) **ஆளுகையினுடைய நாட்களில் சுலபமாய்ச் சம்பவிக்கிற காரியமாகும். . . . பல நூற்றாண்டுகளாக முகமதியன்** (Mohammedan Age) **காலங்களில், எகிப்தை ஓர் அடிமை அல்லாமல், வேறு எவராலும் ஆளமுடியாது."** 1852-ஆம் ஆண்டில் பெர்சியாவின் பிரதம மந்திரியாகவும், இராஜ்யத்தில் இரண்டாம்

நிலையிலும், ஆனால் அதிகாரத்தில முதலாவதாகவும் இருந்தவர், கழுதை ஓட்டுனரின் மகனாவார் என்பதையும் நாம் நினைவுகூருகின்றோம்; இன்னுமாக வலியிலிருந்து ஓர் ஏழை பல்மருத்துவரினால் விடுவிக்கப்பட்ட துருக்கியின் சுல்தான், கைமாறாக மருத்துவரை ஆட்சி எல்லையில் பிரபுவாக்கினார் என்பதையும் நாம் நினைவுகூருகின்றோம்.

யோசேப்பு அடிமை நிலைமையிலிருந்தும், காவல் கிடங்கிலிருந்தும், உலகத்திலுள்ள வல்லமையில் இரண்டாம் நபராக உயர்த்தப்பட்டக் காரியமானது, இன்னுமாக அவரது வாழ்க்கை, ஒருவருக்கு நிழலாக இருக்கின்றது என்பதையும் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது. நமது கர்த்தர் இயேசு அடிமையின் ரூபம் எடுத்தார் அல்லவா? அவர் மரணம் எனும் மாபெரும் சிறைச்சாலைக்குள் கடந்துபோனார் அல்லவா? அவர் திடீரென அண்டசராசரத்தை ஆளுபவராகிய பிதாவுக்கு அடுத்த ஸ்தானத்தில், சிங்காசனத்திற்கு உயர்த்தப்பட்டார் அல்லவா? மேலும் தேவனுடைய ஏற்பாடுகளின் கீழ் இயேசு பெற்றுக்கொண்ட அனுபவங்களானது, எதிர்க்காலத்தில் முழுஉலகத்தையும் ஆசீர்வதிக்கக்கூடிய அவரது மாபெரும் வேலைக்கு அவரை ஆயத்தப்படுத்தினதல்லவா? யோசேப்பு எகிப்து ஜனங்களுடைய ஜீவியங்களை இரட்சித்ததுபோன்று, நிஜமான யோசேப்பும், உலகத்தாரின் ஜீவனை இரட்சிப்பார் அல்லவா? இவைகளை எண்ணிப்பார்க்கையில் நாம் எவ்வாறு கிறிஸ்துவினுடைய சரீரத்தின் அங்கங்கள் ஆகும்படிக்கு அழைக்கப்பட்டிருக்கின்றோம் என்பதையுங்கூட நாம் நினைவில்கொள்வோமாக; "கிறிஸ்துவுடனேகூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனேகூடப் பாடுபட்டால் அப்படியாகும்" (ரோமர் 8:17). இந்த ஓர் எண்ணத்தை நம்முடைய மனங்களில் கொண்டிருப்போமானால், சோதனைகளும், சிரமங்களும், இந்தத் தற்காலத்தின் பாடுகளும், உபத்திரவங்களும், ஏமாற்றங்களுமாகிய அனைத்தும் நாம் சரியான விசுவாசம் கொண்டிருக்கும் பட்சத்தில், அதாவது அவரது தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கும் என்ற விசுவாசம் கொண்டிருக்கும் பட்சத்தில், மகிழ்ச்சியுடன் நம்மால் சகிக்கப்படும்.

## "முழங்கால் யாவும் அவருக்கு முன்பாக முடங்கும்"

சாம்ராஜ்யத்தின் புதிய அதிபதியை (அ) பிரதம மந்திரியை இராஜாவாகிய பார்வோன், ஜனங்களுக்கு அறிமுகப்படுத்தி வைப்பதற்கான வேளை வந்தபோது, முதலாவதாக யோசேப்பினுடைய அந்தஸ்தைச் சுட்டிக்காட்டத்தக்கதாக, அவருக்குப் பொருத்தமான வஸ்திரத்தை அணிவிப்பதற்கும், இரண்டாவதாக யோசேப்பை இரண்டாம் இரதத்தின்மேல் ஏற்றுவதற்கும், மூன்றாவதாக யோசேப்பு, ஜனங்கள் முன்னிலையில், தண்டோராப்போடுபவர்களால் ஊர்வலத்தில் அழைத்துச் செல்லப்படுவதற்கும், இவர்கள் யோசேப்பினுடைய அந்தஸ்தை அறிவிப்பதற்கும், ஜனங்களைத் தெண்டனிட்டுப் பணியுங்கள் என்று யோசேப்புக்கு முன்பாகக் கூறுவதற்கும், ஜனங்கள் யோசேப்பை இராஜாவினுடைய பிரதிநிதியென ஒப்புக்கொள்ளும்படிக்குக் கூறுவதற்கும், பார்வோன் ஏற்பாடு பண்ணினார். இது நமது கர்த்தராகிய இயேசுவைக் குறித்தும், அவருடைய சோதனைகள் முடிவடைந்த பிற்பாடு அவர் உயர்வாய் உயர்த்தப்பட்டது குறித்தும் அப்போஸ்தலர் கூறியுள்ள வார்த்தைகளை நமக்கு நினைப்பூட்டுகின்றது; "ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும்" செய்தருளினார் என்று பவுல் குறிப்பிடுகின்றார் (பிலிப்பியர் 2:9,10). ஆண்டவருடைய இந்த உயர்வான உயர்த்தப்படுதலைக் குறித்து நாம் ஆராய்கையில், அவருடைய மணவாட்டியானவள் அவரோடுகூட, அவரது மகிமையிலும், கனத்திலும், அழியாமையிலும் உடன்சுதந்தரவாளியாக இருக்கப்போகின்றாள் என்றும், மணவாட்டி வகுப்பாரில் அங்கங்கள் ஆகுவதற்குரிய சிலாக்கியமானது, இந்தச் சுவிசேஷ யுகத்திலுள்ள அழைக்கப்பட்டு, தெரிந்துகொள்ளப்பட்டு, உண்மையுள்ளவர்களாக இருப்பவர்களுக்கே உரியதாகும் என்றும் உள்ளவைகளை நாம் மறந்துவிட வேண்டாம்.

இவைகளை நாம் எப்போதும் மனதில் கொண்டவர்களாக இருப்போமானால், நாம் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும், தேவபக்தியும் உள்ளவர்களாய் இருப்போம்; மேலும் பூமிக்குரிய இன்பங்களும், துன்பங்களும், ஐசுவரியங்களும், தரித்திரமும், பெலவீனங்களும் மற்றும் கீழானவைகளுமாகிய அனைத்தும் எத்துணை அற்ப காரியமாக நமக்குத் தோன்றும்! மேலும் மகா மேன்மையும், அருமையுமான

வாக்குத்தத்தங்களுக்குரிய நம்முடைய அழைப்பையும், தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்துவதற்கான நம்முடைய வாஞ்சையில், நாம் மிகவும் தீவிரமாய் இருப்போம். பார்வோன் யோசேப்பிற்கு ஒரு புதிய பெயரைச் சூட்டினார்; இதன் அர்த்தமானது, "ஜீவ அப்பம் மூலம், மரணத்திலிருந்து விடுவிப்பவர்" என்பதாகும். நமது அருமை மீட்பர் தம்மைக் குறித்து, "நானே வானத்திலிருந்திறங்கின ஜீவ அப்பம்" என்று கூறினதை நாம் நினைவுகூருகின்றோம். முழு உலகமும் தெய்வீக வார்த்தைகளைப் புசித்து, அதன் பாடங்களையும், அனுபவங்களையும், மாபெரும் மீட்பரின் மகிமையான இராஜ்யத்தில் அவருடைய ஊழியம் மற்றும் ஒழுங்குபடுத்துதலின் கீழ், தங்களுடையதாக்கிக்கொள்வார்களானால், இறுதியில் அனைவரையும் ஆதாமின் மரணத்தினின்று விடுவிக்கத்தக்கதாக, தேவன் இயேசுவில் ஜீவ அப்பத்தை அருளியுள்ளார். இவைகள் அனைத்துமே எகிப்தின் அதிகாரியென யோசேப்பு நடந்துகொண்ட காரியங்களில் நன்கு சித்தரிக்கப்பட்டுள்ளது.

## "யோசேப்பு எகிப்தியர்களை அடிமைப்படுத்தினாரா?"

ஜனங்களுடனான யோசேப்பின் வியாபார நடவடிக்கையைச் சிலர் கடினமாய்க் குற்றம் சாட்டியுள்ளனர், ஆனால் இதைக் குறித்த எந்த ஒரு குற்றச்சாட்டும் வேதவாக்கியங்களில் இல்லை. யோசேப்பினுடைய முதல் வேலை, எகிப்து தேசம் எங்கும் சுற்றிப்பார்த்து, களஞ்சியங்களுக்கான பொருத்தமான இடங்களைத் தெரிந்துகொண்டு, களஞ்சியங்களைக் கட்டியெழுப்புவதற்கான ஒப்பந்தங்களை (contracts) போடுவதாக இருந்தது. அடுத்ததாக திரளான அறுவடைகள் உள்ள ஏழு வருடங்கள் முழுவதும், யோசேப்பு ஜனங்களிடமிருந்து முதலாவதாக அவர்கள் இராஜாவுக்கு வழக்கமாய்ச் செலுத்தும் வரியாகிய, ஐந்தில் ஒரு பங்கை வசூலித்தார். இதனோடுகூட இராஜாவினுடைய பணத்தைக்கொண்டு, ஜனங்களிடமிருந்து, அவர்களால் கொடுக்க முடிந்த அளவிலான தானியங்களை வாங்கி, இப்படியாக திரளான தானியங்களைச் சேகரித்து வைத்தார். பஞ்சமும், வறட்சியுமான வருடங்கள் வந்தபோது, ஜனங்கள் தாங்கள் முன்பு அரசாங்கத்திடம் விற்ற அதே தானியங்களை, அரசாங்கத்திடமிருந்து திரும்பவும் விலைக்கொடுத்து வாங்குவதில் மகிழ்ச்சியாய் இருந்தார்கள். கோதுமைக்கு மிக அதிகமான விலைக் கேட்கப்பட்டதாகவும், ஜனங்கள் ஏமாற்றப்பட்டதாகவும் நமக்கு எந்தக் குறிப்பும் இல்லை.

ஜனங்கள் தங்களுடைய பணம் யாவற்றையும் செலவழித்து முடித்தப் பிற்பாடுங்கூடப் பஞ்சம் நிலவினது; மேலும் அதிபதியான யோசேப்பு ஜனங்களிடமிருந்து அவர்களது கால்நடைகளையும், அவர்களுடைய யாவற்றையும் விலைக்கு வாங்கினார் மற்றும் இவ்வாறாக இவைகள் இராஜாவினுடைய சொத்தாயின. இது கடைப்பிடிக்கத்தக்கதான காரியமாக நமக்குத் தோன்றுவதில்லை, ஏனெனில் இக்காரியமானது, வல்லமையையும், அதிகாரத்தையும் மிக அதிகமாய் ஓர் ஏகாதிபதியின் கரங்களில் குவிக்கின்றதாய் இருக்கின்றது. ஆனால் ஒருவேளை தெய்வீக நியமனத்தின்படியும், தெய்வீக வழிநடத்துதலின்படியும், தெய்வீகச் சித்தத்தின்படியுமான இராஜாக்களும், ஆசாரியர்களும் உலகத்தில் காணப்படுவார்களானால், இத்தகையதொரு ஏகாதிபதி ஆட்சியானது சிந்தித்துப்பார்க்க முடியாத அளவுக்குச் சகல ஜனங்களுக்கும் மகா பெரிய ஆசீர்வாதங்களில் ஒன்றாக இருக்கும். இதுவே ஆயிரவருட யுகத்தின்போது நடைமுறையில் காணப்படும் என்று நாம் வேதவாக்கியங்கள் மூலம் அறிந்திருக்கின்றோம்; உலகமானது, அவர்களின் அதிகாரிகளுக்கு வாக்களிப்பதற்கும், அவர்களுக்கான சட்டங்களை இயற்றுவதற்கும் அழைக்கப்படுவதில்லை, மாறாக சகல முழங்கால்களும் யாருக்கு முடக்கப்பட வேண்டுமோ, தேவனுடைய மகிமைக்கென்று சகல நாவுகளும் யாரை அறிக்கைப் பண்ணிட வேண்டுமோ, அப்படியான தெய்வீக நியமித்தலை உடைய அந்த மாபெரும் அதிபதிக்குக் கீழ்ப்படிவது மாத்திரமே கட்டளையிடப்படும்.

மகிமையிலுள்ள கிறிஸ்துவுக்கும், அவர் உலகத்தை ஆசீர்வதிக்கும் விதத்திற்குமான மற்றுமொரு நிழலை நாம் யோசேப்பில் காண்கின்றோம். நம்முடைய சந்ததியிலுள்ள ஒவ்வொரு அங்கத்தினருக்கும் போதுமான அளவுக்கு ஜீவ அப்பத்திற்கான முழு ஏற்பாட்டையும் நம்முடைய மீட்பர் ஏற்கெனவே பண்ணிவிட்டார். அவருக்குள் ஜீவன் இருந்தது மற்றும் அந்த ஜீவனை அவர் நம் பொருட்டாகக் கொடுத்தார். இப்பொழுது அவருடைய அங்கத்தினர்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டவர்களும், அவரை

ஏற்றுக்கொண்டபோது இந்த ஜீவனை விசுவாசத்தினால் உடனடியாகப் பெற்றுக் கொண்டவர்களுமாகிய நாம், அந்த ஜீவனை நிஜமாக முதலாம் உயிர்த்தெழுதலின் போது பெற்றுக்கொள்வோம் மற்றும் இந்த ஆசீர்வாதங்கள் பெற்றுக்கொள்வது தொடர்புடைய விஷயத்தில், நாம் வரிசையில் உலகத்தைக் காட்டிலும் முந்தினவர்களாகக் காணப்படுகின்றோம். சிறு மந்தையினர் மாத்திரமே இப்பொழுது உருவாகிக்கொண்டிருக்கின்றனர், இப்பொழுது போஷிக்கப்படுகின்றனர், வானத்திலிருந்து இறங்கி வந்த அப்பத்தை ஏற்றுக்கொள்வதன் மூலமாக மரணத்திலிருந்து ஜீவனுக்கு இப்பொழுது கடந்துவருபவர்களாக இருக்கின்றனர்; மணவாட்டியும், அவளுடைய தோழிகளாகிய கன்னிகைகள் மாத்திரமே இப்பொழுது மரணத்திலிருந்து ஜீவனுக்குக் கடந்துவருபவர்களாக இருக்கின்றனர். தேவன் மனதில் கொண்டிருக்கின்றதும், நம்முடைய மீட்பரை அவர் நியமித்ததுமான மாபெரும் வேலையானது, உலகத்தை இரட்சிக்கும் வேலையாகும் மற்றும் உலகத்திற்கான இந்த இரட்சிப்பிற்குரிய வழிவகை மற்றும் வேளை, ஆயிர வருட யுகமாகிய, மனுஷர்கள் மத்தியிலான பரலோக இராஜ்யத்தினுடைய ஆளுகையின் போதேயாகும்.

## "வானத்திலிருந்து இறங்கி வந்த அப்பம்"

ஆயிரவருட யுகத்தின்போது, ஜீவ அப்பத்தை அளிக்கும் மாபெரியவரும், அவருடைய உடன் பங்காளியாகிய மணவாட்டியும், ஜீவ அப்பத்தை உலகத்திற்கு, முற்பிதாக்கள் வழியாகக் கொடுப்பார்கள், ஏனெனில் உலகத்திற்கு அப்போது ஜீவ அப்பம் தேவையாக இருக்கும் மற்றும் அதன் மதிப்பையும் உலகம் சரியாக உணர்ந்திருக்கும். நாளுக்கு நாள், வருடத்திற்கு வருடம், அக்காலங்கள் அனைத்திலும், உலகமானது தேவனுடைய பிரதிநிதியும், மாபெரும் அதிகாரியுமானவருக்கு முழங்கால்களை முடக்கிட வேண்டும். இன்னுமாக அக்காலம் முழுவதிலும் அவர்கள் நித்திய ஜீவனை அடையத்தக்கதாக, ஒன்றன் பின் ஒன்றாகக் கொடுத்துக்கொண்டிருப்பது/ஒப்புக்கொடுத்துக்கொண்டிருப்பது அவசியமாய் இருக்கும் மற்றும் இறுதியில் ஆயிரவருட யுகத்தின் முடிவுவரைக் காணப்படுபவர்கள், அதாவது இரண்டாம் மரணத்தில் அறுப்புண்டு போகாமல் காணப்படுபவர்கள், மனுஷன் புசித்தால் மரியாமல் இருக்கும் வானத்திலிருந்து இறங்கிவந்த இந்த ஜீவ அப்பம் அடையாளப்படுத்தும் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக, தங்கள் சொத்தை, தங்களுடைய அனைத்தையும், தங்களையும் சேர்த்து மாற்றாக (exchange) கொடுத்துவிட்டவர்களாக இருப்பார்கள்.

யோசேப்பினால் சேகரிக்கப்பட்டத் திரளான தானியங்களானது, முழுமையாய் ஒப்புக்கொடுக்கும் அளவுக்குள்ள அன்புடன்கூடிய கீழ்ப்படிதல் எனும் நிபந்தனையின் கீழ், குமாரனிடத்திலிருந்து நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வதற்கு விரும்பும் மனித இனத்தின், ஒவ்வொரு அங்கத்தினர்களுக்கும் நித்திய ஜீவனை அருளுவதற்குரிய தேவனுடைய திரளான ஏற்பாட்டை நமக்கு நிழலில் உறுதிப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. நம்முடைய சித்தத்தையும் மற்றும் நம்முடைய அனைத்தையும் அழியக்கூடிய சக மனிதனிடத்தில் ஒப்புக்கொடுப்பது என்பது மிகவும் அபாயகரமான காரியமாகவும், நாம் இதைச் செய்துவிடாதபடிக்குப் பார்த்துக்கொள்ள வேண்டிய காரியமாகவும் இருந்தாலும், இப்படியாகக் கர்த்தர் தொடர்புடைய விஷயத்தில் காணப்படுவதில்லை. கர்த்தர் இம்மாதிரியான அபாயங்கள் விஷயங்களில் பிரம்மாண்டமான விதிவிலக்காவார். அவரிடத்தில் நாம் நம்மை முற்றும் முழுமையாக ஒப்புக்கொடுத்துவிடுதல் என்பது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவ சமாதானத்தை அவரது ஆசீர்வாதம் மூலம் நம் ஒவ்வொருவருக்கும் கொண்டுவருகின்றதாய் இருக்கின்றது மற்றும் நம்முடைய மேலான நன்மையைக் கருதியும், அவரது மகிமைக்காகவும், நம்முடைய குணலட்சணங்களை, நமது ஜீவியத்தின் சகல காரியங்களுடன் அவர் வனைந்து, நெறிப்படுத்துவதாகவும் இருக்கின்றது. உலகத்திற்கு எத்தகைய ஓர் ஆசீர்வாதமான எதிர்க்கால வாய்ப்புள்ளது! இன்னுமாக இந்த அப்பத்தை (உலகத்தைவிட) முன்கூட்டியே விசுவாசத்தின் மூலம் புசிக்கிறவர்களும், நிஜமான யோசேப்போடுகூட, நீதியின் நிமித்தமான அவரது பாடுகளிலும், சோதனைகளிலும் பங்குகொள்பவர்களுமாகிய நாம் எவ்வளவாய் நம்முடைய இச்சிலாக்கியத்தில் களிக்கூருகின்றவர்களாய் இருக்க வேண்டும்.

## “ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், அவன் கேட்கக்கடவன்”

இங்கு நம்முடைய ஆதார வசனம் மறக்கப்படக்கூடாது. நிச்சயமாக நாம் அனைவரும் ஞானத்தில் குறைவுள்ளவர்களாய் இருக்கின்றோம் மற்றும் கிறிஸ்துவுக்குள்ளாக, தேவன் நமக்குப் பண்ணியுள்ள அன்புடன்கூடிய ஏற்பாடுகளின் நீளம், அகலம், ஆழம் மற்றும் உயரத்தை நாம் மிக மிகத்தெளிவாக உணர்ந்துகொள்ளும்போது, ஞானம் தொடர்புடைய நம்முடைய குறைச்சலை நாம் அதிகமாய் உணர்ந்துகொள்கின்றவர்களாய் இருப்போம்.

ஒருகாலத்தில் உலகத்தாருக்கு இருக்கின்றதுபோல, நமக்கும் வாழ்க்கை சிக்கலான வழிப்பாதையாகத்தான் இருந்தது; அநேகம் கடமைகளும், பொறுப்புகளும் இருந்தது, ஆனால் இவைகளுக்குப் போதுமானளவு பலனையோ (அ) விளைவையோ நம்மால் காணவும் முடியவில்லை. நாம் பிறந்தோம், நாம் சாப்பிட்டோம், நாம் பானம் பண்ணினோம், நாம் உறங்கினோம், பள்ளியில் போய் நாம் கற்றோம், நாம் வேலை பார்த்தோம் மற்றும் கொஞ்சமோ, நிறையவோ பாடுகளும், வேதனைகளும், இன்பங்களும் கலந்து காணப்பட்ட நம்முடைய வாழ்க்கையை அனுபவித்தோம், ஆனால் இவைகளின் நோக்கம் என்னவென்று உணர்ந்துகொள்ளாமலேயே காணப்பட்டிருந்தோம். இப்பொழுதோ பரத்திலிருந்து வரும் ஞானம் பெருகியுள்ளதினால், நம்மில் சிலர் நம்முடைய புரிந்துகொள்ளுதலின் கண்களினால், யுகங்களுக்கடுத்த மாபெரும் தெய்வீகத் திட்டத்தையும், கிறிஸ்து இயேசுவுக்குள்ளான நம்மிடத்திலான அன்புடன்கூடிய இரக்கத்தையும், தெய்வீக நோக்கத்தையும் காண்கின்றோம் மற்றும் நாம் நம்முடைய மீட்பரோடுகூடப் பாடுபடுவோமானால், நாம் அவருடன் உடன்சுதந்தரர்களாகவும், தேவனுடைய சுதந்தரவாளிகளாகவும் காணப்படுவோம் என்றும் காண்கின்றோம்.


இதை நாம் கண்டபடியால், நம்முடைய ஜீவியத்தின் முழுத்திசையும் மாற்றப்பட்டுள்ளது. இப்பொழுதோ ஜீவித்தல் என்பது மேம்பட்டதாகிவிட்டது; ஜீவித்தல் என்பது முழுக்க முக்கியத்துவம் நிறைந்ததாகவும், முழுக்க சுவாரஸ்யமாகவும் இருக்கின்றது. நாட்கள், மணி நேரங்கள் விரைவாகக் கடந்துபோய்க்கொண்டிருக்கின்றது மற்றும் இந்த நாட்களும், மணி நேரங்களும் தேவன் நம்மிலும், நமக்காகவும் நிறைவேற்றிக்கொண்டிருக்கிறதும், நாம் முழு இசைவுடன் காணப்பட்டுவருகிறதுமான பிரம்மாண்டமான நோக்கங்களுக்குப் போதுமானவைகளாக இல்லை என்றே நாம் எண்ணுகின்றோம். இன்னமும் நாம் ஞானத்தில் குறைவுப்பட்டவர்களாய் இருக்கின்றோம் மற்றும் நாம் அதிகமாய் ஞானத்தைப் பெற்றுக்கொண்டு வரவர, நாம் இன்னமும் குறைவுப்பட்டவர்களாய் இருக்கின்றோம் என்பதை அதிகமாய்க் காணமுடிகின்றது. ஆகையால் நம்மைத் தம்முடைய விலையேறப்பெற்ற இரத்தத்தினால் வாங்கிக்கொண்டவரும், நம்மை அன்புகூர்ந்தவருமானவர் மூலம், நாம் இறுதியில் ஜெயங்கொண்டவர்களாக, முற்றிலும் ஜெயங்கொண்டவர்களாக ஆகும் நோக்கத்திற்காக, நமக்கு வரும் ஜீவியத்தின் ஒவ்வொரு அனுபவங்களையும் நாம் நன்மைக்கேதுவாகப் பயன்படுத்தத்தக்கதாக, நாம் தொடர்ந்து, சகல கிருபையும், ஞானமும், சத்தியமும் உள்ள ஊற்றண்டைக்குச் செல்வது அவசியமாகும் (ரோமர் 8:37).

ஆமென்!

---

## பாகம் 3

# யோசேப்பு தனது சகோதரர்களை மன்னித்தல்



[R2893]

# “இரக்கமுள்ள யோசேப்பு”

## ஆதியாகமம் 45:1-15

“நீ தீமையினாலே வெல்லப்படாமல், தீமையை நன்மையினாலே வெல்லு.” - ரோமர் 12:21

மனிதர்களுடைய காரியங்களிலுள்ள தெய்வீகப் பராமரிப்புப் பற்றின விஷயமே இப்பாடத்தினுடைய சாராம்சமாகும். யோசேப்பு எகிப்தினுடைய பார்வோனுக்கு அடுத்த நிலையில் ஒன்பது வருடங்கள் காணப்பட்ட பிற்பாடு, அவருக்கு முப்பத்தொன்பது வயதாய் இருந்தது. பரிபூரண விளைவுள்ள ஏழு வருடங்கள் கடந்துபோய்விட்டன; எகிப்தின் தானியக் களஞ்சியங்களானது, திரளான தானியங்களினால் நிரம்பியிருந்தது மற்றும் உரைக்கப்பட்டப்படி வந்திட்ட ஏழு வருட பஞ்ச காலத்தில், இரண்டு வருடங்களும் கடந்துபோய்விட்டன. யோசேப்பு தன்னுடைய தகப்பனோடும், சகோதரர்களோடும் தொடர்புகொள்வதற்கு எவ்விதமான முயற்சியும் எடுத்துக்கொள்ளாததுபோன்று தோன்றுகின்றது; இதற்குக் காரணம், அந்நாட்களில் தொடர்புகொள்வதற்கான வழிமுறைகள் மிகவும் சிறிய அளவிலேயே இருந்ததினால் இருக்கலாம்; இன்னுமாக தொடர்பு கொள்ள முற்படாததற்குக் காரணம், யோசேப்பு சில வருடங்களாக தெய்வீகப் பராமரிப்பானது, தனது காரியங்களை வழி நடத்திக்கொண்டுவருக்கின்றது என்பதை உணர்ந்துகொண்டு வந்தார் என்றே நாம் மிகக் குறிப்பாய் எண்ணுகின்றோம். யோசேப்பு தன்னுடைய இளம் வயதில் தனக்கு வந்திட்டச் சொப்பனங்களை நினைவில் வைத்திருந்தார் மற்றும் அவைகள் இப்பொழுது நிறைவேறி வருவதையும் அவரால் காணமுடிந்தது. ஆகவே தன்னுடைய கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டிருக்கும் அக்காரியத்தை, யோசேப்பு தெய்வீக மேற்பார்வையின் கீழாகவே விட்டுவிட்டார். யோசேப்பு பஞ்சத்தைக் குறித்தும், அது எவ்வாறு பாலஸ்தீனியாவையும் பாதிக்கும் என்பது குறித்தும், எவ்வாறாக தனது தகப்பனையும், சகோதரர்களையும், அவர்கள் குடும்பங்களையும், மந்தைகளையும் பாதிக்கும் என்பது குறித்தும் சிந்தித்திருந்திருப்பார் என்பதில் சந்தேகமே இல்லை. சுற்றுப்புறங்களிலுள்ள மற்ற ஜனங்கள் தானியம் வாங்குவதற்கென எகிப்துக்கு வருவதுபோல, எபிரெயர்களும் எகிப்துக்கு வருவார்கள் என்று யோசேப்பு எதிர்பார்த்திருந்திருப்பார் என்பதிலும் சந்தேகமில்லை; எபிரெயர்கள் பஞ்சகாலத்தினுடைய, இரண்டாம் வருஷத்தின் முடிவில் எகிப்துக்கு வரவேண்டிய கட்டாயத்திற்குள்ளானார்கள்.

பிரதான அதிகாரியினுடைய அனுமதியில்லாமல், அந்நிய நாட்டினர்களுக்குத் தானியங்கள் விற்பனை செய்வதைத் தடைப்பண்ணுகிற கட்டளைகள் ஏதேனும் இருந்திருக்க வேண்டுமென்று நாம் அனுமானிக்கின்றோம்; ஆகையால்தான் யோசேப்பின் சகோதரர்கள் யோசேப்பிடம் விவரங்கள் சொல்லத்தக்கதாக, யோசேப்பின் முன்னிலையில் கொண்டு வரப்படுவதற்கான கட்டாயத்துக்குள்ளானார்கள். யோசேப்பு தனது சகோதரர்களைப் பரீட்சிக்கத்தக்கதாக, அவர்களை வேவுகாரர்கள், அதாவது அயல்நாட்டின் இரகசியமான தூதர்கள் என்று கூறி, முதலாவதாக சிறையில் அடைக்கும் சம்பவமானது, தடைப்பண்ணும் கட்டளைப் பற்றின நம்முடைய மேற்கூறிய அனுமானத்திற்கு ஆதரவளிக்கின்றது; அதாவது தானியம் விஷயத்தில் எகிப்தின் செல்வச் செழிப்பை அறிந்துகொண்டு, எகிப்தின் மீது தாக்குதல் பண்ணத் திட்டம்போடும் அயல் நாட்டாரின் வேவுக்காரர்களென யோசேப்பு, தன் சகோதரர்களைக்கூறிச் சிறையில் அடைத்தார். இது யோசேப்பு தனது சகோதரர்களுடைய வீட்டுச் சூழ்நிலைகள் குறித்தும், தனது தகப்பனைக் குறித்தும், எகிப்திற்கு வந்திருந்த தன்னுடைய சகோதரர்கள் மத்தியில் காணப்படாத தன்னுடைய தம்பியாகிய பென்யமீனைக் குறித்தும் திட்டவட்டமாய் விசாரிப்பதற்கு வாய்ப்பை அளித்தது. பஞ்சம் தொடரும் என்பதினால், அவர்கள் மீண்டுமாக எகிப்துக்கு வரவேண்டிய கட்டாயத்திற்குள்ளாகக் காணப்படுவார்கள் என்பதை யோசேப்பு நன்கு அறிந்தவராக, சிமியோனை எகிப்திலே பிணைக் கைதியாக வைத்து, அவர்கள் மீண்டும் வருகையில், பென்யமீனை அழைத்து வருவதன் முலம், அவர்கள் சொல்லிய வார்த்தைகளின் உண்மையை நிரூபிப்பதற்கான வாய்ப்பையும் அவர்களுக்கு இறுதியாக அருளினார். இந்த அனுபவங்களானது, அந்தப் பத்துச் சகோதரர்களுக்கும் விலையேறப்பெற்ற படிப்பினையாக இருந்தது மற்றும் இந்த அனுபவங்களானது, யோசேப்பின் விஷயத்தில் அவர்கள் கடந்த காலத்தில் செய்த தவற்றை, அவர்களுடைய மனங்களுக்கு

நினைப்பூட்டினது, ஏனெனில் தங்களுக்கான இந்தப் பிரச்சனையை, தங்களுக்கான தண்டனையென அவர்கள் ஏற்றுக்கொண்டிருந்தனர். "நம்முடைய சகோதரனுக்கு நாம் செய்த துரோகம் நம்மேல் சுமந்தது; அவன் நம்மைக் கெஞ்சி வேண்டிக்கொண்டபோது, அவனுடைய மன வியாகுலத்தை நாம் கண்டும், அவனுக்குச் செவிகொடாமற்போனோமே; ஆகையால், இந்த ஆபத்து நமக்கு நேரிட்டது என்று ஒருவரையொருவர் பார்த்துச் சொல்லிக்கொண்டார்கள். அப்பொழுது ரூபன் அவர்களைப் பார்த்து: இளைஞனுக்கு விரோதமாகப் பாவஞ்செய்யாதிருங்கள் என்று நான் உங்களுக்குச் சொல்லவில்லையா? நீங்கள் கேளாமற்போனீர்கள்; இப்பொழுது இதோ, அவன் இரத்தப்பழி நம்மிடத்தில் வாங்கப்படுகிறது என்றான். யோசேப்பு துபாசியைக்கொண்டு அவர்களிடத்தில் பேசினபடியால், தாங்கள் சொன்னது அவனுக்குத் தெரியும் என்று அறியாதிருந்தார்கள்" (ஆதியாகமம் 42:21-23).

யோசேப்பு கடின இருதயமுடையவரல்ல, மாறாக தன்னுடைய சகோதரர்களை நடத்தும் விஷயத்தில் ஞானமாய் நடந்துகொண்டார். எந்த ஒரு காரியத்தையுங்கூட அவர் பழிவாங்கும் நோக்கத்தில் செய்யவில்லை. யோசேப்பு, தேவனுடைய கண்ணோட்டத்தையே கொண்டிருந்தார்; அதாவது தீமை செய்பவர்கள், பாவத்தினுடைய பாவ தன்மையினை மனதில் முற்றிலுமாக உணர்ந்துகொள்ளத்தக்கதாக, தீமை செய்பவர்கள் மீது கொஞ்சம் தண்டனை வருவது சரியானதே என்ற தேவனுடைய கண்ணோட்டத்தையே, யோசேப்பும் கொண்டிருந்தார். இவ்வாறாகவே பிள்ளைகளுடைய பெற்றோர்களும், பாதுகாவலர்களும், பிள்ளைகள் தவறு செய்தமைக்கான, நியாயமான, மிதமான தண்டனையை அவர்களுக்குக் கொடுக்கும் விஷயத்தில், பெற்றோர்கள் தங்களது அன்பும், அனுதாபமும் இடையூறாக இருந்திட அனுமதிக்கக்கூடாது. மாறாக யோசேப்பின் விஷயத்தில் காணப்பட்டதுபோலவே, தண்டனைக் கொடுக்கும் விஷயமானது, அனுதாபத்தினாலும், அன்பினாலும்தான் இயக்கப்பட வேண்டும்; அதாவது சரியான வாய்ப்பையும், அதிகளவிலான ஆசீர்வாதத்தையும் திட்டமிடுகிறதாகவே காணப்பட வேண்டும்.

அவர்களது தானியங்கள் தீர்ந்துபோய், தானியம் தேவை என்ற நிலை வந்தபோது, இரண்டாம் முறையாக தானியம் வாங்கத்தக்கதாக, பென்யமீனை தன்னுடைய சகோதரர்களோடுகூட, எகிப்துக்குப்போக அனுமதிப்பதற்கு இறுதியில் யாக்கோபு ஒத்துக்கொண்டார்; அதுவும் பென்யமீன் இல்லாமல் தான் வீடு திரும்புவதில்லை என்று யூதா வாக்களித்த பிற்பாடே, பென்யமீனை அனுப்புவதற்கு யாக்கோபு சம்மதித்தார். யோசேப்பின் சகோதரர்கள், யோசேப்பினுடைய வீட்டிற்கு இரண்டாம் முறையாக வந்ததும், தாங்கள் முந்தின தருணத்தில் சொல்லியிருந்த பென்யமீனோடு வந்ததும், அவர்கள் மிகவும் கிருபையாய் உபசரிக்கப்படுவதற்கும், சிமியோன் விடுவிக்கப்படுவதற்கும் போதுமானதாய் இருந்தது. சகோதரர்கள் பதினொரு பேரும் எதிர்பார்த்திராத விதத்தில், அதிபதியாகிய யோசேப்புடன் விருந்துண்ண வரவேற்கப்பட்டார்கள். சகோதரர்கள் அவரவர் வயதின்படியே பந்தியைச் சுற்றி, ஏதோ ஒருவிதமான ஏற்பாட்டினால் அமர்த்தப்பட்டிருப்பதைக் கண்டு, யோசேப்பின் சகோதரர்கள் ஆச்சரியமடைந்தனர்; இன்னுமாக அதிபதியானவருடைய விசேஷித்த அக்கறைக்கான ஆதாரமாக, பென்யமீனாகிய தங்களது இளைய சகோதரனுக்கு, ஐந்து மடங்கு போஜனத்தில் பங்குகள் கொடுக்கப்பட்டதினிமித்தமும் ஆச்சரியமடைந்தார்கள். தங்களுக்குக் கிடைத்திட்ட இந்த அதிர்ஷடத்தைக் குறித்து அவர்கள் மகிழ்ந்திருக்க வேண்டும் என்பதில் சந்தேகமில்லை; அவர்கள் தங்கள் வீட்டை நோக்கிப் பிரயாணிக்க ஆயத்தமாகுகையில், பின்வருமாறு தங்களுக்குள்ளாக எண்ணியிருந்திருக்க வேண்டும் என்பதிலும் ஐயமில்லை; அதென்னவெனில், "**நாம் முந்தினமுறை எகிப்துக்கு வந்திருந்தபோது, நமக்கு வந்தப் பிரச்சனைகளை நமக்கான தண்டனைகள் என்றும், அதைத் தேவனே அருளினார் என்றும் எண்ணினோம்; ஆனால் நாம் ஒற்றர்களாக எண்ணப்பட்ட சம்பவம் தற்செயலாய் நடந்த ஒன்றுதான். பாருங்கள் நாம் இப்பொழுது செழித்தோங்குகின்றோம்.**"

ஆனால் அவர்கள் கொஞ்சந்தூரம் போவதற்குள்ளாகவே, அவர்களை அதிபதியின் ஊழியர்கள் தொடர்ந்து பிடித்தார்கள்; அந்த ஊழியர்கள் திருட்டு நடந்துள்ளது என்றும், அதிபதியினுடைய விலையேறப்பெற்ற வெள்ளிப் பாத்திரம், அதாவது எகிப்தியர்களால், "புனிதமான பாத்திரம்" என்று அழைக்கப்படும் வெள்ளிப்பாத்திரம் காணவில்லை என்றும் அவர்களுக்கு அறிவித்தார்கள். யோசேப்பின்

சகோதரர்கள் தாங்கள் குற்றமற்றவர்கள் என்றும், தாங்கள் அப்படியான காரியங்களைச் செய்யும் மனிதர்களல்ல என்றும், தாங்கள் முற்றிலுமாகப் பரிசோதனைப் பண்ணப்படலாம் என்றும் கூறினார்கள். ஒவ்வொருவரின் சாக்குகளும் ஒன்றன்பின் ஒன்றாகப் பரிசோதிக்கப்பட்டு, இறுதியில் பாத்திரமானது பென்யமீனுடைய சாக்கில் கண்டுபிடிக்கப்பட்டது; கொஞ்சம் முன்பு மகிழ்ந்திருந்த யோசேப்பின் சகோதரர்கள், இப்பொழுது தாங்கள் சமீபத்தில் அனுபவித்த உபசரிப்புகளைக் கொடுத்திட்ட எகிப்தின் அதிபதியினிடத்திற்கு, கைதிகளாக திரும்பக்கொண்டுவரப்பட்டார்கள். அநேகமாக அவர்கள் மீண்டுமாக யோசேப்பினுடைய காரியத்தை நினைவுகூர்ந்து, "**நாம் கடந்துபோய்விட்டது என்று எண்ணின பொல்லாப்பு, நம்மை இன்னமும் தொடர்ந்துக்கொண்டிருக்கின்றது**" எனத் தங்களுக்குள்ளாகச் சொல்லயிருந்திருக்க வேண்டும். இது நேர்மையினுடைய முக்கியத்துவத்தையும், நீதியின் உருளைச் சக்கரங்கள் சில சமயம் மெதுவாக அரைத்திட்டாலும் அது நிச்சயமாகவும், நன்கும் அரைக்கும் என்ற கருத்தையும் அவர்களது மனதில் பதிய வைத்திட உதவும் நல்ல படிப்பினையாகக் காணப்பட்டது என்பதில் ஐயமில்லை.

பென்யமீன் தன் சகோதரர்களோடு சேர்ந்து, தான் பாத்திரத்தைத் திருடவில்லை என்று மறுத்தார்; மற்றச் சகோதரர்கள் பென்யமீன் கூறினதை நம்பினார்களோ, இல்லையோ, பென்யமீன் மீது விசேஷமாய்ப் பழிச்சுமத்தப்படாதபடிக்குப் பெருந்தன்மையுடன் பழியை அனைவரும் பகிர்ந்துகொண்டார்கள். சகோதரர்கள் அனைவரின் சார்பிலும் யூதா பின்வருமாறு பேசினார்: "என் ஆண்டவனாகிய உம்மிடத்தில் நாங்கள் என்ன சொல்லுவோம்? என்னத்தைப் பேசுவோம்? எதினாலே எங்கள் நீதியை விளங்கப்பண்ணுவோம்? உம்முடைய அடியாரின் அக்கிரமத்தைத் தேவன் விளங்கப்பண்ணினார்; பாத்திரத்தை வைத்திருக்கிறவனும், நாங்களும் என் ஆண்டவனுக்கு அடிமைகள்". தங்களுடைய அக்கிரமத்தின் விவரத்தைப்பற்றி அவர்கள் யோசேப்புக்கு விவரித்துக் கூறவில்லை என்றாலும், தங்களது அக்கிரமம் என்ன என்பது பற்றி அவர்கள் தங்கள் மனதில் நன்கு அறிந்திருந்தனர். தன்னிடத்தில் தனது சகோதரர்கள் காண்பித்திருந்த அதே பொல்லாப்பான மற்றும் பொறாமையான பண்புகளை, அவர்கள் இன்னமும் எவ்வளவு கொண்டிருக்கின்றனர் என்பதை யோசேப்பு அறிய விரும்பி, மற்றவர்கள் அனைவரும் போய்விடலாம் என்றும், பென்யமீனை மாத்திரம் தான் அடிமையாக வைத்துக்கொள்ளப் போகின்றார் என்றும் அறிவித்தார். யோசேப்பினுடைய தந்திரம் பலித்தது மற்றும் இடைப்பட்ட காலக்கட்டத்தில் அவருடைய சகோதரர்கள் பாடங்களைக் கற்றுக்கொண்டுள்ளனர் என்றும், குணலட்சணங்களை வளர்த்தியுள்ளனர் என்றும், இதனால் அவர்கள் இப்பொழுது தங்களுடைய தகப்பனுக்காகவும், அவர்களில் ஒருவர் மற்றொருவருக்காகவும் அனுதாபம் கொண்டுள்ளனர் என்றுமுள்ள உண்மையும் வெளியானது. யோசேப்பின் விஷயத்தில் அவர்கள் கொண்டிருந்த தவறான நடக்கையானது தொடரப்படாமல், மாறாக அதைக் குறித்து அவர்கள் மனவருத்தமே அடைந்திருந்தனர். யூதா சூழ்நிலைகள் அனைத்தையும், யோசேப்புக்கு, துபாசியின் வாயிலாக (மொழிபெயர்ப்பாளனின்) விவரித்தார்; பென்யமீன் மீது யாக்கோபு கொண்டுள்ள அன்பையும், யோசேப்பு மரித்துவிட்டதாக எண்ணி யாக்கோபு அடைந்த துக்கத்தையும், யாக்கோபு தனது குடும்பத்தின் மீது கொண்டுள்ள அக்கறையையும் யூதா மிகவும் தீவிரமாய்க் காண்பித்தப்படியினால், யோசேப்பினால் தனது உணர்வுகளை அடக்கக்கூடாமற்போயிற்று. தன்னுடைய சகோதரர்களுக்குத் தன்னை வெளிப்படுத்த வேண்டிய நேரம் வந்துள்ளது என்பதை யோசேப்பு உணர்ந்துகொண்டு, இப்படியான சந்தர்ப்பத்தில் தனது சகோதரர்கள் அதிகம் தர்மசங்கடத்திற்கு ஆளாகாதபடிக்கு, அனைத்து எகிப்தியர்களையும் அறையிலிருந்து வெளியேறும்படிக்குக் கட்டளையிட்டார்; பின்னர்த் தான்தான் அவர்களது சகோதரனாகிய யோசேப்பு என்று சுருக்கமாகவும், அனுதாபத்துடனும்/ அன்புடனும் அவர்களுக்கு விளக்கினார்.

தாங்கள் ஒருவேளை, யோசேப்பு காணப்படும் அதிகாரமுள்ள ஸ்தானத்தில் இருந்திருந்தால், தங்களுக்கு எதிராக தீமை செய்திருக்கும் ஒருவரை, தாங்கள் எவ்வாறு பழிவாங்க நாடியிருப்பார்கள் என்பதை யோசேப்பின் சகோதரர்கள் எண்ணிப்பார்த்தப்போது, அவர்கள் கலக்கமடைந்தனர். ஆனால் யோசேப்போ, அவர்களுக்கு எதிராக தான் எவ்விதமான இரக்கமற்ற உணர்வுகளைக் கொண்டிருக்கவில்லை என்றும், அவர்களிடத்தில் தான் இரக்கமாய் இருக்கின்றார் என்றும், மன்னித்துவிட்டார் என்றும் அவர்களைச் சீக்கிரமாய் நம்பவைத்தார். இம்மாதிரியான சூழ்நிலைகளில்,

யோசேப்பினால் வெளிப்படுத்தப்பட்டதான ஆவி, சுபாவப்படியான மாம்சீக மனுஷனினால் மாத்திரமல்லாமல், "கிறிஸ்து இயேசுவுக்குள்ளாய்ப் புதுச் சிருஷ்டிகளாய் இருப்பவர்களாலும்" பின்பற்ற தகுந்த ஒன்றாகும். இம்மாதிரியான காரியங்களில் பரந்த மனப்பான்மையுள்ளவர்களாகவும், அன்பானவர்களாகவும், மன்னிக்கிறவர்களாகவும் கர்த்தருடைய ஜனங்கள் இருப்பதற்குப்பதிலாக, குறுகிய மனப்பான்மையுடையவர்களாக இருப்பதை அடிக்கடி காண்கின்றோம். எபிரெய மொழியிலேயே தன்னுடைய சகோதரர்களிடத்தில் இப்பொழுது பேசிக்கொண்டிருந்த யோசேப்பு தன்னுடைய வார்த்தைகளினால் மாத்திரமல்லாமல், முன்பு நடந்த சம்பவங்கள் பற்றின தனது அறிவின்படி, தான்தான் அவர்களுடைய சகோதரன் என்று அவர்கள் அடையாளம் கண்டுகொள்ளத்தக்கதாக, "நான் யோசேப்பு" என்றும், "எகிப்துக்குப் போகிறவர்களிடத்தில் விற்றுப்போட்ட உங்கள் சகோதரனாகிய யோசேப்பு நான்தான்" என்றும் திரும்பத்திரும்ப எடுத்துக்கூறினார். யோசேப்பு இவைகளை மிகவும் இரக்கத்துடன் பேசினப்படியாலும், அவருடைய வார்த்தைகளிலும், கிரியைகளிலும் கோபமும், வன்மமும் முற்றிலுமாக இல்லாதிருந்ததினாலும், அவர்கள் நம்பிக்கைக்கொண்டு, யோசேப்பு கிட்டவரும்படிக்கு அழைத்ததற்கு இணங்க, யோசேப்பிற்கு அருகே வந்தார்கள்.

அநேக கிறிஸ்தவர்கள் ஒருவேளை யோசேப்பினுடைய ஸ்தானத்தில் காணப்பட்டு இருந்திருப்பார்களானால், தங்களது சகோதரர்களைத் தவறாய்க் கணித்துவிடுவதன் மூலமும், தங்கள் சகோதரர்களிடம், அவர்களின் தவறைத் திரும்பவும் கூறிப் பிரசங்கம் பண்ணிவிடுவதன் மூலமும், மேலும் தங்களது வல்லமையின் கீழ் அச்சகோதரர்கள் காணப்படுவதினால் எப்படியெல்லாம் தங்களால் அவர்களைத் துன்பப்படுத்த முடியும் என்றும், மற்றும் இப்படியாக முடியும் என்றாலும், தாங்கள் அவர்களை இப்படியாகத் துன்பப்படுத்துவதில்லை என்றும் கூறிவிடுவதன் மூலமும், இந்த மாபெரும் பாடத்தினுடைய முழுத் தாக்கத்தையும், தங்களது சகோதரர்களிடத்தில் கெடுத்துப்போட்டு விடுவார்கள். ஆனால் இப்படியாக நடந்து, தாக்கத்தைக் கெடுத்துப்போட முடியாதளவுக்கு, யோசேப்பு மிகவும் ஞானமுள்ளவராகவும், இரக்கமுள்ளவராகவும் காணப்பட்டார். இப்படியாக நடந்துகொள்ளாமல் மாறாக, "என்னை இவ்விடத்தில் வரும்படி விற்றுப்போட்டதினால், நீங்கள் சஞ்சலப்பட வேண்டாம்; அது உங்களுக்கு விசனமாயிருக்கவும் வேண்டாம்" என்றே யோசேப்பு கூறினார். சுபாவத்தின்படியான ஒரு மனுஷன் (யோசேப்பு), இங்கு வெளிப்படுத்தப்பட்டுள்ள தேவனுடைய ஆவியை, இவ்வளவுக்குப் பெற்றிருப்பது என்பது ஆச்சரியமே; யோசேப்பு சுபாவத்தின்படியான மாம்ச மனுஷன்தான் என்பதையும் நாம் அறிவோம்; பெந்தெகொஸ்தே நாள்வரை, நம் சந்ததியிலுள்ள எவர்மேலும், பரிசுத்த ஆவி பொழியப்படவில்லை. இது முற்பிதாக்களுடைய குணலட்சணத்தைப் பற்றிய ஒரு குறிப்பையும் அளிக்கின்றதாய் இருக்கின்றது; அதாவது ஆதியில் மனிதன் கொஞ்சம் குரங்கிற்கு மேற்பட்டவனாகவும், கரடுமுரடான மற்றும் காட்டுமிராண்டித்தனமான இயல்புகளை உடையவனாகவும் இருந்தான் என்ற பரிணாமக் கொள்கைக்கு எதிரான ஒரு குறிப்பையும் அளிக்கின்றதாய் இருக்கின்றது.

"ஜீவரட்சணை செய்யும்படிக்கு தேவன் என்னை உங்களுக்கு முன்னே அனுப்பினார்" என்ற சொற்ப வார்த்தைகளின் மூலம் யோசேப்பு, ஒரு மாபெரும் பிரசங்கத்தைத் தன்னுடைய சகோதரர்களுக்குப் பண்ணினார்; அதாவது, "நீங்கள் செய்திட்ட தவறான காரியத்தை, தேவன் இவ்விதமாய் நன்மைக்கு ஏதுவாக மாற்றிப்போட்டு, அதிலிருந்து ஆசீர்வாதத்தைக் கொண்டுவந்தார்". இப்படியாகக் காரியங்களை, தான் புரிந்துகொள்வதற்கு, அவர்கள்தான் காரணம் என்று யோசேப்பு தெரிவித்தார். அவர்களது செய்கைகளைக் கர்த்தர் நன்மைக்கு ஏதுவாய் மாற்றிப்போட்டார் என்பதினால், அவர்களது செய்கை/நடக்கை சரியானது (அ) ஏற்றது ஆகாது; கர்த்தர் அவர்களது செய்கைகளை நன்மைக்கு ஏதுவாய் மாற்றிப்போட்டக் காரியமானது, யோசேப்பு மீதும், யாக்கோபின் வீட்டார் மீதுமான தெய்வீக வல்லமையே, தெய்வீக ஞானமே, தெய்வீகப் பராமரிப்பே அனைத்துக் காரியங்களையும், அதாவது தீமையான விஷயங்களையும், தெய்வீகத் திட்டத்திற்கு இசைவாக நன்மைக்கு ஏதுவாய் மாற்றிப்போட்டுள்ளது என்பதை மாத்திரம் நிரூபிக்கின்றதாய் இருக்கின்றது. சகோதரர்களுடைய இந்த அனுபவங்கள் வாயிலாகவும், யோசேப்பின் சிறிய பிரசங்கத்தின் வாயிலாகவும், யோசேப்பின் சகோதரர்களுக்குக் கிடைத்திட்டதான படிப்பினையானது, அச்சகோதரர்களுக்கு எத்துணை மாபெரும் படிப்பினையாகவும், மனதிலிருந்து மாறவே செய்யாததாகவும் எவ்வளவாய்க் காணப்பட்டது என்பதை நம்மால் சொல்ல

இயலாது; ஆனால் நமக்கு எதிராய் வேண்டுமென்றே பாவம் செய்தவர்களிடத்தில் இரக்கம் காட்டுதல் தொடர்புடைய விஷயத்தில், தேவனுடைய ஜனங்கள் அனைவருக்கும் இங்கு மாபெரும் படிப்பினை உள்ளது; இன்னுமாக நம்முடைய ஜீவியத்தின் காரியங்கள் தொடர்புடைய விஷயத்திலுள்ள தெய்வீகப் பராமரிப்பைக் கவனித்தல் மற்றும் கண்டுபிடித்தல் பற்றின மாபெரும் படிப்பினையும் இங்குள்ளது. நாம் தெய்வீகப் பராமரிப்புகளைக் கவனிக்கிறவர்களாக மாத்திரம் இராமல், "உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்" என்று சொல்லப்பட்டிருக்கிறதுபோன்று, தெய்வீகப் பராமரிப்பின் மீது நம்பிக்கையும் வைக்க வேண்டும் (நீதிமொழிகள் 3:6).

யோசேப்பு தன்னுடைய அனுபவங்களினால், தனக்குள் அதிகளவிலான சுயமேட்டிமையை வளர்த்துவதற்கு அனுமதித்திருக்க முடியும். தான் அதிர்ஷ்டம் உள்ளவன் அல்லது தான் இயல்பாகவே அறிவுமிக்கவன், எளிதில் கவருபவன், சாதுர்யவான் என்றும், இத்தன்மைகளே தனது வெற்றிக்கான காரணம் என்றும், இதுவே தன்னுடைய தகப்பன் தன்னை விசேஷமாய் நேசித்ததற்கான காரணம் என்றும், இக்காரணங்களினாலேயே, தான் அடிமையாக விற்கப்பட்டபோது, தான் செல்வமிக்க நல்ல எஜமானால் வாங்கப்பட்டார் என்றும், தன்னுடைய இந்தத் திறமைகளினால்/சிறப்பு அம்சங்களினால்தான், போத்திபாருடைய இல்லத்தில் உயர்நிலைக்கு உயர்த்தப்பட்டார் என்றும், இந்தத் தன்னுடைய சிறப்பு இயல்புகளினாலேயே, தான் சிறைச்சாலையிலுங்கூட உயர்வு பெற்றார் என்றும், தன்னுடைய கூரிய அறிவாற்றலினால், தன்னால் சொப்பனங்களுக்கு வியாக்கியானம் கொடுக்க முடிந்தது என்றும், தான் அனைத்து விஷயங்களிலுமே மற்றவர்களைக் காட்டிலும் மிஞ்சிக் காணப்பட்டார் என்றும், மற்றவர்களும் இவைகளை அறிந்திருந்தார்கள் என்றும், இவ்வாறாக இயல்பாகவே தான்தான் உயர் ஸ்தானத்தை அடைந்தார் என்றும், சிலர் எண்ணிக்கொள்வதுபோன்று, யோசேப்பாலும் தனக்குள் சிந்தித்திருக்க முடியும். ஒருவேளை யோசேப்பு மேற்கூறியபடி தற்பெருமையும், கர்வமும் கொண்டிருந்திருப்பாரானால், அது அவருடைய வீழ்ச்சிக்கு நேராகவே வழி நடத்தியிருக்கும் என்பதும், தேவன் தொடர்ந்து யோசேப்பை ஆசீர்வதித்து, முன்னேற்றமடைய மற்றும் வளம்பெறச் செய்திருக்க மாட்டார், என்பதும் நமக்கு நிச்சயமே. இன்னுமாக ஒருவேளை மேற்கூறியபடி யோசேப்பு, பெருமை மற்றும் தற்பெருமையின் ஆவியை வளர்த்தி இருப்பாரானால், அவருடைய சகோதரரிடத்திலான நடக்கையானது, பதிவு செய்யப்பட்டுள்ள காரியங்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாகவே இருந்திருக்கும் என்பதிலும் நமக்கு நிச்சயமே. அவர் மேற்கூறிய பெருமையின் ஆவியை ஒருவேளை கொண்டிருந்திருப்பாரானால், தனது சகோதரர்களிடம் தனது அதிகாரத்தை விளங்கப்பண்ணுவதற்கெனத் தன்னைக் குறித்து அவர்களிடத்தில் பெருமையடித்துக்கொண்டு, அவர்களை மோசமாய் நடத்தி, தன்னை ஓர் அற்ப மனுஷனாகக் காண்பித்திருப்பார்; அதாவது யோசேப்பினுடைய சரியான நடத்தையானது அவரை ஒரு மாபெரும் மனிதனாகக் காண்பித்தது, ஆனால் அவர் ஒருவேளை பெருமையடித்துக்கொண்டிருப்பாரானால் அவர் தன்னை வெகு அற்பத்தனமான மனிதனாக வெளிப்படுத்தியிருப்பார். யோசேப்பு ஒரு மாபெரும் மனிதனாவார் மற்றும் அவரது மகத்துவமானது, எகிப்து இராஜ்யத்தினுடைய பொருளாதாரத்தின் விஷயத்திலுள்ள அவரது நிர்வாகத்தில் மாத்திரம் வெளிப்படாமல் விசேஷமாக அவர் தேவனைச் சார்ந்திருந்த விஷயத்திலும், தன்னுடைய கொள்ளுத் தாத்தாவாகிய ஆபிரகாம், தாத்தாவாகிய ஈசாக்கு மற்றும் தனது தகப்பனாகிய யாக்கோபு மூலமான தெய்வீக வாக்குத்தத்தமும், ஆசீர்வாதமும் ஏதோ ஒரு விதத்தில் தன்மீதும் காணப்படுகின்றது என்பதையும், இந்தத் தெய்வீகத் தயவினாலேயே, காரியங்கள் இவ்வாறாக நடைப்பெற்று வருகின்றது என்பதையும் பற்றி அவர் உணர்ந்துகொண்ட விஷயத்திலுந்தான் யோசேப்பினுடைய மகத்துவம் வெளிப்படுகின்றது.

இந்தச் சம்பவத்திலிருந்து, ஆபிரகாமின் ஆவிக்குரிய சந்ததி விலையேறப்பெற்றப் படிப்பினைகளை எடுத்துக்கொள்ளலாம். பூமிக்குரியதாகவும், உலகப் பிரகாரமானதாகவும் காணப்பட்ட தனக்கான அனைத்து ஆசீர்வாதங்களையும், கர்த்தரே கொடுக்கின்றார் என்று யோசேப்பு ஒப்புக்கொள்வது ஏற்றக் காரியமாக இருக்குமானால், ஆபிரகாமினுடைய ஆவிக்குரிய சந்ததியார், ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைப் பிதாவின் கரத்திலிருந்து பெற்றுக்கொண்டார்களென ஒப்புக்கொள்வதும், கிடைத்த ஒவ்வொரு இரக்கத்திலும், ஊழியம் புரிவதற்கான வாய்ப்புகளிலும், கர்த்தருடைய பராமரிப்பின் கரமே காணப்படுகின்றது என அடையாளம் கண்டுகொள்வதும் எவ்வளவு அதிகமாய் ஏற்றக் காரியமாகக் காணப்படும். இந்த ஆவிக்குரிய சந்ததியினர், "அது கர்த்தராலே

ஆயிற்று, அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறது" என்று ஒப்புக்கொள்வதற்கும், இதை உணர்ந்துகொள்வதற்கும் எப்போதும் விழிப்பாய்க் காணப்படுவார்கள். தேவனுடைய ஆவிக்குரிய பிள்ளைகளில் சிலர், பெருமிதம் கொள்வதையும், கர்த்தரிடமிருந்து அவர்கள் பெற்றுக்கொண்டதான, தேவனுடைய தயவும், சத்திய அறிவும், அவர்களுடைய சொந்த முயற்சியினால் அடையப்பெற்றது எனப் பேசுவதையும், அதாவது தெய்வீகத் திட்டத்தைக் கண்டுபிடித்ததில், தங்களுக்கும் கொஞ்சம் கனம் சேரும் என்பது போன்று பேசுவதையும், நாம் சிலசமயம் காணும்போது, வருத்தமடைகின்றோம்.

இன்னுமாக ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள், யோசேப்பைக் காட்டிலும், மிகவும் இரக்கமுள்ளவர்களாகக் காணப்பட வேண்டும். யோசேப்பினால், தன்னுடைய சகோதரர்களிடமிருந்தும், மற்றவர்களிடமிருந்தும், வந்த துன்புறுத்தல்களைத் தெய்வீகச் செயல்பாட்டின் நிகழ்வுகளாகப் பார்க்க முடிந்ததானால், அதாவது வரவிருக்கின்ற ஆசீர்வாதங்கள் மற்றும் உயர்த்தப்படுதலுக்கு, தன்னை ஆயத்தப்படுத்துவதற்காக, அந்தத் துன்புறுத்துதல்களைக் கர்த்தர் பயன்படுத்துகின்றார் என யோசேப்பினால் பார்க்க முடிந்ததானால், ஆவிக்குரிய இஸ்ரயேலனும் தனக்கான ஏமாற்றங்கள் என்பது, தேவனால் நியமிக்கப்பட்டவைகள் என்று எடுத்துக்கொள்ள வேண்டுமல்லவா? (his disappointments as God's appointments) இன்னுமாக ஆவிக்குரிய இஸ்ரயேலன், தெளிவான விசுவாசக் கண்களுடன், தனது ஆவிக்குரிய முன்னேற்றங்களின் அநேகக் காரியங்களானது, உலகம் மற்றும் கள்ளச் சகோதரர்களிடமிருந்ததான துன்புறுத்துதல்களின் விளைவாகவே வந்துள்ளது என்பதைப் பார்க்க முடிகின்றவனாய்க் காணப்பட வேண்டுமல்லவா? இன்னுமாக யோசேப்பைப் போன்று, ஆவிக்குரிய இஸ்ரயேலனும், தேவன் தன்னை ஆவிக்குரியவற்றில் உயர்த்துவதற்கும், தன்னைப் புதுச் சிருஷ்டியென, தேவனுடைய சுதந்தரரென, தனது கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவுடன் உடன் சுதந்தரவாளியெனப் பூரணப்படுத்துவதற்கும் அவர் பயன்படுத்த சித்தம் கொண்டுள்ள பல்வேறு கருவிகளாகிய இந்த உலகம் மற்றும் கள்ளச் சகோதரர்களை மிகுதியான அகமகிழ்வுடன் கண்ணோக்க வேண்டுமல்லவா? இப்படியாக ஆவிக்குரிய இஸ்ரயேலன் நிச்சமாய்க் காணப்பட வேண்டும். நம்முடைய ஆவிக்குரிய முன்னேற்றங்கள் என்பது கர்த்தரால் உண்டானதேயொழிய, நம்மால் அல்ல என்பதை நாம் கண்டுகொள்ளாதபடிக்கு, நமக்குத் தடையாய் இருக்கும் காரியங்கள், தாழ்மையின்மையும், தெய்வீகப் பராமரிப்பின் மீதான நம்பிக்கையின்மையுமாகும்; இன்னுமாக நம்மைத் துன்புறுத்துகிறவர்களிடத்திலும், நம்மை இழிவாய் நடத்தினவர்களிடத்திலும், நாம் பொறுமையாயும், இரக்கமாயும் அனுதாபமாயும், அன்பாயும் இருப்பதற்கு, நமக்குத் தடையாய் இருக்கும் காரியங்கள், கர்த்தருடைய ஆவி இன்மையும், இரக்கத்தினுடைய ஆவி இன்மையும் மற்றும் நம்மை ஆவிக்குரியவற்றில் கட்டியெழுப்புவதற்கெனத் தேவனால் பயன்படுத்தப்படும் கருவிகள் சகோதரர்களாகவோ அல்லது உலகத்தாராகவோ இருப்பினும், அவர்கள் மீது அனுதாபங்கொள்ள வேண்டும் என்பதைச் சரிவரப் பார்க்கத் தவறிப்போனதுமாகும்.

பின்னர் யோசேப்பு தேவனுடைய பராமரிப்பையும், பரிபூரணமான விளைவுள்ள ஏழு வருஷத்தையும், ஏழு வருடகால பஞ்சத்தையும் குறித்து விவரித்தார்; மேலும் தேவன் எவ்வாறு அனைத்துக் காரியங்களையும் மேற்பார்வையிட்டு நடத்துகின்றார் என்றும், இக்காரியங்கள் மூலம், தேவன் ஆபிரகாமின் சந்ததியை ஆதரித்தார் என்றும் விவரித்து, "ஆதலால் நீங்கள் அல்ல, தேவனே என்னை இவ்விடத்துக்கு அனுப்பினார்" என்று கூறினார். நமக்கு ஆசீர்வாதங்கள் கடந்துவந்த, பொல்லாப்பான கருவிகளுக்கு, நாம் கீர்த்தியைச் செலுத்திடக் கூடாது; ஒருவேளை அப்படிக் கீர்த்திச் செலுத்துவோமானால், நாம் தீமையை நன்மை என்று சொல்லுகிறவர்கள் ஆகிவிடுவோம்; மாறாக நாம் கீர்த்தியை/கனத்தைத் தேவனுக்கே செலுத்துகிறவர்களாய்க் காணப்பட வேண்டும், ஏனெனில் தீமையான நோக்கத்துடன் செய்யப்பட்ட காரியத்தையும், தீமையையே கொண்டிருந்த காரியத்தையும், பூலோக தளத்திற்கு மேலான தெய்வீக ஞானமானது, நம்முடைய நன்மைக்கு ஏதுவாக மாற்றிப்போடும் ஆற்றல் கொண்டிருந்ததினாலேயே ஆகும். நாம் தேவனுடைய காருண்யத்தைப்பற்றின பாடங்களைக் கற்று வரவர, அவருடைய ஞானம், வல்லமை மற்றும் அன்பு பற்றியும் நாம் கற்று வரவர, நம்முடைய நன்மைக்கு ஏதுவாய் நடந்துகொண்டு வருகின்றது என நம்மால் பார்க்க முடிந்த காரியங்களில் கர்த்தரிடத்தில் நம்பிக்கைக்கொள்ள முடிகின்ற நிலையை நாம் அடைவது வரையிலும் மாத்திரமல்லாமல், முற்றிலும் இருள் நிறைந்ததாகவும், எந்த நன்மையும் வரமுடியாது என்பது போல்

தோன்றும் காரியங்களிலுங்கூட, கர்த்தரிடத்தில் நம்பிக்கைக்கொள்ள முடிகின்ற நிலையை நாம் அடைவது வரையிலும், நமது விசுவாசமானது பலம் மேல் பலமடைந்து வருகின்றதாய் இருக்கும்; இவ்வாறாக நாம் அவரது தடையங்களைக் காணமுடியாதபோதிலும், அவர்மேல் நம்பிக்கைக் கொள்கின்றவர்களாய் இருப்போம். இதுவே விசுவாசமாகும்; விசுவாசம் தேவனுடைய ஈவாகும்; கர்த்தருடைய கிருபையான வாக்குத்தத்தங்களானது, சரியான விதத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டு, உணர்ந்துகொள்ளப்பட்டு, அதற்கு ஏற்றாற்போல் செயல்படும்போது, விசுவாசமானது வளர்த்தப்பட்டு, போதுமான வளர்ச்சியை அடைகின்றது.

கர்த்தருடைய வேளை வரட்டும் என்று பொறுமையுடன் காத்திருந்த யோசேப்பு, இருபது வருடங்களாக தனது தகப்பனுடைய முகத்தைப் பார்க்காமல் இருந்திருக்க, இப்பொழுது தனது சகோதரர்களுடைய அரிக்கட்டுகளானது, தன்னுடைய அரிக்கட்டைச் சுற்றி வணங்கி நின்றது என்பதான தன்னுடைய முதலாம் சொப்பனத்தின் நிறைவேறுதலைக் கண்டபடியால், தன்னுடைய இரண்டாம் சொப்பனம் நிறைவேறக்கூடிய தருணமாகிய தன்னுடைய தகப்பனை மீண்டுமாகப் பார்ப்பதற்குரிய கர்த்தருடைய வேளை வந்துள்ளது என்பதையும் உணர்ந்துகொண்டார். இதற்கு முன்புவரையிலும் பொறுமையுடன் காணப்பட்ட யோசேப்பு, இப்பொழுது துரிதப்பட்டார், ஏனெனில் வேளை வந்துவிட்டது; ஆகவே யோசேப்பு தன்னுடைய சகோதரர்களை நோக்கி, "நீங்கள் சீக்கிரமாய் என் தகப்பனிடத்தில் போய்: தேவன் என்னை எகிப்து தேசம் முழுவதுக்கும் அதிபதியாக வைத்தார்; என்னிடத்தில் வாரும், தாமதிக்கவேண்டாம்" (ஆதியாகமம் 45:9) என்றார். பெருமையின் காரணமாக, யோசேப்பு தனது ஸ்தானத்தின் மகிமைகளை/கனங்களைத் தனது சகோதரர்களுடைய மனதில் பதிய வைத்திட முற்படாமல் மாறாக, யாக்கோபினுடைய எச்சரிப்பான தன்மையானது, அவர் கோசேன் நாட்டினுடைய நன்மைகளை அடையும் விஷயத்தில், அவருக்குத் தடையாக இருந்துவிடாதபடிக்கு, தனது சகோதரர்கள் தங்கள் தகப்பனாகிய யாக்கோபிற்கு முழு நிச்சயத்தைக் கொடுக்கத்தக்கதாக யோசேப்பு தனது அதிகாரத்தையும், அவர்களைப் பராமரிப்பதற்கான தனது வல்லமையையும் குறித்து, தனது சகோதரர்களுக்கு நிச்சயமளிக்கவே இவற்றைக் கூறினார். யோசேப்பினுடைய சகோதரர்களும், தகப்பனும், யோசேப்பினுடைய அரியணையிலும், அதிகாரத்திலும் பங்கடையும்படிக்கு அழைக்கப்படாமல், மாறாக யோசேப்பினுடைய அதிகாரத்தின் மூலமாய்க் கடந்துவரும் ஆசீர்வாதங்கள் அனைத்திலும் பங்கடைவதற்கே அழைக்கப்பட்டனர். இப்படியே ஆயிரவருட யுகத்தின்போதும், யோசேப்பினால் அடையாளப்படுத்தப்படும் தலையும், சரீரமாகிய கிறிஸ்து வல்லமை மற்றும் மகிமையின் சிங்காசனத்தில் காணப்படும்போது, அதாவது பரம பிதாவின் சிங்காசனத்தில் காணப்படும்போது, பூமியிலே தேவனுடைய இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும்போது, உண்மையான பரலோக அப்பத்திற்காக, நித்திய ஜீவனுக்காகப் பசி கொண்டிருப்பவர்கள் வந்து, அதைப் பெற்றுக்கொள்ளும்படிக்கு அழைக்கப்படுவார்கள். பூமிக்குரிய வகுப்பாரில் எவரும், இராஜ்யத்தின் கனங்களில் பங்கடையும்படிக்கு அழைக்கப்படுவதில்லை, காரணம் இராஜ்ய வகுப்பார் அப்போது நிறைவடைந்திருப்பார்கள். ஆனால் பூமிக்குரிய வகுப்பார், இராஜாதி இராஜாக்கள் மற்றும் கர்த்தாதி கர்த்தர்களின் கீழ், மனதிலும், ஒழுக்கத்திலும், சரீரத்திலும் இராஜ்யத்தின் ஆசீர்வாதங்களையும், பலத்தையும் மற்றும் ஆரோக்கியத்தையும் பெற்றுக்கொள்ளும்படிக்கு அழைக்கப்படுவார்கள்.

யோசேப்பும், அவரது சகோதரர்களும் விடைப்பெற்றுக்கொண்ட சம்பவம் தாக்கம் நிறைந்ததாய் இருந்தது; இப்பொழுது தங்களுக்கு (எகிப்தில் முதல் முறை வந்தபோது) நடந்திட்ட முந்தின சம்பவத்தின் அனுபவங்கள் மற்றும் பென்யமீனுடைய சாக்கில் காணப்பட்ட வெள்ளிப் பாத்திரத்தின் அர்த்தத்தையும் அவர்கள் புரிந்துகொண்டார்கள்; இந்த அனைத்துச் சம்பவங்களும், யோசேப்பு தங்கள் மீது கொண்டிருந்த அன்பையும், அனுதாபத்தையும் வெளிப்படுத்துவதற்கு வழி நடத்தியது என்று அவர்கள் கண்டுகொண்டார்கள்; யோசேப்பு பென்யமீன் மீதான தனது விசேஷித்த அன்பை வெளிப்படுத்தும் வண்ணமாக, பென்யமீனை முதலாவது முத்தஞ்செய்து, சந்தோஷத்தினால் அழுதார் மற்றும் இப்படியே மற்றச் சகோதரர்களுக்குச் செய்து, அவர்களை வழியனுப்பி வைத்தார். பாசத்திற்கு, அன்பிற்கு வல்லமை/சக்தி உள்ளது; அதனால் அன்புடன்கூடிய பாசம் வெளிப்படுத்தப்பட வேண்டும், இல்லையேல் அதன் ஆற்றல் உணரப்பட முடியாது. அநேக பெற்றோர்களிடத்திலும், கணவன்மார்களிடத்திலும், மனைவிமார்களிடத்திலும், பிள்ளைகளிடத்திலும் காணப்படும் பிரச்சனை என்னவெனில், அவர்கள்

தாங்கள் கொண்டிருக்கும் பாசத்தை வெளிப்படுத்தாமல் இருப்பதேயாகும். பெருமை (அ) பயம் (அ) வேறெதாகிலும் காரியமானது, அவர்கள் ஒருவரோடொருவர் மனம்விட்டு வெளிப்படையாகப் பேசமுடியாத வண்ணம் தடையாகக் காணப்படுகின்றது. இங்குள்ள யோசேப்பினுடைய மாதிரியானது, பின்பற்றத் தகுந்த ஒன்றாகும். அவருக்குத்தான் தீமைச் செய்யப்பட்டது; அவர்தான் இப்பொழுது அதிகாரத்திலும் காணப்படுகின்றார்; கௌரவமும் யோசேப்புக்குத்தான் இருந்திருக்க வேண்டும். எனவேதான் சகோதரர்களை முத்தஞ்செய்வதற்கும், தன்னைத் தாழ்த்துவதற்கும், யோசேப்புதான் அதிகம் தன்னைத் தாழ்த்தியிருக்க வேண்டும். யோசேப்பின் சகோதரர்கள் இதை உணர்ந்துகொண்டார்கள் என்பதில் நமக்கு நிச்சயமே. இப்படியாக மிக உயரிய ஸ்தானத்தில் காணப்படும் தங்களது சகோதரன் இப்படியான ஒரு பாசத்தை வெளிப்படுத்தின காரியமானது, அவர்களது இருதயத்தைத் தொட்டிருக்கும் என்பதிலும், அது அவர்களுடைய வாழ்நாட்கள் முழுவதும், அவர்களுடைய நன்மைக்கு ஏதுவாய்க் காணப்பட்டிருக்கும் என்பதிலும் ஐயமில்லை. இப்படியாகவே நமது நண்பர்கள் மற்றும் உறவினர்களின் விஷயத்திலும், நமது அன்பையும், இரக்கமான உணர்வுகளையும் வெளிப்படுத்தும்போது, இதனால் அவர்களும் அன்பைப் பரிமாறிக்கொள்வதோடு மாத்திரமல்லாமல், இதனால் அவர்களுக்கும் நன்மை உண்டாகுகின்றது; நமது பாசத்தை நாம் அடக்கிக்கொள்வோமானால், அன்பில் உணர்வுகளற்ற நிலைமையே காணப்படும் மற்றும் அன்பில் இப்படியான உணர்வற்ற நிலைமை என்பது மற்றவர்களைப் பாதிப்பதோடல்லாமல், நம்மையும் பாதிக்கின்றதாய் இருக்கும், அதாவது ஜீவியத்தினுடைய மகிழ்ச்சியின் ஊற்றுகள் அனைத்தையும் அழித்துப்போடுகின்றதாய் இருக்கும்.

"நீ தீமையினாலே வெல்லப்படாமல், தீமையை நன்மையினாலே வெல்லு" என்ற வசனத்தை நினைவில் கொள்வோமாக (ரோமர் 12:21). இந்த ஆலோசனைக்கு யோசேப்பு மாதிரியாக விளங்குகின்றார். யோசேப்பு தன்னுடைய சகோதரர்களுடைய பொல்லாப்பான நடக்கை தன்னை மேற்கொள்வதற்கும், தன்னைப் பொல்லாதவனாகவும், கசப்புடையவனாகவும் மாற்றுவதற்கும் அனுமதியாமல் இருந்தது மாத்திரமல்லாமல், இன்னுமாக தன்னுடைய அன்பினாலும், தன்னுடைய இரக்கத்தினாலும், தனது பரிவினாலும், தனது பெருந்தன்மையினாலும், அவர்களது தீமையான தன்மைகளையும், சுபாவங்களையும் மேற்கொண்டார் மற்றும் அதினால் ஏற்பட்டதான தாக்கம், அவர்களுடைய வாழ்நாள் முழுவதும் நன்மைக்கு ஏதுவாகவே அமைந்தது. இப்படியான ஒரு நடக்கையைக்கொண்டிருப்பது, யோசேப்பைக் காட்டிலும், அதிகமாக நமக்கே கடமையாய் உள்ளது. யோசேப்பு இதை எவ்விதமான புறத்தூண்டுதலும் இல்லாமல், இயல்பாகவே செய்தார்; நமக்கு நமது கர்த்தர் மற்றும் அவருடைய அப்போஸ்தலர்களுடைய மாதிரியும், கட்டளைகளும்/போதனைகளும் மற்றும் பரிசுத்தத்தின் ஆவியினுடைய ஜெநிப்பித்தலும் காணப்படுகின்றது. "நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும், தேவபக்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும்" (2 பேதுரு 3:11).

---

**[R3980]**

# "இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்"

## ஆதியாகமம் 45:1-15; 50:15-21

"ஒருவருக்கொருவர் தயவாயும், மனஉருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்."- எபேசியர் 4:32

யோசேப்பினுடைய சரித்திரத்தின் உச்சக்கட்டத்தை இப்பாடத்தில் நாம் பார்க்க இருக்கின்றோம். வேதாகமத்தின் எளிமையான பதிவுகளை வாசித்து, அதினால் ஆசீர்வதிக்கப்படாமல் எவரும் காணப்பட முடியாது. யோசேப்பு அடிமையாக எகிப்திற்கு வந்து, 22-வருடங்களுக்குப் பின்னாக நடந்த சம்பவத்தை இந்தப் பாடத்தில் பார்க்கவிருக்கின்றோம். திரளான அறுவடைகளுள்ள ஏழு வருடங்கள் முடிந்து மற்றும் ஏழு வருட பஞ்சக் காலத்தின், இரண்டாம் வருடமாக அப்போது இருந்தது. யோசேப்பு எகிப்தின் அதிபதியானபோது, தனது வயதான தந்தையைத் தொடர்புகொள்வதற்கான அநேகம் வாய்ப்புகள்

அவருக்கு இருந்தது என்பதை விசேஷமாய் நாம் நினைவுகூர்ந்து, அவர் ஏன் அந்த 22-வருடங்கள் முழுவதிலும் தொடர்புகொள்ளவில்லை என்று யோசிக்க முற்படுவோமானால், யோசேப்பின் காரியங்கள் அனைத்தும் எப்படிக் குறிப்பாகக் கர்த்தரினால் வழிநடத்தப்படுகின்றது என்பதையும், இந்த விஷயத்திலும் அவர் தெய்வீக வழிகாட்டுதலின்படியே செயல்பட்டுக்கொண்டிருந்தார் என்பதையும் நாம் நினைவில்கொள்ள வேண்டும். வறட்சியும், அதன் விளைவான பஞ்சமும் பாலஸ்தீனியாவிலும், அநேக நாடுகளிலும் பரவிக் காணப்படும் என்பதை அறிந்திருந்த யோசேப்பு, தனது சகோதரர்கள் (எகிப்துக்கு) வருவார்கள் என்று எதிர்ப்பார்த்துக்கொண்டிருந்தார். பஞ்சமானது எபிரெயர்களை, ஆகாரம் வாங்கும்படிக்கு எகிப்துக்கு வரச்செய்யும் என்ற எதிர்ப்பார்ப்பில், நம்பிக்கைக்குப் பாத்திரமான சில ஊழியக்காரர்கள் மூலமாக, எபிரெயர்கள் வருகிறார்களா என்று பார்த்துக்கொள்வதற்குக் கண்காணிக்க அமர்த்தப்பட்டிருப்பார்கள் என்பது உறுதியே. ஆகவேதான் யாக்கோபின் பத்துக் குமாரர்கள் வந்தபோது, யோசேப்பு உடனடியாக அதைத் தெரிந்துகொண்டார். அவர்கள் கைது செய்யப்பட்டு, யோசேப்பிற்கு முன்பு கொண்டுவரப்பட்டார்கள் மற்றும் சந்தேகத்தோடு அவர்கள் பார்க்கப்பட்டு, வேவுகாரர்கள் எனக் குற்றஞ்சுமத்தப்பட்டு, மூன்று நாட்கள் சிறையில் போடப்பட்டார்கள்.

அதிபதியான யோசேப்பு தன்னை முற்றும் முழுமையாக மறைத்துக்கொள்ளத்தக்கதாகவும், தனது சகோதரர்கள் தனது முன்னிலையில் தங்கள் பேச்சில்/சம்பாஷணையில் ஒளிவு மறைவு இல்லாமல் காணப்படத்தக்கதாகவும், துபாசியின் மூலமாகவே அவர்களிடத்தில் பேசினார். அவர்கள் சிறையில் மூன்று நாட்கள் கழித்த பிற்பாடு, யோசேப்பு அவர்களை நேருக்கு நேர் சந்தித்துப் பேசினார் மற்றும் அவர்கள் தங்களுக்கு இவ்விஷயத்தில் வந்துள்ளதான துன்பமானது, அவர்கள் 22-வருடங்களுக்கு முன்னதாக தங்கள் சகோதரனுக்குச் செய்த தவற்றின் நிமித்தமான கர்த்தருடைய நியாயத்தீர்ப்பாக இருக்கின்றது என்று தாங்கள் உணர்ந்து கொண்டதை ஒருவரோடொருவர் ஒப்புக்கொண்டதையும் யோசேப்பு கேட்டார். சாகும்படிக்குத் தன்னைக் குழியில் போட்டபோது, தான் கதறின கதறல்களை அவர்கள் இன்னமும் நினைவில் கொண்டிருப்பதை யோசேப்பு கவனித்தார்; மற்றும் இந்தக் காரியமானது அவர்களது மனதில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதையும், அவர்கள் இப்பொழுது மாற்றமான இருதய நிலைமையில் காணப்படுவதையும் யோசேப்பு உணர்ந்துகொண்டார். அவர்களில் ஒருவரைப் பிணைக்கைதியாக வைத்துக்கொண்டு, மற்றவர்களுக்குக் கொஞ்சம் ஆகாரம் கொடுத்து, அவர்கள் இனித் திரும்பி வருகையில் தாங்கள் சொல்லியவைகள் உண்மையானவைகள் என்று நிரூபிக்கத்தக்கதாக, தாங்கள் குறிப்பிட்ட இளைய சகோதரனைக்கொண்டுவர வேண்டும் என்றும், இப்படியாக அவர்கள் தங்கள் நேர்மையை நிரூபிப்பார்களானால், பிற்பாடு அவர்கள் (ஆகாரம் பெற்றுக்கொள்வதற்கென எகிப்துக்கு) வந்துபோவதற்கு எந்தத் தடையும் இருக்காது என்றும் உறுதியளித்து, அவர்களை அனுப்பி வைத்தார்.

அவரது சகோதரர்கள் காவல் கிடங்கில் (சிறையில்) காணப்படுகையில், தங்களது இந்த அனுபவங்களை யோசேப்போடு தொடர்புபடுத்திப் பார்த்தார்கள் மற்றும் இருதயத்தில் தங்கள் தவறான நடத்தைக்கான படிப்பினையை ஏற்றுக்கொண்டுவிட்டார்கள். வேறு ஒரு பாடத்தில் இந்த மனிதர்களில் ஒருவரைத்தவிர, மற்றவர்கள் அனைவரும் தங்கள் இருதயத்தில் கொலைப்பாதகர்களாக இருந்ததாக நாம் பார்த்திட்டாலும், இன்றைய பாடத்தில் அவர்களது குணலட்சணங்களில் குறிப்பிடத்தக்க மாற்றம் இருப்பதை நாம் காண்போம். இந்த மாற்றம் அநேகமாக அவர்களது தந்தை, யோசேப்பின் மரணத்தின் நிமித்தம் அடைந்த துயரத்தின் காரணமாகவும், இன்னுமாக சந்தேகத்திற்கிடமின்றி தங்கள் சொந்த தவறான செய்கையின் நிமித்தமான மனவுளைச்சலின் காரணமாகவும் ஏற்பட்டது. ஆகையால் ஒரு தீமையான செய்கை என்பது எப்போதும் இன்னும் தீமை செய்வதற்கு வழிநடத்துகின்றதாய் இருக்காது, மாறாக சில சமயங்களில் குணலட்சணத்திற்கான திருப்புமுனையாகக்கூட அமைகின்றது. இம்மாதிரியான விதத்தில் எந்தக் கிறிஸ்தவன்தான் அனுபவம் பெற்றிராதவனாக இருப்பான்? அவன் குறிப்பிட்ட சில குணலட்சணத்தில் பெலவீனமாய் இருப்பதை அவனுக்கு வெளிப்படுத்துகின்றதான, அவன் தவறும் கட்டங்களானது, அவனுக்கு உண்மையில் விலையேறப்பெற்றப் படிப்பினையாக இருந்து, அவனை அந்தக் குறிப்பிட்ட குணலட்சணத்தில் பலப்படுத்தி, அதே விஷயத்தில் எதிர்க்காலத்தில் வருகின்றதான பரீட்சைகளிலும், சோதனைகளிலும் நன்றாய் நிற்க உதவி செய்கின்றது. "இப்படியாக

நம்முடைய ஜீவியத்தின் அனுபவங்கள் அனைத்தும் (ஜீவியத்தின் தவறுகள்கூட) சரியாகப் பயன்படுத்தப்படும்போது, மேலான காரியங்களுக்குரிய படிக்கற்களாக அமைகின்றது."

## "மிகவும் மாற்றமடைந்துள்ள பத்து மனிதர்கள்"

வீட்டிற்குத் திரும்பின பின் அவர்கள், நடந்த சம்பவத்தைத் தங்கள் தந்தையாகிய யாக்கோபினிடத்தில் விவரித்தார்கள்; பிணைக்கைதியாகப் பிடித்து வைக்கப்பட்டதின் நிமித்தம், சிமியோனையும் இழந்துபோனபடியால், யாக்கோபு இப்பொழுது துக்கம் அடைந்திருந்தார், ஆனாலும் பென்யமீனை தன்னிடமிருந்து பிரித்து அனுப்பிவைப்பதற்கு அவர் முற்றிலும் மறுப்புத் தெரிவித்துவிட்டார். இங்குத் தனது தகப்பனுடைய துயரத்தைக் கண்ட ரூபன், பென்யமீனை பாதுகாப்பாய்க்கொண்டுவரும் விஷயத்திற்கு, தன்னையும், தனது பிள்ளைகளையும் பிணைக்கைதிகளாக ஒப்புவித்தார். பஞ்சம் அவர்களைக் கடுமையாய் வாட்டினபோது, பட்டினி அவர்களைப் பயமுறுத்தினபோது யாக்கோபு, பென்யமீனை அவரது சகோதரர்களோடுகூட எகிப்துக்குச் செல்லுவதற்கு அனுமதித்தார், அதுவும் ஏதாகிலும் பென்யமீனுக்குச் சம்பவித்தால், அதற்குப் பொறுப்பு தான் என்று வாக்களித்த யூதாவின் நிச்சயத்தின் பேரில் யாக்கோபு சம்மதித்தார். கடந்த 22-வருடங்களாக இந்த மனிதர்கள் தங்கள் தகப்பனாரிடமிருந்து, அனுதாபம் பற்றின படிப்பினைகளைக் கற்றுக்கொண்டுள்ளனர். ஒரு காலத்தில் தகப்பனிடத்தில் மிகவும் அக்கறையற்றவர்களாக இருந்து, தகப்பனுக்குப் உபத்திரவத்தைக்கொண்டு வந்தவர்கள், இப்பொழுதோ அவருடைய ஆறுதலுக்கெனத் தங்கள் சொந்த ஜீவியங்களையும் கையளிப்பதற்குங்கூட விருப்பம் உள்ளவர்களாகக் காணப்படுகின்றனர். இம்மனிதர்கள் இஸ்ரயேலினுடைய கோத்திரத்தலைவர்களாக இருந்தார்கள் என்பதையும், இவர்களுடைய பிள்ளைகளில் சிலர் வரலாற்றில் மிகவும் சிறப்பு மிக்கவர்களாக இருந்தனர் என்பதையும் நாம் நினைவில்கொள்ள வேண்டும்; உதாரணத்திற்கு மோசே மற்றும் ஆரோனையும் உள்ளடக்கின ஒட்டுமொத்த ஆசாரிய கோத்திரத்திற்கு லேவி பிதாவாகக் காணப்பட்டார்; யூதா வம்சாவழியில் தாவீதும், சாலொமோனும் மற்றும் நமது கர்த்தராகிய இயேசுவும் வந்தார்கள். இந்த மனிதர்களுக்கு, அவர்களது தகப்பனார் மற்றும் பஞ்சம் முதலியவை தொடர்பாக மாபெரும் படிப்பினைகளைக் கொடுப்பது தெய்வீக நோக்கத்தின் ஒரு பாகமாகக் காணப்பட்டது என்பது நிச்சயமே; இப்படிப்பினைகளானது அவர்களுக்கு நன்மையாய் இருப்பது மாத்திரமல்லாமல், எதிர்க்காலம் முழுவதிலும் தாக்கம் ஏற்படுத்துகின்றதாயும் இருக்கும்.

தங்கள் தகப்பன் வீட்டிலிருந்து, எகிப்துக்கு வந்த பத்துச் சகோதரர்களும், தாங்கள் அதிபதியினுடைய அரமனைக்குள் பிரவேசிப்பதற்கென வழிகாட்டப்பட்டபோது, ஆச்சரியமடைந்தார்கள். அவர்கள் முன்பு வந்து தானியங்களை வாங்கினபோது, விலையாகக் கொடுத்திருந்த பணமானது, அவர்கள் சாக்கினைத் திறந்தபோது காணப்பட்டது மற்றும் அந்தப் பணத்தையும், இன்னும் அதிகம் கோதுமை வாங்குவதற்கான பணத்தையும் தாங்கள் கொண்டு வந்திருப்பதாகக்கூறி, யோசேப்பின் விசாரணைக்காரனிடம் விவரித்தார்கள். தாங்கள் பணத்தைத் திருடிவிட்டதாகக் குற்றஞ்சாட்டப்படுவார்களோ என்று அவர்கள் நடுங்கினார்கள்; எகிப்திய சட்டத்தின்படி திருடியதற்கான தண்டனை, அடிமையாக்கப்படுவதாகும். யோசேப்பின் விசாரணைக்காரன் தனது எஜமானுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமானவராகவும், எஜமானுடைய மதம் பற்றின அறிவு கொஞ்சம் கொண்டிருப்பவராகவும் தென்படுகின்றார், ஏனெனில் அவர் அவர்களிடத்தில் இரக்கத்துடன் கூறினதாவது, "உங்களுக்குச் சமாதானம்; பயப்பட வேண்டாம்; உங்கள் தேவனும், உங்கள் தகப்பனுடைய தேவனுமாயிருக்கிறவர் உங்கள் சாக்குகளில் அதை உங்களுக்குப் புதையலாகக் கட்டளையிட்டார்." சிமியோனை விடுதலைப் பண்ணி, அவர்களிடத்தில் கொண்டுவந்து விட்டதன்மூலம், இன்னுமாக அவர்களுக்கு விசாரணைக்காரன் நம்பிக்கையூட்டினார். அவர்களுக்குச் சொல்லப்பட்டப்படியே அவர்கள் தங்களைக் கழுவிக்கொண்டு, அதிபதியினுடைய வீட்டில் போஜனம் பண்ணும்படிக்கு ஆயத்தமானார்கள். இதற்கெல்லாம் அர்த்தமென்ன?

விவசாயிகளாகக் காணப்பட்ட அவர்களுக்கு அரமனையின் சூழ்நிலைகள் புதிதாய் இருந்தது மற்றும் தங்களை முன்பு வேவுகாரர்களென நடத்தின அதிபதி, ஏன் இப்பொழுது தங்களை இவ்வளவுக்குப்

பெருந்தன்மையுடன் நடத்திட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். சூழ்நிலைகளினுடைய விநோதங்களை அவர்கள் கவனித்தபோது, அவர்களது ஆச்சரியம் உடனுக்குடன் அதிகரித்துக்கொண்டே போனது; அவர்களது பிறப்பினுடைய வரிசையின்படி அவர்கள் அமர்த்தப்பட்டனர் மற்றும் யோசேப்பின் தனி மேஜையிலிருந்து/பந்தியிலிருந்து போஜன பங்கு தங்களுக்கு வந்தபோது, பென்யமீன் மீது அதிபதி விசேஷித்த தயவு கொண்டிருப்பதைச் சுட்டிக்காட்டும் வண்ணம் பென்யமீனுக்கு ஐந்து பங்குகள் அனுப்பப்பட்டதை அவர்கள் கவனித்தார்கள். தங்கள் மொழியை அதிபதி புரிந்துகொள்ள முடியும் என்பதையும், தாங்கள் இன்னமும் பொறாமைக் கொண்டிருக்கின்றனரா அல்லது இல்லையா என்பதை அறிந்துகொள்ளத்தக்கதாக, தங்களது வார்த்தைகளை அதிபதி கவனித்துக்கொண்டிருக்கின்றார் என்பதையும் அல்லது இளைய சகோதரனுக்குக் கிடைத்திட்ட விசேஷித்த தயவினுடைய இந்த வெளிப்படுத்தலை தாங்கள் எப்படி ஏற்றுக்கொள்ளப்போகின்றார்கள் என்பதை அதிபதி கவனித்துக்கொண்டிருக்கின்றார் என்பதையும் அவர்கள் அறியாதிருந்தார்கள். அவர்கள் பரீட்சையில் ஜெயித்தார்கள். தங்கள் பொறாமையானது செத்துப்போய்விட்டது என்பதையும், தங்களது இளைய சகோதரனுக்குக் கிடைத்திட்ட தயவில் தாங்கள் களிக்கூருகின்றார்கள் என்பதையும் அவர்கள் வெளிப்படுத்தினார்கள்.

இன்னும் அடுத்தப்படியான பரீட்சை நிகழ்த்தப்பட வேண்டியிருந்தது; அந்த மனிதர்கள் பெற்றுக் கொண்ட ஆகாரத்துடன் புறப்பட்டுப்போகும்படிக்கு அனுமதிக்கப்பட்டார்கள், ஆனால் பென்யமீனுடைய கழுதையின் மீது ஏற்றப்பட்டிருந்த சாக்குகளில், ஒன்றில் விசாரணைக்காரன் தனக்குக் கட்டளையிட்டிருந்தபடி அதிபதியினுடைய வெள்ளிப்பாத்திரத்தை வைத்தான்; அவர்கள் பட்டணத்தைத் தாண்டி செல்கையில், அவர்கள் அரமனையின் காவலர்களால் தொடர்ந்து பிடிக்கப்பட்டு, அவர்கள் அவமரியாதையாய் நடந்துகொண்டுள்ளதாகவும், அதிபதியினுடைய "புனிதமான பாத்திரத்தை" திருடினதின் மூலமாக, அவர்கள் தாங்கள் பெற்றுக்கொண்ட நன்மைக்கு, தீமையைச் செய்ததாகவும் குற்றஞ்சாட்டப்பட்டனர். அவர்கள் அனைவரும் தாங்கள் குற்றமற்றவர்கள் என்று அறிக்கைப் பண்ணிக்கொண்டு, ஒருவேளை தங்களிடத்தில் பாத்திரம் கண்டுபிடிக்கப்பட்டால், யாரிடத்தில் கண்டுபிடிக்கப்படுகின்றதோ, அவர் மாத்திரமல்லாமல், தாங்கள் அனைவருமே அடிமையாகிக்கொள்வதாகக் கூறினார்கள். பாத்திரத்திற்கான தேடுதலானது மூத்தவன் துவங்கி, இளையவன் மட்டும் நிகழ்த்தப்பட்டது; பென்யமீனிடத்தில் பாத்திரம் கண்டுபிடிக்கப்பட்டது. அந்தச் சகோதரர்கள் எவ்வளவு கலக்கம் அடைந்திருந்திருப்பார்கள் என்று நம்மால் நன்கு கற்பனை செய்து பார்க்க முடிகின்றது; குற்றவாளி மாத்திரம் தனக்கு அடிமையாக வந்திட வேண்டும் என்று விசாரணைக்காரன் சொன்ன போதிலும், அவர்கள் அனைவரும் எகிப்துக்குத் திரும்பினார்கள். தங்கள் தகப்பனாகிய யாக்கோபின் முகத்தை அவர்களால் எப்படிப் பார்த்து, இந்தப் பெருந்துன்பத்தை விவரித்திட முடியும்? அரமனைக்குத் திரும்பியபோது, அங்கு அதிபதியாகிய யோசேப்பு காணப்பட்டார். யோசேப்பிற்கு முன்னதாக விழுந்து வணங்கினார்கள் மற்றும் தாங்கள் குற்றமற்றவர்கள் என்று மறுப்புத் தெரிவிப்பது பயனற்றது என்று அறிந்தவர்களாக, இந்தக் காரியத்தைப் பெருந்துன்பமெனக் கூறி, தங்களை அடிமைகளாக ஒப்புக் கொடுத்தார்கள்.

அதிபதியோ, **"இல்லை! எகிப்தியர்களாகிய நாங்கள் ஒரு மனிதன் செய்த தவறுக்காக, உங்கள் அனைவரையும் அடிமையாக்கும் அநியாயமான காரியத்தைச் செய்வதில்லை. குற்றவாளி மாத்திரம் அடிமையாய்ச் சேவை புரியட்டும், மீதமானவர்கள் போகலாம். உங்கள் வீடுகளுக்கும், உங்கள் குடும்பங்களிடத்திற்கும் திரும்புங்கள்; உங்கள் கோதுமையை எடுத்துச்செல்லுங்கள்"** என்று பதிலளித்தார். ஒருகாலத்தில் தனது சகோதரனாகிய யோசேப்பு மற்றும் தனது தந்தையாகிய யாக்கோபின் விஷயத்தில் கடின இருதயத்துடன் காணப்பட்ட யூதா, இத்தருணத்தில் மிகவும் உருக்கமான வேண்டுதலை அதிபதியினிடத்தில் ஏறெடுத்தார்; இந்த வேண்டுதலின் எளிமையும், வெளிப்படையான தன்மையும், அனுதாபமும், சரித்திரத்தின் பதிவுகளிலேயே இந்த வேண்டுதலை தலைச்சிறந்த ஒன்றாக்கிற்று. பென்யமீனைக்கொண்டு வந்தது தொடர்புடைய சம்பவங்களையும், பென்யமீனைப் பிரிகையில் தனது தந்தை அடைந்திட்ட துயரத்தையும், பென்யமீனுக்கு ஏதாகிலும் சம்பவித்தால், அது தனது தகப்பனுடைய மரணத்தைத் துரிதப்படுத்திடும் என்பதையும், தான் எவ்வாறு தனது சகோதரனாகிய பென்யமீனுக்கு உத்தரவாதமாய்க் காணப்படுகின்றார் என்பதையும் யூதா

அதிபதியினிடத்தில் விளக்கிக்கூறி, "இப்படியிருக்க, இளையவன் தன் சகோதரரோடேகூடப் போகவிடும்படி மன்றாடுகிறேன்; உம்முடைய அடியானாகிய நான் இளையவனுக்குப் பதிலாக இங்கே என் ஆண்டவனுக்கு அடிமையாயிருக்கிறேன். இளையவனை விட்டு, எப்படி என் தகப்பனிடத்துக்குப் போவேன்? போனால் என் தகப்பனுக்கு நேரிடும் தீங்கை நான் எப்படிக் காண்பேன் என்றான்" (ஆதியாகமம் 44:18- 34).

## "துன்பகாலத்தில் நம்பிக்கையூட்டும் ஓர் அம்சம்"

அந்தச் சகோதரர்கள் மீது கர்த்தரும், யோசேப்பும் வைத்த இறுதிப் பரீட்சையில் அவர்கள் வெற்றியடைந்தார்கள். இந்தப் பரீட்சையானது அவர்கள் மாற்றம் அடைந்துள்ள மனிதர்களாக இருக்கின்றனர் என்பதையும், இரக்கமின்மைக்கும், கல்நெஞ்சத்திற்கும், கொடூரமான மிருகத்தனத்திற்கும் பதிலாக அவர்கள் இப்பொழுது மனவுருக்கம் உடையவர்களாகவும், இரக்கம் உடையவர்களாகவும், ஒருவருக்காக இன்னொருவர் பாடுபடுவதற்கு விருப்பமுள்ளவர்களாகவும் இருக்கின்றார்கள் என்பதையும் நிரூபித்தது. அவர்கள் மீது கொஞ்ச காலம் நிழலிட்டிருந்த மேகங்களும், நிழல்களும் கலைந்து போவதற்கான வேளை வந்தது. அதிபதியாகிய யோசேப்பினால் இனியும் தன்னை அடக்கிக்கொள்ள முடியாமல் இருந்தது. யோசேப்பு தனது சகோதரர்களுடன் தனிமையில் காணப்படத்தக்கதாக, யோசேப்பு மற்றவர்களை வெளியேறும்படிக்குக் கட்டளையிட்டார்; அங்கு நிகழப்போகிறவைகள், மற்றவர்கள் பார்க்கக்கூடாது எனும் அளவுக்கு முக்கியமானதாக இருந்தது. தனது மௌனத்தைக் கலைப்பதற்கும், தன்னை அவர்களுக்கு வெளிப்படுத்துவதற்குமான நேரம் யோசேப்பிற்கு வந்தது. அவர்கள் மாத்திரமே அங்கு நிற்க, யோசேப்பு அழுதார், மற்றும் தான் யார் என்பதையும், தனக்கு விரோதமாக அவர்கள் 22-வருடங்களுக்கு முன்பாகச் செய்த காரியங்கள், எப்படித் தேவனுடைய வழிநடத்துதலின் கீழ்த் தன்னுடைய நன்மைக்கு ஏதுவாய் மாற்றப்பட்டது என்பதையும் யோசேப்பு அவர்களிடத்தில் கூறினபோது, உணர்வுகளினால் அவரது குரல் நடுங்கியது. குற்றம் புரிந்திருந்த அந்த மனிதர்கள் முன்பில்லாத அளவுக்கு இப்பொழுது அச்சத்தால் நடுங்கினார்கள். தங்களுக்கு எதிராக தங்கள் சகோதரன் எப்படிக் கோபம் கொள்ளப்போகிறார்? எப்படித் தாங்கள் செய்திட்ட தீமைக்கு, தீமையைச் சரிகட்டிப் பழிவாங்கப்போகிறார்? மற்றும் தங்களை அடிமையாக்கப்போகிறாரா (அ) கிடங்கில் தள்ளப்போகிறாரா? என்று எண்ணி நடுங்கினார்கள்.

ஆனால் சந்தோஷத்தின் கண்ணீர்களை யோசேப்பு சிந்துகையில், தனது சகோதரர்களிடம் இரக்கமாய்ப் பேசினார்; யோசேப்பைவிட்டு விலகி ஓடுவதற்குரிய நிலைமையில் ஆரம்பத்தில் காணப்பட்ட அவர்கள், யோசேப்பின் பக்கத்தில் போனார்கள் மற்றும் யோசேப்போ, "என்னை இவ்விடத்தில் வரும்படி விற்றுப்போட்டதினால், நீங்கள் சஞ்சலப்படவேண்டாம்; அது உங்களுக்கு விசனமாயிருக்கவும் வேண்டாம்; ஜீவரட்சணை செய்யும்படிக்குத் தேவன் என்னை உங்களுக்கு முன்னே அனுப்பினார். தேசத்தில் இப்பொழுது இரண்டு வருஷமாகப் பஞ்சம் உண்டாயிருக்கிறது; இன்னும் ஐந்து வருஷம் உழவும் அறுப்பும் இல்லாமல் பஞ்சம் இருக்கும். பூமியிலே உங்கள் வம்சம் ஒழியாமலிருக்க உங்களை ஆதரிக்கிறதற்காகவும், பெரிய இரட்சிப்பினால் உங்களை உயிரோடே காப்பதற்காகவும் தேவன் என்னை உங்களுக்கு முன்னமே அனுப்பினார். ஆதலால் நீங்கள் அல்ல, தேவனே என்னை இவ்விடத்துக்கு அனுப்பி, என்னைப் பார்வோனுக்குத் தகப்பனாகவும், அவர் குடும்பம் அனைத்திற்கும் கர்த்தனாகவும், எகிப்துதேசம் முழுதுக்கும் அதிபதியாகவும் வைத்தார். நீங்கள் சீக்கிரமாய் என் தகப்பனிடத்தில் போய்: தேவன் என்னை எகிப்து தேசம் முழுவதுக்கும் அதிபதியாக வைத்தார்; என்னிடத்தில் வாரும், தாமதிக்கவேண்டாம்" என்றார் (ஆதியாகமம் 45:5-9). இக்காட்சியைக் காட்டிலும் அதிகம் விறுவிறுப்பான சம்பவங்கள் அடங்கின நாடகக் காட்சியைக் கற்பனை செய்துகூடப் பார்க்கமுடியாது; இக்காட்சியில் எளிமையும், நேர்மையும் காணப்படுகின்றது மற்றும் இவைகளுக்கு மேலாக ஒரே மாபெரும் போதகராகிய தேவனிடமிருந்து மாத்திரமே வெளிப்படுகின்றதும் மற்றும் அவருடன் நெருக்கமாய்க் காணப்படுகின்றவர்களாலும், அவரிடமிருந்து அறிவுரைகளைப் பெற்றுக்கொண்டவர்களாலும் மாத்திரமே, மாதிரிபடுத்துகின்றதுமான அன்பு மற்றும் இரக்கத்தின் ஆவியும் காணப்படுகின்றது.

## "மனவுருக்கம், ஒருவருக்கொருவர் மன்னித்தல்"

ஒருவேளை யோசேப்பு இந்த யுகத்தின் பரிசுத்தவானாய்க் காணப்பட்டிருந்திருப்பாரானால், பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டிருந்திருப்பாரானால், வேதாகமத்தில் நாம் பெற்றிருக்கிறதான தெய்வீக நோக்கம் மற்றும் தேவன் பற்றின பல்வேறு வெளிப்படுத்தல்களினால் வெளிச்ச மூட்டப்பட்டிருப்பாரானால், அவரது நடத்தையானது கிறிஸ்தவ வளர்ச்சியினுடைய மிக உயர்ந்த வகையாகக் கருதப்படுவதற்குப் பாத்திரமானதாகும். ஆனால் அவரது குணலட்சணமானது வளர்க்கப்பட்டதான சந்தர்ப்பங்களையும், சூழ்நிலைகளையும் நாம் பார்க்கும்போது, அதாவது புறஜாதி தேசத்தில், தேவன் மற்றும் அவரது திட்டம் பற்றின சிறிய வெளிப்படுத்தல்கள் மாத்திரமே உள்ள சூழ்நிலையில், அவரது குணலட்சணம் வளர்க்கப்பட்டுள்ளதை நாம் பார்க்கையில், நாம் வியந்து நிற்கின்றோம். இந்தப் பாடத்தைப் படிக்கையில் நாம் நம்மிடமே கேட்க வேண்டியதாவது, "எல்லா விதத்திலும் மிகுந்த அனுகூலமுள்ளவர்களாய் நாம் இருக்கையில், நாம் எப்படிப்பட்டவர்களாய் இருக்க வேண்டும்? யோசேப்பைப்போன்றதான அதே சூழ்நிலைகள் மற்றும் சந்தர்ப்பங்களின் கீழ் நாம் காணப்படுவோமானால், நாம் யோசேப்பைப்போன்று பெருந்தன்மையுடன் நடந்திருப்போமா? பெருந்தன்மையுடன் நடக்கவில்லையெனில், கிறிஸ்துவின் பள்ளிக்கூடத்தில் நமக்கு அளிக்கப்பட்டதான படிப்பினைகளை நாம் சரியான விதத்தில் பயன்படுத்தவில்லை என்று ஒப்புக்கொள்ளலாமே". இந்தப் பாடங்களை நாம் கற்றுக்கொண்டு, இருதயத்தில் இரக்கத்தின் மற்றும் பெருந்தன்மையின் பண்புகளை நாம் வளர்த்திக்கொள்ளாதது வரையிலும், நாம் ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தில் பங்கடைவதற்குத் தகுதியடைய முடியாது என்பதையும், தெரிந்துகொள்ளப்பட்டவர்களாகிய, மணவாட்டி வகுப்பாருடைய அங்கங்களாகக் கர்த்தரினால் ஏற்றுக்கொள்ளப்படவும் முடியாது என்பதையும் நாம் அறிவோம்.

யோசேப்பு அவர்களை வீட்டிற்கு அனுப்பிவைத்திடும்போது, தனது சகோதரனாகிய பென்யமீனை முத்தமிட்டார் மற்றும் அவரோடுகூடக் கொஞ்சம் நேரம் செலவழித்துக்கொண்டிருந்தார்; இருவரும் ஒருவரையொருவர் கழுத்தைக் கட்டிப்பிடித்துக்கொண்டு அழுதார்கள். மீதி பத்துச் சகோதரர்களை வழியனுப்பும் தருணம் வந்தது. எப்படி யோசேப்பு அவர்களிடத்தில் நடந்துகொள்ளப் போகின்றார்? கிழக்கத்திய நாடுகளினுடைய வழக்கத்தின்படி அவர்களை முத்தம் செய்வதின் மூலம் அன்பை/ பாசத்தை நிச்சயமாய் அவர் வெளிப்படுத்தப் போகிறதில்லை, ஏனெனில் அவர்களிடத்தில் அவரால் பூரணமான அன்பையும், நல்லெண்ணத்தையும் நிச்சயமாய்க் கொண்டிருக்க முடியாது என்று நாம் நினைக்கலாம். ஆனால் யோசேப்பு அவர்கள் ஒவ்வொருவரையும் முத்தமிட்டார்; மேலும் நிர்ப்பந்தம் காரணமாகவோ (அ) பயனை முன்னிட்டோ, யோசேப்பு முத்தமிடாததினால், அவர் முத்தமிட்டதான காரியமானது, அவரது இருதயம் முழுக்க பெருந்தன்மையினாலும், அன்புடன்கூடிய இரக்கத்தினாலும் நிறைந்திருந்ததை உறுதிபடுத்துகின்றது. "இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்," இப்படிப்பட்டவர்களுக்கே பரம பிதாவானவர் தமது இரக்கத்தையும், தயவையும் காட்டிடுவதற்குப் பிரியமுள்ளவராய் இருக்கின்றார். இவர்கள் மாத்திரமே இராஜ்யத்தின் மாபெரும் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வதற்குரிய சரியான மனநிலையில் இருப்பவர்கள் ஆவர்; இந்த இரக்கம் எனும் பண்பினை வளர்த்துக்கொள்ளாதவர்கள், உயர்வாய் உயர்த்தப்படுவதற்குப் பாத்திரமற்றவர்களாய் இருப்பார்கள்.

## "நான் தேவனா?"

இராஜாவாகிய பார்வோனுடைய முழுச்சம்மதத்தின் பேரில், எகிப்தின் அதிபதியினால் அனுப்பி வைக்கப்பட்ட வண்டிகளில், யாக்கோபும், அவரது குடும்பத்தாரும் எகிப்துக்கு வருதல் பற்றின காரியங்களையும் மற்றும் அவர்கள் எப்படிக் கோசேனில் குடியேறி, அங்குச் செழித்தோங்கினார்கள் என்பதையும் பற்றி இப்பாடத்தில் நாம் பார்க்கப்போகிறதில்லை. வருடங்கள் கடந்து வயதான யாக்கோபு எகிப்து தேசத்தில் மரித்தார், ஆனால் அடக்கம் பண்ணும்படிக்குப் பாலஸ்தீனியாவுக்குக்கொண்டு செல்லப்பட்டார். அடக்கம் பண்ணுதல் முடிந்தது; யோசேப்பின் சகோதரர்கள் மனக்கலக்கம் அடைந்திருந்தார்கள். யோசேப்புக்கு எதிராகச் செய்யப்பட்ட இத்தனை பெரும் தீமைக்கு, அவர் பதிலாக இவ்வளவு பெரும் நன்மையைச் செய்யும் காரியமானது, அவர்களுக்கு மிகவும் வழக்கத்திற்கு மாறான

காரியமாக தோன்றியபடியால், தங்கள் தகப்பன் நிமித்தமாக யோசேப்பு இப்படித் தற்காலிகமாக நடந்துகொள்கின்றார் என்றும், தந்தை இப்பொழுது மரித்துப்போயிருக்க, தங்களுக்கு இனிமேல் அதிபதியினிடத்திலிருந்து முற்றிலுமாய்த் தயவு கிடைக்கப்போவதில்லை என்றும் அஞ்சினார்கள். அவர்கள் மீண்டுமாய் யோசேப்பினிடத்தில் வந்து, முன்பு செய்தவைகளுக்காக வருத்தம் தெரிவித்து, அவரது மன்னிப்பிற்கான வாக்குறுதியைக் கேட்டுக்கொண்டார்கள்; இன்னுமாக தாங்கள் தேவனுடைய ஊழியக்காரர்களாய் இருக்கின்றார்கள் என்றும், தாங்கள் யோசேப்பினுடைய ஊழியக்காரர்களாகவும் கூட இருப்பதற்கு விரும்புகின்றார்கள் என்றும் கூறினார்கள். "யோசேப்பு அவர்களை நோக்கி: பயப்படாதிருங்கள்; நான் தேவனா; நீங்கள் எனக்குத் தீமைசெய்ய நினைத்தீர்கள்; தேவனோ, இப்பொழுது நடந்துவருகிறபடியே, வெகு ஜனங்களை உயிரோடே காக்கும்படிக்கு, அதை நன்மையாக முடியப்பண்ணினார். ஆதலால், பயப்படாதிருங்கள்; நான் உங்களையும் உங்கள் குழந்தைகளையும் பராமரிப்பேன் என்று, அவர்களுக்கு ஆறுதல்சொல்லி, அவர்களோடே பட்சமாய்ப் பேசினான்" (ஆதியாகமம் 50:19-21).

பெருந்தன்மையுள்ள யோசேப்பு! குற்றஞ்சாட்டும் வண்ணமான ஒரு வார்த்தையையோ, துயர்க்கொடுக்கும் ஒரு வார்த்தையையோ பேசாமல், மாறாக அவர்களது பாதகச் செயலின் பழியினின்று, அவர்களை விலக்கிடுவதற்கான காரணங்களை மாத்திரமே கூறினவராக இருந்தார். அவர்கள் செய்திட்ட காரியங்களானது, நன்மையைக்கொண்டுவந்துள்ளபடியால், தேவனால் அனுமதிக்கப்பட்டவர்களும், பயன்படுத்தப்பட்டவர்களுமான கருவிகளுக்கு எதிராக யோசேப்பு ஏன் தீமையாய்ச் சிந்தித்திட வேண்டும்? "நான் தேவனா?" என்ற யோசேப்பின் வார்த்தைகளானது குறிப்பது என்னவெனில், "உங்களை நியாயந்தீர்ப்பதோ அல்லது உங்களை எவ்விதத்திலாகிலும் தண்டிக்க முயற்சிப்பதோ எனக்கடுத்தக் காரியமா? இந்த விஷயத்தில் நீங்கள் தேவனிடத்தில் மாத்திரம் கணக்கொப்புவிக்க வேண்டியவர்களாய் இருக்கின்றீர்களல்லவா? நீங்கள் தேவனிடத்திலேயே ஒப்புரவாகிக்கொண்டு விட்டீர்களானால், என்னிடத்திலும் ஏற்கெனவே ஆகிவிட்டதல்லவா?" ஏனெனில் பழிவாங்குதல் என்பது கர்த்தருக்கே உரியதே ஒழிய, ஏதோ ஒருவிதத்தில் ஏறக்குறைய பூரணமற்றவர்களாகவே காணப்படுகின்றதான அவரது சிருஷ்டிகளுக்குரியதல்ல.

இந்த ஒரு பாடத்தை நாம் ஒவ்வொருவரும், தேவனுடைய சபையிலுள்ள சகோதர சகோதரிகளினுடைய விஷயத்தில் மாத்திரமல்லாமல், மாம்சத்திலுள்ள நம்முடைய சகோதர சகோதரிகளின் விஷயத்திலும் மற்றும் அயலார்களின் விஷயத்திலும் செயல்படுத்திடுவோமாக. அவர்கள் நமக்குத் தீமை செய்தாலோ (அ) நன்மை செய்தாலோ நமக்கென்ன, தேவனை அன்புகூருகின்றவர்களுக்கும், அவரது தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களுக்கும் சகலமும் நன்மைக்கு ஏதுவாய் நடந்தேறும் எனும் தேவனுடைய வாக்குத்தத்தத்தை நாம் பெற்றிருக்கின்றோம் அல்லவா? இப்படி வாக்குத்தத்தம் பெற்றவர்களாய் இருக்க, நம்முடைய காரியங்களில் கர்த்தரினால் பயன்படுத்தப்படுகின்றதான நபர்கள் (அ) கருவிகளுக்கு எதிராக நாம் ஏன் மனக்கசப்பையோ (அ) கொஞ்சமேனும் கோபத்தையோ கொண்டிருக்க வேண்டும்? இப்படியாகக் கர்த்தரில் நம்பிக்கைக் கொள்பவர்கள் மாத்திரமே ஜீவியத்தின் காரியங்களைச் சரியாய்க் கண்ணோக்கவும், சிந்திக்கவும் முடிகின்றவர்களாய்க் காணப்படுவார்கள் மற்றும் இவர்களால் மாத்திரமே உபத்திரவத்திலும், துன்புறுத்துதல்களிலும், நீதியின் நிமித்தமாய்ப் பாடுபடுகிற விஷயத்திலும் களிக்கூர முடியும், ஏனெனில் இவர்கள் அனைத்துக் காரியங்களும் தங்களுக்கு மிகவும் அதிகமான நித்திய கனமகிமையைக் கொண்டுவருகின்றது என்றும், தற்காலத்துச் சிரமங்களும், சோதனைகளும், நாம் நமது அருமை மீட்பருடன் பூமியின் குடிகள் அனைத்தையும் ஆசீர்வதிக்கத்தக்கதாக, பூமியின் சிங்காசனத்தில் உட்காருகையிலுள்ள மகிமைகளுக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்ல என்றும் அப்போஸ்தலர் உறுதிப்படுத்துபவைகளை அறிவார்கள்.

## "ஜெபத்தின் மற்றும் விண்ணப்பத்தின் ஆவி"

யோசேப்பின் சம்பவமும், அவரது பாடுகளும், அவர் இராஜாவுக்கு அடுத்த நிலையில் எகிப்தினுடைய அதிபதியென அதிகாரத்திற்கு உயர்த்தப்பட்டதும், இயேசுவையும், பாடுகள் மற்றும்

சுயத்தைப் பலி செலுத்துதல் எனும் இடுக்கமான வழியில், அவரது அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடக்கும் பின்னடியார்கள் அனைவரையும் மற்றும் அவர்கள் வானத்தின் கீழ், தேவனுடைய இராஜ்யத்தில் வல்லமைக்கு உயர்த்தப்படுவதையும் ஒருவேளை குறிக்கின்றதாய் இருக்கிறதென்றால் மற்றும் அனைவரின் ஜீவியங்களை இரட்சிக்கத்தக்கதாய் எகிப்தின் ஆகாரமாகிய கோதுமை சேகரிக்கப்பட்டதும், பின் விநியோகிக்கப்பட்டதுமான காரியங்களானது, மகிமையடைந்த மீட்பர் மூலம் ஆயிர வருட யுகத்தின்போது, மனுக்குலம் முழுவதின்மேலும் வரவிருக்கின்ற ஆசீர்வாதங்களையும், மகிமையான வாய்ப்புகளையும் குறிக்கின்றதாய் ஒருவேளை இருக்கிறதென்றால், யோசேப்பின் பதினொரு சகோதரர்களும் கூட நிழலாய்ச் சிலருக்கு இருப்பார்கள் என்று கருதுவது தவறாய் இருக்காது. இயேசுவுக்குச் சொந்தமானவர்களே அவரை ஏற்றுக்கொண்டார்களே ஒழிய, "இவரைச் சிலுவையில் அறையும், இவரது இரத்தப்பழி எங்கள் மீதும், எங்கள் பிள்ளைகள் மீதும் இருப்பதாக" என்று கூறினவர்கள் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும்.

கர்த்தருடைய வழிநடத்துதலின்படி, அந்த ஜனங்கள் அதுமுதல் கடுமையான அனுபவங்கள் மற்றும் சோதனைக்குள்ளாகக் கடந்து சென்றார்கள் என்பதை நாம் பார்த்துள்ளோம். இந்த அனுபவங்கள் நன்மையாய்க் காணப்பட்டிருக்கும் என்றும், கர்த்தருடைய வார்த்தைக்கான பஞ்சம் அவர்களுக்கு ஏற்பட்டு, அவர்களை ஜீவனுக்கான அப்பத்திற்காக மாபெரும் அதிபதியினிடத்திற்கு வரச்செய்திடும் என்றும் நாம் எதிர்ப்பார்க்கின்றோம். அந்தக் காலக்கட்டத்தை வேதவாக்கியங்கள் "யாக்கோபின் இக்கட்டுக்காலம்" என்று குறிப்பிடுகின்றது; இன்னுமாக தேவன் அவர்களை விடுவிப்பார் என்றும் குறிப்பிடுகின்றது (எரேமியா 30:7). இக்காரியத்தையே, "ஆதலால், நீங்கள் முற்காலத்திலே தேவனுக்குக் கீழ்ப்படியாதிருந்து, இப்பொழுது அவர்களுடைய கீழ்ப்படியாமையினாலே இரக்கம் பெற்றிருக்கிறதுபோல, அவர்களும் இப்பொழுது கீழ்ப்படியாமலிருந்தும், பின்பு உங்களுக்குக் கிடைத்த இரக்கத்தினாலே இரக்கம் பெறுவார்கள்" என்று கூறி அப்போஸ்தலன் உறுதிப்படுத்துகின்றார் (ரோமர் 11:30, 31). இதே காரியத்தைக் குறித்துத் தீர்க்கத்தரிசி பேசுகையில், அவர்கள் எப்படித் தாங்கள் குத்தினவரை நோக்கிப்பார்ப்பார்கள் என்றும், யோசேப்பின் சகோதரர்கள் துக்கித்ததுபோன்று, எப்படி அவர்கள் துக்கிப்பார்கள் என்றும், பின்னர் எப்படிக் கர்த்தர் அவர்கள் மீது ஜெபம் மற்றும் விண்ணப்பத்தின் ஆவியை ஊற்றுவார் என்றும், அவர்கள் மனம் வருந்துதலை வெளிப்படுத்துகையில் எப்படி மன்னிப்பை அருளுவார் என்றும், எப்படி இறுதியில் கர்த்தர் அவர்களது அக்கிரமங்களையும், பாவங்களையும் பிற்பாடு நினைவில்கொள்ளப்போகிறதில்லை என்றும், பாவத்தை நினைவில் கொள்கிறதற்குப்பதிலாகக் கர்த்தர் எப்படி மிகவும் கிருபையாய் அவர்களிடத்தில் காணப்படப்போகிறார் மற்றும் அவர்களை முத்தஞ்செய்யப்போகிறார் என்றும் நமக்குத் தெரிவிக்கின்றார் (சகரியா 12:10).

இந்தப் பாடத்தை, நம்முடைய ஆதார வசனத்தில் இடம்பெறும் அப்போஸ்தலனாகிய பவுலினுடைய புத்திமதியைப் பார்த்து நிறைவு செய்கின்றோம்; "ஒருவருக்கொருவர் தயவாயும் மனஉருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்" (எபேசியர் 4:32). நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்பட்ட விஷயத்திலும், நாம் தேவனுடைய குடும்பத்திற்குள்ளாகச் சேர்க்கப்பட்ட விஷயத்திலும், தேவனுடைய குமாரர்களென நமக்கு வந்திட்ட ஆசீர்வாதங்களுடைய விஷயத்திலும், நாம் தேவனுக்குக் கடன்பட்டிருப்பதை அதிகமாய் உணர்ந்துகொள்ளுகையில், நாம் அவரது மகிமையான குணலட்சணத்தின் சாயலையும், நமது அருமை மீட்பருடைய சாயலையும் (அனைவருக்கும் நீதி செய்வதே அவரது ஒட்டுமொத்த குணலட்சணத்தின் சாரமாகும்) மற்றும் நம்மால் அதிகப்பட்சமாய் வளர்க்க/அடைய முடிகின்ற அன்பையும், இரக்கத்தையும் அடைவதற்கு அதிகமாய் நாடுகின்றவர்களாய் நாம் காணப்பட வேண்டும். நாம் தேவனுக்கொத்த இந்தப் பண்பில் அதிகமாய் வளர்ந்து காணப்படும்போது நாம் பிதாவின் பார்வையில் மிகவும் பிரியமாய்க் காணப்படுவோம் மற்றும் பரலோக இராஜ்யத்திற்கான உடன்சுதந்தரத்துவத்திற்கும், மனுக்குலத்தின் உலகம் அனைத்திற்கும் ஜீவ அப்பத்தை விநியோகிப்பதற்கும் நாம் நன்கு பாத்திரமானவர்களாய்க் காணப்படுவோம்.

இவைகளைக் கண்டுகொள்ளாதவனும், அப்போஸ்தலனுடைய வார்த்தையின்படியான இந்தப் போக்கைப் பின்பற்றாதவனும் குருடனாகவும், மேலாகப் பார்க்க முடியாதவனாகவும் காணப்படுகின்றான்;

அதாவது தேவனுக்கொத்த சாயலை உத்தமமாய் அடைகின்றவர்களுக்கு, அவர் வாக்களித்துள்ள ஆசீர்வாதங்களைப் பார்க்கவும், உணர்ந்துகொள்ளவும் முடியாமல் இருப்பான். காண்கின்றவர்களோ நாளுக்குநாள் தங்கள் புரிந்துகொள்ளுதலின் கண்களானது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவ அன்பினுடைய நீளம், ஆழம், அகலம் மற்றும் உயரத்திற்கு மிக அகலமாய்த் திறந்துக்கொண்டிருப்பதைக் காண்பார்கள். இன்னுமாக நமது உபகாரியான கர்த்தரைச் சந்தோஷத்துடன் போற்றிக்கொண்டு, மேற்சொன்னபடி முன்னேறுகையில் நாம் மற்றவர்களிடத்திலான அன்பிலும், பரிவிலும், இரக்கத்திலும், கனிவிலும் வளருவோம் என்றும் கர்த்தர் நமக்கு உறுதியளிக்கின்றார். இவைகளை விசேஷமாக நாம் விசுவாச வீட்டாரிடத்தில் காண்பிக்க வேண்டுமென்றாலும், நாம் இவைகளை நம்முடைய மாம்ச சொந்தங்களிடத்திலும், நம்முடைய அயலார்களிடத்திலும், நண்பர்களிடத்திலும், சத்துருக்களிடத்திலும், விலங்குகளிடத்திலும் கூடக் காண்பித்திட வேண்டும். இவர்கள் அனைவரும் நம்முடைய குணலட்சணங்கள் மற்றும் பண்புகளின் மாறுதலை அதிகமதிகமாய் உணர்ந்துகொள்வார்கள் மற்றும் இப்படி இவர்கள் உணர்ந்துகொள்வது இவர்களுக்கு ஆசீர்வாதமாயும், நமக்குச் சந்தோஷமாயும் காணப்படும்.

---

**[R1645]**

# ''யோசேப்பு தனது சகோதரர்களை மன்னித்தல்''

**ஆதியாகமம் 45:1-15**

''உன் சகோதரன் உனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்தால், அவனைக் கடிந்துகொள் அவன் மனஸ்தாபப்பட்டால், அவனுக்கு மன்னிப்பாயாக.'' - லூக்கா 17:3

யோசேப்பிற்குத் தீமை செய்திட்ட அவரது சகோதரர்களை அவர் கையாண்ட விதத்தில் யோசேப்பினுடைய ஞானம் மற்றும் பெருந்தன்மையான குணலட்சணங்கள் மிகவும் பிரகாசமாய் மீண்டுமாகப் பிரகாசிக்கின்றது. எங்கும் நிலவியிருந்த பஞ்சத்தினிமித்தம் அந்தச் சகோதரர்கள் தானியம் வாங்கும்படிக்கு எகிப்துக்கு வந்திருந்தபோது, யோசேப்பு அவர்களை அடையாளங்கண்டுகொண்டார், ஆனால் யோசேப்பினுடைய புதிய ஸ்தானத்திற்குரிய மாற்றம் அடைந்துள்ள சூழ்நிலையின் காரணமாக, அவரை அவர்களால் அடையாளங்கண்டுகொள்ள முடியவில்லை. யோசேப்பு அடிமையாக விற்கப்பட்டு, அவர்களை விட்டுப் பிரிந்தபோது தாடியில்லாதவராகவும், 17-வயதானவராகவும் காணப்பட்டார்; ஆனால் இப்பொழுதோ அவர்கள் அவரை 40 வயதுள்ள மனிதனாகவும், இராஜரிக வஸ்திரங்கள் தரித்தவராகவும், தங்களால் புரிந்துகொள்ள முடியாத அந்நிய மொழியைப் பேசுபவராகவும் கண்டார்கள்.

ஒருவேளை யோசேப்பு பழிவாங்கும் சிந்தை உடையவராக இருந்திருப்பாரானால், இதுவே பழிவாங்குவதற்குரிய அவருக்கான வாய்ப்பாகும். இப்பொழுது யோசேப்பு அதிகாரத்தில் காணப்படுகின்றார் மற்றும் அவர்களோ அவரது இரக்கத்தைச் சார்ந்தவர்களாகக் காணப்படுகின்றனர். ஒருவேளை யோசேப்பினுடைய கணிப்பை, அவரது தாராள மனப்பான்மையானது மேற்கொண்டிருக்குமானால், அவர் தனது தயவுக்குள்ளாக ஒரு சத்துருக்களின் கூட்டத்தாரையே பெற்றவராக இருப்பார் மற்றும் இதனால் சமாதான குலைச்சலும், தனது வாழ்க்கை, பிரயோஜனப்படுவதற்கு இடைஞ்சலும் ஏற்பட்டிருக்கும் மற்றும் அவர்களது தீமையான பண்புகளை இன்னும் தூண்டிவிடுவதாகவும், வளர்த்திவிடுவதாகவும் இருந்திருக்கும். ஆனால் யோசேப்பு உணர்வுகளில் சீரான நிலைக்கொண்ட மனிதனாகக் காணப்பட்டார், ஆகையால் அவர் இந்த எல்லைக்கோ (அ) அந்த எல்லைக்கோ மிஞ்சிப்போகவில்லை. அவரது நடவடிக்கையானது, அவர் மன்னிக்கும் சிந்தையை மாத்திரமல்லாமல், ஜாக்கிரதையாயிருக்கும் சிந்தையைப் பெற்றிருந்ததையும் மற்றும் சரியான சூழ்நிலைகளின் கீழ் அவர் மன்னிப்பைக் காட்டுவதற்கு ஆயத்தமாய் இருந்தார் என்பதையும் காண்பிக்கிறது.

ஆகையால் அவர்களது தற்போதைய மனப்பாங்கு எப்படியிருக்கிறது என்பதை அறிந்துகொள்ளும்படிக்கும் மற்றும் கடந்த காலங்களின் அனுபவங்களானது, அவர்களில் எந்த விதமான மாற்றத்தையாவது கொண்டுவந்திருக்கிறதா என்பதை உறுதிபடுத்தும்படிக்கும் மற்றும் தனது தகப்பன் பற்றியும், தன்னுடைய சொந்த ஒரே சகோதரனாகிய பென்யமீன் பற்றியும் தகவல்கள் அறிந்துகொள்ளும்படிக்கும் யோசேப்பு முதலாவதாகக் கடுமையாய் நடந்துகொள்வதன் மூலமாக ஞானமாய் அவர்களைக் கையாண்டார். தனது தந்தையும், பென்யமீனும் இன்னும் உயிரோடிருப்பதை யோசேப்பு சீக்கிரமாய் அறிந்துகொண்டார் (ஆதியாகமம் 42:13); ஆனால் தன்னை யார் என்று மறைத்துக்கொண்டு, அவர்களிடம் கடுமையாய் நடந்துகொள்வதன் மூலமாக, அவர்கள் தங்கள் வயதான தகப்பனிடத்திலும், பென்யமீனிடத்திலும், ஒருவரோடொருவர் எத்தகைய மனப்பான்மையைத் தற்போது கொண்டிருக்கின்றனர் என்பதைப் பரீட்சிக்கும்படிக்கு யோசேப்பு வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டார்; மேலும் அவர்களை யோசேப்பு பரீட்சித்தப் பிற்பாடு, அவர்களிடத்தில் மாபெரும் மாற்றம் ஏற்பட்டுள்ளதை மகிழ்ச்சியுடன் கண்டுகொண்டார்; யோசேப்பினை இழந்துபோனதன் காரணமாக, தங்கள் தந்தை பென்யமீனுக்காகக் கொண்டிருக்கும் உணர்வுகளின் நிமித்தமாக, தங்கள் தகப்பனுக்காக அவர்கள் மன்றாடிக் கேட்டுக்கொண்டதிலும் மற்றும் யோசேப்பினுடைய இடத்தில் இப்பொழுது தகப்பனின் பிரியமான குமாரனாகக் காணப்படும் பென்யமீனிடத்தில் அவர்கள் பாசத்துடன் இருந்ததிலும், அவர்கள் தங்கள் இளமைபிராயத்தில் கொண்டிருந்த கசப்பான பகைமையையும், பொறாமையையும் மேற்கொண்டுவிட்டனர் என்பதைக் காண்பித்தவர்களாய் இருந்தனர்.

யோசேப்பின் விஷயத்தில் தாங்கள் முன்பு நடந்துகொண்டதைக் குறித்து, தங்கள் குற்றத்தினை ஒருவரோடொருவர் தங்கள் சொந்த மொழியில் ஒப்புக்கொண்டதையும் யோசேப்பு கேட்டார் மற்றும் ரூபனுடைய வார்த்தைகளையும் அறிந்துகொண்டார் (ஆதியாகமம் 42:21, 22). பின்னர்ச் சூழ்நிலைகளானது, பென்யமீனை அவரது தகப்பனிடத்திற்கு மீண்டும் கொண்டு சேர்க்க வேண்டும் என்பதற்காக பரிதாபத்துடன் யூதா மன்றாடுவதற்கும், பென்யமீனுக்குப் பதிலாக யோசேப்பினுடைய அடிமையாக இருக்கும்படிக்குத் தன்னை யூதா கையளிக்கும் காரியத்திற்கும் வழிநடத்தினது (ஆதியாகமம் 44:18-34); இன்னுமாக தங்களது முந்தைய பாவங்களைத் தாழ்மையுடன் ஒப்புக்கொண்டவர்களாகவும், தங்கள் மீது தற்போது வந்திருக்கிற இன்னலானது, தங்களுக்குரிய தண்டனையாக தேவனிடமிருந்து வந்துள்ளதாக உணர்ந்தவர்களாகவும் காணப்பட்டார்கள். தங்கள் தந்தையாகிய யாக்கோபு குறித்தும், யோசேப்பு குறித்தும் அவர்கள் கூறிய அனைத்தும், அவர்கள் பாவத்தை நினைத்து மனம் வருந்தியுள்ளதையும், இருதயம் மாற்றம் அடைந்துள்ளதையும் நிரூபிப்பதாய் இருந்தது.

இது யோசேப்பிற்குப் போதுமானதாய் இருந்தது; தவறுகளுக்காக வருத்தம் கொள்ளுதலையும், உண்மையான இருதய மாற்றத்தையுந்தான் யோசேப்பு எதிர்பார்த்தார் மற்றும் இவைகள் வெற்றிகரமாகவும், ஞானமாகவும் நிரூபிக்கப்பட்டபோது, அதற்குமேல் அவரால் தன்னை அடக்கிக்கொள்ள முடியவில்லை (ஆதியாகமம் 45:1); உண்மையாய் மன்னிக்கும் அவரது இருதயமானது, இப்பொழுது இரக்கத்தினால் பொங்கி வழிந்தது மற்றும் அவர் சத்தமாய் அழுது, தனது சகோதரர்களை அணைத்து, முத்தம் கொடுத்தார் மற்றும் அவர்கள் மீது தனது திரளான தயவை அளவில்லாமல் பொழிந்தார் மற்றும் அவர்கள் தங்களைத் தாங்களே மன்னித்துக்கொள்ளும்படிக்கும் மற்றும் மிகவும் இலவசமாகவும், முழுமையாகவும் மன்னிக்கப்பட்டுள்ள தங்களது கடந்தகால பாவங்களை மறப்பதற்கு அவர்கள் நாடும்படிக்கும் வேண்டிக்கொண்டார். யோசேப்பின் பிரியத்திற்குரிய சொந்த சகோதரனும், மற்றச் சகோதரர்களின் குற்றத்தில் எந்தப் பங்கும் கொண்டிராதவருமான பென்யமீன், அன்பின் விசேஷித்த சில அன்பளிப்புகளைப் பெற்றிருக்க வேண்டும்; இவ்விஷயம் இப்பொழுது சீர்ப்பொருந்தியுள்ள சகோதரர்களிடத்தில் எவ்விதமான பொறாமையையும் தூண்டவுமில்லை. அவர்கள் இந்த நற்செய்தியை அறிவிப்பதற்காக மாத்திரமல்லாமல், தெரியப்படுத்த வேண்டிய சூழ்நிலையின் காரணமாக, யோசேப்பிற்கு எதிராக தாங்கள் செய்த பாவத்தை யாக்கோபினிடத்தில் தெரிவிப்பதற்குமென, அவர்கள் தங்கள் வீடுகளுக்குத் திரும்பியிருக்க வேண்டும்.

மீதி சம்பவம் மிகவும் சுவாரசியமானதாகும்; யாக்கோபிற்கு இந்த நற்செய்தி அறிவிக்கப்பட்ட போது, அவர் யோசேப்பினால் அனுப்பப்பட்ட அன்பளிப்புகளையும், எகிப்திலிருந்து வந்த வண்டிகளையும்

பார்ப்பது வரையிலும், அவரால் நம்பமுடியவில்லை; அன்பளிப்புகளையும், வண்டிகளையும் பார்த்த பிற்பாடு, யாக்கோபு, "என் குமாரனாகிய யோசேப்பு இன்னும் உயிரோடிருக்கிறானே, இது போதும்; நான் மரணமடையுமுன்னே போய் அவனைப் பார்ப்பேன் என்றான்" (ஆதியாகமம் 45:28). பின்னர் இரவில், "நான் தேவன், நான் உன் தகப்பனுடைய தேவன்; நீ எகிப்து தேசத்துக்குப்போகப் பயப்பட வேண்டாம்; அங்கே உன்னைப் பெரிய ஜாதியாக்குவேன். நான் உன்னுடனே எகிப்துக்கு வருவேன்; நான் உன்னைத் திரும்பவும் வரப்பண்ணுவேன்; யோசேப்பு தன் கையால் உன் கண்களை மூடுவான்" என்று சொல்லி கொடுக்கப்பட்ட தரிசனத்தின்படியான தேவனுடைய விசேஷித்த கட்டளையின் பேரில், நீண்ட அந்தப் பிரயாணம் மகிழ்ச்சியுடன் ஆரம்பமானது; (ஆதியாகமம் 46:3, 4). பின்னர் அவர்களின் சந்தோஷமான சந்தித்தல் நடைபெற்றது மற்றும் யோசேப்பினுடைய மகிமை மற்றும் வல்லமையை யாக்கோபு கண்டுகொண்டார் மற்றும் இவைகள் அனைத்திற்கும் மேலாக யாக்கோபிற்கும், யோசேப்பிற்கும் மற்றும் சகோதரர்களுக்கு இடையிலான அன்பு பரிமாற்றங்கள் நிகழ்ந்தன; பின்னர்ப் பார்வோனைச் சந்தித்தலும், அவரின் தயவைப் பெற்றுக்கொள்ளுதலும் நிகழ்ந்தன; பின்னர் யோசேப்பு மற்றும் பார்வோனின் அன்பான பராமரிப்பின் கீழ், அவர்கள் எகிப்து தேசத்தில் குடியேறினர்; இங்கு யாக்கோபு தன்னுடைய குடும்பத்தாருடன், தன்னுடைய மரணம் வரையிலும், தனது வயோதிப நாட்களை 17- வருடங்களாக மகிழ்ச்சியாய்க் கழித்தார்.

கர்த்தருக்குப் பிரியமானவர்களில் ஒருவருடைய ஜீவியத்திலுள்ள கர்த்தருடைய வழிநடத்துதல் பற்றின இந்த அருமையான கதையிலிருந்து, தேவன் மீது நம்பிக்கையாய் இருத்தல் மற்றும் அவருக்கு ஊழியம் புரிவதில் வைராக்கியமாயும், உண்மையாயும் இருத்தல் எனும் விலையேறப்பெற்றப் படிப்பினைகளை நம்மால் காணமுடிகின்ற மற்றும் எடுத்துக்கொள்ள முடிகின்ற அதேவேளையில், ஆழ்ந்து சிந்திக்கின்ற வாசகர்களால், இக்கதையானது தமது ஜனங்களின் மற்றும் உலகத்தின் இரட்சகராக இருக்கும் கிறிஸ்துவுக்கு நிழலாய் இருப்பதைக் கவனிக்க தவறப்படுவதில்லை.

பிரதான ஆசீர்வாதமானது, விசேஷமாய் இளைய குமாரனுக்கு வரும் காரியத்திற்கு, யாக்கோபைப்போன்று, யோசேப்பும் மற்றுமொரு உதாரணமாய்க் காணப்படுகின்றார்; இதுபோலவே பிரதானமான தெய்வீக ஆசீர்வாதமும், கிறிஸ்துவுக்கு, அதாவது மூத்தவர்களாகிய யூதர்களுக்கென்று இல்லாமல், சுவிசேஷ சபையாகிய சரீரத்திற்கும், தலைக்கும் வரப்போகின்றது. ஆபிரகாமின் ஆசீர்வாதத்தில் பங்கடைவது தொடர்புடைய விஷயத்தில், யாக்கோபின் புத்திரர்கள் அனைவரும் தெரிந்துகொள்ளப்பட்டாலும், யோசேப்பு தலை மற்றும் சரீரம் அடங்கின கிறிஸ்துவுக்கு நிழலாய் விசேஷமாய்த் தெரிந்தெடுக்கப்பட்டார்; இந்தக் கிறிஸ்து மூலமாகவே, ஆபிரகாமின் மாம்சீக சந்ததியினருக்கு ஆசீர்வாதம் கடந்துவரும் மற்றும் இவர்கள் பின்னர்ப் பூமியின் குடிகள் அனைத்தையும் ஆசீர்வதிப்பார்கள்.

மாம்சீக இஸ்ரயேலர்களாகிய தனது சகோதரர்களால் பகைக்கப்பட்டு அடிமையாக விற்கப்பட்ட யோசேப்பு, கிறிஸ்து, தம்முடைய சத்துருக்களால், அதாவது யூத தேசத்தின் தமது சகோதரர்களால் பகைக்கப்பட்டு, விற்கப்பட்டதற்கு முன்சித்தரிப்பாகக் காணப்படுகின்றார்; இந்த யூதர்களிடத்திலேயே கிறிஸ்து யோசேப்பைப் போன்று வந்தார், ஆனால் அவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை; (30-வெள்ளிக்காசுகள் என்பது அடிமைக்கான விலையாக இருந்தது (அ) 20-வெள்ளிக்காசுகள் என்பது இருபது வயதிற்குக் கீழான அடிமைக்கான விலையாக இருந்தது). யோசேப்பு மூன்று வருடங்கள் சிறையில் காணப்பட்டது என்பது, நமது கர்த்தருடைய 3-வருட ஊழிய காலத்தினைச் சித்தரிக்கின்றதாய் இருக்கின்றது; அதாவது அவரது ஞானஸ்நானத்தைப் பின்தொடர்ந்த வருடங்களாக இருந்தது; அந்தக் காலங்களில் கர்த்தர் தினமும் மரித்துக்கொண்டிருந்தவராகவும், தம்முடைய ஜீவனை மற்றவர்களுக்காக ஒப்புக்கொடுத்து வந்தவராகவும் காணப்பட்டார்; யோசேப்பு மூன்று வருடங்கள் சிறையில் காணப்பட்ட காரியமானது, கர்த்தர் கல்லறையில் காவல் வைக்கப்பட்ட மூன்று நாட்களுக்குக் கூட இணையாக எடுத்துக்கொள்ளலாம்; சிறைச் சாலையினின்று வெளியே வந்த யோசேப்பு, இராஜாவுக்கு அடுத்த ஸ்தானத்தில் மிகவும் உயர்த்தப்பட்டதுபோலவே, கல்லறையினின்று வந்த கர்த்தரும், உன்னதமானவரின் வலது பாரிசத்தினிடத்திற்கு உயர்த்தப்பட்டார் மற்றும் இராஜ்யத்தின் சகல அதிகாரங்களும்/ வல்லமைகளும் அவருக்குக் கொடுக்கப்பட்டது.

யோசேப்பிற்கு முழுப்பொறுப்பும் கையளிக்கப்பட்டது மற்றும் மற்றவர்களை ஆசீர்வதிப்பதற்கும், அனைவருக்குமென்று உணவைச் சேர்த்து வைப்பதற்குமென்று அவர் தனது வல்லமையைப் பயன்படுத்திக் கொண்டார். இதுபோலவே கிறிஸ்துவிடமும் முழுப்பொறுப்பும் கையளிக்கப்பட்டது; அவர் அனைவருக்கும் கர்த்தர் ஆவார் மற்றும் அனைவருக்கும் நித்திய ஜீவனை அளிப்பதற்குப் போதுமான அனைத்துக் கிருபைகளையும் அவர் வைத்து வைத்திருக்கின்றார். கிறிஸ்துவினுடைய தயவைப் பெற்றுக்கொள்வதற்குப் பாத்திரமான தாழ்மையும், பாவத்திற்கு மனம் வருந்துதலையும் கொண்டுள்ள இருதயத்தை உடையவர்களைக் கிறிஸ்து தம்முடைய சகோதரர்கள் என்று, உரிமையாக்கிக்கொள்வதற்கு வெட்கப்படவில்லை. அவர்களைத் தமக்குச் சொந்தமானவர்கள் என்று தம்முடைய பிதாவின் முன்னிலையிலும், பரிசுத்த தூதர்கள் அனைவரின் முன்னிலையிலும் உரிமைப்பாராட்டிக்கொள்வதற்குக் கிறிஸ்து வெட்கப்படுவதுமில்லை. இக்காரியமும் யோசேப்பு தனது தகப்பனையும், சகோதரர்களையும் கையாண்ட விஷயத்தில் அருமையாய் முன் சித்தரிக்கப்பட்டுள்ளது. மேய்ப்பர்கள் என்பவர்கள் எகிப்தியர்களுக்கு அருவருப்பானவர்கள் என்பதை யோசேப்பு அறிந்திருந்தபோதிலும், தன்னுடைய தகப்பனையும், சகோதரர்களையும் இராஜாவின் முன்னிலையில் கொண்டு செல்வது குறித்து யோசேப்பு வெட்கம் கொள்ளவில்லை. பின்னர்ப் பஞ்சக் காலத்தில் யோசேப்பு தானியங்களை (ஜீவனை) பயன்படுத்தி, பார்வோனுக்கு நிலங்களையும், ஜனங்களையும், அவர்கள் பெற்றிருந்த அனைத்தையும் வாங்கிக்கொண்டார் (ஆதியாகமம் 47:14-25).

விளைவில் ஐந்தில் ஒரு பங்கு மத்திய அரசாங்கத்தின் வலிமையூட்டுதலுக்காகக் கொடுக்கப்படத்தக்கதாக நிலங்களை வாங்கினதும், இப்படியாக மற்றச் சீமான்களின் சிறிய செல்வாக்கினைத் தகர்ப்பதற்கும் மற்றும் எகிப்து தேசத்தை, பலமான தேசமாக திடமாக்குவதற்குமான இந்த அரசியல் திட்டமானது, கிறிஸ்துவின் வேலைக்கான, சிறந்த நிழலாய்க் காணப்படுகின்றது. ஆயிர வருட யுகத்தின்போது விரும்புகின்றவர்கள் அனைவருக்கும் கிறிஸ்து (தம்மை, தம்முடைய புண்ணியத்தை) நித்திய ஜீவனுக்கான அப்பத்தைக் கொடுப்பார், ஆனால் இச்சந்தர்ப்பத்தில் பார்வோன் நிழல்படுத்தும் தேவனுக்கு, அனைவரும் தங்களுடைய அனைத்தையும் மாற்றாகக் கொடுத்தாக வேண்டும். பார்வோனால் உயர்த்தப்பட்ட ஊழியக்காரனும், பிரதிநிதியுமான யோசேப்பு அநேகருக்கு ஜீவன் கொடுத்தது (அ) அநேகருடைய ஜீவனைக் காப்பாற்றினது போன்று, தேவனுடைய பிரதான ஊழியக்காரனாகிய கிறிஸ்துவும் அனைவருக்காகவும் ஜீவனளித்துள்ளார் மற்றும் அந்த ஜீவனை, இராஜாவுக்குக் கீழ்ப்படிதல் மற்றும் விசுவாசம் காட்டுதல் எனும் அதே நிபந்தனைகளின் பேரில் அனைவருக்கும் முன்வைக்கின்றார்.

யோசேப்பு தவறிழைத்த தனது சகோதரர்களைப் பெருந்தன்மையுடனும், பரந்த மனப்பான்மையுடனும் நடத்தின விஷயத்தில், நமது உயர்த்தப்பட்டுள்ள கர்த்தர் இயேசு, தமது முந்தைய சத்துருக்களைக் கையாளும் விதம், எத்துணை அருமையாய் மீண்டுமாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது. எப்போதுமே தலைச்சிறந்த பண்பாகக் காணப்படும் அன்பானது, இம்மாதிரியான ஒரு சூழ்நிலையில் வெளிப்படுகையில் அது வியப்பாய்ப் பார்க்கப்பட்டு, பாராட்டப்படுகின்றது. தனக்கு 23-வருடங்களுக்கு முன்னதாக அவர்கள் செய்திட்ட பாவங்களுக்கு எதிராக, அவர்களை நியாயமாய்த் தண்டிக்கும் விதத்தில், தான் என்ன செய்திருக்க முடியும் என்று கூட யோசேப்பு பேசவில்லை. தன்னுடைய சகோதரர்களைப் பரீட்சித்துப்பார்த்து, அவர்கள் தங்கள் இருதயத்தில் மாற்றம் அடைந்துள்ளனர் என்றும், பாவத்தை நினைத்து மனம் வருந்துகின்றனர் என்றும் கண்டுகொண்ட பின்னர், யோசேப்பு தன்னை உண்மையுள்ள, அன்புள்ள மன்னிக்கும் நண்பனாகவும், சகோதரனாகவும் வெளிப்படுத்தினார். தான் இப்படி உயர்த்தப்பட்டதற்கான காரணம், தன்னுடைய ஞானம் (அ) ஒழுக்கம்/நற்பண்புகள் என்றோ பெருமையடித்துக்கொள்ளாமல், மாறாக அனைத்துக் கனத்தையும், தேவனுடைய நன்மைக்கு ஏதுவாய் மாற்றிப்போடும் வழிநடத்துதலுக்கே சாற்றினார். தனக்கு முன் அவர்கள் அனைவரும் வணங்கினதில் நிறைவேறின, தனது தீர்க்கத்தரிசனமான சொப்பனங்களைக்கூட யோசேப்பு தனது சகோதரர்களுக்கு நினைப்பூட்டவில்லை.

அவர் அவர்களை மன்னித்து, பஞ்சத்திலிருந்ததான தற்போதைய விடுதலைக்கான அனைத்து மகிமையையும் தேவனுக்குச் செலுத்தும் வண்ணமாக, "என்னை இவ்விடத்தில் வரும்படி விற்றுப்போட்டதினால், நீங்கள் சஞ்சலப்படவேண்டாம்; அது உங்களுக்கு விசனமாயிருக்கவும்

வேண்டாம்; ஜீவரட்சணை செய்யும்படிக்குத் தேவன் என்னை உங்களுக்கு முன்னே அனுப்பினார். தேசத்தில் இப்பொழுது இரண்டு வருஷமாகப் பஞ்சம் உண்டாயிருக்கிறது; இன்னும் ஐந்து வருஷம் உழவும், அறுப்பும் இல்லாமல் பஞ்சம் இருக்கும். பூமியிலே உங்கள் வம்சம் ஒழியாமலிருக்க உங்களை ஆதரிக்கிறதற்காகவும், பெரிய இரட்சிப்பினால் உங்களை உயிரோடே காப்பதற்காகவும் தேவன் என்னை உங்களுக்கு முன்னமே அனுப்பினார். ஆதலால் நீங்கள் அல்ல, தேவனே என்னை இவ்விடத்துக்கு அனுப்பி, என்னைப் பார்வோனுக்குத் தகப்பனாகவும், அவர் குடும்பம் அனைத்திற்கும் கர்த்தனாகவும், எகிப்துதேசம் முழுதுக்கும் அதிபதியாகவும் வைத்தார்" என்று கூறினார் (ஆதியாகமம் 45:5-8). எத்துணை எளிமையாகவும், அருமையாகவும் காணப்படுகின்றது! இப்படியே கிறிஸ்துவும் பாவத்திற்கான மனம்வருந்தும் தமது சத்துருக்களை மன்னிப்பார். தேவனே அவர்களைத் தவறுசெய்ய வைத்தார் என்று யோசேப்பு கூறவில்லை; யோசேப்பு அவர்களது பாவத்தைத் தெளிவாய்க் குறிப்பிட்டார் அதாவது, "நீங்கள் எனக்குத் தீமைசெய்ய நினைத்தீர்கள்; தேவனோ, இப்பொழுது நடந்துவருகிறபடியே, வெகு ஜனங்களை உயிரோடே காக்கும்படிக்கு, அதை நன்மையாக முடியப்பண்ணினார். ஆதலால், பயப்படாதிருங்கள்; நான் உங்களையும் உங்கள் குழந்தைகளையும் பராமரிப்பேன் என்று, அவர்களுக்கு ஆறுதல்சொல்லி, அவர்களோடே பட்சமாய்ப் பேசினான்" (ஆதியாகமம் 50:20, 21).

கிறிஸ்துவும் மனிதர்களுடைய பாவங்களை அவர்களுக்கு முன்பாக வரிசைப்படுத்துவார் என்றும், யோசேப்பின் சகோதரர்கள் போன்றே மனிதர்களும் தங்கள் பாவங்களை ஒப்புக்கொள்ள வேண்டும் என்றும், அவர்கள் நிந்தனையைச் சுமக்க வேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது (சங்கீதம் 50:21, 22; எசேக்கியேல் 16:61-63; 1 யோவான் 1:9). ஆனால் கிறிஸ்துவினுடைய மன்னிக்கும் அன்பிலுள்ள சந்தோஷங்களினாலும், அவரது தயவுகளிலுள்ள ஆசீர்வாதங்களினாலும், நிந்தனையின் வலி மாற்றப்படும் மற்றும் நீதியின் கனிகளைக் கொணர்வதும், நம்பத்தகுந்த குணலட்சணங்கள் உருவாகும்போதும், உண்மையான மனிதனுக்குரிய சிறப்புகளும்/உயர்ந்த குணங்களும், உண்மையான மதிப்பும் மீண்டும் சீர்ப்பொருத்தப்படும்/காணப்படும்.

யோசேப்பினுடைய விஷயத்தில் தேவனுடைய ஜனங்கள் அனைவருக்குமான அவரது வாக்குத்தத்தமாகிய, "அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்" என்பது வலியுறுத்திக் காண்பிக்கப்படுகிறது (ரோமர் 8:28; சங்கீதம் 1:1-3, 6). தேவனுடைய ஜனங்கள் இந்தத் தெய்வாதீனமான மேற்பார்வையை உணர்கையில், மிகவும் தாழ்மையுள்ளவர்களாகவும், விசுவாசமுள்ளவர்களாகவும் ஆக்கப்படுவதோடு, ஜீவியத்தின் திடீர் மாற்றமான சூழ்நிலைகளின் நிமித்தமும், மற்றவர்களின் தவறான நடத்தைகளின் நிமித்தமும், தங்களைத் தாங்களே நடத்திக் கொண்டு, ஜீவியத்தின் போராட்டங்களில் போராடிக்கொண்டிருக்கும் (சாதாரண) ஜனங்கள் போன்று மன வேதனையோ, எரிச்சலோ அடைவதில்லை. குணலட்சணத்திலும், விசுவாசத்திலும் மற்றும் தேவனுக்கான அர்ப்பணிப்பிலும் நேர்மை கொண்டிருத்தலும், ஜீவியத்தின் காரியங்கள் அனைத்திலுமான தேவனுடைய பராமரிப்பையும், வழிகாட்டுதலையும் உணர்ந்துகொள்ளுதலும் மற்றும் எவர்களுடைய தவறுகள் மூலம் நமக்கான சோதனைகளும், அனுபவங்களும் கடந்துவருகின்றதோ, அவர்களிடத்தில் அன்பைக்கொண்டிருத்தலுந்தான், தேவனுடைய உண்மையான பிள்ளைகள் அனைவரிடத்திலும் எதிர்பார்க்கப்படும் சரியான மனப்பான்மையாகக் காணப்படுகின்றது.

**[R5234]**

# "பலியைப் பார்க்கிலும் இரக்கம் உத்தமமாயிருக்கிறது"

## ஆதியாகமம் 45:1-46:7

''இதோ, சகோதரர் ஒருமித்து வாசம் பண்ணுகிறது எத்தனை நன்மையும், எத்தனை இன்பமுமானது.''—சங்கீதம் 133:1

தனது சகோதரர்கள் எவ்வளவு மாற்றம் அடைந்துள்ளனர் என்பதைக் கண்ட யோசேப்பு, அவர்கள் மீது அனுதாபம்/இரக்கம் கொண்டார். யோசேப்பின் விஷயத்தில் தாங்கள் தவறு செய்துவிட்டார்கள் என்பதை அவர்களது இருதயம் இப்பொழுது உணர்ந்துகொண்டிருப்பதையும், தங்கள் மீதான தெய்வீக நிராகரிப்பை அவர்கள் உணர்ந்து கொண்டிருப்பதையும் மற்றும் அவர்கள் தவறுகளுக்காக வருந்துவதையும் யோசேப்பு கண்டபோது, அவர் அவர்கள் மீது அனுதாபம் கொண்டார். வயதான தங்கள் தகப்பன் மீது அவர்கள் அக்கறைக்கொண்டிருந்ததையும், அன்பற்ற செயல்பாட்டினாலோ (அ) வார்த்தையினாலோ தங்களது தகப்பனை மரிக்கப்பண்ணுவதில் துரிதப்படுத்துவதற்கான அவர்களது விருப்பமின்மையையும், யோசேப்பு கண்டபோது, மிகவும் அனுதாபம் கொண்டார். யோசேப்பு தன்னை யார் என்று வெளிப்படுத்தும் காரியத்தை எகிப்தியர்கள் காணக்கூடாது என்று விரும்பினார். தன்னுடைய உணர்வுகளைத் தன்னால் இனிக் கட்டுப்படுத்த முடியாது என்று உணர்ந்த யோசேப்பு, எகிப்தியர்கள் அனைவரும் அறையைவிட்டு வெளியேறும்படிக்கு அவசரமாய்க் கட்டளையிட்டார். பின்னர், "நீங்கள் எகிப்துக்குப் போகிறவர்களிடத்தில் விற்றுப்போட்ட உங்கள் சகோதரனாகிய யோசேப்பு நான்தான்" என்று கூறித் தன்னை வெளிப்படுத்திக்கொண்டார்.

அவரது சகோதரர்கள் அடைந்திருக்கும் திகைப்பை நம்மால் நன்கு கற்பனை செய்துகொள்ள முடிகின்றது. தங்கள் சிரமங்களும், சோதனைகளும் பெருகிக்கொண்டு வருவதாக அவர்களுக்குத் தெரிந்தது மற்றும் தங்களுக்கான பிரச்சனைகள் அனைத்தின் விஷயத்திலும் எப்படியோ யோசேப்பு சம்பந்தப்பட்டிருக்கின்றார் என்பதும் அவர்களுக்குத் தெரிந்திருந்தது. ஆனால் இப்பொழுது யோசேப்பின் முன்னிலையில் காணப்படும்போதும், யோசேப்பு துபாசியைக்கொண்டு தங்களிடத்தில் பேசாமல், நேரடியாக தங்கள் சொந்த மொழியில், தான்தான் யோசேப்பு என்று கூறினதைக் கேட்கும்போது, அவர்கள் எவ்வளவு அதிர்ச்சியடைந்திருப்பார்கள் என்பதை நம்மால் கற்பனை செய்து பார்க்க முடிகின்றது.

ஆனால் யோசேப்பு இரக்கத்தினாலும், அனுதாபத்தினாலும் முழுக்க நிரம்பினவராக, அவர்களை அமைதிப்படுத்திட துரிதப்பட்டார். அவர்களை அவர் கொடூரமாய் அச்சுறுத்தவில்லை அல்லது அவர்கள் தவறுகளுக்காக அவர்களைத் தண்டிக்கவுமில்லை. அவர்களது தவறுக்காக அவர்களை அவர் கடிந்துகொள்ளக்கூட இல்லை. மாறாக பாவமானது ஏற்கெனவே அவர்களுக்குத் தண்டனைக் கொடுத்துள்ளதை உணர்ந்த யோசேப்பு, அவர்களை ஆறுதல்படுத்தும் வண்ணமாக," நீங்கள் அல்ல, தேவனே என்னை இவ்விடத்துக்கு அனுப்பினார்; பூமியிலே உங்கள் வம்சம் ஒழியாமலிருக்க உங்களை ஆதரிக்கிறதற்காகவும், பெரிய இரட்சிப்பினால் உங்களை உயிரோடே காப்பதற்காகவும், தேவன் என்னை உங்களுக்கு முன்னமே அனுப்பினார்.ஆதலால் நீங்கள் அல்ல, தேவனே என்னை இவ்விடத்துக்கு அனுப்பி, என்னைப் பார்வோனுக்குத் தகப்பனாகவும், அவர் குடும்பம் அனைத்திற்கும் கர்த்தனாகவும், எகிப்துதேசம் முழுதுக்கும் அதிபதியாகவும் வைத்தார்" என்றார் (ஆதியாகமம் 45:5-8).

கேட்காமலேயே வழங்கப்பட்ட மன்னிப்பையும், இரக்கத்தின் வெளிப்படுத்தல்களையும், யோசேப்பு தனது சகோதரர்கள் மீது குவித்தார். (யோசேப்பினுடைய) பழிவாங்குதல் எத்துணை அருமையானதாய்க் காணப்படுகின்றது! அந்தோ, எத்துணை சொற்பமான கிறிஸ்தவர்களே இப்படியானதொரு சந்தர்ப்பத்தில் இவ்வளவுக்குப் பெருந்தன்மையுடன் நடந்துகொள்வார்கள்! கிறிஸ்தவர்கள் எல்லா விதத்திலும், யோசேப்பைக்காட்டிலும் மிகவும் அநுகூலமுடையவர்களாய் இருக்கின்றனர். அதாவது கிறிஸ்தவர்கள்

பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்களாகவும், வேதவாக்கியங்களுடைய அறிவுரையைப் பெற்றுக்கொண்டவர்களாகவும் காணப்படுகின்றனர். கிறிஸ்துவுக்கும், அவரது ஆவிக்கும், யோசேப்பு எத்துணை அருமையான நிழலாய் இருக்கின்றார். இயேசுவை ஏற்றுக்கொண்டு, அவரது சீஷர்களாகுவதற்குப் பதிலாக, அவரைச் சிலுவையில் அறைந்துபோட்ட யூதர்களாகிய, கிறிஸ்துவின் சகோதரர்கள் நித்தியகாலமும் சித்திரவதைப்படுத்தப்படுவார்கள் என்று நாம் நம்பிக்கைக்கொள்ளத்தக்கதாக, நமக்குக் கற்பித்த இருளான யுகங்களுடைய விசுவாச பிரமாணங்களானது, நம்மைத் தவறாகவே வழிநடத்தியுள்ளது!

ஒன்றன்பின் ஒன்றாக இப்பொழுது பிரகாசித்துக்கொண்டிருக்கும் வேதாகமத்தினுடைய பக்கங்களின் வெளிச்சத்தில், யூதர்களை நித்திய காலம் சித்தரவதைக்குட்படுத்த மேசியா நோக்கம் கொண்டிருக்கிறார் என்பதற்குப் பதிலாக, நேர்மாறாக மேசியா நோக்கம் கொண்டிருப்பதாக தேவனுடைய ஜனங்கள் பார்க்கின்றனர்; அதாவது யூதர்கள் தெய்வீக இரக்கத்தையும், மன்னிப்பையும் பெற்றுக்கொள்வார்கள் என்பதாக தேவனுடைய ஜனங்கள் பார்க்கின்றனர். பரிசுத்தவானாகிய பவுல் சுட்டிக்காட்டுவது போன்று, மேசியாவின் இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டப்பின்னர், உடனடியாக இந்த இரக்கமானது, யூதர்களுக்குக் காண்பிக்கப்படும்; "உங்களுக்குக் கிடைத்த இரக்கத்தினாலே இரக்கம் பெறுவார்கள்" (ரோமர் 11:25-33). இதே கருத்தானது, இஸ்ரயேலரைக் குறித்துத் தீர்க்கத்தரிசியினாலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அதாவது, "நான் தாவீது குடும்பத்தாரின்மேலும் எருசலேம் குடிகளின்மேலும் கிருபையின் ஆவியையும், விண்ணப்பங்களின் ஆவியையும் ஊற்றுவேன்; அப்பொழுது அவர்கள் தாங்கள் குத்தின என்னை நோக்கிப்பார்த்து, ஒருவன்தன் ஒரே பேறானவனுக்காகப் புலம்புகிறதுபோல எனக்காகப் புலம்பி, ஒருவன் தன் தலைச்சன் பிள்ளைக்காகத் துக்கிக்கிறதுபோல எனக்காக மனங்கசந்து துக்கிப்பார்கள்" (சகரியா 12:10). யூதர்களும் 18 நூற்றாண்டுகளுக்கு முன்னதாக நடந்திட்ட துயரத்திற்கு இடமான தவறை உணர்ந்துகொள்ளுகையில், உண்மையான துக்கத்துடனே துக்கிப்பார்கள். அவர்கள் நித்திய காலத்துக்கும் உரிய சித்தரவதையினால் தண்டிக்கப்படுவதற்குப் பதிலாக கர்த்தர், "நான் அவர்களுக்குக் கிருபையின் ஆவியையும், விண்ணப்பங்களின் ஆவியையும் ஊற்றுவேன்" என்று கூறியுள்ள பிரகாரமாய், அவர்களிடத்தில் கிருபை பாராட்டுவார். இவ்விஷயமும் மற்றும் நம் பாடத்தில் இடம்பெறும் நிழலும், எத்துணை அருமையாயும், எத்துணை இசைவாயும் காணப்படுகின்றது! யோசேப்பின் பத்துச் சகோதரர்கள் இஸ்ரயேலர்களுக்கு நிழலாய் இருக்கின்றனர்; எகிப்தியர்கள் புறஜாதிகளுக்கு நிழலாய் இருக்கின்றனர்; பென்யமீன் திரள் கூட்டத்தினருக்கு நிழலாய் இருக்கின்றார்; யோசேப்பு மேசியா வகுப்பாருக்கு, அதாவது தலையாகிய இயேசுவையும், அவரது சரீரத்தின் அங்கத்தினர்களாகிய ஜெயங்கொள்ளும் சபையையும் உள்ளடக்கின மேசியா வகுப்பாருக்கு நிழலாய் இருக்கின்றார்.

## "எருசலேமுடன் பட்சமாய்ப் பேசுங்கள்"

வேதாகமத்தின் பதிவுகள் அனைத்துமே வேதாகமத்திற்கும், தெய்வீகக் குணலட்சணத்திற்கும் இசைவாய்க் காணப்படுகின்றது. இருண்ட யுகங்களினுடைய விசுவாசப் பிரமாணங்களுக்கு நாம் செவிக் கொடுத்ததினாலேயே நமக்குப் பிரச்சனை ஏற்பட்டது. இயேசுவைத் தேவனுடைய குமாரன் என்று நம்பி, இராஜ்யத்தில் உடன் சுதந்தரத்தை அடையத்தக்கதாகச் சுயத்தை வெறுத்தலின் மூலமும், தற்காலத்தின் பாடுகளில் பங்கெடுப்பதன் மூலமும், அவருடன் இணைந்து கொள்வதன் மூலமுமாய் அல்லாமல் மற்றபடி யாரும், ஆவிக்குரிய இஸ்ரயேலில் அங்கத்தினராக முடியாது என்று வேதாகமம் சொல்வது உண்மைதான். ஆனால் இந்த எளிமையான செய்தியுடன், யூதர்களிடமும், உலகத்தாரிடமும், (ஆவிக்குரிய இஸ்ரயேலர் அல்லாத) மீதியான அனைவருக்குமே நித்திய சித்திரவதை உள்ளது என்று நாம் சேர்த்துக் கூறினதிலேயே நம்முடைய தவறு காணப்படுகின்றது.

ஆனால் ஆவிக்குரிய இஸ்ரயேலானது, இராஜ்யத்தை அடைகின்றது என்றும், இந்த உயர்ந்த மகிமையையும், ஆசீர்வாதத்தையும் அடைய தவறுகின்றதே மாம்சீக இஸ்ரயேலர்கள் மற்றும் உலகத்தாருடைய இழப்பாய் இருக்கின்றது என்றும் இப்பொழுது நாம் அறிந்துகொள்கின்றோம். மாம்சீக இஸ்ரயேலர்களுக்குத் தேவையான ஆசீர்வாதங்களை அவர்களுக்கு அருளுவதும் மற்றும் அவர்கள் மூலமாய் இறுதியில் அனைத்து ஜனங்கள் மீதும் ஆசீர்வாதங்களை அருளுவதுமே, இப்படியான

ஓர் இராஜ்யத்தை ஏற்பாடு பண்ணினதிலுள்ள தேவனுடைய நோக்கமாய் இருக்கின்றது என்பதையும் நாம் காண்கின்றோம்.

இதுவே யோசேப்பினுடைய சகோதரர்கள் முழுமையாய் மன்னிக்கப்பட்ட விஷயத்திலிருந்து, கற்பிக்கப்பட்ட பொதுவான பாடமாகக் காணப்படுகின்றது. யோசேப்பின் சகோதரர்கள் தெய்வீகத் திட்டத்தை நிறைவேற்ற மாத்திரமே செய்திருக்கின்றார்கள் என்று அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட நிச்சயமானது, யூதர்களுக்கு இறுதியில் கொடுக்கப்படப்போகின்ற செய்திக்கு நன்கு இசைவானதாக உள்ளது; அதாவது யூதர்கள் மேசியாவைச் சிலுவையில் அறைந்துபோட்டதான காரியமானது, அவர்கள் தெய்வீக நோக்கத்தினை நிறைவேற்றினதாகவும் மற்றும் அதன் மூலமாக தேவனுடைய ஆசீர்வாதமானது, பூமியின் குடிகள் அனைத்திற்கும் கிடைக்கப்பண்ணினது என்பதாகவும் உள்ள செய்தி இறுதியில் யூதர்களுக்கு அறிவிக்கப்படும். இதற்கு இசைவாகவே பரிசுத்தவானாகிய பேதுருவும் பெந்தெகொஸ்தே நாளில் பேசிட்ட வார்த்தைகள் காணப்படுகின்றது. மனம்வருந்தின யூதர்கள் சிலரிடம் பரிசுத்தவானாகிய பேதுரு இக்காரியத்தை விவரிக்கும் விதத்தில், "சகோதரர் நீங்களும் உங்கள் அதிகாரிகளும் அறியாமையினாலே இதைச்செய்தீர்களென்று அறிந்திருக்கிறேன்" என்றார் (அப்போஸ்தலர் 3:17). "அறிந்தார்களானால், மகிமையின் கர்த்தரை அவர்கள் சிலுவையில் அறையமாட்டார்களே" என்று பரிசுத்தவானாகிய பவுல் குறிப்பிடுகின்றார் (1 கொரிந்தியர் 2:8).

யோசேப்பினுடைய சகோதரர்களுக்கு, நிஜமாய்க் காணப்படும் யூதர்களிடத்திலான, தேவனுடைய மனப்பான்மையானது, ஏசாயா 40:1, 2 ஆகிய வசனங்களிலுள்ள தீர்க்கத்தரிசனத்தில் தெளிவாய்க் காண்பிக்கப்பட்டுள்ளது. இந்தத் தீர்க்கத்தரிசனமானது, விசேஷமாக இந்தச் சுவிசேஷ யுகத்தினுடைய முடிவு பகுதிகளில் நிறைவேறப்போவதாக இருக்கின்றது. இந்தத் தீர்க்கத்தரிசனமானது, அவர்களுக்கு நித்தியமான சித்திரவதை உள்ளதென ஒரு வார்த்தைக்கூடக் குறிப்பிடுவதில்லை, மாறாக இந்தச் சுவிசேஷ யுகத்தினுடைய முடிவில் தேவனுடைய கிருபையானது யூதர்களுக்குக் கடந்துவரும் என்றும், இயேசுவைத் தலையாகப் பெற்றுள்ள, மேசியாவின் சரீரமாகிய ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் வாயிலாக அவர்கள் இரக்கம் பெற்றுக்கொள்வார்கள் என்றும் குறிப்பிடுகிற காரியங்கள், பரிசுத்தவானாகிய பவுலின் வார்த்தைகளுக்கு முழு இசைவுடனே காணப்படுகின்றது. "என் ஜனத்தை ஆற்றுங்கள், தேற்றுங்கள்; எருசலேமுடன் பட்சமாய்ப்பேசி, அதின் போர் முடிந்தது என்றும், அதின் அக்கிரமம் நிவிர்த்தியாயிற்று என்றும், அது தன் சகல பாவங்களினிமித்தமும் கர்த்தரின் கையில் இரட்டிப்பாய் அடைந்து தீர்ந்தது என்றும், அதற்குக் கூறுங்கள் என்று உங்கள் தேவன் சொல்லுகிறார்" (ஏசாயா 40:1, 2).

இஸ்ரயேலானவள் தனது மீட்பரை மரிக்கப்பண்ணத்தக்கத்தாக, அவரை உரோமர்களிடம் விற்றுப்போட்டது துவங்கி, கிட்டத்தட்ட 19 நூற்றாண்டுகள் காலமாக அவமானம், நிந்தை மற்றும் துக்கத்தின் பாத்திரத்தில் பானம் பண்ணும் கட்டாயத்திற்குள்ளாக்கப்பட்டாள். இயேசுவின் பின்னடியார்களெனத் தவறாய்த் தங்களைக் குறித்து அறிக்கைப் பண்ணிக்கொண்டவர்களின் கரங்களிலிருந்து, இஸ்ரயேலானவள் இவ்வளவுக்கு உபத்திரவம் அடைந்ததற்காக நாங்கள் வருந்துகின்றோம்! கிறிஸ்துவின் ஆவியைத் தவறாய்ப் புரிந்துகொள்வதற்கு அநேகக் காரணங்கள், யூதர்களுக்குக் கிடைத்துள்ளதற்காகவும் நாங்கள் வருந்துகின்றோம்! உண்மையுள்ள யூதர்களும், போலி யூதர்களும் காணப்பட்டதை யூதர்கள் நினைவுகூர்ந்தால் மாத்திரமே உண்மை கிறிஸ்தவர்களும், போலி கிறிஸ்தவர்களும் காணப்பட்டிருப்பதை யூதர்களால் புரிந்துகொள்ள முடியும். "கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவன் அல்ல" (ரோமர் 8:9).

## "யோசேப்பு நீண்ட காலம் தவறாய்ப் புரிந்துகொள்ளப்பட்டார்"

யோசேப்பினுடைய சகோதரர்கள் அவரைப் புரிந்துகொள்ள தவறினவர்களாய் இருந்தனர்; அவருக்கும், அவர்களுக்குமுரிய குணலட்சணத்தில் மிகவும் பெரிய வித்தியாசங்கள் இருந்தது. அவர்கள் மிகவும் இரக்கமுள்ளவர்களாகவும், உருக்கமான இருதயம் கொண்டவர்களாகவும்

மாறியிருந்தாலும், அவர்களிடத்தில் இன்னமும் கொஞ்சம் கசப்பின் ஆவியும், வன்மத்தின் ஆவியும் காணப்படவே செய்தது; இம்மனநிலையில் அவர்கள் ஒருவேளை யோசேப்பின் ஸ்தானத்தில் காணப்பட்டிருந்தால், அவர்கள் எதிர்க்காலத்தில் ஏதோ சில தண்டனைகளை அளிப்பதற்குத் திட்டம் பண்ணினவர்களாக இருந்திருப்பார்கள். ஆகையால் இரக்கமும், சகோதர சிநேகமும் நிறைந்திருந்த யோசேப்பினுடைய வார்த்தையினால் அவர்கள் ஆச்சரியம் அடைந்தனர் மற்றும் அவர் சொன்னப்படி எல்லாம் செய்வார் என்று அவர்களால் நம்பவும் முடியவில்லை. தங்களது தகப்பனாகிய யாக்கோபின் நிமித்தமாக, தங்களிடத்தில் யோசேப்பு இப்படித் தயவாய் நடந்துகொள்கின்றார் என்ற முடிவிற்குள்ளாக அவர்கள் வந்தார்கள்.

ஆகையால்தான் பல வருடங்களுக்குப் பின்பாக, யாக்கோபு மரித்தபோது, யோசேப்பு தங்களை இப்பொழுது பழிவாங்கிவிடுவார் என்று அந்தப் பத்துச் சகோதரர்களும் மிகவும் நடுங்கிப்போனார்கள். அவர்கள் மீண்டுமாக யோசேப்பினிடத்திற்குப் போய், அவரது மன்னிப்பைத் தொடர்ந்து காண்பித்தருளும்படி வேண்டிக்கொண்டார்கள். ஆனால் யோசேப்போ, "பயப்படாதிருங்கள்; நான் தேவனா; நீங்கள் எனக்குத் தீமைசெய்ய நினைத்தீர்கள்; தேவனோ, இப்பொழுது நடந்துவருகிறபடியே, வெகு ஜனங்களை உயிரோடே காக்கும்படிக்கு, அதை நன்மையாக முடியப்பண்ணினார். ஆதலால், பயப்படாதிருங்கள்; நான் உங்களையும் உங்கள் குழந்தைகளையும் பராமரிப்பேன் என்று, அவர்களுக்கு ஆறுதல்சொல்லி, அவர்களோடே பட்சமாய்ப் பேசினான்" என்றார் (ஆதியாகமம் 50:19-21).

## "யோசேப்பு தேவனால் கற்பிக்கப்பட்டிருந்தார்"

யோசேப்பு படிப்பினைகளைக் கற்றுக்கொண்டவராக இருந்தாலும், அவர் தேவனால் கற்பிக்கப்பட்டிருந்தார் என்பது மிகவும் தெளிவாய்த் தெரிகின்றது. தனது சகோதரர்களுக்கு எதிராக, பழிவாங்குவதற்குரிய எந்த எண்ணமும் அவரிடத்தில் இருக்கவில்லை. அவர்களுடைய பாவத்தினிமித்தமாக எந்த ஒரு தண்டனையும் அளிப்பது யோசேப்பின் காரியமாய் இராமல், மாறாக தேவனுடைய காரியமாக இருந்தது. அந்தத் தண்டனையை, அவர்கள் பல வருடங்களாக தீமை சம்பவிக்குமென எதிர்ப்பார்த்த விதத்திலும், மனவேதனை அடைந்த விதத்திலும், பயந்துகொண்டிருந்த விதத்திலும் அடைந்தவர்களாகக் காணப்பட்டனர். ஒவ்வொரு தவறுகளுக்கும் நீதியானது, தண்டனை அளிக்கத்தக்கதாக, தெய்வீக ஏற்பாடுகளை ஒழுங்குப்படுத்துவது, யோசேப்புடைய காரியமாய் இருக்கவில்லை. அன்பாயும், இரக்கமாயும், தயாளமாயும், மாபெரும் மீட்பருக்கும், அவரது இராஜ்யத்திற்கும் மாதிரியாய்க் காணப்படுவதுந்தான் யோசேப்பினுடைய காரியமாய் இருந்தது.

நம்முடைய சொந்த அனுபவங்களின் விஷயத்திலும் நாம் இப்படியாகவே காணப்பட வேண்டும். மிகவும் சொற்பமான வாய்ப்புள்ள இந்த மனுஷன் எந்தளவுக்குக் கிறிஸ்துவின் ஆவியை/சிந்தையை, சத்தியத்தின் ஆவியை விரிவாய்க் கிரகித்துள்ளதை நாம் வியப்போடே கவனிக்கின்றோம். பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்களும், இயேசு மற்றும் அப்போஸ்தலர்களுடைய வார்த்தைகளை மாதிரியாகப் பெற்றவர்களும், கடந்த யுகங்களினுடைய வரலாற்றினைப் பெற்றவர்களுமான நாம் யோசேப்பின் பாதத்தில் அமர்ந்துகொண்டு, எப்படி அவர் தேவனால் முற்றும் முழுமையாகக் கற்பிக்கப்பட்டார் என்பதை வியப்போடு கவனித்து, அந்தப் படிப்பினைகளை நம் விஷயத்திலும் செயல்படுத்திடுவோமாக. தனக்கு நேரிட்ட கசப்பான நிகழ்வுகளுக்கு எதிராக யோசேப்பு ஒருபோதும் முறுமுறுக்கவில்லை, ஒரு வார்த்தைக்கூடக் கூறிப் புலம்பவில்லை. ஒவ்வொரு வார்த்தையிலும், அனைத்து விஷயங்களிலும், யோசேப்பு தேவனுடைய ஞானத்தை, அன்பை, வல்லமையை மற்றும் தயவைக் குறித்துச் சாட்சிப் பகர்ந்தவராகவே இருந்தார். தனக்கு வந்திட்ட அனுபவங்களில் ஒரு மாற்றத்தையாகிலும் ஏற்படுத்துவது (அ) திருத்தம் பண்ணுவது என்பது, ஒட்டுமொத்த திட்டத்திற்குப் பாதிப்பை ஏற்படுத்துவதாகவும், தனக்கு அவசியமாய் இருக்கும் ஜீவியத்தின் சில படிப்பினைகளைக் கற்றுக்கொள்ள, தான் தவறிப்போவதற்கு ஏதுவாகவும் இருக்கும் என்றும் யோசேப்பு உணர்ந்திருந்தார்.

ஓ! கர்த்தருடைய பின்னடியார்கள் எவ்வளவாய்த் தங்களுக்குரிய சோதனையான அனுபவங்கள் தொடர்புடைய விஷயத்தில், கர்த்தரை நோக்கிப்பார்க்க வேண்டியவர்களாய் இருக்கின்றனர்! நாம் தேவனை அன்புகூருகின்றபடியினாலும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டிருக்கின்றபடியினாலும்

மற்றும் "ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தில் பங்கடைவதற்கு நம்மைத் தகுதியுள்ளவர்களாக்குவதும்," நம்முடைய மீட்பருடன் உடன் சுதந்தரராக்குவதுமான, குணலட்சணத்தினுடைய வளர்ச்சியின் மூலம், நம்முடைய அழைப்பையும், தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்திடுவதற்கு நாம் நாடுகின்றபடியினாலும், அனைத்தையும் நம்முடைய நன்மைக்கு ஏதுவாக மாற்றுவதற்குத் தேவன் விருப்பமும், வல்லமையும் உடையவராக இருக்கின்றார் என்றும், தேவன் அனைத்தையும் அறிவார் என்றும், தேவன் அனைத்தையும் காண்கின்றார் என்றும், நாம் அனைவரும் தேவன் பேரில் விசுவாசம் கொண்டிருப்பது அவசியம் மற்றும் விசுவாசம் கொண்டிருக்கவும் வேண்டும்.

## "எகிப்தில் யாக்கோபு"

மீதியிருக்கிற இன்னும் ஐந்து வருட பஞ்சகாலங்கள் மாத்திரமாவது தனது தகப்பனாகிய யாக்கோபும், முழுக்குடும்பமும் எகிப்தில் காணப்பட வேண்டுமென்று யோசேப்பு திட்டம் பண்ணினார். கால்நடைகளுக்குரிய மேய்ச்சல் நிலப்பகுதியாக கோசேன் நாடு காணப்பட்டபடியால், இப்பகுதியே அவர்களுக்கு ஏற்றதாய் இருக்குமென யோசேப்பு எண்ணினார். தனது பிரதான ஊழியக்காரனாகிய யோசேப்புடன், பார்வோனின் இருதயம் இசைந்திருந்தபடியாலும், யோசேப்பினுடைய நிர்வாகத்தின் கீழ், காரியங்கள் செழித்தோங்கியிருப்பதின் நிமித்தம் பார்வோன் திருப்தியடைந்திருந்தபடியாலும், பார்வோன் முழுச்சம்மதம் தெரிவித்து, வயதான யாக்கோபினாலும், பெண்களினாலும், குழந்தைகளினாலும், ஒட்டகங்கள், கழுதைகள் மீது சவாரிச் செய்ய முடியாததினால், அவர்களைக் கொண்டுவரும்படிக்கு எகிப்திய வண்டிகளை அனுப்பி வைக்கும்படிக்குப் பார்வோன் கருத்துத் தெரிவித்தார். யோசேப்பு பிரயாணத்திற்கென்று பதார்த்தங்களை ஆயத்தம்பண்ணி, தனது அன்பைச் சுட்டிக்காட்டும் வண்ணமாக சிறு அன்பளிப்புகளையும் கொடுத்து அனுப்பினார். "எகிப்திலே எனக்கு உண்டாயிருக்கிற சகல மகிமையையும், நீங்கள் கண்ட யாவையும் என் தகப்பனுக்கு அறிவித்து, அவர் சீக்கிரமாய் இவ்விடத்துக்கு வரும்படி செய்யுங்கள் என்று சொல்லி; யோசேப்பு தனது தகப்பனுக்கு விசேஷித்த செய்தியையும் அனுப்புவித்தார்" (ஆதியாகமம் 45:13). பின்னர் அவர்கள் அனைவரையும் யோசேப்பு முத்தஞ்செய்து வழியனுப்பிக் கூறினதாவது,

## "வழியிலே சண்டைபண்ணிக்கொள்ளாதிருங்கள்"

மனித சுபாவத்தைக் கூர்ந்து கவனிப்பவராக யோசேப்பு தோன்றுகின்றார். அனைத்துச் சூழ்நிலைகளிலும் வாக்குவாதங்களுக்கு எதிராக, சகோதரர்களை எச்சரிப்பது அவசியமற்றது என்று அநேகர் எண்ணிக்கொண்டிருக்கலாம். "அச்சகோதரர்கள் தங்கள் அனுபவங்களின் பலனாக வந்திட்ட தேவ ஆசீர்வாதங்கள் காரணமாக மிகவும் சந்தோஷத்தோடு காணப்படுவதினால், அவர்கள் மத்தியில் அன்பே நிலவுமேயொழிய, எவ்வித சண்டையும்/வாக்குவாதமும் நிலவாது" என்று கூட அநேகர் கூறியிருந்திருக்கலாம். ஆனால் இதற்கு எதிர்மாறானக்கருத்தே எப்பொழுதும் உண்மையாய் இருந்துள்ளது. செழிப்பு/வளமை வரும்போது, கிடைத்திட்ட பொருள்களின் விஷயத்தில் சண்டை பண்ணுவதற்கும், பொறாமைக்கொள்வதற்கும் மற்றும் சுயநலமாக இருப்பதற்கும் வாய்ப்புகள் உண்டு.

பழைய நிலைமையிலேயே காணப்பட்ட அச்சகோதரர்கள், பென்யமீன் யோசேப்பிடமிருந்து பெற்றுக்கொண்ட "அதிகப்படியான கவனித்தல்" நிமித்தமாகவும், பென்யமீனுக்குக் கொடுக்கப்பட்ட முந்நூறு வெள்ளிக்காசுகளின் நிமித்தமாகவும், பென்யமீன் மீது பொறாமை அடைந்திருக்கலாம். கோசேன் நாட்டிலுள்ள தங்களுக்கான சுதந்தரவீதத்தைக் குறித்தும் அவர்கள் விசாரித்திருந்திருக்கலாம். தாங்கள் யோசேப்பினுடைய ஆதிக்கத்தின் கீழ்த்தான் காணப்படப் போகின்றார்கள் என்றும், யோசேப்பு பென்யமீனுக்கே அதிகமாய்த் தயவு புரிவார் என்றும், இதுபோன்று இன்னும் சில எண்ணங்களும் அவர்களில் சிலருக்குத் தோன்றியிருக்கும். "வழியிலே சண்டை பண்ணிக்கொள்ளாதிருங்கள்" என்பதான யோசேப்பினுடைய எச்சரிப்பு, அத்தருணத்திற்குப் பொருத்தமானதாகவே காணப்படுகின்றது.

இப்படியாகவே கர்த்தருடைய சகோதரர்களின் விஷயத்திலும் காணப்படும் என்பதையும் நாம் அறிந்திருக்கின்றோம். உபத்திரவத்தின்போது அவர்களது இருதயங்களானது கர்த்தரை நோக்கி

கதறுகின்றது, ஆனால் வளமையின்போது, அவர்கள் ஒருவருக்கொருவர் எதிராக அதிருப்தி/விரோதம் கொள்வதற்கும் மற்றும் ஒருவருக்கொருவர், ஒருவருக்கொருவருடைய வாய்ப்புகள், ஆசீர்வாதங்கள், சிலாக்கியங்கள் மீது பொறாமைக்கொள்வதற்கும் ஏதுவான நிலைக்குள்ளாகுகின்றனர். இது எத்துணை பெரிய தவறாய்க் காணப்படுகின்றது! கிறிஸ்துவுக்கு ஒத்த சாயலில், தனது வளர்ச்சியினுடைய முன்னேற்றத்தினை, ஆண்டவருடைய கண்களானது கவனிக்கின்றது என்பதை ஒவ்வொருவரும் நினைவில் கொள்ள வேண்டும். சகோதர சிநேகம் என்பது குணலட்சணத்திற்குரிய பரீட்சைகளில் ஒன்றாய் இருக்கின்றது என்பதை ஒவ்வொருவரும் நினைவில் கொண்டிருக்க வேண்டும்.

மற்றவர்களைக் காட்டிலும் கிறிஸ்துவுக்குள்ளான சகோதர சகோதரிகளே சில சமயம் நமக்கு அதிகமானப் பிரச்சனைகளை உருவாக்குகின்றவர்களாய் இருப்பார்கள் என்பது உண்மையே. (சகோதரர்களாகிய) நம்முடைய நெருங்கின உறவும், ஒருவரையொருவர் பற்றின பெருமளவிலான அறிவும், தீமையாய்ப் பேசுவதற்கும், விமர்சிப்பதற்கும், அதிகமான வாய்ப்புகளை நம் ஒவ்வொருவருக்கும் கொடுக்கின்றதாய் இருக்கின்றது; ஆனால் (சகோதரர்களல்லாத) மற்றவர்கள் விஷயத்தில் இப்படியாக வாய்ப்புகள் இருப்பதில்லை. தேவனுடைய ஜனங்கள் அனைவரும், "போகும் வழியிலே சண்டை பண்ணிக்கொள்ளாதிருங்கள்" என்ற யோசேப்பின் வார்த்தைகளை ஏற்றுக்கொள்வது நலமாயிருக்கும். கர்த்தரினால் இவ்வழியே நமக்கு ஏற்பாடு பண்ணப்பட்டுள்ளது. அது இடுக்கமான வழியாகவும், சிரமமான வழியாகவும், மாம்சத்திற்கு முழுக்கத் துன்பம் நிறைந்த வழியாகவும், ஆவிக்கு/சிந்தைக்குச் சோதனைகளும், பரீட்சைகளும் முழுக்க நிறைந்த வழியாகவும் காணப்படுகின்றது; ஆகையால் இந்தச் சிரமங்களுக்கு ஏற்ப, அன்பும், இரக்கமும், ஒத்துழைப்பும் மற்றும் உதவிக்கரம் அளித்தலும்/ஆதரவும் காணப்பட வேண்டும். நம்முடைய பாடத்தில் ஆதார வசனத்திலுள்ள சங்கீதக்காரனுடைய வார்த்தைகளானது, கர்த்தருடைய சகோதரராகிய சபையைக் குறித்துத் தீர்க்கத்தரிசனமாய் எழுதப்பட்டதாய் இருக்கின்றது; "இதோ, சகோதரர் ஒருமித்து வாசம்பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது?" (சங்கீதம் 133:1).

சபையாகிய சகோதர சகோதரிகளினுடைய இந்த ஒற்றுமையை, இராஜா மற்றும் பிரதான ஆசாரியன் தங்கள் பணிக்கென ஏற்படுத்தப்படும் பொழுது, நல்ல தைலம் அவர்கள் தலையின் மீது ஊற்றப்படும் காரியத்துடன் சங்கீதக்காரன் ஒப்பிட்டுக் கூறுகின்றார். அபிஷேகத்தைலமானது பரிசுத்த ஆவியைக் குறிப்பதையும், இத்தைலமானது பிரதான ஆசாரியனுடைய தாடியில் வடிந்து, அவரது அங்கியில் இறங்கி வடிந்து, ஆசாரியனுடைய முழுச்சரீரத்தையும் அபிஷேகிப்பதையும் இங்குப் பார்க்கலாம். இந்த ஆசாரியன் தலையாகிய இயேசுவையும், அவரது சரீரமாகிய சபையையும் உள்ளடக்கினதுமான இராஜரிக ஆசாரியனாகிய மெல்கிசெதேக்கைக் குறிக்கின்றார். பெந்தெகொஸ்தே நாளன்று, கிறிஸ்துவின் சரீரமாகிய சபை மீது கடந்துவந்த பரிசுத்த ஆவியினுடைய அபிஷேகமானது, இந்தச் சுவிசேஷ யுகம் முழுவதும் தொடர்ந்து வருகின்றது மற்றும் அவரது உண்மையான அங்கங்கள் அனைவரையும் அபிஷேகிக்கின்றது. இந்த அபிஷேகத்தினாலேயே, இந்த அங்கத்தினர்கள், கிறிஸ்துவுடன் இணைக்கப்பட்டவர்களாக அடையாளங்கண்டு கொள்ளப்படுகின்றனர். "நீங்கள் எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக அபிஷேகிக்கப்பட்டிருக்கின்றீர்கள்" (1கொரிந்தியா 12:13).

[R5231]

# “பென்யமீனுக்கு ஐந்து மடங்கான பங்கு”
## ஆதியாகமம் 43

“தன் சகோதரனிடத்தில் அன்புகூருகிறவன் ஒளியிலே நிலைகொண்டிருக்கிறான்.”
‾ 1 யோவான் 2:10

எகிப்திலிருந்து வாங்கிவந்த தானியங்கள் தீர்ந்து போய்க்கொண்டிருக்கையில், தானியங்களை இன்னுமாக வாங்கிவரும்படிக்கு, யாக்கோபு தனது குமாரர்களை வற்புறுத்தினார். ஆனால் தங்கள் இளைய சகோதரனாகிய பென்யமீன் தங்களோடுகூட வராததுவரையிலும், தங்களால் போகமுடியாது என்று அவர்கள் உறுதியாய் மறுத்துவிட்டனர். சகோதரர்களில் ஒருவராகிய யூதா, பென்யமீனுக்கு உத்தரவாதமானார். இறுதியில் யாக்கோபு சம்மதித்து, "அந்த மனிதன் அங்கிருக்கிற உங்கள் மற்றச் சகோதரனையும் (சிமியோனையும்), பென்யமீனையும் உங்களுடனே அனுப்பிவிடும்படிக்கு, சர்வவல்லமையுள்ள தேவன் அவன் சமுகத்தில் உங்களுக்கு இரக்கங்கிடைக்கப்பண்ணுவாராக; நானோ பிள்ளையற்றுப்போனவனைப்போல் இருப்பேன்” என்று கூறி, அவர்களோடுகூடத் தேன், கந்தவர்க்கங்கள் முதலான காணிக்கைகளையும், இரட்டிப்பாய்ப் பணத்தையும் மற்றும் பென்யமீனையும் அனுப்பிவைத்தார் (ஆதியாகமம் 43:14).

அவர்களை மீண்டுமாக எதிர்ப்பார்த்தவராக யோசேப்பு காணப்பட்டார் மற்றும் இம்முறை தன்னுடைய சமுகத்திற்கு முன்பாக அவர்களுக்கு விருந்து பரிமாறும்படிக்குக் கட்டளையிட்டிருந்தார். அவர்களோ பயத்தில் காணப்பட்டார்கள், ஏனெனில் அவர்கள் முன்பு வந்துபோனபோது, அவரவர் பணம், அவரவர் சாக்கின் வாயில் வைக்கப்பட்டிருந்தது. யோசேப்பினுடைய வீட்டின் வாசற்படியில், அவர்கள் வந்து யோசேப்பினுடைய விசாரணைக்காரனைத் தொடர்புகொண்டபோது, அவர்கள் இக்காலங்களில் எகிப்தில் (அ) வேறு தேசங்களில் அநேகமாகக் கொடுக்கப்படும் பதிலில் இருந்து, மிகவும் வித்தியாசமான ஒரு பதிலைப் பெற்றுக்கொண்டார்கள்; அதாவது "அதற்கு அவன்: உங்களுக்குச் சமாதானம்; பயப்படவேண்டாம்; உங்கள் தேவனும் உங்கள் தகப்பனுடைய தேவனுமாயிருக்கிறவர் உங்கள் சாக்குகளில் அதை உங்களுக்குப் புதையலாகக் கட்டளையிட்டார்; நீங்கள் கொடுத்த பணம் என்னிடத்தில் வந்து சேர்ந்தது என்று சொல்லி, சிமியோனை வெளியே அழைத்து வந்து, அவர்களிடத்தில் விட்டான்” (ஆதியாகமம் 43:23). பின்பு விசாரணைக்காரன் அவர்கள் தங்கள் கால்களைக் கழுவிக்கொள்ளும்படிக்கும், புத்துணர்வு அடையும்படிக்கும் அவர்களுக்குத் தண்ணீரும், அவர்களுடைய கழுதைகளுக்குத் தீவனமும் கொடுத்து, அவர்களுக்கு மதிய உணவை ஆயத்தம் பண்ணினான்.

யோசேப்பு எகிப்திய பிரபு என வஸ்திரம் தரித்தவராக உள்ளே வந்தார். அவர்கள் தரைமட்டும் குனிந்து, வணங்கி, காணிக்கைகளைக் கொடுத்தார்கள். அவர்களது தகப்பன் குறித்தும், அவர்களது இளைய சகோதரனாகிய பென்யமீன் குறித்தும் யோசேப்பு அன்பாய் விசாரித்தார். அவர் மிகவும் ஆழமான உணர்ச்சி வசத்திற்கு உள்ளானப்படியால், சந்தோஷத்தின் கண்ணீர்களைச் சிந்தும்படிக்கு, அவர் கொஞ்சம் நேரம் தனியே போவதற்கான கட்டாயத்திற்குள்ளானார். தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டவராக, திரும்பிவந்தார் மற்றும் போஜனம் தொடர்ந்தது. யோசேப்பின் பதினொரு சகோதரர்களும் அவரவரின் வயதின்படி அமர்த்தப்படும்படிக்கு ஏற்கெனவே கட்டளையிட்டிருந்த பிரகாரம் அமர்த்தப்பட்டிருந்தனர் மற்றும் தனது தனி மேஜையிலிருந்து யோசேப்பு தனது பதினொரு சகோதரர்களுக்கும் போஜனத்தைப் பங்கிட்டு அனுப்பினார். இப்படியாக தாங்கள் அமர்த்தப் பண்ணப்பட்டிருப்பதினிமித்தம் அவர்கள் ஆச்சரியமடைந்தார்கள் மற்றும் போஜனத்தில் தங்கள் இளைய சகோதரனாகிய பென்யமீனுக்கு ஒரு பங்கு கிடைப்பதற்குப் பதிலாக, ஐந்து மடங்கு பங்கு, விசேஷித்த தயவிற்கு/அன்பிற்கு அடையாளமாகக் கொடுக்கப்பட்டதைக் கண்டு, இன்னும் அதிகம் ஆச்சரியமடைந்தார்கள்.

குழந்தைகளுக்கும், முதிர்ச்சியடைந்த மனமுடையவர்களுக்கும் இக்கதையானது மிகவும் எளிமையானதாகவும், மிகவும் உருக்கமானதாகவும், மிகவும் அருமையானதாகவும் காணப்படுகின்றது. கதை அமைப்பானது, உண்மை நிகழ்வு என்று உறுதிப்படுத்துமளவுக்கு மிகவும் இயற்கையாகவும் மற்றும் தேவனுடைய புத்தகத்தில் ஒருவர் எதிர்ப்பார்க்கக்கூடியவைகளுக்கு முழு இசைவுடன் காணப்படுமளவுக்கு மிகவும் வஞ்சனையற்றதாகவும் அமைந்துள்ளது.

## "கற்பிக்கப்பட்ட ஆவிக்குரிய பாடம்"

மேசியாவிற்கு யோசேப்பு நிழலாகக் காணப்படுகின்றார் என்று உணர்ந்துள்ள வேதமாணவர்கள், ஒரே தாய்க்குப் பிறந்தவரும், யோசேப்பினுடைய இளைய சகோதரனாகவும் காணப்படுகின்றவருமான பென்யமீனும், ஒரு நிழலாக இருக்கின்றார் என்று கருதுகின்றனர். ஆபிரகாமின் மனைவிகள் பல்வேறு உடன்படிக்கைகளுக்கு நிழலாய் இருக்கின்றதுபோல, யோசேப்பு மற்றும் பென்யமீனுடைய தாயாகிய ராகேலும், பலியின் உடன்படிக்கையாகிய விசேஷித்த உடன்படிக்கைக்கு நிழலாய் இருக்கின்றாள் என்று வேதமாணவர்கள் கருதுகின்றனர்; இந்தப் பலியின் உடன்படிக்கையானது, இந்தச் சுவிசேஷ யுகத்தில் செயல்படுகின்றதாகவும், இரண்டு வெவ்வேறான பரிசுத்தவான்கள் அடங்கின வகுப்பினர்களைக் கொண்டுவருகின்றதாகவும் காணப்படுகின்றது. பரிசுத்தவான்கள் அடங்கின இந்த இரண்டு வகுப்பார்களுக்கு யோசேப்பு மற்றும் பென்யமீன் நிழலாய்க் காணப்படுகின்றனர்.

மேசியாவாகிய இந்த உயர்ந்த வகுப்பினர் யோசேப்பில் அடையாளப்படுத்தப்படுகின்றனர்; இவ்வகுப்பினர் இந்தச் சுவிசேஷ யுகத்தின் உண்மையுள்ள தேவனுடைய ஜனங்களை உள்ளடக்கினவர்களாகக் காணப்படுகின்றனர்; அதாவது இயேசு மற்றும் அவரது அடிச்சுவட்டைப் பின்பற்றும் பின்னடியார்கள் அனைவரையும் உள்ளடக்கின வகுப்பினராகும். யோசேப்பைப் போன்று, இந்த வகுப்பினர் இறுதியில் சாம்ராஜ்யத்தின் சிங்காசனத்தை அடைந்து, பார்வோன் அடையாளப்படுத்தும் சர்வவல்லமையுள்ள சிருஷ்டிகருக்கு அடுத்த நிலையில், அண்டசராசரத்தின் இராஜாவாகுவார்கள். இந்தப் பார்வோனே யோசேப்பை மரணம் எனும் சிறைச்சாலையிலிருந்து வெளியே எடுத்து, வல்லமையிலும், மகா மகிமையிலும், தனக்கடுத்த நிலையில் உயர்த்தி வைத்தார்.

பரிசுத்தவான்களாகிய கிறிஸ்தவர்களை உள்ளடக்கின இந்த இரண்டு வகுப்பாரும், இந்தச் சுவிசேஷ யுகத்தில் உருவாக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றனர் என்றும், மேலான வகுப்பார் யோசேப்பினால் அடையாளப்படுத்தப்படுகின்றனர் மற்றும் கீழான வகுப்பார் பென்யமீனால் அடையாளப்படுத்தப்படுகின்றனர் என்றும் சமீபக் காலங்கள் வரைக்கும், வேதத்தின் மாணவர்கள் அறியாதவர்களாகவே காணப்பட்டனர். பென்யமீன் எனும் பெயருடைய அர்த்தம் "என் வலது கரத்தின் மகன்" என்பதாகும். பெனொனி என்ற பெயரானது, அவரைப் பெற்றெடுக்கையில் மரித்துப்போன அவரது தாயார் சூட்டின பெயராகும் மற்றும் இதன் அர்த்தம், "என் உபத்திரவத்தின் மகன்" என்பதாகும்.

ராகேல் நிழலாய்க் காணப்படுகின்ற இந்த விசேஷமான உடன்படிக்கையானது, இயேசுவைத் தலையாகப் பெற்றுள்ள தெரிந்துகொள்ளப்பட்ட சபையாகிய மேசியாவைப் பெற்றெடுப்பதும், மற்றும் இன்னொரு வகுப்பாரைப் பெற்றெடுப்பதும் மற்றும் அதன் பிற்பாடு இல்லாமல் போவதை, அதாவது பிள்ளைப் பெற்றெடுக்காமல் இருப்பதும், இங்குள்ள நிஜமான பாடமாகக் காணப்படுகின்றது. இரண்டாவது வகுப்பார் உபத்திரவப்படும் பரிசுத்தவான்கள் என்று அழைக்கப்படுகின்றனர் மற்றும் இவர்கள் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுவதற்கு முன்னதாக, "மிகுந்த உபத்திரவத்திலிருந்து வருவார்கள்" என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இன்னுமாக இந்த வகுப்பார் யோசேப்பு நிழல்படுத்தும் அதிக கனமுடைய வகுப்பாரைக் காட்டிலும், மிகவும் அதிகமான எண்ணிக்கையுடையவர்களாக இருப்பார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## “சிறு மந்தை” - “திரள் கூட்டம்”

இந்தக் கண்ணோட்டத்தைத் தெளிவாக முன்வைப்பதற்கு நாம் வெளிப்படுத்தல் 7-ஆம் அதிகாரத்தை மேற்கோள் காட்டுகின்றோம். இங்குத் தங்கள் நெற்றிகளில் முத்திரிக்கப்பட்டவர்களென 1,44,000 பேர் காணப்படும் காட்சி ஒன்று கொடுக்கப்படுகின்றது. இவர்களும், வேறொரு இடத்தில் சீயோன் மலையில் ஆட்டுக்குட்டியானவருடன் நிற்பவர்களாகவும், வேறொருவரும் கற்றுக்கொள்ளக்கூடாமல், தாங்கள் மாத்திரமே பாடமுடிந்தவர்களாகவும் காணப்படுகின்றவர்களும் ஒரே வகுப்பாரே ஆவர் (வெளிப்படுத்தல் 14:1-3). இன்னுமாக இவர்கள் ஆட்டுக்குட்டியானவருடன், கண்ணாடிக்கடலின்மேல் நிற்பவர்களாகவும் சித்தரிக்கப்படுகின்றனர் (வெளிப்படுத்தல் 15:2,3). இப்படியாக பல்வேறு விதங்களில் இந்த வகுப்பார் உண்மையுள்ளவர்களும், பரிசுத்தவான்களுமான சிறு மந்தையுமானவர்களெனக் குறிப்பிடப்பட்டுள்ளனர்; இந்தச் சிறு மந்தையினருக்கே, அதாவது தங்கள் கர்த்தரும், மீட்பருமானவருடன் உடன் சுதந்தரர்களாய் இருக்கப்போகிறவர்களுக்கே, பிதா ஆயிர வருட இராஜ்யத்தைக்கொடுக்க பிரியமாய் இருக்கின்றார்.

வெளிப்படுத்தல் 7:4-இல் இவர்கள் இஸ்ரயேலின் பன்னிரண்டு கோத்திரங்களிலிருந்தும், ஒவ்வொரு கோத்திரத்திலிருந்து பன்னீராயிரம் பேர் வருபவர்களாய் இருக்கின்றனர் எனவும் நாம் வாசிக்கின்றோம். இதன் அர்த்தமாவது, மாம்சீக இஸ்ரயேலர்கள் கர்த்தரைப் புறக்கணித்து, அவரைச் சிலுவையில் அறைந்துபோடுவார்கள் என்பதைத் தேவன் ஏதோ அறிந்திராதவர் போன்று, அவர் தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் முழு எண்ணிக்கையானவர்களும் மாம்சீக இஸ்ரயேலர்கள் மத்தியிலிருந்து எடுக்கும்படிக்கு ஆதியிலேயே அவர் திட்டம் பண்ணியிருந்தார் என்பதாக இருக்கின்றது என்று வேதமாணவர்கள் புரிந்துகொண்டுள்ளனர். இஸ்ரயேலானது பிரதான ஆசீர்வாதத்தை அடையாது என்றும், தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் அதை அடைவார்கள் என்றும், தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் சேர்க்கப்படுவது நிறைவேறுவது வரையிலும் மீதமான இஸ்ரயேல் தேசத்தார் தற்காலிகமாகக் குருடாக்கப்பட்ட நிலையில் காணப்படுவார்கள் என்றும் தேவன் முன்னமே அறிந்திருந்தபோதிலும், இஸ்ரயேலரை அடிப்படையாகக் கொண்டே திட்டம் போடப்பட்டது (ரோமர் 11:7, 25-33).

இஸ்ரயேலர்களில் அநேகர் சுற்றியுள்ள தேசங்களில் சிதறிக்காணப்பட்டாலும், அவர்கள் பாபிலோனின் சிறையிருப்பிலிருந்து திரும்பினப்பிற்பாடு, அனைத்துக் கோத்திரமும், அதாவது முழுத்தேசமும், பாலஸ்தீனியாவினால் அடையாளப்படுத்தப்படுகின்றது என்பது வேதவாக்கியங்களுடைய பதிவுகளிலிருந்து உறுதியாய்த் தெரிகின்றது. ஆகவே இயேசு தம்முடைய வேலை, இஸ்ரயேலின் பன்னிரண்டு கோத்திரத்தாருக்காகக் காணப்பட்டது என்று குறிப்பிட்டார் மற்றும் அப்போஸ்தலர்களும் இப்படியாகவே குறிப்பிட்டார்கள். அழைப்பைக் கேட்டு, அதற்கு செவிக்கொடுத்து, பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டு, ஆவிக்குரிய இஸ்ரயேலர்களாகவும், தேவனுடைய புத்திரர்களாகவுமான யூத பரிசுத்தவான்கள் பல்வேறு கோத்திரங்களிலிருந்து வந்தவர்களாகவும், சில கோத்திரங்களிலிருந்து அதிகமாயும் மற்றும் சில கோத்திரங்களிலிருந்து கொஞ்சமாயும் வந்தவர்களாகவும் காணப்பட்டனர். இவர்கள் முன்குறிக்கப்பட்ட 1,44,000 பேரில், அநேகராய்க் காணப்பட்டனர்.

ஆனாலும் தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் முழுமையான எண்ணிக்கை நிறைவடைவதற்குப் போதுமான பரிசுத்தவான்கள் இல்லை. ஆகவே தெய்வீகக் கிருபையினால் செய்தியானது, புறஜாதிகளினிடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது; கொர்நேலியு எனும் புறஜாதியே, முதலாவது கிறிஸ்தவராக மாறினார். இடைப்பட்ட நூற்றாண்டுகளில் தேவனுடைய அழைப்பிற்குச் செவிக்கொடுத்த புறஜாதிகள், ஏற்றுக்கொள்ளப்பட்டு, பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டு, உத்தம இஸ்ரயேலர்களென, ஆபிரகாமினுடைய சந்ததியின் ஆவிக்குரிய அங்கத்தினர்களென, தேவனால் ஆபிரகாமுக்குப் பண்ணப்பட்ட வாக்குத்தத்தங்களுக்கு ஏற்ப முதலாம் உயிர்த்தெழுதலுக்கு, தெரிந்துகொள்ளப்பட்ட யூதர்களுடன் சுதந்தரர்களெனக் கருதப்பட்டனர்; மாம்சீக இஸ்ரயேலர்கள் இன்னமும் தேவனுடைய அடுத்த வாக்குத்தத்தங்களுக்குச் சுதந்தரவாளிகளாகவே காணப்படுகின்றனர்.

இப்படியாகவே தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் முத்திரையிடுதலானது கிட்டத்தட்ட 19 நூற்றாண்டுகளாக நடைப்பெற்று வருகின்றது. யூதர்கள் மற்றும் புறஜாதியார்களிடமிருந்து ஒட்டுமொத்தமாக 1,44,000 பேர், தேவனுக்கான ஆசாரியர்களாகவும் மற்றும் இராஜாக்களாகவும், ஆட்டுக்குட்டியானவருடைய பின்னடியார்களாகவும், இராஜ்யத்தில் கிறிஸ்துவுடனான உடன் சுதந்தரர்களாகவும் காணப்படுவார்கள். பன்னிரண்டு கோத்திரங்களிலுள்ள ஒவ்வொரு கோத்திரத்திலிருந்தும் 12,000 பேர் இந்தப் பணிக்கென்று நியமிக்கப்படுதலானது, இந்தியாவில் பிரிட்டிஷ் படைப்பிரிவுக்கான வீரர்கள் தேர்வுச் செய்யப்படும் விதத்திற்கு ஒத்த தேர்ந்தெடுக்கப்படுதலாய் இருக்கும் என்று நாம் புரிந்துகொள்கின்றோம். இதற்கான பெயர்ப்பதிவு மாபிரிட்டனிலிருந்து முழுவதுமாக நடைபெறுகிறது, ஆயினும் பெயர்ப்பதிவு செய்யப்பட்டவர் - அவர் எந்த நகரம் (அ) தேசம் என்ற பாகுபாடில்லாமல் - எந்தப் படைப்பிரிவில் எண்ணிக்கைக் குறைவாக உள்ளதோ, அதில் அங்கத்தினராக இணைக்கப்படலாம்.

## "இவைகளுக்குப் பின்பு நான் பார்த்தபோது"

உண்மையுள்ளவர்களாகிய 1,44,000 பேர் முத்திரையிடப்பட்ட சம்பவம் பற்றின பதிவிற்குப் பிறகு, அதே அதிகாரத்தில் திரள்கூட்டம் குறித்தும் பதிவுகள் செய்யப்பட்டுள்ளன. "இவைகளுக்குப்பின்பு, நான் பார்த்தபோது, இதோ, சகல ஜாதிகளிலும், கோத்திரங்களிலும், ஜனங்களிலும், பாஷைக்காரரிலுமிருந்து வந்ததும், ஒருவனும் எண்ணக்கூடாததுமான (சிறுமந்தையினர் போன்று எண்ணிக்கையின் விஷயத்தில் முன்குறிக்கப்படாத) திரளான கூட்டமாகிய ஜனங்கள், வெள்ளை அங்கிகளைத் தரித்து, தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்து, சிங்காசனத்திற்கு முன்பாகவும் ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் நிற்கக்கண்டேன். அவர்கள் மகா சத்தமிட்டு: இரட்சிப்பின் மகிமை சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிற எங்கள் தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் உண்டாவதாக என்று ஆர்ப்பரித்தார்கள்" (வெளிப்படுத்தல் 7:9, 10).

தெரிந்துகொள்ளப்பட்ட இராஜாக்களும், ஆசாரியர்களுமானவர்களுக்கான வாக்குத்தத்தமானது, சிங்காசனத்திற்கு முன்பாக நிற்கும் ஆசீர்வாதமாக இராமல், மாறாக சிங்காசனத்தில் இருக்கும் ஆசீர்வாதமாக இருப்பது பற்றியதாகவே காணப்படுகின்றது என்பது கவனிக்கப்பட வேண்டும். இன்னுமாக தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் ஜெயங்கொள்ளுதலானது குருத்தோலைகளின் மூலமாகக் காண்பிக்கப்படாமல், மாறாக மகிமையின் கிரீடத்தினால் காண்பிக்கப்படுகின்றது. இவைகளனைத்தும் குருத்தோலைப் பிடித்தவர்களாகச் சிங்காசனத்திற்கு முன்பாக நிற்கும் இந்தத் திரளான கூட்டத்தினர், மேசியாவின் சிங்காசனத்திலும், மகிமையிலும் பங்கடையும் தெரிந்துகொள்ளப்பட்டவர்களாகிய, மணவாட்டி வகுப்பாரிடமிருந்து முற்றிலும் வேறுபட்டவர்கள் என்பதை உறுதிப்படுத்துகின்றது. இந்தத் திரள்கூட்டத்தினர் வேறொரு இடத்தில் அடையாள வார்த்தையில் "கன்னிகைகள்" என்றும், மணவாட்டியின் பின்செல்லும் மணவாட்டியினுடைய தோழிகள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளனர். இவர்கள் மணவாட்டியுடன் அரமனைக்குள், மகா இராஜாவின் சமுகத்தில் செல்வார்கள், ஆனால் இவர்கள் மணவாட்டிகளாகக் காணப்படுவதில்லை (சங்கீதம் 45:14, 15).

இந்தத் திரள் கூட்டத்தினரைக் குறித்து வெளிப்படுத்துபவராகிய யோவானுக்கு விவரிக்கப்பட்டது; "இவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள்; இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள். ஆனபடியால், இவர்கள் தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக இருந்து, இரவும் பகலும் அவருடைய ஆலயத்திலே அவரைச் சேவிக்கிறார்கள்; சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவர் இவர்களுக்குள்ளே வாசமாயிருப்பார்" (வெளிப்படுத்தல் 7:14, 15).

இங்குச் சிறு மந்தையினர் "தேவனுடைய ஆலயம்" என்றும், ஜீவனுள்ள கற்கள் என்றும் குறிப்பிடப்படுவதையும், இந்தத் திரள் கூட்டத்தினரோ அந்த ஆலயத்தில், அதாவது சபைக்குள்ளாகவும் மற்றும் சபையின் மூலமும் தேவனுக்கு ஊழியஞ்செய்வார்கள் என்றும் குறிப்பிடப்படுவதையும் வேதமாணவர்கள் கவனிக்கின்றனர். மகா உபத்திரவத்தின் காலத்தில், தங்களது வஸ்திரத்தை ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்திலே தோய்த்து வெளுக்கும் இந்த வகுப்பார்,மணவாட்டியிடமிருந்து

வேறுபட்ட வகுப்பினராகவே கண்டிப்பாக இருக்க வேண்டுமென்பதையும் வேதமாணவர்கள் கவனிக்கின்றனர், ஏனெனில் மணவாட்டிகளோ, இராஜாவின் முன்னிலையில் கறைதிறையற்றவர்களாக தாங்கள் நிற்கத்தக்கதாக, தங்கள் வஸ்திரங்கள் உலகத்தினால் கறைப்படாதபடிக்குக் காத்துக்கொள்பவர்களாகவும், விழிப்பாய் இருப்பவர்களாகவும் இருப்பார்களென விவரிக்கப்பட்டுள்ளது.

## "உபத்திரவப்படும் இரண்டு வகுப்பார்"

கிறிஸ்துவைத் தலையாகப் பெற்றுள்ள சிறு மந்தையினர், அதாவது இராஜரிக ஆசாரியக்கூட்டத்தினர், அதாவது தெரிந்துகொள்ளப்பட்ட சபையானது நிச்சயமாய் உபத்திரவங்களின் வழியாகவே செல்கின்றவர்களாய் இருப்பார்கள். ஆகவேதான் அவர்களைக் குறித்து, "அநேக உபத்திரவங்களின் வழியாய் இராஜ்யத்தில் நீங்கள் பிரவேசிக்க வேண்டுமென்று" எழுதப்பட்டுள்ளது. கர்த்தர்கூட மிகுதியான உபத்திரவங்கள், அவமானம், பாடுகள் மற்றும் மரணத்தின் ஊடாய்க் கடந்து சென்றார் என்று நாம் அறிவோம். அவருடைய அடிச்சுவட்டைப் பின்பற்றும் பின்னடியார்களாகிய அப்போஸ்தலர்கள் மற்றும் மற்றவர்களின் விஷயத்திலும் இப்படியாகவே இருந்தது என்பதையும் நாம் அறிவோம்.

எனினும் இவர்கள் வேதத்தில் உபத்திரவப்படும் வகுப்பார் என்று விவரிக்கப்படுவதில்லை. ஏனெனில் இவர்களது மகா விசுவாசத்தின் காரணமாக, இவர்கள் தங்களுடைய உபத்திரவங்களில் களிக்கூருவதற்கு முடிகின்றவர்களாகவும், இந்த உபத்திரவங்கள் அனைத்தும் மகா மேன்மையான நித்திய கன மகிமையை உண்டுபண்ணுகிறதை அறிந்து, உபத்திரவங்களை மகிழ்ச்சியுடன் கருதிக்கொள்கின்றவர்களாகவும் காணப்படுகின்றனர். இவர்கள் உபத்திரவங்கள் மத்தியில் மகிழ்ச்சியுடன் கடந்து செல்கின்றனர், ஏனெனில் காண்கிறவைகள் அனைத்தும் தற்காலிகமானவைகள் என்று இவர்கள் கருதிக்கொள்கின்றனர். தேவனை அன்புகூருகின்றவர்களுக்கு அவர் வைத்துள்ள நித்தியமானவைகளை, கண்கள் காணாதவைகளை இவர்கள் விசுவாசத்தின் கண்கள் மூலம் பார்க்கின்றனர்.

உபத்திரவப்படுகின்ற பரிசுத்தவான்கள் (திரள் கூட்டத்தினர்) தங்கள் நேர்மையில் குறைவுபட்டவர்களாய் இராமல், தங்கள் வைராக்கியத்தின் விஷயத்தில் குறைவுப்பட்டவர்களாய் இருப்பார்களென வேதவாக்கியங்களில் பல்வேறு விதங்களில் சித்தரிக்கப்பட்டுள்ளனர். இந்த உபத்திரவப்படுகின்ற பரிசுத்தவான்களானவர்கள் பலிக்கான தங்கள் வாக்குறுதிகளில் முன்னேறிச் சென்று நிறைவேற்றிடுவதற்குத் தவறிவிடுகின்றவர்களாகவும், உலகம், மாம்சம் மற்றும் எதிராளியானவனுக்கு எதிரான யுத்தத்தில் வீரர்களாய் இருப்பதற்குத் தவறிவிடுகின்றவர்களாகவும் காணப்படுவார்கள். "ஜீவகாலமெல்லாம் மரணபயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளாகுதல்" என்று வேதவாக்கியங்கள் கூறுவதுபோன்று இவர்கள் தாங்கள் பண்ணின உடன்படிக்கைத் தொடர்புடையதான பலியின் அனுபவங்கள் குறித்து அச்சங்கொண்டவர்களாக, மாம்சத்திற்கும், சமுதாயத்தின் வழக்கங்களுக்கும் அடிமைத்தனத்திற்குள்ளானவர்களாகக் காணப்படுவார்கள் (எபிரெயர் 2:15).

இந்தக் காரணத்தினிமித்தமாக, இவர்கள் தேவனால், அவரது நேசகுமாரனுடைய சாயலை உடையவர்களாகவும், குமாரனுடைய கனம், மகிமை மற்றும் அழியாமையில் பங்கடைவதற்குப் பாத்திரவான்களாகவும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாது. எனினும் கர்த்தர் மிகவும் இரக்கமுடையவராகக் காணப்பட்டு, தம்மிடத்திலான இவர்களது நேர்மையைக்குறித்துப் பரீட்சிக்கின்றவராய் இருப்பார். இவர்களில் அநேகர் இறுதியில் உண்மையுள்ளவர்கள் என்றும், நேர்மையுள்ளவர்கள் என்றும் நிரூபிக்கப்படும்போது, இவர்கள் தாங்கள் இராஜ்யத்தில் உடன் சுதந்தரத்தைப் பெற்றுக்கொள்வதற்கென அழைக்கப்பட்ட, அந்த உடன்சுதந்தரத்தை இழந்துபோனாலுங்கூட, இவர்கள் நித்திய ஜீவன் அருளப்படும்படிக்கு, கர்த்தர் செய்வார். "உங்களுக்கு உண்டான அழைப்பினாலே, நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டிருக்கிறீர்கள்" (எபேசியர் 4:4).

இந்த வகுப்பார் (திரள் கூட்டத்தினர்) சுவிசேஷ யுகம் முழுவதும் உருவாகிக் காணப்பட்டாலும், இந்த யுகத்தினுடைய முடிவின்போது, உலகத்தின்மீது வரவிருக்கின்ற உபத்திரவக் காலம் தொடர்புபடுத்தியே இந்த வகுப்பார் விசேஷமாய் வேதவாக்கியங்களில் தெரிவிக்கப்பட்டனர். உதாரணத்திற்கு, இவர்கள் (திரள் கூட்டத்தினர்) மகா உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது மற்றும் "அவனவனுடைய வேலைப்பாடு எத்தன்மையுள்ளது என்று அக்கினியானது பரிசோதிக்கும்" என்று பரிசுத்தவானாகிய பவுல் குறிப்பிட்டுள்ளார். பொன்னினாலும், வெள்ளியினாலும், விலையேறப்பெற்ற கற்களினாலும் கட்டியிருப்பவர்கள் (சபை) பரீட்சையில் நிலைநிற்பார்கள் என்றும் பரிசுத்தவானாகிய பவுல் குறிப்பிடுகின்றார்; மேலும் இப்படியாகக் கட்டியிருப்பவர்களின் விஷயத்தில், அந்நாளின் அக்கினியானது, அவர்களுக்கு உபத்திரவத்தைக் கொடுக்காது, அதாவது அவர்களது விசுவாச கட்டிடத்தை அழித்துப்போடாது. பின்னர் பவுல் திரள் கூட்டத்தினரை விவரிக்கும் விதத்தில், மற்றவர்கள் மரம், புல், வைக்கோல் முதலியவற்றால் சரியற்ற நிலையில் கட்டியிருக்கின்றார்கள் என்றும், அந்நாளின் அக்கினியானது, இப்படியான சரியற்ற வேலைப்பாடுகள் அனைத்தையும் முற்றிலும் அழித்துப்போடும் என்றும் கூறியுள்ளார். இப்படியாக உண்மையான அஸ்திபாரத்தின் மீது, சரியற்ற விதத்தில் அவர்கள் கட்டியிருந்தாலும், அவர்கள் இரட்சிக்கப்படுவார்கள், அதுவும் அக்கினியில் அகப்பட்டுத்தப்பினது போலிருக்கும் என்று குறிப்பிடுகின்றார்; அதாவது மகா உபத்திரவக் காலத்தில் இரட்சிக்கப்பட்டவர்களாக, மகா உபத்திரவத்தின் மூலம் தேவனுடைய தயவைப் பெற்றுக்கொள்பவர்களாக மற்றும் முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கடையவில்லையென்றாலும், நல்லதொரு உயிர்த்தெழுதலில் பங்கடைபவர்களாக இருப்பார்கள் என்ற விதத்தில் குறிப்பிடுகின்றார். ஏனெனில் "முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவன் பாக்கியவானும் பரிசுத்தவானுமாயிருக்கிறான்; இவர்கள்மேல் இரண்டாம் மரணத்திற்கு அதிகாரமில்லை; இவர்கள் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் முன்பாக ஆசாரியராயிருந்து, அவரோடேகூட ஆயிரம் வருஷம் அரசாளுவார்கள்" என்று நாம் வாசிக்கின்றோம் (வெளிப்படுத்தல் 20:6).

## "பென்யமீனுடைய ஐந்து மடங்கு பங்கு"

யோசேப்பு தனது வெகுமதிகளை வழங்கும்போது, தனது சகோதரர்கள் அனைவருக்கும் அதிகமாய்க் கொடுத்தார். ஆனால் தனது தாயின் குமாரனாகிய, தனது சொந்த சகோதரனான பென்யமீனுக்கு, யோசேப்பு ஐந்துமடங்கு பங்குகொடுத்தார். யோசேப்பு, மேசியாவிற்கும், அவரது இராஜரிக வல்லமைக்கும், மகிமைக்கும் நிழலாய் இருப்பது தெளிவாய்த் தெரிகின்றபடியால் யோசேப்பு தன்னுடைய சகோதரர்களுக்கு வழங்கின ஆசீர்வாதங்களானது, மேசியா, மாம்ச பிரகாரமான தமது சகோதரர்களாகிய மாம்சீக இஸ்ரயேலர்கள் மீது அருளும் கடாட்சங்களைக் குறிக்கின்றது. அதாவது எகிப்தியர்கள் அடையாளப்படுத்தும் ஒட்டுமொத்த மனுக்குலத்திற்கு மேசியாவின் ஆளுகையானது அருளவிருக்கும் பொதுவான ஆசீர்வாதத்தோடுகூட, மாம்சீக இஸ்ரயேலர்கள் மீதுங்கூட மேசியா கடாட்சம் அருளுவதைக் குறிக்கின்றது என்பதாக வேதமாணவர்களுக்குத் தெரிகின்றது.

இந்த நிழலில், உபத்திரவத்தின் மகனாகிய பென்யமீன், கர்த்தருடைய ஜனங்கள் மத்தியிலான திரள் கூட்டத்தின் வகுப்பாருக்கு நிழலாய் இருக்கின்றார்; மீதமான உலகத்தைக் காட்டிலும், உயர்வான தளத்திற்கும், உயர்வான நிலைமைக்கும், உயர்வான ஆசீர்வாதத்திற்கும் மகா உபத்திரவத்திலிருந்து கடந்துவரும் திரள் கூட்டத்தாருக்குப் பென்யமீன் நிழலாய் இருக்கின்றார். சபை போன்று பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டுள்ள இவர்கள், ஒருவேளை ஜீவன் பெற்றுக்கொள்வதற்குப் பாத்திரவான்களாய் இருப்பார்கள் என்றால், இவர்களுங்கூட ஆவியின் ஜீவிகளாகக் காணப்படுவார்கள். நிஜமான யோசேப்பை விற்றுப்போட்ட சகோதரர்களும் யோசேப்பினால் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பார்கள்.

[R5232]

# “யோசேப்பின் சகோதரர்களால் கற்றுக்கொள்ளப்பட்ட பாடங்கள்”

## ஆதியாகமம் 44-ஆம் அதிகாரம்

“நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு, உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம்பண்ணுங்கள்.” – யாக்கோபு 5:16

யோசேப்பைக் கொன்றுபோடுவதற்குத் திட்டம்பண்ணி, பிற்பாடு அவர் சாகும்படிக்கு, அவரைக் குழியில் போட்டுவிட்டு, பின்னர் அவரை அடிமையாக அவரது சகோதரர்கள் விற்றுப்போட்டபோது மிகவும் கடின நெஞ்சம் உடையவர்களெனத் தோன்றின அளவுக்கு, அவர்கள் கடின இருதயம் உடையவர்கள் இல்லையென்பதை இந்தப் பாடமானது நமக்குக் காட்டுகின்றது. நம்முடைய இளமைப் பிராயங்களில் நம்மில் அநேகருக்குக் கற்பிக்கப்பட்டதான முழுச்சீர்க்கேடு குறித்த உபதேசமானது, நம்முடைய சொந்த குணலட்சணங்களுடைய விஷயங்களிலும், மற்றவர்கள் தொடர்புடைய நம்முடைய அனுபவங்களின் விஷயங்களிலும் மீண்டும், மீண்டுமாக தவறென நிரூபித்துக்காட்டப்பட்டுள்ளது. அனைவரும் முழுமையாய்ச் சீரழிந்துவிட்டனர் என்று கருதுபவன், தவறான கண்ணோட்டத்திலேயே தனது சக மனிதனை அணுகுபவனாக இருப்பான்; சீரழிவு குறித்த எண்ணம் உடையவன், சீரழிவையே எதிர்ப்பார்த்து நோக்குபவனாக இருந்து, சீரழிவையே கண்டுபிடிப்பவனாக இருப்பான் மற்றும் அவன் எந்த நல்லவற்றையும் எதிர்ப்பார்த்து நோக்காததினால், அவன் நல்லவற்றைப்பார்க்க தவறுகிறவனாகிறான்.

மனிதர்கள் அனைவரும் சீர்க்கெட்டுப் போயுள்ளனர் என்றும், எவரும் பூரணர் இல்லையென்றும், ஒருவர் கூடப் பூரணர் இல்லையென்றும், அனைவரும் பாவஞ்செய்துள்ளனர் என்றும், அனைவரும் ஆதி பாவத்தினுடைய விளைவில் பங்கடைந்துள்ளனர் என்றும், இதன் காரணமாக அனைவரும் தகப்பனாகிய ஆதாமினுடைய பரிபூரணத்தில் விளங்கின தேவமகிமையின் விஷயத்தில் தேவமகிமை அற்றவர்களாகியுள்ளனர் என்றுமுள்ள வேதவாக்கியங்கள் அடிப்படையிலான கூற்றுச்சரியானதேயாகும். பரிபூரணமாய்க் காணப்படும் ஒன்றுடன்தான் தேவன் தொடர்புவைத்துக்கொள்வார் என்றும், தமது சொந்த பூரணத்திற்கு முழு இசைவுடன் காணப்படுபவர்களுக்கு மாத்திரமே, தேவனால் தமது கிருபையையும், நித்திய ஜீவனையும் அருளமுடியும் என்றும் உள்ளதுதான் வேதவாக்கியங்களின் கருத்தாக இருக்கின்றது. ஆகையால் விழுகையின் காரணமாக அனைத்து மனிதர்களும் பாவிகளானப்படியால், அனைவருக்கும் மீட்பு தேவையாய் உள்ளது மற்றும் ஒப்புரவாகுதலும் தேவையாயுள்ளது.

இப்படியான ஒப்புரவாகுதலுக்குரிய வாய்ப்பானது, இந்தச் சுவிசேஷ யுகத்தில் சொற்பமானவர்களுக்கு வருகின்றதாய் இருக்கின்றது மற்றும் இவர்களுக்கு மாத்திரமே வருகின்றது. இவர்கள் இருதயத்திலும், சித்தத்திலும், நோக்கத்திலும் பூரணமாய்க் காணப்பட வேண்டும் மற்றும் தங்கள் குறைவுகள் அனைத்திற்குமான மூடலாக, கிறிஸ்துவினுடைய புண்ணியத்தை விசுவாசத்தின் மூலம் ஏற்றுக்கொண்டிருக்க வேண்டும். இந்தக் கண்ணோட்டத்தில் தேவன் இவர்களது மாம்சத்தின் வேண்டுமென்றே இல்லாத பெலவீனங்களைப் பொருட்படுத்தாமல், இவர்களைப் புதிய சிருஷ்டிகளென ஏற்றுக்கொள்கின்றார். இப்படியாக கிறிஸ்துவின் மூலம், அர்ப்பணம் பண்ணப்பட்ட விசுவாசிகளாகிய உண்மை சபை மாத்திரமே, தேவனுடைய குமாரர்களென எண்ணப்படுகின்றனர் மற்றும் கையாளப்படுகின்றனர் மற்றும் தேவனுடைய குமாரர்களுக்குரிய சிலாக்கியங்களையும், ஜெபத்தில் பிதாவுடனான ஐக்கியத்தையும் பெற்றவர்களாய் இருக்கின்றனர் மற்றும் அனைத்துமே இவர்களது உயர்ந்த பட்ச நன்மைக்கு ஏதுவாய் நடந்தேறும் என்று உத்தரவாதம் அளிக்கின்ற தெய்வீக மேற்பார்வையை, இவர்கள் தங்கள் காரியங்களில் பெற்றவர்களாய் இருக்கின்றனர். எனினும் இவர்களும் தேவனைப் பார்க்கப்போவதற்கு முன்பாகவும், தேவன் இவர்களுக்காக வைத்திருக்கும் மகிமையானக் காரியங்கள் அனைத்தினிடத்திற்கு முழுமையாய்க் கொண்டு சேர்ப்பதற்கு முன்பாகவும், முதலாம்

உயிர்த்தெழுதலின் வல்லமையினால் பூரணப்படுத்தப்படுவது அவசியமாய் இருக்கின்றது.

உலகத்தார் நீதிமானாக்கப்படும் காரியமானது முற்றிலும் வேறான விதத்தில் ஏற்பாடு பண்ணப்பட்டுள்ளது. அதற்கான வேளையானது, வேதவாக்கியங்களின்படி, வரவிருக்கின்ற யுகமாக இருக்கின்றது. அப்போது மேசியாவின் இராஜ்யமானது, சாத்தானின் செல்வாக்கைக் கட்டிப்போட்டு, சாபத்தை அகற்றிப்போட்டு, சாபத்திற்குப் பதிலாக முழுச்சந்ததிக்கும் ஆசீர்வாதங்களைக் கொண்டுவருகின்றதாய் இருக்கும். இப்பொழுது உண்மையுள்ளவர்களைக் கையாளுவது போன்று, அக்காலத்தில் விருப்பத்துடன் கீழ்ப்படிபவர்களைத் தேவன் கையாளுவதில்லை. மாறாக அந்த ஆயிரம் வருஷங்களில் அவர்கள் மாபெரும் மத்தியஸ்தரின் பொறுப்பில் விடப்படுவார்கள் மற்றும் நீதிமானாக்கப்படுவார்கள் அல்லது உண்மையில் நீதிமானாக்கப்படுவார்கள். விருப்பத்துடன் கீழ்ப்படிபவர்கள் ஆதாமினுடைய ஆதி பூரணத்திற்குத் திரும்பக் கொண்டுவரப்பட்டு, மாபெரும் போதகரினால் முழுமையாய்க் கற்பிக்கப்பட்டுக் காணப்படுபவர்கள். ஆயிர வருடத்தின் முடிவில், பிதாவின் முன் நிறுத்தப்படுவதற்கும், அவரால் குமாரர்களென ஏற்றுக்கொள்ளப்படுவதற்கும் ஆயத்தமாய் இருப்பார்கள். இதற்கிடையில் ஒப்புரவாகுவதற்குரிய விருப்பமும், வாஞ்சையும் இல்லாதவர்கள் அனைவரும் இரண்டாம் மரணத்தில் அழிக்கப்படுவார்கள்.

நாம் இங்கு வலியுறுத்த விரும்பும் கருத்தென்னவெனில், தேவன் எங்குமே மனிதன் முழுமையாகச் சீர்க்கேடு அடைந்துவிட்டான் என்று சொல்லவில்லை, மாறாக சிறிய அளவிலான பூரணமின்மையைக்கூட அவரால் சகித்துக்கொள்ள முடியாது என்றுதான் அவர் சொல்லியுள்ளார். ஆகையால் அநேகமோ (அ) கொஞ்சமோ, நம் குறைவுகள் அனைத்தும், தவறுகள் அனைத்தும், நம் ஒவ்வொருவருக்காகவும், மாபெரும் மீட்பராகிய, திரும்பக்கொடுப்பவராகிய இயேசுவின் மூலம் நிறைவாக்குவது தெய்வீக ஏற்பாடாக இருக்கின்றது; மாபெரும் மீட்பரானவருடைய பலி மற்றும் உதவி இல்லாமல், பூரணமடைவதும், பிதாவினால் ஏற்றுக்கொள்ளப்படுவதும் கூடாத காரியமாகும்.

## "யோசேப்பின் சகோதரர்கள் உருக்கமான இருதயம் உடையவர்கள் ஆவர்"

யோசேப்பு கொண்டிருந்த விசுவாசமும், அவரது அனுபவங்களும், அவருக்குள் பிரமாண்டமான/உயரிய குணலட்சணங்களையும், நிறைவான பரிவிரக்கத்தையும் மற்றும் தேவனுக்கான முழுமையானக் கீழ்ப்படிதலையும் உருவாக்கியது என்பதை நம்முடைய இப்பாடம் காண்பிக்கின்றது. ஆனால் வித்தியாசமான ஒருமுறையில், யோசேப்பினுடைய பத்துச் சகோதரர்களும் தவறுகளின் நிமித்தமான மன உளைச்சலுக்குள்ளானவர்களாகி மிகவும் பரிவிரக்கம் உடையவர்களாகவும், மிகுந்த சகோதர சிநேகம் உள்ளவர்களாகவும், தங்கள் தகப்பனாகிய யாக்கோபிற்கு மிகவும் உண்மையுள்ளவர்களாகவும் மாறினார்கள். ஜீவியத்தின் அனைத்து அனுபவங்கள், அதாவது கசப்பான மற்றும் இனிமையான அனுபவங்கள், நமது சரியான கிரியைகள் மற்றும் தவறுகள் ஆகிய அனுபவங்கள் அனைத்தின் பலன்களானது, நம்மைத் திருத்துவதற்கும், நமக்கு உதவியாக இருப்பதற்கும் ஏதுவாய்க் காணப்படத்தக்கதாக, தெய்வீக மேற்பார்வையின் கீழ்த் திட்டம் பண்ணப்பட்டுள்ளது. இப்படியான எந்த ஆசீர்வாதத்திற்கும், தேவன் மீது நம்பிக்கை என்பது அவசியமானதாகும். யோசேப்பினுடைய நம்பிக்கையைக் குறித்து நாம் பார்த்திருக்கின்றோம் மற்றும் இன்றைய பாடமானது அவரது சகோதரர்கள் வித்தியாசமானவர்களாய்க் காணப்பட்டாலும், இன்னமும் சர்வவல்லவரை அங்கீகரித்தவர்களாகவும், அவருக்கான பயபக்தியைக் கொண்டவர்களாகவும், அவர் அனைத்துத் தீமையான கிரியைகளுக்கும் நியாயமான கைமாறு அளிப்பவர் என்று உணர்ந்துகொண்டவர்களாகவும் அவர்கள் காணப்பட்டார்கள் என்பதை நமக்குக் காண்பித்துத் தருகின்றதாய் இருக்கின்றது.

யோசேப்பு ஏற்பாடு பண்ணினதும், பென்யமீன் ஐந்து மடங்கு பங்கு பெற்றுக்கொண்டதுமான, விருந்துக்குப் பிற்பாடு, பதினொரு சகோதரர்களும், தங்கள் அனுபவங்கள் நிமித்தமாகவும், எகிப்திய அதிகாரியிடம் கிடைத்த தயவினிமித்தமாகவும் மகிழ்ச்சியுடன், வீடுகளுக்குத் திரும்பப் புறப்பட்டார்கள் என்று பார்க்கின்றோம். தங்கள் தகப்பனாருக்காக அவர்கள் கொண்டிருக்கும் இரக்கத்தையும், தங்கள்

இளைய சகோதரன் மீது அவர்கள் கொண்டிருக்கும் அன்புடன்கூடிய அக்கறையையும் சோதித்துப்பார்க்க விருப்பம் கொண்டவராக, அவர்கள் புறப்படுவதற்கு முன்னதாக, யோசேப்பு தனது வெள்ளிப்பாத்திரத்தை பென்யமீனுடைய சாக்கின் வாயிலே போட்டு, அனுப்பும்படிக்குக் கட்டளையிட்டிருந்தார். கானானை நோக்கி வெகுதூரம் போவதற்கு முன்னதாக யோசேப்பு தனது வீட்டிலிருந்து வேலைக்காரர்களை அவர்களிடத்தில் அனுப்பி கேட்கச் சொன்னதாவது, "நீங்கள் உங்களுக்கு உதவியவருக்கு இப்படி மோசம் செய்தது என்ன? ஏன் நீங்கள் அவரது வெள்ளிப்பாத்திரத்தை எடுத்தீர்கள்? நீங்கள் எப்படிப்பட்ட நம்பிக்கைத் துரோகிகள்/ஏமாற்றுக்காரர்கள்!" அவர்கள் தாங்கள் குற்றமற்றவர்கள் என்றும், தங்கள் வசத்தில் ஒருவேளை பாத்திரம் கண்டுபிடிக்கப்படுமானால், தாங்கள் அனைவருமே தானாகவே அடிமைகளாகிக் கொள்வார்கள் என்றும் கூறினார்கள். யோசேப்பு கட்டளையிட்டிருந்த பிரகாரம், பாத்திரத்திற்கான தேடுதல் மூத்த சகோதரனிடத்தில் தொடங்கப்பெற்று, பென்யமீனுடைய சாக்கோடு முடிவுபெற்றது. பென்யமீனுடைய சாக்கில் பாத்திரம் கண்டுபிடிக்கப்பட்டது. மிகுந்த வேதனையில், அவர்கள் அனைவரும், மீண்டும் அரமனைக்குத் திரும்பி நடந்தார்கள்.

மீண்டுமாக யோசேப்பு கடினமாக நடந்துகொண்டு, அவர்கள் தங்கள் சுயநலத்தை வெளிப்படுத்துவதற்கும், பென்யமீனைக் கைவிட்டுவிடுவதற்குமான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கத்தக்கதாக அவர்களைக் கடிந்துகொண்டார். மீண்டுமாக அவர்கள் தாங்கள் குற்றமற்றவர்கள் என்று தெரிவித்து, தாங்கள் யோசேப்பினுடைய அடிமைகளாக இருப்பதற்கு விரும்புவதையும் தெரிவித்தார்கள். ஆனால் யோசேப்போ, "அப்படிப்பட்ட செய்கை எனக்குத் தூரமாக இருப்பதாக; எவன் (பென்யமீன்) வசத்தில் பாத்திரம் கண்டுபிடிக்கப்பட்டதோ, அவனே எனக்கு அடிமையாய் இருப்பான்; நீங்கள் உணவுகளோடு, உங்கள் குடும்பங்களிடத்திற்கும், உங்கள் தகப்பனிடத்திற்கும் திரும்பிச் செல்லுங்கள் மற்றும் எகிப்தின் சலுகைகளையும் நீங்கள் தொடர்ந்து அனுபவித்துக்கொள்ளுங்கள்" என்றார்.

இந்தக் கட்டளையானது, அவர்களைப் பரீட்சிக்கும் என்று யோசேப்பு அறிந்திருந்தார். பென்யமீனை அடிமையாக விட்டுவிட்டு, தாங்கள் அடிமைத்தனத்தினின்று தப்பித்துக்கொண்டு, தங்கள் சொந்த குடும்பங்களினிடத்திற்குச் சென்றுவிடுவதில் அவர்கள் மகிழ்ச்சியடைவார்களா? யோசேப்பின் விஷயத்தில், அதாவது அவரை அடிமையாக விற்றுப்போட்டபோது, அவர்களிடமிருந்த அதே கல்லான இருதயந்தான், இன்னமும் அவர்களிடத்தில் காணப்படுகின்றதா? யோசேப்பின் விஷயத்தில் நடந்தது போலவே, இப்பொழுதும் அவர்கள் தங்கள் பரிதாபமான தகப்பனாருடைய சந்தோஷத்தையும், நலனையும் அலட்சியப்படுத்தப் போகின்றார்களா?

பாதுகாப்பாய்ப் பென்யமீனைத் திரும்பக் கொண்டுவருவதாக தனது தந்தையினிடத்தில் உத்தரவாதம் அளித்து வந்திருந்த யூதா, யோசேப்பிடம் வேண்டுகோள் வைத்தார். பென்யமீன் எப்படி எகிப்துக்குக் கொண்டுவரப்பட்டார் என்பதையும், எப்படித் தங்கள் முதிர்வயதான, பரிதாபமான தகப்பன் பென்யமீன் மீது அன்பு வைத்திருக்கின்றார் என்பதையும், தான் எப்படிப் பென்யமீனை மீண்டும் திரும்பக் கொண்டுவருவதாக உத்தரவாதம் அளித்துள்ளார் என்பதையும் யூதா விளக்கினார். தான் அடிமையாக வைக்கப்படுவதற்கும், தனது சகோதரனாகிய பென்யமீன் போகும்படிக்கு அனுமதிக்கப்படுவதற்குமான கெஞ்சுதலுடன் யூதா மன்றாடினதாவது, "இளையவன் தன் சகோதரரோடேகூடப் போகவிடும்படி மன்றாடுகிறேன்; உம்முடைய அடியானாகிய நான் இளையவனுக்குப் பதிலாக இங்கே என் ஆண்டவனுக்கு அடிமையாயிருக்கிறேன். இளையவனை விட்டு, எப்படி என் தகப்பனிடத்துக்குப் போவேன்? போனால் என் தகப்பனுக்கு நேரிடும் தீங்கை நான் எப்படிக் காண்பேன் என்றான்" (ஆதியாகமம் 44:33, 34).

இருதயம் மாற்றம் அடைந்துள்ளதற்கான ஆதாரங்கள் யோசேப்பிற்கும், நம் அனைவருக்கும் இங்குத் திருப்திகரமாய் இருக்கின்றது. பாவத்தை விரும்புபவர்கள் பாவத்தில் களிக்கூருவது போன்று, நீதியை விரும்புகின்ற அனைவரும் நீதியில் களிக்கூருகின்றவர்களாய்க் காணப்படுவார்கள். இப்படியான ஒரு மாற்றத்தை நாம் இந்த மனிதர்களிடத்தில் உணர்ந்துகொள்ளும்போது, நாம் அவர்களுக்காக மாத்திரம் களிக்கூராமல், அவர்களது அனுபவங்களானது கொடுக்கின்ற பொதுவான படிப்பினைகளின் நிமித்தமாகவும் களிக்கூருகின்றோம். தற்காலத்தின் பாவங்களில் பெரும்பான்மையானவைகள்,

கீழ்த்தரமான நடத்தைகளில் பெரும்பான்மையானவைகள், கொடூரங்களில் பெரும்பான்மையானவைகள், சுதந்தரிக்கப்பட்ட பெலவீனங்கள் மற்றும் போதிய அனுபவம் இல்லாமையின் காரணமாகவே நிகழ்கின்றன என்ற நம்பிக்கையில் நாம் காணப்படுகின்றோம். நாம் நம்மைப் பற்றியும் மற்றும் ஒருவருக்கொருவரையும் நன்கு, ஆழமாய் மற்றும் தெளிவாய்ப் புரிந்துகொள்வோமானால், எத்தகைய ஒரு பெரிய மாற்றமே நடந்திருக்கும் என்று நாம் நமக்குள்ளே சொல்வதுண்டு.

ஜீவியத்தின் அன்றாட அனுபவங்களானது, நம்முடைய இரக்கத்தன்மையை விரிவாக்கி, இப்படியாகக் குணலட்சணத்தை வளர்க்கின்றதல்லவா? இது உண்மையாய் இருக்கின்றது என்று நாம் நம்புகின்றோம். அனைத்துக் கொள்கைகளின் விஷயத்திலும் மறுப்பிற்கிடமான காரியங்கள் உண்டு என்பதில் ஐயமில்லை என்றாலும், நம்முடைய சந்ததியிலுள்ள ஒவ்வொரு அங்கத்தினனும், அவ்வப்போதாகிலும் நல்லதும், உண்மையானதும், தூய்மையானதும், சிறந்ததுமானவைகளை உணர்ந்துகொள்வதற்கு அனுமதிக்கப்படுமளவுக்குப் போதுமான தேவ சாயலானது இன்னமும் ஒவ்வொரு அங்கத்தினனிலும் காணப்படவே செய்கின்றது என்பதே நம்முடைய நம்பிக்கையாய்க் காணப்படுகின்றது. அவன் பாவத்தினாலும், சுயநலத்தினாலும் சூழப்பட்டிருக்கின்றபடியினாலேயே, இந்தத் தேவனுக்கொத்த உணர்வுகளானது, மிகவும் அபூர்வமாய்ச் செயல்படுத்தப்படுகின்றது.

ஒவ்வொரு மனிதனுக்கும் தற்கால அனுபவங்களின் கீழாக நூறு வருடங்கள் கொடுக்கப்பட்ட பிற்பாடு, புதியதாய் வாழ்க்கையை ஆரம்பிப்பதற்கான வாய்ப்புக்கொடுக்கப்பட்டால், கிட்டத்தட்ட அனைவருமே அனுபவங்களினால் மிகவும் பலனடைந்து, தெளிந்த மனதுடன் வாழ்பவர்களாகவும், நேர்மையான வாழ்க்கை வாழ்பவர்களாகவும் இருப்பார்கள் என்று யூகிப்பது நியாயமாய்த் தோன்றுகின்றது. கிட்டத்தட்ட அனைவருமே மிகவும் பெருந்தன்மை உடையவர்களாகவும், மிகவும் நீதியாயும் காணப்படுவார்கள் என்று எண்ணுகின்றோம். ஆட்சேபம்/மறுப்புகள் இருக்கும் என்பதை நாம் ஒத்துக்கொள்கின்றோம். தற்கால சூழ்நிலைகளின் கீழ் மனித ஜீவியத்தை (மரணத்தின் மூலம் கால) வரையறைக்குள்ளாக்கும் தெய்வீக ஏற்பாடானது, மிகவும் ஞானமான காரியம் என்ற கருத்தை நாங்கள் தெரிவிப்பதை யாரும் தடைப்பண்ணிட முடியாது.

மனித குடும்பத்தின் அங்கத்தினர்கள் சிலர் சுயநலமான தன்மைகளை மாத்திரம் வளர்க்கின்றவர்களாகவும், மிகவும் அரிதாக நல்ல தன்மைகளை/உணர்வுகளைச் செயல்படுத்துகின்றவர்களாகவும் இருக்கின்றனர். இப்படியான நபர்களை, ஒரு நூற்றாண்டிற்கு மேலாக வாழ அனுமதிப்பது என்பது, தங்கள் சக மனிதர்களைச் சுயநலத்துடன் அடிமைப்படுத்துவதற்குரிய வாய்ப்புகளை இவர்களுக்கு அதிகம் கொடுக்கின்றதாய் இருக்கும். "நீதி ஜனத்தை உயர்த்தும்; பாவமோ எந்த ஜனத்துக்கும் இகழ்ச்சி" என்றுள்ள ஞானியினுடைய வார்த்தைகளின் அடிப்படையில், தேவன் நம்முடைய சந்ததியிலுள்ள ஒவ்வொரு அங்கத்தினனுக்கும் விலையேறப்பெற்றப் பாடங்களைக் கொடுப்பதற்கு ஞானமும், வல்லமையையும் கொண்டவராக இருக்கின்றார் (நீதிமொழிகள் 14:34).

## "மனிதர்கள் எப்போது பயனடைவார்கள்?"

ஆனால் சிலர் பின்வருமாறு கேட்கலாம்: "ஜீவியத்தின் சோதனைகளும், அடிகளும், அதாவது விவேகமான அடிகளும், மனிதனுக்குப் பாவத்தினுடைய தீங்கையும், நீதியிலுள்ள ஞானத்தையும் குறித்துக் கற்பிக்கின்றது என்று ஒத்துக்கொள்கின்றோம்; மேலும் யோசேப்பின் சகோதரர்களைப் போன்று, நமது சந்ததியாரும் ஏற்றவேளைகளில் இந்த மாபெரும் பாடம் தொடர்புடையதானச் சிலவற்றைக் கற்றுக்கொள்வார்கள் என்பதையும் ஒத்துக்கொள்கின்றோம், ஆனால் இயேசுவின் அடிச்சுவடுகளில், சுயத்தைப் பலிச்செலுத்தும் உடன்படிக்கையின் கீழ் நடந்து செல்லும் பரிசுத்தவான்களாகிய சிலர் மாத்திரமே, இராஜ்யத்தின் மகிமையான பலனில் பங்கடைபவர்களாய் இருப்பார்களானால், நமது சந்ததியினர் இப்படியான பாடம் கற்றுக்கொள்வதிலுள்ள பயன் என்ன? நமது சந்ததியில் பரிசுத்தவான்கள் தவிர மீதமுள்ளவர்களுக்கான நம்பிக்கை அனைத்தையும், மரணம் முற்றுப் பெறச் செய்யுமானால், இவர்கள் எப்படித் தங்கள் அனுபவங்களினால் பயனடைவார்கள்? பாடங்களைக் கற்றுக்கொள்வதற்கு முன்னதாக மரித்துப்போகின்றவர்கள் அல்லது பரிசுத்தவான்கள்

ஆகாதவர்கள் அல்லது தேவனுடைய இராஜ்யத்திற்குத் தகுதியாகுவதில் தவறுகின்றவர்கள் விஷயத்தில் ஜீவியத்தின் பாடங்கள் எப்படி உபயோகப்படும்?"

வேதத்தின் போதனைகள் தொடர்புடைய விஷயத்தில் நாம் அனைவரும் தவறு செய்துள்ளோம் என்பதே பதிலாகும். நாம் மரணத்தில் நித்திரைக்குள்ளாகும்போது, இரட்சிப்படைவதற்கான நம்பிக்கை அனைத்தும் முற்றுப்பெறுகின்றது என்று வேதாகமம் எங்குமே தெரிவிப்பதில்லை. சபை வகுப்பார் தொடர்புடைய விஷயத்தில், மரணமானது தகுதிக்காண் தேர்விற்கு அவர்கள் உட்படுத்தப்படும் காலத்தை முற்றுப்பெறச் செய்கின்றது. ஆனால் இப்படியாக உலகத்தாரின் விஷயத்தில் இருப்பதில்லை. சபை, உலகத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு, பொதுவான மனுக்குலத்திற்கு முன்னதாகவே, நித்திய ஜீவன் அல்லது நித்திய மரணம் பெற்றுக்கொள்வதற்கான பரீட்சைக்கு உட்படுத்தப்பட்ட விசேஷித்த வகுப்பாராய் இருக்கின்றனர் என்று அப்போஸ்தலன் காண்பித்துத் தருகின்றார். இவர்கள் உண்மையுள்ளவர்களாய் இருப்பார்களானால், இவர்கள் நித்தியமான ஜீவனை மாத்திரம் அல்லாமல், மனித தளத்தைக் காட்டிலும் உயர்வான தளத்தில் அந்த ஜீவனைப் பெற்றுக்கொள்பவர்களாய் இருப்பார்கள். இவர்கள் ஆவிக்குரிய ஜீவிகளாக, பூரணத்தை உயிர்த்தெழுதலில் அடைகின்றவர்களாய் இருப்பார்கள்.

இந்தச் சபை வகுப்பாருக்கே, ஒருவேளை அவர்கள் துணிகரமாய்ப் பாவஞ்செய்யும் பட்சத்தில், மரணமானது அனைத்தையும் முற்றுப்பெறச் செய்திடும் என்று அப்போஸ்தலன் சுட்டிக்காண்பிக்கும் விதத்தில், "மாம்சத்தின்படி பிழைத்தால் சாவீர்கள்; ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை அழித்தால் பிழைப்பீர்கள்" என்று கூறியுள்ளார் (ரோமர் 8:13). இவ்வசனத்தில் இடம்பெறும் "சாவீர்கள்" மற்றும் "பிழைப்பீர்கள்" என்பதானது சபையைக் குறிக்கின்றதே ஒழிய, உலகத்தாரையல்ல.

மீண்டுமாக, "சத்தியத்தை அறியும் அறிவை அடைந்தபின்பு நாம் மனப்பூர்வமாய்ப் பாவஞ்செய்கிறவர்களாயிருந்தால், பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொருபலி இனியிராமல், நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பார்க்குதலும், விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும்" என்றும், "ஏனெனில், ஒருதரம் பிரகாசிப்பிக்கப்பட்டும், பரமஈவை ருசிபார்த்தும், பரிசுத்த ஆவியைப் பெற்றும், தேவனுடைய நல்வார்த்தையையும் இனிவரும் உலகத்தின் பெலன்களையும் ருசிபார்த்தும், மறுதலித்துப்போனவர்கள், தேவனுடைய குமாரனைத் தாங்களே மறுபடியும் சிலுவையில் அறைந்து அவமானப்படுத்துகிறபடியால், மனந்திரும்புதற்கேதுவாய் அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாதகாரியம்" என்றும் அப்போஸ்தலன் தெரிவிக்கின்றார் (எபிரெயர் 10:26, 27; 6:4-6).

இந்த வேதவாக்கியங்களும், சபைக்கு மாத்திரமே விசேஷமாய்ப் பொருந்துகின்றதாய் இருக்கின்றது, ஏனெனில் சபை மாத்திரமே இப்பொழுது/தற்காலத்தில் பரீட்சையின் கீழ்க் காணப்படுகின்றனர். உலகமானது பரீட்சைக்கு உட்படுத்தும் காலமானது, அடுத்த யுகத்திலாகும். கிறிஸ்துவினுடைய ஆயிரவருட காலமானது, உலகத்திற்கான ஆயிரவருட நியாயத்தீர்ப்பு நாளாகக் காணப்படுகின்றது. அப்போதுதான் மனுக்குலம் அனைவரும் நித்திய ஜீவனுக்குப் பாத்திரமானவர்களா அல்லது இல்லையா என்று முடிவு பண்ணப்படுவார்கள். பாத்திரமானவர்கள் என்று கண்டுகொள்ளப்படுகின்ற அனைவரும் இறுதியில் பூரணப்படுத்தப்பட்டு, நித்திய ஜீவன் எனும் தெய்வீக ஆசீர்வாதத்தை அருளப்பெறுவார்கள். உலகத்தினுடைய நியாயத்தீர்ப்பின்/ பரீட்சையின் நாளில் அபாத்திரர்கள் என்று கண்டுகொள்ளப்படுபவர்கள், ஜீவன் பெறுவதற்கு அபாத்திரர்கள் என்று தீர்க்கப்பட்டு, இரண்டாம் மரணம் எனும் தண்டனை வழங்கப்படுவார்கள்.

தற்கால ஜீவியத்தின் நல்லதும், கெட்டதுமான அனுபவங்களானது, உலகத்தினுடைய எதிர்கால பரீட்சையில் தாக்கத்தை ஏற்படுத்தும், ஆனால் எவருக்கும் அது காரியங்களை நிர்ணயிக்கின்றதாய் இருக்காது. தற்காலத்தின் வாய்ப்புகளையும், அறிவையும் தவறாய்ப் பயன்படுத்துவதினால், சிலர் தவறாய்ப் பயன்படுத்தினதற்கேற்ப அநுகூலங்கள் அற்றவர்களாய் எதிர்கால ஜீவியத்திற்குள்ளும், அதன் நியாயத்தீர்ப்புகளுக்குள்ளும் பிரவேசிக்கின்றவர்களாய் இருப்பார்கள். அவர்களுக்கான அநுகூலமற்ற நிலை என்பது தற்காலத்தின் தவறுகளுக்கான அடிகளாகவும், சிட்சைகளாகவும் இருக்கும். தற்கால ஜீவியத்தினுடைய சிரமங்கள் மற்றும் சோதனைகளினால் சரியாய்ப் பயிற்சியளிக்கப்பட்டவர்களோ, யோசேப்பின் சகோதரர்கள் போன்று, இவைகளினால் மிகவும் இரக்கமுடையவர்களாகவும்,மிகவும்

அன்புடையவர்களாகவும், மிகவும் சாந்தமானவர்களாகவும், மிகவும் நேர்மையானவர்களாகவும் ஆக்கப்படுகின்றனர்; இப்படியாக இவர்கள் மேசியாவின் இராஜ்யமாகிய மகா நியாயத்தீர்ப்பின் நாளினுடைய பரீட்சைகளில் பிரவேசிப்பதற்கு நன்கு ஆயத்தம் பண்ணப்பட்டவர்களாய்க் காணப்படுவார்கள்.

யோசேப்பை எகிப்தின் அடிமைத்தனத்திற்குள் விற்றுப்போட்ட அவரது சகோதரர்களுக்கு, யோசேப்பு நியாயாதிபதியாக இருந்ததுபோன்று, கிறிஸ்துவாகிய இயேசுவும், சபையும் உலகத்திற்கான நியாயாதிபதிகளாகக் காணப்படுவார்கள்; "பரிசுத்தவான்கள் உலகத்தை நியாயந்தீர்ப்பார்களென்று அறியீர்களா?" என்று அப்போஸ்தலன் குறிப்பிட்டுள்ளார் (1 கொரிந்தியர் 6:2).

தனது சகோதரர்கள் தனக்கு முற்காலத்தில் செய்த காரியங்களின் அடிப்படையில் யோசேப்பு நியாயந்தீர்க்காமல், மாறாக தற்போது அவர்களிடத்தில் காணப்பட்ட இருதயத்தினுடைய நிலைமையின் அடிப்படையில் நியாயந்தீர்த்ததுபோலவே, எதிர்காலத்திலுள்ள உலகத்தாரின் நியாயத்தீர்ப்பானது, முற்காலங்களிலுள்ள அவர்களின் தவறான இருதய நிலையைக் கருத்தில் எடுத்துக்கொள்ளாமல், மாறாக நியாயத்தீர்ப்பின் காலகட்டங்களின்போதுள்ள அவர்களுடைய இருதய நிலைமையே கருத்தில் எடுத்துக்கொள்ளப்படுகின்றதாய் இருக்கும். எனினும் நீதியின் கொள்கையும் தொடர்ந்து செயல்படுகின்றதாய் இருக்கும்; பாவம் செய்பவர்கள் கஷ்டம் அநுபவிப்பார்கள். யோசேப்பின் சகோதரர்கள் யோசேப்புக்குச் செய்த தவறுகள் நிமித்தம் கஷ்டம் அநுபவித்தார்கள் மற்றும் அவர்கள் தங்களுக்கு வந்த பல்வேறு உபத்திரவங்களை, தாங்கள் பல வருடங்களுக்கு முன்பாகச் செய்திருந்த மாபெரும் பாவத்துடன் சம்பந்தப்படுத்தி பார்த்தவர்களாகவே காணப்பட்டனர். இப்படியாகவே மனுக்குலத்தின் விஷயத்திலும் காணப்படும். ஒவ்வொரு பாவமும், ஒவ்வொரு மீறுதலும் நீதியான பலனைப் பெற்றுக்கொள்ளும், ஆனால் அநீதியான பலனையோ, நித்தியமான சித்திரவதையோ பெற்றுக்கொள்வதில்லை.

மனுக்குலத்தின் நல்ல கிரியைகளும், தீமையான கிரியைகளும், அவர்களது குணலட்சணத்திலும், மனப்பான்மையிலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றதாய்க் காணப்படுகின்றது மற்றும் அந்தக் குணலட்சணமும், மனப்பான்மையும் மரணம் எனும் நித்திரையில் தொலைந்துபோவதில்லை. தங்கள் பிரேத குழிகளில் காணப்படுகின்ற அனைவருக்கும் ஓர் உயிர்த்தெழுதல் உள்ளது. அவர்கள் அனைவரும், மனுஷகுமாரனுடைய சத்தத்தைக் கேட்டு, தங்கள் தங்கள் வரிசையின்படி வெளிவருவார்கள். பரிசுத்தவான்கள் உலகத்திற்கான நியாயாதிபதிகளாகக் காணப்படத்தக்கதாக, ஆயிரவருட யுகத்தின் ஆரம்பப் பகுதிகளில், ஜீவனுக்கான பூரணத்திற்குள் கடந்து வருவார்கள். பரிசுத்தவான்கள் அல்லாதவர்களும், சத்திய அறிவிற்குள்ளாகக் கொண்டுவரப்படத்தக்கதாக, (மரணத்திலிருந்து) கொண்டுவரப்படுவார்கள். அனைவரும் தங்கள் கடந்த காலத்தின் கிரியைகள் மற்றும் கற்றுக்கொண்ட படிப்பினைகளினால் நன்மை அடைவதற்கும், மேசியாவினுடைய இராஜ்யத்தின் மகிமையான ஒளியினாலும்/வெளிச்சத்தினாலும் நன்மை அடைவதற்கும் வாய்ப்புப் பெற்றுக்கொள்வார்கள்; மேசியாவினுடைய இராஜ்யத்தின் இந்த மகிமையான வெளிச்சமானது, அனைத்து அறியாமையையும், மூடநம்பிக்கைகளையும், இருளையும் அகற்றிப்போட்டு மற்றும் நித்திய ஜீவனிடத்திற்கும், தேவனிடத்திலான ஐக்கியத்திற்கும் திரும்பிவருவதற்கான வழியில் வெளிச்சம் வீசுகின்றதாய் இருக்கின்றது.

நம்முடைய பாடத்தின் ஆதார வசனமானது, சரீரப்பிரகாரமான சொஸ்தமாக்குதலைக் குறிப்பதாகச் சிலரால் கருதப்படுகிறது. ஆனால் இந்த வார்த்தைகளானது, ஆவிக்குரிய குணமாக்குதலை விசேஷமாய்க் குறிக்கின்றது என வேறுசிலர் புரிந்துகொண்டுள்ளனர். இந்த ஆவிக்குரிய குணமாக்குதல்களைக் குறித்துச் சங்கீதக்காரன், "அவர் உன் அக்கிரமங்களையெல்லாம் மன்னித்து, உன் நோய்களையெல்லாம் குணமாக்கி, உன் பிராணனை அழிவுக்கு விலக்கி மீட்டு, உன்னைக் கிருபையினாலும் இரக்கங்களினாலும் முடிசூட்டி, நன்மையினால் உன் வாயைத் திருப்தியாக்குகிறார்" என்று குறிப்பிடுகின்றார் (சங்கீதம் 103: 3, 4). தங்கள் பாவங்களைத் தங்களிடமிருந்து மறைத்து, கர்த்தரிடமிருந்தும் மறைப்பதற்குச் சிந்திப்பவர்கள் மகா தவறு செய்கின்றவர்களாக இருக்கின்றனர் மற்றும் இப்படிப்பட்டவர்கள் எந்த முன்னேற்றமும் அடைவதில்லை.

[R5225]

# “விதைத்தலும், அறுத்தலும்”
## ஆதியாகமம் 42-ஆம் அதிகாரம்

“மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்.” ¯கலாத்தியர் 6:7

யோசேப்பு மற்றும் அவரது சகோதரர்களின் கதையைப் பார்க்கவிருக்கின்றோம். பொறாமையினால் ஏவப்பட்டதினிமித்தம் தங்கள் சகோதரனுக்குச் செய்திட்ட கொடூரங்கள் பற்றின ஞாபகங்களானது, எவ்வாறு தீமை செய்தவர்களைப் பல வருடங்களாகக் கஷ்டப்படுத்திக் கொண்டுவந்தது என்பது பற்றி இன்றைய பாடமானது விளக்கப்போகின்றதாய் இருக்கின்றது. நம்முடைய ஆதார வசனமானது, தேவனுடைய அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்களுக்கு மாத்திரமல்லாமல், பொதுவான மனுக்குலத்திற்கும்கூட ஒரு பொதுவான கொள்கையாக அமைகின்றது. துணிகரமாயும், அறிந்து உணர்ந்த நிலையிலும், எவராகிலும் விதைக்கப்படுகின்ற எதுவும், நல்லது (அ) தீயதான அறுவடை ஒன்றைக் கொண்டுவரும்.

பஞ்சமானது உலகத்தின் அந்தப் பாகம் முழுவதும் பரவலாகக் காணப்பட்டது. பாலஸ்தீனியாவையும், எகிப்தையும் உள்ளடக்கின நிலையில் பஞ்சம் காணப்பட்டது. எகிப்தில் உணவு பற்றாக்குறை இல்லை என்றும், அங்குத் தானியங்கள் உள்ளது என்றும், மிதமான விலைகளில் தானியங்கள் அங்கு விற்பனை பண்ணப்படுகின்றது என்றும், தானியங்கள் எகிப்தில் முன்னமே சேகரித்து வைக்கப்பட்டன என்றுமுள்ளதான செய்தி பரவியது. சொந்தமாகத் தனித்தனி குடும்பங்களைப் பெற்றிருந்த தனது குமாரர்களை நோக்கி, எகிப்துக்குப் போய்க் கோதுமையை விலைக்கு வாங்கி வரும்படிக்கு யாக்கோபு கட்டளையிட்டார்.

இவர்கள் எகிப்தியராய் இராமல் அந்நியர்களாய் இருந்தபடியால், இவர்கள் யோசேப்பினிடத்திற்குக் கொண்டு செல்லப்பட்டார்கள்; யோசேப்பு இவர்களுக்காகக் காத்துக் கொண்டிருந்திருப்பார் என்பதில் ஐயமில்லை. யோசேப்பு துபாசி வழியாய் இவர்களிடத்தில் பேசி, இவர்கள் சேனையோடு வந்து கோதுமையைத் திருடிப்போகத்தக்கதாக, எகிப்தில் எவ்வளவு கோதுமை காணப்படுகின்றதெனப் பார்ப்பதற்கு வந்திட்ட வேவுகாரர்களாக இருக்கின்றார்களா என்று வினாவினார். இவர்கள் தங்கள் நிலவரத்தை உண்மையாய் விவரித்தார்கள். யோசேப்பு தனது தந்தையைக் குறித்தும், தனது இளைய சகோதரனாகிய பென்யமீனைக் குறித்தும் விசாரித்துக் கொண்டார். இறுதியில் இவர்களில் ஒருவரைச் சிறையில் அடைத்து, மீதமானவர்களைத் தானியங்களுடன் அனுப்பி வைத்தார்; அதுவும் இவர்களுக்கு இன்னும் தானியம் தேவைப்படும் என்றும், இவர்கள் தங்கள் இளைய சகோதரனைக் கொண்டுவந்து, தாங்கள் வேவுகாரர்கள் இல்லை என்று நிரூபிக்கும் பட்சத்தில், பஞ்சம் முடிவது வரையிலும் திரளான தானியங்களை வாங்கிச் செல்லலாம் என்றும் இவர்களுக்குப் புரியவைத்து அனுப்பினார். அதுவரையில் சிமியோன் பிணைக் கைதியாக வைக்கப்பட்டார்.

இந்தச் சகோதர்களுடைய குற்ற மனசாட்சியானது, தங்களுக்கு வந்திட்ட பல்வேறு அனுபவங்களை, முற்காலத்தில் தாங்கள் செய்திட்ட தவறுகளுடன் சம்பந்தப்படுத்த ஆரம்பித்தது. "நம்முடைய சகோதரனுக்கு நாம் செய்த துரோகம் நம்மேல் சுமந்தது; அவன் நம்மைக் கெஞ்சி வேண்டிக்கொண்டபோது, அவனுடைய மன வியாகுலத்தை நாம் கண்டும், அவனுக்குச் செவிகொடாமற்போனோமே; ஆகையால், இந்த ஆபத்து நமக்கு நேரிட்டது என்று ஒருவரை ஒருவர் பார்த்துச் சொல்லிக்கொண்டார்கள். யோசேப்பு துபாசியைக்கொண்டு அவர்களிடத்தில் பேசினபடியால், தாங்கள் சொன்னது அவனுக்குத் தெரியும் என்று அறியாதிருந்தார்கள்” (ஆதியாகமம் 42:21, 23). யோசேப்பு அவர்களை விட்டு அப்புறம் போய் அழுதார். அவருடைய இருதயமானது, கடினமானதாக இருக்கவில்லை. இன்னும் வரவிருக்கின்ற வருடங்களில் அவர்களுக்கு நன்மை பயக்கின்றதான ஒரு படிப்பினையை மாத்திரமே யோசேப்பு அவர்களுக்குக் கொடுத்தவராய்க் காணப்பட்டார்.

மேசியாவின் இராஜ்யமானது, அதன் ஆசீர்வாதங்களைப் பொழியும்போது, நிஜமான யோசேப்பாகிய மேசியாவும், ஜனங்களிடத்தில் மகா உபத்திரவக் காலத்தின்போது யோசேப்பைப் போன்று கடுமையாகப் பேசிடுவார் என்றும், என்ன சம்பவிக்கப்போகின்றதோ என்று கவலைக்கொள்ளவும், மிகுந்த மனவேதனை அடையவும் அனுமதித்திடுவார் என்றும் வேதவாக்கியங்கள் தெரிவிக்கின்றன. ஆனால் இப்படியாகக் கர்த்தர் கடுமையாகக் காணப்படும் வேளைகளில், அவரது இருதயமானது, தவிக்கும் சிருஷ்டியின் மீது முழுக்க அன்பும், அனுதாபமும் கொண்டிருக்கும்; இந்தத் தவிக்கும் சிருஷ்டிக்காகவே அவர் ஏற்கெனவே மரித்திருக்கின்றார் மற்றும் இவர்களுடைய நலனுக்காகவே அவரது இராஜ்யமும் ஸ்தாபிக்கப்படுகின்றது. மேசியாவின் ஆளுகையினுடைய ஆரம்பத்தின் போது காணப்படும் உலகத்தின் மீதான உபத்திரவக் காலமானது, கர்த்தர் அருளுவதற்குச் சித்தங்கொண்டுள்ள ஆசீர்வாதங்களுக்காக, மனுக்குலத்தின் இருதயங்களை ஆயத்தம் பண்ணுகிறதற்காகவே என்பது நிச்சயமே.

## "அநேகம் அடிகள் மற்றும் கொஞ்சம் அடிகள்"

யாக்கோபின் பத்துக்குமாரர்களும் தங்கள் கோதுமை தானியத்துடன் திரும்பிவந்த போது, அவர்கள் தங்களுக்கு ஏற்பட்ட அனுபவம் அனைத்தையும், தங்கள் தகப்பனிடத்தில் கூறினார்கள். ஏன் தங்களுடன் சிமியோன் காணப்படவில்லை என்பதையும், சிமியோன் பிணைக் கைதியாக வைக்கப்பட்டிருக்கின்றார் என்பதையும் விவரித்தார்கள். இன்னுமாகக் கோதுமைக்கான பணம் வாங்கப்படாததைக் கண்டபோது, அவர்கள் திகைத்துப் போனார்கள். அவர்கள் விலையாகச் செலுத்தியிருந்த பணமானது, தங்கள் ஒவ்வொரு சாக்கிலும் திருப்பிச் செலுத்தப்பட்டிருந்தது/ வைக்கப்பட்டிருந்தது. அனைத்தும் அவர்களுக்கு விநோதமாகக் காணப்பட்டது மற்றும் அந்தச் சகோதரர்களின் மனங்களின் கவனமானது அவர்களது சகோதரனாகிய யோசேப்பின் விஷயத்தில் அவர்கள் பல வருடங்களுக்கு முன்னதாகச் செய்திருந்த குற்றத்தின் மீது திரும்பினது. யோசேப்பிற்குக் குற்றம் புரிந்தது முதல், இதுவரைக்கும் இடைப்பட்ட வருடங்களில், தங்கள் சகோதரனுக்குத் தாங்கள் செய்தது போன்று எத்தகைய ஓர் உபத்திரவத்தை நீதியுள்ள தேவன் தங்களிடத்தில் அனுமதிக்கப்போகின்றார் என்பது தொடர்புடையதான பயம் கலந்த அனுமானங்கள் மற்றும் துக்கங்கள் எனும் கதிர்களை அவர்கள் அநேகந்தரம் அறுத்தார்கள்.

இந்தக் கொள்கையானது பொதுவாய் அங்கீகரிக்கப்படுமானால், அதாவது ஒவ்வொரு மீறுதலுக்கும், நீதியான பலனுண்டு! எனும் தேவ வார்த்தையினுடைய உண்மைத் தன்மையை அனைவரும் உணர்ந்துகொள்வார்களானால், ஒட்டுமொத்த மனுக்குலத்திற்கும் அது எவ்வளவு நன்மை பயக்கின்றதாய் இருக்கும். பரவிக்கிடக்கும் மிகவும் தவறான உபதேசங்களுடைய மூடுபனியில், நாம் நீதியைப் பற்றின மேற்கூறப்பட்டுள்ள உணர்ந்துகொள்ளுதலையும், தவறு செய்தமைக்கான நீதியான தண்டனைப்பற்றின எதிர்ப்பார்த்தலையும் இழந்துபோயுள்ளோம். இந்தத் தவறான உபதேசமானது, அனைத்துப் பாவங்களுக்கும் ஒரே ஒரு தண்டனையைச் சாற்றுகின்றது, அதுவும் நினைத்துப் பார்க்கக்கூட முடியாத தண்டனையை, அதாவது நித்திய சித்திரவதையைச் சாற்றுகின்றது. எத்தனை சொற்பமானவர்கள் மாத்திரமே, இந்த உபதேசத்தை நம்புகின்றார்கள் அல்லது அதனால் உண்மையாய்த் தாக்கத்திற்குள்ளாகிக் காணப்படுகின்றார்கள் என்பது முதலாவது கவனிக்கப்படத்தக்கதாகும்! இவ்வுபதேசத்தின் இரக்கமற்ற தன்மையானது, இதை நம்பத் தகாததாக்குகின்றது மற்றும் தேவன் முன்னறிவித்துள்ள உண்மையான தண்டனைகளைப் பற்றின சரியான கண்ணோட்டத்திலிருந்து மனதைத் திசைத்திருப்பிவிடுகின்றதாய் இருக்கின்றது.

இந்த முதலாம் முரண்பாடு மற்றும் இதன் தீமையான பலனோடுகூட, இன்னும் காணப்படும் முரண்பாடுகள் பின்வருமாறு: சபையில் அங்கத்துவம் வகிப்பதன் மூலமாக, நித்திய சித்திரவதைக்குத்தப்பி, கொஞ்சம் குறைவான சித்திரவதையை அடையலாம் என்று நமது கத்தோலிக்க நண்பர்கள் கூறுகின்றனர். இந்தக் கூற்றானது, புரோட்டஸ்டாண்டினரைக் காட்டிலும் மிகவும் நியாயமானதாகத் தோன்றுவதினால், இந்த இரண்டு தீங்குகளிலும், இது குறைவான தீங்காய் இருக்கின்றதென அநேகர் ஏற்றுக்கொள்கின்றனர். மரணத்திற்குக் கொஞ்சம் முன்னதாக, "தேவனே என்னை மன்னியும்!" என்று ஓர் ஆணோ (அ) பெண்ணோ கூறி உடனடியாகப் பரதீசுக்குச் செல்வார்கள்

என்பதும், பாவங்களுக்கான அனைத்துத் தண்டனைகளிலிருந்தும் தப்பிக்கொள்வார்கள் என்பதும் புரோட்டஸ்டாண்டின் கூற்றாகக் காணப்படுகின்றது. இந்தக் கூற்றுகள் அனைத்தும் பாதகமானதாகவும், முரண்பாடானதாகவும் காணப்படுகின்றதென நாம் கூறுகின்றோம். வேதவாக்கியங்களுடைய கூற்றானது, பிரசங்கிக்கப்பட்டு, விசுவாசிக்கப்படுமாகில், அது மிகவும் பயனுள்ளதாய் இருக்கும் என்பதில் நமக்கு நிச்சயமே.

வேதவாக்கியங்களினுடைய கூற்றானது, நம்முடைய ஆதார வசனத்தில் கொடுக்கப்பட்டுள்ளது; "மனுஷன் எதை விதைக்கிறானோ, அதையே அறுப்பான்." மனுஷன் ஒருவேளை கொடுமை செய்வதற்கான விருப்பத்தை, வஞ்சகமான வார்த்தைகளை, அநியாயத்தை, சுயநலத்தை, தீமை பேசுதலை, பழித்தூற்றுதலை விதைப்பானானால், இதற்கான அறுப்புக் காலத்தையும் அவன் நிச்சயமாய்க் கொண்டிருப்பான் மற்றும் அவன் விதைத்திருந்ததான விருப்பங்களுக்கு இசைவான பலன்களைச் சேகரித்துக்கொள்வான்.

தெய்வீக ஏற்பாட்டினை மேம்படுத்துவது/மாற்றி அமைப்பது என்பது மனுக்குலத்தினால் இயலாத ஒன்றாகும். ஆகையால் அனைத்துக் கிறிஸ்தவ ஜனங்களும் நீதியைக் குறித்தும், தேவனுடைய அன்பைக் குறித்தும் உலகத்திடம் சொல்வதற்குப் புதிதாய் ஆரம்பிக்க வேண்டும்; பாவத்திற்கு எதிரான தேவனுடைய நீதியான தண்டனை மரணம் என்றும், ஆனாலும் கிறிஸ்துவினுடைய ஆயிரவருட மேசியா ஆளுகையின்போது இந்தத் தண்டனையினின்று விடுவிக்கப்படுவதற்குக் கிறிஸ்து மூலமாய்த் தேவன் ஏற்பாடு பண்ணியுள்ளார் என்றும் உலகத்திடம் சொல்வதற்கு ஆரம்பிக்க வேண்டும். கிறிஸ்துவினுடைய ஆயிரவருட ஆளுகையின்போது, ஆதாமின் சந்ததியிலுள்ள ஒவ்வொரு அங்கமும், தேவனுடன் ஒப்புரவாகிடுவதற்கும், தந்தையாகிய ஆதாமின் பாவத்தினால் இழந்து போகப்பட்டதான தேவசாயலுக்கும், ரூபத்திற்கும் மீண்டுமாகச் சீர்ப்பொருந்திடுவதற்குமான முழு வாய்ப்பை அருளப்பெற்றுக்கொள்வார்கள்.

ஆனால் இதற்கிடையில் ஒவ்வொரு மனிதனும் தனது ஒவ்வொரு கிரியை, வார்த்தை மற்றும் எண்ணம் தொடர்புடைய விஷயத்தில் பொறுப்பாளியாகக் காணப்படுகின்றான். அவன் எந்தளவுக்கு வெளிச்சத்திற்கும், அறிவிற்கும், பொன்னான சட்டத்திற்கும் எதிராகப் பாவம் செய்கின்றானோ, அவ்வளவாய் அவன் தன் குணலட்சணத்தைச் சீரழிக்கின்றவனாய் இருக்கின்றான் மற்றும் இப்படியாக தேவசாயலுக்கும், ரூபத்திற்குமான திரும்பிவருதலுக்குரிய தனது வாய்ப்பினைச் சிரமம் நிறைந்த ஒன்றாக்குகின்றான். யாரொருவனுடைய மனசாட்சியானது மிகவும் சீரழிந்து போய்க் காணப்படுகின்றதோ, அவன் தனது போக்கினின்று திரும்புவதற்கான தனது வழியினை மிகவும் சிரமமானதாகவும், செங்குத்தானதாகவும் (ஏறுவதற்குக் கடினமானதாகவும்) இருப்பதை உணருவான்.

இந்தத் திவ்விய பிரமாணத்தின்படி, ஆயிர வருட அரசாட்சியின்போது, இன்று கிறிஸ்தவ தேசங்கள் என்று அழைக்கப்படும் தேசங்களிலுள்ள ஜனங்களைக் காட்டிலும், அந்நிய ஜனங்கள், பெரும்பாதையான வழியில் நடந்துச்செல்வதற்கு மிகவும் ஆயத்தமாய்க் காணப்படுவார்கள். கிறிஸ்தவ தேசங்கள் என்று அழைக்கப்படும் தேசங்களிலுள்ள ஜனங்கள் மிகுந்த வெளிச்சம், மிகுந்த சிலாக்கியம், மிகுந்த வாய்ப்பு உடையவர்களாய் இருந்து, மாபெரும் அறிவிற்கு எதிராய்ப் பாவம் புரிந்தவர்களாய் இருந்து, தங்கள் மனசாட்சிகளை மிக ஆழமாய் மழுங்கச் செய்துவிட்டவர்கள் ஆவார்கள். இப்படிப்பட்டவர்களிலுள்ள சிலரைக் குறித்தே, "நரகாக்கினைக்கு (இரண்டாம் மரணத்திற்கு) எப்படித் தப்பித்துக்கொள்வார்கள்?" என்று இயேசு குறிப்பிட்டுள்ளார்.

## "யாக்கோபின் நரைமயிர்கள் ஷீயோலுக்குள் இறங்குதல்"

கோதுமை அடுத்தமுறை வாங்க வேண்டுமானால், பென்யமீனும் செல்ல வேண்டும் என்பதைப் பாவப்பட்ட வயதான யாக்கோபு கேட்டபோது, இதற்கு அவர் மறுப்புத் தெரிவித்து, இது ஒருக்காலும் நடக்காது என்று கூறினார். யோசேப்பும் மரித்துவிட்டார் மற்றும் இப்பொழுது அவரது இளைய குமாரனாகிய பென்யமீனையும் அவர் இழந்துபோக நேரிட்டால், அந்தத் துயரமானது, அவரது நரைமயிரை வேகமாய் ஷீயோலுக்கு, அதாவது கல்லறைக்கு, அதாவது மரண நிலைக்குக் கொண்டு போய்விடுவதாக இருக்கும்.

நம்முடைய பொதுவான ஆங்கில வேதாகம மொழியாக்கத்தில், இந்த ஷீயோல் எனும் வார்த்தையானது, அடிக்கடி **hell, pit** மற்றும் **grave** என்று மொழிப்பெயர்க்கப்பட்டுள்ளது. முற்காலங்களில் இந்த மூன்று ஆங்கில வார்த்தைகளுமே, ஒரே பொருளை உடையவைகளாகக் காணப்பட்டது. உதாரணத்திற்கு ஒரு மனிதன் தான் உருளைக்கிழங்குகளைப் புதைப்பதைப் பற்றிக்கூறுகையில், புதைப்பதற்கு **"helling"** என்ற வார்த்தையைப் பயன்படுத்துவான். இந்த வார்த்தையானது, மனுக்குலம் தொடர்புடையதாகப் பயன்படுத்தப்படுகையில், சிலசமயம் சவக்குழி **(grave)** எனும் வார்த்தைப் பயன்படுத்தப்படுகின்றது. ஷீயோல் எனும் வார்த்தையானது 66 முறைகள் வேதாகமத்தில் இடம்பெறுகின்றதாய் இருக்கின்றது மற்றும் இவ்வார்த்தையானது பாதிக்கு மேற்பட்ட இடங்களில் குழி **(pit)** என்றும், பாதாளம் **(grave)** என்றும் மொழிப்பெயர்க்கப்பட்டுள்ளது.

ரிவைஸ்டு **(Revised)** மொழியாக்கம் ஆயத்தமாக்கப்பட்டுக் கொண்டிருந்தபோது, அவ்வேலையில் ஈடுபட்டிருந்த கல்வி அறிவுள்ள மனிதர்கள், ஷீயோல் எனும் வார்த்தையினை, (சவக்குழி எனும் அர்த்தத்தில்) **hell** என்று மொழிப்பெயர்த்திடுவதற்கு மறுப்புத் தெரிவித்தவர்களாய் இருந்தனர், ஏனெனில் இடைப்பட்ட நூற்றாண்டுகளில் அவ்வார்த்தையானது அதன் ஆதி அர்த்தத்தைப் படிப்படியாக இழந்துபோய், அக்கினியும், சித்திரவதையும் உள்ள இடம் எனும் அர்த்தத்தை உடையதாக மாறிவிட்டது. இப்படியான அர்த்தம் எதுவும் எபிரெய வார்த்தைக்கான ஷீயோலுக்கு இல்லாதிருப்பதினால், இந்த மொழிப்பெயர்ப்பாளர்கள், இப்படியான அர்த்தத்தில் ஆங்கிலத்தில் மொழிப்பெயர்ப்பதற்கு மறுத்தனர். இந்த உண்மைகள் பற்றின விஷயத்தை இவர்கள் அனைவரும் ஒப்புக்கொண்டனர், பின்னர் இவ்வார்த்தையானது என்னவாக மொழிப்பெயர்க்கப்பட வேண்டும் என்பதில் வாக்குவாதம் எழும்பினது. அனைவருமே ஒன்றுபோல் ஷீயோலை, **grave** (அ) **tomb** (பாதாளம்) எனும் ஆங்கில வார்த்தையாக மொழிப்பெயர்க்கும் விஷயத்தில், இப்படிச் செய்வது என்பது சில கிறிஸ்தவ ஜனங்களுக்கு அடிப்படைகளில் மாறுதல்கள் ஏற்பட்டுள்ளதுபோன்று தோன்றுமென அஞ்சி, இப்படியாக மொழிப்பெயர்க்கப்படுவதற்குச் சிலர் ஒத்துக்கொள்ளவில்லை.

இறுதியாக இந்த வாக்குவாதத்தை முடித்துவைப்பதற்கான சமாதான ஏற்பாடாக, நமது பொது **(common)** மொழியாக்கத்தில் எங்கெல்லாம் ஷீயோல் என்ற வார்த்தையும் மற்றும் அதற்கு இணையான கிரேக்க வார்த்தையாகிய ஹேடிசும், **hell** என்று மொழிப்பெயர்க்கப்பட்டுள்ளதோ, அங்கெல்லாம் எபிரெய வார்த்தையான ஷீயோல் (அ) கிரேக்க வார்த்தையான ஹேடிசுக்கும் மாற்று வார்த்தை போடப்பட்டு, மொழிப்பெயர்க்காமல் விட்டுவிடப்பட வேண்டும் என்ற முடிவு எடுக்கப்பட்டது; ஒருவேளை ஏதேனும் ஜனங்கள் அர்த்தத்தைக் கண்டுபிடிப்பார்களானால், பரவாயில்லை. ஒருவேளை எவரும் கண்டுபிடிக்கவில்லையெனில், அவர்கள் அறியாமையிலேயே இருந்து, ஷீயோல் மற்றும் ஹேடிஸ் என்பது சித்திரவதை ஸ்தலத்தைக் குறிப்பதாகவே எண்ணிக் கொண்டிருக்கட்டும் என்று முடிவு எடுக்கப்பட்டது. நமது பேப்டிஸ்ட் **(Baptist)** நண்பர்கள் சமீபத்தில் இதைப்போன்றதான சிரமத்தைச் சந்தித்தவர்களாகக் காணப்பட்டு, ஷீயோல் மற்றும் ஹேடிசை (கீழ் உலகம்) **"under world"** என்று மொழிப்பெயர்த்தனர். ஆம் இந்த வார்த்தையானது பாதாளத்தை, கல்லறையை, மரண நிலைமையைச் சுட்டிக்காட்டுவதாகத்தான் உள்ளது மற்றும் இவ்வார்த்தையில் எவரும் குற்றமும் கண்டுபிடிக்க முடியாது.

யாக்கோபு தனது நரைமயிர்கள், பாதாளத்திற்கு (ஷீயோலுக்கு) இறங்குவதாகக் கூறினபோது, தான் நித்தியமான சித்திரவதைக்குள் போவதாக தனது குமாரர்கள் புரிந்துகொள்ள வேண்டுமெனும் அர்த்தத்தில் கூறவில்லை என்பதை நாம் விளக்க வேண்டிய அவசியமில்லை. அவர் என்ன அர்த்தத்தில் கூறினார் என்பது தெளிவாய் உள்ளது. அவர் பின்வரும் அர்த்தத்தில் கூறினார்: அதாவது, "**என் குமாரர்களே, எனக்கு இப்பொழுது மிகவும் வயதாகிவிட்டது மற்றும் தலைமயிர் நரைத்துவிட்டது, மற்றும் நான் என்னுடைய இந்த இளைய குமாரனையும் இழப்பது என்பது, என்னுடைய மரணத்தைத் துரிதப்படுத்துகின்றதாய் இருக்கும்; அதாவது என் நரைமயிர்களை ஷீயோலுக்கு, கல்லறைக்குக்கொண்டு செல்வதாக இருக்கும்**" என்பதேயாகும். யாக்கோபினுடைய நரைமயிர்கள் எங்கே செல்லும் என்று யாரும் கேள்வி கேட்க அவசியமில்லை. யாக்கோபின் நரைமயிர்கள் இறுதியில் ஷீயோலுக்குச் சென்றன, ஆயினும் துக்கத்தின் காரணமாக அல்ல. யாக்கோபினுடைய முதிர்வயதானது,

அவரது குமாரர்களுடனான ஐக்கியத்தின் காரணமாகவும், யோசேப்பைத் தேவன் எகிப்தினுடைய அதிபதியாக மிகவும் உயர்வாய் உயர்த்தி வைத்துள்ளார் என்ற உணர்ந்துகொள்ளுதலின் காரணமாகவும் மிகவும் மகிழ்வுடன் காணப்பட்டது.

## "நம்முடைய ஆதார வசனத்தினுடைய படிப்பினை"

பரிசுத்தவானாகிய பவுல், நாம் இதுவரை பார்த்து வந்துள்ளதான பொதுவான கண்ணோட்டத்தை, அதாவது ஒரு மனுஷன் எதை விதைப்பானோ, அதையே அவன் அறுப்பான் என்பதை முன்வைத்திருந்தபோதிலும், இவ்வார்த்தைகளை அவர் குறிப்பாய்ச் சபையினுடைய அனுபவங்கள் தொடர்புடையதாகவே பயன்படுத்தியுள்ளார் என்பது நிச்சயமே. இவ்வசனத்தினுடைய முன், பின் பாகங்கள் சபைக்கே பொருந்துகின்றதாய் இருக்கின்றது. இவ்வசனத்தின் முன், பின் பாகங்களானது தேவனுடைய அர்ப்பணம் பண்ணப்பட்ட ஜனங்களுக்கு நேரடியாகப் பொருந்துகின்றதாய்க் காணப்பட்டு, கிறிஸ்துவுடன் மரிப்பதற்கான அர்ப்பணம் பண்ணுதல் மாத்திரம் போதாது என்று அவர்களுக்கு உறுதிப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. இன்னுமாக தேவன் தம்மைப் பரியாசம் பண்ணவொட்டார் என்றும், தேவனை ஏமாற்ற முடியாது என்றும், தேவனிடத்தில் விளையாட முடியாது என்றும் உறுதிப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. தேவன் நம்முடன் உடன்படிக்கைக்குள் பிரவேசித்திருக்கின்றாரெனில், நாமும் அதற்கு உடன்பட்டிருப்பதே ஏற்புடையதாகும்.

கர்த்தரோடு கிறிஸ்தவர்கள் பண்ணியுள்ள உடன்படிக்கையினை அப்போஸ்தலன் விவரிக்கின்றார். கிறிஸ்தவர்கள் தாங்கள் தேவனுக்குப் பிரியமானவர்களாகவும், அங்கீகரிக்கத்தக்கதாகவும் காணப்படுவதற்கு ஏதுவாயும் மற்றும் ஆவியின் ஜீவிகளென, கிறிஸ்துவுக்குள்ளான புதிய சிருஷ்டிகளெனத் திரைக்கு அந்தப் பக்கத்தில் அடையப்பெறும் அழியாக் காரியங்களில் இயேசுவுடன் உடன் சுதந்தரர்களாகுவதற்கு ஏதுவாயும், அனைத்துப் பூமிக்குரிய விஷயங்களையும், நம்பிக்கைகளையும், இலட்சியங்களையும் பலிச்செலுத்திடுவதற்கு உடன்படிக்கைப் பண்ணியுள்ளனர். "தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான்" என்று அப்போஸ்தலன் குறிப்பிடுகின்றார். ஆகையால் மாம்சத்தினுடைய சித்தத்திற்கென்று மரிப்பதற்கும், மற்றும் தேவனுடைய சித்தத்திற்கென்று பிழைப்பதற்கும் என்று தேவனுடன் இந்த உடன்படிக்கைக்குள் பிரவேசித்துள்ள ஒரு கிறிஸ்தவன், மாம்சத்தின்படி ஜீவிப்பானானால், அதாவது மாம்சத்தினுடைய விருப்பங்களுக்கும், அதன் தூண்டுதல்களுக்கும், அதன் வழிநடத்துதல்களுக்கும், அதன் ஆசைகளுக்கும் இசைவாக ஜீவிப்பானானால், அந்த மனிதனுடைய வழியின் முடிவானது மரணம், அதாவது எருசலேம் நகரத்திற்கு வெளியே கழிவுப்பொருட்களை அழித்துப்போடுகின்றதான கெஹன்னா நெருப்பினால் அடையாளப்படுத்தப்படும் இரண்டாம் மரணமாய் இருக்கும் என்று அப்போஸ்தலன் விவரிக்கின்றார்.

ஆனால் ஒரு மனிதன் ஆவிக்கென்று விதைத்தால், சரியான திசையை நோக்கின ஆரம்பத்தை மாத்திரம் எடுக்காமல், தனது அர்ப்பணத்தின் உடன்படிக்கைக்கு இசைவாக ஜீவிப்பதின் மூலமாக புதுச் சிருஷ்டிக்கு ஏற்றபடி ஜீவித்தானானால், இதற்கேற்ப அறுப்பவனாய் இருப்பான். இதுவரையிலும் வாழ்ந்ததிலேயே சிறந்த தேவ ஜனங்களாகக் காணப்பட்டவர்களில் சிலர், மாம்சத்தினுடைய சோதனையின் கீழ் ஏறக்குறைய கடுமையான பிழைகளைச் செய்திருக்கின்றனர். ஆனால் பாவத்திற்குள் இடறிவிழுதல் என்பது மாம்சத்திற்கேற்ப ஜீவித்தலாகாது; இது மாம்சத்திற்கேற்ப ஜீவித்தலுக்கான ஆரம்பமாக மாத்திரமே காணப்படும். தனது பாவம் மற்றும் பெலவீனம் காரணமான அனுபவங்களைச் சரியாய்ப் பெற்றுக்கொள்கின்றதான ஆத்துமாவானது, குணமடைந்து, பரலோகக் கிருபையின் சிங்காசனத்தினிடத்திற்குத் திரும்பி, இயேசுவின் நாமத்தில் இரக்கத்தை அடைந்து மற்றும் எதிர்க்காலத்தின் போதான, தேவைக்குக் கிருபையைக் கண்டடைகின்றதாய் இருக்கும். ஆனால் இந்த வாய்ப்புகளும், சிலாக்கியங்களும் பயன்படுத்தப்படவில்லையெனில், மற்றும் மாம்சத்திற்கேற்ற ஜீவிய போக்கானது தொடரப்படுமாகில், விளைவு மரணமாகவே இருக்கும்.

ஆகையால் நீதியாய் ஜீவிப்பதற்கும், சுயத்தைப் பலிச் செலுத்தும் ஜீவியம் ஜீவிப்பதற்கும் ஆரம்பிப்பது மாத்திரம் போதாது; ஒரு தவறு செய்த பிற்பாடு நீதியான பாதைக்கு நேராய்த் திரும்புவது என்பதும், மனம் வருத்தத்திற்கான சில கண்ணீர்களைச் சிந்துவது என்பதும் மாத்திரம், ஒருவர் குணமடைவதற்குப் போதாது. ஆனால் நாம் ஆவிக்கேற்றப்படி ஜீவித்து, ஆவியினால் மாம்சத்தின் கிரியைகளை அழித்துப்போடுவோமானால், அப்பொழுது நாம், உண்மையுள்ளவர்கள் அனைவருக்கும் தேவனால் வாக்களிக்கப்பட்டுள்ளதான நித்திய ஜீவனை அடையலாம். ஆவிக்கேற்றப்படி ஜீவிப்பது என்பது ஒரு மாபெரும் ஒப்பந்தமாகும் மற்றும் நாம் தவறில் விழுந்துவிடாதபடிக்கும், தேவனுடைய வாக்குத்தத்திலுள்ள இந்த விலையேறப் பெற்றவைகளை நாம் நழுவ விட்டுவிடாதபடிக்கும், இந்தத் தற்கால ஜீவியத்தின் கவலைகளினாலும், ஐசுவரியத்தின் மயக்கத்தினாலும் அமிழப்பட்டுப்போகாதபடிக்கும், நம்முடைய விசுவாசம் பெலவீனமடைந்து, நாம் வழியிலே வலுவிழந்து போகாதபடிக்கும், காணப்படத்தக்கதாக தொடர்ச்சியான விழிப்பும், ஜெபமும் அவசியப்படுகின்றதான ஓர் ஒப்பந்தமாகும்.

பின்வரும் எண்ணத்தை நம்முடைய மனங்களுக்கு முன்பாக நாம் தெளிவாய்க் கொண்டிருப்பது அவசியமாகும்; அதாவது ஒவ்வொரு கிரியையும், வார்த்தையும், சிந்தனையும், ஒவ்வொரு கிறிஸ்தவனுடைய ஜீவியத்தின், இறுதி விளைவுகள் மீது அதன் தாக்கத்தை கொண்டிருந்தாலும், எந்த ஒரு கிரியையும், எந்த ஒரு வார்த்தையும், எந்த ஒரு சிந்தனையும் மாத்திரமே நன்மைக்கு ஏதுவானதையோ (அ) தீமைக்கு ஏதுவானதையோ தீர்மானிக்க காரணமாய் அமைந்துவிடாது. நாம் எந்தளவுக்கு நேர்மையாய்க் காணப்படுகின்றோமோ, எந்தளவுக்கு உண்மையுள்ளவர்களாய்க் காணப்படுகின்றோமோ, அப்போது நாம் குறைவான இடறிவிழுதல்களை உடையவர்களாய் இருப்போம் மற்றும், நம்முடைய மீட்பரைப்போன்று அதிகமாய்க் காணப்படுவோம் மற்றும் நம்முடைய பலனும் பிரகாசமானதாய்க் காணப்படும், ஏனெனில், "மகிமையிலே நட்சத்திரத்துக்கு நட்சத்திரம் விசேஷித்திருக்கிறது. மரித்தோரின் உயிர்த்தெழுதலும் அப்படியே இருக்கும்" என்று அப்போஸ்தலன் கூறுகின்றார்.

உலகத்தார் தங்கள் ஒவ்வொரு நன்மை மற்றும் ஒவ்வொரு தீமையான கிரியைகளானது, மேசியாவின் இராஜ்யத்தினுடைய ஒழுங்குகளின் கீழான ஜீவன் (அ) மரணத்திற்கான தங்களது பரீட்சைத் தொடர்புடைய விஷயத்தில் தாக்கம்கொண்டிருப்பதை அக்காலத்தில் அறிந்துகொள்வார்கள். கிறிஸ்துவோடுகூடப் பிழைக்கத்தக்கதாகவும், கிறிஸ்துவுடன் மரிக்கத்தக்கதாகவும், அவரோடுகூடப் பாடுபடத்தக்கதாகவும், உடன்படிக்கைக்குள் பிரவேசித்திருக்கின்ற ஒவ்வொரு கிறிஸ்தவனும், தனது ஒவ்வொரு வார்த்தையும், ஒவ்வொரு எண்ணமும், ஒவ்வொரு கிரியையும், மாபெரும் விளைவுகளுடன் சம்பந்தம் உடையதாய்க் காணப்படுகின்றது என்பதை அறிந்திருக்க வேண்டும். அப்போஸ்தலர் கூறுவதுபோன்று, இவர்கள் தேவனுக்குப் பிரியமானவைகளை அறிய நாடுவதற்கும், அவைகளைச் செய்திடுவதற்கும் மற்றும் உயர்வான பலனை அடைந்திடுவதற்குமென்று, ஞானத்துடனும், கவனத்துடனும், ஜீவியத்தில் நடந்துகொள்ளுதல் வேண்டும்.

ஆமென்!

---

# பாகம் 4

# யோசேப்பின் இறுதிக்காலங்கள்



[R2895]

# “சிறந்த ஒரு மனுஷனுடைய வாழ்க்கையின் முடிவு”

## ஆதியாகமம் 50:15-26

“நாங்கள் ஞான இருதயமுள்ளவர்களாகும்படி, எங்கள் நாட்களை எண்ணும் அறிவை எங்களுக்குப் போதித்தருளும்.”– சங்கீதம் 90:12

எகிப்திலுள்ள யோசேப்பினுடைய மகத்துவம் பற்றின தகவல்களுடன், யாக்கோபின் குமாரர்கள் திரும்பி வந்தபோது, யாக்கோபுக்கு நூற்றி முப்பது வயதாயிருந்தது. தன்னுடைய குமாரன் இன்னும் உயிரோடிருக்கின்றார் என்றும், மகத்தான ஸ்தானத்தில் காணப்படுகின்றார் என்றும், கேள்விப்பட்டதில் அவருக்கு ஏற்பட்ட சந்தோஷத்தை, அவருடைய முதிர்வயதிற்குரிய இயல்பான பெலவீனங்களினால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. ஆகையால் யாக்கோபினுடைய குமாரர்கள், எவ்வாறு தாங்கள் யோசேப்பை அடிமைத்தனத்திற்குள் விற்றுப்போட்டார்கள் என்றும், எப்படி யாக்கோபை ஏமாற்றத்தக்கதாக, இருபத்திரண்டு வருடங்களுக்கு முன்னதாக யோசேப்பினுடைய மேலங்கியில் இரத்தத்தைப் பூசினார்கள் என்றும் விவரம் அறிந்தப்போதுங்கூட, யாக்கோபினால் காரியங்களை நம்பமுடியவில்லை. யாக்கோபின் குமாரர்கள் கொடுத்திட்ட தகவல்களுக்கு அத்தாட்சியாக, யோசேப்பு தந்தைக்கென அனுப்பி வைத்திட்ட இராஜரிகமான அன்பளிப்புகளும், மற்றும் யாக்கோபையும், குடும்பத்தாரையும் சௌகரியமாகப் பிரயாணத்தில் சுமந்துவரத்தக்கதாக அனுப்பப்பட்டு, வந்திருந்த எகிப்திய வண்டிகளும் காணப்பட்டன. இந்த வண்டிகள் என்பது, அந்நாட்களில் காணப்பட்ட வாகனங்களாய் இருந்தது. யாக்கோபு இணங்க வைக்கப்பட்டார் மற்றும் பிரயாணத்தை மேற்கொண்டார்; அப்போதுதான் அநேகமாக யாக்கோபு தன் மனதில் சில கேள்விகளைக்கொண்டிருந்து, தேவனுக்குப் பலிச்செலுத்தினார்; அதாவது வாக்களிக்கப்பட்ட தேசத்தை இப்படியாக விட்டுச்செல்வது ஞானமான காரியமாக இருக்குமா என்றும் இப்படி, தான் விட்டுச்செல்லும் காரியமானது, தன்னுடைய சிறு பிராயம் முதற்கொண்டு, தன்னுடைய ஜீவியத்தில் மையம் கொண்டுள்ளதும், வழிநடத்தியுள்ளதுமான ஆசீர்வாதங்களை, தான் உதறித்தள்ளிவிட்டதாக அல்லது தனது விசுவாசத்தை, தான் கைவிட்டுவிட்டதாக, தேவனால் கருதப்படுமோ என்றுமுள்ள கேள்விகளை மனதில் கொண்டவராக, யாக்கோபு பலிச்செலுத்தினார்.

யாக்கோபினுடைய கேள்விக்கும், பலிக்கும் (அநேகமாகச் சொப்பனத்தின் வாயிலாக) தேவன் பதிலளித்து, யாக்கோபு எகிப்துக்குப் போகும் காரியம் சரியானது என்றும், இறுதியில் யாக்கோபின் சந்ததியார் மீண்டும் "வாக்களிக்கப்பட்ட தேசத்திற்கு" திரும்ப வருவார்கள் என்றும் யாக்கோபுக்கு வாக்களித்தார். இப்படியாகவே ஆவிக்குரிய இஸ்ரயேலர்களும் அனைத்துச் சூழ்நிலைகளிலும் காணப்பட வேண்டும்; ஆவிக்குரிய இஸ்ரயேலன் பண்ணியுள்ள உடன்படிக்கையாகிய ஆபிரகாமின் உடன்படிக்கையும், அதிலுள்ள அவனது பங்கும், அவனது ஜீவியத்தின், அவனது இலட்சியங்களின், அவனது எதிர்பார்ப்புகளின், அவனது நம்பிக்கைகளின் மையமாகக் காணப்பட வேண்டும். உலக ஐசுவரியங்கள் மற்றும் உலக தயவுகளின் விஷயத்தில், எதிராளியானவனின் வஞ்சனை காணப்படுகின்றதா என ஆவிக்குரிய இஸ்ரயேலன் விழிப்புடன் காணப்பட வேண்டும். இவ்விதமான அபாயமானது உலகப்பிரகாரமான வளமையின் காற்று நம் திசையில் அதிகம் வீசும்போது அதிகமாய்க் காணப்படுகின்றது. இந்த அபாயமானது நாம் கஷ்டமான (அ) உபத்திரவமான நிலைமைகளுக்குள் கடந்துபோகையில், குறைவாகவே உள்ளது. இப்படியான (வளமையின் காற்று நம் பக்கத்தில் வீசும்) தருணங்களிளெல்லாம், நாம் கர்த்தரிடத்தில் அடிக்கடிச் செல்ல வேண்டுமென்றும், அவருடைய சித்தத்தை அறிந்துகொள்ளத்தக்கதாக முற்றும் முழுமையாக நாட வேண்டுமென்றும், நம்முடைய பூமிக்குரிய காரியங்கள் அனைத்திற்கும் மேலாக, நமது உடன்படிக்கையையும், அதன் முக்கியத்துவத்தையும் மனதில் கொண்டுவர வேண்டும் என்றும் நாம் நினைவில் கொள்வோமாக. மேலும் கர்த்தருக்கு உண்மையான பலியை ஏறெடுப்போமாக, அதாவது நமது ஏற்றுக்கொள்ளப்படுதலுக்கு ஆதாரமாய்க் காணப்படும் நமது அருமை மீட்பருடைய பலியின் புண்ணியங்களை முன்வைத்து, நமது இருதயங்களுடைய முழுமையான அர்ப்பணிப்பைத் திரும்பவும் கூறி,

நமது உடன்படிக்கையைப் புதுப்பித்துக்கொள்வோமாக. இதுவே இந்த யாத்திரையில் நமக்கான ஒரே பாதுகாப்பான வழியாகும்.

யாக்கோபும், யோசேப்பின் சகோதரரும், பார்வோனுக்கு முன்பாகக்கொண்டு செல்லப்படுவதையும், பிற்பாடு அவர்கள் கோசேன் நாட்டில் குடியேறினதையும் நாம் விரிவாகப் பார்க்கப்போவதில்லை. இங்கு அவர்கள் குடியிருக்கையில் பதினேழு வருடங்களுக்குப் பிற்பாடு, யாக்கோபு மரிக்கின்றார் (ஆதியாகமம் 47:28) மற்றும் யாக்கோபு, பார்வோனின் பிரதிநிதியானவருடைய சொந்தக்காரராய் இருக்கின்றபடியால், யாக்கோபு எகிப்திய வட்டாரத்திற்குப் பொதுவான வழக்க முறையின் அனுசரிப்புகள் அனைத்துடன், அடக்கம் பண்ணப்பட்டார். இப்போதுதான் நமது பாடம் ஆரம்பமாகப் போகின்றது. யோசேப்பின் சகோதரர்கள், யோசேப்பு தங்களைப்போன்ற சுபாவம் கொண்டிருப்பார் என்று எண்ணினார்கள்; அவர்களால் யோசேப்பு தங்களை முற்றிலும் மன்னித்துவிட்டார் என்பதையும், யோசேப்பு மிகவும் தயவுள்ளவராய் இருக்கின்றார் என்பதையும் நம்ப முடியவில்லை; மேலும் யோசேப்பு தங்களிடத்தில் பாராட்டும் இரக்கத்தை அவர்கள் ஒத்துக்கொண்டாலும், அவர்கள் பின்வருமாறு தங்களுக்குள்ளாகக் கூறிக்கொண்டார்கள், **"இந்த அனுகூலங்கள் அனைத்தும் நம்பொருட்டாக இல்லாமல், நமது தகப்பனாகிய யாக்கோபின் பொருட்டாக மாத்திரமே செய்யப்பட்டன; இப்பொழுது நமது தந்தை இறந்துவிட்டார்; இனிமேல் யோசேப்பு நம்மை வித்தியாசமாய்க் கையாளுவார்."** இப்படியான உணர்வுகளினால் தூண்டப்பட்டவர்களாக, அவர்கள் யோசேப்பினிடத்தில் இரக்கத்தைக் கேட்பதற்கும், தாங்கள் யோசேப்பினுடைய அடிமைகளாக இருக்க விருப்பம் கொண்டுள்ளதை அறிவிக்கிறதற்கும், முதலாவது ஒரு தூதுவனை யோசேப்பினிடத்திற்கு அனுப்பிவைத்தார்கள், பின்னர் அவர்களும் நேரடியாக யோசேப்பினிடத்திற்குச் சென்றார்கள்.

இக்காரியமானது, போதுமான விசுவாசமில்லாமல் கர்த்தரிடத்தில் வரும் அநேகருடைய நிலைமையைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. இப்படிப்பட்டவர்கள் தங்களிடத்திலான கர்த்தருடைய இரக்கத்தைக் குறித்து உணர்ந்திருந்தாலும், பயமும் கொண்டிருக்கின்றனர். உண்மையென்னவெனில், இவர்கள் அவரைப்பற்றி அறிந்துகொள்ளவில்லை; கர்த்தரும் தங்களைப்போன்று கோபத்தினால், பகைமையினால் இயக்கப்படுபவர் என்று இவர்கள் எண்ணிக்கொள்கின்றனர். நமது குற்றங்களையும், தெய்வீகத் தயவைப் பெறுவதற்கான நமது அபாத்திர நிலைமையையும் ஒப்புக்கொள்வதும், இன்னுமாக நமது பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன என்றுள்ள கர்த்தருடைய வார்த்தைகளில், விசுவாசத்தின் முழு நிச்சயத்தைக் கொண்டிருக்குமளவுக்கு, நாம் கர்த்தருடன் நெருங்கிப் பழகிக் காணப்படும் நிலைமையை அடைவதும் என்பது கிருபையில் வளர்ந்திருப்பதற்கான சாட்சியே ஆகும். இப்படியாகக் கிருபையில் வளர்வதைக் குறித்து, "ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன்" என்று கர்த்தர் குறிப்பிடுகின்றார் (யோவான் 17:3). ஆனால் இத்தகைய அறிவு என்பது உடனடியாக வளரக்கூடியதல்ல, மாறாக இது கிருபையில் வளர்வதின் விளைவாக வரக்கூடியதொன்றாகும்; ஏனெனில் நாம் அறிவில் வளரும்போது, கிருபையில் வளருவோம் மற்றும் நாம் கிருபையில் வளரும்போது, அறிவிலும் வளருவோம்; நாம் இரண்டு பாதங்களை வைத்து நடப்பதுபோன்று, கிருபையும், அறிவும் இரண்டுமே ஒன்றையொன்று தொடர்ந்து காணப்படுகின்றது. கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்துக்கொண்டிருப்பவர்களில் பெரும்பான்மையானவர்கள், கிருபையிலும், அறிவிலும் வளராதப்படியினால், அப்போஸ்தலர் குறிப்பிடும், "விசுவாசத்தின் பூரண நிச்சயத்தை," அதாவது கர்த்தரிலும், அவருடைய தயவிலும், அவருடைய ஞானத்திலும், அவருடைய அன்பிலும், மற்றும் தங்கள் ஜீவியத்தின் அனைத்துக் காரியங்களின் மேலுமுள்ள அவரது ஞானமான பராமரிப்பிலும் முழு நிச்சயத்தை அடைய தவறிவிடுகின்றனர். இப்படியான வளர்ச்சி குறைவுப்படுகின்றபடியால், இவர்கள் கர்த்தருக்குப் பலிகள் ஏறெடுப்பதற்கும், அவரிடத்தில் தங்கள் வழிகளையெல்லாம் ஒப்புக்கொடுப்பதற்கும் தவறிவிடுகின்றனர்.

யோசேப்பு தன்னுடைய சகோதரர்களுக்குக் கொடுத்திட்ட பதிலானது மிகவும் பெருந்தன்மையுடையதாகவும்/சிறப்பானதாகவும், இன்னுமாக அவருடைய நடத்தையானது வெறுமனே வெளித்தோற்றமான அறிக்கையாக இல்லாமல், மாறாக உறுதியான குணலட்சணத்தின் விளைவே என்பதற்கான நற்சான்றாகவும் காணப்பட்டது. யோசேப்பு தனக்குள்ளாகப் பின்வருமாறு சொல்லிக்

கொள்ளவில்லை அதாவது, **"என்னுடைய சகோதரர்கள் என்னைத் தவறாய்ப் புரிந்துள்ளனர். நான் அவர்களை மனப்பூர்வமாய் மன்னித்தாலும், இந்த அவர்களது பயத்தை, நான் அவர்களுக்கு மேலாக அதிகமான அதிகாரம் கொள்ளத்தக்கதாகப் பயன்படுத்திக்கொண்டு, நான் அவர்களை நோக்கி, நான் உங்களுக்கு எந்தத் தீங்கும் செய்யமாட்டேன்; நீங்கள் எனக்கு முற்றிலும் கீழ்ப்படிதலோடு காணப்படுவதுவரையிலும், எனக்கு வருடந்தோறும் சன்மானங்கள் கொடுத்து (அ) உங்கள் பலனில் பத்தில் ஒரு பகுதி எனக்குக் கொடுத்து (அ) வருடந்தோறும் நீங்கள் என்முன் பணிவதற்கும், உங்கள் தவறுகளை மீண்டும் மீண்டுமாக ஒப்புக்கொண்டு, என்னுடைய தயாளத்தை அறிக்கையிடுவதற்கும் வந்துகொண்டு இருப்பதுவரையிலும், நான் உங்களை மிகுந்த இரக்கத்துடன் நடத்துவேன் என்று சொல்லப்போகிறேன்."** இல்லை; இப்படிச் செய்ய முடியாதளவுக்கு மிகச் சிறந்த குணலட்சணங்களை உடையவராகவும், சுயநலமேயற்றவராகவும் காணப்பட்டார். மாறாக யோசேப்போ, "பயப்படாதிருங்கள் நான் தேவனா?" என்றார். யோசேப்பு தன்னுடைய சகோதரர்களிடத்தில் சரியான விதத்தில் நடந்துகொள்வதற்கான இரகசியம், அவர் கொண்டிருந்த சரியான கண்ணோட்டமேயாகும்; யோசேப்பு தன்னுடைய சகோதரர்களைக் கையாளும் விஷயத்திலும், அனைத்து விஷயங்களிலும், தன்னைத் தேவனுடைய ஊழியக்காரனாக/அடிமையாக மாத்திரமே கருதிக்கொண்டிருந்தார். தேவனுடைய வழிநடத்துதலே அனைத்துக் காரியங்களிலும் காணப்பட்டிருந்ததை யோசேப்பு கண்டார்; இப்படியல்லாமல் வேறு எவ்விதத்தில் யோசேப்பினால் எண்ணிக்கொள்ள முடியும். தெய்வீக ஏவுதலினால் தனக்கு வந்திட்ட சொப்பனங்களின் நிறைவேறுதலை, யோசேப்பு கண்டார்; தான் அடிமை நிலையிலிருந்து, எகிப்தின் அரியணைக்கு உயர்த்தப்படுவதற்கான வழிநடத்துதலினுடைய பல்வேறு படிகளில், தெய்வீகப் பராமரிப்பினுடைய அற்புதகரமான வழிநடத்துதலை யோசேப்பு கவனித்தார்; இன்னுமாக ஒருவேளை இப்பொழுது தான் தன்னுடைய சகோதரர்களுக்குப் பொல்லாப்புச் செய்தாலோ அல்லது அவர்களுக்கு எதிராக இரக்கமற்ற விதத்தில் சிந்தனைச் செய்தாலோ, இது தேவன் ஆசீர்வதிப்பதற்கெனப் பயன்படுத்தின கருவிகளுக்கு (தனது சகோதரர்களுக்கு) எதிராக களங்கம் விளைவிப்பதாகக் காணப்படும் என்று யோசேப்பு எண்ணினார். இதை யோசேப்பு செய்தாரானால் அவரால் தெய்வீக வல்லமைக்கு உண்மையாய் இருக்க முடியாது மற்றும் தெய்வீக வல்லமைக்குக் கனம் கொடுப்பவராகவும் காணப்பட முடியாது; யோசேப்பு தன்னுடைய சகோதரர்களை ஆறுதல்படுத்தி, உற்சாகமூட்டினார்; அவர்கள் பொல்லாப்பான நோக்கம் கொண்டிருந்து, தனக்குப் பொல்லாப்புச் செய்திருந்தபோதிலும், நடைபெற்றது உண்மையில் ஒரு நல்ல காரியமே என்றும், ஆனால் நடந்திட்ட இந்த நற்காரியத்திற்கு அவர்களுக்கு எந்தக் கீர்த்தியும் சேராமல் அவப்பெயரே உள்ளது மற்றும் தேவனுக்கே அனைத்துக் கனமும் சேரும் என்றும் யோசேப்பு விளக்கினார். இதன் அடிப்படையிலேயே அவர்களை, தான் கையாளுகின்றதாகவும், தான் கொஞ்சமும் பகைமைக்கொண்டிருக்கவில்லை என்பதாகவும், அவர்கள் செய்த காரியத்தின் வாயிலாக வந்த தெய்வீக ஆசீர்வாதத்தை முழுமையாய், தான் உணர்ந்துள்ளதாகவும், யோசேப்பு தன்னுடைய சகோதரர்களுக்குப் புரிய வைத்தார்.

இந்தப் படிப்பினையை, ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் அனைவரும் கற்றுக்கொண்டார்களானால், அது எத்துணை மாபெரும் ஆசீர்வாதமாகக் காணப்படும், அதாவது எந்த ஒரு காரியத்தினுடைய விளைவும் நன்மையானதாகக் காணப்படும் என்று நாம் ஏற்றுக்கொள்வோமானால் மற்றும் அந்த விளைவுகளுக்கு நேராக நாம் தெய்வீகப் பராமரிப்பினால் வழிநடத்தப்படுகின்றோம் என்று உணர்ந்துகொள்வோமானால், தெய்வீகப் பராமரிப்பினால் பயன்படுத்தப்பட்ட கருவிப் போன்றவர்களிடத்தில் நாம் மிகவும் தயாளத்துடனும், மிகுந்த இரக்கத்துடனும் நடந்துகொள்வோம், அதுவும் அந்தக் கருவியானவர்கள் வேண்டுமென்றே கருவியாகாதவர்களாய் இருந்தாலும் அல்லது யோசேப்பின் சகோதரர்கள் போன்று திட்டமிட்டுப் பொல்லாப்புச் செய்கின்றவர்களாய் இருந்தாலும், நாம் அவர்களிடத்தில் மிகுந்த தயாளமும், மிகுந்த இரக்கமும் உள்ளவர்களாய் நடந்துகொள்வோம். இப்படியாக ஜீவியத்தின் காரியங்களையும், தங்கள் அனுதின ஜீவியத்தில் செயல்பட்டுக்கொண்டிருக்கும் சக்திகளையுங்குறித்து, மேற்கூறப்பட்டுள்ள கண்ணோட்டத்தின்படி பார்க்க முடிகின்றவர்களால், அப்போஸ்தலர் கூறுவதுபோன்று, "கர்த்தருக்குள் எப்பொழுதும் வெற்றி சிறக்கப்பண்ண" முடியும்; மேலும் இத்தகையவர்களிடத்தில், சாத்தானுக்கும், அவனுடைய ஊழியர்களுக்கும் எதிரான எந்தக் கசப்போ (அ) தூஷணங்களோ காணப்படுவதில்லை (2 கொரிந்தியர் 2:14; யூதா 9).

இதன் அர்த்தமாவது இத்தகையவர்கள் தீமையான நடக்கைகளை நல்லவை என்று கருதுவார்கள் என்பதாக இல்லை; இன்னுமாக இத்தகையவர்கள் தீமையான நடக்கைகளை ஆதரிப்பதாகவோ அல்லது ஆதரிக்க வேண்டுமென்றோ, தீமையான நடக்கைகளைத் தூண்டும் தீமையான நோக்கங்களையும் ஆதரிப்பதாகவோ (அ) ஆதரிக்க வேண்டுமென்றோ, தீமையான நோக்கங்களுக்கும், தீமையான நடத்தைகளுக்கும் இசைவாகக் காணப்படும் தீமையான நபர்களையும் ஆதரிப்பதாகவோ (அ) ஆதரிக்க வேண்டுமென்றோ அர்த்தப்படுவதுமில்லை. மாறாக இதன் அர்த்தமாவது இத்தகையவர்களுடைய மனங்களானது, தங்களுடைய வாழ்க்கையிலுள்ள தெய்வீக மேற்பார்வைப்பற்றின எண்ணங்களினாலும், எவ்வாறு தாங்கள் எப்பொழுதும் சர்வ வல்லமையுள்ளவருடைய நிழலின் பாதுகாப்பான பராமரிப்பின் கீழ்க் காணப்படுகின்றார்கள் என்பது பற்றின எண்ணங்களினாலும், அனைத்துக் காரியங்களும் வெளிப்புறத்தில் எப்படியாகக் காணப்பட்டாலும், அனைத்தும் தங்களுடைய நன்மைக்கு ஏதுவாகவே நடக்கின்றது என்பது பற்றின எண்ணங்களினாலும் மிகவும் நிறைந்திருக்கும் என்பதேயாகும்; இன்னுமாக சர்வ வல்லமையுள்ளவரின் ஆற்றலினால் நன்மைக்கு ஏதுவாய் மாற்றப்பட்ட தீமையான நோக்கங்களையும், நடத்தைகளையும் உடையவர்கள் மீது, அதாவது தங்களுக்குத் தீமைச் செய்ய முயன்றவர்கள் மீதும், தீமையைப் பகீரங்கமாய் நடப்பித்தவர்கள் மீதும் இருதயத்திலோ (அ) வார்த்தைகளிலோ எவ்விதமான கசப்பும் கொண்டிருக்க மாட்டோம் என்றுள்ள எண்ணங்களினால், இத்தகையவர்களின் மனங்கள் நிறைந்திருக்கும் என்பதேயாகும். எந்தளவுக்கு கர்த்தருடைய ஜனங்கள் காரியங்களைப் பரந்த கண்ணோட்டத்தில் பார்ப்பதற்குரிய இந்த உயர்வான நிலையை அடைவார்களோ, அவ்வளவாய் இவர்கள் தங்களை எதிர்ப்பவர்களிடத்தில் கோபம், வன்மம், பகைமை, கொள்வதிலிருந்து விடுதலையாவதோடு மாத்திரமல்லாமல், "எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானமானது," இவர்களது இருதயங்களை ஆளுகை செய்து மற்றும், ஜீவியத்தின் சகல புயல்கள் மற்றும் சூழ்நிலைகள் மத்தியிலும் இவர்களைப் பாதுகாப்பாய்க் காத்துக்கொள்ளும், ஏனெனில் இவர்களது நம்பிக்கையானது திரைக்குள்ளாகப் போகிறதுமான ஆத்ம நங்கூரமாய் இருக்கின்றது. இவர்கள், "கர்த்தர் சத்தியமுள்ளவரென்று முத்திரைபோட்டு நிச்சயப்படுத்தியுள்ளார்கள்;" ஆகையால் இவர்கள் எப்பொழுதும் சந்தோஷமாய்க் காணப்பட முடியும்.

யோசேப்பினுடைய இந்த நடக்கையானது, தேவனுடைய பார்வையில் சரியான ஒன்றாகவும், சரியான மனநிலையில் காணப்படும் அனைவரின் பார்வையில் சிறந்த ஒன்றாகவும், யோசேப்பினுடைய சகோதரர்கள் தொடர்புடைய விஷயத்திலும், அவர்களுக்கான ஆறுதலின் விஷயத்திலும், அவர்களுக்கான சமாதானத்தின் விஷயத்திலும், அவர்கள் யோசேப்பினிடத்தில் அன்பு காட்டத்தக்கதாகவும், ஆசீர்வாதமான ஒன்றாகவும் காணப்பட்டதோடல்லாமல், யோசேப்பும் சமாதானம், சந்தோஷம், ஆசீர்வாதம் அடைவதற்கு ஏதுவான சரியான மற்றும் சிறந்த நடக்கையாகவும் காணப்பட்டது. யோசேப்பு தன்னுடைய சகோதரர்களுடைய பயங்களை அகற்றி, அவர்களை ஆறுதல்படுத்தி, அவர்களிடம் அன்பாய்ப் பேசி, தகப்பனாகிய யாக்கோபு உயிரோடிருந்தபோது, கொடுக்கப்பட்ட அதே பராமரிப்புக் கொடுக்கப்படும் என்று அவர்களுக்கும், அவருடைய குடும்பங்களுக்கும் வாக்களித்துக்கொடுத்தபோது, யோசேப்பு தன்னுடைய சொந்த இருதயத்திற்கும் மிகுந்த ஆசீர்வாதத்தையும், ஆறுதலையும் அடையப்பெற்றவராய்க் காணப்பட்டார். இதைப்பற்றி அனைவருக்கும் தெரியாது; ஒரு மனிதனால் செயல்படுத்த முடிகின்ற மிக உயரிய குணலட்சணமும், அதேசமயம் அதிகளவிலான ஆசீர்வாதங்களை அதனோடுகூடக்கொண்டு வருகின்றதுமான குணலட்சணமும் என்னவென்றால், தேவனுக்கொத்த குணலட்சணமாகிய இரக்கத்தையும், பரிவையும், பரந்த மனப்பான்மையையும் செயல்படுத்துவதேயாகும். ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் மத்தியில் இப்படியான குணலட்சணங்களைச் செயல்படுத்தாதவர்கள், ஆவிக்குரிய வளர்ச்சியில் அதிகம் வளர்ச்சியடையாதவர்களாகவே காணப்படுகின்றனர் மற்றும் இப்படியான குணலட்சணங்களைச் செயல்படுத்தியுள்ளவர்கள், "இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்" என்றும், "சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்" என்றுமுள்ள கர்த்தருடைய வார்த்தைகளின் உண்மையை உணர்ந்துகொண்டவர்களாகக் காணப்படுவார்கள்.

அடுத்துவரும் வசனப்பகுதிகளானது, யாக்கோபின் மரணம் துவங்கி, யோசேப்பின் மரணம் வரையிலான, ஐம்பத்தி நான்கு வருடங்களின் காரியங்களை உள்ளடக்கியதாக இருக்கின்றது. மேலும்

இவ்வசனப்பகுதிகளானது, யோசேப்பினுடைய உறுதியான குணலட்சணத்திற்கும் மற்றும் அவரது அனுபவங்கள் வாயிலாக, அவரைப் பாதுகாப்பாய்ச் சுமந்துவந்த கொள்கைக்கு அவர் கொண்டிருந்த உண்மைக்கும் அஸ்திபாரமாகக் காணப்படுவது, தேவன் மீதும், ஆபிரகாமின் வாக்குத்தத்தத்தின் மீதும் அவர் கொண்டிருந்த விசுவாசமே என்ற சான்றுகளைத் தவிர, மற்றபடி சுருக்கமான தகவல்களையே கொடுக்கின்றதாய் இருக்கின்றது. இதை நாம் கடந்த காலங்களிலும், இன்றும் பார்க்க முடிகின்றது; கர்த்தருடைய உண்மையான ஜனங்களாய் இருந்தவர்கள், சுவிசேஷத்தில் நமக்கு முன்பாக வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையினாலேயே ஏவப்பட்டு, இயக்கப்பட்டவர்களாய்க் காணப்படுகின்றனர். இந்த நம்பிக்கையைக் குறித்துதான் அப்போஸ்தலர், "நிலையும், உறுதியுமான ஆத்தும நங்கூரமாயிருக்கிறது" என்று குறிப்பிடுகின்றார்; இந்த நம்பிக்கையானது ஜீவியத்தின் புயல்களிலும், துன்பங்களிலும் உறுதியாயும், நிலையாயும் நிற்கச் செய்கின்றது மற்றும் நமது ஜீவியங்களானது, பாவம், வஞ்சனை, சந்தேகம், சுயநலம் முதலிய பாறைகளில் மோதி, நொறுங்கிப்போய்விடாதபடிக்குத் தடுக்கின்றது (எபிரெயர் 6:19).

தெய்வீக வாக்குத்தத்தங்கள் மீது யோசேப்புக் கொண்டிருந்த மதிப்பே, அவர் போத்திபாரின் விசாரணைக்காரனாக இருந்தபோதும், சிறையில் இருந்தபோதும், மீண்டுமாக பார்வோனின் பிரதிநிதியாக, அரியணையில் இருந்தபோதும், உண்மையாய் இருக்க வைத்தது என்பதை யார்தான் ஒப்புக்கொள்ளாமல் இருப்பார்கள்? எந்தளவுக்குப் பரம வாக்குத்தத்தங்களானது, நமது மனங்களுக்கு முன்பாகக் காணப்படுகின்றதோ, அவ்வளவாய்ப் பூமிக்குரிய மற்றும் சுயநலமான இலட்சியங்களானது குன்றிப்போய், நம்மீது வைத்துள்ள ஆதிக்கத்தை இழக்கின்றது. தேவன் ஆபிரகாமுக்குப் பண்ணிய வாக்குத்தத்தத்தின் மீதும், கானான் தேசத்தின் மீதும் மையம் கொண்டுள்ள யோசேப்பினுடைய விசுவாசக் கண்களானது, ஆற்றல்மிக்க தாக்கத்தைக் கொண்டிருந்தது, ஏனெனில் தேவனுக்கு நண்பனாகவும், தேவனுடைய வாக்குத்தத்தத்திற்கான சுதந்தரவாளியாகவும் வேண்டுமெனில், தேவன் அங்கீகரிக்கத்தக்கதான தூய்மையை இருதயத்திலும், ஜீவியத்திலும் கொண்டிருக்க வேண்டுமென்று யோசேப்பு உணர்ந்திருந்தார். இந்த வாக்குத்தத்தங்கள் தனது தகப்பனாகிய யாக்கோபினிடத்திலும், தாத்தாவாகிய ஈசாக்கினிடத்திலும், கொள்ளுதாத்தாவாகிய ஆபிரகாமினிடத்திலும் கொண்டிருந்த தாக்கத்தை/ஆதிக்கத்தை யோசேப்பு கண்டிருந்தார். மேலும் அதே வாக்குத்தத்தமானது யோசேப்பினிடத்திலும் ஆதிக்கம் கொண்டிருந்ததை நம்மால் காணமுடிகின்றது. ஐசுவரியங்கள், உயர் பதவிகள் மற்றும் அதிகாரத்தைச் சுயநலமாய் அடையத்தக்கதாக, நீதி மற்றும் சத்தியத்தின் கொள்கைகளைப் தியாகம் செய்திட விரும்புமளவுக்கு, இன்றைய காலங்களில், இந்த ஐசுவரியங்களினாலும், பதவிகளினாலும், அதிகாரங்களினாலும் மயக்கப்பட்டவர்கள், தங்கள் ஜீவியத்தின் மீது ஆதிக்கம் செலுத்தத்தக்கதான ஆபிரகாமுக்குரிய வாக்குத்தத்தம் மற்றும் சத்தியத்தின் ஆற்றலற்றுத் தாங்கள் காணப்படுகின்றார்கள் என்பதை நிரூபிக்கின்றவர்களாய் இருக்கின்றனர். ஒருவேளை ஆபிரகாமுக்கான வாக்குத்தத்தமானது, யோசேப்பினுடைய மனதில் அவ்வளவுக்குத் தாக்கம் கொண்டதாய் இருக்கவில்லையெனில், யோசேப்பு எகிப்தினுடைய அரியணையை அடைய திட்டம் தீட்டியிருப்பார் அல்லது தனது சகோதரர்கள் மீது அதிகாரம் கொண்டு, எஜமானாய் இருப்பதற்கான திட்டம் தீட்டியிருப்பார், மாறாக வாக்குத்தத்தத்திற்குப் பின்பாக தேவனே செயல்படுகின்றார் என்பதை உணர்ந்திருந்த யோசேப்பு, அதற்காகக் காத்திருந்தார்; அதை அவர் எண்ணிப்பார்க்க முடியாத மாபெரும் மற்றும் அருமையான ஆசீர்வாதமெனக் கருதி, அதற்காகக் காத்திருந்தார். எகிப்திலிருந்து கானான் தேசத்திற்குப் போய்விடலாம் என்றும் யோசேப்பு எண்ணிக்கொள்ளவில்லை; ஏனெனில் தேவன் ஆபிரகாமுக்குத் தரிசனமாகி, அவருடைய சந்ததியார் எகிப்திலே காணப்படுவார்கள் என்றும், அங்குத் துன்பப்படுவார்கள் என்றும், நானூறு ஆண்டுகள் காலம் எகிப்திலே குடியிருப்பார்கள் என்றும் கூறியிருந்ததை, யோசேப்பு நன்கு அறிந்திருந்தார்.

ஆகவே தேவன் மீதான மற்றும் ஆபிரகாமின் அந்த வாக்குத்தத்தத்தின் மீதான யோசேப்பினுடைய நம்பிக்கை என்பது, மரணத்திலிருந்துள்ள உயிர்த்தெழுதல் மூலமான நம்பிக்கையாகவே இருந்தது; இது அவருக்கு விலையேறப் பெற்ற படிப்பினைகளைக் கற்றுக்கொடுத்திருந்தாலும், உயிர்த்தெழுதல் பற்றியும், தேவனுடைய வல்லமைப் பற்றியுமான யோசேப்பினுடைய பூரணமற்ற புரிந்துகொள்ளுதலின் காரணமாகவே, தேவனுடைய தயவு இஸ்ரயேலர்கள் மீது கடந்துவந்து, இஸ்ரயேல் விடுதலையடையும்போது, இஸ்ரயேலர்கள் தன்னுடைய

எலும்புகளை எகிப்திலிருந்து, கானானுக்கு எடுத்துச் செல்ல வேண்டுமென்று குறிப்பாய் யோசேப்பு கட்டளையிடுகின்றார். ஆவிக்குரிய இஸ்ரயேலனும் தற்காலத்தின் லௌகீக/உலகப்பிரகாரமான தாக்கங்களிலிருந்து விடுவிக்கப்பட வேண்டுமாயின், கர்த்தருக்கு உண்மையுள்ளவனாய்க் காக்கப்பட வேண்டுமாயின், குணலட்சணம் தொடர்புடைய உயர்வான கொள்கைகளுக்கு உண்மையுள்ளவனாய்க் காக்கப்பட வேண்டுமாயின், அவன் மரணத்திலிருந்துள்ள உயிர்த்தெழுதலின் வாயிலாக, எதிர்காலத்தில் நிறைவேறக்கூடிய தெய்வீக வாக்குத்தத்தங்களில் தனது மனதை மையம் கொண்டிருக்கச் செய்ய வேண்டும். எதிர்க்கால இராஜ்யத்தின் மீதும், எதிர்க்கால கனம் மீதும், எதிர்க்கால மகிமையின் மீதும், எதிர்க்கால ஐசுவரியங்கள் மீதுமான இந்த விசுவாசம் என்பது, இந்தத் தற்காலத்தினுடைய கனம் மற்றும் மகிமை மற்றும் ஐசுவரியங்களின் முக்கியத்துவத்தைக் குறைத்துப்போடுகின்றதாய் இருந்து, உண்மையான அனைத்து விசுவாசிகளையும் கனம், மகிமை, ஐசுவரியம் தொடர்புடைய விஷயங்களில், உலகத்திலிருந்து பிரித்துவிடுகின்றது; மேலும் இவ்வாறாக அவர்கள் இந்தத் தற்காலத்தின் காரியங்களை நியாயமான மற்றும் உணர்ச்சிவசப்படாத கண்ணோட்டத்திலிருந்து சிந்தித்துக்கொள்ளத்தக்கதாக ஆயத்தப்படுத்தப்படுகின்றனர்; இன்னுமாக அவர்கள் மிகவும் ஆற்றலுள்ள சுயநலத்தினுடைய உடனடி தாக்கங்களிலிருந்து அப்புறப்படுத்தப்படுகின்றனர்; எனினும் வாக்குத்தத்தத்தில் தங்களுக்கு விசுவாசம் இருந்தபோதிலும், இன்னமும் சரீரத்தைக் கீழ்ப்படுத்தி வைப்பதின் அவசியத்தையும், சுயநலத்திற்கு நேரான சரீரத்தின் இயல்பான தன்மைகளை அழிப்பதின் அவசியத்தையும், அவர்கள் காண்கின்றனர்.

நம்முடைய ஆதார வசனம், இப்பாடத்திற்குப் பொருத்தமானதாய்க் காணப்படுகின்றது மற்றும் ஆவிக்குரிய இஸ்ரயேலன் கவனிக்க வேண்டிய முக்கியமான காரியமாகவும் காணப்படுகின்றது. தற்கால ஜீவியம் தொடர்புடைய விஷயத்தில், நம்முடைய நாட்கள் எண்ணப்பட்டவைகளாகவே காணப்படுகின்றன. தற்கால சூழ்நிலைமைகளின் கீழ் நாம் நித்திய ஜீவனை எதிர்ப்பார்க்க முடியாது என்பதை நாம் அறிவோம்; இந்த அறிவு தொடர்புடைய விஷயத்தில், உலகமானது வெகுத் தொலைவில் காணப்படுகின்றது மற்றும் கிறிஸ்தவர்கள் சாதாரணமான நிலையில் காணப்படுகின்றார்கள்; கிறிஸ்தவர்கள் மத்தியில் ஒருவன் தனக்குள்ளாகக் கூறிக்கொள்வதாவது, **"வாழ்க்கை என்பது குறுகிய காலம் உடையதாகும் மற்றும் நான் இந்த வாழ்க்கையைப் பற்றிப்பிடித்து, என்னால் முடிந்தமட்டும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்"** என்பதேயாகும். மற்றவனோ பரத்திலிருந்து வருகின்ற மேலான ஞானத்தை உடையவனாக, தனது சொந்த குறைவுகளையும், இயலாமைகளையும் உணர்ந்துகொண்டு, கல்லறைக்கும் அப்பாலுள்ள உயிர்த்தெழுதலின் ஜீவன், அதாவது நித்திய ஜீவன் தொடர்புடைய கர்த்தருடைய செய்திக்குச் செவிசாய்த்து, தற்போதுள்ள ஜீவியம் குறித்தும், எதிர்க்காலத்தில் வரவிருக்கும் ஜீவியம் குறித்துமுள்ள ஞானத்திற்குமான விண்ணப்பத்துடன் கர்த்தரிடத்திற்குச் செல்கின்றான்.

அவனுடைய விண்ணப்பத்திற்கு இணங்க, அவன் நித்தியமான ஜீவனைப்பற்றி அதிகமதிகமாய் உணர்ந்துகொள்ளுவதற்கும், சிருஷ்டிகருக்குப் பிரியமானதாகவும், நித்தியமான ஜீவனாகிய பலனை அடைவதற்குக் காரணமாகவுமுள்ள குணலட்சணங்களைக் கட்டியெழுப்புவதற்கென நேரத்தையும், பெலத்தையும் செலவிடுவதற்கும், வாழ்க்கையின் அனுபவங்கள் வாயிலாக தேவனால் கற்றுக்கொடுக்கப்படுகின்றான். கிறிஸ்தவன் தன்னுடைய நாட்களை உணர்ச்சிவசப்படாத நிலையில்/மனக்கலக்கமுறாமல் எண்ணிக்கொள்கின்றானே ஒழிய, கவலையுடனோ (அ) துக்கத்துடனோ தன்னுடைய நாட்களை எண்ணிக்கொள்வதில்லை. "இருளிலிருந்து, தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு நம்மை அழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிப்பதற்கும்," இந்த இடுக்கமான வழியின் பிரயாணத்தில், நம்மோடுள்ள மற்றவர்களுக்கு உதவியளிப்பதற்கும், தேவனுடைய பார்வையில் மிகவும், பிரியமாய்க் காணப்படும் குணலட்சணங்களைத் தனக்குள் அதிகமாய் வளர்த்துக்கொள்வதற்கும், தேவனுடைய பிரியமான குமாரனுக்கு ஒத்தச் சாயலை அதிகமதிகமாய், தான் அடைவதற்குமான அநேகம் ஆசீர்வாதங்களாகவே, அநேகம் சிலாக்கியங்களாகவே, அநேகம் வாய்ப்புகளாகவே இருக்கின்றது எனக் கிறிஸ்தவன் தன்னுடைய நாட்களை எண்ணிக் கொள்கின்றான்/கணிக்கின்றான். இப்படியாக விரைவாகக் கடந்து போய்க்கொண்டிருக்கும் நாட்களை எண்ணிக்கொள்கின்றவனாகவும், அந்த நாட்களை தான் எவ்விதத்தில் தெய்வீக அறிவுரைகளுக்கு இசைவாகப் பயன்படுத்துகின்றான் என்பதைக் கூர்ந்து கவனிப்பவனாகவும் காணப்படும்போது, இறுதியில் இராஜ்யத்திற்காகவும், முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கடையும் போதுள்ள அனைத்து

மகிமைகளின் முழுமையான நிறைவேறுதலுக்காகவும் ஏங்கும் இருதய நிலைக்கு வருவான். மேலும் இக்கண்ணோட்டத்தின்படி, அவன் மகிழ்ச்சிகரமாய்க் கடந்துபோகும் நாட்களை எண்ணுகிறவனாய் இருந்து, தனது தற்கால பிரயாணத்தினுடைய வருடங்கள் முடிவடைகையில் மகிழ்ச்சியடைவான். காரணம் கர்த்தரிடத்திலும், அவருடைய திட்டத்தின் மகிமையான அம்சங்களிலுமுள்ள, அவனது நம்பிக்கையானது, தினந்தோறும் பலமடைந்து வருகின்றது மற்றும் தெளிவடைந்து வருகின்றது மற்றும் பிரகாசமடைந்து வருகின்றது.

---

[R1646]

# "யோசேப்பின் இறுதி நாட்கள்"

## ஆதியாகமம் 50:14-26

"நீதிமான்களுடைய பாதை நடுப்பகல் வரைக்கும் அதிகமதிகமாய்ப் பிரகாசிக்கிற சூரியப்பிரகாசம் போலிருக்கும்." - நீதிமொழிகள் 4:18

யோசேப்பினுடைய ஜீவியத்தின் இறுதிகாலமானது, பல கடுமையான சோதனைகளில் நிலைநின்றதும், நீதியினுடைய ஆசீர்வாதமான கனிகள் அநேகவற்றை வெளிப்படுத்தினதுமாகிய உண்மையான உயர்ப்பண்புகளை உடையவரென அவரை நமக்கு வெளிப்படுத்துகின்றது. அவரது வாழ்க்கை நிறைவு பெறுவது என்பது, பிரகாசமாய்ப் பிரகாசித்தப் பிற்பாடு, ஓய்வெடுப்பதற்கென மறையும் சூரியன் போன்று காணப்படுகின்றது. அவர் உண்மையுள்ள ஊழியக்காரனாகவும், நேர்மையான நண்பனாகவும், இரக்கமும், அனுதாபமுள்ள சகோதரனாகவும், கடமையுணர்வும், அன்புமுள்ள குமாரனாகவும், இறுதியில் தன்னடக்கமும், நிதானமும் உள்ள பிரபுவாகவும் இருந்திருக்கின்றார்.

யோசேப்பிற்கும், பெரும்பான்மையான முற்பிதாக்களுக்கும் கடுமையான சோதனைகளும், பயிற்சிக்கான அனுபவங்களும் வாழ்க்கையினுடைய ஆரம்பம் மற்றும் இடைப்பட்ட காலப்பகுதிகளிலே வந்துள்ளது மற்றும் இவர்கள் அமைதியான முதிர்வயதின் காலங்களைப் பலனாக அருளப்பெற்றனர்; ஆனால் மற்ற அநேகருக்கோ, அப்போஸ்தலன் எபிரெயர் 11-ஆம் அதிகாரத்தில் பட்டியலிட்டிருப்பது போன்று, இறுதி நாட்களோ பயங்கரமான துன்பங்கள் நிறைந்ததாகக் காணப்பட்டது மற்றும் இவர்கள் இரத்த சாட்சியின் மரணம் மரித்தவர்களுமானார்கள். உபத்திரவம் எனும் சூளையில் கர்த்தருடைய ஜனங்கள் சோதிக்கப்படுகிறதும், பயிற்றுவிக்கப்படுகிறதுமான காரியமானது, அநேகரால் கர்த்தருடைய வெறுப்பிற்கான சாட்சியாகவும், பூமிக்குரிய வளமையானது கர்த்தருடைய கடாட்சத்திற்கான சாட்சியாகவும் கருதப்படுகிறது. ஆனால் இது பெரிய தவறாகும்; ஏனெனில் இரண்டு வகையான அனுபவங்களுமே சோதனை மற்றும் பரீட்சையின் பாகங்களாக இருக்கின்றன. ஒரு பக்கத்தில் நாம் துன்பத்தின் புயல்களினால் சோதிக்கப்படுகின்றோம் மற்றும் மற்றவர்களோ பூமிக்குரிய வளமைகளினால் உண்டாகும் அமைதியான நிலைமையினால் சோதிக்கப்படுகின்றனர்; துன்பத்தில் துவண்டு போகாதவனும் அல்லது வளமையினால் வஞ்சிக்கப்பட்டுப் போகாதவனுமாய் இருக்கிற மனுஷன் பாக்கியவானாய் இருக்கின்றான். இப்படிப்பட்ட நன்கு வனையப்பட்ட, சீரான மற்றும் பலமான பாத்திரங்கள் உண்மையில் கர்த்தருடைய பார்வையில் விலையேறப்பெற்றவர்களாய்க் காணப்படுகின்றனர்.

இப்படிப்பட்ட ஒரு மனிதனாகவே யோசேப்பு காணப்பட்டார்; இவர் ஜீவியத்தின் ஆரம்பக் காலங்களில் துன்பமெனும் பள்ளிக்கூடத்தில் பயிற்றுவிக்கப்பட்டு, நிரூபிக்கப்பட்டவர் ஆவார் மற்றும் இவரது ஜீவியத்தின் இறுதி காலங்களிலோ பூமிக்குரிய வளமையின் மிக உயர்ந்த அலைகளானது, இவரை ஒருபோதும் இறுமாப்பிற்கு நேராக அழைத்துச் செல்லவுமில்லை, தன் நிலைமையை இவர் மறந்துபோகவும் பண்ணவில்லை. இந்தப் பூமிக்குரிய வளமைகளுக்கு அப்பால் இவர் இன்னமும், "தேவன் தாமே கட்டி, உண்டாக்கின அஸ்திபாரங்களுள்ள நகரத்துக்கே" காத்திருந்தார். தேவன் மீதான இவரது நம்பிக்கையும், ஆபிரகாமுக்குப் பண்ணப்பட்ட வாக்குத்தத்தம் நிறைவேறும் என்ற இவரது விசுவாசமும், இவரை ஒருபோதும் கைவிட்டுவிடவில்லை. இவர் ஐசுவரியத்தினாலும், சௌகரியங்களாலும் சூழப்பட்டிருந்தாலும், எகிப்து வாக்களிக்கப்பட்ட தேசமல்ல என்று இவர் நினைவில் கொண்டவராய்க் காணப்பட்டார்; இவர் மரிக்கும்போது தனது தகப்பனாகிய யாக்கோபு போன்று, தன்னுடைய சரீரம்

கானான் தேசத்தில் அடக்கம் பண்ணப்பட வேண்டுமென்று கட்டளையிடுவதின் மூலம், உயிர்த்தெழுதல் மற்றும் தெய்வீக வாக்குத்தத்தத்தினுடைய நிறைவேறுதல் தொடர்பான தனது நம்பிக்கையைச் சுட்டிக்காட்டினவராகக் காணப்பட்டார் (ஆதியாகமம் 50:24, 25); "விசுவாசத்தினாலே யோசேப்பு இஸ்ரயேல் புத்திரர் எகிப்து தேசத்தைவிட்டுப் புறப்படுவார்களென்பதைப்பற்றித் தன் அந்திய காலத்தில் பேசி, தன் எலும்புகளைக்குறித்துக் கட்டளைகொடுத்தான்" (எபிரெயர் 11:22).

யோசேப்பை உயர்த்தின பார்வோனுக்கு, அவர் மிகவும் பயனுள்ள ஊழியக்காரனாய் இருந்தபடியால், அரியணையில் பின்வந்த பார்வோனும், அவரைப் பணியில் தொடரப்பண்ணினான்; அநேகமாக யோசேப்பு தன்னுடைய ஜீவியத்தின் முடிவுவரையிலும் பணியில் தொடர பண்ணப்பட்டிருக்க வேண்டும். யோசேப்பினால் எகிப்திற்கு வந்த நன்மைகளானது, மகா விலையேறப்பெற்றதாய் இருந்தது மற்றும் இந்த நன்மைகளானது மிகவும் நன்றியுணர்வோடு ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவும், நினைவுகூரப்பட்டதாகவும் தெரிகின்றது.

ஆதார வசனத்தில் இடம்பெறும், "நீதிமான்களுடைய பாதையானது," தனிப்பட்ட நபர்களுடைய பாதையல்ல, மாறாக அனைத்து நீதிமான்களும் நடக்கும் ஒரு பாதையாகும்; அது நீதியின் பாதையாகும் (சங்கீதம் 23:3); அது சாந்தத்தின், பொறுமையின், விசுவாசத்தின், அன்பின் பாதையெனக் கர்த்தருடைய வார்த்தையானது சுட்டிக்காட்டும் பாதையாகும்; மேலும் இப்பாதையில் நடப்பவர்கள், தேவனால் அனைத்துச் சத்தியங்களுக்கு நேராக, அதனதன் ஏற்றக்காலங்களில் வழிநடத்தப்படுகின்றார்கள். இந்தப் பாதையானது நடுப்பகலை நெருங்குகையில், தெய்வீகச் சத்தியத்தினுடைய மகிமையான ஒளியினால் மிகவும், மிகவும் பிரகாசிக்கின்றதாய் இருக்கும்; நடுப்பகலில் நீதியின் சூரியனானது உதித்திருக்கும் மற்றும் கர்த்தரைப் பற்றின அறிவானது, சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருப்பது போல பூமியை நிரப்பியிருக்கும்; அது பூமியின் மீதான கிறிஸ்துவினுடைய ஆளுகையின் ஆயிரவருட நாளாகும்.

முற்காலத்தின் அனைத்துத் தீர்க்கத்தரிசிகளும், முற்பிதாக்களும், பரிசுத்தவான்களும் இந்தப் பாதையில் நடந்துசென்றுள்ளனர் மற்றும் அவர்கள் அனைவரின் மீதும் அந்தந்த ஏற்றவேளைகளில் தேவனுடைய ஒளியானது பிரகாசித்தது; ஆனால் அவர்களில் எவருக்கும், இன்று பிரகாசிக்குமளவுக்கு ஒருபோதும் மிகவும் தெளிவாய்ப் பிரகாசிக்கவில்லை; ஏனெனில் நாம் இப்பொழுது கிறிஸ்துவினுடைய மகிமையான நாளினுடைய விடியலில் காணப்படுகின்றோம் மற்றும் சீக்கிரத்தில் இந்த வெளிச்சமானது அனைவர் மீதும் பிரகாசித்திடும்.

ஆமென்!!

## திடன்கொள்! தொடர்ந்து செல்...

**சோர்வுக்குள்ளானாயோ!** சரி, அதற்கென்ன?

தென்றல் காற்று வீசிட, அது ரோஜா இலைகளை மெல்ல பரப்பிட,

இப்படிச் சௌகரியமாய் வாழ்க்கையைக் கடத்தலாமெனக் கற்பனை செய்திட்டாயோ?

வா, எழுந்திரு! பகற்காலமாயிருக்கும் மட்டும் கிரியையைச் செய்திடு;

திடன்கொள்! எழுந்திரு! உன் வழியிலேயே தொடர்ந்து நட...

**தனிமைக்குள்ளானாயோ!** சரி, அதற்கென்ன?

சிலர் தனிமையில்தான் இருந்திட வேண்டும்;

எழுச்சியிலும், வீழ்ச்சியிலும் தன்பால் இசைந்திருக்கும் இருதயம் ஒன்றினை பெறுவதும்,

தன் ஜீவியத்திற்குள் மற்றொருவரை இணைக்கப்பெறுவதும்,

எல்லாருக்கும் அருளப்பட்டதல்லவே;

தனிமையிலும் நீ வேலை செய்திடலாம். தொடர்ந்து செய்...

**இருளாய் இருக்கின்றதோ!** சரி, அதற்கென்ன?

சூரியன் ஒருபோதும் அஸ்தமிப்பதில்லை என்ற கனவில் இருக்கின்றாயோ?

உன் வழிதனில் பயம் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளதோ?

எனினும் திடன்கொள்!

தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடப்பதற்குக் கற்றுக்கொள்;

உன் பாதங்களுக்கு வழிக்காட்டப்படும், ஆம் சரியாய் வழிகாட்டப்படும்.

**கஷ்டமாய் இருக்கின்றதோ!** சரி, அதற்கென்ன?

வாழ்க்கை முழுவதும் கோடைக்கால விடுமுறையாகவும்,

படிப்பதற்கு ஏதுமில்லாமல், விளையாடிக்கொண்டே இருக்கலாமெனவும்

கற்பனையில் மிதந்திட்டாயோ?

போ ‒ உன் வேலையைப் போய்த் தொடர்ந்து செய்!

ஒன்றில் ஜெயங்கொள் அல்லது மரித்துவிடு!

இதனையே கற்றுக்கொள்ள வேண்டும்; ஆம் பொறுமையோடே கற்றுக்கொள்.

# பிற்சேர்க்கை

[R57b]

# “யோசேப்பு மற்றும் கிறிஸ்து”

- சகோதரர் ஜெ. எச். பி.

ஆதியாகமம் புஸ்தகத்தில் பதிவு பண்ணப்பட்டுள்ளதான யாக்கோபினுடைய குமாரனாகிய யோசேப்பின் வரலாறானது, கவனத்தை ஈர்க்கும் ஒன்றாகும். ஓர் உண்மை கதை என்று இதை எடுத்துக்கொண்டு, சிலர் மாத்திரமே இதை விரும்புகின்றவர்களாய் இருக்கின்றனர். கட்டுக்கதைகளைப் பார்க்கிலும், சத்தியமே விநோதமாய்ப் பார்க்கப்படுகின்றது. வாலிபர்களும், முதியவர்களுமாகிய அநேகர் இந்தச் சரித்திரத்தைச் சுவாரசியத்துடன் வாசித்துள்ளனர் என்பதும், அழியாப்பலனைப் பெற்றுக்கொண்டுள்ளனர் என்பதும் உறுதியே. யோசேப்பினுடைய முன்மாதிரியான நடத்தையானது, வியந்து பாராட்டப்படுவதற்கும், பின்பற்றுவதற்கும் பாத்திரமானதாய்க் காணப்படுகின்றது.

தேவனுடைய காரணங்கள் தொடர்புடைய விஷயத்திலும், வளர்ச்சியினுடைய ஆரம்பக்கட்டங்களில் காணப்பட்டதான அவரது ஜனங்கள் தொடர்புடைய விஷயத்திலுமான யோசேப்பினுடைய தொடர்பானது முக்கியமானதாகும். மனிதன் மற்றும் ஜனங்களுடைய காரியங்களை நன்மைக்கு ஏதுவாய் மாற்றிப்போடுகின்றதான தேவனுடைய வழிநடத்துதலுக்கு உதாரணமாய்க் காணப்படும் விஷயத்திலும், எப்படி மனிதன் தனது சுயநலத்திற்காக நாடுகின்றான் மற்றும் அதில் ஓரளவுக்கு அவன் ஜெயம் அடைவதும், எனினும் அவனது திட்டங்கள் முறியடிக்கப்படுவதும், தீமையாய்க் காட்சியளித்த காரியம் நன்மையான காரியமாக மாற்றப்படுவதும் குறித்து எடுத்துக் காட்டப்படுகிற விஷயத்திலும், யோசேப்பினுடைய வரலாறு மிகவும் குறிப்பிடத்தக்கதாய்க் காணப்படுகின்றது. அநேக காரணங்களுக்காக, யோசேப்பினுடைய சரித்திரமானது அநேகரால் நியாயமாய் விலையேறப்பெற்றதாய்ப் பார்க்கப்படுகின்றது; ஆனால் நமக்கோ யோசேப்பினுடைய விஷயத்தில் மிகவும் முக்கியமான அம்சமாகக் காணப்படுவது, அதன் உருவகமான தன்மையே (ஞான அர்த்தங்களே) ஆகும். வேதாகமத்திலுள்ள வரலாற்றினுடைய இந்த அம்சமானது, அநேகரால் பார்க்க தவறப்பட்டதும், சிலரால் மறுக்கப்பட்டதும், அதிகமதிகமாய்த் தெரியவருகின்றது. இச்சம்பவம் உண்மையானதாக இருப்பினும், இதன் ஆவிக்குரிய முக்கியத்துவமானது பார்க்கப்படும்போது, இதனோடு ஒப்பிடுகையில், சொல்லர்த்தமான சம்பவம் முக்கியத்துவம் அற்றதாகத் தோன்றும் என்றே நாங்கள் நம்புகின்றோம். பெரியது, சிறியதை மங்கச் செய்துவிடுகின்றது, மற்றும் மாம்சமானதைக் காட்டிலும் ஆவிக்குரியது பெரியதாகக் காணப்படுகின்றது. மேலும் இது உண்மையாக இருக்கையில், ஆவிக்குரியவைகளுக்கு மதிப்புக் கொடுப்பவர்கள், எழுத்துகளுக்கும் முக்கியத்துவம் கொடுப்பார்கள் என்பதில் ஐயமில்லை, காரணம் அதன் ஆழமான முக்கியத்துவமாகும், அதுவும் எழுத்துக்களை மாத்திரமே பார்க்கக்கூடியவர்களைக் காட்டிலும் அதிகம் முக்கியத்துவம் கொடுப்பார்கள்; அதாவது (உதாரணத்திற்கு) ஏற்றக்காலத்தில் மாம்ச சரீரத்திலிருந்து, ஆவிக்குரிய சரீரத்திற்கு மாறுவதற்கு எதிர்நோக்கியிருக்கும் மனுஷர்கள், மாம்சீக சரீரத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பார்கள், ஏனெனில் இந்த மாம்ச சரீரமே, உயர்வானதற்குரிய படிக்கல்லாக இருக்கின்றது; அதுவும் ஆவிக்குரியவற்றைப் புறக்கணித்துக்கொண்டு, "நாளை நாம் மரித்துப்போய்விடுவோம் என்பதினால், புசித்து, குடிப்போம் வாருங்கள்" எனும் இன்பவாத கொள்கையின் அடிப்படையில் செயல்படுபவர்களைக் காட்டிலும் அதிகம் முக்கியத்துவம் கொடுப்பது போலாகும். யோசேப்பின் வரலாற்றினுடைய பொதுவான அம்சங்களானது நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை மற்றும் பணியைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது என்று நாம் கருதுகின்றோம். நிழலைப் பொறுத்த விஷயத்தில், அதன் ஒவ்வொரு "சிறு எழுத்தும், எழுத்தின் உறுப்பும்" நிறைவேறும் என்று நாம் எதிர்ப்பார்க்கலாம், ஆனால் உருவகம் விஷயத்தில், நாம் பொதுவான கொள்கைகளின் அடிப்படையில் மாத்திரமான காட்சியைக் காணலாம். இதற்கு, உருவகம் என்று குறிப்பிடப்படும் ஆபிரகாமின் இரண்டு மனைவிகளும், அவர்களுடைய குமாரர்களாகிய ஈசாக்கு மற்றும் இஸ்மயேல் விஷயம் உதாரணமாய்க் காணப்படுகின்றது (கலாத்தியர் 4). இவர்களுடைய ஜீவியத்தின் அம்சங்கள் அனைத்தும் குறிப்பிடப்படவில்லை, ஆனால் இவர்களது சரித்திரத்தின் உண்மைகளுக்கும் மற்றும் இரண்டு எருசலேம்கள் தொடர்புடைய உண்மைகளுக்கும் இடையே மிகவும் குறிப்பிடத்தக்கதான தொடர்புகள்/ஒற்றுமைகள் காணப்படுகின்றன; மற்றும் இவைகள் மீதே பவுல் கவனம் செலுத்துகின்றார். நாம் இணைகளை உருவாக்கிடுவதற்கோ அல்லது யோசேப்பினுடைய

ஜீவியத்தின் ஏதேனும் அம்சங்களை இணையாகப் பயன்படுத்திக்கொண்டு இதற்கு இணையான விஷயம் காணப்பட வேண்டும், அதற்கு இணையான விஷயம் காணப்பட வேண்டும் என்று கூற முயற்சிப்பதற்கோ நாம் நோக்கம் கொண்டிருக்கவில்லை; ஆனால் கிறிஸ்துவைக் குறித்து வெளிப்படுத்தப்பட்டிருப்பவைகளை அடிப்படையாகப் பயன்படுத்தி, நாம் இணைகளைக் கண்டுபிடிக்கின்றோம் மற்றும் இவைகளை விளக்கங்களாகக்கொண்டு, சத்தியத்தை உறுதிப்படுத்துகின்றோம். ஆனால் இந்த ஒற்றுமைகளானது, சுவிசேஷத்தின் திட்டத்தைப் போட்ட அதே தேவனுடைய மனதானது/தேவன், தமது ஏவுதலினால் எழுத்தாளர்களைக் கொண்டு யாருடைய வரலாறுகளை பதிவு பண்ணினாரோ, அவர்களின் ஜீவியங்களைக் கண்காணித்துள்ளார் என்பதற்குப் பலமான சாட்சியமாகக் காணப்படுகின்றது என்றே நாம் கருதுகின்றோம். இந்த ஒற்றுமைகளினுடைய பல அம்சங்களானது, பல காலங்களாகப் பார்க்கப்படவில்லை என்ற உண்மையின் கண்ணோட்டத்திலிருந்து பார்க்கையில், அந்தச் சாட்சியம் பலமாய்க் காட்சியளிக்கின்றது. துணிந்து, அறைகூவல் விடுகின்றதான அவநம்பிக்கை என்பது நிலவும் இந்தக் காலக்கட்டத்தில், சீஷர்களுடைய விசுவாசமானது உற்சாக மூட்டப்படத்தக்கதாக வெளிக்கொண்டு வரும்படிக்கு, புதைத்துவைக்கப்பட்ட பொக்கிஷங்களாக இந்த ஒற்றுமைகளினுடைய அம்சங்களானது காணப்படுகின்றன. "கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன்" (மத்தேயு 11:15). இவைகள் கிறிஸ்தவனுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்படும்போது, நமது இரட்சகருடைய வாழ்க்கை மற்றும் பணியின் அநேக அம்சங்களை, யோசேப்பின் ஜீவியத்தில் பார்ப்பதற்குக் கிறிஸ்தவன் சிரமப்படுவதில்லை.

யோசேப்பு யாக்கோபினுடைய மிகுந்த பிரியத்திற்குரிய குமாரனாகக் காணப்பட்டார்; "இஸ்ரயேல் தன் குமாரர் எல்லாரிலும் யோசேப்பை அதிகமாய் நேசித்தார்" (ஆதியாகமம் 37:3). இதனிமித்தமாகவும், யோசேப்பு பாவத்தைக் கண்டனம் பண்ணினதாலும், (தனக்கு) வரவிருக்கிற மகிமையைப் பற்றிச் சொப்பனங்கள் கண்டதினாலும், யோசேப்பை அவரது சகோதரர்கள் பகைத்தார்கள். இதுபோலவே தமது தகப்பனுடைய நேசகுமாரனாகக் காணப்பட்ட இயேசுவும், யூதர்களுடைய பொல்லாப்பைக் கண்டனம் பண்ணினதினாலும், தாம் அவர்களுடைய இராஜாவாய்ப் பிறந்து வந்துள்ளார் என்று அவர் உரிமை பாராட்டிக்கொண்டதினாலும், அவர் தம்முடைய சகோதரர்களாகிய யூதர்களால் பகைக்கப்பட்டார். இரண்டு பேர் விஷயத்திலும் வார்த்தைகள் கிட்டத்தட்ட ஒன்றுபோலவே காணப்பட்டது. யோசேப்பினுடைய சகோதரர்களுடைய அரிக்கட்டுகளானது, யோசேப்பின் கட்டுக்கு முன்பாக வணங்கினது பற்றின தனது சொப்பனத்தை, தனது சகோதரர்களிடம் கூறினபோது, அவர்கள் "நீ எங்கள்மேல் துரைத்தனம் பண்ணுவாயோ?" என்றார்கள். "இவன் எங்கள்மேல் இராஜாவாயிருக்கிறது எங்களுக்கு மனதில்லை;" "இராயனேயல்லாமல் எங்களுக்கு வேறே இராஜா இல்லை" என்று இயேசுவின் சகோதரர்கள் கூறினார்கள் (ஆதியாகமம் 37:8; லூக்கா 19:14; யோவான் 19:15). இரண்டு பேரின் விஷயத்திலும் (சகோதரர்களின்) தீய எண்ணங்கள் மிகவும் கடுமையானதாகிப்போனதால், மரணத்தீர்ப்புத் தீர்மானிக்கப்பட்டது. இரண்டு பேரும் குழிக்குள் இறங்கினார்கள் மற்றும் இருவரும் மரணத்திலிருந்து மீட்கப்பட்டார்கள். யோசேப்பு உண்மையில் மரிக்கவில்லை என்பது உண்மைதான்; இன்னொரு தருணத்தில் இயேசுவுக்கு அடையாளமாய்க் காணப்பட்ட ஈசாக்கும் உண்மையில் மரிக்கவில்லை மற்றும் "ஆபிரகாம் ஈசாக்கைப் பலியாக ஒப்புக்கொடுத்தான்" என்றும், "மரித்தோரிலிருந்து அவனைப் பாவனையாகத் திரும்பவும் பெற்றுக்கொண்டான்" என்றும் கூறப்பட்டுள்ளது (எபிரெயர் 11:17, 18). குழி என்பது கிறிஸ்து இறங்கிச் சென்றதான மரணநிலைக்கு அடையாளமாய்க் காணப்படுகின்றது. யோசேப்பு மரித்துப்போனவராகக் கருதப்பட்டார் மற்றும் அவரது உயிர்த்தெழுதலும் அடையாள நிலையிலேயே காணப்பட்டது; ஆனால் கிறிஸ்துவின் மரணமும், உயிர்த்தெழுதலும் நிஜமாகவே நிகழ்ந்ததாய் இருந்தது.

இருவருடைய விஷயத்திலும், சம்பவங்கள் ஒரே மாதிரி வரிசையில் நடைபெறவில்லை; ஆனால் இருவரும் கடுமையாய்ச் சோதிக்கப்பட்டனர் மற்றும் (சோதனையை) எதிர்க்கவும் செய்தனர்; இரண்டு பேருமே ஒரு குறிப்பிட்டக் காலம் வரைக்கும், வேலைக்காரனுடைய ஸ்தானத்தில் காணப்பட்டனர் மற்றும் இழிவாய், அவமானமாய் நடத்தப்பட்டனர்; இருவருமே தங்களுடைய பாடுகளின்போது, தேவ தயவு பெற்றார்கள் மற்றும் இருவருடைய வாழ்வின் நோக்கங்கள் அற்புதகரமான நிலையில் நிலைநாட்டப்பட்டுள்ளது. இருவருக்குமே அவர்களது சத்துருக்கள் சில "வெள்ளிக்காசுகளை" விலையாக நிர்ணயித்தனர் மற்றும் இருவருமே மகிமையான வெற்றியை அடைந்து, வல்லமையின்

வலது பாரிசத்தினிடத்திற்கு உயர்த்தப்பட்டார்கள். பார்வோன் தனது இராஜ்யத்தின் வல்லமை அனைத்தையும், யோசேப்பின் கரங்களில் ஒப்படைத்தார்; "நீ என் அரமனைக்கு அதிகாரியாயிருப்பாய்; உன் வாக்கின்படியே என் ஜனங்கள் எல்லாரும் அடங்கி நடக்கக்கடவர்கள்; சிங்காசனத்தில் மாத்திரம் உன்னிலும் நான் பெரியவனாய் இருப்பேன் என்றான். பின்னும் பார்வோன் யோசேப்பை நோக்கி: பார், எகிப்துதேசம் முழுமைக்கும் உன்னை அதிகாரியாக்கினேன் என்று சொல்லி, பார்வோன் தன் கையில் போட்டிருந்த தன் முத்திரை மோதிரத்தைக் கழற்றி, அதை யோசேப்பின் கையிலே போட்டு, மெல்லிய வஸ்திரங்களை அவனுக்கு உடுத்தி, பொன் சரப்பணியை அவன் கழுத்திலே தரித்து, தன்னுடைய இரண்டாம் இரத்தின்மேல் அவனை ஏற்றி, தெண்டனிட்டுப் பணியுங்கள் என்று அவனுக்கு முன்பாகக் கூறுவித்து, எகிப்துதேசம் முழுமைக்கும் அவனை அதிகாரியாக்கினான்" (ஆதியாகமம் 41:40-43).

அதுமுதல் பார்வோன் எதைச் செய்தாலும், அதை யோசேப்பின் வாயிலாகவே செய்தார் மற்றும் எகிப்தினுடைய ஆசீர்வாதத்தை அடைவதற்கான ஒரே வழி, மத்தியஸ்தராகிய யோசேப்பின் மூலம் ஆகும். கிறிஸ்துவும் தேவனுடைய வலது பாரிசத்தினிடத்திற்கு உயர்த்தப்பட்டார் மற்றும் அவர், "பிதாவோடுகூட அவருடைய சிங்காசனத்தில் அமர்ந்தார்" மற்றும் பரலோகத்திலும், பூமியிலும் அவருக்குச் சகல அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருந்தது; "இயேசுவின் நாமத்துக்கு வானோர், பூதலத்தோர், பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்குச் செய்யப்பட்டது;" "தேவதூதர்கள் யாவரும் அவரைத் தொழுதுகொள்ளக்கடவர்கள்" என்றும், "அவர் அனைவருக்கும் கர்த்தர்" என்றும், "அவர் வழியும், சத்தியமும், ஜீவனுமாய் இருக்கின்றார்" என்றும், "அவராலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" என்றும் அவரைக் குறித்துச் சொல்லப்பட்டுள்ளது.

யோசேப்பினுடைய வேலையின் மிகவும் பிரம்மாண்டமான ஓர் அம்சம், தேவையான ஆகாரத்தை அளித்ததாகும் மற்றும் ஆகாரத்திற்காக வேறு எங்கும் செல்ல முடியாது; ஆகவே இது கிறிஸ்துவின் வேலையானது, ஜீவன் அளிப்பதாகும் என்பதைத் தெளிவாய்ச் சுட்டிக்காட்டுகின்றது. "ஜீவ அப்பம் நானே", "நானே சத்தியம்;" "மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்." "நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும், ஜீவனாயும் இருக்கிறது." "ஆண்டவரே, யாரிடத்தில் போவோம், நித்தியஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே" என்று பேதுருவோடுகூட நாமும் சொல்லுகின்றோம். எகிப்தியர்கள் எப்படித் தங்கள் மாம்ச ஜீவனுக்கான ஆதரவுக்காக, யோசேப்பைச் சார்ந்திருந்தார்களோ, அப்படியே அழியாமைக்காகவும், நித்தியமான ஜீவனுக்காகவும் நாம் கர்த்தர் இயேசுவை முழுக்க சார்ந்திருக்கின்றோம் என்பதை நமது வாசகர்கள் அனைவரும் உணர்ந்துகொள்வார்களாக. கிறிஸ்துவில் மாத்திரமே நித்திய ஜீவன் என்பதே சுவிசேஷத்தினுடைய சாரமாக இருக்கின்றது. முதல் மனிதன் அதைப் பெற்றிருக்கவில்லை மற்றும் பெற்றிராததால் அதை இழக்கவுமில்லை. அவன் மாம்சமானவன்; மாம்சம் சோதனைக்குள்ளாக்கப்பட்டு, தோல்வியடைந்தது மற்றும் இதனால் இரண்டாம் மனிதனுடைய தேவை உணர்ந்துகொள்ளப்பட்டது. ஆகாரம்/அப்பம் வேண்டுமானால், யோசேப்பிடம் பசியுடையவர்கள் விண்ணப்பம் பண்ணினது/ வேண்டிக்கொண்டது போன்று, நாமும் அதற்காக வேண்டிக்கொள்ள வேண்டும் என்பதை நினைவில் கொள்வோமாக. "அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிப்பார்" (எபிரெயர் 11:6). ஓ! பசியுள்ளவர்களே, அவரது விலையேறப்பெற்ற சத்தியத்தைப் புசித்துத் திருப்தியடையுங்கள். யோசேப்பு தனது இளம் பிரயாயத்தில் கண்ட சொப்பனங்களை நாம் கவனிக்கத்தவறிட வேண்டாம். யோசேப்பை வெறுத்தவர்களும், அவரை ஒதுக்கித்தள்ளினவர்களுமாகிய அவரது சகோதரர்கள் இறுதியில் யோசேப்பிடம் ஆகாரத்திற்காக வந்தார்கள் மற்றும் மகிழ்ச்சியுடன் அவருக்கு முன்பு பணிந்து கொண்டார்கள். அவர்களால் புறக்கணிக்கப்பட்டவரும், மரித்துப்போனவராக எண்ணப்பட்டவருமான யோசேப்பு, அவர்களது இரட்சகராகவும், உபகாரியாகவுமானார். அவர்கள் (அடையாளமாக) தாங்கள் குத்தினவரை நோக்கிப்பார்த்து, துக்கமடைந்தனர் மற்றும் வெட்கமடைந்தனர், ஆனால் யோசேப்போ அவர்களைப்போஷித்து, அவர்களை மன்னிக்கவும் செய்தார்; "என்னை இவ்விடத்தில் வரும்படி விற்றுப்போட்டதினால், நீங்கள் சஞ்சலப்படவேண்டாம்; அது உங்களுக்கு விசனமாயிருக்கவும் வேண்டாம்;

ஜீவரட்சணை செய்யும்படிக்குத் தேவன் என்னை உங்களுக்கு முன்னே அனுப்பினார். தேசத்தில் இப்பொழுது இரண்டு வருஷமாகப் பஞ்சம் உண்டாயிருக்கிறது; இன்னும் ஐந்து வருஷம் உழவும், அறுப்பும் இல்லாமல் பஞ்சம் இருக்கும். பூமியிலே உங்கள் வம்சம் ஒழியாமலிருக்க, உங்களை ஆதரிக்கிறதற்காகவும், பெரிய இரட்சிப்பினால் உங்களை உயிரோடே காப்பதற்காகவும், தேவன் என்னை உங்களுக்கு முன்னமே அனுப்பினார். ஆதலால் நீங்கள் அல்ல, தேவனே என்னை இவ்விடத்துக்கு அனுப்பி, என்னைப் பார்வோனுக்குத் தகப்பனாகவும், அவர் குடும்பம் அனைத்திற்கும் கர்த்தனாகவும், எகிப்துதேசம் முழுதுக்கும் அதிபதியாகவும் வைத்தார்" (ஆதியாகமம் 45:5-8). தேவனுடைய இரக்கம் போற்றப்படுவதாக!

யூதர்களின் வீட்டைக் கிறிஸ்து பாழாகி போகவிட்டபோது, அது நித்தியக் காலத்திற்குமல்ல மாறாக, "கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்தரிக்கப்பட்டவர் என்று அவர்கள் சொல்லுமளவேயாகும்" (மத்தேயு 23:39). திரும்பக்கொடுத்தலின் வரவிருக்கும் நாட்களில் கர்த்தர் கூறுவதாவது, "நான் தாவீது குடும்பத்தாரின்மேலும் எருசலேம் குடிகளின்மேலும் கிருபையின் ஆவியையும் விண்ணப்பங்களின் ஆவியையும் ஊற்றுவேன்; அப்பொழுது அவர்கள் தாங்கள் குத்தின என்னை நோக்கிப்பார்த்து, ஒருவன்தன் ஒரே பேறானவனுக்காகப் புலம்புகிறதுபோல எனக்காகப் புலம்பி, ஒருவன் தன் தலைச்சன் பிள்ளைக்காகத் துக்கிக்கிறதுபோல எனக்காக மனங்கசந்து துக்கிப்பார்கள்" (சகரியா 12:10). ஆம், யோசேப்பின் சகோதரர்கள் தங்கள் சகோதரனைக் கண்டுபிடித்தபோது துக்கித்து, அவமானம் அடைந்ததுபோன்று, கிறிஸ்துவை இழிவுப்படுத்தின அவரது சகோதரர்கள், அவருக்கு முன்பாக விண்ணப்பிக்க நிற்கும்போது, துக்கிப்பார்கள் மற்றும் தங்களைக் குறித்து வெட்கமடைவார்கள். ஆனால் அது நம்பிக்கையின்மையினால் இல்லாமல், மாறாக செய்த தவறுக்காக வருந்துவதின் நிமித்தமான துக்கித்தலாகும் மற்றும் இது நீண்ட காலமாய்த் தொலைந்து போனவரும், இப்பொழுது கண்டு பிடிக்கப்பட்டவருமான சகோதரனால் தங்களுக்குக் காண்பிக்கப்படும் தயவின் ஆவியினாலேயே ஏற்பட்டதாகும். அவரை இராஜாவாகவும், ஜீவன் அளிப்பவராகவும் காண்பார்கள் மற்றும் அவர் அவர்களைப் பராமரிப்பார். அவர்கள் தங்களையே அவரிடத்தில் ஒப்புவித்துவிடுவார்கள் மற்றும் அவர் அவர்களுக்கு வீட்டையும், அவர்களுக்குத் தேவையான அனைத்தையும் கொடுப்பார். இப்படியாக யோசேப்பு அநேக விதங்களில் கிறிஸ்துவை அடையாளப்படுத்துகின்றார் என்பதையும், இவ்வாறாக யுகங்களைப் பற்றின தேவனுடைய திட்டம் குறித்த நம்முடைய கண்ணோட்டம் உறுதிப்படுத்தப்படுகின்றது என்பதையும் நாம் காண்கின்றோம்.

உண்மையில், தேவன் நல்லவராய் இருக்கின்றார் மற்றும் "அவர் கிருபை என்றுமுள்ளது." "அவருடைய நியாயத்தீர்ப்புகள் அளவிடப்படாதவைகள், அவருடைய வழிகள் ஆராயப்படாதவைகள்" என்று நாமும் சொல்லுகின்றோம். நம்மால் கண்டுபிடிக்க முடியாதவைகளை, அவரால் வெளிப்படுத்த முடியும் மற்றும் "தேவன் அருளிய சொல்லிமுடியாத ஈவுக்காக அவருக்கு ஸ்தோத்திரம்." மற்றும் அவரது திட்டம் மற்றும் அன்பு பற்றி அவர் நமக்குக் கொடுத்துள்ள கண நேரக்கண்ணோட்டத்திற்கும் அவருக்கு ஸ்தோத்திரம். "அவர் தம்முடைய ஆவியில் நமக்குத் தந்தருளினதினாலே" நாம் ஒருவரையொருவர் அன்புகூருகின்றோம் (1 யோவான் 4:8). "அவர் முந்தி நம்மிடத்தில் அன்பு கூர்ந்தபடியால், நாமும் அவரிடத்தில் அன்புகூருகிறோம்" (1 யோவான் 4:19).

---

# "யோசேப்பும், அவரது சகோதரர்களும்"

*- சகோதரர் ராபர்ட் எஸ். ஷெக்லீமியன்*

இன்று நாம் யோசேப்பினுடைய கதையைப் பார்க்கப்போகின்றோம்; இச்சம்பவங்கள் ஆதியாகமம் புஸ்தகத்தின் 37, 39 முதல் 50-ஆம் அதிகாரங்களில் காணப்படுகின்றது. உண்மை சம்பவப் பதிவை நாம் வாசித்தோமானால், நீண்ட நேரம் எடுத்துக்கொள்ளும், ஆகையால் நாம் சம்பவங்களைச் சுருக்கமாய்த் தொகுத்துக் கூறிவிட்டு, பிற்பாடு அதிலிருந்து கற்க வேண்டிய படிப்பினைகளை நாம் பார்க்கலாம்.

ஆபிரகாமின் பேரனும், இஸ்ரயேல் என்று மறு பெயரிடப்பட்டவருமான யாக்கோபு, தனது மனைவியாகிய ராகேலை விசேஷமாய் நேசித்தார். அவளுடைய முதற்பிறப்பு யோசேப்பு ஆவார். ராகேல் மற்றொரு குமாரனாகிய பென்யமீனை பெற்றெடுக்கையில் மரித்துப்போனாள். ராகேலினுடைய மரணத்தினிமித்தம் யாக்கோபு மிகவும் துக்கப்பட்டார் மற்றும் ராகேல் மரித்துப்போய்விட்டதால், யாக்கோபினுடைய அதிகப்படியான அன்பானது, அவளது பிள்ளைகள் மீது, அதிலும் விசேஷமாக முதற்பேறான யோசேப்பின் மீது, பொழியப்பட்டது. யாக்கோபிற்கு யோசேப்பைத் தவிர இன்னும் பதினொரு குமாரர்கள் இருந்தார்கள், ஆனாலும் யோசேப்பே அவரது அபிமான குமாரனாக இருந்தார். யாக்கோபு தனது பாரபட்சத்தினைப் பல்வேறு விதங்களில் வெளிப்படுத்தினார். உதாரணத்திற்கு, பல வருணங்களினாலும், பல துண்டுகளினாலுமான அங்கி ஒன்றை, அதாவது பிரபுக்கள் அணிகின்றது போன்றதான அங்கி ஒன்றை யாக்கோபு, யோசேப்பிற்காகச் செய்வித்தார். இப்படியாக யோசேப்புதான் சுதந்தரவாளி என்பதைக் குடும்பத்தில் மீதமுள்ளோருக்கு யாக்கோபு அநேகமாக சுட்டிக்காண்பித்திருக்க வேண்டும். மற்றப் பத்துச் சகோதரர்களும் பொறாமை அடைந்தனர். "அவர்கள் அவனோடே பட்சமாய்ப் பேசாமல் அவனைப் பகைத்தார்கள்" என்று வசன பதிவுகள் தெரிவிக்கின்றது.

இருக்கின்ற பிரச்சனைப் போதாதது போன்று யோசேப்பு ஒரு விநோதமான சொப்பனத்தைக் கண்டவராக அதைக் கள்ளங்கபடமில்லாமல், தன்னுடைய சகோதரர்களிடத்தில் கூறினார். சொப்பனத்தில் அவர்கள் வயலில் அரிகளைக் கட்டிக்கொண்டிருக்கையில், யோசேப்பின் அரிக்கட்டானது நிமிர்ந்து நிற்க, அவரை வட்டமாகச் சுற்றி நின்ற அவரது சகோதரர்களுடைய அரிக்கட்டுகளானது, யோசேப்பினுடைய கட்டிற்கு முன்பாக வணங்கினது. இந்தச் சொப்பனத்தின் காரணமாக, "அவனை இன்னும் அதிகமாய்ப் பகைத்தார்கள்" என்று பதிவுகள் தெரிவிக்கின்றது. பின்னர் மீண்டுமாக யோசேப்பு சொப்பனம் கண்டார். இம்முறை சூரியனும், சந்திரனும் மற்றும் பதினொரு நட்சத்திரங்களும் அவரை வணங்கினது. இச்சொப்பனத்தை யோசேப்பு கூறினபோது, "நீ கண்ட இந்தச் சொப்பனம் என்ன? நானும், உன் தாயாரும் உன்னை வணங்க வருவோமோ? என்று யாக்கோபு அவரைக் கடிந்துகொண்டார்." இதுவே போதும்; யோசேப்பின் சகோதரர்களுடைய பகைமையானது, பொறாமையினாலான வெஞ்சினமாய் அவதாரமெடுத்தது. இம்மனநிலைமையே, அவர்கள் தங்கள் மந்தைகளுக்காக மேய்க்கும் பகுதிகளைக் கொஞ்சம் தொலைவில் போய்க் கண்டுபிடிப்பதற்கெனத் தங்கள் வீட்டைவிட்டு வெளியேறினபோது காணப்பட்டது. அவர்கள் வெளியேறி, நீண்ட நாட்களானபோது, அவர்களது தகப்பன் அவர்களைக் குறித்துக் கவலை அடைந்தவராக, அவர்கள் எப்படி இருக்கின்றார்கள் என்பதைப் பார்ப்பதற்கும் மற்றும் திரும்பி, தனக்குச் செய்தி கொண்டுவருவதற்கும் என்று யோசேப்பை அனுப்பி வைக்கலாமென முடிவெடுத்தார். யோசேப்பையும், அவரது மேம்பட்ட நிலை குறித்ததான சொப்பனத்தையும், அவரது சகோதரர்கள் வயல்வெளியில் முற்றிலும் விவாதம் பண்ணியிருப்பார்கள் என்பதை நம்மால் கற்பனை செய்து பார்க்க முடிகின்றது. இப்படி ஒருவருக்கொருவர் மனக்குறையினால், குறைகூறினபோது, அவர்களது பகைமையினை இன்னுமாகத் தூண்டினது. இப்படியாக அவர்கள் பொறாமையினாலான வெஞ்சினத்தின் வெறியில் காணப்படுகையில், அவர்கள் கூட்டத்திற்குக் காவலாளாக நியமிக்கப்பட்டிருந்தவர் "இதோ வருகிறான்! சொப்பனக்காரன் வருகிறான்" என்று சத்தமிட்டார்.

அப்பகுதியிலுள்ள தெளிவான காற்றில், நெடுந்தொலைவில் ஒருவர் வருவதைத் தெளிவாய்க் காணமுடியும். வருவது யோசேப்பு என்று அவர்கள் எளிதில் அடையாளங்கண்டுகொண்டார்கள்; பிரகாசமான வருணங்களும், அநேகம் துண்டுகளினால் செய்யப்பட்டதுமான அவருடைய நீள அங்கியை வைத்து, அவரை அடையாளங்கண்டு கொண்டார்கள். ஒவ்வொரு சகோதரனுக்கும் உடனடியாக, "இப்பொழுது யோசேப்பு தங்கள் வல்லமைக்குக் கீழ் இருக்கின்றார்!" என்ற ஒரே எண்ணம் உதித்தது. யோசேப்பைப் பாதுகாத்திடுவதற்கு அவரது தந்தை இங்கில்லை. தங்களால் பகைக்கப்பட்டவர், தங்கள் கரங்களில் இப்பொழுது காணப்படுகின்றார். யோசேப்பு கள்ளங்கபடமில்லாமல் வந்து கொண்டிருக்கையில், அதுவும் அநேகமாக அவர் மகிழ்ச்சியுடன் அவர்களை நோக்கி கைகளை அசைத்துக்காட்டி வந்துகொண்டிருக்கையில், அவர்கள் அவசரமாய்க் கூட்டங்கூடி எடுத்துக்கொண்ட ஒருமித்த தீர்மானம் பின்வருமாறு: "நாம் அவனைக் கொன்று, இந்தக் குழிகள் ஒன்றில் அவனைப் போட்டு, ஒரு துஷ்டமிருகம் அவனைப் பட்சித்தது என்று சொல்லுவோம் வாருங்கள்; அவனுடைய

சொப்பனங்கள் எப்படி முடியும் பார்ப்போம் என்றார்கள்" (ஆதியாகமம் 37:20).



## "யோசேப்பின் சகோதரருடைய பகைமை"

அவர்களது பகைமை மிக அதிகமாய்க் காணப்பட்டது; அவர்களில் ஒருவர் மாத்திரமே இந்தத் தீர்மானத்திற்கு மாறுபட்ட கருத்துத் தெரிவித்தவராய்க் காணப்பட்டார். இவர் மூத்த குமாரனாகிய ரூபன் ஆவார். இவர் சமாதானமான ஓர் ஆலோசனையைத் தெரிவித்தார்; "யோசேப்பினுடைய இரத்தத்தை நீங்கள் சிந்தலாகாது," "யோசேப்பை இந்தக் குழிக்குள்ளே உயிரோடே போட்டுவிடுங்கள்" என்று கூறினார். பிற்பாடுவந்து, யோசேப்பைக் குழியிலிருந்து விடுவிப்பதற்கு ரூபன் சித்தங்கொண்டிருந்ததாகப் பதிவுகளானது தெரிவிக்கின்றது. இவ்வாலோசனைக்கு உடனடியாகச் சம்மதம் தெரிவிக்கப்பட்டது. யோசேப்பு பக்கத்தில் வந்தபோது, அவரை முரட்டுத்தனமாய் அவர்கள் பிடித்திழுத்து அவரது பலவருண அங்கியைக் கழற்றி, அவரை ஆழமான வறண்ட கிணற்றிற்குள் எறிந்தார்கள்; இக்கிணற்றிலிருந்து உதவியில்லாமல் அவரால் வெளியே வரமுடியாது. பிற்பாடு யோசேப்பினுடைய பொறுக்க முடியாத வலியினாலான கதறல்களும், அவரது கெஞ்சுதல்களும் அவர்களது காதுகளில் தொனித்துக்கொண்டிருக்கவே, அவர்கள் உணவு உண்பதற்கென உட்கார்ந்தார்கள். இப்படியான ஒரு சந்தர்ப்பத்தில் அவர்களால் உணவு உண்ண முடிகின்றதான காரியமானது, அவர்களது இருதயங்களினுடைய கடினத்தை வெளிப்படுத்துகின்றதாய் இருக்கின்றது.

இக்கட்டத்தின்போது, இரக்க பண்பு கொண்டிருந்த ரூபன், அங்கிருப்பதைத் தவிர்த்துக்கொண்டு, மந்தைகளைப் பராமரிக்கும்படி போயிருந்திருக்க வேண்டும், ஏனெனில் எகிப்துக்கு ஒட்டகங்கள் மீது ஏறி போய்க்கொண்டிருக்கும் கூட்டத்தார் வந்தபோது, ரூபன் அங்கிருக்கவில்லை. யூதா ஆலோசனை ஒன்றை முன்வைத்தார். ஏன் இச்சந்தர்ப்பத்தை இலாபம் ஈட்டுவதற்கென்று பயன்படுத்திடக்கூடாது? யோசேப்பு குழியில் காணப்பட்டு மரிப்பதற்குப் பதிலாக, அவரை ஏன் அடிமையாக விற்கக்கூடாது? ஆகவே அவர்கள் குழிக்குள் கயிற்றை இறக்கினார்கள்; தனது சகோதரர்கள் மனமிரங்கி விட்டார்களென எண்ணி, ஆர்வமாய்க் கயிற்றைப் பிடித்துக்கொண்டு வெளியே வந்த யோசேப்பு, தான் இருபது வெள்ளிக்காசுகளுக்கு, சில மீதியானிய அடிமை வியாபாரிகளிடத்தில், கட்டப்பட்டு மிருகம் போன்று விற்கப்பட்டதையே கண்டார். அந்நாட்களில் முழு வளர்ச்சியடைந்த அடிமைக்கான விலை முப்பது வெள்ளிக்காசுகளாகும். யோசேப்பு பதினேழு வயதானவராக இருந்தபடியால், அவருக்கான விலை இருபது வெள்ளிக்காசுகளாய் இருந்தது. யோசேப்பு வியாபாரிகளினால் இழுத்துச் செல்லப்படும்போது, அவர் மீண்டும் கதறினார், இரங்கும்படியாக தனது சகோதரர்களிடம் கெஞ்சினார், ஆனால் அவர்கள் வெள்ளிக்காசுகளைப் பங்குபோடுவதில் ஈடுபட்டிருந்தனர். அவர்கள் ஒவ்வொருவருக்கும் இரண்டு முழு வெள்ளிக் காசுகள் கிடைத்திருக்கும். சுற்றித்திரிந்துவிட்டு வந்த ரூபன், யோசேப்பை விடுவிப்பதற்கெனக் கிணற்றண்டைக்கு வந்தார். யோசேப்பு அங்கில்லாததைக் கண்ட இவர், உண்மையாகக் கவலைக்குள்ளானார், ஆனால் இப்பொழுது காலம் கடந்துபோய்விட்டது.

பிற்பாடு அந்தச் சகோதரர்கள் மிகவும் கொடூரமான மற்றும் மனக்கடினமுமான காரியத்தைச் செய்தார்கள். அவர்கள் யோசேப்பினுடைய பலவருண அங்கியை எடுத்து, அதை ஆட்டினுடைய இரத்தத்தில் தோய்த்து, தந்தையினால் மிகவும் நேசிக்கப்பட்ட யோசேப்பின் வருகைக்காகக் கவலையுடன் காத்துக்கொண்டிருந்த தங்கள் பாவப்பட்ட வயதான தந்தையினிடத்திற்கு எடுத்துச் சென்றார்கள். "இதை நாங்கள் கண்டெடுத்தோம்" என்றார்கள் அந்தச் சகோதரர்கள். "இது உம்முடைய குமாரனின் அங்கி அல்லவோ, பாரும்" என்றார்கள். யாக்கோபு தெளிவான முடிவிற்குள் வந்தார். யோசேப்பு ஏதோ ஒரு காட்டுவிலங்கினால் பீறப்பட்டுக் கொல்லப்பட்டிருக்கின்றார். அப்பகுதிகளில் சிங்கங்கள் மற்றும் கரடிகள் காணப்பட்டன. யாக்கோபின் துக்கம் ஆழமானதாய்க் காணப்பட்டது. அவர் ஆறுதலுக்கு இடம் கொடாமல், "நான் துக்கத்தோடே என் குமாரனிடத்தில் பாதாளத்தில் இறங்குவேன்" என்றார்.

யோசேப்பின் வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றமானது தீர்க்கமானதாயும், முற்றும் முழுமையானதாயும் இருந்தது. பாசத்திற்கும், பிரியத்திற்குமுரிய குமாரனாகவும், தனது தந்தையினுடைய வீட்டில் அன்பாய் வளர்க்கப்பட்டவராகவும் இருந்த யோசேப்பு திடீரென அந்நிய புறஜாதியார் தேசத்தில் அடிமை நிலைமைக்கு மாற்றப்பட்டார். இதனோடுகூட அவர் தனது சொந்த சகோதரர்களுடைய கொலைப்பாதகமான பகைமையையும், மனமார்ந்த கொடூரத்தையும் கண்டதினால் ஏற்பட்ட கசப்பான அனுபவத்தையும், வீட்டைப்பற்றிய ஏக்கத்தையும், தனது தகப்பன் அடையப்போகிற துக்கத்தைப் பற்றின எண்ணத்தையும் மற்றும் தனிமையையும் சுமந்தவராகக் காணப்பட்டார்.

## "எகிப்தில் யோசேப்பினுடைய அனுபவங்கள்"

எகிப்தை அடைந்தபோது, யோசேப்பு அக்காலக்கட்டத்தினுடைய வழக்கத்தின்படி திறந்த வெளிச்சந்தையில், விற்பனைக்காகப் பார்வைக்குக்கொண்டு நிறுத்தப்பட்டார். அடிமைகளை வாங்குபவர்கள் என்பவர்கள் உயர் ஸ்தானத்தில் இருப்பவர்களாகவும், உயர்க்குடியைச் சார்ந்தவர்களாகவும், இராஜாவினுடைய அதிபதிகளாகவும், ஐசுவரியமான வணிகர்களாகவும், அதிகமான நிலங்களுக்கு உரிமையாளர்களாகவும், காணப்படும் மனுஷர்களாகக் காணப்பட்டனர். அடிமைகளுக்கு அதிக விலைக்கொடுக்க வேண்டியிருந்தது. அடிமைகளின் எஜமான் மற்றவர்களைக் காட்டிலும் யோசேப்பை மிகவும் சிறப்பானவராகக் காட்டிக்கொள்வதை நம்மால் கற்பனை செய்து பார்க்க முடிகின்றது; அவர் பின்வருமாறு கூறியிருந்திருக்க வேண்டும்:


"மேன்மக்களே, நாங்கள் இன்று மிகவும் சிறப்பானதொன்றை வைத்திருக்கின்றோம். ஓர் எபிரெய இளைஞன்! இம்மனிதன், ஓர் உயர்வான இனத்திலிருந்து வந்தவனாவான். இவன் பலசாலி

மாத்திரமல்லாமல், மிகுந்த அறிவாளியுங்கூட. இவனது பெரிய நெற்றியைப் பாருங்கள்! இவனை விலைக்கு வாங்குகிறவருக்கு, இவன் தலைச்சிறந்த மற்றும் நம்பத்தக்க வேலைக்காரனாவான். மேன்மக்களே ஏலத்திற்கு என்ன விலை கூறுகின்றீர்கள்?"

இப்படியாகத்தான் யோசேப்பை, பார்வோனுடைய பிரதானியும், தலையாரிகளுக்கு அதிபதியுமாகிய போத்திபார் விலைக்கு வாங்கினார்.

யோசேப்பு தனது தகப்பனிடமிருந்து அநேகம் சிறந்த பண்புகளைச் சுதந்தரித்துக் கொண்டவராகக் காணப்பட்டார். ஆபிரகாமின் தேவனிடத்திலான பலமான விசுவாசமுள்ள சூழ்நிலையில் யோசேப்பு வளர்க்கப்பட்டவர் ஆவார். குழந்தைப் பருவம் முதல், அவர் உயர் கொள்கைகளை மனதில் பதிய வைக்கப் பெற்றவராவார்; அவர் நேர்மையுள்ள, மனசாட்சிக்குக் கட்டுப்பட்ட மற்றும் உண்மையுள்ள வாலிபனாவார். இன்றுபோல் அன்றும் முற்றும் முழுமையான உண்மைத்தன்மை என்பது அபூர்வமானதாகவே காணப்பட்டது. இந்த உண்மைத்தன்மையை யோசேப்பிடம் உடனடியாக அடையாளங்கண்டுகொண்ட அவரது எஜமான், அவருக்கு அதிகமதிகமான பொறுப்புகளைக் கொடுத்தார். "யோசேப்பு செய்கிற யாவையும் கர்த்தர் வாய்க்கப்பண்ணுகிறார்" என்பதாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளது. இதையுங்கூட அவரது எஜமான் கவனித்தார். யோசேப்பு இருபத்திரண்டு வயதான போது, அவர் போத்திபாரின் வீட்டனைத்தின் மீது விசாரணைக்காரனாக்கப்பட்டார். போத்திபாருடைய முழு நம்பிக்கையையும், விசுவாசத்தையும் யோசேப்பு பெற்றுக்கொண்டார். "போத்திபார் தனக்கு உண்டானதை எல்லாம் யோசேப்பின் கையிலே ஒப்புக்கொடுத்தார்" என்று நாம் வாசிக்கின்றோம்.

யோசேப்பு இந்தப் பொறுப்பில் கிட்டத்தட்ட ஐந்து வருடங்களாகக் காணப்பட்டார், பிற்பாடு பெருந்துன்பம் அவர்மேல் வந்தது. யோசேப்பு திட்டமிடாமலேயே, போத்திபாருடைய மனைவியினால் விரும்பப்பட்டவரானார். யோசேப்பு கொள்கைகளுக்கு உறுதியாய் இருந்த காரியமானது, அவளைச் சினமூட்டியது. அவள் அவர்மேல் பொய்யாய்க் குற்றஞ்சாட்டினாள் மற்றும் அவர் சிறையில் போடப்பட்டார் மற்றும் அவர் மிக வெறுக்கத்தக்க குற்றம் புரிந்தவராகக் காண்பிக்கப்பட்டார்; அதாவது அவர் தனது எஜமானும், உபகாரியுமானவருக்கு நம்பிக்கைத் துரோகம் புரிந்தவராகக் காண்பிக்கப்பட்டார். இம்மாதிரியான ஒரு சந்தர்ப்பத்தை **ஷேக்ஸ்பியர்** பின்வருமாறு விளக்குகின்றார், அதாவது "**நரகத்தைவிட, பெண்ணிற்கு ஏற்படும் வெறுப்பினிமித்தமான சீற்றமே பெரிது.**" "யோசேப்பின் எஜமான் அவனைப் பிடித்து, ராஜாவின் கட்டளையால் காவலில் வைக்கப்பட்டவர்கள் இருக்கும் சிறைச்சாலையிலே அவனை ஒப்புவித்தான். அந்தச் சிறைச்சாலையில் அவன் இருந்தான்" என்பதாக நாம் வாசிக்கின்றோம் (ஆதியாகமம் 39:20). யோசேப்பிற்கு எதிரான தனது மனைவியின் குற்றச்சாட்டினைப் போத்திபார் தனது இருதயத்தில் உண்மையில் நம்பவில்லை என்று நான் (ஆசிரியர்) எண்ணுகின்றேன். ஒருவேளை நம்பியிருந்திருப்பாரானால், அவர் நிச்சயமாய் யோசேப்பைக் கொன்றுபோட்டிருப்பார். போத்திபார் இராஜாவின் பிரதானியாகவும், தலையாரிகளுக்கு அதிபதியாகவும் காணப்பட்டவர் ஆவார்; யோசேப்பு வெறும் அடிமை தான். (ஒருவேளை யோசேப்பைக் கொன்றுபோட்டாலும்) யாரும் போத்திபாரைக் கேள்வி கேட்கப் போவதில்லை. ஆனால் கொன்றுபோடுவதற்குப் பதிலாக யோசேப்பை, போத்திபார் சிறையில் அடைத்தார்.



சிறைச்சாலைத் தலைவன், யோசேப்பிடம் நிர்வாகத் திறமைக் காணப்பட்டபடியால் அவரைப் பெற்றுக்கொண்டதில் மகிழ்ச்சிக் கொண்டவராக, யோசேப்பின் தாலந்துகளை வேலையில் பயன்படுத்தினார். யோசேப்பு கைதியாக இருந்தப்போதிலும் அவர் கொஞ்ச காலத்திற்குள்ளாகவே சிறைச்சாலையின் காரியங்கள் மீதான முழுப்பொறுப்பையும் பெற்றுக் கொண்டவரானார். மீண்டுமாக, "கர்த்தர் யோசேப்போடே இருந்தபடியால், அவர் எதைச் செய்தாரோ, அதைக் கர்த்தர் வாய்க்கப்பண்ணினார்" என்பதாக நாம் வாசிக்கின்றோம்.

அது இராஜாவினுடைய சிறைச்சாலையாக இருந்தபடியால், அங்கிருந்த கைதிகள் அனைவரும் குற்றவாளிகளாக இருக்கவில்லை. சில சமயம் அங்குக் காணப்பட்ட கைதிகள் அரசியல் கைதிகளாக அல்லது இராஜாவினுடைய கோபத்திற்குத் தற்காலிகமாக ஆளானவர்களாக மாத்திரம் காணப்பட்டனர். ஒருநாள் பார்வோன் தனது பிரதானிகளில் இரண்டு பேர்மேல் கோபம் அடைந்தார்; இவர்களில் ஒருவர் பானபாத்திரக்காரரின் தலைவனாகவும், மற்றொருவர் சுயம்பாகிகளின் தலைவனாகவும் காணப்பட்டனர். பானபாத்திரக்காரரின் தலைவன் என்பவன் பார்வோனின் வீட்டாரிலேயே உயர்ந்த பிரதானி ஆவார், அதாவது இராஜ காரியதரிசி/செயலாளர் போன்றவர் ஆவார். சுயம்பாகிகளின் தலைவன் என்பவன் சமையல் சார்ந்த விஷயங்களினுடைய நிர்வாகியாகவும், இராஜ குடும்பம் மற்றும் சமையலறை மற்றும் உணவுகள் சார்ந்த விஷயத்திலான பொதுவான விசாரணைக்காரனாகவும் காணப்பட்டான். இவர்கள் இருவரும் யோசேப்போடு, அதே சிறையில் அடைக்கப்பட்டனர் மற்றும் இவர்களைக் கவனிக்கும் பொறுப்பு யோசேப்பினுடையதாய் இருந்தது. ஆகையால் இவர்களோடு யோசேப்பு நன்கு பழகி, பார்வோனின் அரசவை/அரமனையின் முறைமைகள் மற்றும் பழக்கவழக்கங்கள் அநேகவற்றைக் கற்றுக்கொண்டார். இந்தத் தகவல்களானது, பிற்பாடு அவருக்கு உதவப் போவதாக இருந்தது.

## "யோசேப்பு சொப்பனங்களுக்கான அர்த்தத்தை விவரிக்கின்றார்"

ஒருநாள் காலையன்று, யோசேப்பு அந்த இரண்டு கைதிகளும் துக்கமாய் இருப்பதைக் கவனித்தவராக, "உங்கள் முகங்கள் இன்று துக்கமாயிருக்கிறது என்ன?" என்று கனிவோடு விசாரித்தார். யோசேப்பினுடைய சொந்த அனுபவங்களானது, அவரை மற்றவர்கள்பால் மன உருக்கம் கொண்டிருக்கச் செய்தது. அவரால் மற்றக் கைதிகளினுடைய துக்கங்களையும், அவமானங்களையும் உணர்ந்துகொள்ள முடிந்தது, ஏனெனில் அவரும் இவ்வனுபவங்களுக்குள்ளாகக் கடந்து சென்றிருந்தவராய்க் காணப்பட்டார். அன்று காலையில் அவர்கள் துக்கமாய் இருந்ததை யோசேப்பு கவனித்து, அவர்கள்பால் உண்மையில் அக்கறைக் கொண்டிருந்தார்.

பானபாத்திரக்காரர்களின் தலைவனும், சுயம்பாகிகளுக்குத் தலைவனுமாகிய, இருவரும் முந்தின இரவில் சொப்பனம் கண்டார்கள் என்றும், அச்சொப்பனங்களின் அர்த்தம் என்னவாக இருக்கும் என்ற எண்ணத்தினால் தாங்கள் கவலையும், துக்கமும் கொண்டுள்ளார்கள் என்றும் யோசேப்பிடம் கூறினார்கள். தன் மூலமாக தேவன் அவர்களுக்கு அர்த்தத்தை வெளிப்படுத்தலாம் என்று கூறி, தன்னிடம் சொப்பனங்களைக் கூறுமாறு அவர்களிடம் யோசேப்பு கூறினார். பானபாத்திரக்காரன் முதலாவதாக தனது சொப்பனத்தைக் கூறினார் மற்றும் அர்த்தத்தைத் தெரிவிக்கத்தக்கதாக, தேவன் யோசேப்பினுடைய மனதை வெளிச்சமூட்டினார்; பானபாத்திரக்காரன் பார்வோனால் மன்னிக்கப்படப் போகின்றார் என்றும், இன்னும் மூன்று நாளுக்குள்ளாக, அவர் மறுபடியும் அவரது நிலையிலே நிறுத்தப்படப்போகிறார் என்றும் யோசேப்பு அர்த்தம் கொடுத்தார். பின்னர் யோசேப்பு பானபாத்திரக்காரனிடம் பரிதாபகரமான மன்றாட்டை ஏறெடுத்தார்; இது யோசேப்பு தன்னுடைய விடுதலைக்காக எவ்வளவு ஏக்கம் கொண்டிருந்தார் என்பதைக் காட்டுகின்றதாய் இருக்கின்றது. யோசேப்பு பின்வருமாறு கூறினார்:

"நீ வாழ்வடைந்திருக்கும்போது என்னை நினைத்து, என்மேல் தயவுவைத்து, என் காரியத்தைப் பார்வோனுக்கு அறிவித்து, இந்த இடத்திலிருந்து என்னை விடுதலையாக்கவேண்டும். நான் எபிரெயருடைய தேசத்திலிருந்து களவாய்க் கொண்டுவரப்பட்டேன்; என்னை இந்தக் காவல் கிடங்கில் வைக்கும்படிக்கும் நான் இவ்விடத்தில் ஒன்றும் செய்யவில்லை" (ஆதியாகமம் 40:14, 15).

அடுத்துச் சுயம்பாகி தனது சொப்பனத்தைக் கூறினார். மீண்டுமாக தேவன் அர்த்தத்தைப் பற்றி யோசேப்பின் மனதிற்குத் தெளிவுப்படுத்தினார். அர்த்தத்தைத் தெரிவிப்பதற்கு யோசேப்பிற்கு வேதனையாக இருந்தது. இன்னும் மூன்று நாளுக்குள்ளாகச் சுயம்பாகி தூக்கிலிடப்படுவார் என்று யோசேப்பு அவரிடம் தெரிவித்தார். மூன்று நாட்களுக்குள்ளாகவே இரண்டு காரியங்களும் சொன்னப் பிரகாரமாகவே நடந்தது. பானபாத்திரக்காரன் மீண்டுமாக தனது நிலையில் நிறுத்தப்பட்டார் மற்றும் அவர் மீண்டுமாகப் பானபாத்திரத்தைப் பார்வோனின் கரங்களில் கொடுக்கும் பணியைத் தொடர்ந்தவரானார். ஆனால் பானபாத்திரக்காரன் யோசேப்பையும், அவரது வேதனை கலந்த மன்றாட்டையும் மறந்துபோனார். இதற்குப் பின்னர், யோசேப்பு இரண்டு வருடங்கள் சிறையில் காணப்பட்டார். இப்பொழுது அவருக்கு முப்பது வயதாக இருந்தது.

பிற்பாடு ஒரே இரவில் பார்வோன் இரண்டு சொப்பனங்களைக் கண்டார். இவைகள் சாதாரணமான சொப்பனங்கள் அல்ல. அச்சொப்பனங்கள் மிகவும் கவனத்தை ஈர்க்கின்றதாகவும், உணர்வுகளில் ஆழப் பதிந்தவைகளாகவும் காணப்பட்டப்படியால், அவைகளுக்கு விசேஷித்த அர்த்தம் இருக்குமெனப் பார்வோன் அறிந்துகொண்டார். முதலாம் சொப்பனத்தில் பார்வோன் ஏழு புஷ்டியுள்ள பசுக்கள் நதியிலிருந்து ஏறிவந்து நின்றதாகக் கண்டார்; கொஞ்ச நேரம் கழித்து அவலட்சணமும், கேவலமுமான வேறு ஏழு பசுக்களும் நதியிலிருந்து ஏறி வந்து நின்றதைக் கண்டார்; இவைகளைப் பார்க்கிலும் அவலட்சணமான பசுக்களை அவர் வேறு எங்குமே கண்டதில்லை. கேவலமான பசுக்கள், புஷ்டியான பசுக்களைப் பட்சித்துப்போட்டது மற்றும் பட்சித்துப்போட்ட பிற்பாடும் அந்தக் கேவலமான பசுக்கள் புஷ்டியடையவில்லை என்பதாகக் கண்டார். இரண்டாம் சொப்பனத்தில், பார்வோன் செழுமையான ஏழு கதிர்கள் ஒரே தாளிலிருந்து ஓங்கி வளர்ந்ததைக் கண்டார்; இன்னுமாக சாவியானதும், தீய்ந்ததுமானதும், பிரயோஜனமற்றதுமான ஏழு கதிர்கள் முளைத்ததையும் கண்டார்; இதை அவர் பார்த்துக்கொண்டிருக்கையில் சாவியான கதிர்கள், அந்தச் செழுமையான ஏழு கதிர்களையும் விழுங்கிப்போட்டது; விழுங்கின பிற்பாடும் சாவியான கதிர்கள், செழுமையாய்க் காணப்படவில்லை. பார்வோன் சொப்பனத்தின் அர்த்தத்தைத் தனக்கு விளக்கும்படிக்கு, தனது சாஸ்திரிகளையும், மந்திரவாதிகளையும் அழைத்தார். ஆனால் அவர்கள் எவராலும், அவருக்குச் சொப்பனத்தினுடைய அர்த்தத்தைக் கூற முடியாமல் இருந்த காரியமானது, அவருக்குப் பெருத்த ஏமாற்றமாய் இருந்தது. எப்போதும் பார்வோனுக்கு அருகாமையில் காணப்படுகின்ற பானபத்திரக்காரன், அப்போது இறுதியாக யோசேப்பை நினைவுகூர்ந்தார் மற்றும் இராஜாவிடம், சிறையிலுள்ள ஓர் எபிரெய வாலிபன் எப்படி, தனது மற்றும் சுயம்பாகியினுடைய சொப்பனத்திற்கான அர்த்தத்தைத் துல்லியமாகக் கூறினான் என்பதை எடுத்துக் கூறினார்.

நான் (ஆசிரியர்) பின்வருமாறு கற்பனை செய்து பார்க்க விரும்புகின்றேன்: யோசேப்பை அழைக்கும்படிக்கு ஆட்கள் வந்தபோது, யோசேப்பு விடுதலை வேண்டி, தேவனிடம் ஜெபம் பண்ணிக்கொண்டிருந்தார். சிறைத்தலைவன் தனது முகத்தில் ஆச்சரியத்தை வெளிப்படுத்தினவராக உள்ளே வந்தார். "யோசேப்பு! இராஜா உன்னை அழைத்துள்ளார்! மாபெரும் பார்வோன் உன்னைப் பார்க்க விரும்புகின்றாராம்!" யோசேப்பு ஆச்சரியத்திற்குள்ளாகவில்லை. யோசேப்பு இதற்காக மிக நீண்ட காலமாய்க் காத்துக் கொண்டிருந்தார். இருதயம் முழுக்க நன்றியினால் நிரம்பப்பெற்றவராக, வேகவேகமாய்க் குளித்தார், சவரம் பண்ணினார் மற்றும் தனது வஸ்திரங்களை மாற்றிக்கொண்டார். தேவன் மீதான விசுவாசத்தின் காரணமாக உண்டான அமைதியையும், நிச்சயத்தையும் கொண்டவராக, யோசேப்பு உலகத்தினுடைய வல்லமையுள்ள பேரரசனாகிய பார்வோனைச் சந்தித்தார். பார்வோன் யோசேப்பை நோக்கி, "சொப்பனங்களுக்கு அர்த்தம் கொடுக்கும் திறன் உனக்குள்ளது என்று நான் உணர்கின்றேன்" என்றார். யோசேப்போ தன்னடக்கத்துடன், "நான் அல்ல, தேவனே பார்வோனுக்கு உத்தரவு அருளிச் செய்வார்" என்றார்.

"இந்நேரத்திலா தன்னடக்கம்!" என்று சிலர் கூறலாம். யோசேப்பு அடிமையாகப் பத்து வருடங்கள் காணப்பட்டிருந்திருக்கின்றார் மற்றும் சிறையில் மூன்று வருடங்கள் காணப்பட்டிருக்கின்றார். இராஜாவின் முன் மின்னிடுவதற்கான மாபெரும் வாய்ப்பு யோசேப்பிற்கு வந்தபோது, அதை அவர் தூக்கி எறிந்துவிட்டார். தன்னடக்கம் என்பது பொதுவாகக் குணலட்சணத்தினுடைய மேன்மையைச் சுட்டிக்

காட்டுகின்றதாய் இருக்கின்றது. கூர்மையாய்க் கவனிக்கும் பார்வோனின் கண்களுக்கு இக்குணம் தப்பிவிடவில்லை. பார்வோன் தனது சொப்பனங்களை யோசேப்பிடம் கூறினார். மீண்டுமாகக் கர்த்தர் யோசேப்பினுடைய மனதை வெளிச்சமூட்டினார் மற்றும் இரண்டு சொப்பனங்களுமே ஒரே காரியத்தையே குறிக்கின்றது என்றும், இரண்டு முறை ஒரே காரியம் சொப்பனமாக வந்துள்ளதான விஷயம், அதன் நிச்சயத்தை வலியுறுத்துகின்றது என்றும் யோசேப்பு பார்வோனிடம் விளக்கினார். ஏழு வருடங்கள் எகிப்து தேசத்தில், பரிபூரணமான விளைவு காணப்படும் என்றும், பிற்பாடு ஏழு வருடங்கள் பஞ்சம் காணப்பட்டு, பரிபூரணமான விளைவு காணப்பட்ட வருடங்களினுடைய திரளான விளைவுகளை முற்றிலுமாய்த் தீர்த்துப்போடும் என்றும் யோசேப்பு விளக்கம் கொடுத்தார். பரிபூரணமான விளைவுள்ள ஏழு வருடங்களின் திரளான விளைவு அனைத்தையும் வாங்கிடுவதற்கும் மற்றும் அதனை ஏழு வருட பஞ்ச காலத்திற்கான தேவைக்குப் பயன்படுத்துவதற்கெனச் சேகரித்து வைப்பதற்கும் இராஜா நம்பிக்கைக்குப் பாத்திரமான ஒரு பிரதிநிதியை நியமிக்கும்படியான ஆலோசனை ஒன்றை யோசேப்பு அருளினார்.

பார்வோன் இத்திட்டத்திலுள்ள ஞானத்தினால் உடனடியாகக் கவரப்பட்டார். ஆகையால் நாம் வாசிப்பதென்னவெனில்:"அப்பொழுது பார்வோன் தன் ஊழியக்காரரை நோக்கி: தேவ ஆவியைப் பெற்ற இந்த மனுஷனைப்போல வேறொருவன் உண்டோ என்றான். பின்பு, பார்வோன் யோசேப்பை நோக்கி: தேவன் இவையெல்லாவற்றையும் உனக்கு வெளிப்படுத்தியிருக்கிறபடியால், உன்னைப்போல விவேகமும் ஞானமுமுள்ளவன் வேறொருவனும் இல்லை. நீ என் அரமனைக்கு அதிகாரியாயிருப்பாய்; உன் வாக்கின்படியே என் ஜனங்கள் எல்லாரும் அடங்கி நடக்கக்கடவர்கள்; சிங்காசனத்தில் மாத்திரம் உன்னிலும் நான் பெரியவனாய் இருப்பேன் என்றான்" (ஆதியாகமம் 41:38-40).

இப்படியாக யோசேப்பு ஒரே நாளில் தாழ்வான கிடங்கிலிருந்து (சிறையிலிருந்து) வெளியேறி, அந்நாட்களிலுள்ள மாபெரும் சாம்ராஜ்யமாகிய எகிப்தினுடைய அதிகார நிலைமைக்கு உயர்த்தப்பட்டார். சகோதரர் ரசல் அவர்கள் குறிப்பிட்டுள்ளதுபோன்று, "யோசேப்பிற்குப் பதினான்கு வருட ஒப்பந்தம்" காணப்பட்டது.

## "யோசேப்பின் குடும்பத்தைப் பஞ்சம் தீண்டியது"

பஞ்சம் பரவலாய்க் காணப்பட்டது மற்றும் உலகத்தில் இக்குறிப்பிட்ட பகுதியில் பஞ்சம் கடுமையாகவே காணப்பட்டது. இது கானானையும், எகிப்தையுங்கூட உள்ளடக்கினதாகவே இருந்தது. தேசம்/நிலம் வறண்டது மற்றும் விதைப்பதற்கு விதைகள்கூட இல்லாமல் போகுமளவுக்கு விளைச்சல் இல்லாமல் இருந்தது. எகிப்தில் உணவு பற்றாக்குறை இல்லை என்ற செய்தி பரவினது. ஆகையால் தங்கள் தங்கள் குடும்பங்களுக்குத் தலைவர்களாகக் காணப்பட்ட தனது குமாரர்களானவர்கள் எகிப்துக்குச் சென்று, கோதுமையை வாங்கும்படியாக யாக்கோபு கட்டளையிட்டார். ஆனால் இப்பொழுது தனது பிரியமான குமாரனாகக் காணப்பட்ட பென்யமீனை, யாக்கோபு மற்றவர்களோடு அனுப்பி வைக்கவில்லை.

பத்துக் குமாரர்கள் எகிப்திற்கு வந்து சேர்ந்தார்கள். அவர்கள் எகிப்தியர்கள் அல்லாத அந்நியர்களாய்க் காணப்பட்டபடியால், அவர்களை எதிர்பார்த்துக்கொண்டிருந்த யோசேப்பிடம் அவர்கள் அனுப்பப்பட்டார்கள். தன்னிடத்தில் அவர்கள் உணவுக்காக வருவார்கள் என்று அவர் அறிந்திருந்தார். இதுகூட இதற்கு முன்னதாக அவர்களைத் தொடர்புகொள்வதற்கு அவர் முயற்சிக்காததற்கான காரணமாய் இருக்கலாம். அவர்கள் யோசேப்பிடம் கொண்டு வரப்பட்டபோது, அவரை அவர்கள் அடையாளங்கண்டுகொள்ளாமல், அவரது பத்துச் சகோதரர்களும் அவர் முன் வணங்கினார்கள். அவர்களைப் பொறுத்தமட்டில், அவர் எகிப்தின் அதிபதியாய்த் தோற்றமளித்தார். அவர் முன் அவர்கள் வணங்கினபோது, அவர் கதிர்கட்டுகள் மற்றும் நட்சத்திரங்கள் பற்றியதான தனது சொப்பனத்தை நினைவுகூர்ந்தார். சேனையைக்கொண்டு வந்து தானியங்களைத் திருடிச் செல்லத்தக்கதாக, எகிப்தில் எவ்வளவு தானியங்கள் காணப்படுகின்றதெனப் பார்த்துச் செல்வதற்கு வந்த வேவுகாரர்களாக அவர்கள் காணப்படுகின்றார்களா? என்று யோசேப்பு துபாசி வழியாய் அவர்களிடத்தில் கேட்டார்.

அவர்கள் தங்கள் நிலைமையைக் குறித்து உண்மையாய் விவரித்தார்கள் மற்றும் சில கேள்விகளுக்குப் பதிலளித்தபோது, தங்கள் தந்தை குறித்தும், தங்கள் இளைய சகோதரனாகிய பென்யமீனைக் குறித்தும் குறிப்பிட்டார்கள்.

இருபது வருடங்கள் தாண்டிபோன நிலையிலும், தனது தந்தையும், தனது சகோதரனாகிய பென்யமீனும் உயிரோடும், நலமாயும் இருக்கின்றார்கள் என்பதை அறிந்தபோது, யோசேப்பினுடைய இருதயம் (மகிழ்ச்சியில்) துள்ளியிருக்க வேண்டும். ஆனால் யோசேப்பு தன்னை யார் என்று அடையாளம் காட்டிக்கொள்ளவில்லை. அவர் தன்னைக் கடுமையானவராகவே காண்பித்துக்கொண்டார் மற்றும் இறுதியில் அவர்களுக்குத் தானியத்தை விற்பதற்குச் சம்மதித்தார். ஆனால் பிற்பாடு, மேலும் தானியங்கள் வாங்க வேண்டுமெனில், அவர்கள் தங்கள் இளைய சகோதரனாகிய பென்யமீனைத் தங்களோடுகூட அழைத்துக்கொண்டுவருவதன் மூலமாக, தங்கள் உண்மைத்தன்மையை நிரூபித்தாக வேண்டுமென்று அவர்களிடம் யோசேப்பு கூறினார். அதுவரையிலும் சகோதரர்களில் ஒருவராகிய சிமியோன், பிணைக் கைதியாகச் சிறையில் வைக்கப்படுவார் என்று யோசேப்பு தெரிவித்தார். இக்கட்டத்தில் பத்துச் சகோதரர்களில் ஒவ்வொருவருடைய மனதிலும் ஒரு கருத்து, ஒரே நேரத்தில் எழுந்திருக்கும். அது அவர்களது பதினேழு வயது சகோதரனாகிய யோசேப்பு, பலவருண அங்கி தரித்தவராக, இருதயத்தில் வியாகுலத்தோடே, அவர்களிடத்தில் இரக்கத்திற்காகக் கெஞ்சி மன்றாடினது பற்றின கவலையுள்ள நினைவாகும். இப்படி யோசேப்பு கெஞ்சினபோது, அவர்கள் செவிக்கொடாமல், வெள்ளிக்காசுகளுக்காக அவரை விற்றுப் போட்டுவிட்டார்கள்.

"நம்முடைய சகோதரனுக்கு நாம் செய்த துரோகம் நம்மேல் சுமந்தது; அவன் நம்மைக் கெஞ்சி வேண்டிக்கொண்டபோது, அவனுடைய மன வியாகுலத்தை நாம் கண்டும், அவனுக்குச் செவிகொடாமற்போனோமே; ஆகையால், இந்த ஆபத்து நமக்கு நேரிட்டது என்று ஒருவரை ஒருவர் பார்த்துச் சொல்லிக்கொண்டார்கள். அப்பொழுது ரூபன் அவர்களைப் பார்த்து: இளைஞனுக்கு விரோதமாகப் பாவஞ்செய்யாதிருங்கள் என்று நான் உங்களுக்குச் சொல்லவில்லையா? நீங்கள் கேளாமற்போனீர்கள்; இப்பொழுது, இதோ, அவன் இரத்தப்பழி நம்மிடத்தில் வாங்கப்படுகிறது என்றான்" என்பதாகப் பதிவுகள் தெரிவிக்கின்றது (ஆதியாகமம் 42:21, 22).

அந்தச் சகோதரர்கள் தாங்கள் செய்த தவறினிமித்தம் மனவுளைச்சலுக்குள்ளானார்கள். அவர்கள் யோசேப்பின் முன் நிற்கையில், இவ்வார்த்தைகளைப் பேசினார்கள்; அவர்களது ஒவ்வொரு வார்த்தையையும் அவர் புரிந்துகொள்கின்றார் என்பதை அறியாமல் இவ்வார்த்தைகளைப் பேசினார்கள். யோசேப்பு தன்னை அடக்கிக்கொள்ள முடியாததினால் யாருக்கும் தெரியாமல் அழத்தக்கதாக, அவர்களைவிட்டு அப்புறம் போனார். அவரது கண்ணீர்கள் சந்தோஷத்தின் மற்றும் இரக்கத்தின் கண்ணீர்களாகக் காணப்பட்டது; தனது சகோதரர்கள் தங்கள் தவறுகளுக்காக வருந்துவதை யோசேப்பு கண்டதினிமித்தமாகவும், கடந்து சென்ற வருடங்களின் அனுபவங்களானது அவர்களிடத்தில் உண்மையான மனம் வருந்துதலையும், குணலட்சணங்களில் மாற்றத்தையும் கொண்டுவந்துள்ளதை யோசேப்பு கண்டதினிமித்தமாகவும், யோசேப்பு சந்தோஷத்தின் கண்ணீர்களை வடித்தார். எனினும் அவர்களை அவர் இன்னும் சோதித்துப்பார்க்க வேண்டியிருந்தது. அழுத பிற்பாடு அவர் அவர்களிடத்தில் திரும்பி வந்து, சிமியோனைப் பிணைக் கைதியாகப் பிடித்து வைத்துக்கொண்டு, மற்றவர்களை அனுப்பி வைத்தார்.

வீட்டிற்குப் போகிற வழியில், அவர்கள் உணவிற்காக தங்கள் சாக்குகளைத் திறந்தபோது, அவர்கள் தானியத்திற்கான விலையாகக் கொடுத்திருந்த பணமானது, அவரவர் சாக்குகளில் இருந்ததைக் கண்டார்கள். அந்தச் சகோதரர்கள் கோதுமையுடன் வீடு வந்து சேர்ந்தபோது, அவர்கள் நடந்த அனைத்தையும், அதாவது தாங்கள் அதிபதியினால், வேவுகாரர்களெனச் சந்தேகிக்கப்பட்டதையும், சிமியோன் பிணைக் கைதியாக எகிப்தில் வைக்கப்பட்டதினால், சிமியோன் தங்களோடு வீடு திரும்பவில்லை என்பதையும் தங்கள் தந்தையாகிய யாக்கோபினிடத்தில் தெரிவித்தார்கள். பின்னர்த் தானியத்திற்கு விலையாக தாங்கள் செலுத்தின பணம் அவரவருடைய கோதுமை சாக்கில் திரும்ப வைக்கப்பட்டிருந்தது என்பதையும் அவர்கள் தெரிவித்தார்கள். அடுத்தமுறை

கோதுமை வாங்க வேண்டுமெனில், அவர்கள் தங்களோடு பென்யமீனை அழைத்துச் செல்ல வேண்டுமென்றும் தெரிவித்தார்கள். இதற்கு யாக்கோபு மறுப்புத் தெரிவித்தவராக,

"என்னைப் பிள்ளையற்றவனாக்குகிறீர்கள்; யோசேப்பும் இல்லை; சிமியோனும் இல்லை, பென்யமீனையும் கொண்டுபோகப் பார்க்கிறீர்களா?" என்று சொன்னார் (ஆதியாகமம் 42:36).

யோசேப்பிற்கு எதிராக தாங்கள் செய்திட்ட குற்றமே, தங்களுக்கான இக்கட்டு நிலைக்குக் காரணம் என்பதாகவும், இந்த இக்கட்டு என்பது தங்களுக்குரிய தண்டனை என்பதாகவும் காணப்படுகின்ற அவர்களது பயங்களை, அவர்களது தந்தையாகிய யாக்கோபின் வார்த்தைகளும் எதிரொலிப்பதை அவர்கள் கேட்டபோது, அவர்கள் அதிர்ச்சியடைந்திருக்க வேண்டும்.

எகிப்திலிருந்து வாங்கி வந்ததான கோதுமை குறைந்தபோது, மீண்டும் போய் வாங்கி வரும்படிக்கு, யாக்கோபு தனது குமாரர்களை வற்புறுத்தினார். ஆனால் பென்யமீன் தங்களோடு வராதது வரையிலும், தாங்கள் போவதில்லை என்று அவர்கள் உறுதியுடன் மறுத்துவிட்டனர். யாக்கோபும் பலமாய் மறுப்புத் தெரிவித்தார். பின்னர் யூதா பேசி, பென்யமீனுக்கு உத்தரவாதியானார். இதே யூதாதான் பலவருடங்களுக்கு முன்னதாக, யோசேப்பை அடிமையாக விற்றுப்போடுவதற்கான கருத்தை முன்வைத்தவர் என்பதை நாம் நினைவில்கொள்வோமாக. இப்பொழுது இவர் பென்யமீனுடைய பாதுகாப்பிற்காக, தன்னுடைய சொந்த ஜீவனையே பணையம் வைத்திட்டார். எத்துணை மாற்றம் இவரது இருதயத்தில் ஏற்பட்டிருக்கின்றது. தேவையின் நிலைக் கருதி, இறுதியாக யாக்கோபு சம்மதித்தார். யாக்கோபு எகிப்தினுடைய அதிபதிக்குத் தேன், கந்தவர்க்கங்கள், கொட்டைகள் மற்றும் வாதுமைக்கொட்டைகளாகிய காணிக்கைகளையும், இரட்டிப்பான பணத்தையும் அவர்களிடத்தில் கொடுத்தனுப்பினார். பென்யமீனை அவர் போக அனுமதித்து, பரிதாபகரமாக,

"அந்த மனிதன் அங்கிருக்கிற உங்கள் மற்றச் சகோதரனையும் (சிமியோனையும்), பென்யமீனையும் உங்களுடனே அனுப்பிவிடும்படிக்கு, சர்வவல்லமையுள்ள தேவன் அவன் சமுகத்தில் உங்களுக்கு இரக்கங்கிடைக்கப் பண்ணுவாராக; நானோ பிள்ளையற்றுப் போனவனைப்போல் இருப்பேன் என்றான்" (ஆதியாகமம் 43:14).

அவர்கள் எகிப்துக்கு வந்தபோது, தனது வீட்டில் அவர்களுக்கு இரா உணவு பரிமாறப்படுவதற்கும், சிமியோனை விடுவித்து, அவர்களோடு அனுப்பிடுவதற்கும் யோசேப்பு கட்டளைகளிட்டார். அவர்கள் சாப்பிடுவதற்கு ஆயத்தமானபோது, யோசேப்பு எகிப்திய பிரபுவுக்குரிய இராஜ வஸ்திரம் தரித்தவராய் உள்ளே வந்தார் மற்றும் மீண்டுமாக அவரை அவர்கள் பணிந்து வணங்கிக்கொண்டார்கள். யோசேப்பு கனிவாய் அவர்களது தகப்பனைக் குறித்து விசாரித்தார். யோசேப்பு தன்னுடைய தாய் பெற்றக் குமாரனும், தனது சகோதரனுமான பென்யமீனைக் கண்டார் மற்றும் அவரைக் கட்டித்தழுவிடுவதற்கு ஏங்கினார். அவருடைய உணர்வுகளை அவரால் அடக்கிக்கொள்ள முடியாததினால், அவர்கள் அவரது ஆனந்த கண்ணீரைப் பார்க்காதபடிக்கு, அவர் சிறிது நேரம் அவர்களைவிட்டு அப்புறம் செல்ல வேண்டியிருந்தது. அந்தச் சகோதரர்கள் அவர்களது இருக்கைகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர் மற்றும் அவர்கள் தங்கள் வயதின் துல்லியமான வரிசையின்படி அமர்த்தப்பட்டிருப்பதைக் கண்டு ஆச்சரியமடைந்தார்கள். அவர்களுக்கு உணவு பரிமாறப்பட்டபோது, தங்களைக் காட்டிலும் பென்யமீனுக்கு ஐந்து பங்குகள் கொடுக்கப்பட்டதைக் கண்டும் ஆச்சரியமடைந்தார்கள். இதனால் அவர்கள் கோபம் அடைந்தார்களா? யோசேப்பின் மீது அவர்கள் முன்பு கொண்டிருந்ததுபோன்று, இப்பொழுது பென்யமீன் மீது பொறாமை கொண்டார்களா? கொஞ்சமும் இல்லை! அவர்களுக்கு அது பிடித்திருந்தது. பென்யமீனுக்கு ஐந்து பங்கு கொடுக்கப்பட்டதினிமித்தம் அவர்கள் மகிழ்ந்து சிரித்தார்கள். "பென்யமீனோடுகூட சந்தோஷமாயிருந்தார்கள்" என்பதாகப் பதிவுகள் தெரிவிக்கின்றன. அவர்களிடத்திலான இந்த ஒரு மாற்றத்தையும் யோசேப்பு கவனித்திருந்திருப்பார் என்பதில் நமக்கு நிச்சயமே.

அவர்கள் தங்கள் தந்தை மீது கொண்டிருக்கும் அனுதாபத்தையும், தங்கள் இளைய சகோதரனாகிய பென்யமீனுடைய நலனுக்கடுத்த விஷயங்கள் மீதான அவர்களது அக்கறையையும், இன்னும் சோதித்திட வேண்டுமென்று யோசேப்பு சிந்தித்தார். அவர்களது சாக்குகள் தானியங்களினால் நிரப்பப்படும்போது, தனது சொந்த வெள்ளிப்பாத்திரமானது பென்யமீனுடைய சாக்கிற்குள்ளாக மறைத்து வைக்கும்படிக்கு யோசேப்பு ஏற்பாடு பண்ணினார். காலையில் அந்தச் சகோதரர்கள் கொஞ்சம் தொலைவில் போயிருக்க, தனது பாத்திரத்தை அவர்கள் திருடியுள்ளார்கள் என்ற குற்றச்சாட்டுடன், தனது பிரதானிகளை/ஊழியர்களை அவர்கள் பின்பாக யோசேப்பு அனுப்பி வைத்தார். தாங்கள் குற்றமற்றவர்கள் என்று கூறி, அவர்கள் குற்றச்சாட்டினை ஏற்க மறுத்தார்கள் மற்றும் "உம்முடைய அடியாருக்குள்ளே அது எவனிடத்தில் காணப்படுமோ அவன் கொலையுண்ணக்கடவன்; நாங்களும் எங்கள் ஆண்டவனுக்கு அடிமைகளாவோம் என்று" கூறி, பாத்திரத்தைத் தேடிப் பார்க்கும்படிக்குப் பிரதானிகளை அழைத்தார்கள் (ஆதியாகமம் 44:9).

சாக்குகள் சோதிக்கப்பட்டன மற்றும் பாத்திரமானது பென்யமீனுடைய சாக்கில் கண்டு பிடிக்கப்பட்டது. அது எத்துணை பயங்கரமான அதிர்ச்சியாய் இருந்திருக்கும்! பென்யமீனுக்காக அவர்கள் தங்கள் சொந்த ஜீவன்களை உத்தரவாதமாக்குவதாக, அவர்கள் தங்கள் தகப்பனிடம் வாக்குறுதி கொடுத்து வந்திருக்கின்றார்கள்; ஆனால் இப்பொழுதோ தங்கள் சொந்த வார்த்தையினாலேயே பென்யமீன் மரிக்கப்போகின்றார் மற்றும் தாங்களும் அடிமைகளாகப் போகின்றனர். பென்யமீனை மாத்திரம் தங்களோடு அடிமையாகக் கூட்டிச் செல்வதற்கும், மற்றவர்களை வீடு திரும்புவதற்கென அனுமதிப்பதற்குமென்று அந்த ஊழியக்காரர்கள் பெருந்தன்மையுடன் கருத்துத் தெரிவித்தனர். ஆனால் அவர்கள் பென்யமீனைத் தங்களிடமிருந்து பிரிப்பதற்கு அனுமதித்திடவில்லை, ஒரு கணம்கூட அனுமதித்திடவில்லை. அவர்கள் அனைவரும் துக்கத்தினால், அதிர்ச்சியுடன் பென்யமீனோடு எகிப்திற்குத் திரும்பிச் சென்றார்கள். இவர்கள் நீண்ட காலத்திற்கு முன்னதாக, யோசேப்பு அடிமையாக தனியே செல்வதற்கு எளிதில் அனுமதித்திட்ட அதே மனிதர்கள்தானா? இவர்கள் ஒரு வயதான மனிதனுடைய இருதயத்தை நொறுக்கிடத்தக்கதாக, யோசேப்பினுடைய அங்கியை இரத்தத்தில் தோய்த்திட்ட அதே மனிதர்கள்தானா?

அவர்கள் அரமனைக்குத் திரும்பி வந்தபோது, யோசேப்பு அவர்கள்மேல் குற்றஞ்சாட்ட, அவர்கள் யோசேப்பிற்கு முன்பாக தரையிலே விழுந்தார்கள். வார்த்தைகள் பேசுவது பயனற்றதாய் இருந்தது. அவர்களால் என்ன பேச முடியும்? சாட்சியம் இருக்க, அவர்களால் எப்படித் தங்களைக் காத்துக்கொள்வதற்கு வாதாட முடியும்? எந்த நம்பிக்கையும் இல்லை; தாங்கள் பிரச்சனையில் அகப்பட்டிருப்பதை அவர்கள் அறிந்திருந்தார்கள். அவர்கள் சார்பில் யூதா பேசுபவரானார்.

"அதற்கு யூதா: என் ஆண்டவனாகிய உம்மிடத்தில் நாங்கள் என்ன சொல்லுவோம்? என்னத்தைப் பேசுவோம்? எதினாலே எங்கள் நீதியை விளங்கப்பண்ணுவோம்? உம்முடைய அடியாரின் அக்கிரமத்தை தேவன் விளங்கப்பண்ணினார்; பாத்திரத்தை வைத்திருக்கிறவனும் நாங்களும் என் ஆண்டவனுக்கு அடிமைகள் என்றான்" (ஆதியாகமம் 44:16).

இப்படியாக யூதா தன்னையும், தனது சகோதரர்களையும், பென்யமீனையும், யோசேப்பினிடத்தில் அடிமையாக ஒப்புக்கொடுத்தார். பாத்திரத்தை எடுத்தவர் மாத்திரமே தனது அடிமையாகக் காணப்பட வேண்டுமென்று கூறி, அனைவரையும் அடிமையாக ஏற்றுக்கொள்வதற்கு யோசேப்பு மறுத்துவிட்டார். யோசேப்போ, "நீங்களோ சமாதானத்தோடே உங்கள் தகப்பனிடத்துக்குப் போங்கள்" என்றார். யோசேப்பு இறுதியானதும், மிகக் கடினமானதுமான பரீட்சையைத் தனது சகோதரர்கள்மேல் வைத்தார். பென்யமீன்தான் பாத்திரத்தைத் திருடியுள்ளார் என்பது அவர்கள் அறிந்திருந்த காரியமாய் இருந்தது. பென்யமீன் இதற்கான பின்விளைவைச் சந்தித்தாக வேண்டியிருக்கும் என்பதையும் அந்தச் சகோதரர்கள் புரிந்திருந்தார்கள்; இதற்கு அவர்கள் காரணமில்லை. அவர்களுக்குச் சொந்த குடும்பங்கள் இருந்தபடியால், அவர்கள் சிந்திக்க வேண்டியிருந்தது. உணவானது தங்கள் குடும்பத்தாருக்கு எடுத்துச் செல்லப்பட வேண்டும் அல்லது குடும்பத்தினர் பட்டினிக்கிடக்க நேரிடும்

என்று அவர்கள் யோசித்திருக்கலாம். தந்தையைப் பொறுத்தமட்டில், தந்தைதான் சூழ்நிலையைப் புரிந்துகொள்ள வேண்டும். இப்படியாக அவர்கள் யோசிக்கின்றார்களா என்பதைப் பார்த்திடுவதற்கு யோசேப்பு ஆவலாய் இருந்தார். இது கடுமையான பரீட்சையாய் இருந்தது.

## "யூதாவினுடைய இருதய பூர்வமான மன்றாட்டு"

அனைவரின் சார்பிலுமாக யூதா பேசுகையில், சரித்திரத்தில் எங்குமே இல்லாத அளவுக்கு மிகவும் பரிதாபகரமான மற்றும் உருக்கமான மன்றாட்டுகளை ஏறெடுத்தார்.

"அப்பொழுது யூதா அவனண்டையிலே சேர்ந்து: ஆ, என் ஆண்டவனே, உமது அடியேன் உம்முடைய செவிகள் கேட்க ஒரு வார்த்தை சொல்லுகிறேன் கேட்பீராக; அடியேன்மேல் உமது கோபம் மூளாதிருப்பதாக; நீர் பார்வோனுக்கு ஒப்பாயிருக்கிறீர். உங்களுக்குத் தகப்பனாவது சகோதரனாவது உண்டா என்று என் ஆண்டவன் உம்முடைய அடியாரிடத்தில் கேட்டீர். அதற்கு நாங்கள்: எங்களுக்கு முதிர்வயதுள்ள தகப்பனாரும், அவருக்கு முதிர்வயதிலே பிறந்த ஒரு இளைஞனும் உண்டு என்றும், அவனுடைய தமையன் இறந்துபோனான் என்றும், அவன் ஒருவன் மாத்திரமே அவனைப் பெற்ற தாயாருக்கு இருப்பதினால் தகப்பனார் அவன்மேல் பட்சமாயிருக்கிறார் என்றும் என் ஆண்டவனுக்குச் சொன்னோம். அப்பொழுது நீர்: அவனை என்னிடத்துக்கு கொண்டுவாருங்கள்; என் கண்களினால் அவனைப் பார்க்கவேண்டும் என்று உமது அடியாருக்குச் சொன்னீர். நாங்கள் ஆண்டவனை நோக்கி: அந்த இளைஞன் தன் தகப்பனைவிட்டுப் பிரியக்கூடாது, பிரிந்தால் அவர் இறந்துபோவார் என்று சொன்னோம். அதற்கு நீர்: உங்கள் இளைய சகோதரனைக் கொண்டுவராவிட்டால், நீங்கள் இனி என் முகத்தைக் காண்பதில்லை என்று உமது அடியாருக்குச் சொன்னீர். நாங்கள் உமது அடியானாகிய என் தகப்பனாரிடத்துக்குப் போனபோது, என் ஆண்டவனுடைய வார்த்தைகளை அவருக்கு அறிவித்தோம். எங்கள் தகப்பனார் எங்களை நோக்கி: நீங்கள் திரும்பப்போய், நமக்குக் கொஞ்சம் தானியம் கொள்ளுங்கள் என்று சொன்னார். அதற்கு: நாங்கள் போகக்கூடாது; எங்கள் இளைய சகோதரன் எங்களோடே வந்தால் போவோம்; எங்கள் இளைய சகோதரன் எங்களோடே வராவிட்டால், நாங்கள் அந்தப் புருஷனுடைய முகத்தைக் காணக்கூடாது என்றோம். அப்பொழுது உம்முடைய அடியானாகிய என் தகப்பனார்: என் மனைவி எனக்கு இரண்டு பிள்ளைகளைப் பெற்றாள். அவர்களில் ஒருவன் என்னிடத்திலிருந்து போய்விட்டான்; அவன் பீறுண்டுபோயிருப்பான் என்றிருந்தேன், இதுவரைக்கும் அவனைக் காணாதிருக்கிறேன், இதெல்லாம் நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். நீங்கள் இவனையும் என்னை விட்டுப் பிரித்து அழைத்துப்போகுமிடத்தில் இவனுக்கு மோசம் நேரிட்டால், என் நரைமயிரை வியாகுலத்தோடே பாதாளத்தில் இறங்கப்பண்ணுவீர்கள் என்றார். ஆகையால் இளையவனை விட்டு, நான் என் தகப்பனாகிய உமது அடியானிடத்துக்குப் போனால், அவருடைய ஜீவன் இவனுடைய ஜீவனோடே ஒன்றாய் இணைக்கப்பட்டிருக்கிறபடியினால், அவர் இளையவன் வரவில்லை என்று அறிந்தமாத்திரத்தில் இறந்துபோவார்; இப்படி உமது அடியாராகிய நாங்கள் உமது அடியானாகிய எங்கள் தகப்பனுடைய நரைமயிரை வியாகுலத்துடனே பாதாளத்தில் இறங்கப்பண்ணுவோம். இந்த இளையவனுக்காக உமது அடியானாகிய நான் என் தகப்பனுக்கு உத்தரவாதி; அன்றியும், நான் இவனை உம்மிடத்துக்குக் கொண்டுவராவிட்டால், நான் எந்நாளும் உமக்கு முன்பாகக் குற்றவாளியாயிருப்பேன் என்று அவருக்குச் சொல்லியிருக்கிறேன். இப்படியிருக்க, இளையவன் தன் சகோதரரோடேகூடப் போகவிடும்படி மன்றாடுகிறேன்; உம்முடைய அடியானாகிய நான் இளையவனுக்குப் பதிலாக இங்கே என் ஆண்டவனுக்கு அடிமையாயிருக்கிறேன். இளையவனை விட்டு, எப்படி என் தகப்பனிடத்துக்குப் போவேன்? போனால் என் தகப்பனுக்கு நேரிடும் தீங்கை நான் எப்படிக் காண்பேன் என்றான்" (ஆதியாகமம் 44:18-34).

யூதா பேசிக்கொண்டிருக்கையில், யோசேப்பின் மனதில் காணப்பட்ட சந்தேகங்கள் கரைந்துபோயின. அவர்கள் உண்மையில் முழுமையாய் மாறியுள்ளனர். தங்கள் இளைய சகோதரனுக்காக தங்கள் சொந்த ஜீவியங்களைத் தியாகம் பண்ணிடுவதற்கும், தங்கள் தகப்பனுடைய இருதயத்திற்குத் துக்கம் கொடுக்காமல் இருப்பதற்கும் அவர்கள் இப்பொழுது விருப்பம் உள்ளவர்களாகக் காணப்படுகின்றனர்.

தன்னை வெளிப்படுத்திடுவதற்கான வேளை யோசேப்பிற்கு வந்தது. மற்றவர்களாகிய எகிப்தியர்கள் அனைவரையும் அறையை விட்டு வெளியேற்றி, கண்ணீர்கள் முகத்தில் வடிய, யோசேப்பு தன்னை தன்னுடைய சகோதரர்களிடத்தில் வெளிப்படுத்தினார். "நீங்கள் எகிப்துக்குப் போகிறவர்களிடத்தில் விற்றுப்போட்ட உங்கள் சகோதரனாகிய யோசேப்பு நான் தான்" என்று யோசேப்பு எபிரெய மொழியில் பேசினார். அவரது சகோதரர்களுக்கு ஏற்பட்ட வியப்பை/திகைப்பை உங்களால் கற்பனை செய்துபார்க்க முடிகின்றதா? பல வருடங்களுக்கு முன்னதாக தாங்கள் யோசேப்பிற்குச் செய்தவைகளினிமித்தமான குற்ற உணர்வினுடைய வலியினை அடைந்தார்கள். அவர்கள் அமைதி இழந்தவர்களானார்கள். இதை உடனடியாகக் கவனித்த யோசேப்பு, கிருபையாய்/இரக்கமாய், அவர்களது இருதயத்தை அமைதிபடுத்தினார் மற்றும் கிருபைக்கான/இரக்கத்திற்கான சிறந்த மாதிரியானார். அவர் கூறினதாவது:

"என்னை இவ்விடத்தில் வரும்படி விற்றுப்போட்டதினால், நீங்கள் சஞ்சலப்பட வேண்டாம்; அது உங்களுக்கு விசனமாயிருக்கவும் வேண்டாம்; ஜீவரட்சணை செய்யும்படிக்குத் தேவன் என்னை உங்களுக்கு முன்னே அனுப்பினார். பூமியிலே உங்கள் வம்சம் ஒழியாமலிருக்க உங்களை ஆதரிக்கிறதற்காகவும், பெரிய ரட்சிப்பினால் உங்களை உயிரோடே காப்பதற்காகவும் தேவன் என்னை உங்களுக்கு முன்னமே அனுப்பினார்" (ஆதியாகமம் 45:5, 7).

யோசேப்பு எத்துணை பெருந்தன்மையான இருதயத்தைப் பெற்றிருந்தார்! தேவனுக்கொத்த எத்துணை மன்னிப்பைப் பெற்றிருந்தார்! அடிமையாக காலம் கழித்த வருடங்களை மறந்துவிட்டார், கிடங்கில்/சிறையில் காணப்பட்ட வருடங்களையும், தகப்பனுடைய வீட்டைப்பற்றின ஏக்கத்தினால் தனிமை துயரத்தில் கழித்திட்ட பகல்களையும், இரவுகளையும் யோசேப்பு மறந்துவிட்டார். இப்பொழுது, எல்லாம் சரியாகிவிட்டது! பென்யமீனை அவர் முதலாவதாகக் கட்டிப் பிடித்தார். பென்யமீன் அவரால் மிகவும் அன்புகூரப்பட்ட இளைய சகோதரனாவார். பின்னர் தனது அனைத்துச் சகோதரர்களையும் யோசேப்பு கட்டிப்பிடித்து, அவர்களை முத்தம் செய்தார். அவர்கள் அனைவரும் ஆனந்த கண்ணீர்களை வடித்தார்கள். யோசேப்பு உடனடியாக தனது தகப்பனையும், தனது சகோதரர்களின் குடும்பங்களையும் அழைத்து, அவர்களைக் கோசேன் தேசத்தில் சுகமாய்க் குடியேற்றினார். நீண்ட காலத்திற்குப் பின்பாக யோசேப்பு தன்னுடைய தந்தையுடன் இணையும் சம்பவத்தின் உருக்கத்தை நம்மால் நன்கு கற்பனை செய்துபார்க்க முடிகின்றது.

இதுதான் யோசேப்பின் கதை; அருமையானதும், மனதை உருகச் செய்கிறதுமான ஒரு கதையாகும். இக்கதையானது, மனித உணர்வுகளினால் நிரம்பியிருப்பதினால், இதனை வாசிக்கையில், நமது கண்களிலிருந்து கண்ணீர்கள் வடிகின்றது. இது தீர்க்கத்தரிசனமான அர்த்தங்கள் அநேகவற்றை உள்ளடக்கினதாகவும் இருக்கின்றது. இவைகள் என்ன உணர்த்துகின்றன என்பதை உங்களால் உணர முடிகின்றதா? இது தேவன் தம்முடைய திட்டங்களை நுணுக்கமாக திட்டமிட்டுள்ளார் என்றும், பின்னர் அத்திட்டத்தின் பாகங்களைச் சித்தரிக்கத்தக்கதாக யோசேப்பினுடைய ஒவ்வொரு அனுபவங்களையும் மேற்பார்வையிட்டு, மற்றும் நன்மைக்கேதுவாய் மாற்றிப்போட்டுள்ளார் என்றும் உணர்த்துகின்றதாய் இருக்கின்றது. எப்படித் தேவன் அனைத்துச் சூழ்நிலைமைகளையும் கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றார் என்பதையும், தம்மால் கையாளப்படுகின்றவர்களின் அனுபவங்களை அவர் எப்படி முழுமையாய்த் திட்டமிடுகின்றார் மற்றும் அடக்கி ஆளுகின்றார் என்பதையும் உணர்கையில் சிலிர்க்கின்றது.

## "யோசேப்பு, இயேசுவுக்கு நிழலாவார்"

யோசேப்பின் வாழ்க்கையில் தேவன் ஏற்படுத்தியுள்ள தீர்க்கத்தரிசனமான மற்றும் அடையாளமான காட்சிகள் சிலவற்றைப் பார்க்கலாம். யோசேப்பு இயேசுவுக்கு நிழலாவார். யோசேப்பு யாக்கோபுக்குப் பிரியமான குமாரனாகவும், எப்போதும் அவரோடுகூடத் துணைவராகவும் காணப்பட்டதுபோன்று, இயேசுவும் தேவனுடைய பிரியமுள்ள குமாரனாவார். இயேசு தேவனுடைய செல்லப்பிள்ளையாகவும், நித்தமும் தேவனுக்கு மனமகிழ்ச்சியாகவும் காணப்பட்டார் என்று கூறப்பட்டுள்ளது (நீதிமொழிகள் 8:30). தோத்தானிலுள்ள அவரது சகோதரர்களிடத்தில் யாக்கோபு,

யோசேப்பை அனுப்பி வைத்தது போன்று, பரம பிதாவும் தமது பிரியமான குமாரனை இஸ்ரயேல் தேசத்தாரிடத்திற்கு அனுப்பி வைத்தார். இயேசு தம்மைக் குறித்து, "காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரயேல் வீட்டாரிடத்திற்கு அனுப்பப்பட்டேனே அன்றி, மற்றபடியல்ல வென்றார்" (மத்தேயு 15:24). யோசேப்பின் சகோதரர்கள், அவரை முகாந்தரமில்லாமல் பகைத்ததுபோன்று, இயேசுவும் தம்மைக் குறித்து, "முகாந்தரமில்லாமல் என்னைப் பகைத்தார்கள்" என்று குறிப்பிட்டுள்ளார் (யோவான் 15:25). தன் சகோதரர்கள்பால் யோசேப்பு செய்துவந்த வேலையானது, ஏற்றுக்கொள்ளப்படாததுபோன்று, இயேசுவும் தமக்குச் சொந்தமானவர்களிடத்தில் வந்தபோது, அவருக்குச் சொந்தமானவர்கள் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. இன்னுமாக அவர், "அசட்டைப் பண்ணப்பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவரும்" ஆவார் (ஏசாயா 53:3).

யோசேப்பின் சகோதரர்கள் அவர் மீது மிகவும் பொறாமை கொண்டிருந்ததுபோன்று, இயேசுவும் பொறாமையின் காரணமாக மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கப்பட்டார் என்று நாம் மத்தேயு 27:18 மற்றும் மாற்கு 15:10-ஆம் வசனங்களில் வாசிக்கின்றோம். "நாம் அவனைக் கொன்று போடுவோம், வாருங்கள்" என்று யோசேப்பின் சகோதரர்கள் யோசேப்பைக்குறித்துக் கூறினார்கள். இம்மாதரியாகவே யூதர்களும் இயேசுவைக் கொல்லத்திட்டமிட்டு, "இவரைச் சிலுவையில் அறையும்! இவரைச் சிலுவையில் அறையும்!" என்று கத்தினார்கள். யோசேப்பு அவரது சகோதரர்களால் குழிக்குள் தள்ளப்பட்டபோது, அவர் வெளித்தோற்றமாகக் கொல்லப்பட்டதுபோன்று, இயேசு உண்மையிலேயே யூதர்களால் கொன்றுபோடப்பட்டார். யூதாவினுடைய ஆலோசனையின் பேரில் யோசேப்பு அடிமையாக விற்கப்பட்டதுபோல, இயேசுவும் யூதாசினால், அடிமைக்குரிய விலையாகிய முப்பது வெள்ளிக்காசுகளுக்காக விற்கப்பட்டார். உண்மையுள்ளவராகிய யோசேப்பு மூன்று வருடங்கள் சிறையில் கழித்தார்; உண்மையுள்ளவராகிய நமது கர்த்தர் இயேசுவும் மூன்று நாட்கள், மரணம் எனும் சிறைச்சாலையில் காணப்பட்டார். பார்வோன் யோசேப்பைச் சிறைச்சாலையிலிருந்து, எகிப்தின் அதிகாரியாகிய தனக்கு அடுத்த நிலைக்கு உயர்த்தினதுபோன்று, இயேசுவும் மூன்றாம் நாளில் மரணத்திலிருந்து விடுவிக்கப்பட்டு, அண்டசராசரத்தை ஆளும் யேகோவா தேவனுக்கு அடுத்த நிலையிலுள்ள மகா மகிமைக்கும், மற்றும் வல்லமைக்கும் உயர்த்தப்பட்டார். தமது உயிர்த்தெழுதலுக்குப் பிற்பாடு இயேசு தம்மைக் குறித்து, "வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது" என்றார் (மத்தேயு 28:18). அனைவரும் யோசேப்புக்கு முன்பு வணங்க வேண்டும் என்றும், அவருக்குக் கனம் செலுத்த வேண்டும் என்றும், பார்வோன் கட்டளையிட்டதுபோன்று, தேவனும், "பிதாவைக் கனம்பண்ணுகிறதுபோல எல்லாரும் குமாரனையும் கனம் பண்ண வேண்டும்" என்று கட்டளையிட்டார் (யோவான் 5:22).

யோசேப்பின் விஷயத்தில் துன்பங்களும்/விபரீதங்களும், நம்பிக்கைத் துரோகங்களும், அவமானங்களும் எகிப்தின் அதிகாரிக்குரிய கனம் மற்றும் மகிமைக்கு நேரான வழியினை ஆயத்தப்படுத்தினது. இப்படியாகவே இயேசுவின் விஷயத்திலும் காணப்பட்டது; அவருக்கு வந்திட்டதான சோதனையான அனுபவங்களானது, அவரை உண்மையுள்ளவரெனத் தேவனுக்கு நிரூபித்துக்காட்டி, அவர் உயர்த்தப்படுவதற்கு வழிநடத்தினதாய் இருந்தது.

"அவர் தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார்" (எபிரெயர் 12:2).

யோசேப்பு பார்வோனுக்காக நிலங்களையும், ஜனங்களையும் விலைக்கு வாங்கி, அனைவருக்கும் அப்பம் வழங்கினார். இயேசு மனுக்குலத்தை வாங்கியுள்ளார்; ஆயிர வருட யுகத்தின்போது கிறிஸ்து, ஜீவனை விரும்புகின்ற அனைவருக்கும் ஜீவனை (தம்முடைய புண்ணியத்தை) அருளுவார். பார்வோனின் பிரதிநிதியாகிய யோசேப்பின் மூலமே அல்லாமல் மற்றபடி ஜனங்களுக்கு ஜீவன் இல்லாமல் இருந்ததுபோன்று, பரம பிதாவின் பிரதிநிதியாகிய கிறிஸ்துவின் மூலமாயும், கிறிஸ்துவுக்குள்ளாகவும் மாத்திரமே ஒழிய, மற்றபடி உலகத்திலுள்ள எவருக்கும் ஜீவனில்லை. முதலில் யோசேப்பை நிராகரித்த அவரது சகோதரர்கள், இறுதியில் அவரை அங்கீகரித்ததுபோன்று, இயேசுவைப் புறக்கணித்து,

அவரைச் சிலுவையில் அறைந்துபோட்டதான யூத தேசத்தார், யாக்கோபின் இக்கட்டுக் காலத்தினை உள்ளடக்கின கடும் சோதனை மற்றும் தாழ்மையை உருவாக்கும் பல அனுபவங்களுக்குப் பிற்பாடு, இறுதியில் இயேசுவை அங்கீகரித்து, ஏற்றுக்கொள்வார்கள். யோசேப்பு தன்னுடைய சகோதரர்களுக்குத் தன்னை வெளிப்படுத்தினபோது அவர்கள் அழுதார்கள். "அவர்கள் தாங்கள் குத்தின என்னை நோக்கிப்பார்த்து, எனக்காக மனங்கசந்து துக்கிப்பார்கள்" என்று நாம் வாசிக்கின்றோம் (சகரியா 12:10). யோசேப்பு தன்னுடைய சகோதரர்களை, கடந்த காலத்தில் அவர்கள் தனக்குச் செய்த காரியங்களின் அடிப்படையிலோ அல்லது அவர்களது கடந்த கால பாவங்களின் அடிப்படையிலோ நியாயந்தீர்க்காமல், தற்போதுள்ள அவர்களது இருதயத்தினுடைய நிலைமையின் அடிப்படையில் நியாயந்தீர்த்ததுபோலவே, உலகத்திற்கான எதிர்காலத்திலுள்ள நியாயத்தீர்ப்பும்கூட, மனிதர்கள் அக்காலத்தின்போது கொண்டிருக்கும் மனம் மற்றும் இருதயத்தினுடைய நிலைமையின் அடிப்படையிலேயே காணப்படும்.

இவைகள் இக்கதையினுடைய சில நிழலான அம்சங்களாகும். இன்னும் அநேக அம்சங்கள் உண்டு. இந்த இணைகள்/ஒப்புமைகள் அனைத்தும் தற்செயலாய் நடந்தது என நீங்கள் எண்ணுகின்றீர்களா? இல்லை என்று நீங்கள் அறிவீர்கள். இவைகள் தேவனுடைய செயலே. இவைகள் நாம் தந்திரமான கட்டுக்கதைகளைப் பின்பற்றவில்லை என்பதையும், நாம் உண்மையிலேயே சத்தியத்தைப் பெற்றிருக்கின்றோம் என்பதையும் நாம் உணர்ந்துகொள்ள உதவப்படுவதற்கும், நாம் உற்சாக மூட்டப்படுவதற்கும், அருளப்பட்டவைகளாகும் (2 பேதுரு 1:16).

## "நமக்கான தனிப்பட்ட பாடங்கள்"

யோசேப்பு மற்றும் அவரது சகோதரர்கள் பற்றின கதையிலுள்ள சில தனிப்பட்ட பாடங்களை நாம் பார்க்கலாம். இக்கதையானது நான் (ஆசிரியர்) சிறுபிள்ளையாக இருக்கையில் எனது தாயார் அவர்களது அர்மேனியன் வேதாகமத்திலிருந்து எனக்கு வாசிக்கும் கதைகளில் ஒன்றாகும். இக்கதையிலுள்ள உயர்தரமான அனுபவங்களினால் நான் எப்படிக் கவர்ந்து இழுக்கப்பட்டேன் என்பதை நான் நன்கு நினைவில் வைத்திருக்கின்றேன். கதை வாசிக்க ஆரம்பிக்கையில், நான் என்னை யோசேப்பின் ஒவ்வொரு சூழ்நிலையிலும் நிறுத்திப்பார்த்துக் கற்பனைப் பண்ணிப்பார்ப்பதுண்டு. என்னால் யோசேப்பின் சகோதரர்களுடைய பகைமையைக் குறித்து அவ்வளவுக்குப் புரிந்துகொள்ள முடியவில்லை, காரணம் என்னுடைய சொந்த சகோதரர்கள் மிகவும் நல்லவர்களாய்க் காணப்பட்டனர். ஆனால் யோசேப்பு குழிக்குள் தள்ளப்பட்டு, அடிமையாக விற்கப்பட்டதை வாசிக்கையில் நான் அழுவதுண்டு. அவருடைய அங்கியானது, இரத்தத்தில் தோய்க்கப்பட்டு, அவருடைய தகப்பனிடத்தில் கொண்டு செல்லப்படுவதை வாசிக்கையில் நான் அழுவதுண்டு. யோசேப்பு தயவு பெற்றதையும், மீண்டும் கீழ்நிலைக்குத் தள்ளப்பட்டதையும் நான் வாசிக்கையில், நான் சந்தோஷமும், வேதனையும் அடைந்தேன். யோசேப்பு கிடங்கிலிருந்து, எகிப்தின் அதிபதியென உயர்த்தப்பட்ட தருணத்தை வாசிக்கையில் நான் உச்சக்கட்டத்தில் மெய்சிலிர்த்துப் போனதுண்டு.

கதையை வாசித்துவிட்டு, எனது தாயார் வேதாகமத்தை மூடி வைக்கையில், நான் அமர்ந்து, சிந்தனை பண்ணிக்கொண்டிருப்பேன். நான் எனக்குள்ளாகவே கேள்வி எழுப்புவது என்னவெனில்: ஏன் எனக்கு இப்படியான ஓர் ஆச்சரியமானக் காரியம் சம்பவிப்பதில்லை? என்னை இவ்வளவாய்ப் பராமரிக்கத்தக்கதாகவும், இவ்வளவு உயர்த்தத்தக்கதாகவும் தேவன் ஏன் என்னை தெரிந்துகொள்வதில்லை? நான் இதைக் குறைகூறும் வண்ணமாகக் கூறவில்லை, மாறாக ஆவலினாலும், ஏக்கத்தினாலுமே கூறுவதுண்டு; நான் யோசேப்பாக இருக்கமாட்டேனா என்று இருதய பூர்வமான விருப்பத்தினால் இப்படிக்கூறுவதுண்டு; இப்படி உண்மையில் நடந்து விடாதா எனும் விருப்பத்தினால் இப்படிக்கூறுவதுண்டு. ஆனால் பல வருடங்களுக்குப் பிற்பாடு, கர்த்தர் என்னைச் சத்தியத்திற்குக்கொண்டுவந்தபோது, யோசேப்புக்கு என்ன சம்பவித்ததோ, அது எனக்கும் சம்பவித்துள்ளது என்ற அருமையான உணர்ந்துகொள்ளுதலை நான் அடைந்தேன். தேவன் என்னைத் தெரிந்துகொண்டுள்ளார் மற்றும் யோசேப்பின் விஷயத்தில் காணப்பட்டதுபோன்று, என்னுடைய ஜீவியத்தின் ஒவ்வொரு நிகழ்வுகளும் தேவனால் கவனிக்கப்படுகின்றது மற்றும் என்னுடைய நன்மைக்கு ஏதுவாய் மாற்றப்படுகின்றது. எகிப்தின் அதிபதியாய் இருப்பதைக் காட்டிலும் மேலான ஓர் உயர்த்தப்படுதலை

இறுதியில் நானும் அடையப்போகின்றேன் என்பதை உணர்ந்துகொண்டேன். இது அர்ப்பணிக்கப்பட்டு, பரம அழைப்பிற்கான பந்தயப்பொருளுக்காக ஓடிக்கொண்டிருக்கும் நம் ஒவ்வொருவருக்கும் பொருந்துகின்றதாய் இருக்கின்றது. உங்களுக்கும் இது பொருந்தும். யோசேப்பின் கதை என்பது, உங்கள் ஜீவியம் பற்றிய கதையே ஆகும். கிறிஸ்துவினுடைய சரீரத்தின் அங்கத்தினராகிய உங்களுக்குக்கூட யோசேப்பு அடையாளமாய்க் காணப்படுகின்றார்! யோசேப்பின் அனுபவங்களானது, உங்கள் அனுபவங்களுக்கு அடையாளமாய் இருக்கின்றது.

யோசேப்பை யாக்கோபு சிநேகித்தது போன்று, தேவன் இயேசுவை அன்புகூர்ந்தார். "பிதா தாமே உங்களைச் சிநேகிக்கிறார்" என்று உங்களைக் குறித்தும் எழுதப்பட்டிருக்கின்றது (யோவான் 16:27). யோசேப்பு தன்னுடைய சகோதரர்களினால் பகைக்கப்பட்டது போன்று மற்றும் இயேசு யூதர்களால் பகைக்கப்பட்டது போன்று, உங்களைக் குறித்தும், "உலகம் உங்களைப் பகைத்தால், அது உங்களைப் பகைக்கிறதற்கு முன்னே என்னைப் பகைத்ததென்று அறியுங்கள்" என்று இயேசு கூறியுள்ளார் (யோவான் 15:18).

யோசேப்பு கிடங்கிலிருந்து, எகிப்தின் சிங்காசனத்திற்கு உயர்த்தப்பட்டதுபோன்று, இயேசுவும் மரணத்திலிருந்து, தேவனுடைய சிங்காசனத்தினிடத்திற்கு உயர்த்தப்பட்டார். நம்மைக் குறித்து, "நாம் அவரோடேகூட மரித்தோமானால், அவரோடேகூடப் பிழைத்துமிருப்போம்" என்று எழுதப்பட்டுள்ளது (2 தீமோத்தேயு 2:11, 12). யோசேப்போடு கர்த்தர் இருந்து, அவருடைய காரியங்கள் அனைத்தையும் மேற்பார்வையிட்டு, அனைத்தையும் முடிவில் சரி செய்ததுபோன்று மற்றும் பரம பிதாவும் தமது குமாரனாகிய இயேசுவோடுகூட அவரது பூமிக்குரிய ஊழியம் முழுவதின்போதும் காணப்பட்டு, இறுதியில் அவரை மகிமைப்படுத்தினதுபோன்று, "அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களும், தேவனை அன்புகூருபவர்களுக்கும் சகலமும் நன்மைக்கு ஏதுவாய் நடந்தேறும்" என்ற நிச்சயம் நமக்கும் வழங்கப்பட்டுள்ளது (ரோமர் 8:28). யோசேப்பினுடைய துன்ப அனுபவங்களானது அவரிடத்தில் சரியான தாக்கங்கொண்டு, அவரிடத்தில் அருமையான குணலட்சணத்தை உருவாக்கினதுபோன்று, மற்றும் இயேசுவும் தாம் பாடுபட்டதின் மூலம் தம்முடைய கீழ்ப்படிதலை விவரித்ததுபோன்று, நம்மைக் குறித்தும் பின்வருமாறு எழுதப்பட்டுள்ளது:

"பிரியமானவர்களே, உங்களைச் சோதிக்கும்படி உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக்குறித்து ஏதோ புதுமையென்று திகையாமல், கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும்போது நீங்கள் களிகூர்ந்து மகிழும்படியாக அவருடைய பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளானதால் சந்தோஷப்படுங்கள்" (1 பேதுரு 4:12, 13).

ஜீவன்களை இரட்சிக்கத்தக்கதாக யோசேப்பு உணவை வழங்கினதுபோன்று, மற்றும் கிறிஸ்து அவருடைய இராஜ்யத்தில் அனைவருக்கும் ஜீவ அப்பத்தை வழங்குவது போன்று, நாமும் அவருடைய சரீரத்தின் அங்கத்தினர்களெனச் சகல மனுக்குலத்தை ஜீவனுக்குச் சீர்ப்பொருத்தும் பணியில் அவருடன் பங்கடைவோம்.

ஆழமான மற்றும் இருதயத்தைச் சீர்த்தூக்கிப் பார்க்கின்ற விதமான சில படிப்பினைகளையும் இங்குக் கற்க வேண்டியுள்ளது. முதலாவதும், பிரதானமானதுமான படிப்பினை, பொறாமையினுடைய விளைவு/தாக்கம் பற்றியதாகும். நாம் ஒருபோதும் பொறாமை கொண்டிருத்தல் கூடாது. அது நம்மை அழிக்கக் கூடியதாகவும், தகர்த்தக் கூடியதாகவும் காணப்படுகின்றது. சாதாரணமான/ஒழுங்கான ஜனங்கள் பொறாமையின் தீமையான தாக்கத்தின் கீழ்க் காணப்படுகையில், அவர்கள் மிகவும் கொடிதான காரியங்களைச் செய்திடுவதற்கும், பேசிடுவதற்கும் வழிநடத்தப்பட்டுவிடுகின்றனர். "வைராக்கியமும் விரோதமும் எங்கே உண்டோ, அங்கே கலகமும், சகல துர்ச் செய்கைகளுமுண்டு" என்று யாக்கோபு குறிப்பிடுகின்றார் (யாக்கோபு 3:16). இப்படியாக இருக்கின்றபடியால் சபையைத் தகர்ப்பதற்கும், அழித்துப்போடுவதற்குமெனச் சாத்தான் பொறாமையை வளர்த்திவிடுபவனாகவும், ஊக்குவிப்பவனுமாகவும் இருக்கின்றான் என்பது நிச்சயமே. கர்த்தரினால் மிகப்பெரிய அளவிலும் மற்றும் வல்லமையாகவும்/பயனுள்ள விதத்திலும் பயன்படுத்தப்படுகின்ற சகோதரர்கள், மிகுந்த பொறாமையைத் தூண்டிவிடுபவர்களாகக் காணப்படுகின்றனர் என்பது கவலைக்கிடமான உண்மையாகும்.

இந்தத் தீமையான காரியத்தினை நாம் விட்டுவிலகுவோமாக. பொறாமைக்கான சிறிய அறிகுறி நம் இருதயத்தில் காணப்படுமாகில், அது வேரோடே அழிக்கப்படுவதற்காக நாம் உண்மையாய் ஜெபம் ஏறெடுப்போமாக. அதை வளருவதற்கு அனுமதிப்போமானால், அது புதுச்சிருஷ்டியை அழித்துவிடக்கூடும்.

## "பெருமை குறித்த ஒரு படிப்பினை"

யோசேப்பு பெருமை தொடர்புடைய விஷயத்தில் விலையேறப்பெற்ற படிப்பினையைக் கொடுக்கின்றார். "கர்த்தரோ யோசேப்போடே இருந்து, அவன்மேல் கிருபைவைத்து, சிறைச்சாலைத் தலைவனுடைய தயவு அவனுக்குக் கிடைக்கும்படி செய்தார்" என்று நாம் பதிவில் வாசிக்கின்றோம் (ஆதியாகமம் 39:21). இவ்வுண்மையானது, பலமுறை யோசேப்பின் கதையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. துன்பம் நிறைந்த சூழ்நிலைகள் ஒவ்வொன்றிலும், அவர் பல்வேறு விதங்களில் தயவு பெற்றுக்கொண்டார். இந்த அனுபவங்களின் காரணமாக, யோசேப்பு தனக்குள் அதிக அளவிலான பெருமையை வளர்த்திடுவதற்கு அனுமதித்திருந்திருக்க முடியும். தான் அதிர்ஷ்டம் உள்ளவர் என்றோ (அ) தான் இயல்பாகவே அறிவுகூர்மையுள்ளவராக, கவர்ந்து இழுப்பவராக மற்றும் சாதுரியமானவராகக் காணப்பட்டதே தனது வெற்றிக்கான இரகசியமாகவும், தனது தகப்பன் தன்னை மிகவும் நேசித்ததற்கான காரணமாகவும் இருக்கின்றது என்றோ யோசேப்பால் எண்ணியிருந்திருக்க முடியும். இதன் காரணமாகவே தான் அடிமையாக விற்கப்பட்டபோது, தான் நல்ல ஓர் எஜமானால் வாங்கப்பட்டார் என்றும், தன்னுடைய சொந்த திறமையின் காரணமாகவே, போத்திபாரின் வீட்டில் தான் உயர் ஸ்தானம் பெற்றுக்கொண்டார் என்றும் யோசேப்பால் எண்ணியிருந்திருக்க முடியும். தனது உயர்தரமான திறமைகளினாலேயே, தனக்குச் சிறையில் அதிகாரம் வழங்கப்பட்டது என்றும், தன்னுடைய கூர்மையான அறிவின் காரணமாகவே, தன்னால் சொப்பனங்களுக்கு அர்த்தம் கூற முடிந்தது என்றும் யோசேப்பினால் எண்ணியிருந்திருந்திருக்க முடியும். இக்காரியங்கள் அனைத்தும் தன்னை மற்ற மனிதர்களைக் காட்டிலும் உயர்ந்து நிற்க/காணப்படப்பண்ணிற்று என்றும், தனது வெற்றிக்கான காரணமாகவும் அமைந்தது என்றும் யோசேப்பினால் எண்ணியிருந்திருக்க முடியும்.

யோசேப்பினால் இப்படியெல்லாம் எண்ணியிருந்திருக்க முடியும். இப்படி எண்ணுவதெல்லாம் மனித இயல்புதான். ஆனால் அவர், தான் நிழலாய்க் காணப்படுகின்றதான, இயேசுவின் மனப்பான்மையைப் பிரதிபலித்தவராய் இருந்தார். "நான் என் சுயமாய் ஒன்றும் செய்கிறதில்லை" என்று கூறி, இயேசு அனைத்துக் கனத்தையும் தேவனுக்கு உரியதாக்கினார் (யோவான் 5:30). யோசேப்பு (இயேசுவைப்போன்றதான) இம்மனப்பான்மையைக் கொண்டிராவிட்டால், அவர் உயர்த்தப்பட்டிருந்திருக்க மாட்டார், மாறாக வீழ்ந்து போயிருப்பார். "அழிவுக்கு முன்னானது அகந்தை; விழுதலுக்கு முன்னானது மனமேட்டிமை" என்று நாம் வாசிக்கின்றோம் (நீதிமொழிகள் 16:18). ஆகையால், "நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது" என்பதை நினைவில் கொண்டவர்களாக, நாம் பெற்றுக்கொண்ட நன்மைகள் அனைத்திற்குமான கனத்தைக் கர்த்தருக்கே உரித்தாக்குவோம் (யாக்கோபு 1:17). "கிழக்கிலும் மேற்கிலும் வனாந்தர திசையிலுமிருந்து ஜெயம் வராது. தேவனே நியாயாதிபதி; ஒருவனைத் தாழ்த்தி, ஒருவனை உயர்த்துகிறார்" (சங்கீதம் 75:6, 7).

அடுத்துப் பொறுமையாய்ச் சகித்தல் பற்றின படிப்பினை உள்ளது. சிலசமயம் நாம் நம்மால் முடிந்தமட்டும் கர்த்தருக்கும், சகோதர சகோதரிகளுக்கும் ஊழியம் புரிகையில் மற்றும் நம்முடைய காரியங்களில் கர்த்தருடைய ஆசீர்வாதங்களையும், தயவுகளையும் மிகவும் குறிப்பிடத்தக்கதான விதத்தில் பெற்றுக் காணப்படுகையில், திடீரென பிரச்சனை எழும்பி, துன்பம் நம்மேல் கடந்து வந்துவிடுகின்றது. இருளின் அதிகாரங்கள் வெற்றிக்கொள்வது/ மேற்கொள்வது போன்று தோன்றலாம். நாம் தெய்வீக வழிநடத்துதல்கள் இன்றிக் காணப்படுவது போன்று தோன்றலாம். கர்த்தர் நம்மைக் கைவிட்டுவிட்டதுபோன்று தோன்றலாம். இவைகளே யோசேப்பின் அனுபவங்களாகும்; "என் தேவனே, என் தேவனே ஏன் என்னை கைவிட்டீர்?" என்று இயேசு கதறினபோது, அவரும் இதேபோன்றதான அனுபவத்தில்தான் காணப்பட்டார் (மத்தேயு 27:46). யாருக்கு வேண்டுமானாலும் இவ்வனுபவங்கள் ஏற்படலாம். இவ்வனுபவங்கள் ஏற்படுகையில், யோசேப்பு காணப்பட்டது போன்று, நாமும் அமைதியான

மற்றும் உறுதியான விசுவாசத்துடன் இருப்போமாக; காத்திருப்பது மாத்திரமல்லாமல், மாறாக நாளுக்கு நாள் நம்மால் முடிந்ததைச் செய்துகொண்டும் இருப்போமாக, அதாவது வேலை செய்து கொண்டும், காத்துக்கொண்டும் இருப்போமாக. தனது வழக்கை பார்வோனிடத்தில் குறிப்பிடும்படி பானபாத்திரக்காரனிடம் கேட்டுக்கொள்வதன் மூலமாக, சிறையிலிருந்து விடுதலை அடையும் விஷயத்தில், யோசேப்பு தன்னால் முடிந்தது அனைத்தையும் செய்தார் என்பதை நினைவில்கொள்ளுங்கள்.

இக்கதையிலுள்ள மிகவும் முதன்மையான/குறிப்பிடத்தக்கதான மற்றும் உளங்கனிந்த படிப்பினை, யோசேப்பு இரக்கத்தோடு, தனது சகோதரர்களை மன்னித்ததாகும். தனது சகோதரர்களிடத்தில் தன்னை வெளிப்படுத்தினபோது, அவர்கள் அமைதி இழந்து காணப்பட்டதைக் கண்ட யோசேப்பு, அவர் முதலாவதாகவும், உடனடியாகவும் வெளிப்படுத்தினது, அனுதாபமும், இரக்கமுமாகும். அவரது மன்னிப்பில் அவர் இரக்கமுள்ளவராய் இருந்தார். தன்னை அடிமையாக எகிப்துக்கு விற்றுப்போட்டதன் மூலமாக, அவர்கள் தனக்கு நன்மையையே செய்திருக்கின்றார்கள் என்று அவர்களை அவர் ஒரு வழியாக நம்ப வைத்துவிட்டார்! அவரது அன்புடன் கூடிய வார்த்தைகளைக் கவனியுங்கள்:

"என்னை இவ்விடத்தில் வரும்படி விற்றுப் போட்டதினால், நீங்கள் சஞ்சலப்பட வேண்டாம்; அது உங்களுக்கு விசனமாயிருக்கவும் வேண்டாம்; ஜீவரட்சணை செய்யும்படிக்குத் தேவன் என்னை உங்களுக்கு முன்னே அனுப்பினார். பூமியிலே உங்கள் வம்சம் ஒழியாமலிருக்க உங்களை ஆதரிக்கிறதற்காகவும், பெரிய ரட்சிப்பினால் உங்களை உயிரோடே காப்பதற்காகவும் தேவன் என்னை உங்களுக்கு முன்னமே அனுப்பினார். ஆதலால் நீங்கள் அல்ல, தேவனே என்னை இவ்விடத்துக்கு அனுப்பி, என்னைப் பார்வோனுக்குத் தகப்பனாகவும், அவர் குடும்பம் அனைத்திற்கும் கர்த்தனாகவும், எகிப்துதேசம் முழுதுக்கும் அதிபதியாகவும் வைத்தார்" (ஆதியாகமம் 45:5, 7, 8).

## "யோசேப்பினுடைய இரக்கமான வார்த்தைகள்"

இவைகள் இரக்கம் நிறைந்த வார்த்தைகள் அல்லவா? அவரது சகோதரர்கள் தாங்கள் மாபெரும் பாவம், அதாவது கொலைக்குச் சமமான பாவம் செய்த குற்றவாளிகளாக இருக்கின்றனர் என்பதை அறிந்திருந்தார்கள். இதை யோசேப்பும் அறிவார். ஆனால் இவைகளையெல்லாம் மேலான நன்மைக்கு ஏதுவாய்க் கர்த்தர் மாற்றிப்போட்டுள்ளார் என்பதையும் யோசேப்பு அறிவார். ஆகையால்தான் இதை மாத்திரம் யோசேப்பு குறிப்பிட்டார். யோசேப்பு பேசிக்கொண்டிருக்கையில், குற்றத்தினிமித்தமான திகில் அவர்கள் இருதயத்தை விட்டுப்போனது மற்றும் இருபத்து மூன்று வருடங்களிலேயே முதல் முறையாக, அவர்களது மனங்கள் யோசேப்பின் விஷயத்தில் சமாதானம் அடைந்தது. நமக்கு எதிராய்ப் பாவம் செய்கிறவர்களிடத்தில், நாமும் யோசேப்பைப்போன்று இரக்கங்கொள்வோமாக. அன்புடன்கூடிய வார்த்தைகளினால் இரக்கமான/கிருபையான பதில் எப்போதும் கொடுப்பதற்கு நாம் கற்றுக் கொள்வோமாக.

ஒருவேளை யோசேப்பு இந்தச் சுவிசேஷ யுகத்தின் பரிசுத்தவானாய்க் காணப்பட்டு இருந்திருப்பாரானால், பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டிருந்திருப்பாரானால், வேதாகமத்தின் வெளிப்படுத்தல்களையும், எச்சரிப்புகளையும் மற்றும் தேவனுடைய குணம் மற்றும் அவரது நோக்கம் பற்றி வெளிப்படுத்தும், யுகங்களுக்கடுத்த தெய்வீகத் திட்டம் பற்றின அறிவையும் பெற்றிருந்து, பரம அழைப்புக்குரிய பந்தயப் பொருளுக்காக ஓடிக்கொண்டிருப்பவராகக் காணப்பட்டிருப்பாரானால், அவரது நடத்தையானது கிறிஸ்தவ வளர்ச்சியினுடைய மிக உயர்ந்த வகையாகக் கருதப்படுவதற்குப் பாத்திரமானதாகும். ஆனால் அவரது குணலட்சணமானது வளர்க்கப்பட்டதான சந்தர்ப்பங்களையும், சூழ்நிலைகளையும் நாம் பார்க்கும்போது, அதாவது புறஜாதி தேசத்தில் தேவன் மற்றும் அவரது திட்டம் பற்றின சிறிய வெளிப்படுத்தல்கள் மாத்திரமே உள்ள சூழ்நிலையில், அவரது குணலட்சணம் வளர்க்கப்பட்டுள்ளதை நாம் பார்க்கையில், நாம் வியந்து நிற்கின்றோம். இந்தப் பாடத்தைப் படிக்கையில் நாம் நம்மிடமே கேட்க வேண்டியதாவது, "எல்லா விதத்திலும் மிகுந்த அனுகூலமுள்ளவர்களாய்

நாம் இருக்கையில், நாம் எப்படிப்பட்டவர்களாய் இருக்க வேண்டும்? யோசேப்பைப் போன்றதான அதே சூழ்நிலைகள் மற்றும் சந்தர்ப்பங்களின் கீழ் நாம் காணப்படுவோமானால், நாம் யோசேப்பைப்போன்று பெருந்தன்மையுடன் நடந்திருப்போமா? இவைகளெல்லாம் நாம் சிந்தித்துப்பார்க்கப்பட வேண்டியவைகளாகும்.

யோசேப்பின் கதையைப் பார்க்கையில், உங்கள் இருதயம் பிரகாசமடைகின்றதா? இது உங்கள் கதை போன்றுள்ளதா? யோசேப்பின் அனுபவங்களில் உங்களை நீங்கள் அடையாளங்கண்டுகொள்ள முடிகின்றதா? அவருடைய கஷ்டங்களில் அவரோடுகூட உங்களால் அனுதாபமும், அவருடைய வெற்றியில் அவரோடுகூட உங்களால் மகிழ்ச்சியுங்கொள்ள முடிகின்றதா?

யோசேப்பு செய்தவைகள் சரியானது மற்றும் நீதியானது மற்றும் தேவனுக்கும் ஒத்ததாய் இருக்கின்றதென உங்களால் எண்ணிக்கொள்ள முடிகின்றதா? இது உங்களை இன்னும் அதிகமாய்த் தேவனை அன்புகூரவும், அவரை ஸ்தோத்தரிக்கவும் செய்கின்றதா? ஆம் என்றால் இது நீங்கள் கர்த்தரால் அன்புகூரப்படுகின்றவர்களும், அவரால் உயர்த்தப்படப் போகின்றவர்களுமான, "யோசேப்பின் வகுப்பாரில்" ஒருவராகக் காணப்படுகின்றீர்கள் என்பதற்கான சிறந்த நிரூபணமாகும்.

நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு நிழலாய்க் காணப்படுகின்றதான யோசேப்பின் மாதிரிக்காக நாம் பரம பிதாவுக்கு நன்றி ஏறெடுக்கின்றோம். நாமும் ஏற்றக்காலத்தில் உயர்த்தப்படுவதற்குப் பாத்திரவான்களாய்க் காணப்படத்தக்கதாக, இங்குச் சித்தரிக்கப்பட்டுள்ள பண்புகளையும், குணங்களையும்/தனித்தன்மைகளையும் அடைந்திடுவதற்கு உதவப்படுவோமாக.

---

# "யோசேப்பின் வெள்ளிப்பாத்திரம்"

(Beauties of the truth; volume 12, Number 1, Feb 2001)

***- சகோ. யூஜின் பேர்ண்ஸ்***

யோசேப்பின் கதை என்பது பழைய ஏற்பாட்டிலுள்ள நீண்ட பதிவுகள் கொண்ட கதைகளில் ஒன்றாகும். (ஆதியாகமம் 37 முதல் 50-ஆம் அதிகாரங்கள், ஆக மொத்தம் 14 அதிகாரங்களாகும்). இது பாதக செயல்களும், மாபெரும் குணலட்சணங்களும் கலந்து காணப்படுகின்றதான, ஆத்தும தேடலை தூண்டும் ஒரு கதையாகும். பகைமையும், அன்பும் இரண்டுமே இக்கதையை நடத்திச் சென்றது மற்றும் தெய்வீக வழிநடத்துதலானது தேவனுடைய நோக்கத்தை நிறைவேற்றிடத்தக்கதாக இயக்கினதாகக் காணப்பட்டது. இறுதியில் அன்பு ஜெயங்கொள்கின்றது. தேவனுடைய திட்டத்தின் அருமையான பாகம் என்பது, அன்பு இறுதியில் ஜெயங்கொள்வதாகும். யாக்கோபிற்கும் இறுதியில் மகிழ்ச்சியான முடிவு காணப்படுகின்றது. அவர் யோசேப்பு மரித்துப்போய்விட்டார் என்று நம்பிக்கொண்டிருந்தார், ஆனால் யோசேப்பை உயிரோடே எகிப்தில் கண்டார். யாக்கோபினுடைய வாழ்க்கை முடிவடைகையில், தேவனுடைய உருக்கமான இரக்கத்தின் காரணமாக, யோசேப்பே யாக்கோபினுடைய கண்களை மூடுகின்றார் (ஆதியாகமம் 46:4). யாக்கோபின் சரீரமானது வாக்களிக்கப்பட்ட தேசத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, ஆபிரகாம் மற்றும் ஈசாக்குடன் மக்பேலா குகையில் அடக்கம் பண்ணப்பட்டது. இது தேவனுடைய வாக்குத்தத்தங்களின் மீதான அவரது நம்பிக்கையை உறுதிப்படுத்துகின்றதாய் இருந்தது.

## "யோசேப்பிற்கான யாக்கோபின் அன்பு"

யோசேப்பு யாக்கோபினுடைய பிரியமுள்ள ராகேலின் குழந்தையாவார். யோசேப்பு தனது சகோதரர்கள் அநேகரைக் காட்டிலும் இளையவராகக் காணப்பட்டார், ஏனெனில் ராகேல் சில காலம் மலடியாகக் காணப்பட்டிருந்தாள். இறுதியில் ராகேல், யோசேப்பைப் பெற்றெடுத்தபோது, இதினிமித்தம்

யோசேப்பு விசேஷித்த அன்பிற்குரியவரானார். இன்னும் குறிப்பாக யோசேப்பு பெருமகிழ்ச்சிக் கொடுத்த பிள்ளையாகக் காணப்பட்டார். இதன் காரணமாக, பெற்றோர்கள் யோசேப்பிற்குச் செல்லம் கொடுத்தவர்களானார்கள். இது யோசேப்பிற்கு நன்றாய் இருந்திருக்கும், ஆனால் இது அவரது சகோதரர்கள் மத்தியில் பொறாமையை உருவாக்கிற்று. எனினும் யோசேப்பு யாக்கோபுடன் நெருங்கிக் காணப்பட்டதின் காரணமாகவே, அவர் ஆபிரகாமின் வாக்குத்தத்தத்திலுள்ள தனக்கான சுதந்தரத்தைப் பற்றிக் கற்றுக்கொண்டவராகவும், உணர்ந்துகொண்டவராகவும் காணப்பட்டார் என்பதை நாம் புரிந்துகொள்வது அவசியமானதாகும். யோசேப்பு எகிப்தில் கழித்த வருடங்களில், இந்தப் பொக்கிஷமான வாக்குத்தத்தங்களை அவர் நினைவுகூராத நாளே அநேகமாக இருந்திருக்காது; எகிப்தினுடைய இரட்சகராகுவதன் வாயிலாக, ஆபிரகாமின் வாக்குத்தத்தமானது நிறைவேற ஆரம்பிக்கலாம் என்றுங்கூட அவர் அநேகமாக எண்ணியிருக்கலாம்.

## "பொறாமை/வைராக்கியம் பாதாளத்தைப்போல் கொடிதாயிருக்கிறது"

பொறாமையானது வளர ஆரம்பித்துவிட்டால், அது இயல்பாக நல்லதாய்க் காணப்பட்ட இருதயத்தை, தீமையானதாக மாற்றிப்போட்டுவிட முடியும். யோசேப்பின் சகோதரர்கள் அவரை எப்படிப் பகைத்தார்கள் என்றும், இறுதியில் அவரைக்கொன்றுபோட திட்டம் பண்ணினார்கள் என்றும் நாம் அனைவரும் நினைவுகூருகின்றோம். மூத்த குமாரனாகிய ரூபன், தனது சகோதரர்கள் யோசேப்பைக் கொன்றுபோடுவதற்கு விடவில்லை. யோசேப்பைக் குழிக்குள் அவர்கள் போட்டுவிடும்படிக்கு ரூபன் யோசனை தெரிவித்தார் மற்றும் பின்னர் வந்து யோசேப்பை விடுவிக்கலாம் என்று எண்ணினார். இங்கு மனிதனுடைய கோபமானது, எப்படித் தேவனது மகிமையை விளங்கப்பண்ணத்தக்கதாக தேவன் மாற்றிப்போட்டார் என்று நாம் பார்க்கின்றோம். தேவனுக்கு, யோசேப்பை எகிப்திற்குக்கொண்டு செல்ல வேண்டியிருந்தது. யோசேப்பினுடைய சகோதரர்களின் கோபமானது, அவரை அடிமைத்தனத்திற்குள் விற்றுப்போடுவதற்குத் தேவன் அனுமதித்தார். யோசேப்பின் சகோதரர்கள் இப்படிச் செய்தது என்பது இழிவான மற்றும் கீழ்த்தரமானக் காரியமாகும். சகோதரர்கள் என்பவர்கள் ஒற்றுமையுடன் இணைந்து காணப்படுகின்றவர்களாகவும், ஒருவருக்கொருவர் உதவிபுரிகின்றவர்களாகவும் காணப்படுவார்கள். இந்த ஒரு படிப்பினையை நாம் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். மற்றச் சகோதரனுக்கோ (அ) சகோதரிக்கோ கெடுதல் பண்ணுவதற்கு நாம் விருப்பம் கொண்டவர்களாகக் காணப்படுவோமானால், நாம் நிச்சயமாய் சகோதரர்களிடத்தில் அன்புகூராததினால், மரணத்தினின்று ஜீவனுக்குக் கடந்து வந்தவர்களல்ல. சோதனையின் கீழ் அன்பு தோற்கையில், நாம் செய்யும் உச்சக்கட்டமான கெடுதல் நமக்கேயாகும். நாம் நமது சகோதரர்களை அன்புகூர வேண்டும். நம்முடைய பழைய சுபாவம் நம்முடன் காணப்படுகையில், எப்போதும் இது கூடாததுதான், ஆனால் நம்மிடத்தில் அன்பு இல்லையெனில் நாம் ஒன்றுமேயில்லை. முப்பது வயதிற்குக் கீழான அடிமைக்குரிய விலையாகிய இருபது வெள்ளிக்காசுகளுக்கு யோசேப்பு விற்கப்பட்டார், ஏனெனில் யோசேப்பு அப்போது பதினேழு வயதானவராக இருந்தார். இயேசு முதிர்ச்சியடைந்த மனிதனாகக் காணப்பட்டப்படியால், அவர் முப்பது வெள்ளிக்காசுகளுக்கு விற்கப்பட்டார். இவர்கள் இருவருக்கும் வயது வித்தியாசம்தான் உள்ளதே ஒழிய, மற்றப்படி இவர்களிடமிருந்து வரும் படிப்பினைகள் ஒன்றே. அவர்கள் எப்படிப் பணத்தைத் தங்களுக்குள்ளாகப் பங்குபோட்டுக் கொண்டார்கள் என்பது பற்றி நமக்குச் சொல்லப்படவில்லை. இருபது வெள்ளிக்காசுகளைச் சரிசமமாகப் பங்குபோட்டால், பத்துச் சகோதரர்களுக்கும் இரண்டு வெள்ளிக்காசுகள் கிடைத்திருக்கும். அநேகமாகக் குற்றத்தினிமித்தமான வேதனை அவர்களை ஆட்கொண்டபோது, அவர்களில் சிலர் பணப்பங்கைப் பெற்றுக்கொள்வதற்கு மறுத்திருந்திருப்பார்கள்.

## “யோசேப்பு தன்னுடைய குணலட்சணத்தை வளைந்திடுவதற்கு, தனது சூழ்நிலைகளை அனுமதித்திடவில்லை”

ஒருவருடைய கிரியைகளுக்குச் சூழ்நிலைகள் காரணமாகுகின்றது என்று நவீன காலக் கருத்துக்கள் காணப்படுகின்றது. ஜனங்கள் தங்களது சூழ்நிலைகளின் காரணமாகவே நல்லவர்களாக (அ) மோசமானவர்களாக நடந்துகொள்கின்றனர் என்று விவரிக்கப்படுகின்றது. எந்தச் சூழ்நிலைகளில் நாம் காணப்பட்டாலும், நாம் நம்முடைய உயர்வான கொள்கைகள் மற்றும் நம்பிக்கைகள் எனும் உயர்ந்த தளத்தில் வாழ முடியும். இதுவே யோசேப்பிடமிருந்ததான படிப்பினையாகும். யோசேப்பு குற்றவாளிகளுடன் சிறைச்சாலையில் காணப்பட்டபடியால், அவர் குற்றவாளியாகிவிடவில்லை. யோசேப்பின் சகோதரர்கள் கீழ்த்தரமானவர்களாகவும், பகைமை உள்ளம் கொண்டவர்களாகவும் காணப்பட்டதினிமித்தம், யோசேப்பும் அவர்களைப் போன்று காணப்படவில்லை. யோசேப்பு தன்னுடைய நேர்மையைத் தக்கவைத்துக்கொண்டார், அதுவும் இப்படி நேர்மையாய் இருப்பதற்குப் பலன் ஏதும் இல்லாமல், தண்டனை மாத்திரமே இருந்தபோதிலும், தன்னுடைய நேர்மையைத் தக்கவைத்துக் கொண்டவரானார். ஏன்? ஏனெனில் அவர் உயர்வான தளத்தில் ஜீவியம் செய்தவராய் இருந்தார் மற்றும் சண்டையும், கொடூரமும் ஆளுகைச் செய்கின்ற தளத்திற்கு இறங்கிடுவதற்கு அவர் தன்னை அனுமதித்திடவில்லை. தனக்குத் தவறு செய்தவர்களைக்கூட யோசேப்பு பழிவாங்கிடுவதற்குத் திட்டம் பண்ணிடவுமில்லை. ஆனால் அவர் கசப்புக்கொண்டிருப்பதற்கும், பழிவாங்குவதற்கும் அநேகம் காரணங்கள் இருந்தது. அவர் தனது சகோதரர்களினாலும், போத்திபாரினாலும், அவரது பொல்லாத மனைவியாலும் மற்றும் இரண்டு வருடங்களாக யோசேப்பைப் பார்வோனிடத்தில் குறிப்பிடுவதற்கு மறந்துபோன பானப்பாத்திரக்காரனாலும் மோசமாய் நடத்தப்பட்டிருந்தார்.

தேவன் யோசேப்போடே காணப்பட்டார் என்றும், யோசேப்பு செய்த யாவையும் வாய்க்கப்பண்ணினார் என்றும் ஆதியாகமப் பதிவானது நமக்குத் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது. யோசேப்பு எகிப்துக்குக் கொண்டு செல்லப்பட்டபோது தேவன் அவரோடுகூட இல்லாததுபோன்று தோன்றலாம். போத்திபாருடைய மனைவி அவரைத் தவறாய்க் குற்றஞ்சாட்டினபோது, தேவன் அவரோடுகூட இல்லாததுபோன்று தோன்றலாம். யோசேப்பு சிறையில் கூடுதலாக இரண்டு வருடங்கள் காணப்பட்டபோது, தேவன் அவரோடுகூட இல்லாததுபோன்று தோன்றலாம். எனினும் தேவன் அவரோடுகூட இருந்து, யோசேப்பு எதைச் செய்தாரோ, அதைத் தேவன் வாய்க்கப்பண்ணினார். யோசேப்பு பாவம் செய்யாதவராகவும், அறிவுகூர்மையான மற்றும் நியாயமான விதத்தில் மேற்பார்வையிடுவதற்கும், ஒழுங்குபடுத்துவதற்கும் வியக்கத்தக்க திறமையுடையவராகவும் காணப்பட்ட மனிதனாவார். எனினும் அவர் சிறையில் காணப்பட்டு, தனது ஜீவியத்தின் சிறந்த சில வருடங்களை அடிமையாக (அ) குற்றவாளியாகச் செலவழித்தார். இப்படிப்பட்ட துன்பமான சூழ்நிலைகளில், நம்மில் எத்தனை பேரால் ஜெயங்கொள்ள முடியும்? நமக்கு முன் இருக்கும் பர்வதங்களைத் தேவன் எடுத்துப்போட்டு விடமாட்டாரோவென ஏங்குவது/விரும்புவது மனித இயல்புதான், ஆனால் தேவனோ நாம் அவர் அருளும் பலத்தினால் பர்வதங்களில் ஏறிச்செல்வதற்கு விரும்புகின்றார்.

பார்வோனுடைய சொப்பனத்திற்கான அர்த்தத்தை விளக்குவதற்கென யோசேப்பு சிறையிலிருந்து வெளிக்கொண்டு வரப்பட்டார் என்பதையும், பிற்பாடு அவர் எகிப்தினுடைய அதிபதியானார் என்பதையும் நீங்கள் அறிவீர்கள். "நான் பார்வோன்; ஆனாலும் எகிப்து தேசத்திலுள்ளவர்களில் ஒருவனும் உன் உத்தரவில்லாமல் தன் கையையாவது தன் காலையாவது அசைக்கக்கூடாது” என்று நாம் ஆதியாகமம் 41:44-ஆம் வசனத்தில் வாசிக்கின்றோம். இங்குப் பார்வோன் தேவனை அடையாளப்படுத்துகின்றார். யோசேப்பு கிறிஸ்துவை அடையாளப்படுத்துகின்றார். பார்வோனுக்கும் மற்றும் யோசேப்பிற்கும் இடையில் எத்தகைய பிரம்மாண்டமான உறவு ஏற்பட்டது. முப்பது வயதை மாத்திரமே அடைந்தவராகவும், பதிமூன்று வருடங்களாக அடிமையாகவும், சிறைக்கைதியாகவும், வாடிவதங்கினவராகவும் காணப்பட்ட ஒரு மனிதனிடத்தில் (யோசேப்பினிடத்தில்) மலைக்கப்பண்ணும் எத்தகையதோர் வல்லமை வந்துள்ளதை யோசித்துப் பாருங்கள். யோசேப்பின் உத்தரவில்லாமல் ஒருவனும் தன் கையையாவது, தன் காலையாவது அசைக்கக்கூடாது என்ற கட்டளை பிறப்பிக்கப்பட்டிருக்குமானால், அவருக்கு வழங்கப்பட்ட வல்லமை

எத்துணை பரந்தது என்பதைக் கற்பனை பண்ணிப்பாருங்கள். இக்கட்டளையானது மிகைப்படுத்தின நடையிலேயே கொடுக்கப்பட்டுள்ளது, எனினும் இது யோசேப்பு முழு வல்லமையையும், அதிகாரத்தையும் கொண்டிருந்தார் என்பதைக் குறிப்பிடுகின்றதாய் இருந்தது.

பூரண விளைவுடைய ஏழு வருடங்கள் என்பது சுவிசேஷ யுகமாகிய, கிருபையின் காலத்தில் கிறிஸ்துவுக்குள்ளாக தேவனால் அருளப்பட்ட கிருபையையும், தாராளத்தையும் அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. ஏழு வருட பஞ்ச காலம் என்பது கிறிஸ்து பிரதானமாய் ஆளுகைச் செய்யப்போகின்றதான மத்தியஸ்தர் இராஜ்யத்தை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. அந்த இராஜ்யத்தில் ஒருவனாலும், தன்னுடைய சொந்த நீதியில் நிற்க முடியாது. மத்தியஸ்தர் ஜனங்களை, நீதியினுடைய இம்மியும் பிசகாத கோரிக்கைகளிலிருந்து பாதுகாப்பார். கிறிஸ்து ஜனங்களை ஆதரிப்பார்/தாங்குவார். பஞ்சம் கொடிதாகுகையில் ஜனங்கள் பார்வோனின் ஊழியக்காரர்களாகத்தக்கதாக தங்கள் உடைமைகளையும், தங்களையும் விற்க வேண்டியிருந்தது. இக்காரியமானது, எப்படி அனைத்து மனிதர்களும் தங்களைத் தேவனிடத்தில் அர்ப்பணிக்க வேண்டுமென்பதையும், எப்படி மனிதர்கள் அனைவரும் கிறிஸ்து இராஜ்யத்தைப் பிதாவினிடத்தில் ஒப்புவிக்கையில் முற்றிலும் தேவனுக்குத் தங்களை அர்ப்பணித்தவர்களாக இருப்பார்கள் என்பதையும் சித்தரித்துக் காட்டுகின்றது. ஜனங்கள் ஜீவிப்பதற்கான ஒரே வாய்ப்பு, நிஜமான யோசேப்பு அவர்கள் மீது வைக்கும் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்வதன் மூலமேயாகும். மனுக்குலம் சொந்தமாய் மனித பரிபூரணத்தை அடைவது வரையிலும், தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பு நிற்பதிலிருந்து அவர்களைப் பாதுகாக்கக்கூடிய மத்தியஸ்தரின் நீதி, அவர்களுக்கு அருளப்படுவது அவசியமாகும். நிஜமான யோசேப்பினுடைய ஏற்பாடுகளில்லாமல், அவர்கள் அனைவரும் மரித்துப்போவார்கள் மற்றும் அவர்களால் ஒருபோதும் பூரணத்தையோ அல்லது தங்களுக்குச் சொந்த நீதியையோ அடைந்திட முடியாது.

நாமோ நம்முடைய ஜீவியங்களை இக்காலத்தில் (சுவிசேஷ யுகத்தில்) அர்ப்பணிப்பதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கின்றோம். கிருபையின் காலத்தின்போது, நாம் நம்முடைய உடைமைகளையும், நமது சித்தங்களையும் தேவனிடத்தில் ஒப்புகொடுக்கின்றோம். இராஜ்யத்தில் நம்முடைய வேலையானது, மனிதர்களைச் சுயசித்தத்திற்குத் தரித்திரராக்குவதும், அவர்களைத் தேவனுடைய சித்தத்திற்குக் கீழாகக் கொண்டு வருவதுமாகும். (நிஜமான) யோசேப்பு வைத்திருக்கும் உணவை வாங்க வேண்டுமானால், அவர்கள் தங்கள் பொக்கிஷமான உடைமைகளையெல்லாம் கையளித்துவிட்டுக் காலியாக்கிக்கொள்ள வேண்டும் மற்றும் இறுதியாக தங்களையும் ஒப்புயர்வற்ற தேவனிடத்தில் முழுமையாய்க் கையளித்திட வேண்டும் (யோசேப்பு கொண்டிருக்கும் இந்த உணவை அவர்கள் உண்கையில், அவர்கள் நீதியில் வளருகின்றவர்களாய் இருப்பார்கள்) (ஆதியாகமம் 47:24, 25). இஸ்ரயேலர்கள் பத்தில் ஒரு பங்கை (தசமபாகமாக) ஆசாரியர்களுக்கும், லேவியர்களுக்கும் கொடுக்க வேண்டியவர்களாய் இருந்தார்கள். யோசேப்பு எகிப்தியர்களைப் பார்வோனுக்கு ஐந்தில் ஒரு பங்கைக் கொடுக்கப்பண்ணினார்—தேவனுடைய இராஜ்யத்தில் இரண்டு மடங்கு தசமபாகம் கொடுத்தல் வேண்டும்.

இக்காரியங்களானது யோசேப்பைத் தாராளமானவர் போன்று காண்பிப்பதில்லை, ஆனால் இவைகளே நித்திய ஜீவனுக்கான நிபந்தனைகளாகும். "வெள்ளாடு வகுப்பார்" இவ்வேற்பாட்டினை விரும்புவதில்லை. இவர்கள் இராஜ்யத்தினுடைய நிபந்தனைகளின் கீழ்க் கொஞ்சம் எரிச்சலடைவார்கள், மற்றும் தங்களுக்குத் தாங்களே சிறந்த நிபந்தனைகளை ஏற்படுத்திக்கொள்வதற்கு விருப்பமுடையவர்களாய் இருப்பார்கள். மனுக்குலமானது உண்மையில் ஐந்தில் நான்கு பங்கு கொண்டிருப்பார்கள் என்பதையும், அது அவர்கள் தேவையைவிட மிக அதிகமானதே என்பதையும் நாம் புரிந்துகொள்ள வேண்டும். மனுக்குலமானது தங்கள் பிரயாசங்களில் ஐந்தில் ஒரு பங்கை மாத்திரம் பொதுவான நன்மைகளுக்கென்று கொடுப்பார்களானால், இந்த உலகமானது எவ்வளவு ஐசுவரியமாய்க் காணப்படும். தேவன் எப்போதாவது பூமியிலிருந்து பணத்தை எடுத்துக்கொண்டது உண்டா? இல்லை! அவர் ஒருபோதும் அப்படிச் செய்வதுமில்லை. எனினும் மனுக்குலத்தினுடைய நன்மைக்கென்று மனுக்குலம் செய்கிறவைகளை, தேவனும், கிறிஸ்துவும் தங்களுக்கே செய்ததாகக் கருதிக்கொள்வார்கள்.

"நீர் பார்வோனுக்கு ஒப்பாயிருக்கிறீர்" (ஆதியாகமம் 44:18). இவைகள் யோசேப்பிடம், யூதா பேசிட்ட வார்த்தைகளாகும். ஆம் தேவன் அருளின வல்லமையையும், அதிகாரத்தையும் கிறிஸ்து செயல்படுத்துவார். அநேகமாக யோசேப்பு இப்படியான அதிகாரத்தில் காணப்படுகின்றார் என்பதற்காக எகிப்தியர்கள் கோபம் கொண்டிருந்திருக்கலாம். எகிப்தியர்கள் யோசேப்பினுடைய அதிகாரத்தை உதறித்தள்ள முற்பட்டிருக்கலாம் என்று நான் எண்ணுகின்றேன். எனினும் யோசேப்பினுடைய அதிகாரத்தின் கீழிலிருந்து வெளியேறுவதற்குப் பார்வோன் ஒரு எகிப்தியனைக்கூட விடவில்லை. கிறிஸ்து இப்பொழுது நம்முடைய தலையாக இருக்கின்றார். நாம் இப்பொழுது/இக்காலத்தில் தலையைப் பற்றிக்கொள்ளவில்லையெனில், அக்காலத்தில் உலகம் அவரது தலைமைத்துவத்தை ஏற்றுக்கொள்ளும் என்று நாம் எதிர்ப்பார்த்திட முடியாது. கிறிஸ்துவினுடைய மணவாட்டியாக விரும்புபவர்கள் இப்பொழுதும் மற்றும் எப்பொழுதும் கிறிஸ்துவினுடைய தலைமைத்துவத்தை ஏற்றுக்கொள்வதற்கு விருப்பம் உள்ளவர்களாய்க் காணப்பட வேண்டும். வேறு சிந்தையுடையவர்கள், அவருடைய மணவாட்டியாகிட முடியாது.

## "மேன்மையான அதிகாரத்திற்குக் கடும்போட்டி"

உலகத்தில் ஏற்பட்ட பெரும்பான்மையான வலி மற்றும் பாடுகளானது, அதிகாரம் பெற்றுக்கொள்வதற்கென முயற்சி செய்கின்றதான பிசாசு மற்றும் சுயநலமான மனிதர்களிடமிருந்தே வந்ததாய் இருக்கின்றது. உலகத்தில் ஆளுகையும், அதிகாரமும் பெற்றுக்கொள்வதற்கான தேடுதலிலேயே நிம்ரோத்தினுடைய பாபேல் கோபுரம் கட்டப்பட்டது. பேராசையினால் இயக்கப்பட்டதான இந்தத் திட்டத்தினை, தேவன் குறுக்கிட்டு, தடுக்க வேண்டியதாய் இருந்தது. மனித சரித்திரத்தினுடைய ஆரம்பம் துவங்கியே ஜாதிகள்/தேசங்கள் யுத்தத்தில் காணப்படுகின்றனர். பலத்த ஜாதியார், பலமற்ற ஜாதியார்மேல் ஆளுகைச் செய்வதன் மூலமாகவும், அவர்களை அடிமைப்படுத்துவதின் மூலமாகவும், அவர்களைச் சூறையாடிப் போட்டனர். இதைப் போன்றதான ஆவியைப் பெந்தெகொஸ்தேவுக்கு முன்னதாக அப்போஸ்தலர்கள் மத்தியிலுங்கூடப் பார்க்க முடிகின்றது. "நீங்கள் வழியிலே எதைக்குறித்து உங்களுக்குள்ளே தர்க்கம்பண்ணினீர்கள் என்று கேட்டார். அதற்கு அவர்கள் பேசாமல் இருந்தார்கள்; ஏனெனில் அவர்கள் தங்களுக்குள்ளே எவன் பெரியவன் என்று வழியில் தர்க்கம்பண்ணினார்கள்" என்று மாற்கு 9:33, 34-ஆம் வசனங்களில் நாம் வாசிக்கின்றோம். போதகரிடம் தங்களது தர்க்கம் பற்றின உண்மையைக் கூறிடுவதற்கு அவர்கள் வெட்கப்பட்டார்கள்.

பிற்காலங்களில் கிறிஸ்தவ சபையில் கண்காணிகள் மத்தியில் போட்டி ஏற்பட்டது என்பது நம்மை ஆச்சரியப்படுத்துகிறதில்லை. கண்காணிகளினுடைய எண்ணிக்கை பெருகினபோது, கண்காணிகளுக்கெல்லாம் கண்காணியாக யார் இருக்க வேண்டும்? என்ற கேள்வி உடனடியாக எழும்பினது. பரிசுத்த திருச்சபைகள் அனைத்திற்கும், உரோமிலுள்ள கண்காணியே தலைவர் ஆவார் என்று அறிவித்து, இப்பிரச்சனையைச் சக்கரவர்த்தி ஜஸ்டீனியன் முடித்து வைத்தார். அப்போது துவங்கி, உலகத்தையும், மனித மனங்களையும் கட்டுப்படுத்தி ஆளும் ஆசையுள்ள இராஜாக்கள் மற்றும் குருமார்கள் ஆண்ட இருண்ட யுகத்திற்குள்ளாக, உலகமானது அமிழ்ந்துபோனது. இந்த இரக்கமற்ற மற்றும் கொலையாட்டமான ஆளுகைக்குச் சாத்தான் பிரதிநிதித்துவம் கொண்டுள்ளார். இந்த உலகத்தில் செலுத்தப்படும் அதிகாரமானது பாவத்தினால் மிகவும் கெடுக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக அனைத்து அதிகாரங்களுமே எதிர்க்கப்பட வேண்டும் மற்றும் அகற்றப்பட வேண்டுமென்ற முடிவிற்குள்ளாகச் சிலர் கடந்து வந்துள்ளனர். இதன் காரணமாக மனித உரிமைகள் மற்றும் சிலாக்கியங்கள் தொடர்புடைய மிக அதிகப்படியான கோரிக்கைகள் எழும்பியுள்ளது. உரிமைகளுக்கான இந்தத் தேடலில், பெரும்பாலும் அனைத்து அதிகாரங்களும் எதிர்க்கப்படுகின்றன மற்றும் ஜனங்கள் மனிதனுக்கான அதிகாரம் வரையறையற்றதாக காணப்பட வேண்டுமெனக் கற்பனை பண்ணிக்கொண்டு காணப்படுகின்றனர்.

அதிகாரத்தின் மீதான கட்டுப்பாடு எதிர்க்கப்படுகின்ற மற்றும் மறுக்கப்படுகின்ற காலப்பகுதியில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். உலகத்தினுடைய இந்த ஒழுங்கின்மையின் ஆவியானது நம் இரத்தத்திற்குள் ஊடுருவுவதற்கு நாம் அனுமதித்திடக் கூடாது. கிறிஸ்துவினுடைய தலைமைத்துவத்தை

விரும்புகின்றவர்களையும், ஏற்றுக்கொள்பவர்களையுந்தான் தேவன் தேடிக்கொண்டிருக்கின்றார் என்பதை நாம் நினைவில் கொண்டிருக்க வேண்டும். நம்முடைய ஜீவியங்களில் தினந்தோறும் கிறிஸ்து நம்முடைய தலையாகக் காணப்பட வேண்டும். உயிர்த்தெழுதலிலும், நாம் சதாகாலமும் கிறிஸ்துவினுடைய தலைமையின் கீழிலேயே காணப்படுவோம்.

யோசேப்பிடமிருந்துள்ளப் படிப்பினை என்னவெனில், அவர் முழு அதிகாரத்தையும் செயல்படுத்தினவராகக் காணப்பட்டப்போதிலும், அவர் தன்னை முழுமையாகப் பார்வோனுடைய அதிகாரத்தின் கீழேயே வைத்துக்கொண்டவராகக் காணப்பட்டார், அதாவது கிறிஸ்து எப்போதும் தமது பிதாவினுடைய தலைமை அதிகாரத்தை அங்கீகரித்ததுபோல, யோசேப்பும் காணப்பட்டார். அவருக்கு எந்தக் கட்டுக்கடங்காத ஆசைகளும் இருக்கவில்லை. கட்டுப்பாடற்ற ஆசைகளானது லூசிபரை அழித்துப்போட்டது. இது தலையைப் பற்றிக் கொண்டிராத எந்தக் கிறிஸ்தவனையுங்கூட அழித்துவிடும்.

"ஆதலால் நீங்கள் அல்ல, தேவனே என்னை இவ்விடத்துக்கு அனுப்பி, என்னைப் பார்வோனுக்குத் தகப்பனாகவும், அவர் குடும்பம் அனைத்திற்கும் கர்த்தனாகவும், எகிப்து தேசம் முழுதுக்கும் அதிபதியாகவும் வைத்தார்" (ஆதியாகமம் 45:8). இது அருமையான வேதவாக்கியமாகும். யோசேப்பு அத்தேசத்தினுடைய தந்தையாகியுள்ளார்; அவர்கள் அவர் மூலமாக மாத்திரமே ஜீவித்தார்கள். கிறிஸ்து உலகத்திற்கான நித்திய பிதாவாகக் காணப்படுவார். அவர் இறுதியில் மனுக்குலத்தைத் தேவனிடத்தில் கொண்டு வருவார். யோசேப்பினுடைய தகப்பன்துவம் பஞ்சகாலத்தின் போதுதான் ஆரம்பித்ததா? பரிபூரணமான விளைவினுடைய வருஷங்களின் போது ஆரம்பித்ததா? யோசேப்பு அடிமைப்படுத்தப்பட்டு, மற்றும் கடுமையான மற்றும் வலி நிறைந்த சூழ்நிலைகளில் தேவனுடைய வழிநடத்தல்களைக் கற்றுக் கொண்டதான சிறையில் இருக்கும் காலங்களிலா ஆரம்பித்தது? மகத்துவம் அடைதலுக்கு முன்பாக தாழ்மையே உள்ளது. கர்த்தருடைய ஜனங்களாகிய நாம் இப்போதும், உண்மையான பராமரிப்பு செய்தலின் ஆவியைக் கொண்டிருத்தல் வேண்டும். இந்தக் கிருபை மற்றும் தயவின் காலங்களில் நாம் உலகத்திற்கான பொதுவான பாடுகளில் பங்கடைவதில், நாம் எவ்வளவு நன்றியுள்ளவர்களாய்க் காணப்பட வேண்டும். இது நாம் உலகத்தாரை (அக்காலத்தில்) அர்ப்பணிப்பிற்குள்ளாகக் கொண்டுவருவதற்கு ஏதுவாயிருக்கும். நாம் யோசேப்பிடம் கற்றுக்கொள்கின்ற நடைமுறை சார்ந்த பாடம் என்னவெனில், அவர் ஜனங்கள் விஷயத்தில் கடினமனதுடன் நடந்துகொண்டார் என்பதேயாகும். ஜனங்களைப் பார்வோனுடைய முழுக்கட்டுப்பாட்டின் கீழ்க்கொண்டுவரும் விதத்திலேயே யோசேப்பு ஜனங்களைக் கையாண்டவராகக் காணப்பட்டார். இப்போது காண்பிக்கப்படுகின்றதான தாராளமான அன்பை அப்போது யோசேப்பு காண்பிக்கவில்லை. "ஆகையால், தேவனுடைய தயவையும் கண்டிப்பையும் பார்" என்ற வசனத்தை நினைவில் கொள்ளுங்கள் (ரோமர் 11:22). தேவன் முழுக்க இரக்கமுள்ளவர் என்பதும், கண்டிப்பே இல்லாதவர் என்பதும் தேவன் குறித்த, நவீன கால கருத்தாகும். ஆனால் நாம் பிரதிநிதித்துவப்படுத்தும் தேவனானவர், தயவும், கண்டிப்பும் உள்ளவர் ஆவார். இந்தப் படிப்பினையை நம்முன் வைத்துக்கொள்வோமாக.

## "யோசேப்பு தனது சகோதரர்களைக் கடினமாய் நடத்தினார்"

யோசேப்பு தனது சகோதரர்கள் தனது முன்னிலையில் வந்தபோது, முதலாவதாக அவர்களை வேவுக்காரர்களெனக் குற்றஞ்சாட்டினார். அவர்கள் தானியம் வாங்க வந்து, அநேக பிரச்சனைகளுக்குள் சிக்கிக்கொண்டார்கள். "அவர்கள் எல்லாரையும் மூன்றுநாள் காவலிலே வைத்தான். மூன்றாம் நாளிலே யோசேப்பு அவர்களை நோக்கி: நான் தேவனுக்குப் பயப்படுகிறவன்; நீங்கள் உயிரோடே இருக்கும்படிக்கு ஒன்று செய்யுங்கள். நீங்கள் நிஜஸ்தரானால், சகோதரராகிய உங்களில் ஒருவன் காவற்கூடத்தில் கட்டுண்டிருக்கட்டும்; மற்றவர்கள் புறப்பட்டு, பஞ்சத்தினால் வருந்துகிற உங்கள் குடும்பத்துக்குத் தானியம் கொண்டுபோய்க் கொடுக்கட்டும்" (ஆதியாகமம் 42:17-19). இங்கு நமது கர்த்தர் எப்படித் தம்முடைய எபிரெய சகோதரர்களை மூன்று நாட்கள் (தேசம் இயேசுவைப் புறக்கணித்தது துவங்கி, அவரது இரண்டாம் வருகை வரையிலான மூன்று ஆயிர-வருட நாட்கள் பாகம்) சிதறிக் காணப்படப்பண்ணினதையும் மற்றும் மூன்றாம் (ஆயிர-வருட) நாளில் அவர்கள் தங்கள் குடும்பங்களையும் போஷிக்கத்தக்கதாக, தங்கள் வீடுகளுக்குத் திரும்பிடுவதற்கு அனுமதித்திட்டார் என்பதையும் நாம்

காண்கின்றோம். இது கிறிஸ்துவின் மரணம் துவங்கி, அவர் திரும்பிவந்து, தமது கவனத்தைத் தமது சகோதரர்கள் மீது செலுத்தி, அவர்கள் தங்கள் சொந்த தேசத்திற்குச் சில ஏற்பாடுகளுடன் மீண்டும் திரும்பிச் செல்வதற்கு அனுமதிப்பது வரையிலுமான காலத்தை உள்ளடக்குகின்றதாய் இருக்கின்றது.

யோசேப்பு அவர்களைச் சிறையிலிருந்து விடுவித்தபோது, அவர்கள் தங்கள் பாவங்களை எபிரெய மொழியில் ஒப்புக்கொண்டார்கள், அதுவும் யோசேப்பால் நன்கு புரிந்துகொள்ள முடியும் என்பது தெரியாமல் ஒப்புக்கொண்டார்கள். தவறு செய்தமைக்கான அவர்களது மனவுளைச்சலையும், குற்ற உணர்வையும் குறித்து யோசேப்பு கவனித்துக் கொண்டிருந்தபோது, அவரால் அவரது கண்ணீர்களை அடக்கிக்கொள்ள முடியாததினால், அவர் அப்புறம் செல்ல வேண்டியிருந்தது என்று பதிவு செய்யப்பட்டுள்ளது (ஆதியாகமம் 42:24). நம்முடைய நாட்களில் எத்தனை யூதர்கள், இயேசுவுக்கு நிகழ்ந்தவைகளைக் குறித்து, தங்களது துக்கக்கரமான சரித்திரத்தை வேதனையோடு அடிக்கடி திரும்பிப்பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள் என்று நான் எண்ணுவதுண்டு. அநேகருடைய இருதயங்களில் இந்தத் தவறுக்கான மனவுளைச்சல் இருக்கின்றது என்று நான் உறுதியாய் நம்புகின்றேன், ஆனால் இதை அவர்களால் வெளிப்படையாய்ப் புறஜாதிகளிடத்தில் ஒப்புக்கொண்டிட முடியாது. எபிரெய பாஷையில் மாத்திரமே தவறுக்கான இந்த மனவுளைச்சல் கேட்கப்பட்டது. உண்மையான மன்னிப்பிற்கு முன்னதாக தவற்றை ஒப்புக்கொள்ளுதல் நடைபெறுகின்றது. இக்காரியம் இரகசியமாக ஆரம்பித்துவிட்டது என்றும், சகரியா 12:10-ஆம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அதன் நிறைவை அடையும் என்றும் நாம் நம்புகின்றோம்; "நான் தாவீது குடும்பத்தாரின்மேலும் எருசலேம் குடிகளின்மேலும் கிருபையின் ஆவியையும் விண்ணப்பங்களின் ஆவியையும் ஊற்றுவேன்; அப்பொழுது அவர்கள் தாங்கள் குத்தின என்னை நோக்கிப்பார்த்து, ஒருவன்தன் ஒரே பேறானவனுக்காகப் புலம்புகிறதுபோல எனக்காகப் புலம்பி, ஒருவன் தன் தலைச்சன் பிள்ளைக்காகத் துக்கிக்கிறதுபோல எனக்காக மனங்கசந்து துக்கிப்பார்கள்." இத்தருணமே, யோசேப்பு அவர்களிடத்தில், "நான் யோசேப்பு" என்று சொல்லக்கூடிய தருணமாகும். அது எத்தகைய மகிழ்ச்சிகரமாயுள்ள மீண்டுமான ஒன்று சேருதலாகும். நிஜத்தில் கிறிஸ்து தம்மை இஸ்ரயேலுக்கு வெளிப்படுத்தி, அவர்கள் அவரது திறந்த கரங்களுக்குள்ளாக விழும்போது, அது ஒரு மாபெரும்/முக்கியமான தருணமாய்க் காணப்படும்.

எனினும் அவர்களைச் சிறையிலிருந்து வெளியே விட்டவுடனே, யோசேப்பு தான் யார் என்பதை, தனது சகோதரர்களுக்கு வெளிப்படுத்தவில்லை. அவர் மிகவும் கடினமாய் நடந்துகொள்ளும் காரியம் ஒன்றைச் செய்கின்றார். அவர் சிமியோனைப் பிரிக்கின்றார்; "அவர்களில் சிமியோனைப் பிடித்து, அவர்கள் கண்களுக்கு முன்பாகக் கட்டுவித்தார்" என்று நாம் ஆதியாகமம் 42:24-ஆம் வசனத்தில் வாசிக்கின்றோம். ஏன் சிமியோன்? மற்றச் சகோதரர்கள் தங்கள் குடும்பங்களினிடத்திற்குத் திரும்பிச் செல்ல அனுமதிக்கப்பட்டிருக்கையில், ஏன் சிமியோன் இவ்வாறாகக் கட்டப்பட்டு, சிறைக்குள் தள்ளப்பட்டார்? இது மிகவும் வேதனையானதும், தாழ்மைப்படுத்துவதாகவும் காணப்பட்டது. சகோதரர்கள் மத்தியில் ரூபன் மாத்திரமே குற்றமற்றவர். இவர் தனது குற்றமற்ற நிலைமையை ஆதியாகமம் 42:22-ஆம் வசனத்தில் குறிப்பிடுகின்றார். யோசேப்பை அடிமையாக விற்றுப்போடுவதற்கான ஆலோசனையைச் சகோதரர்களுக்குக் கொடுத்திட்ட யூதாவை, யோசேப்பு ஏன் கட்டவில்லை? (ஆதியாகமம் 37:27). ஏன் என்று நமக்கு நிச்சயமாய்த் தெரியாது, ஆனால் யோசேப்பை அவர்கள் விற்றபோது, சிமியோன்தான் யோசேப்பைக் கட்டினார் என்றும், யோசேப்பு தனது சகோதரர்களிடம் கெஞ்சினபோது, சிமியோன் கொஞ்சமும் யோசேப்பிற்கு அனுதாபம் காண்பிக்கவில்லை என்றும் நாம் எண்ணுகின்றோம். கட்டப்படும் போதுள்ள மனவேதனையை சிமியோனே இப்பொழுது உணரவேண்டியவராய் இருந்தார். சிமியோன் தனது சகோதரர்கள் விடுதலையடைந்து வீடு திரும்புவதையும், தான் சிறையில் தள்ளப்படுவதையும், கட்டப்படுவதையும் பார்க்க வேண்டியிருந்தது. சிமியோன் தனக்கான சில மருந்துகளைப் பானம் பண்ண வேண்டியிருந்தது மற்றும் அது இனிமையாய் இருப்பதில்லை. ஒருவேளை சிமியோன் போதுமானளவுக்குத் தவறுக்கான இருதயத்தின் வருந்துதலைக் காண்பிக்காமல் இருந்திருக்கலாம் மற்றும் யோசேப்பு தனது கடுமையான கையாளுதலைப் பயன்படுத்தி, சிமியோன் உண்மையாய் இருதயம் வருந்தும் நிலைக்குக் கொண்டு

வரப்படுவதற்கு உதவினார். ஒரு விஷயத்தை இங்குக் கவனிக்கவும், அதென்னவெனில் யூதாவும், மற்றச் சகோதரர்களும் சிமியோனுக்காக எந்த மன்றாட்டையும் ஏறெடுக்கவில்லை; யாரும் சிமியோனுக்காக தங்களைக் கையளிக்கவில்லை.

நிஜத்தில் (யோசேப்பு அடையாளப்படுத்தும்) இயேசுவை யார் கட்டினார்கள் என்பதை நாம் அறிவோம். அது இயேசுவைப் பகைத்து, அநேக தருணங்களில் அவரைக் கொன்று போடுவதற்கு நாடின மதத்தலைவர்கள் ஆவர். இறுதியில் இவர்கள் யூதாசினுடைய உதவியினால், இயேசுவைக் கட்டி, பிலாத்துவினிடத்தில் அவரை ஒப்புக்கொடுத்தார்கள். பின்னர் இயேசுவைச் சிலுவையில் அறையும்படிக்கு இவர்கள் பிலாத்துவை நச்சரித்தார்கள். ஐந்து முறை பிலாத்து, "இவரிடத்தில் நான் ஒரு குற்றத்தையும் காணேன்" என்றார். எனினும் இந்த மதத் தலைவர்கள் இயேசுவைக் கட்டுவதில் மாத்திரம் ஜெயங்கொள்ளாமல், இயேசு உயிர்த்தெழுவது வரையிலான காலப்பகுதி வரையிலாகிலும் அவரை ஒழித்துக்கட்டினவர்களாய் இருந்தார்கள்.

யோசேப்பின் (இயேசுவின்) சகோதரர்கள் சிதறடிக்கப்படுதல் எனும் சிறைச்சாலையினின்று விடுவிக்கப்பட்டு அவர் முன் நிற்கையில், சிமியோன் நம்முடைய நாட்களிலுள்ள யாருக்கு நிழலாக இருக்கின்றார்? இப்படிச் சிந்திக்கையில், இன்னும் கூடுதலான கடினமான அனுபவங்கள் பெற்றுக்கொள்வதற்கு அவசியமுள்ள ஒரு யூத வகுப்பார் நம்முடைய நாட்களில் காணப்படுவதாகத் தோன்றுகின்றது. யோசேப்புக்கு முன்பாக நின்ற எபிரெய சகோதரர்கள் அனைவரும் அவரைப் புறக்கணித்திருந்தவர்களாகக் காணப்பட்டனர். சிமியோனே இன்னும் கூடுதலான கடினமான அனுபவங்களுக்குள் அனுமதிக்கப்பட்டார் (ஆதியாகமம் 42:24). நம்முடைய நாட்களில் யாருக்குச் சிமியோன் அடையாளமாய் இருக்கின்றார்? கிறிஸ்துவினுடைய இராஜ்யம் எனப் போலியாய்த் தங்களைக் காண்பித்துக்கொண்டிருக்கின்றதான பெயர்க்கிறிஸ்தவ சபையுடன், தங்களை இணைத்துக் கொண்டிருக்கின்றதான யூதர்கள், இன்னும் கூடுதலான உபத்திரவத்தை அடையப்போகின்றவர்களாகக் காணப்படுகின்றனர் என்பதாகத் தோன்றுகின்றது. இவர்கள் எகிப்தில் (அ) பாபிலோனில் கட்டிப்போடப்படப் போகின்றனர். இயேசுவை மேசியாவென ஏற்றுக்கொண்டவர்களும், அதேசமயம் சபைகளுடனும், யூதர்களைக் கொடுமைப்படுத்தும் கொடுமைகளுடனும் தங்களை இணைத்துக்கொள்வதற்கு விருப்பமற்றுக் காணப்படுகின்றவர்களுமான யூதர்கள், அதாவது (Messianic Jews) மேசியாவின் வருகையை எதிர்ப்பார்த்திருக்கும் யூதர்களைக் குறித்து நான் இங்குக் கூற வரவில்லை. இவர்கள் திரித்துவம் கொள்கையினைத் தள்ளியும், கிறிஸ்தவ மண்டலத்தைத் தள்ளியும், மேசியாவில் மாத்திரம் நம்பிக்கைக்கொள்ள விரும்புகின்றவர்களாய் இருக்கின்றனர். சிமியோன் திரியேக கிறிஸ்துவையும், எரிநரகத்தில் எரிக்கும் கிறிஸ்துவையும் ஏற்றுக்கொண்டு, போலி கிறிஸ்தவ சபைகளில், அதிலும் பெரும்பாலும் இவான்சலிக்கல் சபைகளில் (Evangelical Churches) தங்களை இணைத்துக்கொள்ள விரும்புகின்றவர்களாகிய யூதர்களை அடையாளப்படுத்துகின்றார் என்று நாம் எண்ணுகின்றோம்.

பாபிலோனில் அங்கமாகியுள்ள யூதர்கள் பாபிலோன் அழிந்துபோகும்போது, இன்னும் அதிகமான உபத்திரவங்களுக்குள்ளாகக் கடந்து போவார்கள். இவர்கள் தேவனுடைய நியாயத்தீர்ப்பிற்குள்ளாகும் அந்த அமைப்பில் கட்டப்பட்டவர்களாகக் காணப்படுவார்கள். நம்முடைய நாட்களிலுள்ள இவர்களுக்கே சிமியோன் அடையாளமாய்க் காணப்படுகின்றார். ஆம் சிமியோன் வகுப்பாருடைய சகோதரர்கள் தங்கள் குடும்பங்களையும், யாக்கோபையும் போஷிக்கத்தக்கதாக, தங்கள் சொந்த தேசத்திற்குத் திரும்புகையில், இவ்வகுப்பார் கிறிஸ்தவ மண்டலத்தில் கட்டப்பட்டவர்களாய் இருப்பார்கள். பென்யமீனைத் தங்களோடுகூடக் கொண்டுவரத்தக்கதாக, ஒன்பது சகோதரர்களும், உணவுகளுடன் வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர்.



யோசேப்பு தனது சகோதரர்களை ஆசீர்வதித்தல்

## "இரண்டாம் சந்திப்பு"

யோசேப்பினுடைய சொந்த சகோதரனாகிய பென்யமீன் எனும் தங்களது சகோதரனோடுங்கூட, அவர்கள் யோசேப்பின் முன் நின்றபோது, யோசேப்புடனான அடுத்த சந்திப்பு நடைப்பெறுகின்றது. அவர்கள் தங்களோடுகூடப் பென்யமீனைக் கொண்டுவருவது என்பது நிறைவேற்றுவதற்கு மிகக்கடினமானக் காரியமாகும் (ஆதியாகமம் 42:16, 19). பென்யமீனை எகிப்திற்கு அனுப்ப வேண்டுமென்ற நிலை வந்தபோது, அது எவ்வளவாய் யாக்கோபினுடைய இருதயத்தை உடைத்தது என்பதை நீங்கள் அறிவீர்கள், ஆனால் பஞ்சத்தின் காரணமாக யாக்கோபுக்கு வேறு வழி இருக்கவில்லை. யோசேப்பு இயேசுவுக்கு நிழலாய் இருப்பதுபோன்று, பென்யமீன் திரள்கூட்டத்தாருக்கு நிழலாய்க் காணப்படுகின்றார். யோசேப்பு தனது ஐந்து சகோதரர்களை, தனது பத்துச் சகோதரர்களுக்கு அடையாளமாய் நிறுத்தினார். "தன் சகோதரரில் ஐந்துபேரைப் பார்வோனுக்கு முன்பாகக் கொண்டுபோய் நிறுத்தினான்" (ஆதியாகமம் 47:2) என்று நாம் வாசிக்கின்றோம். ஐசுவரியவான் மற்றும் ஏழை லாசரு கதையிலும் ஐந்து சகோதரர்கள், பத்துக் கோத்திரத்தை அடையாளப்படுத்துகின்றனர்(லூக்16:19-31).

யோசேப்பின் சகோதரர்களுக்கும், யோசேப்பிற்குமான இரண்டாம் சந்திப்பிற்கான நிஜமானது, நிஜமான பென்யமீன் (திரள் கூட்டத்தினர்), இஸ்ரயேல் தேசத்தாருடன், கிறிஸ்துவுக்கு முன்பாக நிற்கையில் நடைபெறும். பென்யமீன் ஐந்து புத்தியில்லாத கன்னிகைகளை அடையாளப்படுத்துபவராய் இருப்பினும், இவர் தனது சகோதரனாகிய யோசேப்பைப் புறக்கணிக்கவில்லை என்பதைக் கவனிப்பதற்குச் சுவாரசியமாய் இருக்கின்றது. பென்யமீன் தனது சகோதரர்கள் புரிந்த குற்றத்தில், பங்குடையவர் அல்ல. திரள் கூட்டம் கிறிஸ்துவை அன்புகூர்ந்ததுபோலும், அந்தக் கற்பாறையின் மீது கட்டியெழுப்பப்பட்டவர்களாய் இருந்தது போலும், பென்யமீனும் தனது சகோதரனாகிய யோசேப்பை அன்புகூர்ந்தவராய்க் காணப்பட்டார். யோசேப்பு ஏற்பாடு பண்ணியிருந்த விருந்தில், பென்யமீன் பெற்றுக்கொண்டதான ஐந்து மடங்கு பங்கானது, விசேஷித்த தயவினை அடையாளப்படுத்துகின்றதாய் இருந்தது (ஆதியாகமம் 43:34). எப்படி "யோசேப்பு தன் கண்களை ஏறெடுத்து, தன் தாய் பெற்ற குமாரனாகிய தன் சகோதரன் பென்யமீனைக் கண்டு, நீங்கள் எனக்குச் சொன்ன உங்கள் இளைய சகோதரன் இவன்தானா என்று கேட்டு, மகனே, தேவன் உனக்குக் கிருபை செய்யக்கடவர் என்றான். யோசேப்பின் உள்ளம் தன் சகோதரனுக்காகப் பொங்கினபடியால், அவன் அழுகிறதற்கு இடம் தேடி, துரிதமாய் அறைக்குள்ளே போய், அங்கே அழுதான்" என்பதை கவனியுங்கள் (ஆதியாகமம் 43:29, 30). இங்குக் கிறிஸ்து தமது சகோதரனாகிய திரள் கூட்டத்தாருக்காக உள்ளம் பொங்குவதைப்

பார்க்கின்றோம். எனினும் யோசேப்பு தன்னை அவர்களுக்கு வெளிப்படுத்த இன்னும் தயாராய் இல்லை.

## "யோசேப்பினுடைய வெள்ளிப்பாத்திரம்"

திட்டம் இப்பொழுது பிரம்மாண்டமடைகின்றது. யோசேப்பு தனது சகோதரர்களுடைய சாக்குகளில் பணத்தை வைக்கின்றார் மற்றும் பென்யமீனுடைய சாக்கில் (மாம்சீக இஸ்ரயேல் மற்றும் வாக்களிக்கப்பட்ட தேசம் தொடர்புடைய சத்தியமாய் அநேகமாகக் காணப்படும்) தனது வெள்ளிப்பாத்திரத்தை வைத்துவிடுகின்றார். இது அனைவருக்கும் சீர்க்குலைவை உண்டாக்கிற்று. அவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டனர் மற்றும் இப்பொழுது பென்யமீன் இல்லாமல், அவர்கள் வீடு திரும்ப வேண்டிய நிலைமை நிலவியது. யோசேப்பை அடிமையாக விற்றுப்போடுவதற்கான ஆலோசனையை வழங்கின அதே யூதா, இப்பொழுது தன்னுடைய ஜீவியத்தையே கையளிக்க முன்வந்தார். தனது பாத்திரம் யாரிடத்தில் கண்டுபிடிக்கப்பட்டதோ, அவரே தனக்கு வேலைக்காரனாகக் காணப்பட வேண்டுமென்று யோசேப்பு விடாப்பிடியாய் நின்றார். திரள் கூட்டத்தினர் "இரவும், பகலும் அவருடைய ஆலயத்திலே அவரைச் சேவிப்பார்கள்" என்பதை நாம் அறிவோம். "அப்பொழுது யூதா அவனண்டையிலே சேர்ந்து: ஆ, என் ஆண்டவனே, உமது அடியேன் உம்முடைய செவிகள் கேட்க ஒரு வார்த்தை சொல்லுகிறேன் கேட்பீராக; அடியேன்மேல் உமது கோபம் மூளாதிருப்பதாக; நீர் பார்வோனுக்கு ஒப்பாயிருக்கிறீர். இப்படியிருக்க, இளையவன் தன் சகோதரரோடேகூடப் போகவிடும்படி மன்றாடுகிறேன்; உம்முடைய அடியானாகிய நான் இளையவனுக்குப் பதிலாக இங்கே என் ஆண்டவனுக்கு அடிமையாயிருக்கிறேன். இளையவனை விட்டு, எப்படி என் தகப்பனிடத்துக்குப் போவேன்? போனால் என் தகப்பனுக்கு நேரிடும் தீங்கை நான் எப்படிக் காண்பேன்" (ஆதியாகமம் 44:18, 33, 34) என்று நாம் வாசிக்கின்றோம். இத்தருணத்திற்காகவே யோசேப்பு காத்துக்கொண்டிருந்தார். ஆதியாகமம் 44:16-இல் யூதா தனது பாவங்களை யோசேப்பினிடத்தில் ஒப்புக்கொண்டார். யூதா பென்யமீனுக்குப் பதிலாக, அவரது அடிமை ஸ்தானத்தை எடுக்க விரும்பினதைப் பார்த்து, யோசேப்பினால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. இந்த யூதாதான் முன்பு யோசேப்பை அடிமையாக விற்றுப்போடுவதற்கு ஆலோசனை வழங்கினவர் ஆவார் என்பதை நினைவில் கொள்ளுங்கள்; ஆனால் இப்பொழுது யூதா ஓர் அருமையான நபராக மாற்றம் அடைந்துள்ளார். யூதா தனது தந்தையாகிய யாக்கோபைக் குறித்தும், தனது சகோதரனாகிய பென்யமீனைக் குறித்தும் அக்கறைகொண்டிருந்தார். பென்யமீனுக்குப் பதிலாக தன்னைக் கையளிக்க வேண்டுமானால், யூதாவிடம் மாபெரும் குணங்கள் காணப்பட்டிருந்திருக்க வேண்டும். சிமியோனுக்காக யாரும் தங்களைக் கையளிக்கவில்லை என்பதையும் நினைவில் கொள்ளுங்கள். யூதா அடிமையாகப் போவதில்லை. அவரது அருமையான இருதய நிலைமையானது, இறுதியில் அவரை விடுதலையாக்குகின்றது.

இது சுவாரசியமாக உள்ளது. வெளிப்படுத்தல்16-ஆம் அதிகாரத்தில் "ஏழு தூதர்கள்," "ஏழு பொற்கலசங்களை" ஊற்றுகின்றனர்; இவர்கள் "தேவனுடைய மகிமையினால் நிரம்பப்பட்டிருந்த" ஆலயத்திலிருந்து புறப்பட்டு வந்தார்கள். தெய்வீக நியாயத்தீர்ப்புகள் அடங்கின "பொற்கலசங்கள்," இந்த "ஏழு தூதர்களிடம்" கொடுக்கப்பட்டன. பொற்கலசங்கள் தேவனுடைய கோபாக்கினையால் நிரம்பி இருந்தது. ஆலயத்திலிருந்து புறப்பட்டு வருகின்றதான இந்த "ஏழு தூதர்களின்," அதாவது தேவனுடைய உண்மை சபையின் வேலையில், பென்யமீன் உள்ளடங்குவதில்லை. பொன் தெய்வீகம் சம்பந்தப்பட்டதாகும். திரள் கூட்டத்தாரை அடையாளப்படுத்தும் பென்யமீனிடம், யோசேப்பின் வெள்ளிப்பாத்திரம் கொடுக்கப்பட்டதைக் கவனியுங்கள். ஆகையால் வெள்ளி, திரள் கூட்டத்தினர் சம்பந்தப்பட்டதாய் இருக்கின்றது. வெளிப்படுத்தல் 16:15-ஆம் வசனத்தில், திரள் கூட்டத்தினருக்கான கர்த்தருடைய செய்தி காணப்படுகின்றது; "இதோ, திருடனைப்போல் வருகிறேன். தன் மானம் காணப்படத்தக்கதாக நிர்வாணமாய் நடவாதபடிக்கு விழித்துக்கொண்டு, தன் வஸ்திரங்களைக் காத்துக்கொள்ளுகிறவன் பாக்கியவான்." திரள் கூட்டத்தினரைச் சுற்றி அனைத்தும் வீழ்ந்து, அழிந்துகொண்டிருக்கும்போது, அவர்கள் தங்கள் நீதியின் வஸ்திரத்தைக் காத்துக்கொள்ள வேண்டும் என்பதே திரள் கூட்டத்திற்குக் கொடுக்கபட்டச் செய்தியாகும். கிறிஸ்து திரள் கூட்டத்தினருக்கு வழங்குவதுபோன்றே, யோசேப்பு தனது வெள்ளிப்பாத்திரத்தை, பென்யமீனுடைய சாக்கில் வைக்கின்றார் என்பதை நாம் பார்க்கின்றோம். இது பென்யமீனுக்கு மிகுந்த உபத்திரவத்தின் மற்றும் திகைப்பின்

காலத்தை ஏற்படுத்தினது. யோசேப்பின் வெள்ளிப்பாத்திரம் தன்னிடம் காணப்பட்டப்படியால், பென்யமீன் தீர்ப்பிற்குள்ளானவராகக் காணப்பட்டார். திரள் கூட்டத்தினரும் மகா உபத்திரவத்திற்குள்ளாகுவார்கள், ஏனெனில் அவர்களுடைய சாக்கில் "வெள்ளிப்பாத்திரமாகிய" சத்தியங்கள் வைக்கப்பட்டிருக்கும்.

எப்படி வெள்ளிப்பாத்திரமானது, பென்யமீனுடைய சாக்கில் மறைத்து வைக்கப்பட்டதோ, அப்படியே கிறிஸ்துவும் தம்முடைய சத்தியங்களைத் திரள் கூட்டத்தாரிடத்தில் வைப்பார் மற்றும் அவர்கள் யோசேப்பாகிய கிறிஸ்துவுக்குரிய சில முக்கியமான சத்தியங்களைப் பெற்றுக்கொண்டவர்களாகக் காணப்படுவார்கள். அது எந்தச் சத்தியங்களாக இருக்கும்? மாம்சீக இஸ்ரயேல் தொடர்புடையதான சத்தியங்களே, திரள் கூட்டத்தினர் பெற்றிருக்கும் சத்தியமாக இருக்குமென்று நான் எண்ணுகின்றேன். ஆகையால் இஸ்ரயேலை அழித்துப் போடுவதற்கென எடுக்கப்படும் எந்த முயற்சியும் வாய்க்காதே அழிந்துபோகும் என்பதை திரள் கூட்டத்தினர் அறிந்திருப்பார்கள். இஸ்ரயேலுக்கு எதிராக கோகும், மாகோகும் வருகையில், இந்தப் படையெடுப்பைப் பெயர்ச்சபைகளானது ஆசீர்வதிக்கும். எனினும் இந்த நோக்கம் தோல்வியைத் தழுவும் என்று திரள் கூட்டத்தினர் அறிந்திருப்பார்கள். இந்த நோக்கத்திற்கு எதிராக திரள் கூட்டத்தினர் பேசி, தங்கள் மீது கோபாக்கினியை வருவித்துக்கொள்வார்கள்.

யூதா யாரை அடையாளப்படுத்துகின்றவராய் இருப்பார்? மாம்சீக இஸ்ரயேலர்கள் மத்தியிலான உண்மையுள்ளவர்களை யூதா அடையாளப்படுத்துகின்றார்; இவர்கள் ஒரு கட்டத்தில் பெயர்ச்சபை அமைப்புகள் திரள் கூட்டத்தாருக்கு எதிராக திரும்புகையில், திரள் கூட்டமாகிய பென்யமீன் வகுப்பாரைப் பாதகத்தினின்று பாதுகாப்பதற்கெனப் பேசுபவர்களாகவும், முயற்சிக்கின்றவர்களாகவும் காணப்படுவார்கள். நிஜமான யோசேப்பு யூதாவினுடைய இருதயத்திலுள்ள தவறுக்கான உளைச்சலைக் கண்டு, தம்மை அதற்குமேல் தம்முடைய மாம்ச சகோதரர்களிடத்தில் மறைத்துக்கொள்ள முடியாத தருணமானது ஒரு மாபெரும் திசைத் திருப்பமாகக் காணப்படும். "அப்பொழுது யோசேப்பு தன் அருகே நின்ற எல்லாருக்கும் முன்பாகத் தன்னை அடக்கிக்கொண்டிருக்கக்கூடாமல், யாவரையும் என்னைவிட்டு வெளியே போகப்பண்ணுங்கள் என்று கட்டளையிட்டான். யோசேப்பு தன் சகோதரருக்குத் தன்னை வெளிப்படுத்துகையில், ஒருவரும் அவன் அருகில் நிற்கவில்லை. அவன் சத்தமிட்டு அழுதான்; அதை எகிப்தியர் கேட்டார்கள், பார்வோனின் வீட்டாரும் கேட்டார்கள். யோசேப்பு தன் சகோதரரைப் பார்த்து: நான் யோசேப்பு" என்றார் (ஆதியாகமம் 45:1-3). தனது சகோதரர்களுக்கான தனது உணர்வுகளை, யோசேப்பு உலகமாகிய எகிப்தியர்களிடமிருந்து மறைக்க முயற்சிக்கின்றார், ஆனால் சீக்கிரத்தில் கிறிஸ்து தம்மை, தம்முடைய மாம்சீக சகோதரர்களுக்கு வெளிப்படுத்தியுள்ளார் என்பதை அனைவரும் உணர்ந்துகொள்வார்கள். இது அருமையாய் இருக்கின்றதல்லவா?

கோகினுடைய படையெடுப்பு வீழ்ச்சியடையும்போது, திரள் கூட்டத்தினர் மகா உபத்திரவத்தில், இந்தப் பூமியை விட்டுக்கடந்து போவார்கள். "இவ்விதமாய் நான் அநேக ஜாதிகளின் கண்களுக்கு முன்பாக என் மகத்துவத்தையும் என் பரிசுத்தத்தையும் விளங்கப்பண்ணி, அறியப்படுவேன்; அப்பொழுது நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வார்கள்" (எசேக்கியேல் 38:23). இப்படியாக தனது மாம்சீக ஜனங்கள் மீதான யோசேப்பினுடைய (கிறிஸ்துவினுடைய) அன்பானது, முழு உலகத்துக்கும் தெரியவரும். (சில தனித்தன்மையான விதத்தில் திரள் கூட்டத்தினரை) பென்யமீனை, யூதா (மாம்சீக இஸ்ரயேலர்) பாதுகாக்க முற்பட்ட பின்னரே, யோசேப்பு (கிறிஸ்து) தன்னை, தனது சகோதரர்களிடத்தில் வெளிப்படுத்தினார் என்பதைக் கவனியுங்கள்.

தம்மை மாம்சத்தில் இருக்கும் தமது மாம்சீக சகோதரர்களாகிய இஸ்ரயேலர்கள் ஏற்றுக் கொள்ளத்தக்கதாக, அவர்களை நீண்ட காலமாக கிறிஸ்து ஆயத்தம் பண்ணிக் கொண்டிருக்கின்றார். எனினும் முடிவில் மிகச் சடுதியாக அவர் தாமாகவே தம்மை, தமது மாம்சீக சகோதரர்களுக்கு வெளிப்படுத்துவார் என்று நம்முடைய பாடம் சுட்டிக்காண்பிக்கின்றதாய் இருக்கின்றது. மாம்சீக இஸ்ரயேல் தொடர்புடையதான சத்தியமாகிய யோசேப்பினுடைய வெள்ளிப்பாத்திரத்தைக் கொண்டிருப்பதன் காரணமாக, விசேஷித்த சோதனைக்குள் பென்யமீன் கடந்துசெல்லத்தக்கதாக, யோசேப்பு பென்யமீனை மாத்திரம் அனுமதித்திருப்பது தெரிகின்றது. யூதா பென்யமீனுடைய ஸ்தானத்தை எடுத்துக்கொள்ளத்தக்கதாக,

தன்னை ஒப்புவிப்பது வரையிலும், யோசேப்பு தனது சகோதரர்களுக்கு ஆசீர்வாதங்களையும், துயரங்களையும், இரண்டையுமே கொடுத்தவராகக் காணப்படுகின்றார். (பென்யமீன் யோசேப்பினுடைய சொந்த சகோதரனாகவும், முதற்பேறான சபையின், சகோதரனாகவும் காணப்படுகின்றார் என்பதை நினைவில்கொள்ளுங்கள்). நிஜமான யூதா, திரள் கூட்டத்தாரின் பாடுகளை மாற்றிடுவதற்குச் சில சிறந்த பிரயாசங்களை எடுப்பார்கள் என்று எதிர்ப்பார்க்கலாம் என்பதற்கு இக்கதை உத்தரவாதம் அளிக்கின்றது.

இதை நான் நமக்கு முன்பாக அண்மையில் நிறைவேறப்போகின்றதான தீர்க்கத்தரிசனத்திற்கான மற்றுமொரு ஜன்னலை/திரையைத் திறப்பதற்கே குறிப்பிடுகின்றேன். யோசேப்பின் கதையானது, அநேக விதங்களில் நிழலாக இருக்கின்றது என்பதில் ஐயமில்லை. திரள் கூட்டத்தாருக்கும், கிறிஸ்துவுக்கும், யூதாவுக்கும், கோகின் படையெடுப்பிற்கும், அர்மகெதோனுக்கும் இடையிலான சம்பந்தங்களை நாம் புரிந்திடுவதற்கு உதவியாகவே, அநேகமாக இந்த நிழலான கதைக் கொடுக்கப்பட்டிருக்கலாம். கிறிஸ்துவின் சகோதரர்களாகிய திரள் கூட்டத்தாரைப் பாதுகாக்கத்தக்கதாக சிறந்த விதத்தில் செயல்படுவதின் மூலமே அல்லாமல், வேறெந்த விதத்தில் 'யூதா வகுப்பார்' தங்கள் தவறுக்கான உண்மையான மனவுளைச்சலையும், அருமையான இருதய நிலைமையையும் காண்பிக்க முடியும். இப்படிச் செயல்படுவதின் மூலம், திரள் கூட்டம் காப்பாற்றப்படுகிறதில்லை. "எவன் வசத்தில் பாத்திரம் கண்டுபிடிக்கப்பட்டதோ, அவனே எனக்கு அடிமையாயிருப்பான்" என்று யோசேப்பு கூறினதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள் (ஆதியாகமம் 44:17). திரள் கூட்டத்தினர் சிங்காசனத்திற்கு முன்பாக, தேவனுடைய ஆலயத்தில் நின்று அவரைச் சேவிப்பார்கள். யூதாவினுடைய மன்றாட்டே, கிறிஸ்து தம்முடைய இருதயத்தை, தமது மாம்சீக சகோதரர்களிடத்தில் திறக்கச் செய்தது.

## "ஏழு வருடங்கள் விதைத்தல் (அ) நடுதல் இல்லை"

ஜனங்கள் ஏழு வருட பஞ்ச காலத்தின்போது, ஜீவிக்க முடிந்ததற்கான காரணங்களில் ஒன்று, அவர்கள் ஏழு வருடங்கள் விதைக்கவோ (அ) நடவோ இல்லை என்பதை அறிந்து கொள்வது முக்கியமானதாகும். ஒருவேளை ஜனங்கள் விதைத்திருந்திருப்பார்களானால், அவர்களால் தொடர்ந்து ஜீவித்திருந்திருக்க முடியாது. பஞ்சம் கொடியதாகிக் கொண்டிருந்தபோது, எகிப்தியர்களுடைய இருதயங்களைத் திகில் ஆட்கொண்டிருக்க வேண்டும் என்பதில் எனக்கு நிச்சயமே. அறுவடைக்காக அவர்கள் தானியங்களை நட விரும்புவது இயல்பே. யோசேப்பிற்குக் கீழ்ப்பட்டிருப்பதன் மூலமாக மாத்திரமே அவர்களால் தொடர்ந்து ஜீவிக்க முடியும். "தேசத்தில் இப்பொழுது இரண்டு வருஷமாகப் பஞ்சம் உண்டாயிருக்கிறது; இன்னும் ஐந்து வருஷம் உழவும் அறுப்பும் இல்லாமல் பஞ்சம் இருக்கும்" (ஆதியாகமம் 45:6) என்று நாம் வாசிக்கின்றோம். ஏழு வருட பஞ்ச காலத்தின் முடிவில் அவர்கள் அடுத்து விதைத்ததைக் குறித்து, "பின்னும் யோசேப்பு ஜனங்களை நோக்கி: இதோ, இன்று உங்களையும் உங்கள் நிலங்களையும் பார்வோனுக்காக வாங்கிக்கொண்டேன்; இதோ, உங்களுக்குக் கொடுக்கப்படுகிற விதைத் தானியம், இதை நிலத்தில் விதையுங்கள்" (ஆதியாகமம் 47:23) என்று நாம் வாசிக்கின்றோம். அப்போது அவர்கள் தங்கள் அறுவடையில் ஐந்தில் ஒரு பங்கை பார்வோனுக்கு, அதாவது தேவனுக்கு (அ) பொது நலனுக்குக் கொடுக்க வேண்டியவர்களாய் இருந்தார்கள்.

"விசுவாசத்தினாலே யோசேப்பு இஸ்ரயேல் புத்திரர் எகிப்து தேசத்தைவிட்டுப் புறப்படுவார்களென்பதைப்பற்றித் தன் அந்தியகாலத்தில் பேசி, தன் எலும்புகளைக்குறித்துக் கட்டளைகொடுத்தான்" (எபிரெயர் 11:22). இது யோசேப்பின் சார்பிலான முக்கியத்துவமுள்ள/ அர்த்தம் நிறைந்த செய்கையாகும். யோசேப்பால் எகிப்திலேயே மகா நினைவு தூண்களுடைய கல்லறை ஒன்றைச் சுலபமாகப் பெற்றுக்கொள்ள முடியும். அவரது பெயர் மிகவும் பிரஸ்தாபம் பெற்றிருந்தது மற்றும் அந்தத் தேசத்தாரும் அவருக்குக் கடமைப்பட்டிருந்தனர். எனினும் ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபிற்குப் பண்ணப்பட்ட வாக்குத்தத்தத்தை யோசேப்பு ஒருபோதும் மறந்து போகாதவராகக் காணப்பட்டார். என்ன நடந்தாலும், அவர் எகிப்தில் இளைப்பாறிக்கொண்டிருக்கப் போவதில்லை.

ஒரு காலத்தில் இழிவானவர்களாகவும், வெறுக்கத்தக்கவர்களாகவும் காணப்பட்டவர்கள், அருமையான மற்றும் அன்பான/அக்கறையான ஜனங்களாக மாறிவிடலாம் என்பதை யோசேப்பின் கதை நிரூபிக்கின்றதாய் இருக்கின்றது. ஒரு மனுஷன் தான் மனம்திரும்பவும், சீர்ப்பொருந்தவும் நினைக்கும்போது எப்படியாக இருப்பானோ அப்படிப்பட்ட நிலையோடு, அவனது தற்போதைய நிலை குறுக்கிடக்கூடாது. "நான் (சரியான தீர்மானங்களை எடுத்திருந்திருப்பேனானால்) இப்படியாக இருந்திருப்பேனே" எனும் வார்த்தைகளே நாவு (அ) பேனா வெளிக்கொணர்ந்த துயரம் நிறைந்த வார்த்தைகளாகும் என்று ஒரு கவிஞன் கூறியுள்ளார். மனிதர்கள் இப்பொழுது எப்படி இருக்கின்றார்கள் என்பதும், பிற்காலத்தில் எப்படியாக இருக்கப்போகின்றார்கள் என்பதும் வேறுபட்ட காரியங்களாகும். அனைத்துக் காரியங்ளும் சரியான தேர்ந்தெடுத்தல்களையும், சரியான தீர்மானங்களையுமே சார்ந்துள்ளது. தவறான தேர்ந்தெடுத்தல்களையும் மற்றும் தவறான தீர்மானங்களையும் எடுத்தவர்கள், தாங்கள் ஒருவேளை வேறு மாதிரியான தீர்மானங்களை எடுத்திருந்திருப்பார்களானால் நலமாய்க் காணப்பட்டிருந்திருக்குமே என்று நொறுங்கின இருதயங்களுடன் திரும்பிப் பார்ப்பதுமுண்டு. "இப்படியாக இருந்திருப்போமே" என்ற (வருந்துகிற) கிறிஸ்தவர்களாக நாம் இருக்க விரும்பவில்லை.

## "பென்யமீனைக்குறித்து மீண்டும் பார்க்கலாம்"

சிமியோனைக் காட்டிலும், நாம் உண்மையில் பென்யமீன் மீதே அதிக கவனம் செலுத்துகின்றோம். பென்யமீனே, கிறிஸ்துவுக்குள்ளான நம்முடைய சகோதரனாகக் காணப்படுகின்றார். பென்யமீன் மீதும், மாம்சீக இஸ்ரயேலர்கள் அனைவரின் மீதும் இவ்வளவு பெரும் துயரம் கொண்டுவரத்தக்கதாக ஏன் நிஜமான யோசேப்பு, தமது வெள்ளிப்பாத்திரத்தைப் பென்யமீனுடைய சாக்கில் வைக்கின்றார்? யோசேப்பு தனது சகோதரனாகிய பென்யமீனைக் கண்டபோது, அவர்பால் யோசேப்பின் ஆத்துமா பொங்கினது என்பதும், அழத்தக்கதாக அவர் அறையைவிட்டு வெளியேற வேண்டியிருந்தது என்பதும் நமக்கு நினைவில் இருக்கின்றது (ஆதியாகமம் 43:30). யோசேப்பு தனது சகோதரனாகிய பென்யமீனுக்கு ஐந்து மடங்கு பங்கு கொடுத்தார்! யோசேப்பு பென்யமீனிடத்தில் மிகமிகப் பிரியமாய் இருந்தார். பிற்பாடு பென்யமீனுடைய சாக்கில் தனது வெள்ளிப்பாத்திரத்தை யோசேப்பு வைத்துவிட்டு, பென்யமீனைக் கள்வனைப்போன்று காணச் செய்துவிடுகின்றார். எதுவும் பொருந்தாதது போன்று தோன்றுகின்றது. பென்யமீன் சொல்லர்த்தமாகவே யோசேப்பினுடைய அடிமையாகுவதற்கான எந்த அபாயத்திலும், உண்மையில் காணப்படவில்லை, அப்படித்தானே? தான் மிகவும் நேசித்த சகோதரனுக்கு எந்தத் தீங்கும் வருவதற்கு யோசேப்பு நிச்சயமாய் அனுமதிக்க மாட்டார். தனது தந்தையாகிய யாக்கோபிடமிருந்து, தனது சகோதரர்கள் பென்யமீனை மிகவும் சிரமப்பட்டே கொண்டு வந்திருக்கின்றார்கள் என்பதையும் யோசேப்பு அறிவார். தனது தந்தைக்கு இன்னும் வேதனை உண்டாக்குகின்றதான எதையும், நிச்சயமாய் யோசேப்பு செய்யப்போகிறதில்லை. தனது சகோதரர்களைப் பரீட்சித்துப் பார்க்கவே யோசேப்பு இந்த வெள்ளிப்பாத்திரத்தைப் பென்யமீனுடைய சாக்கில் வைத்தார். பென்யமீன் மீது தீங்கு வரப்போவதுபோன்று நிலைமை காணப்பட்டால், அவர்கள் என்ன செய்யப்போகிறார்கள்?



*மன்னிக்கிறவராகிய இயேசு*

யோசேப்பை அடிமையாக விற்றுப்போடுவதற்கு ஆலோசனை தெரிவித்த அவரது சொந்த சகோதரனாகிய யூதா, அன்பும், அக்கறையுமுள்ள மனிதனாக மாறியிருப்பதை யோசேப்பு கண்டபோது, அவர் மிகுந்த மகிழ்ச்சிக்குள்ளானார். பென்யமீன் இல்லாமல் தாங்கள் திரும்ப வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதை உணர்ந்த யூதா, தன் தகப்பனாகிய யாக்கோபிற்காக பயம்/கலக்கம் அடைந்தார். அவரது குமாரனாகிய யோசேப்பை அவர்கள் அவரிடமிருந்து ஏற்கெனவே பறித்துவிட்டனர். அவர்களால் பென்யமீன் இல்லாமல் திரும்பிச் செல்ல முடியாது, ஆகையால் பென்யமீனுக்குப் பதிலாக, யூதா தன்னைக் கையளிக்கின்றார். இக்கட்டத்தில் இதற்குமேல் ஒரு கணம்கூட யோசேப்பால் தன்னை, தன்னுடைய சகோதரர்களிடத்தில் மறைத்துக்கொள்ள முடியவில்லை. எகிப்தியர்கள் அனைவரையும் அறையிலிருந்து வெளியேற கட்டளையிட்டு, யோசேப்பு மிகவும் சத்தமிட்டு அழுதார்; எகிப்தியர்கள் அனைவரும் அவர் அழுவதைக் கேட்குமளவுக்கு, அவர் மிகவும் சத்தமாய் அழுதார்.

இதுவும் கிறிஸ்துவுக்கு நிழலே. தமது மாம்சீக சகோதரனும், இஸ்ரயேலின் முன்னணி கோத்திரமுமாகிய யூதா, செய்த தவறுக்கான மனவுளைச்சலை வார்த்தையினால் வெளிப்படுத்துவதற்கு மாத்திரமல்லாமல், தனது சகோதரனாகிய பென்யமீனைக் காப்பாற்றத்தக்கதாக, அடிமையாகப் பாடுபடுவதற்குரிய விருப்பத்தினை வெளிப்படுத்துவதற்கும், நிஜமான யோசேப்பு காத்துக்கொண்டிருக்கின்றார். அத்தருணத்திலேயே கிறிஸ்து தம்மை, தம்முடைய சகோதரர் அனைவருக்கும் மற்றும் உலகத்துக்கும் வெளிப்படுத்திடுவார். இக்கட்டம் வருவது வரையிலும் யோசேப்பு அவர்களிடத்தில் கொஞ்சம் கடினமாகவே நடந்துகொண்டார் என்பதை நினைவில் கொள்ளுங்கள். யோசேப்பு அவர்களைத் தொடர்ந்து அழுத்தம் நிறைந்த மற்றும் கலக்கம் நிறைந்த சூழ்நிலைகளுக்குள்ளாக அனுமதித்தார், எனினும் அனைத்திலும் அவர் அவர்களுக்கு மிகுந்த உபகாரியாகவே காணப்பட்டார். அவருடைய தாராளத்தினால், மாத்திரமே அவர்கள் ஜீவிப்பதற்கான ஆகாரங்களை/ஏற்பாடுகளைப் பெற்றவர்களாய் இருந்தார்கள்.

இவைகளெல்லாம் எப்படி இனிவரும் நாட்களில் சம்பவிக்கும் என்பது பற்றி நமக்கு நிச்சயமாய்த் தெரியவில்லை. அர்மகெதோன் உச்சக்கட்டம் அடைகையில் மற்றும் கிறிஸ்தவ மண்டலமான தேசங்கள் எருசலேமை எதிர்பாராத நேரத்தில் தாக்கப் போகையில், அப்போது இஸ்ரயேல் குறித்ததான சத்தியங்கள் பென்யமீனுடைய (திரள் கூட்டத்தாருடைய) சாக்கிலிருந்து வெளியே வருவதற்கு வாய்ப்புண்டு. இஸ்ரயேல் மற்றும் எருசலேமிற்கு எதிரான தங்களுடைய சிலுவைப்போரை, திரள் கூட்டத்தினர் கண்டிப்பதினிமித்தமாகப் பெயர்ச்சபைகள், திரள் கூட்டத்தினருக்கு எதிராக எழும்புவார்கள். இக்கட்டத்தின்போது, மாம்சீக இஸ்ரயேலர்கள் மத்தியிலுள்ள உண்மையுள்ளவர்களாகிய சிலர், திரள் கூட்டத்தைக் காப்பாற்றத்தக்கதாகப் பேசுவார்கள். இது திரள் கூட்டத்தினரைக் காப்பாற்றப் போகிறதில்லை, ஏனெனில், திரள் கூட்டத்தினர் இறுதியில் ஜெயங்கொண்டு, தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக நிற்கத்தக்கதாக, "மகா உபத்திரவத்தின்" வழியாய் வரவேண்டும்.

மாம்சீக இஸ்ரயேலர்களிலுள்ள உண்மையுள்ளவர்களை அடையாளப்படுத்துகின்றதான "யூதா", திரள் கூட்டத்தாரை அடையாளப்படுத்தும் பென்யமீனுக்குப் பதிலாக தன்னைக் கையளிப்பது வரையிலும், கிறிஸ்து தம்மை மாம்சீக இஸ்ரயேலர்களுக்கும், உலகத்திற்கும் வெளிப்படுத்துவதில்லை என்பதே இப்பாடத்தினுடைய ஒட்டுமொத்தக் கருத்தாகும். அத்தருணத்திலேயே கிறிஸ்து, "நான் உங்கள் சகோதரனாகிய யோசேப்பு" என்று கூறுவார்.

இறுதியில் அருமையான சகோதர சகோதரிகளே நாம் இன்று ஏன் இங்கிருக்கின்றோம் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். தேவனுடைய சத்தியத்திற்கு மாத்திரமே நாம் ஜீவிக்க வேண்டும் மற்றும் அதற்காக மாத்திரமே நாம் மரிக்கவும் வேண்டும்.

ஆமென்!

## என் ஆத்துமாவே, காலம் குறைவாய் உள்ளது!

வழியில் நடக்காமல், காலங்கடத்திக்கொண்டிருப்பதற்குக் காலமில்லை,
சுகபோகமாய் இருப்பதற்குக் காலமில்லை, விளையாடித் திரிவதற்குக் காலமில்லை,
உலகப்பிரகாரமான சிநேகங்களுக்கோ (அ) சந்தோஷங்களுக்கோ காலமில்லை,
உலகப்பிரகாரமான பாரங்களுக்கோ (அ) வேடிக்கைகளுக்கோ காலமில்லை –
என் ஆத்துமாவே காலம் குறைவாய் உள்ளது!

முறுமுறுப்பதற்கோ (அ) குறை கூறிடுவதற்கோ காலமில்லை,
இருதயத்தின் வலிகளுக்குச் செவிசாய்த்திடுவதற்குக் காலமில்லை,
கண்ணீர் விடுவதற்கோ (அ) துக்க கீதம் இசைப்பதற்கோ காலமில்லை,
இன்னும் எவ்வளவு தூரம்? எவ்வளவு காலம்? என்று
கேட்பதற்குக் காலமில்லை – என் ஆத்துமாவே
காலம் குறைவாய் உள்ளது!

ஆ, ஆம் காலம் குறைவுதான் – எனினும் போதுமான நேரமுள்ளது
மிகச் செங்குத்தும், கரடுமுரடுமான உந்தன் வழியில் ஓடிடுவதற்கே.
"இரவு" வருவதற்கு முன்பு முதிர்ந்திருக்கும் வயல்களை அறுத்திடுவதற்கு
மாத்திரமே காலம் உள்ளது – இதற்கு மாத்திரமே, என் ஆத்துமாவே,
இதற்கு மாத்திரமே காலம் உள்ளது!

உந்தன் இருதயத்தைத் தூய்மைபடுத்திடுவதற்கு மாத்திரமே காலம் உள்ளது,
உந்தன் "அழைப்பதனை உறுதிப்படுத்துவதற்கு" மாத்திரமே காலம் உள்ளது,
கிறிஸ்துவுடன் என்றென்றும் ஆளுகை செய்திடத்தக்கதாய்க்
"கதவு" வழியாய்ப் பிரவேசித்திடுவதற்கு மாத்திரமே காலம் உள்ளது –
இதற்கு மாத்திரமே, என் ஆத்துமாவே,
இதற்கு மாத்திரமே காலம் உள்ளது!

- சகோதரி ஜெர்ட்ரூட் W. சைபெர்ட்

முக்கிய குறிப்புகள்

முக்கிய குறிப்புகள்

முக்கிய குறிப்புகள்